ORIENTAL RESEARCH INSTITUTE
LIBRARY

ACCESSION No.

CALL No.

SRI VENKATESWARA UNIVERSITY
TIRUPATI

ஸ்ரீ :

பரிபாடல் மூலம்.

1060

பஞ்சம வேஷ்ட விஸ்தாரங்கள்

தமிழ் வசனம்.

இஃது

அ. வீ. நரஸிம்ஹாசாரியரால்

இயற்றப்பெற்று

சென்னை :

ஆர். வெங்கடேச்வர் கம்பெனியாரவர்களால்

ஆனந்த அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1935

[All Rights Reserved.]

ALL RIGHTS RESERVED.

காபிரைட் 1911-ஆம் ஆர். வெங்கடேச்வர் அண்டு கம்பெனியாரவர்கள் காபிரைட்டுக்குரியதான இப்புத்தகம் இந்தியன் காபிரைட் பிரகாரமாகவும், அன்யதேசீயரது காபிரைட் பிரகாரமாகவும், காக்கப்பட்டிருக்கின்றது. எவராயினும் இப்புத்தகத்தை முழுவதுமாவது, அல்லது இதில் ஒரு பாகத்தையாவது தாம் வேறுக அச்சிடவும் மற்றொரு பாஷையில் மொழி பெயர்த்து அச்சிடவும் அதிகாரமில்லை. இதிலுள்ள பதங்களையாவது படங்களையாவது காபி செய்வார்களாயின், அது காபி ரைட்டை உல்லங்கனஞ் செய்ததே ஆகும்.

அத்.	வதஷ்ட ஸ்கந்தம்.	பக்கம்.
7	ப்ருஹஸ்பதி தேவதைகளைத் துறந்ததின் காரணத்தையும், தேவதைகள் விஸ்வரூபனைப் புரோஹிதனாக ஏற்படுத்திக் கொண்டதையும் கூறுதல் ...	1412
8	விஸ்வரூபன் மஹேந்த்ரனுக்கு நாராயணகவசத்தை உபதேசித்தல்	1419
9	இந்த்ரன் விஸ்வரூபனை வதித்ததும், த்வஷ்டா வ்ருத்ராஸுரனைப் பிறப்பிக்க, அவனிடத்தில் தேவதைகள் பயந்து ஸ்ரீமஹாவிஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்ததும்	1427
10	இந்த்ரன் ததீசருடைய எலும்புகளால் வஜ்ராயுதத்தை இயற்றிக்கொண்டு வ்ருத்ராஸுரனோடு யுத்தம் செய்தல்	1441
11	வ்ருத்ராஸுரன் இந்த்ரனோடு ஸம்பாஷித்தல் ...	1447
12	இந்த்ரனுக்கும் வ்ருத்ராஸுரனுக்கும் ஸம்பாஷணையும், இந்த்ரன் வருந்தி வ்ருத்ராஸுரனை வதித்ததும் ...	1453
13	வ்ருத்ராஸுரனைக் கொன்ற ப்ரஹ்மஹத்தியால் வருந்தின தேவேந்த்ரன் ஸ்ரீமஹாவிஷ்ணுவால் பாதுகாக்கப்பெறுதல்	1459
14	வ்ருத்ராஸுரனுக்குத் தத்வஜ்ஞானம் உண்டானதின் காரணத்தைப் பரீக்ஷித்து வினவுதலும், ஸ்ரீசுகர் அவனுடைய பூர்வஜன்மத்தைக் கூறுதலும் ...	1464
15	நாரதரும் அங்கிரஸ முனிவரும் சித்ரகேதுவுக்குத் தத்வோபதேசம் செய்தல்	1474
16	நாரதமுனிவர் மரணம் அடைந்த பிள்ளையின் வார்த்தைகளால் அம்மன்னவனைத் தெளிவித்து அவனுக்கு வித்யோபதேசம் செய்தல் ...	1481
17	சித்ரகேது மன்னவன் ருத்ரனைப் பரிஹஸித்துப் பார்வதியின் சாபத்தினால் வ்ருத்ராஸுரனைப் பிறத்தல்.	1498
18	திதியிடத்தினின்று மருத்துக்கள் உண்டான விதம் கூறுதல்	1508
19	கஸ்யபர் திதிக்குச் சொன்ன வ்ரதத்தை விவரித்துக் கூறுதல்	1521

பஞ்சம ஷஷ்ட ஸ்கந்தங்களிலுள்ள

படங்களின் விவரம்.

---

1. ஆக்னீத்ரன் பூர்வசித்தியைப் பார்த்து மோஹித்தல் 1174

2. கதிக்கரையில் ஸிம்ஹ கர்ஜனத்தைக் கேட்டு மானுடைய கர்ப்பம் கழுவுதல்; பரதன் அதை எடுத்துக்கொள்ளல் ... 1208

3. அஜாமிளனை யமதூதர்கள் பாசங்களால் கட்டியிருக்கையில் விஷ்ணுதூதர்கள் அவனை விடுவித்தல் ... 1361

4. காரதர் சபலாஸ்வர்களுக்கு நிவ்ருத்தி மார்க்கத்தை உபதேசித்தலும், தக்ஷர் காரதர்மேல் கோபித்தலும் ... 1403

5. இந்த்ரன் வ்ருத்ராஸுரனை வதித்தல் ... 1459

பஞ்சம ஷஷ்ட வ்ஸகந்தங்கள்.

பொருளடக்கம்.

அத்.	பஞ்சமஸ்கந்தம்	பக்கம்.
1	தவம் செய்யப்போன ப்ரியவ்ரதன் மீளவும் வ்ருத்தாந்தத்தைக் கூறுதல்.	1163
2	ஆக்னீத்ரனுடைய வ்ருத்தாந்தத்தைக் கூறுதல் ...	1173
3	நாபியின் சரித்திரம்	1179
4	ருஷபனுடைய சரித்திரத்தைக் கூறுதல் ...	1184
5	பரதன் தன் பிள்ளைகளுக்கு மோக்ஷதர்மத்தை உபதேசித்தலும், தான் பரமஹம்ஸர்களின் தர்மத்தை அனுஷ்டித்தலும்	1188
6	ருஷபதேவன் சரீரத்தைத் துறந்த வரலாறு ...	1199
7	பரதனுடைய வ்ருத்தாந்தத்தைக் கூறுதல் ...	1204
8	அம்மன்னவன் மான்குட்டியை ரக்ஷிக்க முயன்று கடையில் மானாகப் பிறத்தல்	1208
9	மான்சரீரத்தைத் துறந்த பரதன் ப்ராஹ்மண குமாரனாகப் பிறத்தல்	1215
10	ஜடபரதன் ரஹூகணை மன்னவனுக்குத் தத்வோபதேசம் செய்தல்	1222
11	மீளவும் ஜடபரதன் ரஹூகணனுக்குத் தத்வோபதேசம் செய்தல்	1230
12	ரஹூகணனுடைய ஸந்தேஹங்களுக்கு ஜடபரதன் ஸமாதானம் கூறுதல்	1235
13	விரக்தி உண்டாகும் பொருட்டு ரஹூகணனுக்கு ஜடபரதன் ஸம்ஸாரத்தின் கொடுமையைக் கூறுதல்.	1239
14	மறைத்துச்சொன்ன ஸம்ஸாரத்தின் கொடுமையை விவரித்துக் கூறுதல்	1246
15	பரத வம்சத்தில் பிறந்த ராஜாக்களைக் கூறுதல். ...	1259
16	மேருவின் நிலைமையைக் கூறுதல்.	1263
17	கங்கை பூமியில் இறங்கி வருதலும், இலாவ்ருத வர்ஷத்தில் ருத்ரன் ஸங்கர்ஷண பகவானை ஆராதித்தலும்.	1269
18	பத்ராஸ்வவர்ஷம் முதலிய ஆறு வர்ஷங்களில் பகவான் அங்குள்ளவர்களால் ஆராதிக்கப்படுவதைக்கூறுதல்.	1276

அத்.	பஞ்சமஸ்கந்தம்.	பக்கம்.
19	திம்புருஷவர்ஷம், பாரதவர்ஷம் இவற்றில் பகவான் எழுந்தருளியிருக்கும் விதத்தையும் பாரத வர்ஷத்தின் மேன்மையையும் கூறுதல் ...	... 1289
20	ப்லக்ஷம் முதலிய த்வீபங்கள், அவற்றைச் சூழ்ந்த ஸமுத்ரங்கள், லோகாலோகபர்வதம் ஆகிய இவற்றின் நிலைமையைக் கூறுதல். ...	... 1299
21	ஸூர்யகதியை நிரூபித்தல். ...	... 1310
22	சந்த்ர சுக்ராதிகளின் ஸ்தானத்தைக் கூறுதல்.	... 1316
23	த்ருவமண்டலத்தின் ஸ்வரூபத்தைக் கூறுதலும், சிம்சுமார சக்ர ஸ்வரூபமான பகவத்ஸ்வரூபத்தின் நிலையை விளக்கித்தலும் ...	... 1321
24	ஸூர்யனுக்குக் கீழுள்ள ராஹு முதலியவர்களின் நிலைமையையும், பூமிக்குக் கீழுள்ள அதலாதி லோகங்களின் நிலைமையையும் கூறுதல்	... 1325
25	பாதாளத்தினடியில் பூமியைத் தரித்துக் கொண்டிருக்கிற ஆதிசேஷனுடைய நிலைமையைக் கூறுதல்...	1335
26	அதற்குக் கீழுள்ள நரகத்தின் நிலைமையைக் கூறுதல்...	1340

ஷஷ்ட வ்ருக்ஷம்.

அத்.		பக்கம்.
1	அஜாமிளோபாக்யானம்; விஷ்ணுதூதர்களுக்கும் யமதூதர்களுக்கும் ஸம்வாதம் ...	... 1355
2	விஷ்ணு தூதர்கள் விஷ்ணுநாமத்தின் மஹிமையைக் கூறி அவனை விடுவித்தலும், அவன் தான் செய்த பாபத்தைப்பற்றி வருந்தி வைராக்யம் பெறுதலும்.	1370
3	யமதூதர்கள் யமனைக்கேட்க அவன் அவர்களுக்கு ஸமாதானம் கூறுதல்	... 1379
4	தக்ஷர் ப்ரஜைகளைப் படைக்க விரும்பிப் பகவானை ஆராதித்தல்	... 1386
5	தக்ஷர் தன் பிள்ளைகளை நாரதர் கெடுத்தாரென்று அவரைச் சபித்தல்	... 1397
6	தக்ஷருடைய பெண்களின் வம்சத்தைக் கூறுதல்	... 1405

ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணாய நம:

பஞ்சம ஸ்கந்தம்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—ஸ்ரீ சுக முனிவரே! ப்ரியவ்ரதன் பகவத்பக்தனென்றும் ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்த நிறைவாளனென்றும் மொழிந் தீர். புண்யபாபரூப கர்மபந்தத்திற்கும் அதனல் விளையும் ஜ்ஞான ஸங்கோசத்திற்கும் இடமான இல்லற வாழ்க்கையில் அவன் எப்படி மீளவும் விருப்புற்றான்? அந்தணர் தலைவரே! ஸம்ஸாரத்தில் பற்றைத் துறந்த அத்தகைய பெரியோர்களுக்கு இங்ஙனம் பாபிஷ்டமான இல்லறவாழ்க்கையில் அபிநிவேசம் உண்டாகாதே. இது நிச்சயம். ப்ரஹ்மர்ஷீ! பகவானுடைய பாதங்களின் நிழலில் ஒதுங்கி ஸம்ஸாரதாபங்களைத் துறந்து ஸுகித்திருக்கும் பெரியோர்களுக்குக் குடும்பத்தில் ப்ரீதி உண்டாகாதல்லவா? மற்றும், அம்மன்னவன் மனை மனைவி புதல்வன் முதலிய குடும்பத்தில் பற்றுடையவனாயிருப்பினும், அவனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணனிடத்தில் மாறுதபக்தியும் மோக்ஷஸித்தியும் உண்டாயினவென்கிறீர். இவ்விஷயத்தில் எனக்குப் பெரிய ஸந்தேஹமாயிருக்கின்றது.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மன்னவனே? நீ சொன்னது வாஸ்தவம். ஆயினும் பகவானுடைய பொன்னடிப் போதுகளில் மனம்வைத்த மானிடர் தன்னிடத்தில் பக்திசெய்யுந் தூயமனத்தர்க்கன்பராகிய அப்பகவானுடைய கதைகளைக் கேட்கையாகிற மங்களமார்க்கத்தில் கடப்பதற்குப் பலவகை இடையூறுகள்நேரினும் அதைப் பெரும்பாலும் துறக்கமாட்டார்கள். மனுவின் புதல்வராகிய அந்த ப்ரியவ்ரதன் காரதருடைய பாதஸேவையால் தத்வஹித புருஷார்த்தங்களை அனாயஸமாக அறிந்து பரமபாகவதனாகிப்ரஹ்மஸத்ரத்திற்குமுயன்று வாஸுதேவனிடத்தில் மாறுத யோகஸமாதியோகம் கைகூடும்பொருட்டு, செய்கிறவனும் செயப்படுபொருளும் செயற்குரிய கருவிகளும் செயல்களுமாகிய எல்லாவற்றையும் பகவானிடத்தில் அர்ப்பணம்செய்து வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டிருக்கையில் நீதி சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட ராஜகுணங்களெல்லாம் அவனிடத்தில் மாறுதிருந்ததனால் தந்தையாகிய ஸ்வாயம்புவமனுவால் இவன் ராஜ்யபரிபாலனம் செய்யும்படி வேண்டப்பெற்றான். தந்தையின் வார்த்தையைத் தான் தடுக்கக் கூடாதாயினும் அந்த ராஜ்யாதிகாரத்தில் ஆத்மாவைக்காட்டிலும் வேறுபட்ட ப்ரக்ருதியின் பரிணாமரூபமான தேஹத்தைப்பற்றியும் அதைத் தொடர்ந்த ராகத்வேஷாதிகளைப் பற்றியும் ஜ்ஞானஸங்கோசம் உண்டாகுமென்பதை ஆலோசித்து அதை அவன் அபிநந்திக்கவில்லை. அப்பால் தன் ஜ்ஞானசக்ஷுஸ்ஸினால் ஜகத்திலுள்ள ஸமஸ்த ப்ராணிகளுடைய அபிப்ராயத்தையும் அறியுந்திறமையுடைய தேவர்களில் தலைவனான ப்ரஹ்மதேவன் இவனுடைய அபிப்ராயத்தை அறிந்து ஸமஸ்தவேதங்களோடும் மரீசிமுதலிய

கணங்களோடும்கூடத் தனது லோகத்தினின்று இறங்கினன். வரும்பொழுது ஆகாயத்தில் சந்த்ரன்போல் திகழ்கின்ற அந்தப்பிரமன் ஆங்காங்கு விமான வரிசைகளில் வீற்றிருக்கின்ற தேவஸ்ரேஷ்டர்களால் அடிக்கடி பூஜிக்கப்பட்டு, வழிகள்தோறும் கூட்டங்கூட்டமாயிருக்கின்ற ஸித்தர் கந்தர்வர் ஸாத்யர் சாரணர் முனிவர் கின்னரர் உரகர் இவர்களால் பாடப்பெற்றவணுகிக் கந்தமாதன பர்வதத்தின் தாழ்வரையைத் தன் தேஹகாந்தியால் விளங்கச்செய்துகொண்டு ஆங்கிருக்கின்ற ப்ரியவ்ரதனுடைய அருகிற்குவந்தார். அப்பொழுது ப்ரியவ்ரதனுக்குத் தத்வோபதேசம் செய்வதற்காக அவ்விடம் வந்திருந்த காதமுனிவர் ஹம்ஸவாஹனத்தைக் கண்டு தன் தந்தையாகிய ப்ரஹ்மதேவன் வருவதை அறிந்து விரைந்தெழுந்து பூஜாத்ரவ்யங்களுடன் பிதாபுத்ரர்களான ப்ரியவ்ரதன் ஸ்வாயம்புவமனு இவர்களும் தானுமாகக் கைகூப்பிக்கொண்டு ஸ்தோத்ரம் செய்தார். பரதவம்சாலங்காரனே! ப்ரஹ்மதேவனும் காரதர் செய்த பூஜையை அங்கீகரித்து அவர்செய்த ஸ்தோத்ரத்தினால் தன் குணங்களும் தான் ஸத்யலோகத்தினின்றிறங்கின கல்வரவும் மற்ற மேன்மைகளும் சொல்லப்பெற்று ஆதிபுருஷனுடைய அம்சாவதாரமாகிய அப்பிரமன் கருணைகூர்ந்த கண்ணோக்கத்துடன் ப்ரியவ்ரதனை நோக்கி 'அப்பா! உண்மையான ஓருவார்த்தை சொல்லுகிறேன். இதை உணர்வாயாக. இந்த்ரியங்களால் அறியமுடியாத பரம புருஷனுடைய கட்டளையே இது. நீ அவன்மேல் அஸூயையின்றி இவ்வசனத்தை ஏற்றுக்கொள்வாயாக. இந்தப்பகவானுடைய ஆஜ்ஞையை நீயும் உன் தந்தையாகிய இம்மனுவும் மஹர்ஷியாகிய ப்ருந்தாரதரும் நானும் ஆகிய நாம் அனைவரும் ஸ்வா

தீனமற்று கடத்துகிறோம். நாம் இஷ்டப்படாதிருப்பினும் அவன் நம்மைக்கொண்டு தன்னிஷ்டப்படி கடத்திக்கொள்ளுந் திறமையுடையவன். எப்படிப்பட்டவனும் தவம் வித்யை யோகபலம் புத்திபலம் அர்த்தம் தர்மம் இவற்றில் எதனாலும் தாழுகவாவது பிறர்மூலமாயாவது இப்பரமபுருஷனுடைய கட்டளையை வேறுவிதமாக்கவல்லனுகமாட்டான். அப்பா! ஜகத்திலுள்ள ஜந்துக்கள்யாவும் ஜன்மம் மரணம் சோகம் மோஹம் பயம் ஸுகம் துக்கம் இவற்றிற்காகவும் கர்மங்களைச் செய்வதற்காகவும் மோக்ஷத்திற்காகவும் பகவானுடைய ஸங்கல்பத்தினுல் ஏற்பட்ட தேஹத்தைத் தரிக்கின்றன. குழந்தாய்! இப்பகவானுடைய வாக்காகிறதாமணியில் ஸத்வாதிகுணங்களும் வர்ணுச்ரம கர்மங்களுமாகிற அறுக்கமுடியாத பூட்டுக்கயிறுகளால் நாம் அனைவரும் கட்டுண்டு மூக்கில் கயிறுகோக்கப்பெற்ற நாற்கால் ஜந்துக்கள் மனுஷ்யனுக்கு வேலைசெய்வதுபோல், அந்தப் பகவானுக்குப் பூஜை செய்கின்றோம். ப்ரியவ்ரதனே! கண்ணில்லாதவர் கண்தெரிந்தவனுல் நிழல் வெயில் முதலியவழிகளில் கடத்தப்பெறுவதுபோல், நாம் ஈச்வரனுல் ஏற்படுத்தப்பட்ட தேவாதிசரீரங்களையும் வர்ணுச்ரமாதிகளையும் பெற்று ஸாத்விகம் ராஜஸம் தாமஸமென்று மூன்றுவகையான நமது கர்மங்களுக்குத் தகுந்தபடி அவனுல்கொடுக்கப்பட்ட ஸுகத்தையாவது துக்கத்தையாவது அனுபவிக்கின்றோம். தேஹாத்மப்ரமம் முதலிய அஜ்ஞானங்கள் நீங்கப்பெற்றவன் அஜ்ஞானதசையில்போலவே ஸுகதுக்கங்களுக்கிடமான புண்ய பாப கர்மங்களை அனுபவித்துக்கொண்டிருப்பினும் அந்த ஸுகதுக்கங்களால் விளைகிற தேஹத்தின் நிறைவு குறைவுகளைப்பற்றின அபிமானமின்றித் தன்தேஹயாத்

ரையை கடத்திக்கொண்டு வரவேண்டும். அஜ்ஞானிக்கும் ஜ்ஞானிக்கும் தேஹயாத்ரை ஒத்திருப்பினும், ஜ்ஞானமுடையவன் வேறுதேஹத்திற் கிடமான ஸாத்விகாதி கர்மங்களெவற்றையும் செய்யமாட்டான். ஜனஸஞ்சார மில்லாத வனத்தில் காய்கிழங்குகளைப் பக்ஷித்துக்கொண்டு வாஸஞ்செய்வானாயினும் ஊக்கமற்றிருப்பானாயின், பஞ்சேந்த்ரியங்களும் மனமுமாகிற சத்ருக்களனைவரும் கூடவேயிருக்கின்றார்களாகையால் அவனுக்குப் பயம் (ஸம்ஸாரம்) நேரவே நேரும். இந்த்ரியங்களை வென்று ப்ரக்ருதியைக்காட்டிலும் விலக்ஷணனான ஆத்மாவை அனுபவிக்கையால் நிறைவாளனான ப்ரஹ்மநிஷ்டனுக்கு இல்லறவாழ்க்கை என்ன கெடுதியை விளைக்கும்? ஜ்ஞான நிஷ்டைக்கு விரோதிகளான இந்த்ரியங்களாகிற சத்ருக்களை வெல்ல விரும்புவானாயின் பலிஷ்டரான சத்ருக்களை ஜயிக்க விரும்பும் மன்னவன் துர்க்கத்தில் இருந்து அவர்களை ஜயிப்பதுபோல், இவனும் க்ருஹஸ்தாஶ்ரமத்தில் இருந்துகொண்டே அதற்கு யத்னம் செய்யவேண்டும். சத்ருக்கள் க்ஷீணித்தபின்பு மன்னவனைப் போலவே ஜ்ஞானியும் இஷ்டப்படி வெளியில் திரியலாம். நீ பகவானுடைய பாதார விந்தங்களாகிற துர்க்கத்தைப்பற்றியிருப்பவன். நீ இந்த்ரியங்களாகிற சத்ருக்களனைவரையும் கண்முக வென்றவன். ஆயினும் பரமபுருஷனால் கொடுக்கப்பட்ட இவ்வுலகபோகங்களைச் சிலகாலம் அனுபவிப்பாயாக. அப்பால் பற்றற்று மோக்ஷம் பெறுவாய்' என்று மொழிந்தான். இங்ஙனம் சொல்லப்பெற்ற மஹாபாகவதனாகிய அந்த ப்ரியவ்ரதன் மூன்றுலோகங்களுக்கும் ஹிதம் உபதேசிப்பவ

னன அந்த ப்ரஹ்மதேவனுடைய கட்டளை [1] லகுவா யிருக்கையால் தலைவணங்கி அப்படியே ஆகட்டுமென்று பஹுமானத்துடன் அங்கீகரித்தான். தான்முகக்கட வுளும் விதிப்படி பூஜை செய்யப்பெற்று தாரதரும் ப்ரிய வ்ரதனும் ப்ரீதியுடன் பார்த்துக்கொண்டிருக்கையில், பெருமஹிமையுடையதும் தெதிகாள் அழிவற்றிருப்பது மான தன்னுடைய லோகத்திற்குப் போனர். மனுவும் ப்ரஹ்மதேவனால் தன்மநோரதம் நிறைவேறப்பெற்றுப் புதல்வனை ஸமஸ்த பூமண்டலத்தின் மர்யாதையைப் பாதுகாக்கும்படி ஏற்படுத்தி மிகவும் கொடிய சப்தாதி விஷயங்களாகிற விஷமடுவில் விழையும் விருப்பத்தி னின்று மீண்டான். இங்ஙனம் ப்ரியவ்ரதமன்னவன் முத வில் தன் விருப்பத்தின்படி பகவதாராதனரூபமான கர் மத்தில் அபிநிவேசங்கொண்டு ஸமஸ்த ஜகத்தின் பந் தத்தையும் போக்கும் ப்ரபாவமுடைய ஆதிபுருஷனை பகவானுடைய பாதாரவிந்தங்களை எப்பொழுதும் த்யா னித்துக்கொண்டிருந்து அதனல் மலங்களெல்லாம் கழிந்து மனம் தெளிந்து நிர்மலனயிருப்பினும் பெருமைபொருந்திய ப்ரஹ்மாதிகளை வெகுமதிக்க விரும்பி அவர்களது கட்டளையை அங்கீகரித்துப் பூமண்டலத்தை ஆண்டுவந்தான். அப்பால் அவன் விச்வகர்மாவென்னும் ப்ரஜாபதியின் புதல்வியான பர் ஹிஷ்மதி யென்பவளை மணம்புரிந்து தன்னைடொத்த குணமும் சீலமும் செயலும் உருவமும் வீர்யமும் பொருந்தி உதாரர்களான பத்து புதல்வர்களையும் அவர் களுக்குத் தங்கையான ஊர்ஜஸ்வதியென்கிற ஓர் பெண்ணையும் பெற்றான். அப்புதல்வர்கள் பதின்மரும்

---

1. எளிதில் ஆசரிக்கக் கூடியதாயிருக்கையால்.

ஆக்னீத்ரன் இத்மஜிஹ்வன் யஜ்ஞபாஹு மஹாவீரன் ஹிரண்யரேதஸ்ஸு அக்ருதப்ருஷ்டன் ஸவனன் மேதாதிதி வீதிஹோத்ரன் கவி என்று அக்னியின் பேருடையவர். இவர்களில் கவி மஹாவீரன் ஸவனன் என்கிற இம்மூவரும் இந்த்ரியங்களை வென்று பால்யம் முதல் ஆத்ம வித்யையில் பரிசயம் செய்து பரமஹம்ஸர்களின் ஆஸ்ரமத்தைக் கைப்பற்றினர்கள். அவ்வாஸ்ரமத்தில் நிலைன்ற அவர்கள் இந்த்ரியங்களை அடக்கியாள்கையே தன்மையாகப் பெற்று ஸமஸ்த ஜீவ ஸமூஹத்தையும் சரீரமாகவுடையவனும் ஸம்ஸாரத்தில் பயந்தவர்களுக்கு ரக்ஷகனுமான வாஸுதேவனுடைய திருவடித்தாமரைகளையே எப்பொழுதும் த்யானித்துக்கொண்டிருந்து அதனல் பரமபக்தியோகம் கழுவாமல் வளரப்பெற்று அவன் மஹிமையால் பரிசுத்தமான ஹ்ருதயத்தில் ஸகல சேதன சேதனங்களையும் சரீரமாகவுடைய பகவான் தோற்றப்பெற்று அவனுக்குட்பட்டதான ஆத்மஸ்வரூபத்தையும் ஸாக்ஷாத்கரித்து எல்லோரும் மோக்ஷத்தை அடைந்தார்கள். அந்த ப்ரியவ்ரதனுக்கு மற்றொரு பார்யையிடத்தில் உத்தமன் தாமஸன் ரைவதன் என்று மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் மன்வந்தராதிபதிகளானர்கள். அந்த ப்ரியவ்ரதமன்னவன் தன் புதல்வர்கள் இந்நனம் சாந்தி முதலிய கற்குணங்களெல்லாம் அமைந்திருக்கையில், தடைபடாத ஸமஸ்தபௌருஷங்களும் அமைந்த பலமுடைய தன் புஜதண்டங்களில் தரித்த வில்லின் காணுலியால் தர்ம விரோதிகளனைவரும் தொலையப் பெற்றுத் தன் காதலியான பர்ஹிஷ்மதியுடன் கூடி அவளுக்கு காள்தோறும் ஆநந்தத்தை வளர்த்து அவளால் எதிர்கொண்டு வெகுமதிக்கை முதலிய ஸத்

காரங்களெல்லாம் பெற்றுப் பெண்களுக்கு இயற்கையில் ஏற்பட்ட ஸ்ருங்கார சேஷ்டைகளாலும் வெட்கத்தினால் குறுகின புன்னகை அமைந்த கண்ணோக்கங்களாலும் அழகிய பரிஹாஸ வாக்யங்களாலும் விவேகமற்றவன் போன்று காமக்கலஹியிலாழ்ந்து ஆழ்ந்த மனமுடையவனாயினும் ஒன்று மறியாதவன்போல் காம போகங்களை அனுபவித்து வந்தான். 'ஸூர்யன் மேரு பர்வதத்தைச் சுற்றிப் பூமண்டலத்தைப் பாதியே விளங்கச்செய்கிறான். பாதி மேருவின் நிழலால் மறைக்கப்பட்டு ஸூர்ய ப்ரகாசமின்றியே யிருக்கின்றது' என்னும் மனக்குறையினால் அம்மன்னவன் இப்பூமண்டலம் முழுவதையும் விளங்கச்செய்ய விரும்பி பகவானை ஆராதித்து மிகுந்த ப்ரபாவமுடையவனாகி ஸூர்யனோடொத்த வேகமுடையதும் அவனைப்போல் பேரொளியுடன் திகழ்வதுமான தேரின்மேல் ஏறி இரவையும் பகலாக்கி விடுகிறானென்று மற்றொரு ஸூர்யன் போன்று அந்த ஸூர்யனைப் பின்தொடர்ந்து ஸூர்ய ப்ரகாசமில்லாத தேசத்தையும் விளங்கச்செய்து கொண்டு எழுதடவைகள் மேருபர்வதத்தின் கற்புறத்திலும் சுற்றினான். அங்ஙனம் அம்மன்னவன் சுற்றும்பொழுது அவனுடைய ரதத்தின் சக்ரக்கட்டுவான்றின விடங்களில் அகழிகள்போல் ஆழ்ந்த ஏழு பள்ளங்கள் ஏற்பட்டன. அவையே ஏழு ஸமுத்ரங்களாயின. அவற்றிற்கிடையிலுள்ள பூமியின் பாகங்கள் ஏழு த்வீபங்களாயின. அவை ஜம்பூத்வீபம் ப்லக்ஷத்வீபம் சால்மலித்வீபம் குசத்வீபம் க்ரௌஞ்சத்வீபம் சாகத்வீபம் புஷ்கரத்வீபம் என்னும் பேருடையவை. அவை ஒன்றைவிட ஒன்று இருமடங்கதிகமான அளவுடையவை. ஒன்றை ஒன்று சுற்றிக்கொண்டு ஒன்றுக்கு

வெளியிலொன்றாக ஏற்பட்டிருப்பவை. லவணஸமுத்ரம் இக்ஷுஸமுத்ரம் ஸுராஸமுத்ரம் க்ருதஸமுத்ரம் க்ஷீரஸமுத்ரம் ததிஸமுத்ரம் சுத்தஸமுத்ரம் என்னும் இவையே அவ்வேழு ஸமுத்ரங்கள். இவை முன் சொன்ன ஏழு த்வீபங்களுக்கும் அகழிகள்போன்றிருக்கும். ஒவ்வொரு ஸமுத்ரமும் தன்னுல் சூழப்பட்ட த்வீபத்தோடொத்த அளவுடையவை. இவ்வேழு ஸமுத்ரங்களும் க்ரமத்தில் முன்சொன்ன ஏழு த்வீபங்களுக்கு வெளியில் தனித்தனியே ஏற்பட்டிருக்கின்றன. ப்ரியவ்ரதன் தன் புதல்வர்களில் துறவறம் பெற்றவர்போகத் தன்னைத் தொடர்ந்திருக்கிற அக்னீத்ரன் இத்மஜிஹ்வன் யஜ்ஞபாஹு ஹிரண்யரேதஸ்ஸு க்ருதப்ருஷ்டன் மேதாதிதி வீதிஹோத்ரனென்கிற ஏழு பிள்ளைகளையும் ஜம்பூத்வீபம் முதலிய அவ்வேழு த்வீபங்களில் ஒவ்வொன்றுக்கு ஒருவனாக அவற்றிற்கு அதிபதிகளாக ஏற்படுத்தினன். தன் புதல்வியான ஊர்ஜஸ்வதியைச் சுக்ராசார்யனுக்குக் கொடுத்தான். தேவயானி பென்பவள் சுக்ரனுக்கு அவ்வூர்ஜஸ்வதியிடத்தில் பிறந்தவள். த்ரிவிக்ரமாவதாரம் செய்த பகவானுடைய பக்தர்களும் அவனுடைய பாதாரவிந்தபராகத்தினல் பசிதாஹம் முதலிய ஆறு குணங்களையும் வென்றவருமான பெரியோர்களுக்கு இத்தகைய புருஷச்செயல் சேருவது ஓராச்சர்யமன்று. கல்வழியினின்று நீங்கின பரம பாபிஷ்டனும் இந்தப்பகவானுடைய நாமத்தை ஒருகால் உரைப்பானுயினும், அந்த க்ஷணமே அவன் ஸம்ஸார பந்தத்தைத் துறப்பான். (அவனுடைய நாமத்தின் ப்ரபாவமே இத்தகையதானல் அவனுடைய பாதாரவிந்தங்களின் ப்ரபாவம் எப்படியிருக்குமென்பதை ஆலோசிப்பாயாக.) இங்ஙனம் அளவில்லாத பலமும்

பராக்ரமமுடைய அந்த ப்ரியவ்ரதமன்னவன் நாரத முனிவருடைய பாதங்களைவிட்டுப் பிரிந்தவுடனே தான் ப்ரவ்ருத்தி மார்க்கத்தில் விழுந்து அதனல் வருந்தி நொந் போலிருப்பதை நினைத்து மனத்தில் வெறுப்புற்று 'ஆ! நான் தப்பு செய்தேன். நான் இந்த்ரியங்களால் இழுக்கப்பட்டு, ப்ரக்ருதியின் பரிணமங்களும் அஜ்ஞானத்தினல் இவையே போக்யங்களென்று ஸம்பாதிக்கப்பட்ட வைகளும் கடைசியில் விஷம்போன்றவைகளுமான சப்தாதிவிஷயங்களாகிற பாழுங்கிணற்றில் தள்ளுண்டேன். இதைவிட மதிகேடு மற்றென்ன வேண்டும்? இதுவரையில் அனுபவித்ததுபோதும். இப்பெண்மணிக்கு விளையாட்டு ம்ருகம்போன்ற என்னைச் சுடவேண்டுமல்லவா?' என்று தன்னைப் பழித்துக்கொண்டான். பிறகு பகவானுடைய அனுக்ரஹத்தினல் ஆத்ம பரமாத்மாக்களின் உண்மையான ஸ்வரூபத்தை ஆராய்ந்தறியப்பெற்று ஸம்ஸார தாபங்களற்றுக் களிப்புற்றுத் தன்னை அனுஸரித்திருக்கின்ற புதல்வர்களுக்கு ஏழுத்வீபங்களையுடைய பூமண்டலத்தை க்ரமப்படி பங்கிட்டுக்கொடுத்துத் தனக்குப் பலவகைப் போகங்களை அளித்த தன் மனைவியைப் பிணம்போல் நினைத்து மஹத்தான ஐஸ்வர்யத்தையும் துறந்து வெறுப்புற்று மனத்தில் பகவானுடைய இனிய லீலைகளையும் அற்புதச் செயல்களையும் சிந்தித்துக்கொண்டு மீளவும் நாரதருடைய பதவியைத் தேடிக்கொண்டு சென்றான். அவன் புகழை இங்ஙனம் பாடுகிறார்கள். ப்ரியவ்ரதன் செய்த கார்யத்தை ஈச்வரன் தவிர மற்ற எவன்தான் செய்ய வல்லவன்? இவன் பூமண்டலத்தின் இருட்டைப் போக்கிக்கொண்டு தேர் சக்கரக்கட்டுகள் பாய்ந்தமையாலேற்பட்ட பள்ளங்களால் ஏழு ஸமுத்

ரங்களைக் கற்பித்தான். இவன் ஜம்பூத்வீபம் முதலிய த்வீபங்களை ஏற்படுத்திப் பூமியைப் பாகம் பாகமாய்ப் பிரித்தான். அந்தத்வீபங்களில் ஓவ்வொன்றி லும் ப்ராணிகளின் ஸௌக்யத்திற்காக நதி மலை வனம் இவை முதலியவற்றால் தனித்தனியே எல்லைகளையும் ஏற்படுத் தினன். பகவானுடைய பக்தர்களுக்கு கண்பனுகிய இந்த ப்ரியவ்ரதமன்னவன், பாதாளம் ஸ்வர்க்கம் பூமி இவற்றிலுள்ள பலவகையான போகங்களையும் யோக மஹிமையால் விளையக்கூடிய அணிமாதி மஹிமைகளை யும் நரகம் போல் நினைத்தான். முதலாவது அத்யாயம் முற்றிற்று.

ஆக்னீத்ரனுடைய வ்ருத்தாந்தத்தைக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:— இங்ஙனம் தந்தையாகிய ப்ரியவ்ரதன் மோக்ஷம் அடைகையில், அவனுடைய ஆஜ்ஞையில் நிலனின்றிருக்கிற ஆக்னீத்ரன் தர்மத்தில் கண்வைத்து ஜம்பூத்வீபத்திலுள்ள ப்ரஜைகளைத் தன் புதல்வர்களைப் போல் பாதுகாத்து வந்தான். அவன் ஒருகால் ஸந்தானத்தை விரும்பி மந்தர பர்வதத்தின் தாழ்வரையில் பூஜைக்குவேண்டிய வஸ்துக்களையெல் லாம் ஸித்தப்படுத்திக்கொண்டு மனவுக்கமாகிற தவத் திலில் ப்ரஹ்மதேவனை ஆராதித்தான். அவனும், அதை அறிந்து தன் ஸபையில் பாடுகின்ற பூர்வசித்தி யென்னும் அப்ஸரமடந்தையை அவனுடைய இஷ் டத்தை நிறைவேற்றுவதற்காக அனுப்பினன். அவளும் அம்மன்னவனுடைய ஆச்ரமத்திற்கருகாமையில்வந்து உலாவிக்கொண்டிருந்தாள். அவ்வாச்ரமம் பல வ்ரு

கூந்களடர்ந்து அவற்றின் கிளைகளில் அழகிய பொற் கொடிகள் பிணைந்து ரமணீயமாயிருந்தது. அக்கொடி களில் மயில் முதலிய நிலப்பறவைகள் இணையிணை யாய்க் கலந்து ஷட்ஜாதி ஸ்வரங்களைக் கூவிக்கொண் டிருந்தன. அங்குள்ள மடுக்களிலும் தாமரைபோடை களிலும் நீர்க்கோழி நீர்க்காகம் கொக்கு கலஹம்ஸம் முதலிய நீர்ப்பறவைகள் அந்நிலப் பறவைகளின் ஸ்வ ரங்களைக் கேட்டுவிழித்து விசித்ரமாய் ஒலித்துக்கொண் டிருந்தன. இப்படிப்பட்ட ஆச்ரமத்தினருகில் மிகவும் அழகாக அடியிட்டு விலாஸத்துடன் நடக்கிற அவ்வப் ஸர மடைந்தையின் பாதங்களில் அடிக்கடி ஒலிக்கின்ற சிலம்புத்தண்டைகளின் சப்தத்தை அந்த ராஜ குமாரன் கேட்டு ஸமாதியோகத்திலை மூடப்பட்ட கண் கமலத்தைச் சிறிது விழித்துப்பார்த்தான். அரு கில் பெண் வண்டுபோல் புஷ்பத்தைதமோந்துகொண்டு தேவதையென்றும் மநுஷ்யனென்றும் பேதமின்றி அனைவருடைய மனங்களையும் கண்களையும் ஆகர்ஷ கரத்தில் ஆழ்த்தவல்ல நடையழகாலும் விளையா டல்களாலும் வெட்கம் வழிகிற கண்ணோக்கங்களாலும் இனிய உரைகளாலும் அழகான அங்கங்களாலும் ஸமஸ்த ப்ராணிகளுடைய மனத்திலும், மன்மதனுக்கு நழைய இடங்கொடுக்குந் திறமை அமைந்து, அம் ருதம்போல் இனியதும் மத்யம்போல் மதிமயக்கத்தை விளைப்பதுமான புன்னகையோடுகூடின பேச்சைப் பேசும்பொழுது வெளியாகின்ற முகச்சின் வாஸனையை மோந்து மதிமயங்கி மேல்விழுகின்ற வண்டுகளின் உபத்ரவத்தினால் விரைந்தடியிட்டுச் செல்லுகையால் அழகாயசைகின்ற கொங்கைகளும் குழற்கற்றையும் அரைகாண் மாலையுமுடைய அவ்வப்ஸர மடந்தையை

1171. ஆக்னீத்ரன் பூர்வசித்தியைப் பார்த்து மோஹித்தல்.

அம்மன்னவன் பார்த்துக்கொண்டிருக்கையில் மன்ம தன் இது ஸமயமென்று நுழைந்து அவனைத் தன்வச மாக்கினன். அங்ஙனம் காமனுக்காளான அவ்வரசன் ஸ்த்ரீகளை என்றுமறியாதவன்போல் அம்மடக்கொடியை நோக்கி இங்ஙனம் மொழிந்தான். 'முனிவர்களில்சிறந்தவனே! நீயார்? இம்மலையில் என்செய்ய விரும்புகின்றனை? நீ பரதேவதையான பகவானுடைய மாயையாய்த் தோற்றுகின்றனை. [1] காணில்லாத இரண்டு தனஸ்ஸுக்களைத் தரிக்கின்றனையே. இதுவென்? உனது கண்பணைகிய என்னைப் போன்றவனுக்காவது உனக்காவது இவற்றால் ஆகவேண்டிய ப்ரயோஜனமேதனும் உண்டா? அல்லது அரண்யத்தில் மனுஷ்ய மற்றிருக்கிறமான்களை அடிக்கத் தேடுகின்றனையா? [2] இதோ புலப்படுகிற உனது பாணங்கள் தாமரையிதழ்களையே இறகுகளாகப் பெற்று ஓய்ந்தாற்போலிருக்கின்றன. அவை பிடியில்லாதவையாயிலும் அழகாயிருக்கின்றன. மிகவும் கூரான நுனியுடையவை. இவ்வனத்தில் உலாவுகின்ற நீ இப்பாணங்களை எவர்மேல் தொடுக்க விரும்புகின்றனையோ, தெரியவில்லை. ஆகையால் நாங்கள் பயந்து உன்னை வேண்டுகிறோம். உன்னுடைய இப்பராக்ரமம் மூடபுத்திகளான எங்களுக்கு கூஷமத்தை விளைக்குமாக. [3] உன் சிஷ்யர்கள் இதோ நாற்புறத்திலும் உன்னைத் தொடர்ந்து ரஹஸ்யத்தோடுகூடின ஸாமவேதத்தைப் படிக்கின்றார்கள். ப்ரபூ! ரிஷிகள் வேதசாகைகளைப் பற்றுவதுபோல், உன் குழற்கற்றை

---

1. புருவங்களைப் பார்த்துச் சொல்லுகிறான்.
2. கடைக்கண்நோக்கத்தைச் சொல்லுகிறான்.
3. வண்டுகளைச் சிஷ்யர்களாகவும், அவற்றின் த்வனியை ஸாமவேதமாகவும் சொல்லுகிறான்.

யினின்று நழுவின புஷ்பவர்ஷங்களை உன் சிஷ்யர்கள் பற்றுகிறார்கள். [1] உன் பாதங்களி லுள்ள கூடுகளில் விளங்குகிற இத்தித்திரிப் பறவைகளின் ஒலியைமாத்ரம் கேட்கின்றோம். அங்ஙனம் ஒலிக்கின்ற பறவைகள் மாத்ரம் புலப்படவில்லை. [2] உன்னையி லும் நிதம்பத்தி லுங் கடம்பப் பூவின் ஒளி திகழ்கின்றது. இது உனக்கு எங் கிருந்து கிடைத்தது? அவ்வொளியின்மேல் [3] குறைக் கொள்ளியின் வட்டம் புலப்படுகின்றது. உன் மரவுரி எங்கே? அந்தணனே ! [4] உன் மார்பில் இரண்டு கொம்பு கள் அழகாயிருக்கின்றன. இவற்றுள் என்ன நிறைத் திருக்கின்றனை? ஏதோ ஒரு இனிய வஸ்து இருக்க வேண்டுமென்று தெரிகின்றது. ஆனால் அது இன்ன தென்று தெரியவில்லை. நீ இடையில் இளைத்திருக்கின் றனை. ஆயினும் வருத்தத்துடன் இவ்விரண்டு கொம்பு களை எத்திக்கொண்டிருக்கின்றனை. மற்றும், இவற்றில் என் கண்கள் பற்றியிருக்கின்றன. உன் கொம்புகளில் [5] சிவந்த சேற்றை இங்ஙனம் பூசியிருக்கின்றனை. அழகனே! இதனால் எனது ஆச்ரமம் முழுவதும் கன்மணம்வீசும்படி செய்கின்றனை? எனது சிறந்த கண்பனே! உனது இருப்பிடத்தை எனக்குக் காட்டுவா யாக. அவ்விடத்திலிருக்கும் ஜனங்கள் என்னைப் போன்றவருடைய மனத்தைக் கலக்கும்படி ஆச்சர்ய மான இத்தகைய அவயவங்களை மார்பினால் தரித்துக்

---

1. சிலம்புத்தண்டைகளையும் அவற்றிலுள்ள ரத்னங்களையும் அவற்றினொளியையும் சொல்லுகிறான்.
2. அரையிலாடையைச் சொல்லுகிறான்.
3. அரைநாண் மாலையைச் சொல்லுகிறான்.
4. கொங்கைகளைச் சொல்லுகிறான்.
5. குங்குமக்குழம்பைச் சேறென்கிறான்.

கொண்டிருப்பார்களல்லவா? மற்றும், இனியஉரைமோ
தும் விலாஸங்களோடுங்கூடி மிகவும் அற்புதமான அம்
ருதம் முதலியதும் அவரது வாயில் கிடைக்குமல்லவா?
உன்னுடைய லோகத்தில் தேஹத்தை வளர்க்கும்படி
யான ஆஹாரம் யாது? கண்பனே! நீ ஆஹாரம் புசிக்
காமலே ஜீவிப்பதுபோல் தோற்றுகிறது. நீ விஷ்ணு
வின் அம்சமாயிருக்கின்றனை. நீ விஷ்ணுவைப்போல்
காதுகளில் மகரகுண்டலங்களை அணிந்திருக்கின்றனை.
அசைகின்ற கண்களாகிற இரண்டு மீன்களும் பற்களின்
வரிசையாகிற பக்ஷிகளின்வரிசையும் தொங்குகின்றமுன்
நெற்றி மயிர்களாகிற வண்டினங்களும் அமைந்த உன்
முகம் தாமரையோடைபோல் திகழ்கின்றது. உன் தாம
ரைக்கையிலுலடியுண்ட இப்பந்து காற்றிசைகளிலும்
சுழன்று மதிமயங்கின என் கண்களை அலையச்செய்கின்
றது. உன்நெற்றியில் ஜடைகளின்பாரம் அவிழ்ந்தலை
வதை நீ நினையாதிருக்கின்றனை யேன்? துஷ்டத்தன
முடைய இக்காற்று மனவிருப்பங்கொண்டு உன்னைர
யாடையின் முடிச்சை அவிழ்க்கின்றதே. இதையும் நீ
பாராதிருக்கின்றனையேன்? தவத்தையே தனமாகவுடை
யவனே! தவஞ்செய்கிறவர்களின் தவத்திற்கு விக்னம்
செய்யும்படியான இவ்வுருவத்தை நீ எத்தவத்தினால்
பெற்றனை? கண்பனே! நீ என்னுடன் இங்குத் தவஞ்செய்
வாயாக. உலகங்களையெல்லாம் படைப்பவனாகிய அந்த
ப்ரஹ்மதேவன் என்னிடத்தில் அருள்புரிகின்றானே?
அந்தணனே! நீ ப்ரஹ்மதேவனால் எனக்குக் கொடுக்கப்
பட்டனை. ஆகையால் உன்னை நான் விடமாட்டேன்.
எனக்கு நீ அன்பிற்கிடமாயிருக்கின்றனை. என் மனமும்
கண்ணும் உன்னிடத்தில் படிந்து நீங்காதிருக்கின்றன,
அழகான கோம்புடையவளே! உன் ஸ்வாதீனமான

என்னை உன் மனவிருப்பத்தின்படி அழைத்துக்கொண்டு போகலாம். உன்னுடைய ஸகிகளும் அனுகூலராகி என்னை அனுவர்த்திப்பார்களாக' என்றான். இங்ஙனம் ஸ்த்ரீகளை நல்வார்த்தைசொல்லுவதில் மிகவும்ஸமர்த்தருகிய அம்மன்னவன் மதிமயங்கி க்ராம்யங்களில் திறமையை வெளியிடுகின்ற பேச்சுக்களை மொழிந்து அவ்வப்ஸரா மடந்தையை வெகுமதித்துத் தனக்கு அனுகூலையாக்கிக் கொண்டான். அவளும் வீரக்கூட்டங்களின் தலைவனுகிய அவ்வாக்னீத்ரனுடைய புத்தி உருவம்சீலம் வித்யை வயது செல்வம் மேன்மை இவைகளைக் கண்டு மனம் பறியுண்டு பற்பலவாண்டுகளடங்கின பல காலம் வரையிலும் ஜம்பூத்வீபத்திற்கெல்லாம் காதனுகிய அம்மன்னவனுடன் பூமியிலுள்ள போகங்களையும் ஸ்வர்க்க லோகத்துப் போகங்களையும் அனுபவித்தாள். அவளிடத்தில் அவ்வரசன், காபி கிம்புருஷன் ஹரிவர்ஷன் இலாவ்ருதன் ரம்யகன் ஹிரண்மயன் குரு பத்ராச்வன் கேதுமாலன் என்னும் பேருடைய ஒன்பது பிள்ளைகளைப் பெற்றான். அவ்வப்ஸரமடந்தை வர்ஷம்ஒன்றுக்கு ஒரு பிள்ளையாக ஒன்பது பிள்ளைகளைப் பெற்று அம்மன்னவனுடைய வீட்டிலேயே விட்டு மீளவும் ப்ரஹ்மதேவனிடம் சென்றாள். அவ்வாக்னீத்ரனுடைய பிள்ளைகள் ஒன்பதின்மரும் மாதாவின் அனுக்ரஹத்தினுல் இயற்கையாகவே தேஹ உறுதியும் பலமும் அமைந்து, தந்தையால் தமது காமங்களையே இட்டுப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட ஜம்பூத்வீபத்தின் கண்டங்களைப் பெற்று அனுபவித்து வந்தார்கள். ஆக்னீத்ரன் காம போகத்தில் த்ருப்தி உண்டாகப் பெருமல் அவ்வப்ஸரமடந்தையையே மனத்தில் கினைத்து வேதோக்தமான கர்மங்களைச்செய்து எங்கு வந்தவனைப் பித்ருதேவதை

கள் கனிக்கச் செய்கின்றார்களோ அப்படிப்பட்ட அவ ளுடைய லோகத்தை அடைந்தான். தந்தை லோகாந் தரம் சென்றபின்பு அவன் பிள்ளைகளான ப்ராதாக் கள் ஒன்பதின்மரும் மேருதேவி ப்ரதிரூபை உதக்ர தம்ஷ்ட்ரி ஸதாரம்யை ஸ்யாமை நாரி பத்ரை தேவ வீதி என்னும் பேருடைய மேருவின் பெண்கள் ஒன் பதின்மரையும் மணம்புரிந்தார்கள். இரண்டாவது அத் யாயம் முற்றிற்று.

நாபியின் சரித்ரம்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஆக்னீத்ரனுடையபிள்ளை களில் முதல்வனாகிய நாபியென்பவன் ஸந்தானமில்லாத மேருதேவியென்னுந் தன் பார்யையுடன் ஸந்தானத் திற்காகப் பரமபுருஷனை யாகங்களால் ஆராதித்தான். ஸ்ரத்தையோடும் மனத்தூய்மையோடும் யாகம் செய் கின்ற அம்மன்னவன் ப்ரவர்க்யமென்னும் யாகங்களை கடத்திக்கொண்டிருக்கையில், த்ரவ்யம் தேசம் காலம் மந்த்ரம் ருத்விக்குகள் தக்ஷிணை செயல் இவ்வுபாயங் களின் நிறைவினால் பகவான் பெற அரியனாயினும் தன் பக்தர்களிடத்தில் வாத்ஸல்ய முடையவனாகையால் தன் பக்தருடைய விருப்பத்தை நிறைவேற்றவேண்டு மென்னும் கருத்து நெஞ்சில் குடிகொண்டு அதனால் தூண்டப்பெற்று அழகிய அவயவங்கள் அமைந்திருப் பதும் கர்மத்திற்குட்படாததும் மனத்திற் கினியதும் மனத்தையும் கண்ணையும் ஆகர்ஷிக்கவல்லதுமான அவயவங்களால் அழகியதுமான தன் திரு மேனியை அம்மன்னவனுக்குக் காட்டினான். சதுர்ப் புஜனும் கோடிஸூர்ய ப்ரகாசனும் பட்டுவஸ்த்ரந்

தரித்தவனும் மார்பில் திகழ்கின்ற ஸ்ரீவத்ஸமென்னும் அடையாள முடையவனும், சங்கம் பத்மம் சக்ரம் கௌஸ்துபம் கதை இவையுடையவனும் பேரொளி அமைந்த ரத்னங்கள் இழைக்கப்பெற்ற கிரீடம் குண்டலம் கைவளை அரைநாண்மாலை முத்துமாலை தோள்வளை முதலிய ஆபரணங்கள் அணிந்தவனுமாய்த் தோற்றுகிற அப்புருஷோத்தமனை ருத்விக்குக்களும் ஸபையில்லுள்ளவர்களும் யஜமானனும், பணமில்லாதவர்கள் சிறந்த பணத்தைக் காண்பதுபோல், கண்டு மிக்க வெகுமதியுடன் பூஜித்து வணங்கின தலையுடன் அவனை ஸ்தோத்ரஞ்செய்தார்கள். நீ பூஜிக்கத் தகுந்தவர்களில் தலைமையுடையவன். நீ நிறவாளனையினும் உன் ப்ருத்யர்களான எமது பூஜையை நீயே அங்கீகரிப்பாயாக. 'கமோகம:' என்றிவ்வளவு மாத்ரமே எங்களுக்குப் பெரியோர்கள் கற்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். ப்ரக்ருதியின் பரிணமமான சப்தாதி விஷயங்களில் சென்ற மதியுடையவனும் கர்மத்திற்குட்பட்டுச் சக்தியற்றவனும் அந்த ப்ரக்ருதியின் கார்யமான நாமரூபம் ஜாதி இவையுடையவனுமாகிய எளன்தான் ப்ரக்ருதி புருஷவிலக்ஷணனும் ஸர்வேச்வரனுமாகிய உன் ஸ்வரூபத்தை நீரூபித்துச் சொல்லவல்லனுவான்? உன் குணங்கள் மிகவும் மங்கலமானவை; ஸமஸ்த ப்ராணிகளுடைய பாபத்தையும் போக்குந் திறமையுடையவை. அப்படிப்பட்ட மேன்மை அமைந்த உன் குணங்களில் சிறிது மாத்ரம் சொல்லலாமன்றி அவற்றையெல்லாம் எவனால் சொல்லமுடியும்? பரமனே! உன் பக்தர்கள் ப்ரீதியினால் எழுத்துக்கள் தழுதழுக்கப்பெற்ற துதிகளைச் செய்து ஜலம், பொருக்கின கெல் கதிர், தளிர், துழாய், அருகண்புல், மூவா, இவைகளைக் கொண்டு

கடத்தும் பூஜையாலும் நீ ஸந்தோஷம் அடைகின்றனை யல்லவா? பலவகைக் கருவிகள் நிறைந்த இப்பூஜையாலும் உனக்கு ஆகவேண்டிய இஷ்டமான ப்ரயோஜனம் ஒன்றும் எங்களுக்குத் தெரியவில்லை. ஸர்வகாலத்திலும் நீயே நேராக ஸமஸ்த புருஷார்த்த ஸ்வரூபனாயிருக்கின்றனை. ஆகையால் புருஷார்த்தங்களைப் பெற விரும்பி நாங்கள் செய்கிற இந்த யாகம் உன்னுடைய ஆராதன மாத்ரமேயாமன்றி, இதனால் உனக்கு ஆகவேண்டிய ப்ரயோஜனம் ஒன்றுமில்லை. பரமபுருஷனே! நாங்கள் செய்யும் ஆராதனமும் உன் பெருமைக்கீடான ஆராதனமாக மாட்டாது. ஆகையால் நாங்கள் எவ்வளவு ஆராதிக்கினும் நீ ஆராதிக்கப் படாதவனே. ஆயினும் நீ உன் பெருங்கருணையால் உன் மஹிமையான மோக்ஷ புருஷார்த்தத்தையும் நாங்கள் விரும்பும் பலனையும் நிறைவேற்ற முயன்று நிறைவாளனுயினும் நிறைவற்றவன்போல் மேலான புருஷார்த்தத்தை அறியாத மூடர்களான எங்களுக்கு இந்த யாகத்தில் புலப்பட்டனை. பூஜிக்கத்தகுந்தவர்களில் தலைவனே! நீ இம்மன்னவன் விரும்பும் வரங்களைக் கொடுக்கும்பொருட்டுத் தோற்றினை. ஆயினும், இந்த ராஜர்ஷியின் யஜ்ஞத்தில் வரத ஸ்ரேஷ்டனுகிய நீ உன் பக்தர்களான எங்களுக்குப் புலப்பட்டமையே பெரிய வரமாயிற்று. வைராக்யத்தினால் கூரிய அறிவாகிற காற்றினால் மனமலங்களையெல்லாம் பறக்கடித்துப் பகவானை ஆராதிக்கையாகிற பரம தர்மத்தில் ஊக்கமுற்று ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷணனான ஆத்மாவின் ஸ்வரூபத்தை அனுஸந்திக்கையால் மனக்களிப்புற்ற முனிவர்களால் எப்பொழுதும் பரிசீலிக்கப்பட்ட குணகுணங்களையுடையவனே! உன் குணங்களைப் பேசு

கையில் ஸமஸ்த சன்மைகளும் கைகூடும். ஸ்வாமீ! தடுக்குதல் தும்பல் விழுதல் கொட்டாவி விடுதல் துக்கதசை முதலிய ஸமயங்களிலும் ஜ்வரத்திலும் மரணகாலத்திலும் நாங்கள் மெய்ம்மறந்திருப்பினும் செல்வப்பெருக்கையிய உன்னை நினைக்க நேரும்படி ஸமஸ்த பாபங்களையும் போக்கவல்லவைகளும் உன் கல்யாண குணங்களைப் பற்றி ஏற்பட்டவைகளுமான உன் திருநாமங்களைச் சொல்லும்படி எங்களுக்கு அருள்புரிவாயாக. அன்றியும், இந்த ராஜரிஷி ஸந்தானத்தை விரும்புகிறான். அதிலும் உன்னைப் போன்ற ஒரு பிள்ளை பிறக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறான். இவன் ஸந்தானத்தையே பெரிய புருஷார்த்தமாக நினைத்திருக்கின்றான். ஆகையால், பணமில்லாதவன் உயிர் நோக்கு முதலிய அற்பங்களை விரும்பிக் குபேரனிடம் போவதுபோல், இவன் இவ்வுலகத்திலுள்ள புருஷார்த்தங்களையும் ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கவல்லவனும் ஷாட்குண்ய பூர்ணனுமாகிய உன்னை இதற்காக அணுவர்த்திக்கிறான். இந்த ஸம்ஸாரத்தில் பெரியோர்களின் பாதங்களைப் பணியாத எந்த மனிதன்தான் கர்மவச்யர்களால் வெல்லமுடியாததும் கல்வழியில் போகவொட்டாமல் மறைப்பதுமாகிய உன் மாயையால் மதிமயங்காதவன் எவன்தான் சப்தாதிவிஷயங்களாகிற விஷத்தின் வேகத்தினால் தன்னியற்கை மாறப்பெறுதவன்? ஆகையால் இவன் உன் மாயையால் மதிமயங்கி ஸந்ததியை வேண்டுகிறான். கம்பீரமான காரியங்களைச் செய்பவனே! தேவர்க்குந் தேவனே! ஸர்வர்க்கும் அந்தராத்மாவாயிருப்பவனே! மூட புத்திகளான நாங்கள் ஸந்ததியை ஒரு புருஷார்த்தமாக நினைத்து இந்த அற்ப ப்ரயோஜனத்திற்காக உன்னை அழைத்து

அவமதித்தோம். எங்களுடைய இவ்வபராதத்தை நீ பொறுத்தருளவேண்டும். நீ எல்லோரிடத்திலும் ஸம மாயிருக்குந் தன்மையனல்லவா?" என்று ஸ்தோத்ரம் செய்தார்கள். இங்ஙனம் பொருளடக்கமுடைய மொழி களால் துதிக்கப்பெற்ற தேவஶ்ரேஷ்டனாகிய பகவான் பாரதவர்ஷத்தை ஆளும் ப்ரபுவாகிய காபி மன்னவனு மும் அவனுடைய ருத்விக்குக்களாலும் வணங்கப் பெற்று இரக்கத்துடன இதை மொழிந்தான்:— "ஓ நிஷிகளே! உண்மையே பேசுந்தன்மையரான உங்க ளால் கிடைக்க அரிதான வரத்தைப்பற்றி வேண்டப்பட் டேன். இம்மன்னவனுக்கு என்னைப்போன்ற புதல்வன் வேண்டுமென்றல்லவோ நீங்கள் வேண்டினீர்கள்? எனக்கு காளை நிகரன்றி மற்றொருவனுமில்லை. கான் ப்ரக்ருதி புருஷர்களைக் காட்டிலும் விலக்ஷணனாயிருப்ப வன். ஆகையால் இவ்வரம் துர்லபமே. ஆயினும் தவம் வித்யை முதலியவற்றால் ப்ரகாசிக்குந் தன்மையரான அந்தணர்கள் எனக்கு முகமாகையால் அவ்வந்தணர் களின் வார்த்தை பொய்யாகலாகாது. அதற்காக எனக்கு நிகரானவன் மற்றொருவனும் அகப்படாமை யால் காளை எனது அம்சத்தினால் இந்த காபியின் பத்னியாகிய மேரு தேவியிடத்தில் அவதரிக்கிறேன்" என்றான். மேருதேவி கேட்டுக்கொண்டிருக்கையில் அவனுடைய பர்த்தாவான அம்மன்னவனுக்கு பகவான் இங்ஙனம் மொழிந்து அந்தர்த்தானம் அடைந்தான். விஷ்ணுவாதனே! இங்ஙனம் பகவான் இந்த யாகத்தில் மஹர்ஷிகளால் ஆராதிக்கப்பட்டு காபியின் இஷ் டத்தை நிறைவேற்ற முயன்று பெருந்தவத்தரும் ஞானி களுமான கைஷ்டிகருடைய தர்மங்களை வெளியிடுவ தற்குச் சுத்தஸத்வமயமான உருவத்துடன் அவனது

பார்யையாகிய மேருதேவியிடத்தில் அவதரித்தான்.
மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

ருஷபனுடைய சரித்ரத்தைக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:- பிறகு பிறக்கும்பொழுதே பகவானுடைய லக்ஷணங்களெல்லாம் தோன்றப் பெற்று ஸமஸ்த ப்ராணிகளிடத்திலும் ஸமமாயிருக்கை இந்த்ரிய நிக்ரஹம் சப்தாதி விஷயங்களில் ப்ரீதியில்லாமையாகிற வைராக்யம் எல்லோரையும் அடக்கி யாள்கையாகிற ஐச்வர்யம் எல்லாம் நிறைந்திருக்கையாகிற மஹாவிபூதி இவை முதலிய குணங்களுடன் தினந்தோறும் வளர்கின்ற வைபவமுடைய அப் புதல்வனைக் கண்டு மந்த்ரி முதலிய ராஜாங்கத்தவர்களும் ப்ரஜைகளும் ப்ராஹ்மணர்களும் இவன் பூமண்டலத்தை ஆள வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டார்கள். அப்புதல்வன் இப்படி ஸத்வம் தலையெடுத்து மேன்மைக்கிடமான தேஹமும் பெரிய குணப் பெருக்கு இந்த்ரியபலம் தேஹபலம் செல்வம் மிகப் பெரிய கடத்தைகளால் விளையும் ப்ரஸித்தி வீர்யம் சௌர்யம் இவைகளால் மிகுந்த ப்ரபாவமுடையவனாயிருந்ததைப் பற்றியும் சீர்மையைப் பற்றியும் அவனுக்கு அவன் பிதாவான நாபிமன்னவன் ருஷபனென்று பேரிட்டான். இந்தரன் இந்த ருஷபனிடம் பொறாமையால் விரோதித்து இவனுடைய ராஜ்யத்தில் மழை பெய்யாதிருந்தான். யோகேச்வரனாகிய அம்மன்னவன் அதை அறிந்து சிரித்துத் தன் விசித்ர சக்தியால் அஜநாப மென்கிற தன் ராஜ்யத்தில் மழை பொழியும்படி செய்தான். நாபிமன்னவன் தான் ஆசைப்பட்டபடி நற் பிள்ளையைப் பெற்றுப் பகவானுடைய

மாயையால் மதிமயங்கி அவனுடைய அம்சாவதார மான அம்மஹாநுபாவனைத் தன் புதல்வனாகப் பாவித் துப் பெரிய ஸந்தோஷத்தினால் உரைகள் தழுதழுத்துத் தன் ஸங்கல்பத்தினால் மானிட உருவங்கொண்ட வனும் ஷாட்குண்ய பூர்ணனுமாகிய அப்பரம புருஷ னைக் குழந்தையென்றழைத்து மஹாநந்தத்தை அடைந் தான். பட்டணத்து ஜனங்களும் ப்ரக்ருதிகளும் நாட் டார்களும் தன் புதல்வனிடத்தில் அனுராகத்துட னிருப்பதை அறிந்து நாபிமன்னவன் வர்ணாச்ரமதர்ம மர்யாதைகளைப் பாதுகாக்கும்படி அவனுக்குப் பட்டாபி ஷேகம்செய்து ப்ராஹ்மணர்களிடம் ஒப்புவித்து மேரு தேவியுடன் பதரிகாச்ரமம் சென்று, பிறர்க்கு மனவருத் தம் விளைக்காமல் விக்னங்களால் தடைபடாது வளர் கின்ற தவத்தினாலும் அங்கங்களோடு கூடின பக்தி யோகத்தினாலும் நாராயணனென்னும் பெருடைய வாஸுதேவபகவானை ஆராதித்து ப்ராரப்தாவஸான காலம் நேரப்பெற்று முக்தி அடைந்தான். விதுரனே! இந்நாபியின் புகழை இங்ஙனம் பாடுகிறார்கள்:—"ராஜர் ஷியாகிய நாபியின் சரித்ரம் ப்ரஸித்திபெற்றது. அவ் வாறு மற்றவனும் செய்யவல்லவனல்லன். பகவான் இவனுடைய பரிசுத்தமான கர்மத்தினால் ஸந்தோஷம் அடைந்து இவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தான். இந்த நாபிமன்னவனைத் தவிர ப்ராஹ்மணர்களைப் பாது காத்து அவர்களிடத்தில் விச்வாஸத்தோடிருப்பவன் மற்றவனும் இல்லை. இந்த மன்னவனுடைய யாகத்தில் ப்ராஹ்மணர்கள் மங்களமான வஸ்துக்களால் பூஜிக் கப்பட்டுத் தமது மந்த்ர பலத்தினால் யஜ்ஞேச்வரனை பரமபுருஷனைக் கண்களால் கண்டனுபவிக்கும்படி காட்டினர்கள்." ருஷபதேவன் ராஜ்யாபிஷேகம் பெற்ற

பின்பு தனதுடைய ராஜ்யமாகிய அஜநாபவர்ஷம் ஸ்வர்க்க மோக்ஷங்களை நிறைவேற்றிக் கொடுக்கும்படி கர்மங்களை அனுஷ்டிப்பதற்குரிய இடமென்று நினைத்துப் பிறரும் இங்ஙனமே செய்ய வேண்டுமென்பதற்காகத் தான் ஸர்வஜ்ஞனையிலும் சில காள் குருகுல வாஸம் செய்து வரங்களைப் பெற்று அக்குருக்களால் அனுமதி கொடுக்கப்பெற்று, இல்லறவாழ்க்கையிலிருப்பவர் இங்ஙனம் தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்பதை அறிவிக்கும்பொருட்டுச் சாஸ்த்ரங்களில் ப்ரவ்ருத்தி கர்மமென்றும் நிவ்ருத்தி கர்மமென்றும் விதிக்கப்பட்ட இருவகைக் கர்மங்களையும் அனுஷ்டித்துக்கொண்டு இந்த்ரன் கொடுத்த ஜயந்தியென்னும் பார்யையிடத்தில் நூறு பிள்ளைகளைப் பெற்றான். அவர்களில் முதல்வன் பரதனென்னும் பேருடையவன்; புகழத்தகுந்த குணங்களுடையவன். அவன் முதற்கொண்டே இந்த அஜநாபவர்ஷத்தை அவன் பேரால் பாரதவர்ஷமென்று வழங்கி வருகிறார்கள். அவன் தம்பிகளான குசாவர்த்தன் இலாவர்த்தன் ப்ரஹ்மாவர்த்தன் ஆர்யாவர்த்தன் மலயகேது பத்ரஸேனன் இந்த்ரஸ்ப்ருக் விதர்ப்பன் கீகடன் என்னும் இவ்வொன்பதின்மரும் மற்ற தொண்ணூறு பேர்களைக்காட்டிலும் ப்ரதானராயிருந்தார்கள். மற்ற தொண்ணூறு பேர்களில் கவி ஹரி அந்தரிக்ஷன் ப்ரபுத்தன் பிப்பலாயனன் ஆவிர்ஹோத்ரன் த்ரமிடன் சமஸன் கரபாஜனன் என்னும் இவ்வொன்பதின்மர் பாகவததர்மத்தை வெளியிட்டுக்கொண்டு மஹாபாகவதர்களாயிருந்தார்கள். அவர்களின் சரித்ரம் பகவானுடைய மஹிமைகள் உள்ளடங்கப்பெற்று வளர்ந்திருக்கும்; சித்தசாந்தியை விளைக்கும். அதை மேல் வஸுதேவநாரத ஸம்வாதத்

தில் சொல்லப்போகிறோம். அவர்க்குத் தம்பிகளான மற்ற எண்பத்தோறு பேர்களும் தந்தையின் ஆஜ் ஞையை அனுஸரித்து க்ருஹஸ்தாச்ரம ஸம்பத்தெல் லாம் நிறைந்து ஸாங்கவேதாத்யயனஞ் செய்தவர்களும் யஜ்ஞானுஷ்டான சீலர்களும் ஸதாசாரத்திலே பரி சுத்தர்களுமா யிருந்தமைபற்றி ப்ராஹ்மணர்களாய் விட்டார்கள். ருஷபனென்னும் பேர்பூண்டு அவதரித்த பகவான் கர்மத்திற்குட்படாமல் ஸ்வதந்த்ரனாய் அக்கர் மத்திலே விளையும் அனர்த்த பரம்பரைகள் எவையும் தீண்டப் பெறாமல் கேவலாநந்தமயமான ஸ்வரூபத்தை அனுபவிக்குந் தன்மையுள்ள ஸர்வேச்வரனாயிருந்தும், தர்மமார்க்கத்தை அறியாதவர்க்குக் காலவசத்திலே பாழான தர்மத்தைத் தனது ஆசாரத்திலே அறிவிக்க முயன்று தர்மம் அர்த்தம் புகழ் ஸந்தானர்த்தமான போகம் மோக்ஷம் ஆகிய இந்நன்மைகள் ஸித்திக்கு மாறு ப்ராக்ருதன்போல் வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டு ஸமஸ்த ப்ராணிகளிடத்தி லும் ஸமனாயிருக்கை ராகாதி தோஷங்களால் மனங் கலங்கப் பெறுமை தாழ்ந்தவரையும் தன்னோடொக்க நினைக்கை பிறர்துக்கம் கண்டு வருந்துகை முதலிய குணங்களெல்லாம் அமைந்து க்ருஹஸ்தாச்ரமத்தில் ஜனங்களை நியமித்துக் கொண்டிருந்தான். மேன்மை யுடையவர் எதெது செய்வார்களோ அதையெல்லாம் உலகத்திலுள்ளவர் அனுஸரிப்பார்களாகையால் அம் மன்னவன் மேன்மையுடைய தனது அனுஷ்டானத்தி னால் உலகங்களைத் திருத்தப்பார்த்தான். அவன் ஸகல தர்மங்களும் உள்ளடங்கின வேதரஹஸ்யத்தை யெல் லாம் தானே அறிந்தவனாயினும் ப்ராஹ்மணர்களைக் கேட்டு அவர்கள் காட்டின வழியின்படி ஸாமம் முதலிய

உபாயங்களால் ப்ரஜைகளைப் பாதுகாத்துவந்தான். த்ரவ்யம் தேசம் காலம் வயது ஸ்ரத்தை ருத்விக்குகள் பலவகை அங்கங்கள் இவையெல்லாம் அமைத்துக் கொண்டு ஸமஸ்த யாகங்களையும் சாஸ்த்ரங்களில் விதித்தபடி ஒவ்வொன்றையும் நூறு நூறு தடவைகள் அனுஷ்டித்தான். ருஷபதேவன் இந்தப் பாரதவர்ஷத் தைப் பாதுகாத்துவருகையில், தமது காதளவுகிய அந்த ருஷபனிடத்தில் தமக்கு கால்தோறும் மேன்மேலும் ஸ்னேஹம் வளரவேண்டுமென்பதைத் தவிர எவனும் தனக்கில்லாத மற்ற புருஷார்த்தத்தை எதையும் மற் றொருவனிடத்தில் ஒருகாலும் சிறிதும் எந்தக் கார ணத்தைப் பற்றியும் அபேக்ஷிக்கவில்லை. அந்த ருஷபன் ஒருகால் திரிந்துகொண்டே சென்று ப்ரஹ்மாவர்த்த தேசத்திற்குப் போனன். அங்கு ப்ரஹ்ம ரிஷிகள் பலரும் ஸபைசேர்ந்திருந்தார்கள். அம்மன்னவன் அந்த ஸபையில் சென்று ப்ரஜைகள் கேட்டுக்கொண்டிருக் கையில் மனவுக்கமுடையவரும் வணக்கம் ஸ்னேஹம் ஸந்தோஷம் இவற்றின் மிகுதியால் தனக்கு ஸ்வா தீனர்களுமான தன் புதல்வர்களை நோக்கி அவர்களுக் குக் கற்பித்துக்கொண்டு இங்ஙனம் மொழிந்தான். நான்காவது அத்யாயம் முற்றிற்று.

பரதன் தன் பிள்ளைகளுக்கு மோக்ஷ தர் மத்தை உபதேசித்தலும், தான் பரம ஹம்ஸர்களின் தர்மத்தை அனுஷ்டித் தலும்.

ருஷபதேவன் சொல்லுகிறான்:—பிள்ளைகளே! இவ் வுலகத்தில் ப்ராணிகளுடைய தேஹங்களுக்குள் இம் மனுஷ்யதேஹம் வருந்தி ஸம்பாதிக்கத் தக்கவைகளும்

கடைசியில் துக்கரூபங்களுமான சப்தாதி விஷயங்களை அனுபவிப்பதற்காக ஏற்பட்டதன்று. அவை அமேத்யத்தைப் புசிக்கிற பன்றி முதலிய ஜந்துக்களுக்கும் உள்ளவைகள். ஆகையால் கர்மங்களைத் துறந்து ஸம்ஸாரத்தினின்று விடுபட்டு அளவிறந்த ப்ரஹ்மாநந்தத்தை அனுபவிக்கும்படி பகவதாராதன ரூபமான தவத்தை அனுஷ்டிக்கும் பொருட்டே ஏற்பட்டது. பெரியோர்களைப் பணிதல் மோக்ஷத்திற்கு ஹேதுவென்றும், பெண்டிர்களிடத்தில் மனப்பற்றுடையவரோடு ஸஹவாஸம் கேரினும் அது ஸம்ஸாரத்திற்கு ஹேதுவாமென்றும் சொல்லுகிறார்கள். ஸுகம் துக்கம் முதலியவற்றில் மனவிகாரமற்று மனத்தையும் மற்ற இந்த்ரியங்களையும் வென்று பொறுமையும் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஹிதஞ்செய்யுந் தன்மையும் அமைந்து பரோபகாரத்தில் மனஸுக்கமுற்று ஸர்வேஸ்வரனெனிய என்னிடத்தில் ஸ்நேஹத்தையே புருஷார்த்தமாக நினைத்து, தேஹயாத்ரையே பொழுதுபோக்கையிருக்கும் ப்ராக்ருத ஜனங்களிடத்திலும் பெண்டிர் புதல்வர் கண்பர் முதலிய பல பற்றுக்களுக்கிடமான க்ருஹஸ்தாச்ரமத்திலும் ப்ரீதியின்றி உலகத்தில் தேஹயாத்ரைக்கு வேண்டியவற்றை யொழிய மற்ற எதையும் விரும்பாதிருப்பவர்களே பெரியோர்களாவார்கள். ஜீவன் தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமித்து இந்த்ரியங்களின் ப்ரீதிக்காக முயன்று பலவகைக் கார்யங்களைச் செய்கின்றான். இது நிச்சயம். பூர்வஜன்மத்தில் இந்த்ரியங்களின் த்ருப்திக்காகச் செய்த கர்மத்தினாலேவோ இப்பொழுது பல வருத்தங்களுக்கிடமாயிருப்பதும் நிலையற்றதுமாகிய இத்தேஹத்தைப் பெற்றான். மீளவும் அங்ஙனமே செய்வானையின், ஜன்மாந்தரத்

தைப்பெற்று வருந்தவேண்டுமல்லவா? ஆகையால் அங்
நனம் இந்திரியங்களின் ப்ரீதிக்காகப் பல கர்மங்களைச்
செய்வது எனக்கு நலமாகத் தோற்றவில்லை. ஆத்மஸ்வ
ரூபத்தை அறியவேண்டுமென்னும் விருப்பம் உண்டா
காதவரையிலும் அவ்வஜ்ஞானத்தினால் ஆத்மஸ்வ
ரூபம் மறைந்து தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமிக்
கும் புத்தி தொடர்ந்து வரும். இந்திரியங்களின் த்ருப்
திக்காகக் காமங்களைச் செய்யும்வரையில் மனம்
மேன்மேலும் சரீரஸம்பந்தம் விளையுமாறு கர்மங்களில்
தாழ்வுற்றிருக்கும். இங்ஙனம் கர்மஸம்பந்தத்திற்கிட
மான அவித்யையால் தீண்டப்பட்டிருப்பதுபற்றி மனம்
ஜீவனைக் கர்மங்களில் தூண்டுகிறது. அதனால் தேஹ
பந்தத்தைப் பெறுகிறான். ஆகையால் ஸர்வாந்தராத்மா
வான என்னிடத்தில் ப்ரீதிரூபமான பக்தி உண்டாகாத
வரையில் தேஹபந்தத்தினின்று விடுபடமாட்டான்.
தனக்குப் புருஷார்த்தமான ஆத்மபரமாத்மாக்களின்
உண்மையை அனுஸந்திப்பதில் ஊக்கந்தவறுதலின்றி
"சப்தாதி விஷயங்களில் இந்திரியங்களுக்குள்ள விருப்
பம் ஆத்மாவுக்கு இயற்கையில் ஏற்பட்டதன்று. தேஹ
ஸம்பந்தத்தைப் பற்றினது" என்பதை விவேகத்
துடன் ஆராய்ந்தறியாதிருக்கும் வரையில் ஜீவன்
ஆத்மபரமாத்மாக்களின் ஸ்வரூபத்தை மறந்து அறி
வழிந்து ஸ்த்ரீபுருஷர்களின் புணர்ச்சியையே முக்ய
மாகப் பெற்ற இல்லறவாழ்க்கையில் இறங்கி அதில் பல
வகையான தாபங்களை அனுபவிக்கிறான். ஸ்த்ரீபுருஷர்
கள் ஒருவரையொருவர் புணரும் புணர்ச்சியே அவ்விரு
வர்க்கும் மனத்தில் முடிச்சுபோல் அவிழ்க்கமுடியாத
கர்ம வாஸனைக்கிடமென்று சொல்லுகிறார்கள். இக்கர்ம
வாஸனையே ஜீவனுக்கு தேஹத்தில் காணென்னும்

புத்தியும் மனை கழனி புதல்வன் கண்பன் பணம் முத லியவற்றில் என்னுடையதென்னும் புத்தியுமாகிற பெரிய மோஹத்திற்கிடமாகின்றது. போக்கமுடியாமல் உறுதியாயிருப்பதும் கெடுகாள் கர்மங்களை ஓயாமல் செய்தமையால் ஏற்பட்டதும் மேன்மேலும் கர்மங் களைச் செய்வதற்கு ஹேதுவுமாகிய ஹ்ருதய க்ரந்தி யென்கிற வாஸனை தீரும்பொழுதுதான் ஜீவன் இந்த ஸம்ஸாரத்தினின்று விடுபட்டுப் புண்ய பாபங்களைத் துறந்து பரமபுருஷனைப் பெறுவான். பரிசுத்தனும் குருவுமாகிய என்னிடத்தில் பக்தியும் அனுவ்ருத்தியும் சப்தாதி விஷயங்களில் ப்ரீதியில்லாமையும் குளிர் வெயில் முதலியவற்றைப் பொறுக்கையும் இஹலோகம் பரலோகம் ஆகிய எல்லா இடங்களிலும் ஜந்துவுக்கு வ்யஸனம் தொடர்ந்தே வருமென்கிற அனுஸந்தான மும் கன்மை தீமைகளை அறியவேண்டுமென்னும் விருப் பமும் உபவாஸரூபமான தவமும் வீணைசை தீரப்பெறு கையும் என்னுடைய ஆராதன ரூபமான வர்ணாச்ரம கர்மங்களைச் செய்கையும் என் கதைகளைக் கேட்கையும் என்னையே தெய்வமாக நினைத்திருக்கும் பாகவதர் களோடு ஸஹவாஸமும் என் குணங்களைக் கீர்த்தனம் செய்கையும் வைரமில்லாமையும் எல்லாவற்றையும் ஸம மாக நினைக்கையும் இந்த்ரிய நிக்ரஹமும் தேஹத்தில் நானென்னும் புத்தி வீடு வாசல் முதலியவற்றில் என் னுடையதென்னும் புத்தி இவற்றைத் துறக்கையும் ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷணனான ஆத்மாவின் ஸ்வரூபத்தை அனுபவிக்கையும் பரிசுத்தமான ஆஹா ரத்தை உட்கொள்கையும் ப்ராணன் இந்த்ரியம் மனம் இவற்றை வெல்லுகையும் ஸதுபாயத்தில் ச்ரத்தையும் ஸ்த்ரீஸம்போகமில்லாமை முதலிய ப்ரஹ்மசர்யமும்

எப்பொழுதும் செய்யவேண்டிய செயல்களில் மனஒக்
கம் தவறுமையும் வாக்கை அடக்குகையும் எல்லாம் பரப்
ரஹ்மஸ்வரூபமே யென்கிற நினைவும் சாஸ்த்ரஜ்ஞானத்
திஸ்ல் கிளர்கின்ற த்யானரூபமான ஜ்ஞானமும் ஸமாதி
யோகமும் ஆகிய இவற்றை யெல்லாம் தைர்யம் ப்ரயத்
னம் நிச்சயம் இவற்றோடு கடத்திக்கொண்டு வருவாரு
யின் ஹ்ருதயக்ரந்தி யென்கிற வாஸனையை அழித்து
அஹம்புத்திக்கு விஷயமான தேஹத்தைத் துறப்பான்.
பெரியோர்கள் உபதேசித்தபடி இந்த யோகத்தை
அனுஷ்டித்துக் கர்மங்களுக்கு வழிகாட்டுகிற அஹங்
காரமமகாரங்களாகிற அவித்யையால் ஏற்பட்ட
வாஸனை யென்னும் ஹ்ருதயக்ரந்தியை மனஒக்கத்
துடன் நன்றுகப் போக்கிக்கொண்டு அப்பால் இதி
னின்று மீளவேண்டுமன்றி இடையில் இதைக் கைவிட
லாகாது. என்னுடைய ஸாரூப்யத்தை விரும்பி என்
அனுக்ரஹத்தையே ப்ரயோஜனமாக நினைப்பவன்
தந்தையாயின் இதை அறியாத புதல்வர்களுக்கும்,
ஆசார்யனுயின் இதை அறியாத சிஷ்யர்களுக்கும், அர
சனுயின் இதை அறியாத ப்ரஜைகளுக்கும், இதைக்
கற்பிக்கவேண்டும். கர்மங்களில் மதிமயங்கின அவர்
களை மீளவும் அக்கர்மங்களிலேயே மூட்டலாகாது.
இந்த யோகத்தைச் சொல்லியும் அவர்கள் கர்மவாஸ
னையால் இதை அங்கீகரிக்காமற்போயினும் அவர்கள்
மேல் கோபம் கொள்ளாமல் மென்மேலும் தொடர்ந்து
அவர்களுக்கு இதில் ருசியை விளைவிக்கவேண்டும். உல
கத்திலுள்ள ஜனங்கள் அறிவற்றவர்கள். அவர்கள்
பெரிய ஆவலுடன் சப்தாதி விஷயங்களைப் பெறுவதற்
காகவே பல யத்னங்களைச் செய்யுந்தன்மையுடையவர்
கள். அவர்கள் மதிமயங்கி அற்ப ஸுகங்களுக்கிட

மான சப்தாதி விஷயங்களுக்காக ஒருவர்மேலொருவர் த்வேஷத்தையும் ஏற்றுக்கொள்கிறார்கள்; மேலே தங்களுக்கு மஹத்தான துக்கம் வரப்போகிறதென்பதை அறியவேமாட்டார்கள். கன்மை தீமைகளை உணர்த்துமன இரக்கமுடைய ஸத்த விவேகிதான் இங்ஙனம் அஜ்ஞான ஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கின்ற அத்தகைய ஜந்துக்களைக் கண்டும் கெடுமதியரான அவர்களை மீளவும் அக்கர்ம மார்க்கத்திலேயே தாண்டுவான்? தப்புவழி கடக்கிற குருடனைக் கண்டும் வழிதெரிந்தவர் மீளவும் அதே வழியில் கடக்கும்படி சொல்லுவார்களோ? ஸம்ஸாரத்தில் விழுந்துழல்கின்ற புருஷனுக்கு இந்த யோகத்தை உபதேசித்து அவனை அதினின்று விடுவிக்கயத்னம் செய்யாத ஆசார்யன் ஆசார்யனேயல்லன். அத்தகைய பந்து பந்துவல்லன். தந்தையும் தந்தையல்லன். தாயும் தாயாகமாட்டாள். தெய்வமும் தெய்வ மன்று. கணவனும் கணவனல்லன். இந்த என் சரீரம் மற்றச் சரீரங்களோடும் நிகர்த்து நிரூபிக்கத் தக்கதன்று. என்னுடைய ஹ்ருதயம் ஸத்வகுணம் நிறைந்திருக்கும். ஸத்வகுணத்தில் தர்மம் முன் நின்றிருக்கும். அதர்மம் பின்னே தள்ளுண்டிருக்கும். இங்ஙனம் என் சரீரம் ஸத்வகுணப்ரசுரமானதுபற்றியே பெரியோர்கள் என்னுடைய மேன்மையைக் கருதி என்னை ருஷபனென்று சொல்லுகிறார்கள். ஸத்வ ப்ரசுரமான ஹ்ருதயத்தையுடைய அச்சரீரத்தினின்றுண்டான நீங்களெல்லோரும் ஸத்வம் தலையெடுத்தவர்களே. ஆகையால் உங்கள் ஸோதரனும் பூஜ்யனுமாகிய இந்தப் பரதனைக் கபடமின்றிப் பணிந்து வருவீர்களாக. அதுவே எனக்குச் செய்யும் சுச்ரூஷையும் ப்ரஜைகளைப் பாதுகாக்கையுமாம். உலகத்திலுள்ள பூதங்க

ளுக்குள் ஸ்தாவரங்களைக் காட்டிலும் ஜங்கமங்களும், அவற்றில் அறிவில்லாத பூச்சிப் புழு முதலியவற்றைக் காட்டிலும் அறிவுடைய பசு பக்ஷி முதலியவைகளும் சிறப்புடையவை. அவற்றைக்காட்டிலும் மனுஷ்யர்களும் அவர்களைக்காட்டிலும் ப்ரமதகணங்களும், அவர்களைக்காட்டிலும் கந்தர்வர்களும், அவர்களைக் காட்டிலும் ஸித்தர்களும், அவர்களைக் காட்டிலும் கின்னரர்களும், அவர்களைக்காட்டிலும் அஸுரர்களும், அவர்களைக்காட்டிலும் இந்த்ரன் முதலிய தேவர்களும், அவர்களைக்காட்டிலும் தக்ஷர் முதலிய ப்ரஹ்ம புத்ரர்களும் சிறப்புடையவர். அவர்களைக்காட்டிலும் ருத்ரன் மேலானவன். அவனைக்காட்டிலும் ப்ரஹ்மதேவன் மேற்பட்டவன். அவனைக்காட்டிலும் நான் மேற்பட்டவன். நான் ப்ராஹ்மணர்களையே தெய்வமாகவுடையவன். ஆகையால் ப்ராஹ்மணர்கள் எல்லோரிலும் மேன்மையுடையவர்கள். ஓ ப்ராஹ்மணர்களே! நான் மற்ற எந்த ப்ராணியையும் ப்ராஹ்மணர்களுக்கு ஸமமாக நினைக்கமாட்டேன். அந்த ப்ராஹ்மணனாகிற அக்னியில் ஹோமம் செய்த அன்னங்களை நான் ப்ரீதியுடன் புசிக்கின்றேன். வைதிகமான யாகாதி கர்மங்களில் அக்னியில் ஹோமம் செய்த அன்னங்களை நான் அங்ஙனம் புசிக்கிறதில்லை. அன்னியான வேதமாகிற என் சரீரத்தை இவ்வுலகில் ப்ராஹ்மணர்கள் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். மிகவும் பரிசுத்தமான ஸத்வகுணம் இவர்களிடத்தில் நிலைநின்றிருக்கின்றது. இந்த ப்ராஹ்மணர்களிடத்தில் சமம் தமம் ஸத்யம் அனுக்ரஹம் தவம் பொறுமை ஆத்ம பரமாத்மாக்களின் உண்மையைப்பற்றின அனுபவம் ஆகிய இவையெல்லாம் நிலைநின்றிருக்கின்றன. உலகத்தில் மேன்மையுடையவர்க

ளான ப்ரஹ்மாதி தேவதைகளைக் காட்டிலும் மேலாகி ஸ்வர்க்கமோக்ஷங்களைக் கொடுக்கும் ப்ரபுவாகிய என்னிடத்திலும் அவர்களுக்கு வேண்டிப்பெறவேண்டியது ஒன்றுமே இல்லை. அவர்கள் கைம்முதலொன்றுமில்லாத ஏழைகள். என்னிடத்தில் பக்தியைச் செய்யுந்தன்மையான அவர்களுக்கு மற்ற ஐஹிக புருஷார்த்தத்திலுல் ஆகவேண்டியது என்னிருக்கின்றது? (இங்ஙனம் என்னிடத்தில் பக்தியைத் தவிர மற்றொன்றையும் விரும்பாத மஹானுபாவர்களான ப்ராஹ்மணர்களை அன்புடன் பணிந்து வருவீர்களாக.) புதல்வர்களே! ப்ரக்ருதி புருஷன் ஈச்வரன் என்கிற இம்மூன்று தத்வங்களும் ஒன்றுக்கொன்று விலக்ஷணமாயிருப்பவையென்னும் புத்தியுடைய நீங்கள் ஜங்கமஸ்தாவராத்மகமான ஸமஸ்த பூதங்களும் என்னுடையசரீரங்களேயென்று பாவித்து அவற்றை அடிக்கடி வெகுமதிக்கவேண்டும். அதுவே என்னுடைய ஆராதனமாம். மனம் வாக்கு கண் மற்ற இந்த்ரியங்கள் ஆகிய இவற்றின் வ்யாபாரத்திற்கு ப்ரத்யக்ஷமான பலன் என்னை ஆராதிக்கையே. என்னை ஆராதிக்காத புருஷன் காலபாசத்தில் மூட்டுவிக்கவல்ல மஹா மோஹத்தினின்று தன்னை விடுவித்துக்கொள்ள எவ்விதத்திலும் வல்லவனேமாட்டான்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:— மஹானுபாவனும் ஸமஸ்த பூதங்களுக்கும் நண்பனுமாகிய ருஷபனென்னும் பேருடைய பகவான் தன் புதல்வர்களுக்கு நன்மை தீமைகள் நன்றாகத் தெரியுமாயினும் அதை அறியாத உலகத்திற்குக் கற்பிக்கும் பொருட்டுத் தன் பிள்ளைகளுக்கு அதை விரிவாக உபதேசித்து, ப்ரவ்ருத்திகர்மத்தினின்று நீங்கி இந்த்ரியங்களை அடக்கியாளுந்

தன்மையரும் பகவானுடைய திவ்ய மங்கல விக்ர ஹத்தை த்யானிக்குந் தன்மையருமான பெரியோர்க ளுக்குப் பரமஹம்ஸர்கள் ஆசரிக்குந் தர்மமாகிய பக்தி ஜ்ஞான வைராக்யங்களைக் கற்பிக்க விரும்பித் தன் புதல்வர்களில் தலைவனும் பாகவதர்களையே முக்யமா கப் பணியுந் தன்மையனும் பாகவத ச்ரேஷ்டனுமாகிய பரதனென்னும் புதல்வனைப் பூமண்டலத்தை ஆளும் படி அபிஷேகஞ்செய்து ஆடையாபரணம் முதலிய சரீர பரிக்ரஹங்களையெல்லாம் வீட்டிலேயே துறந்து ஆகா யத்தையே ஆடையாகக்கொண்டு தலைமயிர்களை விரித் துப் பித்தம்பிடித்தவன் போன்று வைதிகாக்னியை ஆத்மனமாரோபணம்செய்து ப்ரஹ்மாவர்த்தத்தினின் றும் புறப்பட்டுப்போனான். பிறரால் பேசப்பெற்றும் ஜனங் களினிடையில் மூடன் குருடன் செவிடன் ஊமை பிசா சம் பித்தம்பிடித்தவன் இவர்களைப் போன்று எல்லோ ரும் அவமதிக்கும்படியான வேஷம்பூண்டு மௌன வ்ரதத்தை ஏற்றுக்கொண்டு அது முதல் பேசாதிருந் தான். அவன் வழிகள்தோறும் ஆங்காங்குள்ள பட்ட ணம், க்ராமம், பொன் வெள்ளி முதலியன விளையுமிடம், பயிர்செய்பவர் வஸிக்கும் க்ராமம், வேடர் முதலியவர் வஸிக்குமிடம், பூந்தோட்டம் முதலிய இடம், ஸைன இறங்குமிடம், பசுக்கள் கட்டுமிடம், இடைச்சேரி, யாத்ரை செய்பவர்களின் கூட்டம், பர்வதம், ரிஷிகளின் ஆச்ரமம் முதலிய இடங்களில் மூட ஜனங்களால் விரட்டுதல் அடித்தல் மூத்ரம் பெய்தல் காறி உமிழ் தல் கல்லெடுத் தடித்தல் மண்ணை வாரி இறைத்தல் அபானம் விடுதல் துர்ப்பாஷையாகவைதல் ஆகிய இவற்றால் ஈக்களால் காட்டானைபோல் அவமதிக்கப் பெறினும் அவற்றைப் பொருள் செய்யாமல் ஆத்ம

பரமாத்மாக்களின் உண்மையை அனுபவிக்கையாகிற தன் மஹிமையில் தான் நிலை நின்றிருக்கையால் அசேதனமான ப்ரக்திருயின் பரிணமமும் அஜ்ஞானிகள் ஆத்மாவென்று ப்ரமிப்பதற்கிடமுமாகிய தேஹத்திலும் அதைத்தொடர்ந்த மற்றவையிலும் அஹங்கார மமகாரங்களை ஏற்றுக்கொள்ளாமல் ஸர்வஸ்வரூபியான பரப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்காரத்திலல் ஸ்ருவாரூன மதியுடையவனுகத் தனியனுகவே பூமி முழுவதும் சுற்றிணன். அவனுடைய கை கால் மார்பு புஜம் தோள் கழுத்து முகம் முதலிய அவயவங்களெல்லாம் மிகவும் மென்மைக்கிடமாகி அழகாயமைந்திருக்கும். அவன் இயற்கையாகவே அழகாயிருப்பான். ஸ்வபாவ ஸித்தமான புன்னகையினல் அழகான முகமுடையவன்; அப்போதலர்ந்த செந்தாமரை மலர்போன்று குளிர்ந்த கருவிழிகள் அமைந்து சிவந்து நீண்ட கண்களால் அழகாயிருப்பான். ஏற்றக் குறைவின்றி அழகான கபோலம் காது கழுத்து மூக்கு இவைகளையுடையவன். புன்னகை உள்ளடங்கின முகவிகாஸமாகிற மஹோத்ஸவத்தினல் பட்டணத்துப் பெண்களின் மனத்தில் மன்மதனை எழுப்புந்திறமையுடையவன். அவன் இத்தகையழகினும் பொன்னிறமுடைய தன் சுரும்பார்ந்த குழற்கற்றையைப் பின்னே விரித்து அழுக்கடைந்த சரீரத்துடன் பேய் பிசாசுமுதலியவற்றல் பிடியுண்டவன்போல ஜனங்களுக்குத் தோற்றிணன். அவன் உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் யோகத்திற்கு மேரே விபரீதமாக நடப்பதைக் கண்டு அதற்கு ப்ரதீகாரம் செய்வது நிச்சயக்கிடமென்று நினைத்து மலைப்பாம்புபோல் ஒரே இடத்தில் இருந்து ப்ராரப்த கர்மத்தை அனுபவிக்கையாகிற அஜகரவ்ரதத்தை அனுஷ்டிக்க முயன்று ஓரிடத்தில்

படுத்து அன்னம் முதலியவற்றைப் புசிப்பதும் அவல் முதலியவற்றை மெல்லுவதும் ஜலம் முதலியவற்றைப் பருகுவதும் அதேஇடத்தில் படுத்திருத்தே மலமூத்ரங் களை விடுவதுமாகி மலத்தின்மேல் புரண்டு உடம்பெல் லாம் அத்தமலத்தையே பூசிக்கொண்டிருந்தான். அவ னுடைய மலம் கல்ல மணம் வீசிக்கொண்டிருந்தது. அம்மலத்தின்மேல் பட்டு வீசுங்காற்று காற்புறத்திலும் பத்து யோஜனை தூரம் வரையில் கண்மணம் கமழ்ந்தது. இங்ஙனம் பசு ம்ருகம் காக்கை இவற்றைப்போல் கடப் பதும் நிற்பதும் இருப்பதும் படுப்பதுமா யிருந்தான். மற்றும் காக்கை ம்ருகம் பசு இவற்றைப் போல் புசிப்ப தும் பருகுவதும் மலமூத்ரங்களை விடுவதுமாயிருந்தான். விதுரனே! ஓயாமல் மஹாநந்தத்தை அனுபவிப்பவ னும் மோக்ஷத்தைத் கொடுக்கும் ப்ரபுவுமாகிய அந்த ருஷபனென்னும் பகவான் இவ்வாறு பல விதமான யோகவ்ரதங்களை அனுஷ்டித்துக்கொண்டு தன்னைச் சரீரமாகவுடையவனும் ஸமஸ்த பூதங்களுக்கும் அந்த ராத்மாவுமான வாஸுதேவ பகவானுடைய ஸ்வரூ பத்தைத் தனக்குத் தெரியாதபடி மறைக்கும் கர்மங்க ளெல்லாம் தொலையப்பெற்று எல்லாம் பரப்ரஹ்மஸ்வரூ பமே யெனும் நிஷ்டை நிலைநின்று பரப்ரஹ்மத்திற்கு உட்படாத ஸ்வதந்த்ர வஸ்து உண்டென்கிற பேதபுத்தி சிறிதும் இல்லாமல் ஸமஸ்த புருஷார்த்தங்களும் கை கூடப்பெற்று நிறைவானவனாயிருந்தான். ஆனதுபற்றி, யோகமஹிமையால் [1] வைஹாயஸம் மனோஜவம் அந் தர்த்தானம் பரகாய ப்ரவேசம் தூரதர்சனம் தூரஸ்ர

---

1. வைஹாயஸம்-ஆகாயத்தில் ஸஞ்சரிக்கை. மனோஜவம்-மனோ வேகம்போன்ற தேஹவேகம் உண்டாகப்பெறுகை. அந்தர்த்தானம் இருந்த இடத்திலேயே இருந்து பிறர்கண்ணுக்குத் தெரியாமல்

வணம் முதலிய யோகைச்வர்யங்கள் தானே உண்டாயி னும் ஸம்ஸார வர்த்தகங்களென்றும் மோக்ஷவிரோதி களென்றும் அவற்றை அவன் மனத்திணலும் அபிலக் திக்கவில்லை. ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.

ருஷபதேவன் சரீரத்தைத் துறந்த வரலாறு.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—மஹா னுபாவரே! ஆத்மஸ்வரூபத்தை அறிந்து அதனல் மனக் களிப்புற்றவர்களும் யோகத்திணல் கிளர்ந்த ஜ்ஞான மாகிற அக்னியில் கர்மபீஜங்களை அழித்தவர்களுமான யோகிகளுக்கு யோகமஹிமையால் தானே எற்பட்ட வைஹாயஸம் முதலிய ஜஸ்வர்யங்கள் ஜன்மஜராமர ணாதிவருத்தங்களுக்கிடமான ஸம்ஸாரத்தை மீளவும் விளைக்க வல்லவையாகமாட்டாவல்லவர? அப்படியிருக்க அம்மன்னவன் யோகம் கைகூடினவருயிருந்தும் அவற் றை ஏன் பாராட்டாமல் பயந்தான்?

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மன்னவனே! நீசொன்ன து வாஸ்தவம். ஆயினும், இவ்வுலகத்தில் சிலர் மனத்தை வென்றிருப்பினும் நின்றபடி நில்லாதிருக்குந்தன்மையு டைய அம்மனத்தை நம்புகிறதில்லை. துர்ப்புத்தியுள்ள வேடன்மிருகங்களை நம்பச்செய்து இனியன்போலிருந்து அவை நம்பினபின்பு அவற்றை வதிப்பதுபோல், மன மும் படிந்தாற் போலிருந்து நம்பவைத்துத் திடீரென்று ஏமாற்றி ஸம்ஸாரத்தில் கொண்டுபோய் மூட்டிவிடும்.

மறைகை. பரகாயப்ரவேசம்-தன் சரீரத்தைவிட்டுப் பிறர் சரீரத் தில் ப்ரவேசித்தல். தூரதர்சனம்-வெகுதூரத்திலிருப்பதையும் பார்க் குந்திறமை. தூரஸ்ரவணம்-வெகுதூரத்திலுள்ளதையும் கேட்குந் திறமை.

ஆகையால் அதை எப்பொழுதும் கம்பாமல் ஊக்க மாகவே அடக்கிக்கொண்டு வரவேண்டும் இங்ஙனமே பெரியோர்கள் சொல்லுகிறார்கள்:— "மனம் நிலையற்றி ருக்கையில் ஒருகாலும் ஒரு விஷயத்திலும் பற்று செய்யலாகாது. நாம் மனத்தை வென்று விட்டோ மென்று கம்பி அதைப் போனவழியே விடுவேனாயின் நெநிகர்ள் ஸம்பாதித்த பகவதுபாஸன ரூபமான ஜ்ஞானமெல்லாம் அழிந்துபோய்விடும். யோகமஹிமை யால் விளையும் ஐஸ்வர்யங்கள் காமத்திற்கு இடங் கொடுப்பவை. அத்தகைய யோகைஸ்வர்யங்களை மனம் நமக்கு ஸ்வாதீனமென்று விரும்புவானாயின், காமத் திற்கு இடங்கொடுத்தாற் போலாகும். பிறகு காமத் தைத் தொடர்ந்து வருமவைகளான க்ரோதம் லோபம் முதலிய சத்ருக்களும் வந்து புகுவார்கள். பரபுருஷனை விரும்பும் பெண் நம்பின கணவனை வஞ்சித்துக் கள்ள புருஷனைக் கைபற்றி கணவனை முடிப்பதுபோல், மனத்தை நம்புவானாயின் அது அவனை வஞ்சித்துக் காமம் க்ரோதம் முதலிய சத்ருக்களுக்கு இடங் கொடுத்து அவர்கள் மூலமாய் அவனை அழித்துவிடும். ஆகையால் மனத்தை நம்பலாகாது. யோகைஸ்வர்யங் களை அனுபவிக்க விரும்புவானாயின், காமம் க்ரோதம் லோபம் மதம் மோஹம் பயம் முதலியவைகளும் கர்ம பந்தமும் மேல் விழுந்துவரும். இங்ஙனம் பல அனர்த் தங்களுக்கிடமான அந்த யோகைஸ்வர்யத்தை மதியு டையவன் எவன் விரும்புவான்?" அப்பால் அம்மன்ன வன் ஸமஸ்த லோகபாலர்களுக்கும் சிரோபூஷணம் போன்றவனுமிணும் அவமதிக்கும்படியான பலவகை வேஷம் பாஷை கடத்தை இவைகளால் மூடன்போல் தோற்றி யோகிகள் தேஹத்தை விடவேண்டியவகை

இத்தகைய தென்பதை அறிவிக்கமுயன்று தன் தேஹத்தைவிட விரும்பி அஜ்ஞானமாகிற மறைவற்ற மையால் ஆத்மாவைப் பரமாத்மாவிடத்தில் அபேத மாக ஸாக்ஷாத்கரித்துத் தேஹத்தில் என்னுடைய தென்னும் தினைவுமாறப்பெற்று அத்தேஹத்தினின் றும் நீங்கினன். இங்ஙனம் அம்மன்னவன் தேஹாபி மானத்தைத் துறந்தவனுயினும் ப்ரக்ருதி வாஸனையின் தொடர்ச்சியால் அபிமானமுடையவன் போல் பூமி முழுவதும் திரிந்துகொண்டிவரும்பொழுது ஓரு கால் தெய்வாதீனமாய்க் கொங்கண வங்க வடகுடகங்க ளென்கிற தக்ஷிண கர்ணடதேசங்களைச் சேர்ந்து குடகாசலத்தின் உபவனத்தில் வாயில் கற்களைக் கப ளம் போல் போகட்டுத் தலைமயிர்களை விரித்து அரை யில் ஆடையின்றிப் பித்தம் பிடித்தவன்போல் உலாவி னன். பிறகு காற்றுவேகத்தினுல் ஒன்றோடொன்று உறைகின்ற மூங்கிற் புதரினுண்டான காட்டுத்தி அவ் வனம் முழுவதும் பரந்து எரியத்தொடங்கி அந்த ருஷி பனுடைய தேஹத்துடன் அவ்வனத்தைத் தஹித்து விட்டது. கொங்கண வங்க வடகுடகங்களென்னும் தேசங்களுக்கரசனுகிய அர்ஹனென்பவன் அந்த ருஷிப னுடைய சரித்தையைக் கேட்டுத் தெய்வச் செய லால் கலியுகத்தில் அதர்மம் தலையெடுக்கையில் மதி கெட்டு எவ்விதத்திலும் பயமின்றிய தன்தர்மத்தைத் துறந்து ருஷிபனுடைய வ்ரதத்தை ஆசரிக்க முயன்று அதன் உட்கருத்தை அறியாமல் அஸம்பத்தமான பாஷண்டமென்னும் ஆபாஸதர்மத்தை ஜனங்களெல் லோரும் அனுஷ்டிக்கும்படி கடத்தப்போகிறன். முன் னமே பகவானுடைய மாயையால் மதிமயங்கிப் பாக்ய மற்ற மனிதர்கள் இந்த அர்ஹனுடைய உபதேசத்தி

ஞல் நிரம்பவும் மயங்கித் தமது வர்ணஸ்ரம விதியின்படி ஏற்பட்ட நியமங்களான ஸ்நாநுதி ஆசாரங்களையும் ஸந்த்யாவந்தநுதி கர்மங்களையும் துறந்து தேவதைகளின் அவமதிப்புக்கிடமான ஸ்நானம் செய்யாமை ஆசமனம் செய்யாமை தலை மொட்டையடிக்கை முதலிய ஆபாஸ வ்ரதங்களை மனம்போனபடி அங்கீகரித்து அதர்மம் நிறைந்த கலிகாலத்திலுல் விவேகமற்றுப் பெரும்பாலும் ப்ராஹ்மணர்களையும் யஜ்ஞபுருஷனுன பகவானையும் அவனுடைய பக்தர்களையும் நிந்தித்துக் கொண்டிருக்கப் போகிறூர்கள். அவர்கள் வேதத்தில் சொல்லப்படாததும் அந்த பரம்பரையால் ஏற்பட்டதுமான பரபமார்க்கத்தில் இழிந்து மனம்போனபடி தேஹயாத்ரையை நடத்தி அவ்வர்ஹனுடைய உபதேசத்தையே நம்பித் தாமே தமக்குச் சத்ருக்களாய் அந்ததாமிஸ்ரமென்னும் நரகத்தில் விழப்போகிறூர்கள். இந்த ருஷபனுடைய அவதாரம் ரஜோ குணத்திலுல் வருந்தும் ஜனங்களுக்கு மோக்ஷமார்க்கத்தை அறிவிப்பதற்காக ஏற்பட்டது. அவனுடைய புகழை இங்ஙனம் பாடுகிறூர்கள்:—"இந்தப் பூமியில் எழு ஸமுத்ரங்களும் எழு த்வீபங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அந்த த்வீபங்களில் ஜம்பூத்வீபம் சிறப்புடையது. அதில் ஒன்பது கண்டங்கள் உண்டு. அவையே பாரத வர்ஷங்களென்று கூறப்படுகின்றன. அவற்றில் பாரதவர்ஷம் மிகவும் புண்யமானது. ஆ! என்ன ஆச்சர்யம்? இந்தப் பாரதவர்ஷத்திலுள்ள ஜனங்கள் ருஷபாதி ரூபமாய் அவதரித்த பகவானுடைய மங்களசரித்ரங்களைப் பாடுகிறூர்களல்லவா? ப்ரியவ்ரதனுடைய வம்சம் பரிசுத்தமான பெரும்புகழுடையது. இந்த வம்சத்திலல்லவோ புராணபுருஷன் ருஷபனுய் அவதரித்து மோக்ஷ

ஹேதுவான தர்மத்தை அனுஷ்டித்துக் காட்டினன். இந்த ருஷபனுடைய கிஷ்டையை மற்ற எந்தயோகி தான் மனோரதத்திலாவது அனுஸரிக்கவல்லனுவான்? இந்த ருஷபன் மனோஜவம் முதலிய யோகசக்திகள் மேல்விழுந்து வரினும் இவை த்யாஜ்யங்க ளென்று அவற்றை ஆதரிக்காதிருந்தான். மற்ற யோகிகள் அவற்றைப் பெறவிரும்புகிறார்கள்." ஸமஸ்தலோகங்க ளுக்கும் வேதங்களுக்கும் தேவதைகளுக்கும் ப்ராஹ்ம ணர்களுக்கும் பசுக்களுக்கும் குருவாகிய ருஷபதேவ னுடைய சரித்ரம் இத்தகையது. இதைச் சொன்னல் ஸமஸ்த பாபங்களும் போம். இது ஸமஸ்த மங்களங் களுக்கும் இருப்பிடம். நாள்தோறும் ஸ்ரத்தை வளரப் பெற்று இதைக் கேட்கிறவனுக்கும் கேட்பிக்கிறவனுக் கும் ஷாட்குண்ய பூர்ணனை வாஸுதேவனிடத்தில் மாறுத பக்தியோகம் தொடர்ந்துவரும். விவேகிகள் பலவகைப்பாபங்களுக்கிடமான ஸம்ஸாரத்தில் விளை கின்ற துக்கங்களால் பரிதபிக்கின்ற ஆத்மாவை இந் தப் பகவத்பக்தியாகிற அம்ருதஸாகரத்தில் ஸ்நானம் செய்வித்து அந்தப் பகவதனுபவத்தினல் மஹாகஷ்ட தைப் பெற்றுத் தானே கோக்திருக்கிற பரமபுரு ஷார்த்தரூபமான மோக்ஷத்தையுங் கூட இம்மியும் ஆதரிக்கிறதில்லை. அவர்கள் எல்லாம் பகவானுடைய தென்னும் நிஷனவினல் ஸமஸ்த புருஷார்த்தங்களும் கைகூடப் பெற்றவர்கள். ராஜனே! பாண்டவர்களான உங்களுக்கும் யாதவர்களுக்கும் பகவான்தானே நேராக ரக்ஷகனும் குருவும் தெய்வமும் நண்பனும் குலபதியு மாயிருப்பவன். பல படச் சொல்லியென்? ஓருகால் தாதுபோவது முதலிய கார்யங்களில் உங்களுக்குக் கிங்கரனுமாயிருக்கின்றன். இதெல்லாம் இருக்கட்டும்.

மன்னனே! மற்றவர் ஓயாது பணியினும் மோகஷம் கொடுப்பானன்றிப் பக்தியோகத்தைக் கொடுக்கிறதில்லை. பரப்ரஹ்மஸ்வரூபமான ஆத்ம ஸ்வரூபத்தை நித்யம் அநுபவிக்கையாகிற லாபத்தினால் மற்ற புருஷார்த்தங்களில் விருப்பற்று நெடுநாளாய்ப் பாபகர்மங்களைச் செய்து வந்தமையால் கண்மையில் நுழையாமல் உறங்கும் புத்தியுடைய உலகத்தின்மேல் கருணை கூர்ந்து எவ்விதத்திலும் பயத்திற்கிடமில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை மொழிந்த ருஷபரூபியான பரமபுருஷனுக்கு நமஸ்காரம். ஆறுவது அத்யாயம் முற்றிற்று.

பாதனுடைய வ்ருத்தாந்தத்தைக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மஹாபாகவதனாகிய பரதன் ருஷபதேவனால் பூமண்டலத்தை ஆளும்படி நியோகிக்கப்பெற்று அப்படியே அதைப் பாதுகாத்துக் கொண்டு வருகையில், விச்வரூபனது புதல்வியாகிய பஞ்சஜனி யென்பவளை மணம்புரிந்தான். தாமஸாஹங்காரம் பூத ஸூக்ஷ்மங்களைப் படைப்பதுபோல், அம்மன்னவன் தன் பார்யையான பஞ்சஜனியிடத்தில் எல்லாவிதத்திலும் தனக்கு அநுரூபர்களான ஸுமதி ராஷ்ட்ரப்ருத் ஸுதர்சனன் ஆசரணன் தூம்ரகேது என்னும் பேருடைய ஐந்து புதல்வர்களைப் பெற்றான். மூன்று அஜநாபமென்னும் பேருடைய இவ்வர்ஷத்தை இப்பரதமன்னவன் ஆளத்தொடங்கினது முதல் பாரதவர்ஷமென்று வழங்குகிறார்கள். பலவும் அறிந்த அப்பரத மஹீபதி தான் தர்மத்தில் நிலைநின்று தமது வர்ணாச்ரமங்களுக்குரிய தர்மங்களைத் தவறாது கடத்தும் ப்ரஜைகளைத் தன் தந்தை பாட்டன்மார்களைப்

போல் மிகுந்த வாத்ஸல்யத்துடன் பாதுகாத்து வந்தான். அவன் அக்னிஹோத்ரம் தர்சபூர்ணமாஸம் சாதுர்மாஸ்யம் பசு ஸோமம் என்னும் யாகங்களின் ப்ராக்ருதிகளும் விக்ருதிகளுமான பலவகை யாகங்களால் ஸ்ரத்தையுடன் பகவானை ஆராதித்தான். மூன்று காலங்களிலும் சாதுர்ஹோத்ர விதியின்படி அங்கங்களோடுகூடின பலவகை யாகங்கள் நடத்து கொண்டிருக்கையில், தர்மமென்றும் அபூர்வமென்றும் வழங்கிவருகிற யாகாதி கர்மங்களின் பலன்களெல்லாம் ஸமஸ்த தேவதைகளின் அடையாளங்களும் அமைந்த மந்த்ரங்களின் பொருளான இந்த்ராதி தேவதைகளுக்கு அந்தர்யாமியாய் நியாமகனைகயால் ஸர்வத்தையும் ஸாக்ஷாத் கரிப்பவனும் யஜ்ஞபுருஷன் வாஸுதேவன் பரப்ரஹ்ம மென்று கூறப்படுகின்றவனும் பரதேவதையுமாகிய பகவானுடைய அனுக்ரஹமேயென்று பாவித்து அங்ஙனம் பாவிக்கையாகிற தனது வல்லமையால் ராகாதிதோஷங்களெல்லாம் தொலையப்பெற்று, அத்வர்யுக்கள் ஹோமத்தின் பொருட்டுப் புரோடாசம் முதலிய ஹவிஸ்ஸுக்களைக் கையில் ஏந்திக்கொண்டிருக்கையில், யஜ்ஞங்களால் ஆராதிக்கப்படும் தேவதைகளான இந்த்ரன் முதலியவர்களை அப்பரமபுருஷனுடைய அவயவங்களில் த்யானித்தான். இங்ஙனம் கர்மசுத்தியால் பரிசுத்தமான மனமுடைய அத்தப்பரதமன்னவனுக்குச் சரீரத்திற்குள் புண்டரீகம்போன்ற ஹ்ருதயத்தின் ஆகாசத்தைச் சரீரமாகவுடையவனும் அளவிறந்த ஸ்வரூபமும் குணங்களுமுடையவனும் ஷாட்குண்ய பூர்ணனும் ஸர்வாந்தராத்மாவும் மஹாபுருஷனென்பதை அறிவிக்கும் அடையாளங்களான ஸ்ரீவத்ஸம் கௌஸ்துபம் வனமாலை சக்ரம் சங்

கம் கதை கத்தி இவை அமைந்தவனும் தன் பக்தர் களுடைய ஹ்ருதயத்தில் எழுதிணற்போல் அசையா திருப்பவனும் அங்ஙனமே தன் மனத்தில் தோற்றுகின் றவனுமாகிய பரமபுருஷனிடத்தில் க்ஷணக்தோறும் வளர்கின்ற வேகமுடைய மேலானபக்தி உண்டாயிற்று. இங்ஙனம் அநேகமாயிரமாண்டுகள் கழிந்தபின்பு கடை சியில் கர்மாவஸானம் நேரப்பெற்றுத் தான் அணுப விக்து வருவதும் தந்தை பாட்டன் முதலிய பாம்பரை யில் வந்ததுமான தனத்தைப் புதல்வர்களுக்கு க்ரமப் படி பங்கிட்டுக்கொடுத்து ஸமஸ்த ஸம்பத்துக்களும் நிறைந்த தன்க்ருஹத்தினின்றும் புறப்பட்டுப் புலஹரு டைய ஆச்ரமத்திற்குப்போனன். அவ்விடத்தில் ஷாட் குண்ய பூர்ணனை ஸர்வேச்வரன் தன் பக்தர்களிடத் தில் வாத்ஸல்யத்தினால் அவர்கள் விரும்பினபடி உரு வங்களைக்கொண்டு ஸந்நிதானம் செய்கிறான். கீழும் மேலும் சக்ரங்களையுடைய சிலைகள் அமைந்திருக்கை யால் சக்ரதிரியென்னும் பேருடைய மேன்மையுள்ள ஓர்நதி அவ்விடத்திலுள்ள ஆச்ரமங்களையெல்லாம் பாவனம் செய்கின்றது. அவ்விடத்தில் புலஹாச்ரமத் திற்கு அருகாமையிலுள்ள ஒரு வனத்தில் அம்மன்ன வன் பலவகைப் புஷ்பங்கள் தளிர்கள் துலஸீஜலம் இவைகளாலும் கிழங்கு வேர் பழம் இவையாகிற உப ஹாரங்களாலும் பகவானை ஆராதித்துக்கொண்டு பரி சுத்தமான ஆஹாரத்தைப் புசித்துச் சப்தாதி விஷ யங்களில் விருப்பமற்று இந்த்ரிய நிக்ரஹம் கைகூடப் பெற்று ஆநந்தரூபமான பாபக்தி உண்டாகப்பெற்றான். இங்ஙனம் பரம புருஷனுக்கு ஓயாது நடத்திக்கொண்டு வருகிற ஆராதனத்தினால் பகவானிடத்தில் கால் தோறும் வளர்கின்ற ப்ரீதியின் மிகுதியால் மனம்

உருகி உடம்பெல்லாம் மயிர்க்கூச்சம் உண்டாகப்பெற்று ப்ரீதியினல் ஆநந்தநீர் பெருகிக் கண்பார்வையற்றுத் தனதன்பனுகிய பகவானுடைய சேவடித் தாமரைகளின் த்யானத்தினல் பக்தியோகம் தலையெடுத்து அதனல் முழுவதும் நிறைந்த பரமாநந்தமாகிற பெருமதுவில் ஆழ்ந்த மதியுடையவனுகித் தினந்தோறும் நடத்துகிற பகவானுடைய பூஜையையும் மறந்திருந்தான். இவ்வாறு பகவதாராதன ரூபமான பற்பல வ்ரதங்களை அனுஷ்டிப்பவனும் மான்தோலை உடுத்திருப்பவனும் மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்கையால் நனைந்து பொன்னிறமேறிச் சுரும்பார்த்த ஜடைகளின் பாரத்தினல் நிகழ்பவனுமாகிய அம்மன்னவன் ஸூர்யோதய காலத்தில் ஸூர்யமண்டலத்தினிடையிலிருக்கும் பொன்னிறமுடைய புண்டரீகாக்ஷனை ஸூர்ய மந்த்ரத்தினல் உபஸ்தானஞ் செய்யமுயன்று எழுந்து நின்றுகொண்டு 'தனது ஸங்கல்பரூப ஜ்ஞானத்தினல் சேதன அசேதன ரூபமான ஜகத்தையெல்லாம் படைத்து அதில் தனக்குச் சரீரமாகிய ஜீவன் மூலமாகவும் தோராகவும் உட்புகுந்து ஜீவன் சப்தாதி விஷயங்களை அனுபவிக்கவிரும்பி அவற்றில் கொண்டு மூட்டுகிற புத்தியின் வ்யாபாரத்தினல் கர்மபலன்களை அனுபவிக்கையில் பக்கத்திலிருந்து வெறுமனே பார்த்துக்கொண்டிருக்குந் தன்மையனை பரம புருஷனுடைய தேஜோமயமான திவ்யமங்கள விக்ரஹத்தைச் சரணம் அடைகிறேன். அது லோக விலக்ஷணமாய் நித்யஜ்ஞான மயமாயிருக்கும். அதை த்யானம் செய்கிறேன்' என்று மொழிந்து பணிந்தான். ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

அம்மன்னவன் மான்குட்டியை ரக்ஷிக்க
முயன்று கடைசியில் மானைப் பிறத்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—அப்பரத மன்னவன் ஒரு கால் சக்ரநதியில் ஸ்நானம்செய்து அவஸ்யமாய் அநுஷ்டிக்க வேண்டிய நித்ய நைமித்திகங்களை முடித்துப்ரணவத்தை ஜபித்துக்கொண்டு மூன்று முஹூர்த்தம் வரையில் நதிக்கரையில் உட்கார்ந்திருந்தான். மன்னவனே! அப்பொழுது அந்நதியில் ஒரு பெண்மான் தண்ணீர் குடிக்க விரும்பித் தனியாய் ஜலத்திற்கருகாமையில் வந்தது. அது ஜலம் குடித்துக் கொண்டிருக்கையில் ஸமீபத்தில் உலகமெல்லாம் பயந்து நடுங்கும்படி ஸிம்ஹநாதம் ஜனை உண்டாயிற்று. இயற்கையாகவே தழதழப்புற்ற அந்த மான் பேடு ஸிம்ஹநாதத்தைக் கேட்டுக்கண் பார்வை அடிபட்டு ஸிம்ஹம் வருகிறதேயென்னும் பயத்தினால் மனம் கலங்கிக் கண்கள் நடுங்கித் தண்ணீர் தாஹமும் தீராமலே பயத்தினால் திடீரென்று போகக் கிளம்பிற்று. அது பூர்ண கர்ப்பமுடையது. அங்ஙனம் வேகத்துடன் கிளம்பும்பொழுது பயத்தின் மிகுதியால் அதன் மல மூத்ரத்வாரத்தின் வழியாய் கர்ப்பம் நழுவி நதியின் ப்ரவாஹத்தில் விழுந்தது. தன்னினத்தினின்று பிரிந்தமையால் வருந்தின அப்பெண்மான் கர்ப்பம் நழுவினதாலும் வேகத்துடன் கிளம்பினமையாலும் பயத்தினாலும் இளைப்புற்று மிகவும் வருந்தி ஒரு பர்வத குஹையில் விழுந்து மாண்டது. மன இரக்கத்திற்கிடமான அந்த மான்குட்டி நதியின் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகக்கண்ட அம்மன்னவன் தாயில்லாத அம்மான் குட்டியை ஆபத்திலாழ்ந்த பந்துவைப்போல் தன்னுஷ்ரமத்திற்கு எடுத்துக்கொண்டு போனான். அம்மன்னவன் அந்த மான் குட்டி யிடத்தில் பெரிய அபி

1208. கதிக்கரையில் ஸிம்ஹ கர்ஜனத்தைக் கேட்டு மானுடைய கர்ப்பம் சுழுவுதல்; பரதன் அதை எடுத்துக்கொள்ளல்.

மானம் வைத்து அதை நாள்தோறும் போஷிப்பதும் பாதுகாப்பதும் ப்ரீதிக்கிடமான கார்யங்களைச் செய்வதும் சீராட்டுவதும் அதையே நெஞ்சில் நினைப்பதுமாயிருந்தாளுகையால் ஸ்நானதி நியமங்களும் பாமபுருஷாராதனம் முதலிய ஸகல தர்மங்களும் காலுக்கொன்றுகச் சில நாள்களுக்குள் எல்லாம் தொலைந்தன. அவன் அந்த மான்குட்டியிடத்திலுள்ள மனப்பற்றினால் 'ஆ! இந்த மான்குட்டி காலவசத்தினால் தன்னினத்தையும் கண்பார்களையும் பந்துக்களையும் இழந்து மன இரக்கத்திற்கிடமாகி என்னையே தாயாகவும் தந்தையாகவும் உடன்பிறந்தவராகவும் பந்துக்களாகவும் ஜ்ஞாதிகளாகவும் தன்னினத்தினராகவும் நினைத்து என்னைச் சரணம் அடைந்தது. இது என்னைத்தவிர மற்றொருரக்ஷகனையும் அறியாது. என்னிடத்தில் மிகுந்த விஸ்வாஸமுடையது. ஆகையால் என்னையே சரணமாகப் பற்றின இம் மான்குட்டிக்கு ஆஹாரங்கொடுத்துப் போஷிப்பதும் புலி முதலிய துஷ்ட ம்ருகங்களிடத்தினின்று பாதுகாப்பதும் தினவு சொரிகை முதலிய ப்ரீதிக்கிடமான கார்யங்களைச் செய்வதும் கையால் தடவிக் கொடுக்கை முத்தமிடுகை முதலிய சீராட்டல்களுமாகிய இவற்றையெல்லாம் நான் அவஸ்யம் செய்யவேண்டும். இதனால் என் பிரயோஜனமெல்லாம் பாழாய்விடுகிறதே யென்று நான் இதன்மேல் அஸூயைப் படலாகாது. சரணம் அடைந்தவர்களை உபேக்ஷிப்பது அறிஞர்களுக்குத் தோஷமல்லவா? ஆனது பற்றியே பரோபகார சீலர்களும் ஜிதேந்த்ரியர்களும் மன இரக்கத்திற்கிடமுள்ளவரிடத்தில் ஸ்னேஹமுடையவருமாகிய பெரியோர்கள் இத்தகைய சரணாகதரக்ஷணத்திற்காக மிகவும் பெரிய தமது ப்ரயோஜனங்களையும் உபேக்ஷித்

கின்றார்கள்' என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டு இருத்தல் படுத்தல் திரிதல் புசித்தல் ஸ்நானம் செய்தல் முதலிய எல்லா ஸமயங்களிலும் அதைக் கைவிடாமல் அதினிடத்தில் மிகுந்த ஸ்நேஹமுடைய வனாயிருந்தான். தர்ப்பம் புஷ்பம் ஸமித்து இலை பழம் வேர் ஜலம் முதலியவற்றைக் கொண்டுவரப் போகும் பொழுது அதை இங்கு விட்டுப்போனைமாயின் காட்டு நாய் செந்நாய் முதலியவை பக்ஷித்து விடுமென்று நினைத்து அந்த மான்குட்டியைக் கூடவே கொண்டு போவான். போகும்பொழுது வழிகளில் அது இளைமையினல் நடக்கமுடியாமல் பின் தங்குமாயின், ஸ்நேஹத்தின் மிகுதியால் அதைப் பிரிந்திருக்கப் பொறுமல் தோளின்மேல் தூக்கிக்கொண்டு போவான். இங்ஙனமே படுக்கும்பொழுது மார்பிலும் உட்கார்ந்திருக்கும் பொழுது மடியிலும் வைத்து அதைச் சீராட்டி மஹாகந்தத்தை அடைந்தான். அவன் நித்ய நைமித்திக காம்யங்களை அனுஷ்டித்துக்கொண்டிருக்கையில் இடையில் க்ஷணந்தோறும் எழுந்தெழுந்து அதைப் பார்ப்பான். அங்ஙனம் பார்க்கும்பொழுதெல்லாம் அப்பரதன் மனஆக்கத்துடன் 'குழந்தாய்! உனக்கு எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் க்ஷேமங்கள் உண்டாகுக' என்று ஆசீர்வாதம் செய்வான். அங்ஙனம் பார்க்கும்பொழுது ஓருகால் அதைக்காணுமல் பணத்தை இழந்தவன்போல் மிகவும் பயந்து ப்ரீதியின் மிகுதியால் அதைப் பிரிந்திருக்கப் பொறுமல் எப்பொழுது காண்பேனென்னு மாவலுடன் மனம் தழுதழுத்துப் பரிதபித்து மன இரக்கத்திற்கிடமாகிப் பெரிய மோஹத்தை அடைந்து சோகித்துக்கொண்டு மன இரக்கத்துடன் இங்ஙனம் மொழிந்தான்:—'தாயை யிழந்தமையால்

ஐயோவென்று வருந்துவதற்கிடமான என்னிளமான் கன்று எங்கேயோ தெரியவில்லையே? நான் துஷ்டன்; கிராதகன் போன்ற கொடுமதியன்; பாக்யமற்றவன். இப்படிப்பட்ட என்னிடத்தில் அது பெரிய விஸ்வாஸம் வைத்திருந்தது. அது தன் விஸ்வாஸத்திலல் என் தோஷங்களைப் பாராமல் கன்மையுடைய ஸாதுவைப் போல் மீளவும் என்னிடம் வந்து சேருமா? அந்த என் மான் குட்டி தேவரல் பாதுகாக்கப்பெற்று இந்த ஆஸ்ரமத்திற் கருகாமையி லுள்ள வனத்தில் க்ஷேம மாய்ப் புல் மேய்ந்துக்கொண்டிருக்கக் காண்பேனே? செந் நாயாவது காட்டுநாயாவது பன்றியாவது புலியாவது அதை பக்ஷியாதிருக்குமா? ஸமஸ்தலோகங்களுக்கும் க்ஷேமம் விளையுமாறு உதிக்குந்தன்மையுடைய ஸூர்ய பகவான் அஸ்தமிக்கிறானே. இன்னம், மான்பேடு என் னிடத்தில் பாதுகாக்கும்படி. வைத்த என்னிளமான் கன்று வந்து சேரவில்லையே. என்னுடைய மான்குட்டி யாகிற ராஜகுமாரன் மான்குட்டிகளுக்கு இயற்கையில் எற்பட்டவைகளும் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும்படி அழகாயிருப்பவைகளுமான பலவகை விளையாட்டுக்களால் தன் பந்துவாகிய என் மனவருத் தங்களை யெல்லாம் போக்கிக்கொண்டு வந்து பாக்யமற்ற என்னை ஆநந்தப் படுத்துவானோ? நான் தன்னுடு விளை யாடும்பொழுது பொய்யாகவே த்யானம்செய்வதுபோல் கண்ணை மூடிக்கொண்டிருக்கையில், ப்ரணய கோபத்தி னல் கலங்கி அருகாமையில் வந்து நீர்த்திவலைபோல் மெதுவாயிருக்கின்ற கொம்புகளின் நுனியால் பொற் றுதபடி பயந்து பயந்து அடிக்கடி என்னை முட்டிப் பார்க்குமல்லவா? ஹவிஸ்ஸை வைத்திருக்கிற தர்ப் பத்தைக் கடித்து எச்சிலாக்கித் தூஷிக்கையில் என்

ணல் கோபத்துடன் அதட்டப்பெற்றுப் பயந்து அந்த கூஷணமே விளையாட்டெல்லாம் அடங்கி இந்த்ரியங்களை யெல்லாம்வென்ற ரிஷிகுமாரன்போல் பேசாதிருக்குமே. இந்தப்பூமி நிரம்பவும் கொளரவிக்கத்தக்கது. இது என்ன தவம் செய்ததோ? ஏனெனில், இப்பூமி வணக்க முடைய க்ருஷ்ணஸாரமான் [1] குட்டியின் அழகிய குளம்படிகளால் நிறைந்திருக்கின்றது. அவை மிகவும் மங்களமானவை; உறுதியானவை. அத்தகைய குளம்படிகளின் வரிசைகளால் நிறைந்த இப்பூமி என்தனமாகிய மான்குட்டியை இழந்து வருந்துகிற எனக்கு அது போனவழியை அறிவிக்கின்றது. இப்பூமி அதன் குளம்படிகளால் அலங்காரமுற்று ஸ்வர்க்கமோக்ஷங்களை விரும்புகிற அந்தணர்கள் வேள்வி செய்தற்குரிய இடம் தானே யென்னும்படி திகழ்கின்றது. மன இரக்கத்திற்கிடமான ஜனங்களிடத்தில் மிகுந்தப்ரீதியுடைய மஹானுபாவனாகிய இச்சந்த்ரன், தாய் மரணம் அடைந்ததும் எனது ஆஸ்ரமத்தினின்று தப்பிப்போனதுமாகிய இந்த மான்குட்டியைத் தயையினால் காத்திருப்பானே? என் புதல்வனாகிய மான் குட்டியைப் பிரிந்தமையாலுண்டான ஜ்வாமாகிற அக்னியின் ஜ்வாலைகளால் என்ஹ்ருதயமாகிற நிலத்தாமரை தபிக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் மான்குட்டியைத் தேடித்திரிந்தமையால் நான் இளைப்புற்றிருக்கின்றேன். இப்படிப்பட்ட என்னை இச்சந்த்ரன் குளிர்த்து சாந்தமாயிருப்பதும் என்னிடத்தில் ப்ரீதியால் மேல்மேல் பெருகுவதுமாகிய தன் வாயில் ஊறும் ஜலமாகிற அம்ருதமயமான கிரணங்களால் சாமந்தீரும்படி செய்கின்றான்'

---

1. க்ருஷ்ணஸார ம்ருகம் இருக்குமிடம் யாகஞ் செய்யத் தகுந்த இடமென்று ஸ்ம்ருதி சொல்லுகிறது.

என்றூன். இங்ஙனம் நோக்கூடாத பலவகை மனோ ரதங்களால் அப்பரத மன்னவன் மனக்கலக்க முற்றிருந் தான். மான் குட்டியென்னும் வ்யாஜத்தையுடைய ப்ராரப்தகர்மமே அங்ஙனம் அவனுக்குப் பெரிய விக்ன மாய் சேர்ந்தது. அதனல் அவன் ஜ்ஞானயோகாரம்பம் தன துவர்ணஸ்ரமங்களுக்குரிய கர்மயோக ரூபமான தவம் பகவதாராதனரூபமான தவம் ஆகிய இவை யெல் லாவற்றினின்றும் கழுவினன். இது ப்ராரப்த கர்ம மாகாத பக்ஷத்தில், வேறு ஜாதியாகிய மான்குட்டி யிடத்தில் தன் பிள்ளையினிடத்தில் போல இப்படிப் பட்ட மனவிருப்பம் எப்படி உண்டாகும்? மோக்ஷமார்க் கத்திற்கு விரோதிகளென்று சேரே வயிற்றில் பிறந்த விடமுடியாத குணமுள்ள பிள்ளைகளைத் துறந்தும், இங் ஙனம் விக்னத்தினல் யோகாரம்பமெல்லாம் தடை படப் பெற்று மான்குட்டியைப் போஷிப்பதும் பாதுகாப்ப தும் அதற்கு ப்ரியமான கார்யங்களைச் செய்வதும் சீராட்டுவதுமாய் அதனிடத்தில் மிக்க மனப்பற்றுக் கொண்டு தன்னைப்பற்றி இம்மியும் கினையாதிருக்கிற அப்பரதனென்னும் ராஜரிஷிக்கு எலிப்பாழியில் பாம்பு நுழைவதுபோல், கடக்கமுடியாத மரணகாலம் வந் தது. அப்பொழுதும் தன் பக்கத்திலிருந்து பிள்ளை யைப்போல் சோகிக்கின்ற அந்தமான் குட்டியைப் பார்த்துக்கொண்டே அதனிடத்திலேயே மனம் சென்று அத்தேஹகூடவே அந்தத்தேஹத்தையும் துறந்து ஒன்றுமறியாத மூடன்போல் ம்ருகஜன்மத் தைப்பெற்றூன். அப்பொழுதும் பூர்வஜன்ம ஸ்மரணம் மாறப்பெறுதிருந்தான். முன் ஜன்மத்தில் அவன் பக வாரனை ஆராதித்துக்கொண்டிருந்த நற்செயலின் மஹி மையால் தான் மானுகப் பிறந்தமைக்குக் காரணம்

இன்னதென்பதை அறிந்து அதற்கு மிகவும் பரித பித்து.' ஆ! என்ன வருத்தம்? நான் ஜ்ஞானிகளுடைய மார்க்கத்தைத் தொடர்ந்து சென்றும் இடையில் இடையூறுகளால் தடைபட்டு அதினின்றும் கழுவினேன். எனக்கு என்ன கஷ்டம் நேர்ந்தது? நான் தேஹத்திலும் அதைத்தொடர்ந்த மற்றவைகளிடத்திலும் பற்றுக்களையெல்லாம் துறந்து ஜனஸஞ்சாரமில்லாத பரிசுத்தமான அரண்யத்தில் வாஸம் செய்துகொண்டு இந்த்ரியங்களையெல்லாம் வென்று ஸர்வாந்தராத்மாவான பகவானுடைய கதைகளைக் கேட்பது அவனுடைய திருமேனியை த்யானம் செய்வது குணங்களைக் கீர்த்திப்பது அவனை ஆராதிப்பது அவனையே நினைப்பது முதலியவற்றில் அபிநிவேசங்கொண்டு அதனால் ஒரு யாமமும் வீணுகப்பெறுத நெடுங்காலமாய் மனத்தை வேறு எவ்விஷயத்திலும் போகவொட்டாமல் தடுத்து அந்த வாஸுதேவனிடத்திலேயே ஊக்கத்துடன் நிலை நிறுத்தியிருந்தேன். அப்படிப்பட்ட மனத்தை மான் குட்டியிடத்தில் பற்றவிட்டு மதிகெட்டு அந்தமானையே அனுஸரித்திருந்தே னைகயால் யோகமார்க்கத்தினின்று நன்றுகதழுவச்செய்தேன்' என்று தனக்குள் பரிதபித்தான். இங்ஙனம் மனவெறுப்புற்றுத் தாயான பெண் மானைத் துறந்து தானிருந்த காலஞ்சர பர்வதத்தினின்று புறப்பட்டு இந்த்ரியங்களை அடக்கியாள்கையே இயற்கையாகப்பெற்ற முனிவர் கூட்டங்களுக்கு ப்ரியமாயிருப்பதும் பகவானுடைய ஆவிர்ப்பாவ ஸ்தானமுமாகிய ஸாலக்ராமமென்கிற புலஹாச்ரமத்திற்கு வந்தான். அங்குத் தனக்குத் தானே ஸஹாயமாய்த் தனியே அந்த மான் சரீரம் விடுங்காலத்தை எதிர் பார்த்துக்கொண்டு எதில் மனப்பற்று செய்தால்

என்ன கெடுதி கேரிடுமோவென்று மிகவும் பயந்து உலர்ந்த இலை புல் கொடி இவைகளைத்தின்று மாணைகப் பிறந்ததற்குக் காரணமான ப்ராரப்த கர்மத்தின் முடிவையே எண்ணிக்கொண்டிருந்தான். பிறகு அச்சரீரம் முடியும்படியான காலம் கேரப்பெற்று அப்புண்ய தீர்த்தத்தில் பாதிகனைத்திருக்கின்ற ம்ருகசரீரத்தைத் துறந்தான். எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

மான் சரீரத்தைத் துறந்த பரதன் ப்ராஹ்மண குமாரனய்ப் பிறத்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—பிறகு ஆங்கிரஸ கோத்திரத்தில் பிறந்தவர்களில் சிறந்தவரும் சமம் தமம் தவம் வேதங்களை ஓதுகை ஓதுவிக்கை தெய்வாதீனமாய்க்கிடைத்த அன்னதிகளால் ஸந்தோஷ முற்றிருக்கை ஸுகதுக்காதிகளைப்பொறுத்திருக்கை வணக்கம் தானம் ஸாஸ்த்ரஜ்ஞானம் பிறரிடத்தில் தோஷங்களை ஏறிடாமை ஆத்மஜ்ஞானம் ப்ரஹ்மாநந்தத்தை அனுபவிக்கையாகிற பக்தியோகம் இவையெல்லாம் அமைந்தவருமான ஓர் அந்தணருக்கு மூத்த பார்யையிடத்தில் கேள்வி சீலம் ஆகாரம் உருவம் ஔதார்யம் முதலிய குணங்களில் தன்னைடொத்த ஒன்பது புதல்வர்களும் இளைய பார்யையிடத்தில் ஓர் பெண்ணும் ஓர் பிள்ளையும் பிறந்தார்கள். இளையவளுக்குப் பிறந்த பிள்ளையே பாகவதஸ்ரேஷ்டனும் ராஜர்ஷிகளில் சிறந்தவனும் மான்சரீரத்தை அடைந்து அதைத் துறந்தவனுமாகிய பரதனென்றும், அவனுக்கு அதுவே சரம சரீரமென்றும் அவனே அங்ஙனம் ப்ராஹ்மணனய்ப் பிறந்தானென்றும் அத்தோடு மோக்ஷம் பெற்றானென்றும் சொல்லுகிறார்கள். அந்த ஜன்மத்திலும் பகவானு

டைய அனுக்ரஹத்தினால் பூர்வ ஜன்மங்களின் பாபம் பரையைப்பற்றின நினைவு மாறப்பெறுமல் பந்துக்க ளோடு ஸஹவாஸம் செய்தால் என்ன கெடுதி நேரி டுமோ என்று பயந்து கேள்வி நினைவு குணங்களைச் சொல்லுகை இவற்றில் ஏதேனுமொன்று செய்யினும் கர்மபந்தங்களை யெல்லாம் போக்குந்திறமையமைந்த அப்பகவானுடைய பாதாரவிந்தங்களையே மனத்தில் த்யானித்துக்கொண்டு உலகத்தவர் தன்னைப் பித்தம் பிடித்தவனைகவும் மூடனைகவும் குருடனைகவும் செவுட னைகவும் நினைக்கும்படி தன்னிடத்தில் அத்தன்மைகளை யறிட்டுக் கொண்டிருந்தான். அந்த ஆங்கிரஸராகிய அத்தனர் தன் பிள்ளை அங்ஙனம் பித்தம் பிடித்தாற் போலிருப்பினும் புத்ரஸ்நேஹத்தினால் மனம் தொடரப் பெற்று அவனுக்கு ஸமாவர்த்தனம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்களையெல்லாம் செய்யமுயன்று உபநயனம் செய்து, அவனுக்குப் பூர்வவாஸனையால் எல்லாம் தெரியுமாகையால் ஒன்றும் கற்பிக்கவேண்டிய அவஸ்ய மில்லையாயினும் அதை அறியாமல் தகப்பன் பிள்ளைக் குக் கற்பிக்கவேண்டியது கடமையென்பதை நினைத்து, சௌசம் ஆசமனம் முதலிய கர்ம நியமங்களை யெல் லாம் கற்பித்தார். அவனும் தந்தையின் நிர்ப்பந்தத்தை விலக்கித்துக்கொள்ள விரும்பி அவரது ஸமீபத்திலேயே அஸம்பத்தமான கார்யங்களைச் செய்து மூடன் போல் நடித்து வந்தான். அவர் அவனுக்கு வேதங்களை ஓது விக்க முயன்று வ்யாஹ்ருதி ப்ரணவம் சிரஸ்ஸு என்னு மிவற்றோடுகூடி மூன்று அடிகளையுடைய காயத்ரியை வஸந்தம் க்ரீஷ்மம் ஆகிய கான்குமாதங்கள் சொல்லிக் கொடுத்தும் அவனுக்கு அதை கன்றாய்க் கற் பிக்க முடியாதிருந்தார். ஸ்வரங்களும் எழுத்துக்களும்

மாரூட்டமாகவே ஒன்று ஒன்ருக அவன் அதைச் சொன்ஞனன்றி எவ்வளவு கற்பித்தும் அதை அறியாதவன் போலவே இருந்தான். இங்ஙனம் பிள்ளையிடத்தில் பெரும்ப்ரீதியுடைய அவ்வந்தணர் உபநர்வாணப்ரஹ்மசாரிக்கு வேண்டிய சௌசம் ஆசமனம் காண்டவ்ரதம் மற்றுமுள்ள நியமங்கள் குருசுஸ்ரூஷை அக்னிசுஸ்ரூஷை முதலிய இவையெல்லாம் ஜன்மாந்தரஸம்ஸ்காரத்தினல் எல்லாமுணர்ந்த அவனுக்கு வேண்டாதவையாயினும் அதை அறியாமல் பிள்ளைக்குத் தகப்பன் கற்பிக்கவேண்டுமென்னும் பிடிவாதத்தினல் அவனைச் சீர்திருத்த வேண்டுமென்று எவ்வளவு வருந்தி ப்ரயத்னப்பட்டும் தன்மனோரதம் நிறைவேறப் பெருமலே இல்லறவாழ்க்கையில் இழிந்து மரணத்தைப் பற்றின சிந்தையேயில்லாதிருக்கையில் மனஞக்கமுடைய ம்ருத்யுவினல் அவ்வளவில் முடிக்கப்பட்டார். அவருடைய பார்யைகளில் இளையவள் தன் பெண்ணையும் பிள்ளையையும் மூத்தவளிடம் ஒப்புவித்துத்தான் அனுமரணம் செய்து பதிலோகத்தை அடைந்தாள். கர்மங்களை அறிவிக்கிற வேதமார்க்கத்திலேயே முடிந்த மதியுடையவரும் வேதாந்த வித்யையில் செல்லாதவருமாகிய அவருடைய பிள்ளைகள் ஒன்பதின்மரும் தந்தை மரணம் அடைந்த பின்பு அந்தப் பரதனுடைய மஹிமையை அறியாமல் இவன் ஜடனென்று நினைத்து ப்ராதாவாகிய அவனுக்குக் கற்பிக்கையாகிற நிர்ப்பந்தத்தினின்று நீங்க விரும்பினர்கள். அந்த ஜடபரதன் இருகால் பசுக்களாகிய ப்ராக்ருத ஜனங்களால் 'அடி பித்தா! மூடா! செவிடா!' என்று அழைக்கப்பெற்று அத்தன்மைகளுக்குரிய பேச்சுக்களைப் பேசிக்கொண்டு தான் செய்யவேண்டிய செயலற்றவனையினும் பிறருடைய

தாண்டுதலால் வெட்டிக்கு வேலை செய்வதும் கூலிக்கு வேலை செய்வதுமாயிருந்தான். வெட்டியாகவும் செய்த வேலைக்குக்கூலியாகவும் யாசிதமாகவும் தெய்வாதீனமாகவும் கிடைத்த அன்னதிகளைப் பெற்று அவை அற்பமாயினும் வெகுவாயினும் ருசியாயிருப்பினும் ருசியற்றிருப்பினும் எதையும் பாராமல் தேஹதாரணத்திற்காக அவற்றைப் புசித்துவந்தானன்றி இந்திரியங்களின் ப்ரீதிக்காக அவன் அவற்றைப் புசிக்கவில்லை. அவன் ஆத்ம ஸ்வரூபத்தை மறைப்பனவாகளும் ஸுகதுக்கங்களுக்குக் காரணங்களுமான புண்யபாப கர்மங்கள் அடியோடு தொலையப்பெற்றவன்; நித்யஸித்தனும் ராகம் முதலிய தோஷங்கள் எவையுமின்றிப் பரிசுத்தனும் ஜ்ஞானைகத்த ஸ்வரூபனுமாகிய ஆத்மாவின் உண்மையை அறிந்து குளிர் வெய்யில் முதலியவற்றால் விளையும் ஸுகதுக்கங்களில் தேஹத்தில் சிறிதும் அபிமானம் உண்டாகப்பெறுதவன். அவன் குளிர் வெய்யில் காற்று மழை இவைகளில் வ்ருக்ஷபம்போல் உடம்பை மூடாதிருப்பினும் அவனுடைய அவயவங்களெல்லாம் பருத்து உறுதியாகவேயிருந்தன. அவன் வெறுந்தரையிலேயே படுப்பான்; உடம்புக்கு எண்ணெய்தேய்த்து அழுக்குப் போகும்படி ஸ்நானம் செய்தறியான். ஆகையால் அவனது சரீரம் அழுக்கேறியிருந்தது. ஆனதுபற்றி அவன் ப்ரஹ்ம தேஜஸ்ஸுடன் வெளித்தோன்றுமல் அழுக்கடைந்த மஹாரத்னம் போன்று அரையில் ஒன்றுக்கும் வழங்காத கந்தற்றுணியை உடுத்து மிகவும் அழுக்கேறின யஜ்ஞோபவீதமுடையவனாய் அவன் மஹிமையை அறியாத மூடர்களால் கேவல ப்ராஹ்மணனென்றும் துர்ப்ராஹ்மணனென்றும் அவமதிக்கப்பெற்றுத் திரிந்துகொண்டிருந்தான். அவன் பிறரிடத்

திஸ் ஆஹாரத்திற்காகக் கூலிவேலை செய்வது கண்டு அவனுடைய ப்ராதாக்களும் கூலிகொடுப்பதாகச் சொல்லி அவனைக் கழனிவேலையில் நியோகிக்க அவன் அதையும் செய்வான். ஆனல் மேலடன்றும் பள்ளமென்றும் குறைவென்றும் நிறைவென்றும் அவன் அறியான். அவர்கள் கொய் பிண்ணுக்கு தவிடு கொள்ளு காந்தல் முதலியற்றைக் கொடுப்பினும் அவற்றை அம்ருதம்போல் புசிப்பான். விஷ்ணுராதனே! அந்த ஜடபரதனுடைய ஆச்சர்யமான ஒருவ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேள். திருடர்களில் தலைமையுள்ள ஒரு சூத்ரன் தனக்குப் பிள்ளையில்லாமையால், 'எனக்குப் பிள்ளை பிறந்தால் நரபலி கொடுக்கிறேன்' என்று பத்ரகாளியை வேண்டிக்கொண்டான். அப்பால் அவனுக்குப் பிள்ளை பிறக்கையில், அவன் தெய்வாதீனமாய்க் கிடைக்கும் நரபசுவைக் கொண்டுவாருங்களென்று தன் வேலைக்காரர்களுக்குச்சொல்ல, அவர்களும் இருள்மூடின ராத்ரியில் அதிலும் அர்த்தராத்ர ஸமயத்தில் தெய்வாதீனமாய்ப் பசு கிடைக்கும் வழியைப்பற்றி வெகுதூரம் தேடிக்கொண்டு சென்றும் பசு அகப்படாமல் தெய்வச்செயலால் மஞ்சத்தின் மேல் வீராஸனத்தில் உட்கார்ந்து மான் பன்றி முதலியவை வரவிடாமல் கழனிகளைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் ஆங்கிரஸ குமாரனுகிய ஜடபரதனைக் கண்டார்கள். அவன்லக்ஷணங்களெல்லாம் அமைந்திருப்பதைக் கண்டு அவர்கள் ஸந்தோஷத்தில் முகம் மலரப்பெற்றுத் தமது பர்த்தாவின் கார்யம் நிறைவேறிற்றென்று நினைத்து அவனைக் கயிற்றால் கட்டிக் காளியின் கோவிலுக்குக் கொண்டுபோனர்கள். பிறகு அந்தத் திருடர்கள் அவனுக்கு விதிப்படி அபிஷேகம் செய்வித்துப் புதிய ஆடை உடுத்தி ஆபரணம் சந்தனம் பூ

மாலை திலகம் முதலியவற்றால் அலங்கரித்துப் போஜனம் அளித்துத் தூபம் தீபம் மாலை பொரி தளிர்முளை பழம் முதலிய உபஹாரங்களைக் கொண்டு பலிகொடுக்கும் விதிப்படி பாட்டு ஸ்தோத்ரம் ம்ருதங்கம் உடுக்கை முதலிய பெரிய கோஷத்துடன் அந்த ரபசுவைப் பத்ரகாளியின் முன்னே கொண்டுபோய் உட்காரவைத்தார்கள். அந்தச் சூத்ராராஜனுக்குப் புரோஹிதனாகிய ஒரு சூத்ரன் அந்ரபசுவின் ரக்தமாகிற மத்யத்தினால் பத்ரகாளியை ஆராதிக்கமுயன்று அக்காளிமந்த்ரத்தினால் மந்த்ரிக்கப்பட்டதும் கூரிய நுனியுடையதும் பயங்கரமாயிருப்பதுமாகிய கத்தியை எடுத்துக் கொண்டான். ரஜோகுணமும் தமோகுணமுமே இயற்கையாகப் பெற்றுப் பணக்கொழுப்பாகிற தூசி படிந்து கர்வமுற்ற மனமுடையவரும் பகவானுடைய அம்சம் அமைந்த தபோவீரர்களான ப்ராஹ்மணர்களின் குலத்தைச் சிறிதும் பொருள் செய்யாமல் தப்புவழியில் இழிந்து மனம் போனபடி விளையாடுகின்றவரும் பரஹிம்ஸையே விநோதமாகப் பெற்றவருமாகிய அச்சூத்ரர்கள் பரப்ரஹ்மத்தோடு ஸாயுஜ்யத்தை அடைய ஸித்தமாயிருக்கின்றவனும் ப்ரஹ்மரிஷியாகிய ஆங்கிரஸருடைய புதல்வனும் ஸமஸ்த பூதங்களிடத்திலும் வைரமின்றி நன்மனமுடையவனுமாகிய அந்த ஜடபரதனை வெட்டமுயன்றமையாகிற அதிபயங்கரமான கார்யத்தைக் கண்டு ஹிம்ஸையிலும் அங்ஙனம் வெட்டுவது நிஷித்தமாகையால் பத்ரகாளி பொறுக்க முடியாத ப்ரஹ்மதேஜஸ்ஸினால் தஹிக்கப்பெற்றுத் திடீரென்று உருவத்துடன் தோற்றினாள். அவள் பெருங் கோபவேசத்தினால் புருவங்களை நெரித்துக்கொண்டு கோணலான கோரைப் பற்களாலும் சிவந்த கண்களின் கொடுமையா

லும் பயங்காமான முகமுடையவளாகி இந்த ஜகத்தை யெல்லாம் வதிக்க முயன்றவள்போன்று பெரிய பரபரப் புடன் மஹத்தான அட்டஹாஸம்செய்து அவ்விடத்தி னின்று கிளம்பி அதே கத்தியைப் பிடுங்கிக்கொண்டு பாபிஷ்டர்களும் கொழுத்தவர்களுமாகிய அச்சூத்ர் களின் தலைகளையெல்லாம் அறுத்து அவர்களுடைய கழுத்தினின்று மிக்க உஷ்ணமாய்ப் பெருகும் ரக்த மாகிற மத்யத்தைத் தன் கூட்டத்தாருடன் பானம் செய்து அந்த மதத்தினல் மெய்ம்மறந்து தன் கூட்டத் துடன் உறக்கப்பாடிக் கூத்தாடி அவர்கள் தலைகளா கிற பந்துக்களைக் கொண்டு விளையாடினள். இங்ஙனமே பெரியோர்களிடத்தில் அபராதப் படுவார்களாயின், அதெல்லாம் அவர்களுக்கே பலிக்கும். பரீக்ஷித்து மன் னவனே! தேஹத்தில் ஆத்மாபிமானமும் அதைத் தொடர்ந்த மற்றவைகளிடத்தில் மமதையுமாகிற உறுதி யான ஹ்ருதய க்ரந்தியை அறுத்துக் கொண்டவர்க ளும் ஸமஸ்த ப்ராணிகளிடத்திலும் ஸ்நேஹம் நிறைந்த மனமுடையவர்களும் வைரமற்றவர்களும் மனஒக்க முடைய கால சக்ரத்தையும் மற்றும் அந்தந்த வஸ்துக் களையும் கொண்டு பகவானல் நேரே பாதுகாக்கப் பெற் றவர்களும் எவ்விதத்திலும் பயமில்லாத அந்தப் பகவா னுடைய பாதமூலத்தையே சரணம் அடைந்தவர்களு மாகிய பரிசுத்தான யோகிகள் தலையை அறுக்க வரி னும் பரபரப்பின்றி நிர்ப்பயமாயிருக்குமிது ஓராச்சர்ய மன்று. ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

ஜடபரதன் ரஹூகண மன்னவனுக்குத் தத்வோபதேசம் செய்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—அப்பால் லிந்து தேசங் களுக்கும் ஸௌவீர தேசங்களுக்கும் ப்ரபுவாகிய ரஹூகண மன்னவன் கபிலமுனிவரிடம் தத்வங்களை அறிய விரும்பி அவரிருக்குமிடம் தேடிப் போய்க்கொண் டிருக்கையில் வழியில் இக்ஷுமதியென்னும் நதியின் கரையில் பல்லக்குத் தூக்க ஆள் வேண்டித் தேடும் ஸமயத்தில், பல்லக்கெடுப்பவர்களின் தலைவன் ஆங்கி ரஸருடைய புதல்வனாகிய ஜடபரதனைத் தெய்வாதீன மாய்க் கண்டு, 'இவன் உடம்பெல்லாம் பருத்து யௌ வன வயதும் அமைந்திருக்கிறான். இவனுடைய அங் கங்களெல்லாம் கட்டுத் தளராமல் உறுதியாயிருக்கின் றன. ஆகையால் இவன் வ்ருஷபம் போலும் கழுதை போலும் பாரம் சுமக்கவல்லவன்' என்று ஆலோசித்து முன்னமே வெட்டிக்குப் பிடித்துக் கொண்டவர்களோடு இவனையும் பலாத்காரமாகப் பிடித்துச் சேர்த்துக் கொண்டான். அம்மஹானுபாவன் பல்லக்குத் தூக்கத் தகாதவனாயினும் அதைத் தூக்கிக்கொண்டு சென்றான். அந்த ப்ராஹ்மண ச்ரேஷ்டனாகிய ஜடபரதன் ஜந்து ஹிம்ஸை வராமைக்காக ஒரு பாணத்தளவு தூரம் பூமி யைப் பார்த்துக்கொண்டே மெதுவாக நடந்தாளை யால் அவர் நடை மற்றவர் நடையோடு ஒத்திருக்க வில்லை. அதனால் பல்லக்கும் அடிக்கொருதரம் கோண லாகப்போக ஆரம்பித்தது. ரஹூகணன் அதை ஆலோசித்துப் பல்லக்குத் தூக்கும் புருஷர்களைப் பார்த்து 'ஓ பல்லக் கெடுக்கிறவர்களே! நன்கு நடப்பீர் களாக. ஏன் பல்லக்கை இங்ஙனம் கோணலாய்த் தூக்கிக் கொண்டு போகிறீர்கள்?' என்றான். அவர்கள் அம்மன்

னவன் அதட்டிச் சொன்ன வார்த்தையைக் கேட்டு தண்டிப்பானென்று பயந்து அவனைக் குறித்து 'மன்ன வனே! நாங்கள் மனவூக்கந் தவறுதலின்றி உனது கட் டளைக்குட்பட்டு நன்றுகவே சுமக்கின்றோம். பின்னை யென்னவெனில், இவன் இப்பொழுதே தூக்கவந்தவனை யும் வேகமாய் நடக்கமாட்டாதிருக்கின்றான். இவனை கூட எங்களால் தூக்க முடியாது' என்றார்கள். அவர் கள் இங்ஙனம் மன இரக்கத்திற்கிடமாக மொழிந்த வசனத்தைக் கேட்ட மன்னவன், ஓருவனுடைய தோஷம் அவனுடையஸம்பந்தத்தினால் மற்றெல்லோர்க் கும் உண்டாகிறதென்று நிச்சயித்துப் பெரியோர்களைப் பணிந்து படிந்தவனையும் இயற்கையிலேற்பட்டகுணத்தினல் பரவசனகிச் சிறிது கோபங்கொண்டு ப்ரஹ்ம தேஜஸ்ஸு வெளித்தோற்றுமல் உள்ளே அடங்கியிருப்பவரும் நீறுபூத்த நெருப்புப்போன்ற வருமாகிய அந்த ப்ராஹ்மணரைப் பார்த்து 'அப்பா! வாஸ்தவம். நிரம்பவும் இளைப்புற்றிருக்கின்றனை; வெகு தூரமாய் நீயொருவனே நெடுந்தூரம் பல்லக்குச் சுமந்து வந்தனை யல்லவா? மற்றும், நீ மிக்க பருமனில்லாமல் இளைத்திருக்கின்றனை. அன்றியும் உன்னுடம்பெல்லாம் கட்டுத் தளர்ந்து உறுதியற்றிருக்கின்றன. அதுவுமன் றிக் கிழத்தனத்தினல் வருந்தி யிருக்கின்றனை. கண் படனே! உன்னோடு கூடத் தூக்குகிற மற்ற இவர்களெல் லோரும் நெடுந்தூரம் நடக்காமல் ஸுகமாகவே இருக் கின்றனர்' என்று பலவாறு பரிஹாஸத்துடன் விரட்டிச் சொல்லினும், கர்மத்தினல் பரிணமித்து பஞ்சபூதங் களும் சப்தாதி விஷயங்களும் செயல்களும் இந்த்ரியங் களும் மனமும் வாஸனையும் அமைந்து எப்பொழுதும் ஓருவாறுயிராமல் மாறிக்கொண்டேயிருப்பதும் அவய

வங்களின் சேர்க்கையாலேற்பட்ட ஒரு ஆகார விசேஷ மாயிருப்பதும் சரம சரீரமுமாகிய தேஹத்திலும் அதைத் தொடர்ந்த மற்றவைகளிடத்திலும் தானென் றும் என்னுடையதென்றும் விளையும் பொய்யெண்ணங் களின்றிப் பரப்ரஹ்மஸாயுஜ்யத்தை அடைய ஸித்தமா யிருப்பவராகையால் அவர் அவன் சொன்னதை யொன் றும் பொருள் செய்யாமல் முன் போலவே பல்லக்கைச் சுமந்துகொண்டு நடந்தார். மீளவும் தன் பல்லக்கு முன் போல் கோணலாய்ப் போவதைக்கண்டு ரஹூகணன் மிகவும் கோபித்து அந்த ப்ராஹ்மணரைப் பார்த்து 'இதென்ன? அடே! நீ ஜீவித்திருந்தும் செத்தாற்போல் இருக்கின்றனை. என்னைப் பொருள் செய்யாமல் ப்ரபுவா கிய எனது கட்டளையைக் கடந்து நடக்கின்றனை. யமன் ப்ராணிகளைத் தண்டிப்பதுபோல், நீ உன்னியற்கையில் நின்று தன்குல வேலைசெய்யும்படி மனவுக்கமற்றிருக்கிற உன்னை நான் தண்டிக்கிறேன்' என்றான். ரஜோகுண மும் தமோகுணமும்தொடரப்பெற்றுத் தன்னை மன்னவ னென்றும் பண்டிதனென்றும் நினைத்துப் பெருமதங் கொண்டு பாகவதர்களையெல்லாம் அவமதிக்கின்ற அவ் வரசன் இங்ஙனம் அஸம்பத்தமான பல பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருக்கையில், பரப்ரஹ்மத்தை ஸாக்ஷாத் கரித்தமையால் ப்ரஹ்மஸ்வரூபியும் மஹாநுபாவருமா கிய அவ்வந்தணர் ஸமஸ்த பூதங்களுக்கும் நன்மை யையே நினைக்கும் மனமுடையவராகையால் யோகேஶ் வரர்களின் கடத்தையில் பரிசயப்படாத மதியுடைய அம்மன்னவனைப் பார்த்துப் புன்னகை செய்துகொண்டு சிறிதும் கர்வமின்றி மேல் வருமாறு மொழிந்தார்:— 'மன்னவனே! நீ மொழிந்தது உலகரீதியில் வாஸ்த வமே. உண்மையில் ஒன்றின் தர்மத்தை மற்றொன்றில்

ஏறிட்டுச் சொன்னயாகையால் உன் வார்தை யெல்லாம் பொய்யே. வீரனே! சுமக்கிரவனுக்குப் பாரம் உளதாயின், அது எனக்குக் கிடையாது. நான் சுமக்கிரவனல்லேன். கடக்கிரவனுக்குப் போய்ச்சேரவேண்டிய இடம் உண்டாயின், அது ஸாக்ஷாத்தாக எனக்குக் கிடையாது. நான் கடக்கிறவனல்லேன். பரமன் தேஹத்திற்கே யன்றி எனக்குக் கிடையாது. இங்ஙனமே ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவர்கள் வழங்குவார்கள். பரமன் இளைப்பு சரீரவ்யாதிகள் மரணவ்யாதிகள் பசி தாஹம் பயம் கலஹம் காமம் நிழத்தனம் தூக்கம் விஷயங்களில் ஆஸக்தி கோபம் அஹங்காரம் மோஹம் இவை யெல்லாம் தேஹத்திற்கேயன்றிப் பிறவிழுதலிய விகாரங்களெவையும் தீண்டப்பெறுத எனக்குக் கிடையாது. ராஜனே! ஜீவித்தலும் மரணம் அடைதலும் ஆதி அந்தங்களை யுடையதும் விகாரங்களுக்கிடமுமாகிய தேஹத்திற்கேயன்றி அவை ஆத்மாவுக்கில்லை. பெருமையுடையவனே! ஒருவன் ப்ரபுவாயிருக்கையும் மற்றொருவன் அவனுக்குத் தாஸனாயிருக்கையுமாகிற ஸ்வஸ்வாமி பாவமென்னும் ஸம்பந்தம் எவரிடத்தில்நிலை நின்றிருக்குமோ, அத்தகைய புருஷர்களிடத்தில் தான் ஸ்வாமியாயிருப்பவன் கட்டளையிடுவதும் தாஸனாயிருப்பவன் இட்டவேலையைச் செய்வதுமாகிய இவற்றின் சேர்க்கை நிலைநின்றிருக்கும். அந்த ஸம்பந்தம் ஜீவாத்மாக்களுக்கும் பரமாத்மாவுக்குமே நிலை நின்றிருக்கும். நீ என்றும் இப்படியே ப்ரபுவாயிருப்பா யென்கிற நியதி இல்லை. உனக்கு ராஜ்யம் கைசேர்ந்து எனக்கு வருமாயின் உன் ப்ரபுத்வமும் என்னுடைய தாஸத்வமும் மாறிப்போமல்லவா? ஆகையால் ப்ரபுவல்லாத உன்னை நீ ப்ரபுவாக நினைத்துக் கொண்டிருப்பதும் ப்ரமமே.

நீ ப்ருத்யன். நான் ப்ரபு' என்று வாயால் சொல் லுவதொழிய அங்ஙனம் பேதமாக நினைப்பதற் குச் சிறிதும் இடம் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. இப்படி யிருக்க யார் ப்ரபு? யார் தாஸன்? நீயும் எனக்கு ப்ரபுவல்லை. நானும் உனக்கு தாஸனல்லேன். நான் சொல்லுவது உனக்கு இஷ்டமாயிராது. ஆயி னும் என்ன செய்யலாம்? வஸ்துஸ்வரூபத்தை மாற்ற முடியாதே? பரப்ரஹ்ம ஸ்வரூபனை ஆத்மாமை அனு பவிப்பதில் நிலைநின்று பித்தன் ஊமை குருடன் மூடன் இவர்கள்போன்று பிறர் விரட்டுதல் அடித்தல் முதலிய பரிபவங்களை விரும்புகிற எனக்கு உன்னுடைய தண்ட னையால் என்ன ப்ரயோஜனம்? நான் ஆத்ம ஸ்வ ரூபத்தை அறியாத ஸம்ஸாரியாகவே வருந்திக்கொண் டிருப்பேனெயினும் உன்னுடைய தண்டனை பிஷ்டபேஷ ணம்போல் பயனற்றதேயாம்' என்றார். கோபமில்லாமை முதலிய குணங்களையே இயற்கையாக உடையவரும் வேறு சரீரம் உண்டாவதற்கிடமான கர்ம ஸம்பந்த மற்றவரும் சரீரமாகிற ப்ராரப்த கர்மத்தை அனு பவத்தினால் கழித்துக்கொண்டிருப்பவருமாகிய அம் முனிச்ரேஷ்டர் அம்மன்னவன் சொன்னதற்கெல்லாம் மறுமொழி கூறி முன்போலவே அவனது பல்லக்கைச் சுமந்து சென்றார். பரீக்ஷித்து மன்னவனே! ஸிந்து ஸௌவீர தேசங்களுக்குப் பதியாகிய அந்த ரஹூர கணனும் ப்ரத்தையுடன் தத்வத்தை அறிய முயன்றவ னாகையால் அஜ்ஞானத்தைப் போக்குவதும் பல யோகக்ரந்தங்களுக் கிணங்கினதுமாகிய அவ்வந்தண ரது வசனத்தைக் கேட்டு மன்னவனென்னும் கர்வத் தைத் துறந்து பல்லக்கினின்று இறங்கி அவர் பாதத் தருகே வந்து நமஸ்கரித்துத் தான் அவரிடம் பட்ட

அபாதத்தை பொறுப்பிக்க முயன்று ப்ராஹ்மணர்க ளில் நீர் யாவர்? ப்ரஹ்மதேஜஸ்ஸை வெளியிடாமல் மறைத்துக்கொண்டு திரிகின்றீர். நீர் யஜ்ஞோபவீதம் தரித்துக்கொண்டிருக்கிறீராகையால் ப்ராஹ்மணரென் பதில் ஸந்தேஹமில்லை. எல்லோரும் அவமதிக்கும்படி யான வேஷமுடையவராயிருக்கின்றீர். நீர் யாருடைய புதல்வர்? யாருடையை சிஷ்யர்? உமது இருப்பிடம் யாது? எதற்காக நீர் இவ்விடம் வந்தீர்? ஓருகால் என்னுடைய க்ஷேமத்திற்காகவந்த கபிலமுனிவராயிருக்கக்கூடுமோ? நான் தேவேந்த்ரனுடைய வஜ்ராயுதத்தினின்றுவது ருத்ரனுடைய சூலாயுதத்தினின்றுவது யமனுடைய தண்டாயுதத்தினின்றுவது அக்னி ஸூர்யன் சந்த்ரன் வாயு குபேரன் இவர்களுடைய அஸ்த்ரங்களினின்று வது பயப்படமாட்டேன். ஆனல் ப்ராஹ்மண குலத்தை அவமதிக்கையாகிற மஹாஸ்த்ரத்தினின்று மிகவும் பயப்படுவேன். ஆகையால் எனக்கு உமது உண்மை யைச் சொல்வீராக. நீர் பற்றற்று ஜ்ஞானமாகிற உமது வீர்யத்தை மறைத்துக்கொண்டு அறிய முடியாத அபிப்ராயமுடையவராய் மூடன்போல் திரிகின்றீர். உமது வார்த்தைகள் யோக சாஸ்த்ர மர்யாதையால் மறைந்திருக்கின்றன. நல்லியற்கையுள்ளவரே! எவ் வளவுஸூக்ஷ்ம புத்தியால் ஆலோசித்துப் பார்க்கினும் உமது வசனத்தின் கருத்தை எனக்கு அறிய முடிய வில்லை. நான் தத்வங்களை உணர்ந்தவர்களில் தலைவரும் ஹிதோபதேசம் செய்பவரும் ஜ்ஞானத்தின் அம்சத் துடன் அவதரித்த ஸாக்ஷாத் விஷ்ணுவுமாகிய கபில முனிவரிடம் சென்று இந்த ஸம்ஸாரத்தில் எது ரக்ஷிக மென்று வினவித் தெரிந்துகொள்ள முயன்றிருக்கி றேன். உலகங்களை ரக்ஷிக்கும்பொருட்டு அந்தக்கபிலரே

இங்ஙனம் மாறுவேஷத்திஞல் மறைத்து திரிகின்றீரோ? இல்லறவாழ்க்கையில் இழிந்த என்னைப்போன்ற மூடன் யோகீஸ்வரர்களின் கதியை எங்ஙனம் அறிவான்? ஆத்மா தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவஞயினும் தேஹ ஸம்பந்தத்திஞல் யுத்தாதிகர்மங்களைச் செய்யும் பொழுது ப்ரமம் உண்டாவது எனக்கு அனுபவ ஸித்தமாயிருக்கின்றது. பாரத்தைச் சுமந்து கொண்டு வழிநடக்கிற உமக்கும் அங்ஙனமே இருக்குமென்று நான் ஊஹிக்கிறேன். 'உலகத்தார் அங்ஙனம் வழங்குவது மாத்ரமேயன்றி அது உண்மையன்று' என்னில், சொல்லுகிறேன். குடம் முதலியன உளவாயின் ஜலம் கொண்டுவருகை முதலியன உண்டு. அவை இல்லாத பக்ஷத்தில் இல்லை. ஆகையால் உலகவழக்கமும் ப்ரமாணமென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால் உலகத்தில் வழங்குவது உண்மையன்றென்று சொல்லலாகாது. பாத்ரத்தை கெருப்பில் வைத்துக் காய்ச்சிணைமாயின் அதிலிருக்கும் தண்ணீரும் கொதிக்கின்றது. அதினிடையில் சேர்ந்த அரிசியும் பக்வமாகின்றது. அங்ஙனமே தேஹம் இந்த்ரியம் ப்ராணன் வாஸனை மனம் இவற்றின் ஸம்பந்தம் பரிஹரிக்க முடியாமல் தொடர்ந்து வருகின்றமையால் சுத்தஸ்வரூபனை ஆத்மாவுக்கும் துக்கங்களுக்கிடமான ஸம்ஸாரம் உண்டாகக்கூடும். நான் கர்மவசத்திஞல் அரசணையிருக்கும் பொழுது வழியைக் கடக்கின்ற ப்ரஜைகளைச் சிக்ஷிப்பவனும் கல்வழியில் நடப்பவர்களைக் காப்பவனுமாயிருக்கிறேன். பகவானுக்கு அடிமை பூண்டு வர்ணாச்ரம தர்மங்களால் அவனை ஆராதிக்க முயன்று தப்புவழியில் நடப்பவர்களைத் தண்டிப்பதும் கல்வழியில் நடப்பவர்களை அனுக்ரஹிப்பதுமாகிய பகவதாராதன ரூபமான

க்ஷத்ரிய தர்மத்தை அனுஷ்டிப்பேனின், அது எப்படி பிஷ்டபேஷணம் போல் நிஷ்பலமாகும்? தனக்கு ஏற்பட்ட வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டித்து வருவானின், பாபராசிகளையெல்லாம் போக்குவானல்லவா? வருந்தினவர்களுக்குப் பந்துவாயிருப்பவரே! இங்ஙனம் தத்வத்தை அறிய விரும்புகிறேனாகையால் 'மன்னவன்' என்னும் துராபிமானத்தினால் மதித்துப் பெரியோர்களை அவமதிக்கின்ற என் பிழைகளைப் பொறுத்து என்னை ஸ்நேஹமும் நிறைந்த கண்களால் கடாக்ஷிப்பீராக. அதனால் நான் பெரியோர்களை அவமதித்தமையாலுண்டான பாபங்களைக் கடப்பேனாக. நீர் ஜகத்திற்கெல்லாம் கண்பனைய பரமபுருஷனுக்கு மிகவும் கண்பனையிருப்பவர். நீர் எல்லாம் பரப்ரஹ்மஸ்வரூபமே யென்னும் நினைவுடையவர்; நேஹாதிமாபிமானமற்றவர்; ஈஸ்வரனுக்குட்படாத ஸ்வதந்த்ரவஸ்து உண்டென்னும் ப்ரமமற்றவர். ஆகையால் உமக்கு நான் செய்த அவமதியால் மனக்கலக்கம் உண்டாகாது. ஆயினும் என்னைப் போன்ற ஜந்துக்கள் சூலபாணியான ருத்ரனைப்போல் ஸமர்த்தர்களாயினும் பெரியோர்களை அவமதிப்பார்களாயின் தாம் செய்த அப்பாப தோஷத்தினால் சீக்ரத்தில் நசித்துப்போவார்கள். ஸ்தாவர ஜன்மத்தைப் பெறுவார்கள். ஆகையால் என் பிழையைப் பொறுத்து எனக்குத் தத்வத்தை உபதேசிப்பீராக" என்றான். பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

பரதன் ரஹூகணனுக்குத் தத்வோப தேசம் செய்தல்.

ப்ராஹ்மணர் சொல்லுகிறார்:-நீ, ப்ரக்ருதியைக்காட்டிலும் விலக்ஷணரான ஆத்ம பரமாத்மாக்களின் உண்மையை அறியாதவனாயினும் அதை அறிந்தாற்போல் பேசுகின்றனை. ஆகையால் நீ அறிஞர்களில் மிகவும் சிறப்புடையவனாகமாட்டாய். தேஹாத்மா ஆத்மாவென்று நினைக்கை ஆத்மாவை ஸ்வதந்த்ரனென்று நினைக்கை ஆகிய இவ்வஜ்ஞானங்களால் பருமன், இளைப்பு யௌவனம் மூப்பு போதல் வருதல் முதலிய இத்தன்மங்களை ஆத்மாவினிடத்தில் ஏறிட்டு ஒருவனை ஸ்வாமியாகவும் மற்றொருவனை அவனுக்குத் தாஸனாகவும் ஜனங்கள் வழங்குகிறார்கள். தத்வங்களை அறிந்தபெரியோர்கள் அவர்களுடைய நினைவு தத்வ விசாரத்தினால் பிறந்ததென்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள். க்ருஹஸ்தாச்ரமத்திலிருப்பவர் அனுஷ்டிக்கத் தக்கவைகளான பலவகை யஜ்ஞாதி கர்மங்களின் விரிவை அறிவிக்கையால் மிகவும் வளர்ந்திருக்கிற வேதவாக்யங்களில் தத்வநிர்ணயம் பெரும்பாலும் நன்றாக ஏற்படாது. ஸ்வப்னத்தில் உண்டாகும் அனுபவங்களெல்லாம் அல்பமும் அஸ்திரமுமாயிருப்பதை அறிந்து க்ருஹஸ்தாச்ரமத்தைப் பற்றின இஹலோகஸுகங்களும் பரலோக ஸுகங்களும் அங்ஙனமே அற்பங்களும் அஸ்திரங்களுமாயிருக்குமாகையால் அவை பற்றத்தகுந்தவை யன்றென்று அறியாமல் அவற்றில் விருப்புற்றிருக்கும் புருஷனுக்குப் பெருமை பொருந்திய வேதாந்த வாக்யங்களாலும் தத்வஜ்ஞானம் நன்றாக உண்டாகாது. இந்த ஜீவனுடைய மனம் ஸத்வ ரஜஸ்தமஸ்ஸுக்களில் ஏதேனுமொன்றில் தொடரப்

பெற்றிருக்கும் வரையில் அந்தந்தக் குணங்களுக்குத் தகுந்தபடி ஜ்ஞானேந்திரியங்கள் மூலமாகவும் கர்மேந்திரியங்கள் மூலமாகவும் விளைகிற புண்யபாபரூபமான கர்மங்களால் மேன்மையும் தாழ்மையுமான தேஹபந்தத்தைத் தடையின்றி விளைத்துக் கொண்டிருக்கும். வாஸனைக் குட்பட்டு அவற்றிற்குரியபடி வெள்ளம் போல் பெருகுவதும் விகாரமுற்றிருப்பதும் பஞ்சபூதங்கள் பதினொரு இந்திரியங்கள் ஆகிய பதினாறு த்ரவ்யங்களில் தலைமையுடையதுமாகிய மனம் ஆத்மாக்களுக்குத் தேவ மனுஷ்யாதி சரீரங்களையும் நாமங்களையும் விளைத்து ஜ்ஞானஸ்வரூபர்களாகையால் ஒருவாறு யிருக்கின்ற அவ்வாத்மாக்களை அச்சரீரங்களாலும் நாகத்வேஷாதி குணங்களாலும் வேறுபட்டவர்போல் தோற்றும்படி செய்கின்றது. இத்தகைய ஸம்ஸாரமாகிற சக்ரத்தில் பர்வத சிகரம்போல அசையாதிருந்து கொண்டு ப்ரக்ருதியின் பரிணாமமான மனமுடைய ஜீவன் தன்னைச் சரீரமாகவுடைய பரமாத்மாவை அணைத்துக் கொண்டிருப்பினும் அவனை அறியாமல் தடுக்கமுடியாதபடி தெய்வாதீனமாய் ஏற்பட்ட துக்கம் ஸுகம் மோஹம் ஆகிற கர்மபலனை அனுபவிக்கின்றான். 'நான் தேவன் நான் மனுஷ்யன். நான் பருத்திருக்கிறேன். இளைத்திருக்கிறேன்' என்று வெளியாகாரத்தைப் பற்றின வ்யவஹாரங்களும் 'நான் ஸுகிக்கிறேன், நான் துக்கிக்கிறேன்' என்ற உள்ளாகாரத்தைப் பற்றின ஸூக்ஷ்ம வ்யவஹாரங்களும் தேஹாத்மாபிமானத்தினால் உண்டானவை. தேவத்வ மனுஷ்யத்வாதிகளும் பருமன் இளைப்பு முதலியவைகளும் ஸுகதுக்காதிகளும் தேஹதர்மங்களேயாயினும் மூடஜனங்கள் அஜ்ஞானத்தினால் அவற்றை ஜ்ஞானஸ்வரூபனான ஆத்மாவி

னிடத்தில் ஏறிட்டுச் சொல்லுகிறார்கள். அந்த அஜ்ஞா
னம் மூலமூலமான இக்கர்மஸம்பந்தம் மாறுதவரை
யில் நீங்காது. ஆகையால் தாழ்மையான ஸம்ஸாரத்திற்
கும் மேன்மையான மோக்ஷத்திற்கும், மேன்மைக்கிட
மான தேவாதி தேஹங்களைப் பெறுதற்கும் தாழ்மைக்
கிடமான பசு பக்ஷி முதலிய தேஹங்களைப் பெருதற்கும்
இம்மனமே காரணமென்று சொல்லுகிறார்கள். மனம்
ஸத்வாதி முக்குணங்களால் தீண்டப்பட்டு அக்குணங்
களுக்குரிய செயல்களில் ஆழ்ந்திருக்குமாயின் பல துக்
கங்களுக்கிடமான ஸம்ஸாரத்திற்கும், குணங்களால்
தீண்டப் பெறாமல் செயலற்றிருக்குமாயின் மஹாநந்த
ரூபமான மோக்ஷத்திற்கும் காரணமாம். விளக்கு நெய்
யில் நனைந்த திரியில்பற்றி யெரியுமாயின் புகையோடு
கூடின ஜ்வாலையைப் பெறுகின்றது. அங்ஙனமே மனது
ஸத்வாதி குணங்களால் தீண்டப்பட்டுப் புண்யபாபகர்
மங்களால் கலக்கமுற்று ராகத்வேஷாதிகளையும், குணங்
களால் தீண்டப்படாமல் செயலற்றிருக்குமாயின் தனக்
கியற்கையான சுத்த ஸத்வத்தையும் பெறுகின்றது.
மனத்திற்குப் பதிமூன்று வ்யாபாரங்கள் உண்டு. அவற்
றில் ஐந்து கர்மேந்த்ரியங்களின் மூலமாய் உண்டாகின்
றன. அவை க்ரியாரூபமாயிருக்கும். ஐந்து ஜ்ஞானேந்
த்ரியங்களின் மூலமாய் உண்டாகின்றன. அவை ஜ்ஞான
ரூபமாயிருக்கும். மற்றொன்று அஹங்கார மமகாராதி
ரூபமாயிருக்கும். சப்தாதி விஷயங்களைந்தும் கர்மங்
களைந்தும் சரீரமொன்றுமாகிய இப்பதிமூன்றும் அம்
மூவ்யாபாரங்கள் பதிமூன்றுக்கும் விஷயங்க
ளென்று சொல்லுகிறார்கள். கந்தம் உருவம் ஊறுரஸம்
சப்தம் இவ்வைந்தும் ஜ்ஞானேந்த்ரியங்களின் மூலமான
மூவ்யாபாரங்களின் விஷயங்கள். மலத்தை விடுதல்

ஸம்போகம் கடை பேச்சு சில்பம் இவ்வைவத்தும் கர்மேந்த்ரியங்களின் மூலமான மேலுவ்யாபாரங்களுக்கு விஷயங்களாம். சரீரத்தை என்னுடைய தென்று நினைக்கை மனத்திற்கு மேரே உண்டாகும் வ்யாபாரம். அதற்குச் சரீரம் விஷயம். தேஹத்தை ஆத்மாவென்று நினைக்கை மனத்திற்குப் பன்னிரண்டாவது வ்யாபாரமென்றும், இது மேரே உண்டாகிறதென்றும், இதற்குச் சரீரம் விஷயமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். ப்ருதிவி முதலிய பஞ்சபூதங்கள் அவற்றின் ஸ்வபாவம் வாஸனை புண்யபாபகர்மங்கள் காலம் இவைகளால் இந்த மனத்தின் வ்யாபாரங்கள் பதிணென்றும் நூறும் ஆயிரமும் கோடியுமாகின்றன. இவை கேவல மனத்தின் கார்யங்களன்று. ஜீவனால் அதிஷ்டானம் செய்யப்பெற்ற மனத்தின் கார்யங்கள். ஜீவனுடைய அதிஷ்டானத்தினால் மனத்திற்கு உண்டாகின்றனவன்றி மனத்தினுடைய அதிஷ்டானத்தினால் ஜீவனுக்குண்டாகின்றனவன்று. ஆனால் ஜீவனுடைய அதிஷ்டானம் இருந்தாலும் தானே உண்டாகமாட்டா. கர்மஸம்பந்தமே இவற்றிற்குக் காரணம். அசுத்தமான கர்மங்களைச் செய்வதும் அவற்றின் பலன்களை அனுபவிப்பதுமாயிருக்கிற ஜீவனால் அதிஷ்டானம் செய்யப்பெற்ற மனத்தில் ப்ரக்ருதியின் மூலமாய் உண்டாகிற இந்த வ்யாபாரங்கள் ப்ரவாஹம்போல் நித்யமாயிருக்கும். ஒருகால் (விழித்துக் கொண்டிருக்கும் பொழுது) தோற்றி, ஒருகால் (உறங்கும் பொழுது) மறைந்திருக்கும். பரமாத்மா இம்மனோவ்யாபாரங்களைப் பரிசுத்தனாகவே பார்த்துக்கொண்டிருக்கிறான். அப்பரமாத்மா சரீரத்தை உள்ளபடி அறிந்தவன்; ப்ரக்ருதி புருஷர்களுக்கு உள்ளே புகுந்து நியமித்துத் தரிப்பவன்; ஜகத்திற்கெல்லாம் ஆதி

காரணனுன்ன புராணபுருஷன்; ஸ்வயம்பிராகசன். அத் தன்மை ஜீவனுக்கும் உண்டேயாயினும் அது இவ னுடைய நித்ய ஸங்கல்பத்தினல் உண்டானது. இவ னுக்குள்ள ஸ்வயம்ப்ரகாசத்வம் மற்றொருவனுடைய ஸங்கல்பத்தினல் உண்டான தன்று. இயற்கையாகவே ஏற்பட்டிருக்கும். மற்றும், அவன் பிறவியற்றவன்; மேன்மையுடைய ப்ரஹ்மாதிகளுக்கும் ஈச்வரன். நாரா யணன் பகவான் வாஸுதேவனென்னு மிந்நாமங்கள் அவனுக்கு அஸாதாரணமாயிருப்பவை. அவன் தனது ஆச்சர்ய சக்தியால் ஜீவனுக்குள் புகுந்து மறைந்திருப் பவன்; வாயு ஜங்கம ஸ்தாவர ரூபமான ஸமஸ்த பூதங் களிலும் தன் ஸ்வரூபத்தினல் உட்புகுந்து அவற்றைத் தாண்டுவதுபோல், ஷாட்குண்ய பூர்ணனை வாஸு தேவன் சேதனசேதன ரூபமான இந்த ஜகத்திற்குள் புகுந்து நிறைந்து நியமித்துக் கொண்டிருக்கிறான். மன்னவனே! அஹங்கார மமகார ரூபமான இந்த மாயையை ஜ்ஞானேந்ரியத்தினல் போக்கி, தேஹம் வீடு முதலிய வற்றில் பற்றின்றிப் பஞ்சேந்ரியங்களும் மன முமாகிய ஆறு சத்ருக்களையும் வென்று பரமாத்மாவின் உண்மையை அறியாதவரையில் ஜீவன் இந்த ஸம் ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருப்பான். ஸம்ஸார தாபங் களுக்கு விளை நிலமும் ஜீவனுடைய ஸம்ஸார மோக்ஷங் களுக்குக் காரணமுமாகிய இம்மனத்துக்கு மமகாரமும் அதைத்தொடர்ந்த சோகம் மோஹம் வியாதி ராகம் லோபம் வைரம் ஆகிய இவைகளும் மாறப்பெறுதிருக் கும் வரையில் ஜீவன் பரமாத்ம தத்வத்தை அறிய வல் லவனுக மாட்டான். ஆகையால் மனம் ஜீவனுக்கு ஸஹஜ சத்ரு; அடக்காமல் உபேக்ஷித்தமையால் மேன் மேலும் வளர்ந்திருக்கின்றது; ஆனதுபற்றியே அழி

வில்லாத பெரு வீர்யமுடையது; அப்ரியத்தையே செய்யுந்தன்மையது; ஆத்மாவைப் பறித்துக்கொண்டு போய்விடும். இத்தகைய மனத்தை நீ ஸ்வயமாகவே ஆசார்யஸ்வரூபியான பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பணிகையாகிற அஸ்த்ரத்தினால் வதிப்பாயாக. பதினைந்ருவது அத்யாயம் முற்றிற்று.

ரஹூகணனுடைய ஸந்தேஹங்களுக்கு ஜடபரதர் ஸமாதானம் கூறுதல்.

ரஹூகணன் சொல்லுகிறான்:—நீர் பரமாத்மாவுக்கு வாஸஸ்தானமாயிருப்பவர். எங்களைப் போன்ற ஜனங்களைப் பாதுகாக்கும் பொருட்டே நீர் இச்சரீரங் கொண்டவர். நீர் ஆத்மஸ்வரூபத்தை அறிந்து அதையே அனுபவித்துக்கொண்டிருக்கும் தன்மையதாகையால் அபராதம் செய்தவரிடத்திலும் விரோதத்தைப் பாராட்டுகின்றவரல்லர். நீர், எப்பொழுதும் பரமாத்மானுபவத்தில் ஆழ்ந்திருப்பவராயினும் எல்லோரும் அவமதிக்கும்படி ப்ராஹ்மணதமனுடைய வேஷம் பூண்டிருக்கின்றமையால் அது ஒருவர்க்கும் தெரியாமல் மறைந்திருக்கின்றது. இத்தகைய உமக்கு நமஸ்காரம். ப்ராஹ்மணச்ரேஷ்டரே! ஜ்வரத்தினால் வருந்தினவனுக்குச் சுத்தமான ஔஷதம் போலவும், கோடைகாலத்து வெயிலில் அடிபட்டவனுக்குத் தண்ணீர் போலவும், ஆபாஸமான தேஹத்தில் ஆத்மாபிமானமாகிற ஸர்ப்பத்தினால் கன்று கடியுண்ட விவேகமென்னுங் கண்ணுடைய எனக்கு வருத்தங்களையும் தாபங்களையும் போக்குவதாகிய உமது மொழி அம்ருதம் போன்ற ஔஷதமாயிருக்கின்றது. ஆனால் எனக்கு இவ்விஷயத்தில் சில ஸம்சயங்கள் உண்டு. அவற்றைப் பிறகு கேட்டுக்கொள்

கிறேன். இப்பொழுது நீர் மொழிந்தது ஆத்மயோக விஷயங்கள் பலவும் நிறைந்திருக்கையால் எனக்கு எளிதில் அறியக்கூடாதிருக்கின்றது. அதை நான் நன்றாக அறியும்படி விவரித்துச் சொல்வீராக. இதை நன்றாக அறிய வேண்டுமென்று என் மனம் மிகவும் குதூஹலப்படுகின்றது. யோகேஸ்வரரே! கார்யங்களைச் செய்யும் பொழுது வேர்வை மூத்திரயாதிகளை ப்ரத்யக்ஷமாய் உண்டாக நாம் காண்கின்றோம். மிகவும் ஸ்ரமப்பட்டாயென்று உலகத்தில் ஜனங்கள் வழங்குவதும் உண்மையாகவே தெரிகின்றது. அப்படியிருக்க அது உண்மையன்றென்று நீர் மொழிந்தீர். நீர் சொன்னதின் கருத்தை என் மனம் எளிதில் அறியமுடியாமல் ப்ரமிக்கின்றது. ஆகையால் இதை விவரித்துச் சொல்வீராக.

ப்ராஹ்மணர் சொல்லுகிறார் :—மன்னவனே! ப்ருதிவிமுதலிய பஞ்சபூதங்களின் பரிணாமமாகிய சரீரங்களில் ஏதோ ஒரு காரணத்தினால் பூமியில் இங்ஙனம் ஸஞ்சரிக்கின்ற சில சரீரங்கள் ஜனங்களென்று கூறப்படுகின்றன. அவற்றின் பாதங்களின்மேல் குதிகால்களும் அவற்றின்மேல் கணைக்கால்களும் அவற்றின்மேல் முழங்கால்களும் அவற்றின்மேல் தொடைகளும் அவற்றின்மேல் இடையும் அதன்மேல் மார்பும் அதன்மேல் கழுத்தும் தோள்களும் தோளின்மேல் பல்லக்கும் அதன்மேல் ஸௌவீரதேசங்களுக்கு அரசனென்று சொல்லப்படும் சரீரமும் இருக்கின்றன. நீ அச்சரீரத்தையே ஆத்மாவாக அபிமானித்து நான் ஸிந்து ஸௌவீரதேசங்களுக்கு ராஜனென்று கொடுமதங் கொண்டிருக்கின்றனை. மிகவும் வருந்திச் சுமக்கின்றமையால் மனஇரக்கத்திற் கிடமாய்ச் சோகிக்கத்தகுந்தவர்களை

மாகிய இவர்களை வெட்டிக்குப் பிடித்து மனஇராக்கதில் லாதிருக்கின்றனை. நான் ஜனங்களைப் பாதுகாக்கின்றே னென்று பிதற்றுகிற நீ தேஹாத்ம விவேகமுள்ள பெரி யோர்களின் ஸபையில் விளங்கமாட்டாய். நீ தேஹத் தையே ஆத்மாவாகப்ரமித்து விவேகமற்று கண்டதத் தையினின்று தவறியிருக்கின்றனை. ஜங்கம ஸ்தாவர ரூபமான தேஹங்களெல்லாம் பூமியிலேயே உண்டாவ தும் அதிலேயே நசிப்பதுமாயிருத்தலை நாம் என்றும் காண்கின்றோம். ஆகையால் நித்யவஸ்துவாகிய ஆத் மாவினிடத்தில் ராஜஸயிருக்கை முதலியவைகளும் பருமன் இளைப்பு முதலியவைகளும் உண்டென்பதற்குத் தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமித்த உன் சொல்லொ ழிய வேறொரு காரணமும் இல்லை. 'நான் மாத்ரமா சொல்லுகிறேன். ஜனங்களெல்லோரும் இங்ஙனமே யன்றோ வழங்குகிறார்கள். அதனல் அவை ஆத்மாவி னிடத்தில் உண்டென்று ஊஹிக்கலாமே' என்னில், உலகமெல்லாம் உன்னைப்போல் அஜ்ஞானத்தினல் அங் ஙனம் வழங்குகிறதன்றி அது உண்மையன்று. அறி வுடையோர் அங்ஙனம் வழங்கமாட்டார்கள். அநித்ய மான கார்யவஸ்துக்களுக்கு லயஸ்தானமாகிய இப்பூமி யும் அநித்யமே. இது பூதஸூக்ஷ்மங்களின் ஸமூஹங்க ளால் உண்டானது. அப்பூத ஸூக்ஷ்மங்களை ஈச்வரன் தனது ஸங்கல்பத்தினல் ப்ரக்ருதியினின்று உண்டாக் கினன். ஆகையால் அவை அநித்யங்களே. இங்ஙனம் இளைப்பு பருமன் பெறுமை சிறுமை மேன்மை தாழ்மை இவற்றிற்கிடமாகிய ஜங்கம ஸ்தாவர ரூபமான சரீரங்க ளெல்லாம் ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவை யென்றும், பஞ்சபூதங்கள் அவற்றின் ஸ்வபாவங்கள் அந்தக்காரணம் வாஸனை காலம் என்று பலவாறாய் விரிக்

திருப்பதாகிய ப்ரக்ருதியால் ஏற்பட்டவையென்றும் ஸூக்ஷ்ம புத்தியுடன் ஊஹித்துணர்வாயாக. ஆத்மா ஜ்ஞான ஸ்வரூபன்; இயற்கையில் கர்ம ஸம்பந்தமில்லாமையால் பரிசுத்தன்; புருஷார்த்தமாயிருப்பவன். எல்லா இடங்களிலும் ஆத்மா ஒரு வாறுகவேயிருப்பான்; உள்ளும் புறமுமில்லாதவன்; ஜ்ஞானத்தினால் எங்கும் நிறைந்திருப்பவன்; நித்யன்; தனக்குத் தான் தோற்றுந் தன்மையன்; பசி தாஹம் சோகம் மோஹம் மூப்பு இறப்பு என்கிற ஊர்மிகள் இன்றி ஓய்ந்திருப்பவன். பகவானென்றும் வாஸுதேவனென்றும் சொல்லப்படுகிற பரமாத்மாவுக்கு ஸர்வப்ரகாரத்தினாலும் உட்பட்டிருப்பவனையால் வாஸுதேவனென்றே இவனைக் கவிகள் வழங்குவார்கள். ராஜாகணனே! ஆத்மபரமாத்மாக்களின் உண்மையைப்பற்றின அறிவு பகவத் பக்தர்களான பெரியோர்களின் பாததூளியின் அபிஷேகத்தினால் உண்டாகுமன்றி மற்ற தவத்தினாலாவது யாகம்முதலிய வைதிககர்மத்தினாலாவது தானத்தினாலாவது க்ருஹஸ்தாச்ரமதர்மங்களைக் குறைவற அனுஷ்டிக்கையாலாவது வேதாப்யாஸத்தினாலாவது ஜலம் அக்னி ஸூர்யன் இவர்களை உபாஸிக்கையாலாவது உண்டாகாது. பெரியோர்கள் க்ராம்ய கதைகளுக்கு இடங்கொடாமல் உத்தமஸ்லோகனான பகவானுடைய குணங்களையே எப்பொழுதும் சொல்லிப் பொழுது போக்கிக்கொண்டிருப்பார்கள். மோக்ஷத்தில் விருப்பமுடையவர் அவரிடம் சென்று அந்தப் பகவானுடைய குணங்களைக் கேட்பார்களாயின், வாஸுதேவனிடத்தில் கல்லமதி உண்டாகப் பெறுவார்கள். நான் முன் ஜன்மத்தில் பரதனென்னும் பேருடைய மன்னவனாயிருந்தேன். அப்பொழுது நான் ஐஹிக ஸுகங்களிலும் பாரலௌக ஸுகங்களிலும் சிறி

தும் மனப்பற்றின்றிப் பகவானை ஆராதித்துக் கொண்டிருந்தும் கடைசியில் ஓர் மான்குட்டியினிடத்தில் மனப்பற்றுசெய்து அதனல் பகவதாராதன ரூபமான ப்ரயோஜனமெல்லாம் தடைபட்டு மான்ஜன்மத்தை அடைந்தேன். வீரனே! நான் பகவானை ஆராதித்த மஹிமையால் மான் ஜன்மத்திலும் முன் ஜன்மத்தின் நினைவு மாறப்பெறுதிருந்தேன். ஆ! பகவதாராதனத்தின் மஹிமையை என்னென்று சொல்லுவேன்? இப்பொழுது நான் ஜனங்களோடு ஸஹவாஸம் செய்தால் என்னகெடுதி நேருமோவென்று பயந்து பற்றின்றி எங்கும் தங்காமல் வெளியிலேயே திரிந்துகொண்டிருக்கிறேன். ஆகையால் மோக்ஷத்தை விரும்பும் மனிதன் பற்றற்ற பெரியோர்களோடு ஸஹவாஸம் செய்து ஜ்ஞானம் உண்டாகப்பெற்று அந்த ஜ்ஞானமாகிற கத்தியைக்கொண்டு தேஹத்திலும் அதைத் தொடர்ந்த மற்ற க்ருஹ க்ஷேத்ர புத்ராதிகளிடத்திலும் விளைகிற மனப்பற்றுக்களை அறுத்துப் பகவானுடைய சரித்ராங்களை வாயாற் சொல்லுவதும் காதால் கேட்பதும் செய்து அவனை எப்பொழுதும் மறவாமல் த்யானித்துக்கொண்டிருப்பானுயின் ஸம்ஸார மார்க்கத்தின் கடைக் கரையாகிய அந்தப் பகவானைப் பெறுவான். பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

விராத் உண்டாகும் பொருட்டு ஹரே கணனுக்கு ஜடபரதன் ஸம்ஸாரத்தின் கொடுமையைக் கூறுதல்.

ப்ராஹ்மணர் சொல்லுகிறார்:—பகவானுடைய அனுக்ரஹத்தையொழிய மற்ற எவ்வகையிலும் கடக்க முடியாத கர்மமார்க்கத்தில் ப்ரக்ருதியால் நுழைக்கப்பட்டு,

ஸத்வாஜஸ்தமோ குணங்களால் பிரிந்திருக்கிற கர்மங்களில் கண் வைத்து, வர்த்தகர் பணம் ஸம்பாதிக்கும் பொருட்டுக் காடுமேடெல்லாம் திரிவதுபோல், தர்ம அர்த்த காமங்களில் மனம் சென்ற ஜீவாத்மாக்கள் ஸம்ஸாரமாகிற அடவியில் அகப்பட்டு ஸுகத்தை அடையமாட்டார்கள். ஓ மன்னவனே! இவ்வடவியில் ஆறுதிருடர்கள் உலாவிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்வழி தெரியாத ஓருவனைத் தலைவனாகக் கொண்டு திரிகின்ற வர்த்தகர்களைத் தடுத்து மேல்விழுந்து அவரிடத்தினின்று பணத்தைப் பறிக்கின்றார்கள். இதில் தரிகள் பல உண்டு. செக்காய்கள் ஆட்டை இழுத்துக்கொண்டு போவதுபோல், அவை மனஸ்தாபமற்றிருக்கிற அவ்வர்த்தகர்களின் கூட்டத்தை இழுத்துக்கொண்டு போகின்றன. பலகொடிகளும் புற்களும் புதர்களும் நிறைந்த ஓரிடத்தில் கொடிய காட்டுக்களாலும் கொசுக்களாலும் கடியுண்டு வருந்துவார்கள். ஓருகால் கந்தர்வநகரத்தைக் கண்டு இது நிஜமென்று நினைப்பார்கள். சிற்சில இடங்களில் பெருவேகமுடைய கொள்ளிவாய்ப் பிசாசத்தைக் காண்பார்கள். கானல்போன்ற தனத்தில் புத்தி சென்று அவ்வடவியில் இங்குமங்கும் திரிவார்கள். சில இடங்களில் சுழற்காற்றால் மேற் கிளம்பின தூட்களால் கண்கள் நிறம்பப் பெற்றுத் திக்குதெரியாதிருப்பார்கள். சில இடங்களில் கண்ணுக்குத்தெரியாமல் ஓலிக்கின்ற சுவர்க்கோழிகளின் த்வனியினால் காதுகோவெடுக்கப் பெறுவார்கள். கோட்டான்களின் கூக்குரல்களால் மனவருத்த முறுவார்கள். சில இடங்களில் பசியால் வருந்தி எட்டி முதலிய விஷவ்ருக்ஷங்களைப் பற்றுவார்கள். சில இடங்களில் கானலைத் தண்ணீரென்று ப்ரமித்து ஓடுவார்கள். சில இடங்களில் ஜலமில்லாத நதிக

னைத் தேடிக்கொண்டு சென்று தண்ணீர் காணுமல் தடுக் கிப் பள்ளங்களில் விழுந்து கைகால் ஒடிந்து வருந்துவார் கள். ஒருகால் ஆஹாரமின்றிப் பிறருடைய தனத்தைப் பெற விரும்புவார்கள். ஒருகால் காட்டுத் தீயில் அகப் பட்டு அத்தீயால் கொளுத்தப்பட்டு வருந்துவார்கள். ஒருகால் யக்ஷர்களால் ப்ராணன்கள் பறியுண்டு வருந் துவார்கள். மன்னவனே! ஒருகால் சூரர்களான ராஜ படர்களால் பணம் பிடுங்கப்பெற்றுத் துக்கிப்பார்கள். ஒருகால் சோகித்து மோஹித்து மூர்ச்சை அடைவார் கள். ஒருகால் கந்தர்வநகரத்தில் நுழைந்து ஸுகித்த வர்போல் முஹூர்த்தகாலம் ஸந்தோஷிப்பார்கள். ஒரு கால் ஏறமுடியாத மலையின்மேல் ஏறத்தொடங்கி முட் களாலும் பறல் கற்களாலும் பாதங்கள் நோவப்பெற்று வாடி வருந்துவார்கள். குடும்ப போஷணத்திற்கு முயன்று அடிக்கடி ஜாடாக்னியால் வருந்திப் பெண் டிர் பிள்ளை முதலியவர்மேல் கோபித்துக் கொள்வார் கள். ஒருகால் இவர்கள் மலைப்பாம்பினல் விழுங்கப் பெற்று அரண்யத்தில் விழுபிணம்போல் ஒன்றுமறியா திருப்பார்கள். ஒருகால் ஸர்ப்பங்களால் கடியுண்டு கண் தெரியாமல் பாழுங் கிணற்றில் விழுந்து இருட்டில் படுத் திருப்பார்கள். ஒருகால் [1] அற்பரஸங்களை விரும்பித் தேடிக்கொண்டு சென்று ஆங்குள்ள ஈக்களால் அடி யுண்டு அவமதிக்கப்பட்டு வருந்துவார்கள்; கடைசியில் பெருவருத்தத்துடன் அத்தத் தேன் துளிகளைப் பெறி னும் அவரை வஞ்சித்து மற்றவர் அதைப் பறித்துக் கொண்டு போவார்கள். அவரையும் வஞ்சித்து வேறு சிலர் பறிப்பார்கள். ஒருகால் குளிர் வெய்யில் மழை

---

1 சிறிய தேன்கூடுகளை.

காற்று முதலியவற்றிற்குப் பரிஹாரம் செய்ய முடியாமல் அவற்றால் வருந்துவார்கள். ஒருகால் ஒருவர்க்கொருவர் அற்பமான வஸ்துவை விற்பதும் வாங்குவதுமாய் பேரஞ்செய்யத் தொடங்கிப் பணத்திலாசையால் த்வேஷத்தை அடைவார்கள். ஒருகால் கையிலிருந்த பணமெல்லாம் செலவழியப் பெற்று அவ்வடவியில் படுக்கை ஆஸனம் இருப்பிடம் வாஹனம் முதலிய கருவிகள் எவையுமின்றிப் பிறரிடத்தில் வேண்டியும் அவை கேரப் பெறாமல் பிறருடைய ஸாதத்துக்களில் விருப்பங் கொண்டு அவமானத்தை அடைவார்கள். ஒருவர்க்கொருவர் பணத்தை ஏமாற்றுதலால் ஒருவர்மேல் ஒருவர்க்கு த்வேஷம் தொடர்ந்து வளர்ந்து விவாதப்பட்டுக் கடக்கமுடியாத இவ்வரண்ய மார்க்கத்தில் மிகப் பெரிய வருத்தங்களாலும் பண அழிவுகளாலும் த்வேஷாதிகளாலும் வருந்திச் செத்தாப்போ லிருப்பார்கள். தந்தை தாய் பிள்ளை பெண்டிர் முதலியவர் மரணம் அடைகையில் அவர்களை ஆங்காங்குத் துறந்து மேல் பிறக்கும் பிள்ளை பெண் முதலியவர்களை எடுத்துக் கொண்டு இன்னும் இம்மார்க்கத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கிறார்களே யன்றி, இவ்வர்த்தகர்களில் ஒருவராவது இவ்வரண்யமார்க்கத்தைக் கடக்கும் உபாயமாகிய யோகத்தைக் கைப்பற்றவில்லை. சூரர்களும் திக்கஜங்களை வெல்லுந் திறமையுடையவர்களுமான மன்னவர்கள் அனைவரும் பூமியை 'என்னுடையது; என்னுடையது' என்று அபிமானித்து அதற்காக ஒருவர் மேல் ஒருவர் மாறுத் வைரங்கொண்டு யுத்தத்தில் கேவலம் ப்ராணன்களை இழந்தார்களே யன்றித் தண்டனைதிகாரத்தைத் துறந்து ப்ராணிகளிடத்தில் வைராக்யத்தை வேரோடறுத்துக் கொண்ட யோகிகள் பெறும்படியான

விஷ்ணுவின் ஸ்தானத்தை அடையவில்லை. ஒருகால் அழகிய கொடிகளின் கிளைகளைப் பற்றி அங்குள்ள பக்ஷிகளின் இனிய குரலைக் கேட்டு அதில் விருப்புற்று அங்குக் கால் தாழ்ந்திருப்பார்கள். ஒருகால் ஓரிடத்தில் ஸிம்ஹக்கூட்டத்தினின்று பயந்து கொக்கு பருந்து கழுகு முதலியவற்றோடு ஸ்நேஹம் செய்வார்கள்; கடைசியில் அவற்றால் வஞ்சிக்கப்பட்டுத் தாமும் அவற்றை வஞ்சித்து ஹம்ஸக்கூட்டத்தில் புகுந்து அவற்றின் ஸ்வபாவம் தமக்கு ருசிக்காமல் வானரங்களைப் பற்றுவார்கள். அந்த வானராஜாதியோடு விளையாடி இந்த்ரியங்களின் த்ருப்தியை அடைந்து அவற்றைத் தாமும் தம்மை அவையுமாகப் பார்த்துக்கொண்டு மரணகாலம் ஸமீபித்து வருவதையும் அறியாதிருப்பார்கள். கேவலம் ஐஹிக ஸுகங்களுக்கிடமான க்ருஹஸ்தாச்ரமத்தில் ஸுகங்களை அனுபவிக்க விரும்பி ஸ்த்ரீகளைப் புணர வேண்டுமென்னுமாசையால் வருந்திப் பிள்ளைகளிடத்திலும் பெண்டிர்களிடத்திலும் வாத்ஸல்யமுடையவராகி அங்ஙனம் தனக்கு கேரிட்ட ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டு அதைப் பரிஹரிக்க முடியாதிருப்பார்கள். ஒருகால் மனஸுக்கமற்றுப் பர்வத குஹையில் விழுந்து அங்கு யானையைக் கண்டு பயந்து கொடியைப் பிடித்துக் கொண்டு நிற்பார்கள். பிறகு பெரிய வருத்தத்துடன் அவ்வாபத்தினின்று மீண்டு மீளவும் தன்னைத் தாருடன் கலந்து முன்போலவே இந்த ஸம்ஸாரமாகிற அரண்யத்தில் பகவானுடைய மாயையால் நுழைக்கப்பட்டுக் கரையேறாதிருக்கிறார்கள். ராஜாகணனே! ஆகையால் நீயும் ப்ராணிகளைத் தண்டிக்கும் அதிகாரத்தைத் துறந்து ஸமஸ்த பூதங்களிடத்திலும் கட்புடையவனாகிச் சப்தாதி விஷயங்களில் மனத்தைச் செலுத்தா

மல் வர்ணஸ்ரமதர்மங்களால் பகவானை ஆராதித்து அதனல் வளர்ந்த கூரிய அறிவாகிற கத்தியைக் கொண்டு ப்ரக்ருதி ஸம்பந்தமாகிற வ்ருக்ஷத்தை வேருடன் அறுத்து இந்த ஸம்ஸாரமார்க்கத்தின் அக்கரையாகிய விஷ்ணுவின் ஸ்தானத்தை அடைவாயாக.

ரஹூகண மன்னவன் சொல்லுகிறான்:—பிறவிகளுக்குள் மானிடப்பிறவியே சிறப்புடையது. பரலோகத்தில் தேவாதிகளாகப் பிறந்தும் என்ன ப்ரயோஜனம்? அந்தத் தேவாதி ஜன்மங்களில் பகவானுடைய புகழால் பரிசுத்தமானமனமுடைய உம்மைப்போன்ற பெரியோர்களின் ஸஹவாஸம் பெரும்பாலும் கிடைக்காதல்லவா? உம்மைப்போன்ற பெரியோர்களின் பாதாரவிந்தங்களை இடைவிடின்றிப் பணிந்து அவற்றின் தூட்களால் பாபங்களெல்லாம் தொலையப்பெற்ற மனிதனுக்குப் பகவானிடத்தில் நிர்மலமான பக்தி உண்டாவது ஓராச்சர்யமன்று. ஒரு முஹூர்த்தகாலம் உம்மோடு ஸஹவாஸம் செய்ததால் குயுக்திகளால் வேருன்றியிருந்த என்னுடைய அவிவேகமெல்லாம் பறந்துபோயிற்று. வயது சென்றவர்களும் சிசுக்களும் யௌவனப் பருவமுடையவர்களும் சிறுவர்களுமாகித் தமது பெருமையை மறைத்துக்கொண்டு திரியும் பெரியோர்கள் அனைவர்க்கும் நமஸ்காரம். மஹானுபாவர்களாயினும் தமதுமஹிமையை வெளிப்படுத்தாமல் அனைவரும் அவமதிக்கும் படியான வேஷத்துடன் பூமியில் ஸஞ்சரிக்கின்ற ப்ராஹ்மணர்களிடத்தினின்று என்னைப்போல் அபராதம் படுந்தன்மையான ராஜாக்களுக்கு க்ஷேமம் உண்டாகுக.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—உத்தரையின் புதல்வனே! அளவிட முடியாத மஹத்தான வைபவமுடையவரும்

ப்ரஹ்மரிஷியின் புதல்வருமாகிய அந்த ப்ராஹ்மணர் ஸிந்து ஸௌவீர தேசங்களுக்கு ப்ரபுவாகிய ரஹூகண மன்னவன் தன்னை அவமதிக்கிலும் பரமகாருணிகராகையால் அதைப் பொருள் செய்யாமல் அவனுடைய அவிவேகத்தைப் பொறுக்கமுடியாமல் இங்ஙனம் ஆத்ம தத்வத்தை உபதேசித்து அம்மன்னவனுல் ஸ்நேஹத்துடன் பாதவந்தனம் செய்யப்பெற்று இந்த்ரியங்களும் பஞ்ச தாஹம் முதலிய ஊர்மிகளும் மனமும் வாஸனையும் சாந்தமாயிருக்கப்பெற்றுப் பூர்ண ஸுகத்ரம் போன்று இப்பூமி யெல்லாம் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தார். ஸௌவீர தேசாதிபதியாகிய ரஹூகணனும் ஸத்புருஷராகிய அந்த ப்ரஹ்மரிஷியின் குமாரரிடத்தினின்று பரமாத்மாவின் உண்மையை நன்றாக அறிந்து தான்நெடுகாலாய் அஜ்ஞானத்தினுல் தேஹத்தையே ஆத்மாவாக நினைத்திருந்த எண்ணத்தை அப்பொழுதே துறந்தான். மன்னவனே! பாகவதர்களைப் பணிந்த பெரியோர்களின் ப்ரபாவம் இத்தகையதல்லவா?

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—பாகவதர்களிற் சிறந்தவரே! பலபேரிடத்தில் பலபலவும் கேட்டுணர்ந்த மஹா ஜ்ஞானியாகிய நீர் ஜீவலோகத்தினுடைய ஸம்ஸார மார்க்கத்தை மறைத்து மொழிந்தீர். அதன்பொருள் விவேகிகளின் புத்தியால் அறியக்கூடியதாயிருக்கின்றதேயன்றி அவிவேகிகளான என்னைப் போன்றவர்க்கு எளிதில் அறியக் கூடியதாயில்லை. ஆகையால் தேவரீர் மறைத்து மொழிந்த வாக்யங்களின் பொருளை ஸ்பஷ்டமாய் எடுத்து மொழிவீராக.

பதின்மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

மறைத்துச் சொன்ன ஸம்ஸாரத்தின் கொடுமையை விவரித்துக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஸர்வேச்வரனுகிய பகவானுடைய வசத்திலிருக்கும் மாயையால் தேஹாத்மாபிமானிகள் ஸத்வ ரஜஸ் தமோகுணங்களுக்கிடமாகச் செய்யும் நல்லதும் தீயதும் இரண்டும்கலந்ததுமான பல வகைக் கர்மங்களால் விளைகிற தேவ மனுஷ்யாதி தேஹபரம்பரைகளைப் பெறுகையும் அவற்றைத் துறக்கையுமாகிற ஸம்ஸாரத்தின் அனுபவத்திற்குக் காரணமான செவி வாய் கண் மூக்கு உடல் மனம் என்கிற ஆறு இந்த்ரியங்களின் கூட்டத்திலுல் ஜீவலோகம் நுழையமுடியாத காட்டு வழிபோன்ற கர்ம மார்க்கத்தில் விழுந்து பணம் ஸம்பாதிக்கமுயன்ற வர்த்தகர்க் கூட்டம்போல் தாம் செய்த கர்மங்களின் பலன்களை அனுபவித்துக்கொண்டு தாம்செய்யும் ப்ரயத்னங்களெல்லாம் வீணுவதும் விக்னங்களால் தடைபடுவதுமாகப் பெற்று, ப்ரமாசனம்போல் அமங்களமான ஸம்ஸாரமார்க்கத்தில் சென்று அதில் விளையும் தாபங்களைப் போக்குவதும் பாகவதர்களால் அனுஷ்டிக்கப்படுவதுமாகிய பக்திமார்க்கத்தை இன்னம் கைப்பற்றுமலே வருந்துகின்றது. இந்த ஸம்ஸாரமார்க்கத்தில் ஆறு இந்த்ரியங்களே திருடர்களாகக் கூறப்பட்டன. வர்த்தகர் முதலிய ஜனங்கள் மிகவும் ப்ரயாஸப்பட்டு ஸம்பாதித்ததும் தர்மத்திற்கு உபயோகப்படக்கூடியதுமாகிய தனத்தை அவர்கள் மனஸுக்மற்றிருக்கையில் திருடர்கள் திருடிக்கொண்டு போவதுபோல், இந்த்ரியங்கள், ஜீவாத்மாக்களைப் பார்த்தல் தொடுதல் கேட்டல் சுக்குதல் முகருதல் நினைத்தல் நிச்சயித்தல் ஆகிற தம்செயல்களால் இல்லறவாழ்க்கையில் உண்டாகும் அற்பமான

ஸுகங்களில் மூட்டி மதியைக்கெடுத்துத் தம்மைவெல்ல முடியாமல் ஊக்கமற்றிருக்கையில் அவர்கள் நெடுகாளாய் வருந்தி அனுஷ்டித்தும் பரலோகத்தில் நன்மையை விளைவிப்பதுமாகிய வர்ணாச்ரம தர்மத்தையும் பகவதாராதன ரூபமான தர்மத்தையும் பாழ் செய்கின்றனர். பெரியோர்கள் ஜீவாத்மாவுக்கு வர்ணாச்ரம தர்மங்களால் உதவி செய்யப் பெற்ற பகவதாராதன ரூபமான தர்மத்தையே தனமாகக் கூறுகிறார்கள். அதை இவ்விந்த்ரியங்களாகிற திருடர்கள் பறிக்கின்றார்கள். ஜீவன் பிள்ளை பெண்டிர் முதலியவர்களிடத்தில் மனப்பற்றைத் துறக்க முயன்றிருப்பினும், அரண்யத்தில் கரிகளும் செக்காய்களும் ஆட்டைப்பறிப்பதுபோல் அவர்கள் என் தகப்பனென்றும் என்பர்த்தாவென்றும் சொல்லிக்கொண்டு மேல்விழுந்து அவனைத் தம்வசம் இழுக்கின்றார்கள். ஆகையால் அவர்கள் செக்காய்களாகவும் கரிகளாகவும் கூறப்பட்டனர். உலகத்தில் பயிர் செய்பவர் வருஷந்தோறும் நிலங்களில் முளைத்த செடி கொடிகளையும் புற்பூண்டுகளையும் பிடுங்கி மீளவும் வேரூன்ற வொட்டாமல் கெருப்பை யிட்டுக் கொளுத்திச் சீர்திருத்தஞ் செய்யினும், அவற்றின் வேர்கள் சாகாதிருந்து, உழுது விதை விதைத்தபின்பு பயிர்களோடுகூட அவையும் முளைத்து நிலம் முழுவதும் சூழ்வதுபோல், இல்லற வாழ்க்கையில் கர்மங்கள் எவ்வளவு அழிக்கப் பார்க்கினும் வேருடன் அழியமாட்டா. கற்பூரபாணியில் கற்பூரம் இல்லாமற் போயினும் அதன் வாஸனை மாறு திருப்பதுபோல், இதில் கர்மங்கள் அனுபவத்தினால் க்ஷீணிக்கினும் அதன் வாஸனை மாறாது. இந்த க்ருஹஸ்தாச்ரமம் காமங்களுக்கெல்லாம் விளை நிலமாயிருக்கும். ஜீவாத்மாக்கள் இதில் அகப்பட்டுக் காட்டுக்கள்

போலவும் கொசுக்கள் போலவும் தடுக்க முடியாமல் உபத்ரவம் செய்கின்ற அற்ப ஜனங்களால் பீடிக்கப்பட்டு வருந்துவார்கள். மற்றும், இவர்கள் தனதான்யாதிகளை வெளியில் ஸஞ்சரிக்கும் ப்ராணன்களென்று சொல்லும் படி மிகவும் அன்புடன் பாதுகாத்து வருகையில், விட்டில்களும் பக்ஷிகளும் திருடர்களும் எலிகளும் அவற்றைப் பறித்துக்கொண்டு போகப்பெற்று வருந்துவார்கள். இந்த ஸம்ஸாரத்தில் ஓரிடத்தில் சுழன்று கொண்டிருக்கிற ஜீவன் அஹங்கார மமகாரங்களாலும் சப்தாதி விஷயங்களை அனுபவிக்க வேண்டுமென்னும் விருப்பத்தினாலும் புண்ய பாப கர்ம வாஸனையாலும் மனம் கலங்கப்பெற்றுக் கந்தர்வ நகரம்போல நிலையற்ற தன் சரீரத்தையும் பிள்ளை பெண்டிர் முதலியவர்களின் சரீரத்தையும் ப்ரமத்தினால் நிலைநின்றிருப்பதாக நினைப்பான். தண்ணீர் தாஹமுடையவன் காட்டில் கானலோடுவதைக் கண்டு ஜலம் இருப்பதாக ப்ரமித்து அங்கோடுவது போல், ஜீவன் அந்த மனுஷ்ய சரீரத்தில் இருந்து கொண்டு ஸுகத்திற்கிடமல்லாமை மாத்ரமே யன்றித் துக்கத்தையும் விளக்கவல்ல சப்தாதி விஷயங்களை அனுபவிக்கவிரும்பி அவற்றைத் தேடிக்கொண்டோடுவான். குடிப்பது சாப்பிடுவது ஸம்போகிப்பது முதலிய ஸம்ஸாரிக ஸுகங்களில் விருப்புற்று, குளிரில் அடிபட்டவன் கொள்ளிவாய்ப் பிசாசத்தைக் கண்டு கெருப்பென்று ப்ரமித்து அதனிடம் போவதுபோல், ரஜோகுணத்தினால் மதிமயங்கின ஜீவன் ஸமஸ்த தோஷங்களுக்கும் இடமாயிருப்பதும் அக்னியின்விஷ்டையுமாகிய ஸ்வர்ணத்தை விரும்புவான். கெருப்புக்காகக் கொள்ளிவாய்ப்பிசாசத்திடம் ஓடியோடிப்போயினும் அது கிட்டமாட்டாமல் வருந்திக் கடைசியில் கிட்டினும் அதனால்

விரட்டப்பட்டுப் பயந்து மரணம் அடைவதுபோல், ஸ்வர்ணத்தைப் பெற விரும்பி எவ்வளவு ப்ரயாஸப்பட்டும் அது கிடைக்காமல் வருந்தி, அவ்வளவோடு நிற்காமல் எவ்விதத்திலாவது அதைப் பெறவேண்டுமென்னும் பிடிவாதத்துடன் கெஞ்சிலும் நினைக்க முடியாத பாபகர்மங்களையும் செய்து மிக்க வருத்தத்துடன் அதைப் பெறினும் பண்ணின பாபத்தினால் ஆயுள் க்ஷீணிக்கப் பெற்று ஆசைப்பட்ட போகங்களை அனுபவிக்காமலே மரணம் அடைந்து நரகத்தில்சென்று பற்பல யாதனைகளை அனுபவிப்பான். இங்ஙனம் சரீரம் நிலையற்றதாகையால் கந்தர்வ நகரமாகவும், ஸுகத்திற்கிடம்போல் தோற்றிக் கடைசியில் துக்கத்திற்கே இடமாயிருக்குமாகையால் சப்தாதி விஷயங்கள் கானலாகவும், அனர்த்தத்தை விளைப்பதாகையால் ஸ்வர்ணம் கொள்ளிவாய்ப் பிசாசமாகவும் கூறப்பட்டன. இருப்பிடம் குடி நீர் பணம் முதலிய பல போகஸாதனங்களை விரும்பி அவற்றை ஸம்பாதிக்கும் பொருட்டு அபிநிவேசத்துடன் இங்குமங்கும் திரிவான். ராத்ரியிலிருள்போல் ஒன்றும் தெரியவொட்டாமல் மறைக்கிற சுழற்காற்றில் அகப்பட்டவன் கண்களில் தூள் படியப்பெற்றுத் திக்கு தெரியாமல் தடுமாறுவதுபோல், மடந்தையர் மடியில் அகப்பட்டவன் அக்காலம் தலையெடுத்த காமமோஹத்தினால் மதிமயங்கி மர்யாதைகளை யெல்லாம் தவிர்த்து ப்ராணிகளின் நடத்தைகளுக்கு ஸாக்ஷிகளான திக்தேவதைகளையும் காணமாட்டான். ஒருகால் சப்தாதி விஷயங்கள் பயனற்றவை யென்பதை அனுபவித்தறிந்தவனும் தேஹசிந்தையினால் ஆத்மாவின் நினைவை இழந்து கானலில் தோற்றும் நீரோட்டம் போன்ற அச்சப்தாதி விஷயங்களையே விரும்பி யோடுவான். ஒருகால் கோட்

டான்களுடைய கோஷம்போல் மிகவும் கர்ணகடோர மாய்ப் பரபரப்புடன் பேசுகிற ராஜபடர்களின் விரட்டல் களால் ப்ரத்யக்ஷத்தில் காதுகளிரண்டும் பிளவுண்டாற் போல் வருத்துவான். சுவர்க்கோழிகளின் கோஷம் போல் மிகவும் க்ரூரமாயிருப்பதும் உத்ஸாஹத்திலுல் பெரிய பரபரப்புடன் கூடியதுமாகிய சத்ருக்களின் விரட்டல்களை மறைவில் கேட்டு ஹ்ருதயம் பிளவுண் டாற்போல் வருத்துவான். பூர்வஜன்மத்தில் புண்யம் செய்திராணுயின், ஒன்றுக்கும் உபயோகப்படாத எட்டி விஷத்தும்பை முதலிய மரம் செடி கொடிகள் போல வும் விஷக்கிணறுபோலவும் [1] இருவகை ப்ரயோஜனங் களுக்கும் இடமில்லாத பணங்களையுடையவர்களும் ஜீவித்திருக்கும் செத்தாற்போலிருப்பவர்களுமான பாபிஷ்டர்களை அடுத்துப் பிழைக்கப்பார்ப்பான். ஒரு கால் அஸத்துக்களின் ஸஹவாஸத்திலுல் வஞ்சிக்கப் பட்டு மதிகெட்டுத்தண்ணீர் தாஹமுடையவன் ஜலமில் லாத ஆற்றில் இறங்க முயன்று பள்ளத்தில்விழுந்து தண்ணீர் பெருமைமாத்ரமேயன்றி மண்டை உடையப் பெற்றுப் பின்பும் தலைகோய்தொடர்ந்து வருத்துவது போல் இஹலோகத்திலும் பரலோகத்திலும் துக்கத் தைக் கொடுக்கிற பாஷண்ட மார்க்கத்தைக் கைப்பற்றி வருத்துவான். ஒருகால் பிறரை வருத்தியும் ஆஹாரம் கிடைக்காமல் தந்தை பிள்ளை முதலியவரைச் சேர்ந்த த்ருணமாயினும் எவரிடத்தில் புலப்படுமோ அவர்களைப் பக்ஷிக்கத் தொடங்குவான். ஒருகால் காட்டுத்தீபோல் போக்ய வஸ்துக்கள் எவையுமின்றி மேன்மேலும் துக்க

---

1. இஹலோகத்து ப்ரயோஜனமும் பரலோகத்து ப்ரயோ ஜனமுமாகிய இருவகை ப்ரயோஜனங்களுக்கும்.

பரம்பரைகளுக்கே இடமான க்ருஹஸ்தாஸ்ரமத்தில் இழிந்து அதில் தான் விரும்புகின்றவை கிடைக்காமையாலும் தனக்கு வேண்டாதவை பலவும் சேர்ந்து நீங்காமையாலும் சோகமாகிற அக்னியால் தஹிக்கப்பட்டு 'ஆ! நான் பூர்வஜன்மத்தில் கல்லது செய்யவில்லை. ஆகையால் இப்பொழுது பாக்யமற்று வருந்துகிறேன்' என்று மிகவும் மனவெறுப்புறுவான். ஒருகால் ராஜகுலத்திலுள்ளார் காலக்கொடுமையால் ப்ரதிகூலராகி, தான் ப்ராணன்களைப்போல் மிகுந்த ப்ரீதியுடன் பாதுகாத்து வருகிற தனங்களை ராக்ஷஸர்போல் மேல் விழுந்து பறித்துக்கொண்டு போகையில், ஸந்தோஷம் முதலிய ஜீவலக்ஷணங்களெல்லாம் தொலைத்து மரணம் அடைந்தாற்போலிருப்பான். ஒருகால் விழித்துக்கொண்டிருக்கையில் ஆசைப்பட்டபடி ஸ்வப்னத்தில் தந்தை பாட்டன் முதலிய பந்துவர்க்கத்தைக் கண்டு அந்த க்ஷணத்தில் புலப்படாத அந்தப் பந்துவர்க்கத்தைச் சாச்வதமாக நினைத்து க்ஷணகாலம் ஸுகத்தை அனுபவிப்பான். ஸ்வப்னத்தில் புலப்படும் வஸ்துக்கள் அக்காலத்தில் அந்தந்த ஜீவாத்மாக்கள் மாத்ரமே அனுபவிக்குமாறு ஈச்வரனல் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன. அவை விழித்துக்கொண்ட பின்பு புலப்படமாட்டா. ஆனதுபற்றிக் கந்தர்வ நகரமென்று கூறப்பட்டன. மூடவன் பெரிய கெட்டான மலையின்மேல் ஏற விரும்புவதுபோல், மிக்க பணச்செலவாலும் சரீராயாஸத்தினாலும் அனுஷ்டிக்க வேண்டிய வைதிக கர்மங்களை அனுஷ்டிக்க விரும்பி, மலைமேல் ஏறுகிறவன் முட்போன்ற பரல்கற்களால் பாதங்கள் பொற்றப்பெற்று வருந்துவதுபோல், இடையில் பலவகையான ஸாம்ஸாரிகதுக்கங்களால் மனம் கலங்கப்பெற்று வருந்து

வான். ஒருகால் ஜாடராக்னியால் சரீரத்திலுள்ள பல மெல்லாம் ஓடுங்கப்பெற்று இளைத்துத் தனது குடும்பத் தின் மேல் கோபித்துக் கொள்வான். அவ்னே உறக்க மாகிற மலைப்பாம்பிஞல் பிடியுண்டு தன்னையும் பிறனையும் அறியமுடியாத அஜ்ஞானமாகிற பெரிய அந்தகாரத் தில் மூழ்கி ஜனஸஞ்சாரமில்லாத அரண்யத்தில் போலப் படுத்து விழுபினம்போவிருப்பான். ஒருகால் துர்ஜனர்க ளாகிற ஸர்ப்பங்களால் கடியுண்டு கர்வமாகிற கோரைப் பல் ஓடியப்பெற்று உறங்குவதற்குச் சிறிதும் அவகாசம் கிடைக்காமல் மனவருத்தமுற்று அதனல் ஜ்ஞானஸங் கோசத்தை அடைந்து குருடன் தெரியாமல் பாழ்ங் கிணற்றில் விழுவதுபோல் மஹத்தான துக்கத்தில் விழுவான். ஒருகால் சப்தாதி விஷயங்களை அனுபவிக் கையாலுண்டாகும் ஸுகமாகிற தேன் துளிகளைத் தேடிக்கொண்டு பாதாரங்களையும் பாத்ரவ்யங்களையும் மேல் விழுந்து பறிக்கத் தொடங்கி அரசனலாவது அவற்றிற்கு உடையவர்களாலாவது அடிக்கப்பெற்றுப் பெரிய ரகாம்போன்ற சிறைச்சாலையில் அடைப்புண் பான். ஆகையால் ஜீவன் ப்ரவ்ருத்தி மார்க்கத்தில் இழிந்து செய்யும் புண்ய பாபகர்மங்களெல்லாம் இவ் வுலகத்திலும் பரலோகத்திலும் அவனுக்கு ஸம்ஸாரத் தையே விளைக்குமென்று சொல்லுகிறார்கள். பாத்ரவ்ய பாதாரங்களில் கைவைத்து அதற்காகச் சிறைச்சாலை யில் அடைப்புண்டவன் அதினின்று விடுபடுவாரையின், அவனிடத்திலுள்ள த்ரவ்யத்தையும் மடந்தையர்களை யும் தேவதத்தனும், அவனிடத்தினின்று யஜ்ஞமித்ர னும் பறித்துக்கொண்டு போவார்கள். இங்ஙனமே அந் யாயமாய் ஸம்பாதித்த ஸொத்து ஒருவனுக்கும் நிலை நிற்காது. ஒருவனை விட்டு மற்றொருவனிடம் போய்க்

கொண்டே யிருக்கும். சிறையிலிருந்து வருந்தியும் அதை அனுபவிக்கப் பெறமாட்டான். ஒருகால் குளிர் வெய்யில் காற்று முதலிய பல ஆதிதெய்விக தாபங்களாலும் ஆதிபௌதிக தாபங்களாலும் ஆத்யாத்மிக தாபங்களாலும் வருந்தி அவற்றைத் தடுக்க விரும்பி அதற்கு வல்லமையற்று எஸ்லையில்லாத மனக்கவலையுடன் துக்கித்துக் கொண்டிருப்பான். ஒருகால் ஏதேனும் ஒரு தனத்தைக் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டிருந்து பணத்தாசையால் இருபது பல கறைகளுக்காவது அன்றி அவற்றிலும் குறைந்த அற்ப வஸ்துக்காவது த்வேஷத்தை ஏற்றுக்கொள்வான். ஒருகால் பணமெல்லாம் அழியப்பெற்றுப் படுக்கை ஆஸனம் இருப்பிடம் முதலிய போகத்திற்கு வேண்டிய கருவிகள் எவையுமின்றி மீளவும் அவற்றைப் பெற விரும்பி அதற்குப் பணம் வேண்டுமாகையால் முயற்சி செய்தும் அது கைகூடாமல் பிறனுடைய ஸொத்தைப்பறிக்க மனத்தில் நிச்சயித்துக்கொண்டு முயன்று அவமானம் முதலியவற்றைப் பெறுவான். கொடுக்கல் வாங்கலின் மாறுபாட்டினால் ஒருவர் மேல் ஒருவர்க்கு வைரம் வேரூன்றி அதன் தொடர்ச்சியால் அனிஷ்டங்களைச் செய்து கொண்டிருப்பினும் முன்பு கலந்திருந்த அபிமானத்தின் வாஸனையால் அவர்களோடு விவாஹாதி ஸம்பந்தத்தையும் ஏற்றுக்கொள்வான். இத்தகைய பல வருத்தங்களாலும் ஸுகம் துக்கம் ராகம் த்வேஷம் முதலியவைகளாலும் மிகவும் விஸ்தீர்ணமாயிருக்கிற இந்த ஸம்ஸார மார்க்கத்தில் ஆபத்தை அடைந்து மரணம் அடைகின்ற தந்தை பாட்டன் பிள்ளை பெண்டிர் முதலியவர்களைத் துறந்து மேன்மேல் தோன்றுகிற பிள்ளை பெண் முதலியவர்களை கம்முடையவர்களென்னும் அபி

மானத்துடன் கைப்பற்றி அங்ஙனம் பிறந்த பிள்ளை முதலியவர் மரணம் அடைகையில் சோகிப்பதும் மோஹிப்பதும் வருந்துவதும் வாயாற் புலம்புவதும் கண்ணீர் பெருக்குவதுமாகி, மீளவும் பிள்ளை பெண் முதலியன உண்டாகும் பொழுது ஸந்தோஷிப்பதும் இடியிடியென்று சுகைப்பதும், ஒருகால் ஜீவித்திருக்கிற பிள்ளை பெண் முதலியவர்க்கு என்ன வருமோ வென்று பயப்படுவதும், அவர்களுடைய குணங்களைப்பாடுவதுமாகி மோஹித்திருப்பான். இங்ஙனம் இவ்வுலகத்திலுள்ள ப்ராணி ஸமூஹமெல்லாம் கற்செயலேதுமின்றி ஸம்ஸாரமார்க்கத்தின் அக்கரையாகிய ஆத்ம யோகத்தில் இழியாமல் இதிலேயே உழல்கின்றன. சாந்தியே ஸ்வபாவமாயிருக்கப்பெற்றவரும் மனத்தை அடக்கியாள்பவரும் பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை மனனம் செய்பவருமான முனிவர்கள் எத்தகைய பூதங்களுக்கும் த்ரோஹம் செய்யாமல் நண்பர்களாகி ஆவலுடன் அனுஷ்டித்துவருகிற ஆத்மயோகம் மிகவும் ஆநந்தமாயிருக்கும்; அது ஸம்ஸாரத்தினின்று கடத்திப் பரமாத்மாநுபவத்தை விளைக்கும். மன்னவர்கள் தாம் திக்கஜங்களை வென்றவராயினும் மனத்தை வெல்ல முடியாமல் அத்தகைய ஆத்மயோகத்தைக் கைப்பற்ற மேல் வருந்துகிறார்கள். மற்றும், அவ்வரசர்கள் இப்பூமண்டலமெல்லாம் என்னுடையதே யென்று அபிமானித்து அதற்காக ஒருவர்மேல் ஒருவர் வைரத்தை ஏற்றுக்கொண்டு அது மேன்மேலும் தொடர்ந்து வரப்பெற்று யுத்தத்தில் சத்ருக்களால் அடியுண்டு தாம் அபிமானித்திருந்த அப்பூமியைத் துறந்து யுத்த பூமியில் படுக்கின்றார்கள். இந்த ஸம்ஸார மார்க்கத்தில் இத்தகைய பெரிய வருத்தங்களும் பணத்தை இழக்கை

முதலியவைகளும் ஸுகம் துக்கம் ராகம் த்வேஷம் பயம் அபிமானம் ஸந்தோஷம் மனவுக்கமின்மை பிச்சேறுகை சோகம் மோஹம் பிறனுடைய கன்மையைக் கண்டு பொறுமை பிறனுடைய குணங்களைப் பொறுமல் அவன் மேல் தோஷங்களை ஏறிடுகை அவமானம் பசி தாஹம் மறைவ்யாதி சரீரவ்யாதி பிறவி மூப்பு மரணம் முதலிய பலவகை உபத்ரவங்களும் மாறு திருக்கின்றன. ஓருகால் ஸ்த்ரீயென்னும் பேர்பூண்ட பகவானுடைய மாயையால் இருகரங்களாலும் அணைக்கப்பெற்று விவேகம் கெட்டுத் தேஹத்தைக்காட்டிலும் விலக்ஷணனை ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறியப்பெறுமல் பகவானை உபாஸிக்கவேண்டுமென்னும் நினைவேயின்றி, அந்த ஸ்த்ரீயினுடைய லீலாக்ருஹத்தின் வாசற்படி நுழைய முயன்றமாத்ரத்திலேயே மனம் கலங்கி அவ்விடத்திலுள்ள பிள்ளை பெண் மனைவி முதலியவர்களின் பேச்சுக்களால் மனம்பறியுண்டு இந்த்ரியங்களை அடக்க முடியாமல் தன்னை எல்லையில்லாத பெரிய அந்தகாரம் போன்ற துக்கஸாகரத்தில் தள்ளிக்கொள்கிறான். பரமாணு முதல் த்விபரார்த்தம்வரையிலுள்ள காலரூபமான பகவானுடைய சக்ராயுதம் பால்யம் முதலிய வயதை மிக்க விரைவுடன் கடத்திக்கொண்டு வந்து ப்ரஹ்ம தேவன் முதல் பூச்சி புழு வரையிலுமுள்ள ஸமஸ்த ப்ராணிகளுடைய ஆயுஸையும் கணக்கிடுகின்றது. காலசக்ரம் சிறிதும் மனவுக்கம் தவறுமல் ப்ராணிகளின் ஆயுஸைப் பறிக்கின்றது. ப்ராணிகள் நெடுநாள் வரையிலும் தமது ஆயுள் க்ஷீணிப்பதை அறியாமலே யிருந்து கடைசியில் மரணம் வருவதை நினைத்து அந்தக்கால சக்ரத்தினின்று பயந்து என்றும் மரணமில்லாதிருக்க வேண்டுமென்று விரும்பி அக்கால சக்ரத்தையே ஆயுதமாக

வுடைய யஜ்ஞபுருஷனை பகவானை உபதேசித்து வைதிக ஸித்தாந்தத்தினின்று வெளிப்பட்டு பருந்து கழுகு கொக்கு முதலிய பறவைகள்போல் கம்பினவர் களையும் வஞ்சிக்குந் தன்மையுடையவைகளும் சாஸ்த்ரங் களில் விதிக்கப்படுகையின்றிக் கேவல ஸங்கேதத் தினல் ஏற்பட்டவைகளுமான பாஷண்டதேவதைகளை அடுத்துப் பாஷண்டதர்மங்களை ஏற்றுக்கொள்கிறார் கள். தம்மைத் தாமே வஞ்சனை செய்கின்ற அப்பா ஷண்ட தேவதைகளால் வஞ்சிக்கப்பட்டு அதில் உபயோகமில்லை யென்று அதினின்று ப்ராஹ்மண குலத்தில் புகுந்து, ச்ருதி ஸ்ம்ருதிகளில் விதிக் கப்பட்ட உபநயனம் முதலிய தர்மங்களால் யஜ்ஞபுரு ஷனை ஆராதிக்கையாகிற அந்த ப்ராஹ்மணர்களின் கடத்தை தனக்கு ருசிக்காமல், வைதிகமான ஆசாரத் தில் சக்தியில்லாமையால் வானரஜாதிபோல் ஸம்போக ஸுகமும் குடும்பபோஷணமுமாகிய இவையே பரமபுரு ஷார்த்தங்களாகப்பெற்று ஆத்ம விஷயத்தில் சிறிதும் கண்ணையாத சூத்ரகுலத்தை அடுக்கிறார்கள். அதிலும் தடையின்றித் தேசகாலங்களின் உரிமையை எதிர்பாரா மல் மனம் போனபடி க்ரீடித்துக்கொண்டு சப்தாதி விஷயங்களில் மிகவும் தாழ்ந்தமதியுடையவராகி ஸ்திரீ யும் புருஷனும் ஒருவர்க்கொருவர் முகத்தைப்பார்ப்பது முதலிய க்ராம்யபோகத்திலேயே அழுந்தி ஆயுள் முடி வையும் மறக்கின்றார்கள். ஒருகால் மரம்போல் கேவலம் ஐஹிகஸுகத்தையே விளைப்பதான க்ருஹஸ்தாச்ர மத்தில் க்ரீடிக்கமுயன்று வானரம்போல் பிள்ளை பெண் டிர்களிடத்தில் மிகுந்த ப்ரீதிகொண்டு மைதுனத்தையே பெரிய உத்ஸவமாக நினைக்கின்றார்கள். இங்ஙனம் ஸம் ஸார மார்கத்தில் ஸுகம் துக்கம் முதலியவற்றை அனுப

வித்துக்கொண்டும்ருத்யுவாகிற யானையிடத்தில்பயந்து பர்வத குஹைபோல் எவ்விதத்திலும் கடக்கமுடியாத ரோகம் முதலிய ஆபத்தில் விழுந்து மீளவும் ஜீவித்திருப்பதற்குக் காரணமான கர்மமாகிற கொடியைப் பிடித்துக்கொண்டு அவ்வாபத்தினின்றுமிக்க ப்ரயாஸத்துடன் விடுபட்டு மீளவும் கீழ்ச்சொன்னபடியே இந்த ஸம்ஸாரமார்க்கத்தில் இருந்துகொண்டு தம்மைப் போன்ற ப்ராணிஸமூஹத்தையே தொடர்கின்றார்கள். லோகாந்தரத்திலுள்ள ஜீவஸமூஹமும் இங்ஙனமே இந்த்ரியங்களை அடக்கியாள முடியாமல் சப்தாதி விஷயங்களில் விழுந்து வருந்துகின்றது. மன்னவனே! முன்பு மறைத்துச் சொன்ன ஸம்ஸாரத்தின் கொடுமையையே விவரித்துச் சொன்னேன். ரஹூகணனுக்குப் பரதன் இங்ஙனம் ஆத்மபரமாத்ம ஸ்வரூபத்தையும் ஸம்ஸாரத்தினிழிவையும் உபதேசித்தான். இப்பரதனுடைய மஹிமையைப்பற்றி இங்ஙனம் பாடுகிறார்கள்:—"ருஷபமன்னவனுடைய குமாரனும் மஹானுபாவனுமாகிய பரதனென்னும் ராஜர்ஷியின் மஹிமை இத்தகையது. கருடனுடைய வேகத்தை ஈ அனுஸரிக்க முடியாதது போல், இம்மஹானுபாவனுடைய மஹிமையை மற்றொரு மன்னவன் கெஞ்சாலும் தொடர உரியவனல்லன். இந்த ருஷபகுமாரனாகிய ராஜர்ஷி பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவனாகி யௌவன வயதிலிருக்கும் பொழுதே மனத்திற்கினியர்களாகும் விட முடியாதவர்களாகுமான பெண்டிர்களையும் புதல்வர்களையும் கண்பர்களையும் ராஜ்யத்தையும் விஷ்டையைப்போல் துறந்தான். இம்மன்னவன் பூமண்டலத்தையும் பிள்ளைகளையும் பங்துக்களையும் பணத்தையும் பார்யையையும், தேவதைகளாலும் மனுஷ்யர்களாலும் ப்ரார்த்திக்கத் தகுந்த

வனும் தன்னிடத்தில் கருணைகடாக்ஷமுடையவனும் தன் கருணைகடாக்ஷத்தை எதிர்பார்க்கின்றவனுமாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும் துறந்து அவற்றில் சிறிதும் மன விருப்பமில்லாமலே யிருந்தான். இது யுக்தமே. ஏனெனில், பகவானுடைய ஸேவையில் அனுராகம் நிறைந்த மனத்தான பெரியோர்களுக்கு மோக்ஷமும் அற்பமாகவே தோன்றும். இனி இஹலோகபோகங்களை அவர்கள் ஒரு பொருளாக எப்படி நினைப்பார்கள்? இம் மன்னவன் மானுஷப்பிறந்திருக்கையில் அந்தமான்சரீரத்தைத் துறக்க முயன்ற ஸமயத்திலும் 'யஜ்ஞஸ்வரூபியும் ராமக்ருஷ்ணாதி அவதாரங்களால் வர்ணாஸ்ரம தர்மங்களைப் பாதுகாப்பவனும் தர்மத்தை அனுஸரிப்பவர்களைக் காப்பதில் வல்லமை அமைந்தவனும் ஆத்மஸ்வரூபத்தையும் தேஹஸ்வரூபத்தையும் முக்யமாக எடுத்துரைக்கிற ஸாங்க்யஶாஸ்த்ரத்தை வெளியிட்டவனும் பக்தியோகத்தினால் அறியத்தகுந்தவனும் ப்ரக்ருதிக்கு நியாமகனும் ஸமஸ்தசேதனாசேதனங்களைச் சரீரமாகவுடையவனும் தன்னைப்பற்றினருடைய ஸம்ஸாரபந்தத்தைப் போக்குந் தன்மையனுமாகிய பரமபுருஷனுக்கு நமஸ்காரம்' என்று மனோபாவத்துடன் மொழிந்தான்." இந்தப் பரதனென்னும் ராஜரிஷி பரிசுத்தமான செயலுடையவன். இவனது செயல்களைப் பகவானிடத்தில் பக்தியுடைய பெரியோர்கள் கொண்டாடுவார்கள். இவனது குணங்களும் அப்படிப்பட்டவைகளே. இவனுடைய சரித்ரம் புகழையும் மங்களத்தையும் ஆயுஸ்ஸையும் தனத்தையும் ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும். இதைக் கேட்கிறவனும் சொல்லுகிறவனும் இதைச் சொல்லுகிறவர்களையும் கேட்கிறவர்களையும் கண்டு ஸந்தோஷிக்கிறவனும் தாம் விரும்பும் விருப்பங்

கனயெல்லாம் தாமே பெறுவார்கள்; எதற்காகவும் பிறனை எதிர்பார்க்கமாட்டார்கள். பதிணன்காவது அத்யாயம் முற்றிற்று.

பரதனது வம்சத்தில் பிறந்த ராஜாக்களைக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—பரதனுக்கு ஸுமதியென்று சொல்லப்பட்ட ஓர் புதல்வன் உண்டு. அவன் ருஷபன் அனுஷ்டித்த யோகமார்க்கத்தை அனுஸரித்திருப்பதைக் கண்டு சில பாஷண்டிகள் வேதத்தில் சொல்லப்படாத புத்தனென்னும் தேவதையைக் கைப்பற்றி அத்தேவதையே இங்ஙனம் ஸுமதியாக அவதரித்தானென்று தமது பாபிஷ்ட புத்தியால் கற்பிக்கப் போகிறார்கள். அந்த ஸுமதிக்கு க்ருத்ரனனென்னும் பார்யையிடத்தில் தேவதாஜித்தென்னும் புதல்வன் உண்டானான். அவனுக்கு ஆஸுரியென்னும் பார்யையிடத்தில் தேவத்யும்னனென்னும் பிள்ளை பிறந்தான். அவனுக்குத் தனுமதி யென்பவளிடத்தில் பரமேஷ்டியென்னும் பிள்ளை பிறந்தான். அவனுக்கு ஸுவர்ச்சலையென்னும் பார்யையிடத்தில் ப்ரதீஹனென்னும் பிள்ளை பிறந்தான். இவன் பலர்க்கு ஆத்மவித்யையை உபதேசித்து அதனால் பரிசுத்தமான மனமுடையவனாகிப் பரமபுருஷனை உபாஸித்தான். ஸுவர்ச்சலையின் புதல்வனாகிய ப்ரதீஹனுக்கு ப்ரதிஹர்த்தா ப்ரஸ்தோதா உத்காதா என்னும் மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். அம்மூவரும் யாகானுஷ்டானத்தில் நிபுணராயிருந்தார்கள். அவர்களில் ப்ரதிஹர்த்தாவுக்கு ஸ்துதியென்னும் பார்யையிடத்தில் அஜன் பூமன் என்று இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். பூமனுக்கு ரிஷிகுல்யையென்னும்

பார்யையிடத்தில் உத்கீதனென்னும் பிள்ளை பிறந்தான். அவனுக்குத் தேவகுல்யையிடத்தில் ப்ரஸ்தாரனும், அவனுக்கு விகுத்ஸையிடத்தில் விபுவும், அவனுக்குப் பாரதியிடத்தில் ப்ருதுஷேணனும், அவனுக்கு ஆகூதியிடத்தில் நக்தனும், அவனுக்கு க்ருதியிடத்தில் நயனும் பிறந்தார்கள். அவன் ராஜரிஷிகளில் சிறந்தவன்; பெரும்புகழுடையவன்; ஜகத்தை ரக்ஷிக்கும் பொருட்டுச் சுத்த ஸத்வமயமான திருவுருவங்கொண்ட பகவானுடைய அம்சம்; மனச்சிறப்பு முதலிய அனையாளங்களால் மஹாபுருஷனுயிருந்தான். அவன் கர்மபலன்களை விரும்பாமல் ப்ரஜைகளைப் பயத்தினின்று காப்பது அவர்களை அன்னதானுதிகளால் ஸந்தோஷப்படுத்துவது பிள்ளைகளைப்போல் சீராட்டுவது துர்மார்க்கத்தினின்று தடுத்து நல்வழியில் நடத்துவது முதலிய தன் வர்ண தர்மத்தினையும் பஞ்சமஹா யஜ்ஞாதி கர்மங்களை அனுஷ்டிக்கையாகிற தன் ஆச்ரமதர்மத்தினையும் ஷாட்குண்ய பூர்ணனும் ஸ்வரூபத்தினையும் குணங்களாலும் எங்கும் நிறைந்தவனும் தலைமையுள்ள ப்ரஹ்மாதி தேவர்களுக்குந் தேவனும் மஹாபுருஷனுமாகிய ஸர்வேச்வரனிடத்தில் ஸர்வப்ரகாரத்தாலும் ஆத்ம ஸமர்ப்பணம் செய்கையாகிற முக்யமான அங்கத்தோடு கூடியதும் பரப்ரஹ்மத்தை அறிந்த பெரியோர்களின் பாதஸேவையால் விளைந்து வளர்ந்ததுமாகிய பகவத் பக்தியோகத்தினையும் மனமலங்களெல்லாம் தீர்ந்து மதி தெளியப்பெற்றுத் தேஹமே ஆத்மாவென்னும் ப்ரமத்தையும் துறந்து தனக்கு அந்தராத்மாவான பரமாத்மாவை ஸாக்ஷாத்கரித்துத் தேஹாத்மப்ரமம் ஸ்வதந்த்ராத்ம ப்ரமம் இவையில்லாமலே இந்தப் பூமியைப் பாதுகாத்து வந்தான். பரீக்ஷித்து மன்னவனே!

பெரியோர்கள் அவன் புகழை இங்ஙனம் பாடுகிறார்கள். 'எந்த மன்னவன் தான் கயனைச் செயல்களால் தொடர வல்லவனாவான்? அவன் வேதங்களில் விதிக்கப்பட்ட யஜ் ஞங்களை யெல்லாம் அனுஷ்டித்தவன்; அனைவராலும் வெகுமதிக்கத் தகுந்தவன்; பலபேரிடத்தில் பலவும் கேட்டுணர்ந்தவன்; வர்ணாஸ்ரம தர்மங்களைப் பாதுகாப் பவன். ஸ்ரீமஹாலக்ஷ்மி அவனை விடாமல் தொடர்ந்திருந் தாள். அவன் ஸத்புருஷர்களின் ஸபைக்குத் தலைவன்; அவர்களைப் பணியுந்தன்மையன். பகவானுடைய அம்ச மாகிய கயனைத் தவிர மற்ற எவன் இத்தகைய குணங் கள் அமைந்தவன்? எவனுமே இல்லை. நல்லியற்கையுடை யவரும் பொய்யாகாத ஆசீர்வாதங்களை அளிக்குந் திறமை யுடையவருமாகிய தக்ஷகன்னிகைகள் தம் முடைய தேஜஸ்ஸுக்களால் இவனை அபிஷேகம் செய் தார்கள். (சிறக்கச் செய்தார்கள்.) பூமியாகிற பசு இவ னுடைய குணங்களாகிற கன்றிடத்தில் ப்ரீதியால் பால் சுரந்த மடியுடையதாகி, அவன் எதையும் அபேக்ஷிக்கா திருப்பினும் அவனது ப்ரஜைகளின் விருப்பங்களையெல் லாம் கறந்தது. வேதங்களும் வேதங்களில் சொல்லப் பட்ட யஜ்ஞாதி கர்மங்களும் எதையும் விரும்பாத அம் மன்னவனுக்குப் பற்பல காமங்களைக் கறந்தன. சத்ரு ராஜாக்கள் யுத்தத்தில் அவனுடைய பாணங்களால் பூஜிக்கப்பட்டுக் கப்பங்களைக் கொண்டுவந்து கொடுத் தார்கள். ப்ராஹ்மணர்கள், அம்மன்னவனால் தர்மந்தவ றாமல் பாதுகாக்கையாலும் தக்ஷிணைகளாலும் பூஜிக் கப்பட்டுப் பரலோகத்தில் அனுபவிக்கக் கூடிய தமது தர்ம பலன்களின் ஆறில் ஒரு பாகத்தை அவனுக்குக் கொடுத்தார்கள். இந்தக் கயனுடைய யஜ்ஞத்தில் இந்த்ரன் நிரம்பவும் ஸோமபானம் செய்து மதித்திருக்

கையில், யஜ்ஞஸ்வரூபியாகிய பகவான் ஸ்ரத்தையால் பரி சுத்தமாயிருப்பதும் இடையூறுகளால் தடைபடாததுமாகிய பக்தியோகத்தினல் ஸமர்ப்பிக்கப்பட்ட ப்ரீதியாகிற யாகபலனைத் தானே நேரில் வந்து பெற்றுக்கொண்டான். யாகத்தில் பகவான் களிப்புறுவாணுயின் ப்ரஹ்மதேவன் முதற்கொண்டு தேவர் திர்யக்கு மனுஷ்யர் கொடிபுல் வரையிலுள்ள ஸமஸ்தமான ஜகத்தும் அப்பொழுதே களிப்புறும். ஜகத்திற்கெல்லாம் ப்ராணன் போன்ற அப்பகவான் கயமன்னவனிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவனுகி அவனுடைய ப்ரீதியை அங்கீகரித்தான். கயனுக்கு ஜயத்தியிடத்தில் சித்ரரதன் ஸ்வரதி அவரோதனன் என்று மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் சித்ரரதனுக்கு ஊர்ஜையிடத்தில் ஸம்ராட்டென்பவன் பிறந்தான். அவனுக்கு உத்கலையிடத்தில் மரீசியும், அவனுக்குப் பித்துமதியிடத்தில்பித்துமானென்பவனும், அவனுக்கு ஸுஷேணையிடத்தில் மதுவும், மதுவுக்கு ஸுமனஸ்ஸென்பவனிடத்தில் வீரவ்ரதனும், அவனுக்கு ப்ரதோரணையிடத்தில் மதுப்ரமது என்னும் இரண்டு பிள்ளைகளும், அவர்களில் மதுவுக்கு ஸத்யையிடத்தில் பௌமனனும், அவனுக்கு தாஷணையிடத்தில் த்வஷ்டாவும், அவனுக்கு விரோசனையிடத்தில் விரஜனும், அவனுக்கு விஷூசியிடத்தில் சதஜித்து முதலிய நூறு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். இதுவே ப்ரியவ்ரதனுடைய வம்சத்தின் வரலாறு. இதைப்பற்றி இங்ஙனம் சொல்லுகிறார்கள். 'ஸ்ரீமஹாவிஷ்ணு தேவர் கூட்டத்தை அலங்கரிப்பது போல், நூறு பிள்ளைகளைப் பெற்ற இவ்விரஜன் இந்த ப்ரியவ்ரத வம்சத்தைத் தன் கீர்த்தியால் மிகவும் அலங்கரித்தான்'. பதினைந்தாவது அத்யாயம் முற்றிற்று.

மேருவின் நிலைமையைக் கூறுதல்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—ஸூர்யன் எது வரையில் வெயில் காய்கிறானே, சந்த்ரன் நக்ஷத்ரங்களோடு எதுவரையில் புலப்படுகிறானே, அதுவரையிலுள்ள பூமண்டலத்தின் விஸ்தார விசேஷத்தை மொழிந்தீர். அதிலும் ப்ரியவ்ரு தனுடைய தேர்சக்ரம் படிந்த பள்ளங்களால் ஏழு ஸமுத்ரங்கள் ஏற்பட்டதையும், அவற்றால் இப்பூமியில் ஏழு தீவுகள் ஏற்பட்டதையும் ஸங்க்ஷேபமாகச் சொன்னீர். இவற்றின் அளவையும் அடையாளத்தையும் எனக்குச் சொல்வீராக. ஸத்வாதி குணங்களின் பரிணாமமான இந்த ஜகத்தெல்லாம் பகவானுடைய ஸ்தூல ரூபமென்றும் அதில் மனத்தைச் செலுத்தி அனுஸந்தித்தால் ஸத்வாதி குணங்களின் ஸம்பந்தமின்றிச் சுத்த ஸத்வமயமாயிருப்பதும் ஸ்வயம் ப்ரகாசமும் பரப்ரஹ்மம் பகவான் வாஸுதேவன் இவை முதலிய சப்தங்களால் கூறப்படுவதுமாகிய பரமாத்மாவின் ஸூக்ஷ்ம ரூபத்தில் அம்மனம் ஸுகமாகப் பற்றுமென்றும் சொன்னீர். அஜ்ஞானந்தகாரத்தைப் போக்கும் குருவே! ஆகையால் பகவானுடைய ஸ்தூல ரூபமான இப்பூமண்டலத்தின் அளவு முதலியவற்றை அறிய விரும்புகிற எனக்கு அவற்றை விவரித்து மொழியவேண்டும்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஓ மஹாராஜனே! ஒருவன் தேவதைகளைப்போல் நீண்ட ஆயுளுடையவனாயினும் பகவானுடைய லீலாவிபூதியிலுள்ள ஸ்தான விசேஷங்களின் ஸ்வரூபத்தையும் பேரையும் முழுவதும் வாயால் சொல்லவாவது மனத்தினால் நினைக்கவாவது வல்லனாகமாட்டான். ஆகையால் முக்யமான பூகோள

விசேஷத்தின் ஸ்வரூபத்தையும் பேரையும் அடையாளத்தையும் சொல்லுகிறோம். த்வீபங்களில் ப்ரஸித்தமான இந்த ஜம்பூத்வீபம் பூமண்டலமாகிற தாமரை மலரின் இதழ் வட்டங்கள்போன்ற த்வீபங்களில் உள்ளிதழ் வட்டம் போன்றிருக்கும்; லக்ஷயோஜன விஸ்தார முடையது; தாமரை யிலைபோல் ஏற்றக்குறைவின்றி வட்டமாயிருக்கும், இதில் ஒன்பது வர்ஷங்கள் (கண்டங்கள்) உண்டு. ஒவ்வொன்றும் ஒன்பதினாயிர யோஜன விஸ்தாரமுடையது. இவ்வொன்பது வர்ஷங்களும் எல்லையை அறிவிக்கிற எட்டுக்குலபர்வதங்களால் தனித்தனியே பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் இலாவ்ருதமென்னும் வர்ஷம் இடையில் இருக்கின்றது. குலபர்வதங்களில் தலைமையுள்ள மேருபர்வதம் இதினிடையில் இருக்கின்றது; ஜம்பூத்வீபத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவோ அவ்வளவு (லக்ஷயோஜன) உயரமுடையது; இப்பூமண்டலமாகிற கமலத்திற்குக் கர்ணிகை போலிருக்கும். அம்மேருவின் முடி முப்பத்திரண்டு யோஜன விஸ்தாரமுடையது. அதன் அடி பதினாயிரம் யோஜனையுடையது; பதினாயிரம் யோஜன பூமிக்குள் மறைத்திருக்கின்றது. இலாவ்ருதவர்ஷத்திற்கு வடபாகத்தில் வரிசையாக நீலம் ச்வேதம் ச்ருங்கவான் என்னும் மூன்று மலைகள் இருக்கின்றன. அவை ரம்யகம் ஹிரண்மயம் குரு என்னும் வர்ஷங்களுக்கு எல்லைப் பர்வதங்கள். அவை மூன்றும் கிழக்கே நீண்டிருப்பவை; இருபுறத்திலும் லவண ஸமுத்ரத்தை எல்லையாகவுடையவை. ஒவ்வொன்றும் இரண்டாயிரம் யோஜன விஸ்தீர்ணமுடையது. ஒன்றை விட ஒன்று நீட்சியில் மாத்ரம் பத்து மடங்குக்குமேல் குறைந்திருக்கும். இங்ஙனமே இலாவ்ருத வர்ஷத்திற்குத் தென்பாகத்தில் நிஷதம்

ஹேமகூடம் ஹிமாலயம் என்று மூன்று மலைகள் இருக்கின்றன. இவையும் கிழக்கே நீண்டிருப்பவை. நீலம் முதலிய வடக்கு மலைகளைப் போலவே இரண்டாயிரம் யோஜனை விஸ்தீர்ணமும் பதினாயிரம் யோஜனை உயரமு முடையவை. இவை ஹரிவர்ஷம் கிம்புருஷவர்ஷம் பாரத வர்ஷம் இவைகளுக்கு எல்லைப் பர்வதங்கள். அங்ஙனமே இலாவ்ருத வர்ஷத்திற்கு மேல்பாகத்தில் மால்யவா னென்றும் கீழ்ப்பாகத்தில் கந்தமாதனமென்றும் இரண்டு மலைகள் இருக்கின்றன. இவையிரண்டும் வடக் கில் நீலபர்வதம் வரையிலும் தெற்கில் நிஷதபர்வதம் வரையிலும் நீண்டிருப்பவை. இரண்டாயிரம் யோஜனை விஸ்தீர்ண முடையவை. இவை கேதுமாலம் பத்ராஸ் வம் என்னும் வர்ஷங்களுக்கு எல்லைப்பர்வதங்கள். மந் தரம் மேருமந்தரம் ஸுபார்ச்வம் குமுதம் என்னும் நான்குமலைகள் மேருவுக்கு நான்கு புறங்களிலும் அரை நாண்மாலைபோல் சுற்றிக்கொண்டிருக்கின்றன. இவை பதினாயிரம் யோஜனை விஸ்தீர்ணமும் உயரமுமுடை யவை. அவற்றுள் மந்தரபர்வதத்தில் மேலான மாமர மும், மேருமந்தர பர்வதத்தில் சிறந்த காவல்மரமும், ஸுபார்ச்வ பர்வதத்தில் ச்லாக்யமான கடப்ப மரமும், குமுத பர்வதத்தில் ச்ரேஷ்டமான ஆல மரமும் அம்மலை களுக்கு த்வஜங்கள்போல் ஏற்பட்டிருக்கின்றன. அவை நான்கும் ஆயிரத்து நூறுயோஜனை உயரமும் அவ் வளவு விஸ்தீர்ணமு முடையவை. அங்ஙனமே மந்தரத் தில் பால் மதுவும், மேருமந்தரத்தில் தேன் மதுவும், ஸுபார்ச்வத்தில் கருப்பஞ்சாற்று மதுவும், குமுதத்தில் சுத்தஜல மதுவும், ஆக நான்கு மதுக்கள் இருக்கின்றன. பரதச்ரேஷ்டனே! இம்மதுக்களில் ஸ்நானபானாதிகளைச் செய்யும் கந்தர்வர்கள் இயற்கையாகவே அணிமாதி

யோகைஸ்வர்யங்களைத் தரித்துக்கொண்டிருக்கின்றனர். நந்தனம் சைத்ரரதம் வைப்ராஜகம் விஸ்வதோபத்ரம் என்று நான்கு தேவோத்யானங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் சிறப்புடைய தேவதைகள் கந்தர்வர்களால் பாடப்பட்ட மஹிமையுடையவர்களாகி அப்ஸரஸ்த்ரீகளுடன் விளையாடிக்கொண்டிருப்பார்கள். மந்தரமலையின் தாழ்வரையில் பதினொரு யோஜனை உயரமுடைய தெய்வமாமரத்தின் நுனியினின்று பர்வத சிகரம்போல் பருத்து அம்ருதம்போல் ருசியுடைய பழங்கள் பழுத்து விழுகின்றன. அங்ஙனம் கீழ் விழுந்துடைகின்ற மாம்பழங்களின் ரஸம் மிக்க மதுரமும் இயற்கை வாஸனையோடு மற்ற வாஸனை வஸ்துக்களின் பரிமளத்தினால் மிகுந்த வாஸனையுடையதும் சிவந்த நிறமுடையதுமாகி அருணோதை யென்னும் நதியென்று பேர் பெற்று மந்தரபர்வதத்தின் சிகரத்தினின்று பெருகி இலாவ்ருதவர்ஷத்தின் கீழ்ப்பாகத்தில் பாய்கின்றது. இந்நதியின் ஜலத்தைப் பானம் செய்வதனால் நன்மனமுடைய பார்வதியின் தாஸிகளுடைய சரீரத்திலும் புண்ய ஜனஸ்த்ரீகளின் சரீரத்திலும் பட்டு மிக்க பரிமளத்துடன் வீசுங்காற்று நாற்புறத்திலும் பத்து யோஜனை தூரம் ஸுகந்தமாகச் செய்கின்றது. மேரு மந்தர பர்வதத்திலுள்ள நாவல்மரத்தின் பழங்கள் யானையினுடல்போல் பருத்து மிகவும் ஸுக்ஷ்மமான கொட்டைகளை உடையவைகளாயிருக்கும். வெகுதூரத்தினின்று கீழ்விழுகையினால் உடைந்த அந்த நாவற்பழங்களின் ரஸம் ஜம்பூநதி யென்று பேர்பெற்றுப் பதினாயிரம் யோஜனை உயரமுடைய அம்மேருமந்தரத்தின் சிகரத்தினின்று பூமியில் விழுந்து இலாவ்ருதவர்ஷத்தின் தென்பாகத்தில் பாய்கின்றது. அந்நதி எவ்வளவு

தூரம் பாய்கின்றதோ அவ்வளவும் இரண்டு கரைகளி லுமுள்ள மண்ணெல்லாம் அந்தியின் ஜலம் பட்டு கனைந்து காற்றும் வெயிலும் படுவதால் ஒரு விதமான பரிணமத்தை அடைந்து ஜாம்பூநதமென்ற ஸுவர்ண மாகித் தேவலோகத்திலுள்ளவர்களுக்கு ஆபரணத் திற்கு உபயோகப்படுகின்றது. தேவஜாதியில் சேர்ந்த வர்களனைவரும் அவரது மடந்தையர்களும் இந்த ஸுவர்ணத்தை எடுத்துக் கிரீடம் கைவளை அரைஞாண் மாலை முதலிய ஆபரணங்களாகச் செய்து தரிக்கிறார் கள். ஸுபார்ச்வமலையில் முளைத்திருக்கின்ற பெரிய கடப்பமரத்தின் பொந்துக்களினின்று ஐந்துமார்பகல முடைய தேன்தாரைகள் பெருகி ஸுபார்ச்வமலையின் சிகரத்தினின்று விழுந்து இலாவ்ருதவர்ஷத்தின் மேற் குப்பாகத்தில் நன்மணத்துடன் பாய்கின்றது. அவ்விடத் தில் வீசுங்காற்று அத்தேன் தாரைகளைப் பருகுஞ்ஜனங் களின் முகவாஸனையால் பரிமளமுடையதாகி காற்புறத் திலும் நூறு யோஜனைதூரம் பரிமளிக்கச் செய்கின்றது. குமுதமலையில் முளைத்திருக்கும் ஆலமரம் சதவலிச மென்னும் பேருடையது. அம்மரத்தின் கிளைகளி னின்று பால் தயிர் நெய் தேன் வெல்லம் அன்னம் முத லியவைகளும் ஆடை படுக்கை ஆஸனம் ஆபரணம் முதலியவைகளுமாகிய ஸமஸ்தமான விருப்பங்களையும் கறக்கவல்ல நதங்கள் கீழ்முகமாய்ப் பெருகிக் குமுத மலையினின்று இலாவ்ருதவர்ஷத்திற்கு வடபாகத்தில் பாய்ந்து. அங்குள்ளவர்களைக் களிக்கச் செய்கின்றன. இவற்றின் ஜலத்தை உபயோகப்படுத்தும் ப்ரஜைகளுக் குச் சரதச் சுருக்கம் மயிர்கரைத்தல் இளைப்பு வேர்வை துற்நாற்றம் கிழத்தனம் மரணம் வ்யாதி அபம்ருத்யு குளிர் வெப்பம் நிறம்மாறுதல் இவைகளும் ஸுகம் துக்

கம் ராகம் த்வேஷம் முதலிய உபஸர்க்கங்களும் மற்று முள்ள எவ்வகை உபத்ரவங்களும் ஒருகாலும் உண்டா கிறதில்லை. ஜீவித்திருக்கும் வரையில் மேலான ஸுகத் தையே அனுபவிப்பார்கள். குரங்கம் குரரம் குஸும்பம் வைகங்கதம் த்ரிகூடம் சிசிரம் பதங்கம் ருசகம் நிஷதம் ஸிதிவாஸம் கபிலம் சங்கம் வைடூர்யம் ஜாருதி விஹங் கம் ஹம்ஸம் ருஷபம் நாகம் காலஞ்சரம் நாரதம் முத லிய பர்வதங்கள். தாமரைக்காய் போன்ற மேருவின் அடிப்பாகத்தில் தாதுகள்போல் அதைச்சுற்றி ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. இவை கேஸர பர்வதங் களென்று கூறப்படுகின்றன. மேருவுக்குக் கீழண்டையில் அதனடிவாரத்தினின்று ஆயிரம் யோஜனை தூரத் திற்கு அப்புறத்தில் ஜடரமென்றும் தேவகூட மென் றும் இரண்டு பர்வதங்கள் இருக்கின்றன. அவை வடக்கில் பதினெண்ணாயிரம் யோஜனை நீண்டு இரண் டாயிரம் யோஜனை அகலமும் அவ்வளவு உயரமுமுடை யவை. இங்ஙனமே அம்மேருவுக்கு மேலண்டையில் பவணமென்றும் பாரியாத்ரமென்றும் இரண்டு பர்வதங் கள் இருக்கின்றன. அவை கிழக்கே நீண்டவை. ஜடர தேவகூடங்களைப் போலவே நீளமும் அகலமும் உயரமு முடையவை. அம்மேருவின் தென்னண்டையில் த்ரிஸ் ருங்கமென்றும் மகரமென்றும் இரண்டு பர்வதங்கள் இருக்கின்றன. இங்ஙனம் எட்டுப் பர்வதங்களால் சூழப் பட்ட மேரு பர்வதம் தர்ப்பங்களால் சூழப்பட்ட அக்னி போல் காற்புறத்திலும் திகழ்கின்றது. மேருவின் முடி வில் மத்யத்தில் ப்ரஹ்மாவின் பட்டணம் சாதகௌம்பி யென்று பேர்பெற்றுப் பதிணாயிரம் யோஜனை விஸ்தார முடையதும் சதுரமுமாயிருக்குமென்று சொல்லுகிறார் கள். அந்தப் பட்டணத்தைச் சுற்றிக் கிழக்கு முத

வில எட்டுத் திக்குகளில் இந்த்ரன் முதலான லோக பாலர்களின் பட்டணங்கள் எட்டும் ஏற்பட்டிருக்கின் றன. அவை ஒவ்வொன்றும் இரண்டாயிரத்தைந்நூறு யோஜனை விஸ்தாரமுடையவை. அமராவதி தேஜோ வதி ஸம்யமனி க்ருஷ்ணாங்கனை ஸ்ரத்தாவதி கந்தவதி மஹோதயை யசோவதி என்று பேர்பெற்றவை. பதி னாறாவது அத்யாயம் முற்றிற்று.

{ கங்கை பூமியில் இறங்கி வருதலும், இலா வ்ருதவர்ஷத்தில் ருத்ரன் ஸங்கர் ஷணபகவானை ஆராதித்தலும். }

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஷாட்குண்ய பூர்ணனும் யஜ்ஞமூர்த்தியும் வாமனரூபியுமான ஸ்ரீமஹாவிஷ்ணு மூன்று லோகங்களையும் மூன்று அடிகளால் அளக்கும் பொழுது அந்தப் பகவானுடைய இடக்கால் கட்டை விரல் நகத்தினால் அண்டகடாஹம் பிளவுண்டு அந்த த்வாரத்தினால் அதற்கு வெளியிலுள்ள ஆவரண ஜலத் தின் தாரை உள்ளேநுழைந்து நெடுங்காலமாய் விஷ்ணு பதமென்று கூறப்படுகிற த்யுலோகத்தின் நுனியில் இறங்கியிருந்தது. அந்தப் பகவானுடைய பாதாரவிந் தங்களை அலம்புகையால் அப்பாதாரவிந்தங்களின் செவ் விய தாதுகள் போன்ற குங்குமக்குழம்பு பட்டு அந்த ஜலம் சிவந்திருக்கும். அது, தன்னைத் தொடுகிறவர் களின் ஸமஸ்த பாபங்களையும் போக்கும் திறமையுடை யது; ஆயினும் அந்தப் பாபம் தன்மேல் தீண்டப் பெறு மல் பரிசுத்தமாயிருக்கும். அந்த ஜலமே பூமியில் இறங் கின பின்பு ஜாஹ்னவி யென்றும் பாகீரதி யென்றும் பல பேர்களைப் பெற்றது. அதுவே கங்கை. அது பூமியில் இறங்குவதற்கு முன்பு வேறு நாமங்களையுமின்றிக்

கேவலம் பகவத்பதியென்றே கூறப்பட்டிருந்தது. அந்த த்யுலோகத்தில் நினைத்தபடியே கடத்தும்படியான மன உறுதியுடையவனும் உத்தானபாதனது புதல்வனுமாகிய த்ருவன் க்ஷணக்தோறும் வளர்கின்ற பகவத் பக்தியோகத்திலில் மிகவும் மனம் உருகப்பெற்று ப்ரீதியின் மிகுதியால் மெய்ம்மறந்து மொட்டுக்கள் போன்ற கண்களை மூடிக்கொண்டு ஆநந்த நீர் பெருக்கி உடம்பெல்லாம் மயிர்க்கூச்சம் நிறைந்து 'இது கங்குல தேவதையான பகவானுடைய பாதாரவிந்தத்தினின்று பெருகின புண்யதீர்த்தம்' என்னும் கௌரவத்துடன் அந்தக் கங்காஜலத்தை மூன்று ஸந்திகளிலும் இப்பொழுதும் சிரஸ்ஸில் தரித்துக்கொண்டிருக்கிறான். ஆகையால் ஸப்தரிஷிகள் அந்தக் கங்காஜலத்தின் ப்ரபாவத்தை அறிந்து 'தவத்தின் ஸித்தியாவது இந்த விஷ்ணுபதியின் ஸேவையே. இவ்வளவே யன்றி இதற்கு மேற்பட்டதில்லை' என்று நினைத்து, ஸர்வாந்தராத்மாவான வாஸுதேவ பகவானிடத்தில் மாறுத பக்தியோகம் உண்டாகப்பெற்று அர்த்தகாமாதியான மற்ற புருஷார்த்தங்களையும் கேவலமான ஆத்மஸ்வரூபத்தை அநுபவிக்கையாகிற கைவல்யத்தையும் உபேக்ஷித்து மோக்ஷத்தில் விருப்பமுடையவர் ஸித்தமாய் கேரிட்டிருக்கும் மோக்ஷத்தை வெகுமதிப்பதுபோல் வெகுமதித்து இப்பொழுதும் அந்தக் கங்காஜலத்தைத் தமது ஜடாபாரத்தினால் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஜலம் அவ்விடத்தினின்று அனேக மாயிரங் கோடி விமானங்கள் நிறைந்த ஆகாசமார்க்கத்தினால் கீழே இறங்கிச் சந்த்ரமண்டலத்தை நனைத்து அதினின்று மேருபர்வதத்தின் சிகரத்திலுள்ள ப்ரஹ்மாவின் ஸ்தானத்தில் வந்து விழுகின்றது. அவ்விடத்தில்

நான்கு வகையாகப் பிரிந்து ஸீதை அலகநந்தை சக்ஷு பத்ரை என்று நான்குபேர்களைப் பெற்று நான்கு திசை களில் பாய்ந்து ஸமுத்ரத்தில் போய் விழுகின்றது. அந் நான்கு ப்ரவாஹங்களில் ஸீதையென்னும் ப்ரவாஹம் ப்ரஹ்மஸதனத்தினின்று கிழக்கு முகமாய்ப் பெருகி கைலாஸம் அவஷ்டம்பம் முதலிய பர்வதங்களின் சிகரங் களில் விழுந்து அவற்றினின்று குமுதம் குகுரம் முதலிய பர்வதங்களின் சிகரங்களைக் கடந்து கீழ்ப் பாய்ந்து கந்தமாதனபர்வதத்தின் சிகரங்களில் விழுந்து பத்ராச்வ வர்ஷத்தினிடையில் பெருகிக் கிழக்குத் திக்கிலுள்ள லவண ஸமுத்ரத்தில் போய் விழுகின்றது. அங்ஙனமே அலகநந்தையென்னும் ப்ரவாஹம் ப்ரஹ்ம ஸதனத்தினின்று தெற்கு முகமாய்ப்பெருகிப் பல பர்வத சிகரங்களைக் கடந்து ஹேமகூடம் ஹிமாலயம் இப் பர்வதங்களின் சிகரங்களில் சிறிதும் தடைபடாத பெருவேகத்துடன் பாய்ந்து பாரதவர்ஷத்தில் நிரம்ப வும் பெருகித் தென் திசையிலுள்ள லவண ஸமுத்ரத் தில் போய்ச் சேருகின்றது. இங்ஙனமே சக்ஷுவென் னும் ப்ரவாஹம் மேற்கு முகமாய் மால்யவானென்னும் மலையின் சிகரத்தில் பாய்ந்து அதினின்று கீழ் விழுந்து வேகம் குறையாமல் கேதுமால வர்ஷத்தினிடையில் பெருகி மேற்கு ஸமுத்ரத்தில் போய் விழுகின்றது. பத்ரையென்னும் ப்ரவாஹம் மேரு சிகரத்தினின்று வடக்கு முகமாய்ப் பாய்ந்து குமுத பர்வத்தின் சிகரத் தில் விழுந்து அதினின்று மேல்நோக்கி நீல பர்வதத் தின் சிகரத்தில் சேர்ந்து அதினின்று கிளம்பி ச்வேத பர்வதத்தின் சிகரத்தைத் தொடாமலே ச்ருங்கவா னென்கிற பர்வதத்தில் விழுந்து அதினின்று கீழ்நோக்கி உத்தர குருதேசங்களில் பாய்ந்து வடதிசையிலுள்ள

லவண ஸமுத்ரத்தில் போய்ச் சேருகின்றது. மேரு முதலிய பர்வதங்களினின்று பெருகி வருகின்ற மற்றும் பலவகை நதங்களும் நதிகளும் வர்ஷந்தோறும் அனேக மாயிரம் இருக்கின்றன. இந்த ஜம்பூத்வீபத்திலும் பாரதவர்ஷமே கர்ம க்ஷேத்ரமாம். மற்ற எட்டு வர்ஷங்களும் புண்யவசத்தினால் ஸ்வர்க்க லோக போகங்களை அனுபவிப்பவர்கள் புண்யம் கழிந்த பின்பு கீழே விழுந்து புண்யசேஷத்தின் பலனை அனுபவிப்பதற்காக ஏற்பட்ட ஸ்தானங்களாம். அவற்றைப் பூமி ஸ்வர்க்கங்களென்று வழங்குகிறார்கள். அவ்வர்ஷங்களிலுள்ள புருஷர்கள் புருஷனுடைய வாழ்நாளைப் போன்ற பதினாயிரம் வாழ்நாள் வர்ஷங்களையுடையவர்கள்; தேவதைகளோடொத்தவர்கள்; பதினாயிரம் யானைப் பலமுடையவர்கள். அவர்களுடைய சரீரம் வஜ்ராயுதம்போல் திடமாயிருக்கும். அவர்கள் பார்யைகளும் அத்தகைய சரீரமுடையவர்களே. ஸ்த்ரீகளும் புருஷர்களும் பலம் வயது ஆகாரம் இவைகளால் எப்பொழுதும் களிப்புற்றிருப்பார்கள்; நெடுநாள் ஓரே தாரையாய் ஸுரத ஸுகத்தை அனுபவிக்குந் தன்மையுடையவர்கள். ஸ்த்ரீகள் ஸம்போகாவஸானத்தில் ஆயுள் ஒரு வர்ஷம் மிகுந்திருக்கும்பொழுது ஒரு கர்ப்பந்தரிப்பார்கள். அவ்வர்ஷங்களில் தேவஸ்ரேஷ்டர்கள் தத்தமது லோகக் கூட்டத்தலைவர்களால் சிறந்த உபசாரங்கள் செய்யப் பெற்று எல்லா ருதுக்களிலும் உண்டாகக்கூடிய பூங்கொத்துகளும் பழங்களும் காய்களும் தளிர்களும் நிறைந்து அவற்றின் நிறைவினால் மிகுதியும் வணங்கின கிளைகளும் கொடிகளும் அமைந்த வ்ருக்ஷங்களால் விளக்கமுற்ற அழகிய வனங்களிலும் ஆஸ்ரமங்களிலும் பெரிய கட்டடங்களிலும் பலவகைத் தாமரைமலர்கள்

மலர்ந்து அவற்றின் வாஸனையால் மனக்களிப்புற்ற ராஜ ஹம்ஸங்களும் நீர்க்கோழிகளும் நீர்க்காகங்களும் ஸாரஸப்பறவைகளும் சக்ரவாகங்களும் மற்றும் பல வகைப்பறவைகளும் பலவகை வண்டுகளும் கூட்டங் கூட்டமாய்க் கூவப்பெற்று மிகவும் அழகான தாமரைக் குளங்களிலும் அப்ஸரமடந்தையர்களின் காம விலாஸங்களாலும் புன்னகை அமைந்த கண்ணோக்கங்களாலும் மனமும் கண்களும் பறியுண்டு ஜலக்ரீடை முதலிய விளையாடல்களால் மனம் போனபடியெல்லாம் விளையாடிக்கொண்டிருப்பார்கள். இலாவ்ருதம் முதலிய ஒன்பது வர்ஷங்களிலும் அந்தந்த வர்ஷத்திற்கு காதாரகிய மஹா புருஷர்களால் ஆராதிக்கப்பட்டு அவர்களை அனுக்ரஹிக்கும்பொருட்டுக் கல்யாண குணங்கள் நிறைந்திருப்பதும் ஜீவாத்மாக்களுக்குச் சிந்திக்க முடியாததுமாகிய திவ்ய மங்கள விக்ரஹத்துடன் பகவான் இப்பொழுது ஸந்நிதானம் செய்கின்றான். இலாவ்ருத வர்ஷத்தில் மஹாநுபாவனாகிய ருத்ரன் ஒரு புருஷனே வஸிக்கின்றான். மற்றொரு புருஷனும் அதற்குள் நுழைகிறதில்லை. அதில் நுழையும் புருஷன் பெண்ணாய் விடுவான். பார்வதி அதற்கு அங்ஙனம் சாபங் கொடுத்திருக்கிறாள். ஒருவன் சாபம் உண்டென்பதை அறியாமல் நுழைவானாயின் அவனுக்கும் அது அங்ஙனமே பலித்துவிடும். அவ்விஷயத்தை மேல் விவரித்துச் சொல்லுகிறோம். அவ்விடத்தில் ருத்ரன் பார்வதியை ப்ரபுவாகவுடைய பலவாயிரம் மடந்தையர்களால் பணியப்பெற்று வாஸுதேவன் ப்ரத்யும்னன் அநிருத்தன் ஸங்கர்ஷணன் என்னும் நான்கு மூர்த்திகளையுடைய பரமபுருஷனுடைய ப்ரக்ருதியை அதிஷ்டானம் செய்கின்ற நான்காவதான ஸங்கர்ஷண மூர்த்தியை த்யான

யோகத்திரல் ஸாக்ஷாத்கரித்து 'ஓம். மஹாபுருஷ ரும் வாஸுதேவனென்று கூறப்படுகின்றவரும் வேதங் களால் மொழியப்பட்ட ஸமஸ்த கல்யாண குணங்க ளுடையவரும் அளவிட முடியாதவரும் இந்திரியங்க ளால் அறிய முடியாதவருமாகிய பகவானுக்கு நமஸ் காரம்' என்று சொல்லி 'மீளவும் பரம புருஷா! அனைவ ராலும் பணியத்தகுந்தவனே! பக்தர்களுக்கு ரக்ஷக மான பாதாரவிந்தங்களையுடையவரும் ஞானம் சக்தி முதலிய ஆறுகுணங்களுக்கும் முக்ய ஸ்தானமும் ஜகத் காரணமான தன்னுருவத்தைத் தன் பக்தர்களுக்கு வெளியிடுகின்றவரும் தன்னைப் பணிகிறவர்களுடைய ஸம்ஸாரபந்தத்தைப்போக்கும் தன்மையரும் பணியா தவர்களுக்கு ஸம்ஸாரத்தை வளரச் செய்பவரும் ஸர்வேச்வரருமாகிய உன்னைப் பணிகின்றேன். கோப வேகத்தை அடக்காத நமது ஜ்ஞானம்போல், ஸ்வய மாகவே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கின்ற ஸர்வேச் வரனுடைய ஜ்ஞானம் ப்ரக்ருதியின் குணங்களான ராக த்வேஷாதிகளால் சிறிதும் தீண்டப்படுகிறதில்லை. ஸம் ஸாரத்தை வெல்ல விரும்புவானையின், எவன் தான் அந்த ஸர்வேச்வரனை உபாஸிக்கமாட்டான்? ப்ரக்ருதி யின் பரிணாமமான தேஹத்தையே ஆத்மாவாக அபி மானிக்கின்ற மூடஜனங்களுக்கு அஜ்ஞானத்திரல், நீ மதிமயக்கத்தை விளக்கும் மத்யத்திரல் சிவந்த கண் களையுடைய மதித்தவன்போல் தோற்றுகின்றனை. வாஸ் தவத்தில் நீ சுத்த ஸத்வமயமான திவ்யமங்கள விக் ரஹமுடையவன். நாக கன்னிகைகள் உனது பாதார விந்தங்களை ஸ்பர்சித்துக் காம விகாரத்திரல் மனக் கலக்கமுற்று வெட்கத்திரல் உன்னைப் பூஜிக்கவல்லமை யற்றிருந்தார்கள். வேதாந்தங்கள் உன்னைச் சேதனை

சேதனரூபமான இந்த ஜகத்திணுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணனென்று மொழி கின்றனை. நீ ஜகத்காரணணுயினும் ஸத்வராஜஸ்தமோ குணங்களுக்கு உட்பட்டவனல்லை. நீ ஸ்வரூபத்திணும் ஸ்வபாவத்திணும் தேசகால வஸ்து பரிச்சேதமில் லாதவன். ஆயிரம் படங்களையுடைய உன் சிரஸ்ஸி னிடையில் ஓரிடத்தில் கடுகுபோலிருக்கின்ற பூமண்ட லத்தை நீ ஒரு பாரமாக கினைக்காமல் தரிக்கின்றனை. சரீரங்களிலுள்ள மஹத்தத்வதத்திற்கு அபிமானியும் ஜகத்தைப் படைக்கை முதலியவற்றிற்கு வேண்டிய ஜ்ஞானமுடையவனும் ருத்ராதிகளைக் காட்டிலும் முதல்வனும் மஹாணுபாவனுமாகிய ப்ரஹ்மதேவன் உன்னிடத்தினின்று உண்டானனன். தேவமனுஷ்யாதி தேஹங்களில் நீ கொடுத்த ஜ்ஞானத்திணல் ஸாத்விகம் தாமஸம் ராஜஸமென்று மூன்று வகை அஹங்காரங்களை கடத்துகிற தான் அந்த ப்ரஹ்மதேவனிடத்தினின்று உண்டானவன். மஹத்தத்வமும் ஸாத்விகம் தாமஸம் ராஜஸ மென்று மூன்றுவகை அஹங்காரமும் ப்ரஹ்ம தேவனும் ஆகிய இந்த தாங்கள் அனைவரும் கயிற்றில் கட்டுண்ட பக்ஷிகள்போல் உன்வசத்திலிருந்து உனது அனுக்ரஹத்திணல் இந்த ப்ரஹ்மாண்டத்தையும் இதற் குள்ளிருக்கும் வஸ்துக்களையும் படைக்கின்றோம். இத் தகைய உன்னை எவன்தான் பணியமாட்டான்? இந்த ஜீவன் ஸத்வாதி குணங்களின் பரிணமமான தேஹம் இந்த்ரியம் இவற்றின் ஸம்பந்தத்திணல் ஆத்ம பரமாத் மாக்களின் உண்மையைப்பற்றின அறிவை இழந்து ஜனன மரணதியான ஸாம்ஸாரிக தர்மங்களில் மூழ்கி உன்னல் நிர்மிக்கப்பட்டதும் கர்மமாகிற முடிச்சுகளை யுடையதுமாகிய ப்ரக்ருதியின் ஸ்வரூபத்தையே அறி

யாதிருக்க, அதினின்று தன்னை மீட்கும் உபாயத்தை எளிதில் அறியமாட்டா னென்பதைப்பற்றிச் சொல்ல வேண்டுமோ? அந்த ப்ரக்ருதிஸம்பந்தத்தை விலக்கவும் அதினின்று மீட்கவும் உரிய அறிவுடையவன் நீ ஒருவனே. அத்தகைய உனக்கு நமஸ்காரம்' என்று ஸ்தோத்ரம் செய்கின்றனன். பதினேழாவது அத்யாயம் முற்றிற்று.

பத்தாவீவ வர்ஷம் முதலிய ஆறுவர்ஷங்களில் பகவான் அங்குள்ளவர்களால் ஆராதிக்கப் படுவதைக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—தர்மனுடைய புதல்வனுகிய பத்ரஸ்ரவனென்பவனும் அவனது வம்சத்தில் முக்யர்களான மஹா புருஷர்களும் பத்ராஸ்வவர்ஷத்தில் ஷாட்குண்யம் நிறைந்த வாஸுதேவனுக்கு ப்ரியமாயிருப்பதும் தர்மஸ்வரூபமும் ஹயசீர்ஷனென்னும் பேருடையதுமாகிய அவனது மூர்த்தியைச் சிறந்த ஸமாதியால் ஸாக்ஷாத்கரித்து 'ஓம். தர்மஸ்வரூபனும் ஜீவாத்மாக்களை ப்ரக்ருதி ஸம்பந்தத்தினின்று விடுவித்துத் தன்னை அனுபவிக்கையாகிற மஹாநந்தங் கொடுப்பவனுமாகிய பகவானுக்கு நமஸ்காரம்' என்று சொல்லி, மீளவும் 'இவ்வுலகத்திலுள்ள ஜனங்கள் தமது தந்தை முதலியவர்களைக் கொண்டுபோகின்ற ம்ருத்யுவைக் கண்டும் தமக்கும் அங்ஙனமே நேருமென்பதை அறிகிறதில்லை. தாம் சாச்வதமாயிருப்பதாகவே நினைக்கின்றார்கள். இது பகவானுடைய சேஷ்டையே. ஆ! என்ன விசித்ரம்! அவனுடைய மாயையால் மதிமயங்கியே ஜனங்கள் இங்ஙனம் தமக்கு வாப்போகிற ம்ருத்யுவை அறியாமல் திரிகின்றார்கள். தந்தை பிள்ளை முதலியவர்

மரணம் அடைகையில் அவரது சரீரங்களைக் கொண்டு போய்க் கொளுத்திவிட்டு வாஸ்தவத்தில் ஸுகத்திற் கிடமல்லாத ஸப்தாதி விஷயங்களை அனுபவிக்கவிரும்பிப் பாபங்களைச் செய்யமுயன்று அவர்கள் ஸம்பாதித்ததைக் கண்டு ஜீவிக்கப் பார்க்கிறார்கள். வேதார்த்தவித்தையை உணர்ந்தவரும் ஆத்ம பரமாத்மாக்களை உபாஸித்தவருமான பண்டிதர்கள் இந்த ஜகத்தெல்லாம் கஸ்வரமென்று பார்க்கின்றார்களாயினும், உன் மாயையினால் மதிமயங்கிப் புத்ரமரணாதி காலங்களில் சோகிப்பதும் புத்ரோத்பத்தி முதலிய காலங்களில் ஸுகிப்பதுமாயிருக்கிறார்கள். ஆகையால் உன் செயல் மிகவும் ஆச்சர்யமாயிருக்கின்றது. அந்த மோஹம் மாறுவதற்காக ஜன்ம மரணாதியான ஸாம்ஸாரிக தர்மங்கள் தீண்டப்பெறாத உன்னைச் சரணம் அடைகின்றோம். நீ விசித்ரமான ஜகத்தைப்படைப்பது முதலிய கார்யங்களை நடத்துகின்றவனாயினும் அந்த ஜகத்திலுள்ள தேவமனுஷ்யாதி பேதங்களெல்லாம் அந்தந்த ஜீவாத்மாக்களின் புண்ய பாபகர்மங்களைப் பற்றினவையாகையால் நீ அவற்றைச்செய்கிறதில்லை. நீ இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்துவது யுக்தமே. நீ அவித்யையால் விளையும் ஜ்ஞானஸங்கோசமற்றவன். ஆகையால், ஜீவாத்மாக்களுக்குச் செயல்கள் மேன்மேலும் ஸம்ஸார பந்தத்தை விளைப்பதுபோல், இச்செயல்கள் உனக்குப் பந்தத்தை விளைக்கவல்லவை யாகமாட்டா. நீ, ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயுமுள்ள சேதன சேதனங்களைச் சரீரமாகவுடையவன்; ஸர்வர்க்கும் அந்தராத்மாவாயிருப்பவன்; இயற்கையில் ப்ரக்ருதி புருஷர்களைக்காட்டிலும் விலக்ஷணன். நீ ஜகத் ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களைச் செய்வது லீலைக்காக.

அ து வு ம் உன்னிச்சையாலன்றிக் கர்மத்திஞ்லன்று. ஆகையால் அது உனக்கு யுக்தமே. இங்ஙனம் விலக்ஷணஞகிய உனக்கு அச்செயல் பங்தத்தை விளைக்காமை ஆச்சர்யமன்று. நீ முன்பு ஒரு [1] தைனந்தின்ப்ரளயத்தில் தன்னிடத்தினின்று அஸுரன் பறித்துக்கொண்டுபோன வேதங்களை வேண்டுகிற ப்ரஹ்மதேவனுக்கு ஹயக்ரீவ ரூபியாய் அவற்றை மீட்டுக்கொண்டுவந்து கொடுத்தனை. உன் செயல்களெல்லாம் வீணாகாதவை. அத்தகைய உனக்கு நமஸ்காரம்' என்று இங்ஙனம் ஸ்தோத்ரம் செய்கின்றார்கள். மேருவின் தென்புறத்திலுள்ள ஹரிவர்ஷத்தில் பகவான் கரஸிம்ஹ ரூபியாய் ஸந்நிதானம் செய்கின்றனன். அவன் அவ்வுருவங்கொண்டதற்குக் காரணம் மேல் சொல்லப்போகிறோம். பகவானுக்கு அவ்வுருவம் மிகவும் அன்பிற்கிடமாயிருக்கும். ப்ரஹ்லாதன் அவ்வர்ஷத்திலுள்ள புருஷர்களுடன் எவ்வகை விக்னங்களாலும் தடைபடாத பக்தியோகமுடையவனாகி வேறொரு பலனையும் விரும்பாமல் அந்த கரஸிம்ஹ ரூபியான பகவானை ஆராதிக்கின்றனன். அந்த ப்ரஹ்லாதன் மஹாபுருஷனை பகவானுடையகுணங்களுக்கெல்லாம் இருப்பிடம்; பகவானிடத்தில் பக்தியுடையவர்களில் சிறந்தவன்; தைத்யர் தானவர் இவர்களின் குணங்களையெல்லாம் பாவணம்செய்யவல்ல நல்லொழுக்கமுடையவன்; யஜ்ஞ தான ஹோமாதி ரூபமான தர்மங்களெல்லாம் அமைந்தவன். அவன் ஓம். 'கரஸிம்ஹ ரூபியான பகவானுக்கு நமஸ்காரம். நீ தேஜஸ்ஸுக்குகளுக்கும் தேஜஸ்ஸைக்கொடுப்பவன். நீ ஸ்வயமாகவே ப்ரகாசிக்குந் தன்மையன். வஜ்ரம்போல் எங்கும் தடை

---

1 ப்ரஹ்மாவின் தினந்தோறும் நடக்கும் ப்ரளயங்களில் ஒன்றாகிய ப்ரளயத்தில்.

படாத ரகங்களும் கோரைப் பற்களுமுடையவனே! நீ அடிக்கடி எமக்குத் தோற்றுவாயாக. எமது கர்ம வாஸனைகளைப் போக்குவாயாக. ஸம்ஸார பயம் நீங்கும் படி உன்னுருவத்தை எங்களுக்குக் காட்டுவாயாக. ரங்கள் உன்னருளால் மிகவும் பயமற்றிருப்போமாக' என்று மொழிந்து மீளவும் 'ஜகதீச! ஜகத்திற்கெல் லாம் ரக்ஷமம் உண்டாகுக. ஜகத்திலுள்ள துஷ்டர்க ளெல்லாம் மனம் தெளிந்து கோபத்தைத் துறந்து ந ன் மதியுடையவராயிருப்பார்களாக. ப்ராணிகளெல்லாம் ஒன்றுக்கொன்று புத்தியால் ரக்ஷமத்தையே நினைத் துக் கொண்டிருக்குமாக. அவற்றின் மனமும் சாந்தி முதலிய ந ன்மையைப்பெறுமாக. எங்கள் மதியும் மற்ற ப்ராணிகளின் மதியும் ஒரு பலனையும் விரும்பாமல் ப க வானிடத்தில் ஆவேசித்திருக்குமாக. எமக்கு எதிலும் மனப்பற்று ரோதிருக்குமாக. ஒருகால் நேருமாயின், மனை மனைவி பிள்ளை பணம் பந்து இவற்றில் ஒருகா லும் ரோதிருக்குமாக. பகவானுக்கன்பர்களான ப க வதர்களிடத்திலேயே எப்பொழுதும் ஸஹவாஸம் உண் டாகுமாக. அது நேருமாயின் மனம் வேறு விஷயங் களில் செல்லாமல் பகவானிடத்தில் நிலையுற்றிருக்கும். அது ஸம்ஸார துக்கங்களுக்குச் சலிக்கமாட்டாது. அவர்களோடு ஸஹவாஸம் கொண்டிருப்பவன் ப்ராண தாரணத்திற்கு வேண்டியவற்றை மாத்ரம்பெற்று அவ் வளவில் ஸந்தோஷ முற்றிருப்பான். அவன் சீக்ரத்தில் மோக்ஷ ஸித்தியைப் பெறுவான். இந்த்ரியங்களின் ப்ரீ திக்காகச் சப்தாதி விஷயங்களில் தாழ்ந்த மதியுடைய வன் அந்த ஸித்தியைப் பெறவேமாட்டான். என் புத் திக்குப் பகவானை இடைவிடாமல் த்யானிக்குந் திறமை அப்பாகவதர்களின் ஸஹவாஸத்தினல் தான் உண்டா

யிற்று. கங்கை முதலிய புண்ய தீர்த்தம்போல் மிகவும் பரிசுத்தமான பகவானுடைய புகழை ஓயாமல் பணிகிறவர்களின் மனத்தில் ஸர்வேச்வரன் அவரது செவியின் வழியாக உள்ளே புகுந்து அம்மனத்திலுள்ள மலங்களையெல்லாம் போக்குவான். அத்தகையனுடைய புகழை எவன் தான் துதிக்கமாட்டான்? ஒருவனுக்குப் பகவானிடத்தில் ஜ்ஞாநகாமுஷ்மிக ரூபமான எவ்வகைப்பலன்களையும் பொருள் செய்யாத மேலான பக்தி விளையுமாயின், இந்த்ரன் முதலிய தேவதைகள் அனைவரும் அவனைத் தொடர்ந்திருப்பார்கள். தர்மாதி குணங்களும் சம தமாதி குணங்களும் தாமே அவனைத் தொடர்ந்துவரும். தன்னைப் பற்றினருடைய பாபங்களைப் போக்குந் தன்மையனுன பகவானிடத்தில் பக்தியின்றிச் சப்தாதி விஷயங்களில் பெரிய ஆவலுடன் வெளியில் ஓடித்திரிகின்றவர்களுக்கு மஹிமையுள்ள பகவத் பக்தர்களின் குணங்கள் எங்ஙனம் உண்டாகும்? மீன்களுக்கு ஜலம் தாரகமாய் மிகவும் இஷ்டமாயிருப்பது போல், ஜீவாத்மாக்களுக்குப் பகவானொருவனே தாரகனும் இஷ்டனுமா யிருக்கின்றன். ஆகையால் வயது உருவம் பசு அன்னம் பிள்ளை பணம் முதலியவற்றால் நிறைவாளராயினும் அத்தகைய பகவானைப் பணியாமல் துறந்து கேவலம் இல்லறவாழ்க்கையில் ஆழ்ந்திருப்பார்களாயின், ஆணும் பெண்ணுமாய்ச் சப்தாதி விஷயங்களை அனுபவிக்கிற அவர்களுக்கு அவ்வயது முதலியவற்றால் மேன்மையேயொழிய மேலான ஆநந்தத்தை விளைக்கவல்ல ஆத்மபரமாத்மாக்களின் உண்மையை அனுபவிக்கையால் உண்டாகும் மேன்மை கிடைக்கமாட்டாது. இங்ஙனம் பகவத்பக்தியே மேலான ஸுகத்தைக் கொடுக்குமாகையாலும் சப்தாதி விஷயங்

களில் செய்யும் ப்ரீதி மேலான துக்கத்தையே விளைக்கு மாகையாலும் காமம் ராகம் துக்கம் கோபம் அஹங்காரம் ஆசை பயம் அவற்றால் விளையும் மனச்சோர்வு மனோவியாதி முதலானவற்றிற்கிடமாயிருப்பதும் ஜனன மரணாதி ரூபமான ஸம்ஸாரம் மாறுதிருப்பதுமாகிய இல்லற்வாழ்க்கையைத் துறந்து ஸ்ரீ நரஸிம்ஹ ரூபியான பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பணிகிறவர்களுக்கு எங்ஙனம் துக்கம் உண்டாகும்?' என்று ஸ்தோத்ரம் செய்கின்றான்.

கேதுமாலவர்ஷத்தில் பகவான் ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கும் ஸம்வத்ஸரனென்னும் ப்ரஜாபதியின் முப்பத்தாறு யிரம் பெண்களுக்கும் அவ்வர்ஷத்திற்கு ப்ரபுக்களான அவரது முப்பத்தாறுயிரம் பிள்ளைகளுக்கும் ப்ரியம் செய்ய விரும்பி ப்ரத்யும்ன ரூபியாய் ஸந்நிதானம் செய்கின்றான். அந்த ப்ரஜாபதியின் பெண்கள் ராத்ரிக்கு அபிமானிதேவதைகள். அவருடைய பிள்ளைகள் பகலுக்கு அபிமானிதேவதைகள். அப்பெண்கள் கர்ப்பந்தரித்து ப்ரஸவிக்குங் காலத்தில் அஸ்த்ரங்களில் தலைமையுள்ள ஸுதர்சன சக்ரத்தின் தேஜஸ்ஸினால் மனங்கலங்கிக் கர்ப்பசிசுக்கள் ப்ராணன்களை இழந்து விழப்பெறுகின்றனர். அவ்விடத்தில் ப்ரத்யும்ன பகவான் அழகிய நடையின் விலாஸத்தினால் திகழ்கின்ற புன்னகை அமைந்த கடைக்கண்ணோக்கத்தினால் சிறிது உயர்ந்த புருவவட்டத்துடன்கூடி ரமணீயமான தாமரைமலர் போன்ற திருமுகமண்டலத்தின் சோபையால் ஸ்ரீமஹாலக்ஷ்மியைக் களிப்பித்துக்கொண்டு தன்னிந்த்ரியங்களைக் களிப்பிக்கின்றான். ஸ்ரீமஹாலக்ஷ்மி ஸம்வத்ஸராத்ரிகளில் ராப்ஜபதியின் பெண்களோடும் பகல்

களில் அவரது கணவர்களும் பகலுக்கு அபிமானி தேவதைகளுமான அந்தப்ரஜாபதியின் புதல்வர்களோடுங் கூடிப் பகவான் தன் ஸங்கல்பத்திலல் ஏற்றுக் கொண்ட அவ்வுருவத்தை ஆராதிக்கிறாள். அவள் 'ஓம். இந்திரியங்களுக்கு நியாமகனும் ப்ரக்ருதி புருஷர்களுக்கு நேரக்கூடாத ஸத்ய ஜ்ஞானாதி குணங்களும் காம்பீர்யாதி குணங்களும் நிறைந்த ஸ்வரூபமுடையவனென்று வேதாந்தங்களால் ஓதப்படுகின்றவனும் கர்மேந்திரியம் ஜ்ஞானேந்திரியம் மனம் ஆகிய இவற்றின் வ்யாபாரங்களுக்கும் ப்ருதிவி முதலிய பஞ்சபூதங்களுக்கும் நியாமகனும் பஞ்ச பூதங்களும் பதினொரு இந்திரியங்களுமாகிய பதினாறும் சரீரமாகப் பெற்று அவையே தானென்னும்படி அமைந்திருப்பவனும் வேத ஸ்வரூபனும் அன்னமயனும் (வ்யஷ்டிதத்வஸ்வரூபனும்) ஜீவாத்மாக்களைச் சரீரமாகவுடையவனும் ஸர்வாத்மகனும் மநோபலம் இந்திரியபலம் தேஹபலம் இவற்றிற்குக் காரணனும் மிகுந்த ப்ரீதிக்கிடமாயிருப்பவனும் தன் பக்தர்களிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவனும் ஷாட்குண்ய பூர்ணனுமாகிய உனக்கு முன்னும் பின்னும் நமஸ்காரம் செய்வேனை' என்று மொழிந்து மீளவும் [1]'ஸ்வயமாகவே இந்திரியங்களுக்கு ப்ரபுவாகிய உன்னை மடந்தையர்கள் வ்ரதங்களால் ஆராதித்து வேறொருவனைக் கணவனாக விரும்புகிறார்கள். அங்ஙனம் விரும்பிப்பெற்ற அக்கணவர்கள் அம்மடந்தையர்களின் அன்பிற்கிடமான புதல்வனையும் பணங்களையும் வாழ்நாளையும் பாதுகாத்துக் கொடுக்க வல்லர்களாகிறதில்லை. அவர்கள் கர்மத்திற் குட்பட்டவர்களாகையால் அவர்

---

1 ஸ்வயமாகவே யென்பதால் ஒருவனுடைய தூண்டுதலாலன்றென்று வெளியாகின்றது. ஸ்வதந்த்ரனென்று கருத்து.

களுக்கு அத்திறமை கிடையாது. எங்கும் புகழ்பெற்ற குணகணங்களையுடைய நீ யொருவனே அத்தன்மை யுடையவன். நீ கர்மத்திற்குட்பட்டவனல்லை யாகையால் எவ்விதத்திலும் பயமில்லாதவன். ஆனது பற்றியே பயத்திலுல் வருந்தின ஜனங்களை எல்லாப் பயங்களி னின்றும் பாதுகாக்கின்றனை. ஆகையால் பதியென்று கூறப்படும் கணவன் நீ யொருவனே. உன்னைப்போன்ற மற்றொருவன் உளனையின் ராஜாக்களுக்கு ஒருவர்க் கொருவர் பயம் உண்டாவதுபோல், உங்களுக்கும் ஒரு வர்க்கொருவர் பயம் உண்டாகும். ஆகையால் அது இல் லவேயில்லை. நீ ஜீவாத்மாக்களைப் பாதுகாப்பதற்கு 'காம பரமாத்மாவுக்குச் சேஷப்பட்டவர்' என்னும் ஜ்ஞா னம் அவர்களுக்கு உண்டாவதை மாத்ரம் எதிர் பார்க் கின்றேயன்றி மற்றொன்றையும் எதிர் பார்க்கிறதில்லை. ஒருத்தி ஸமஸ்த புருஷார்த்த ஸ்வரூபனாகிய உன்னைப் பொருள் செய்யாமல் கணவன் பிள்ளை பணம் வாழ்கள் முதலிய மற்ற எல்லாக் காமங்களிலும் விருப்புற்று உன் பாதங்களை ஆராதிப்பாளாயின், அவளுக்கு அந்த அற்ப பலன்களையே கொடுக்கிறாய். வாஸ்தவத்தில் நீ யொருவனே ஆசைப்படத் தகுந்த வஸ்துவன்றி மற்ற எதுவும் ஆசைப்படத் தகுந்ததன்று. அங்ஙனம் ஆவலுடன் வேண்டிப் பெற்றவள் அவை அழிந்து போகையில் பரிதபிக்கிறாள். நீ ஒருகாலும் அங்ஙனம் அழியுந்தன்மையனல்லை. உன்னைப்பெற்ற கான் ஒருகா லும் அவளைப்போல் வருந்தமாட்டேன். இந்த்ரியங்க ளின் ப்ரீதிக்காகச் சப்தாதி விஷயங்களில் மனம் சென்ற ப்ரஹ்மதேவனும் ருத்ரனும் இந்த்ரன் முதலிய மற்ற தேவதைகளும் என் கடாக்ஷம் பெறுவதற்காக, உன் பாதாரவிந்தங்களைச் சரணம் அடையாமல் கொடிய

தவங்களைச் செய்கிறார்கள். அதனால், அவர்கள் என் கடாக்ஷம் பெறுகிறதில்லை. ஏனெனில், ஒருவராலும் வெல்லப்படாதவனே! நான் உன்னிடத்தில் நிலைநின்ற மனமுடையவள்; உன்னைக்காட்டிலும் வேறு பட்டவளல்லள். ஆகையால் உன் பாதாரவிந்தங்களைப் பணிகின்றவர்களை நான் தொடர்வேனேயன்றி மற்றவர் எத்தகைய தவம் செய்யினும் அவர்களை நான் கடாக்ஷிக்க மாட்டேன். ஸமஸ்த புருஷார்த்த ஸ்வரூபனாகிற நீ உன்னைப் பற்றினவர்களை ஒருகாலும் கைவிடாதவன். ஸமஸ்த புருஷார்த்தங்களையும் கொடுப்பதென்று அனைவராலும் புகழப்பெற்றதும் தாமரை மலர் போன்றதுமாகிய உன் கரத்தை உன்னிடத்தில் நிலைநின்ற மதியுடைய உன் பக்தர்களின் சிரத்தில் வைத்தாற்போல் என் சிரத்திலும் வைப்பாயாக. நீ ஸ்ரீவத்ஸமென்னும் அடையாளத்தைப் போல் என்னையும் ஓரடையாளமாக மார்பில் தரித்துக்கொண்டிருக்கிறாயன்றி உன் பக்தர்களிடத்தில் செய்யும் அனுக்ரஹத்தை என்னிடத்தில் செய்கிறதில்லை. ஈச்வரனாகிய உன்னுடைய நடத்தையையும் அபிப்ராயத்தையும் எவன்தான் ஊஹிக்க வல்லவன்? உன் பக்தர்களிடத்தில் செய்யும் அனுக்ரஹத்தை நீ என்னிடத்திலும் செய்வாயாக வென்று நான் வேண்டுகிறேன்' என்று ஸ்தோத்ரம் செய்கின்றாள்.

ரம்யகவர்ஷத்தில் அவ்வர்ஷத்திற்கு அதிபதியாகிய மனுவுக்கு முன்பு யுகாந்த ஸமயத்தில் காண்பிக்கப்பட்டதும் பகவானுக்கு மிகவும் ப்ரியமுமாகிய மத்ஸ்யாவதார உருவத்தை அம்மனு இப்பொழுதும் அவ்விடத்தில் மாறுத பக்தியோகத்தினால் ஆராதித்துக்கொண்டிருக்கிறான். அவன் 'ஓம். பகவானுக்கு நமஸ்

காரம். அவதாரங்களில் முதன்மையான மத்ஸ்ய பகவானுக்கு நமஸ்காரம். சுத்த ஸத்வமூர்த்தியும் ப்ராணன் இந்த்ரியபலம் மனோபலம் தேஹபலம் இவற்றிற்கு அதிஷ்டாதாவும் உலகத்தில் புலப்படும் மத்ஸ்யங்களைக் காட்டிலும் விலக்ஷணமான மத்ஸ்யரூபங் கொண்டவனுமாகிய பகவானுக்கு நமஸ்காரம்' என்று மொழிந்து மீளவும் 'நீ லோகபாலர்களால் உள்ளும் புறமும் காணப்படாத உருவமுடையவனும் வேதஸ்வரூபமான பெரிய நாதமுடையவனுமாய்த் திரிகின்றனை. மனிதன் மரத்தினால் செய்த ஓர் பெண் பொம்மையைக் கையிற் கொண்டு ஆட்டுவதுபோல், சேதன சேதன ரூபமான இந்த ஜகத்தை யெல்லாம் 'இங்ஙனம் செய் இங்ஙனம் செய்யாதே' என்று நியமிக்கிற வேதவாக்கினால் உன் வசத்திற் கொண்டு பாதுகாக்கிறாய். இந்த்ராதி லோகபாலர்கள் அனைவரும் பிறனுடைய மேன்மையைப் பொறுமையாகிற ஜ்வரத்தைத் துறந்து ஒன்று சேர்ந்து எவ்வளவு ப்ரயத்னம் செய்யினும் இரண்டுகால் ஜந்துக்கள் நாற்கால் ஜந்துக்கள் ஜங்கமம் ஸ்தாவரம் ஆகிய இவை அமைந்த இந்த ப்ரபஞ்சத்தைப் பாதுகாக்க வல்லராகவில்லை. நீ மிகப் பெரிய அலைகளின் வரிசை அமைந்த ப்ரளய ஸமுத்ரத்தில் கொடிகளும் புதர்களும் அமைந்த இப்பூமியை என்னுடன் தரித்துக்கொண்டு வீர்யத்துடன் உலாவினாய். நீ கர்மத்தினால் விளையும் பிறவியற்றவன்; ஜகத்தில் சரீரங்கள்தோறும் முள்ள ப்ராணஸ்வரூபி. மூன்று அடிகளால் உலகங்களை அளந்தவனே! அத்தகைய உனக்கு நமஸ்காரம்' என்று ஸ்தோத்ரம் செய்கின்றான்.

ஹிரண்மயவர்ஷத்தில் பகவான் கூர்மரூபியாய்

வாஸம் செய்கின்றான். அந்தப்பகவானுக்கு மிகவும் ப்ரியமான அவ்வுருவத்தைப் பிரகாணத்தின் தலைவனாகிய அர்யமனென்பவன் அவ்வர்ஷத்திலுள்ள புருஷர்களுடன் ஆராதிக்கிறான். அவன் 'ஓம். ஷாட்குண்யபூர்ணனும் ஸமஸ்த ஜந்துக்களும் அவற்றின் குணங்களும் தன்னிடத்தில் அமையப்பெற்றவனும் ஸமுத்ரத்திற்குள் மந்தர பர்வதத்தின் அடியில் இருப்பவனுகையால் பிறர்க்குப் புலப்படாத இருப்பிடமுடையவனும் ப்ராக்ருத சரீரமற்றவனும் மஹிமையுடையவனும் ஆதாரபூதனும் கூர்ம ரூபியுமான உனக்கு நமஸ்காரம்' என்று மொழிந்து மீளவும் 'உன் மாயையினால் ஏற்பட்டதும் போக்யம் போல் தோற்றுவதும் ஜாதி குணம் முதலிய பலவற்றால் நிரூபிக்கத் தகுந்ததும் முழுவதும் கண்டறிய முடியாமையால் கணக்கற்றதுமாகிய இந்த ப்ரபஞ்சத்தை யெல்லாம் சரீரமாகவுடையவனும் நித்ய ஜ்ஞானஸ்வரூபனுமாகிய உனக்கு நமஸ்காரம். தேவனே! ஜங்கமம் ஸ்தாவரமென்று இருவகைப்பட்டதும் [1] ஜராயுஜம் ஸ்வேதஜம் அண்டஜம் உத்பிஜ்ஜமென்று நான்கு வகைப்பட்டதுமாகிய இந்த ஜகத்தெல்லாம் உன் சரீரமே. த்யுலோகம் ஆகாசம் பூமி பர்வதங்கள் நதிகள் ஸமுத்ரங்கள் த்வீபங்கள் சந்த்ரன் ஸூர்யன் முதலிய க்ரஹங்கள் அச்வினி முதலிய நக்ஷத்ரங்கள் என்னும் இச்சப்தங்களால் நீயே சொல்லப்படுகின்றனை. கணக்கிட முடியாதவைகளும் ஒன்றை விட ஒன்று விலக்ஷணமாயிருப்பவைகளுமான தேவாதி

---

1. கர்ப்பப் பையிலிருந்துண்டாகின்றவை ஜராயுஜம். வேர்வையில் உண்டாகின்றவை ஸ்வேதஜம். முட்டையின்றுண்டாகின்றவை அண்டஜம். பூமியினின்று மேல் முளைத்துக் கிளம்பும் மரம் செடி கொடி முதலியவை உத்பிஜ்ஜம்.

காமங்களும் தேவாதிசரீரங்களும் ப்ருதிவி முதலிய தத்வங்களும் அமைந்த உன்னிடத்தில் இருபத்து நான்கு தத்வங்களென்றும் இருபத்தைந்து தத்வங்களென்றும் சொல்லப்பட்ட இவை முதலிய ஸங்க்யை மந்தபுத்திகளுக்கு ஸுகமாகத் தெரியும் பொருட்டுக் கபிலர் முதலிய பண்டிதர்களால் ஏற்படுத்தப்பட்டது. அளவற்ற வைபவத்தையுடையவனாயிருக்கும் உனது உண்மையைப்பற்றின அறிவு தேருமாயின் அந்த ஸங்க்யை பறந்துபோம். நீ ஸாங்க்ய சாஸ்த்ரத்தினால் அறியத் தகுந்தவன். அத்தகைய உனக்கு நமஸ்காரம்' என்று ஸ்தோத்ரம் செய்கின்றான்.

உத்தரகுரு வர்ஷத்தில் பகவான் வராஹ உருவங் கொண்டு ஷாட்குண்ய பூர்ணனும் யஜ்ஞத்தைச் சரீரமாகவுடையவனும் யஜ்ஞங்களால் ஆராதிக்கப்பட்டு அவற்றின் பலன்களைக் கொடுப்பவனுமாயிருக்கின்றான். அந்தவராஹபகவானை இப்பூமிதேவி குருவர்ஷத்திலுள்ளவர்களுடன் மாறாத பக்தியோகத்தினால் ஆராதிக்கின்றாள். அவள் 'ஓம். மந்த்ரங்களால் கூறப்படுகிற இந்த்ராதி தேவதைகளைச் சரீரமாகவுடைய பகவானுக்கு நமஸ்காரம். ஸோமமில்லாத யாகங்களையும் ஸோமமுள்ள யாகங்களையும் தனக்குச் சரீரமாகப்பெற்றவனும் அவற்றால் ஆராதிக்கப்பட்டுப் பலன் கொடுப்பவனும் மஹாயாகஸ்வரூபனும் யாகங்களில் உபயோகப்படுமவைகளும் மேன்மையுடையவைகளுமான ஸ்ருக்கு ஸ்ருவம் முதலியவற்றைச் சரீரமாகவுடையவனும் புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்ட பெருமையுடைய மஹாபுருஷனுமாகிய உனக்கு நமஸ்காரம். பரிசுத்தமான செயலுடையவனும் ஜ்ஞான பலங்களை

ஐஸ்வர்ய வீர்யங்கள் சக்தி தேஜஸ்ஸுக்களென்கிற மூன்று இரட்டைகளுடையவனும் கண்களில் செந்தாமரை மலர்போல் சிவந்தவனுமாகிய உனக்கு நமஸ்காரம்' என்று பரம ரஹஸ்யமான இம்மந்த்ரத்தை மொழிந்து மீளவும் 'தத்வங்களின் உண்மையை அறிந்த பெரியோர்கள், அரணிக்கட்டையில் அக்னிபோல் தேவாதி சரீரங்களையுடைய ஜீவாத்மாக்களிடத்தில் அவர்களது கர்மத்தினால் அவர்களுக்குத் தெரியாமல் மறைந்திருக்கிற ஸர்வஜ்ஞனாகிய உன்னுருவத்தைக் காண விரும்பி மனமாகிற மத்தில் கடைகின்றார்கள். நீ ஸர்வேச்வரன், ஜீவாத்மாக்களுக்கு நியாமகன், அத்தகைய உனக்கு நமஸ்காரம். ஓ பகவானே! ஆத்ம பரமாத்மாக்களின் உண்மையை நன்குணர்ந்த புருஷர்கள் பஞ்ச பூதங்களும் ஜ்ஞானேந்ரியங்களுமாகிய இவற்றின் ஸூக்ஷ்மாயருபமான சரீரத்தில் உள்ள கர்த்தாக்களான ஜீவாத்மாக்களையும் ப்ரக்ருதியின் குணங்களான ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களையும் நிபுணபுத்தியுடன் ஆராய்ந்தறிந்து, நீ இவற்றிற்கெல்லாம் நியாமகனுய் இவையெல்லாம் தானே யென்னும்படி இவற்றுடன் அமைந்திருப்பினும் ப்ரக்ருதியின் கார்யங்கள் எவையும் தீண்டப் பெறுமல் ப்ரக்ருதி புருஷர்களைக் காட்டிலும் விலக்ஷணஸ்வரூபனுயிருப்பவனென்பதைக் காண்கிறார்கள். அத்தகைய உனக்கு அடிக்கடி நமஸ்காரம். நீ ப்ரக்ருதியின் குணங்களான ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களால் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை கடத்துகின்றனை. ஜீவாத்மாக்களின் க்ஷேமத்திற்காக நீ அச்செயல்களை விரும்புகிறாயன்றி உன் ப்ரயோஜனத்திற்காக விரும்புகிறதில்லை. அயஸ்காந்தத்தின் எதிரிலிருக்கும் இரும்பு அதன் வழியே சுற்றுவதுபோல், ப்ரக்ருதி உன் ஸங்கல்

பத்தின்படி ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களை கடத்து கின்றது. ஸத்வாதிகுணங்களுக்கும் அனுதியான புண்ய பாப கர்மங்களுக்கும் நீ ஸாக்ஷியாயிருப்பவன். ஆகை யால் ஜன்ம ஜரா மரணாதி துக்கஹேதுவான ஸ்ருஷ்ட் யாதி கார்யங்களைப் பற்றி உனக்குப் பக்ஷபாதமாவது தையில்லாமையாவது கோராது. அத்தகைய உனக்கு நமஸ்காரம். ஜகத்திற்கெல்லாம் காரணனை நீ வராஹ உருவங்கொண்டு என்னை உன் கோரைப்பல்லின்மேல் வைத்துப் பாதாளத்தில் யானைபோல் எதிர்த்து வந்த ஹிரண்யாக்ஷனைக் கொன்று அவலீலையாகவே ப்ரளய ஜலத்தினின்று மேற்கிளம்பினை. அத்தகைய பெருந்திற மைகள் அமைந்த உனக்கு நமஸ்காரம்' என்று ஸ்தோத்ரம் செய்கிறான். பதினெட்டாவது அத்யாயம் முற்றிற்று.

{ கிம்புருஷவர்ஷம் பாரதவர்ஷம் இவற்றில் பகவான் எழுந்தருளியிருக்கும் விதத்தை யும், பாரதவர்ஷத்தின் மேன்மையையும் கூறுதல். }

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—கிம்புருஷ வர்ஷத்தில் ஆதிபுருஷனாகிய பகவான் லக்ஷ்மணனுக்குத் தமைய னும் ஸீதையின் மனத்திற்கினியனுமாகிய தாசரதிராம னாய் வாஸம் செய்கிறான். அவனுடைய பாதாரவிந்தங் களில் மிக்க விருப்பமுடையவனும் பாகவதர்களில் சிறந் தவனுமாகிய ஹனுமான் அக்கிம்புருஷவர்ஷத்திலுள்ள வர்களுடன் அந்த ஸ்ரீராமபிரானை மாறாத பக்தியினால் ஆராதிக்கின்றான். கிம்புருஷவர்ஷத்திலுள்ள புருஷர் களில் சிறந்த ஆர்ஷ்டிஷேணரும் கந்தர்வர்களும் அந்த ஸ்ரீராமபிரானுடைய மிக்க மங்களமான கதையை அரு காமையில் நின்று பாடிக்கொண்டிருக்கையில் ஹனு

மான் பக்தியுடன் கேட்டுக்கொண்டிருக்கிறான். தானும் 'ஓம். உலகத்தில் சிறந்த ப்ரஹ்மாதிகளால் துதிசெய்யப் பெற்றவனும் சிறந்த புகழுடையவனும் ஷாட்குண்ய பூர்ணனுமாகிய ஸ்ரீராமனுக்கு நமஸ்காரம். பெரியோர்கள் ஆதரிக்கும் அடையாளங்களையும் கடத்தைகளையும் வரதங்களையும் உடைய ஸ்ரீராமபகவானுக்கு நமஸ்காரம். மன அடக்க முடையவனுக்கு நமஸ்காரம். உலகங்களை அனுஸரித்திருக்கும் தன்மையனுக்கு நமஸ்காரம். ஸாதுவென்னும் ப்ரஸித்திக்கு உறைகல் போன்றவனுக்கு நமஸ்காரம். ப்ராஹ்மணர்களின் விருப்பத்தை ஈடேற்றும் ப்ரபுவும் வேதாந்த வேத்யனும் கர்மஸம்பந்தமின்றித் திகழ்கின்றவனும் கல்யாண குணங்களெல்லாம் அமைந்த மஹாபுருஷனும் ராஜாதிராஜாவுமாகிய ஸ்ரீராமனுக்கு நமஸ்காரம்' என்று ஜபித்து மீளவும் 'ராகாதிதோஷங்களால் தீண்டப்படாமல் கேவல ஜ்ஞான ஸ்வரூபனும் என்றும் குருகாத ஜ்ஞான ப்ரகாசத்தினால் ரஜஸ்ஸு முதலிய குணங்களும் அவற்றால் விளையும் உற்பத்தி ஸ்திதி மரணங்களென்கிற மூன்று அவஸ்தைகளும் தீண்டப்பெறாதவனும் தனக்குத் தானே தோன்றுந் தன்மையனும் யோக பரிசுத்தமான புத்தியால் அடையத்தகுந்தவனும் தேவாதி ரூபங்களற்றவனும் புருஷோத்தமனுமாகிய ஸ்ரீராமனைச் சரணம் அடைகிறேன். ஸர்வசக்தியாகிய பரம புருஷனே ராமனென்னும் பேர்பூண்டு மனுஷ்யனாய் அவதாரம் செய்தமை, மனுஷ்யர்களுக்கு ஸம்ஸாரத்தின் தோஷங்களை அறிவித்துத் தர்மத்தை நிலை நிறுத்துவதற்கும் ஸாது ஜனங்களைப் பாதுகாப்பதற்குமேயன்றி ராக்ஷஸவதத்திற்காக மாத்ரமேயன்று. அப்படி இல்லாத பக்ஷத்தில் ஸர்வேஸ்வரனும் மஹாரூபனை

தன்னைத்தான் அனுபவிக்கையால் நித்ய ஸந்துஷ்டனு மாகிய அப்பரமபுருஷனுக்கு ஸீதையைப் பிரிந்தமை முதலியவற்று லுண்டான வருத்தங்களெல்லாம் எங்ஙனம் கூடும்? ஸ்ரீராம ரூபியான அப்பரம புருஷன் ஸாரிக தர்மங்களை யெல்லாம் உதறின சிறந்த மனமுடைய ஸனகாதிகளுக்கும் அந்தராத்மாவாயிருப்பவன்; தன்னைப் பற்றினவர்களிடத்தில் மிகுந்த கட்புடையவன்; அவர்களுக்கு மிகவும் ப்ரியமானவன்; ஷாட்குண்ய பூர்ணன்; எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பினும் அவ்வவற்றின் தோஷங்களெவையும் தீண்டப்பெறுமல் நித்யசுத்தனுய்த் திகழுந்தன்மையன்; எல்லாம் தன்னிடத்தில் அமையப்பெற்றவன்; மூன்று லோகங்களி லுள்ள எத்தகைய சப்தாதி விஷயங்களி லும் பற்றுடையவனல்லன்; ஆகையால் பெண்மணியைப் பிரிந்தமையா லுண்டாகுந் துக்கத்தை அடையமாட்டான்; மற்றும் லக்ஷ்மணனையும் ஸீதையையும் விடமாட்டான். மனுஷ்யர்களுக்குக் கற்பிக்கும் பொருட்டு ஸாம்ஸாரிக புருஷர்களின் கடத்தையை அனுஸரித்துக் காட்டினனன்றி வேறில்லை. மேன்மையையுடைய ஸ்ரீராமபிரானுக்குச் சிறப்புடைய ப்ராஹ்மணஜாதியில் பிறவியாவது அழகாவது புத்தியாவது ஜாதியாவது ஸந்தோஷத்தை விளைக்காது. லக்ஷ்மணனுக்குத் தமையனை அந்த ஸ்ரீராமன் கீழ்ச்சொன்னவற்றில் எதுவுமில்லாத திர்யக்கு ஜாதியில் பிறந்த வானரங்களாகிய எங்களோடு ஸ்நேஹம் செய்தான். ஆ! என்ன ஆச்சர்யம்? இவனுடைய சீலம் இத்தகையதென்று யாவரால் சொல்ல முடியும்? ஸ்ரீராமனுய் அவதரித்த இந்தப் புருஷோத்தமன் மூன்பு உத்தர கோஸலத்திலுள்ள புல்லெறும்பு முதலிய எல்லாவற்றையும் வானுலகமேறச்செய்த மஹானு

பாவன்; பிறர்செய்த உபகாரத்தை ஒன்று பத்தாக கினைக்குந் தன்மையன்; புருஷோத்தமன். மனுஷ்ய ரூபனாய் அவதரித்த இந்த ஸ்ரீராமபிரானைத் தேவனு வது அஸுரனுவது நரனுவது வானரனுவது பணிவா ணுயின், அவ்வளவில் அவன் அனுக்ரஹிப்பான்' என்று ஸ்தோத்ரம் செய்கின்றன்.

பாரத வர்ஷத்தில் பகவான் பதரிகாச்ரமத்தில் நாராயணனென்று பேர் பூண்டு கருணை மேற்கொண்டு மோக்ஷத்தில் விருப்பமுடையவர் இங்ஙனம் தவம்செய்ய வேண்டுமென்று தெரிவித்து அவ்வழியில் அவர்களை அனுக்ரஹிக்கும் பொருட்டுத் தர்மம் ஜ்ஞானம் வைராக் யம் அணிமாதி ஐச்வர்யம் வெளியிந்த்ரியங்களை வெல் லுகை முதலிய ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு வேண்டிய கருவிகளெல்லாம் நிறம்பப்பெற்றுத் தன் கதி பிறர்க்குத் தெரியாதபடி கல்பாவஸானம் வரையில் தவம்செய்து வருகிறன். பகவானுடைய அனுபவத்தை விவரித்துச் சொல்லுகிற பஞ்சராத்ர சாஸ்த்ரத்தை ஸாவர்ணி மனு வுக்கு உபதேசிக்கப்போகிற மஹானுபாவராகிய நாரத முனிவர் வர்ணாச்ரம தர்மங்களை அனுஸரிக்குந் தன்மை யுடைய பாரதவர்ஷத்து ப்ரஜைகளுடன், பகவான் மொழிந்த கர்மயோக ஜ்ஞான யோகங்களால் உதவி செய்யப் பெற்ற பக்தியோகத்தினால் ஆராதிக்கின்றார் கள். அவர் 'ஓம். இந்த்ரியங்களை அடக்குந் தன்மைய னும் மிகுந்த ஸௌசீல்ய முடையவனும் ஆத்மாவில் வேறுபட்ட தேஹத்தின் தர்மங்களான பசி தாஹம் முதலிய ஊர்மிகள் தீண்டப்பெறுதவனும் ஷாட்குண்ய பூர்ணனுமாகிய பரமபுருஷனுக்கு நமஸ்காரம். தமக் கென்று யாசித்துப் பெறவேண்டிய தொன்றுமில்லாத

முமுக்ஷுக்களுக்கு நிதிபோன்றவனும் நாராயணனுய் அவதரித்த பரமஹம்ஸனும் கல்யாணகுண கணங்கள் நிறைந்தவனும் தோஷங்களெலையும் தீண்டப் பெறுதவனும் ஹிதோபதேசம் செய்பவர்களில் சிறந்தவனும் அபரிச்சின்ன ஜ்ஞானஸ்வரூபனன தன்னைத் தான் அனுபவிக்கையில் ஆழ்ந்தவனும் ஸமஸ்த பூதங்களுக்கும் அதிபதியுமாகிய பரமபுருஷனுக்கு நமோநம:' என்று இம்மந்த்ரத்தை ஜபித்து மீளவும் 'சேதனசேதன ரூபமான இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி முதலியவற்றிற்குத் தான் கர்த்தாவாயினும் ஈச்வரன், ஜீவாத்மாக்களுடைய தேவமனுஷ்யாதி சரீரங்கள் உண்டாவதற்கு அவரவருடைய கர்மங்களே ப்ரதானகாரணமாகையால் தன்னை அதற்குக் கர்த்தாவாக அபிமானிக்கிறதில்லை. தேவமனுஷ்யாதி தேஹங்களில் அந்தராத்மாவாயிருப்பினும் அவற்றின் ஸம்பந்தத்தினால் விளையும் லாகதுக்கங்கள் அவனைத் தீண்டுகிறதில்லை. அவன் ப்ரக்ருதியைச் சரீரமாகவுடையவனுயினும் அதன் குணங்களான ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களால் ஜ்ஞானஸங்கோசம் உண்டாகப் பெறுகிறதில்லை. ஆகையால் ராகாதிதோஷங்களற்றவனும் இச்சையெதிரில்லாதவனும் சேதனசேதன ரூபமான ஜகத்திற்கு ஸாக்ஷியுமாகிய பகவானுக்கு நமஸ்காரம். ஓ யோகேச்வர! ஜீவன், பலவகைத் துக்கங்களுக் கிடமாகையால் நித்தைக்கிடமான தேஹத்தையும் தேஹானுபந்திகளையும் உபேக்ஷித்துப் பிறந்த நாள் முதல் அவஸான காலம் வரையில் த்யானயோகத்தினால் மனத்தை உன்னிடத்தில் நிலை நிறுத்த வேண்டுமென்னு மிவ்வளவே யோக சாஸ்த்ராப்யாஸத்தினால் விளையுந் திறமையாம். இதையே ப்ரஹ்மதேவன் எனக்குச் சொன்னன். ஜீவன் உன்

னிடத்தில் பக்தியின்றி இவ்வுலகத்திலுள்ள பிள்ளை பசு அன்னம் முதலிய போகங்களிலும் பரலோகத்திலுள்ள ஸ்வர்க்காதி போகங்களிலும் விருப்பமுற்று அவற்றைப் பெறுதற்குரிய உபாயங்களைச் சிந்தித்துக் கொண்டிருப்பாருயின் பலவகைச் சாஸ்த்ரங்களை ஓதியுணர்ந்த பண்டிதருயினும் நிந்திக்கத் தகுந்த இச்சரீரத்தைத் துறக்கையாகிற மரணத்தினின்று பயப்படுவான். அவன் செய்த சாஸ்த்ராப்யாஸாதி ரூபமான யத்னங்களெல்லாம் பயனற்றதேயாம். ப்ரபூ! அதோக்ஷஜனே! ஆகையால் நீயே உன்னிடத்தில் வேறு காமங்களை விரும்பாத ஸ்வாபாவிகமான பக்தியோகத்தை எங்களுக்கு விளைப்பாயாக. பல துக்கங்களுக்கிடமாகையால் நிந்திக்கத்தகுந்த இச்சரீரத்தில் எங்களுக்கு உன் மாயையால் விளைந்ததும் வேறு உபாயங்களால் எவ்வகையிலும் போக்க முடியாததும் அஹங்கார மமகார ரூபமுமான அவித்யையை அப்பக்தியோகத்தினால் சீக்ரத்தில் துறப்போமாக. உன் அனுக்ரஹத்தினால் உன்னிடத்தில் உண்டாகும் பக்தியோகமே அந்த அவித்யையைப் போக்கும் உபாயமன்றி மற்றொன்றுமன்று. ஆகையால் எங்களை அனுக்ரஹிப்பாயாக' என்று ஸ்தோத்ரம் பண்ணுகிறார். இந்தப் பாரதவர்ஷத்திலும் பல நதிகளும் பல பர்வதங்களும் இருக்கின்றன. மலயம் மங்களப்ரஸ்தம் மைனாகம் த்ரிகூடம் ருஷபம் கூடரம் கோல்லம் ஸஹ்யம் வேதகிரி ருச்யமூகம் ஸ்ரீசைலம் வேங்கடம் மஹேந்த்ரம் வாரிதாரம் விந்த்யம் சுக்திமான் ருக்ஷகிரி பாரியாத்ரம் த்ரோணம் சித்ரகூடம் கோவர்த்தனம் ரைவதகம் ககுபம் நீலம் காகமுகம் இந்த்ரகீலம் ராமகிரி என்னும் இப்பர்வதங்களும், மற்றும் அனேகம் ஆயிரம் பர்வதங்களும், அவற்றின் தாழ்வரைகளின்

றுண்டான கணக்கில்லாத நதங்களும் நதிகளும் இருக்கின்றன. இந்நதிகளின் ஜலம் பாரத வர்ஷத்திலுள்ள ப்ரஜைகளைத் தமது பேரைச் சொன்ன மாத்ரத்தில் பாவனமாக்குகின்றன. அத்தகைய ஜலத்தை அந்த ப்ரஜைகள் சரீரத்திலும் ஸ்பர்சிக்கிறார்கள். ஆகையால் அவர்கள் மேல் பாபம் எங்ஙனம் தங்கும். சந்த்ரமஸை தாம்ரபர்ணி அவடோதை க்ருதமாலை வைஹாயஸி காவேறி வேணி பயஸ்வினி பயோஷ்ணி சக்ரவர்த்தை துங்கபத்ரை க்ருஷ்ணவேணி பீமரதி கோதாவரி நிர்விந்த்யை பயோஷ்ணி தாபி ரேவை சிலாஸுரஸை நர்மதை சர்மண்வதி என்னும் நதிகளும், ஸிந்து சோணம் என்னும் நதங்களும், மஹாநதி வேதஸ்ம்ருதி ருஷிகுல்யை த்ரிஸமை கௌசிகி மந்தாகினி யமுனை ஸரஸ்வதி த்ருஷத்வதி கோமதி ஸரயு போகவதி ஸுஷமை சதத்ரு சந்த்ரபாகை மருத்வ்ருதை விதஸ்தை விபாஸை என்னும் மஹா நதிகளும் இவ்வர்ஷத்தில் விளங்குகின்றன. இவ்வர்ஷத்தில் பிறந்த புருஷர்கள் ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்று மூன்று வகையான தாம் செய்த கர்மத்தினால் திவ்யம் மானுஷம் நாரகம் என்று மூன்றுவகையான கதிகளைப் பெறுகிறார்கள். வர்ணாச்ரமங்களுக்கு உரிய தர்மங்களை அனுஷ்டித்து அதனால் பக்தியோகம் வளரப் பெற்று மோக்ஷத்தையும் அடைகிறார்கள். வர்ணாச்ரம தர்மானுஷ்டானத்தினால் ஸ்வர்க்காதிகதிகளை விளக்கும்படியான புண்யபாபகர்மங்களாகிற முடிச்சுகள் தளர்ந்து பகவானிடத்தில் வேறு ப்ரயோஜனங்களை எதிர்பாராத பக்தியோகமென்னும் மனப்பற்று விளையுமாயின், அப்பொழுதுதான் அம்மோக்ஷம் உண்டாகும். பகவானிடத்தில் விளையும் மனப்பற்று ஸ்வர்க்காதி கதிகளைத்

தடுத்து மோக்ஷத்தையே விளக்கும். அத்தகைய மனப்பற்று மஹாபுருஷர்களுக்கு நிலனின்றிருக்கும். பகவான் ஸர்வ பூதங்களுக்கும் அந்தராத்மாவாகையால் அவனை உபாஸிப்பதற்குத் தேடிக்கொண்டுபோகவேண்டிய அவஸ்யமில்லை. தத்தமது ஹ்ருதயங்களில் எப்பொழுதும் அவன் போகாமல் வீற்றிருப்பவன்; சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவன்; சரீரங்களின் தர்மங்களையும் தீண்டப் பெறுதவன்; தேவமனுஷ்யாதி காமரூபங்களால் சொல்லப்படாதவன்; தனக்குத்தானே ஆதாரமன்றி வேறு ஆதாரத்தை எதிர்பாராதவன்; பரமாத்மாவென்றும் வாஸுதேவனென்றும் கூறப்படுகிறவன். இந்தப் பாரதவர்ஷத்திலுள்ளவர்கள் இத்தகைய பரமபுருஷனிடத்தில் பக்தியோகம் செய்து மோக்ஷத்தைப் பெறுகின்றார்கள். ஆனது பற்றியே தேவதைகள் இவ்வர்ஷத்தைப் புகழ்ந்து பாடுகிறார்கள். "இவர்கள் என்ன ஸுக்ருதம் செய்தார்களோ? ஆ! அல்லது இவர்களுக்குப் பகவான் ஸ்வயமாகவே அருள் புரிந்தானே? பாரதவர்ஷத்தில் முகுந்தனைப் பணிதற்குரிய மானிடப்பிறவியைப்பெற்றவர்களின் பெருமையை என்னவென்று சொல்லலாம்? நமக்கு இப்பிறவியில் மேன்மைதானே ஆயினும் இது நமக்குக் கிடைக்கவில்லை. வருந்தியும் அனுஷ்டிக்கமுடியாத யாகங்களாலும் தவங்களாலும் வ்ரதங்களாலும் தானதி தர்மங்களாலும் அற்பமும் அஸ்திரமுமான ஸ்வர்க்காதி போகத்தைப் பெறுவதனால் என்ன உபயோகம்? ஸ்வர்க்காதி லோகங்களில் இந்த்ரியங்களுக்கு வேண்டிய ஸுகங்களெல்லாம் நிரம்பவும் கிடைக்குமாகையால் அதில் மனம் சென்று ஸ்ரீமந் நாராயணனுடைய பாதாரவிந்தங்களைப் பற்றின நினைவு அடியோடு அழிந்துபோய் விடும். கல்

பாவஸானம் வரையில் ஸுகங்களை அனுபவித்து மீளவும் பிறக்கும்படியான ஊர்த்வ லோகத்தைக் காட்டிலும் அல்பமான ஆயுளையுடைய மானிடர் வஸிக்கும்படியான பாரதபூமியில் பிறப்பது மேலானது. பாரதவர்ஷத்தில்பிறந்த மானிடர்கள் நிலையற்றதான மனுஷ்ய சரீரத்தினால் செய்யும் செயல்களைப் பகவானிடத்தில் அர்ப்பணம் செய்து மனச்சிறப்புடன் அவனை உபாஸித்து ஜன்மஜராமரணதிபயங்களுக்கிடமில்லாத அவ்விஷ்ணுவின் ஸ்தானமாகிய வைகுண்ட லோகத்தை அடைகிறார்கள். ப்ரஹ்மலோகத்தில் அந்தப் பகவானுடைய கதைகளாகிற அம்ருதகதிகள் கிடைக்கமாட்டா. அந்தகதிகளைப் பணியுந் தன்மையருமும் ஸாதுக்களின் லக்ஷணம் அமைந்தவருமாகிய பாகவதர்கள் கிடைக்கமாட்டார்கள். யஜ்ஞேசுப்வரனை பகவானுடைய பக்ஷாத்ஸவ மாஸோத்ஸவாதி விபவங்களும் மஹோத்ஸவங்களும் அவனுடைய ஆராதன ரூபமான யஜ்ஞங்களும் கடக்கமாட்டா. அத்தகைய ப்ரஹ்மலோகத்தை எவன்தான் ப்ராப்யமாக நினைப்பான்? ஜீவாத்மாக்கள் இந்தப் பாரதவர்ஷத்தில் பஞ்சபூதங்களும் கர்மேந்த்ரியங்களும் ஜ்ஞானேந்த்ரியங்களும் ஆகிய இவற்றின் ஸமுதாயம் நிறைந்த மனுஷ்ய ஜன்மத்தைப் பெற்றும் மொக்ஷத்திற்கு யத்னம் செய்யார்களானால், காட்டுப் பறவைகள் வேடனால் கட்டுண்பதுபோல மீளவும் ஸம்ஸார பந்தத்தையே பெறுவார்கள். இப்பாரத வர்ஷத்திலுள்ள மானிடர்கள் யாகத்தில் சாஸ்த்ரங்களில் சொல்லிய விதியின்படி ஸ்ரத்தையுடன் மந்த்ரங்களைச் சொல்லி ஹோமம் செய்யப்பட்டதும் சரு வென்றும் புரோடாசமென்றும் பலவாறு பேதித்திருப்பதும் அக்னிக்கென்றும் இந்த்ராணிக்கென்றும் பாகம் பாக

மாய்ப் பிரிக்கப்பட்டதுமாகிய ஹவிஸ்ஸைப் பகவான் தானொருவனேயாயினும் அக்னியென்றும் இந்த்ரனென்றும் பலவடிவங்களைக்கொண்டு அந்தந்தநாமங்களால் அழைக்கப்பெற்றுத் தான் அவாப்தஸமஸ்தகாமனுயினும் புருஷார்த்தங்களை யெல்லாம் கொடுக்கும் ப்ரபுவாகையால் யாகம்செய்கிறவர்களுக்கு வேண்டிய பலன்களைக் கொடுக்கும் பொருட்டு அங்கீகரிக்கிறான். பகவான் அந்தந்த புருஷார்த்தங்களை விரும்பும் ஜனங்களால் ப்ரார்த்திக்கப்பட்டு அவர்கள் வேண்டுகின்றவற்றைக் கொடுக்கிறானென்பது வாஸ்தவம்; ஆயினும் பரம புருஷார்த்தமான மோக்ஷத்தைக் கொடுக்கிறதில்லை. ஜனங்கள் தாங்கள் வேண்டின புருஷார்த்தங்களைப் பெற்றபின்பும் வேறொரு புருஷார்த்தத்தை வேண்டுகிறார்கள். ஆகையால் மோக்ஷத்தையொழிய மற்ற புருஷார்த்தங்களை விரும்புகின்றவர்களுக்கு விருப்பம் என்றும் முடிகிறதில்லை. அவர்கள் நித்யதரித்ரர்களே. ஒன்றையும் விரும்பாமல் தன்னைப் பணிகின்றவர்களுக்கு விருப்பங்களை யெல்லாம் நிறைக்கும் தன்மையுள்ள தனிப்போன்ற தன் பாதத்தைத் தானே கொடுக்கின்றான். நாம் குறைவறச் செய்த யாகம் ப்ரவசனம் முதலிய புண்யகர்மம் ஸ்வர்க்க லோகத்தைக் கொடுத்து மிகுந்திருக்குமாதலால், அப்புண்யகர்மத்தினால் நமக்குப் பாரதவர்ஷத்தில் பகவானைநினைக்கும்படியான மநுஷ்ய ஜன்மம் உண்டாகுமாக. பகவான் அந்நினைவுடன் தன்னைப் பணிகிறவர்களுக்கு மோக்ஷலோகத்தைக் கொடுக்கிறானல்லவா?" என்கிறார்கள்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மன்னவனே! சில பெரியோர்கள் ஜம்பூத்வீபத்திற்கு எட்டு உபத்வீபங்கள்

உண்டென்றும், அவை யாகக்குதிரையைத் தேடும் பொழுது இப்பூமண்டலத்தை ஆங்காங்குத் தோண்டிப்போன ஸகர புத்ரர்களால் ஏற்படுத்தப்பட்டவை யென்றும் சொல்லுகிறார்கள். அவை ஸ்வர்ணப்ரஸ்தம், சந்த்ர சுக்லம், ஆவர்த்தனம், ரமணகம், மந்தஹாரு ணம், பாஞ்சஜன்யம், ஸிம்ஹளம், லங்கை என்னும் பேருடையவை. பரதவம்சாலங்காரனே! இங்ஙனம் ஜம் பூத்வீபத்திலுள்ள வர்ஷங்களை க்ரமமாக விவரித்துச் சொன்னேன். பதினான்பதாவது அத்யாயம் முற்றிற்று.

{ ப்லக்ஷம் முதலிய ஆறு த்வீபங்கள், அவற்றைச் சூழ்ந்த ஸமுத்ரங்கள் லோகாலோக பர்வதம் ஆகிய இவற்றின் நிலைமையைக் கூறுதல். }

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—இனிமேல் ப்லக்ஷம் முதலிய த்வீபங்களிலுள்ள வர்ஷங்களின் பிரிவுகளையும் அவற்றின் பரிமாணத்தையும் லக்ஷணத்தையும் ஆகாரத்தையும் க்ரமப்படி விவரித்துச் சொல்லுகிறேன். ஜம்பூத்வீபம் தான் எவ்வளவு விஸ்தாரமுடையதோ அவ்வளவு விஸ்தாரமுடைய லவண ஸமுத்ரத்தினால் சூழப்பட்டிருப்பது போலவும், அந்த த்வீபத்தினிடையிலுள்ள மேருபர்வதம் ஜம்பூத்வீபத்தினால் சூழப்பட்டிருப்பது போலவும் லவண ஸமுத்ரமானது பட்டணத்தைச் சுற்றியிருக்கும் அகழி தனக்குவெளியிலுள்ள உத்யான வனத்தினால் சூழப்பட்டிருப்பதுபோல், தன்னைக் காட்டிலும் இருமடங்கதிக விஸ்தாரமுடைய ப்லக்ஷத்வீபத்தினால் சூழப்பட்டிருக்கின்றது. அந்த த்வீபத்தினிடையிலுள்ள ப்லக்ஷ வ்ருக்ஷம் ஜம்பூவ்ரு

க்ஷத்தின் அளவுடையது. அதைப்பற்றியே அந்தத்வீபத்திற்கு ப்லக்ஷத்வீபமென்னும் பேர்விளைந்தது. அந்த வ்ருக்ஷம் ஸ்வர்ணம்போல் பளபளவென்று விளக்கமுற்றிருக்கும். அந்த வ்ருக்ஷத்தின் அடியில் ஏழு ஜ்வாலையுடைய அக்னி இருக்கின்றது. அந்த த்வீபத்திற்கு ப்ரியவ்ரதனுடைய பிள்ளையாகிய இத்மஜிஹ்வன் அதிபதி. அவன் அந்த த்வீபத்தை ஏழு வர்ஷங்களாகப் பிரித்து அவ்வர்ஷங்களின் பேர்களையே பராகவுடைய தன் பிள்ளைகளுக்குக் கொடுத்துத் தான் ஆத்மயோகத்திலல் ஸம்ஸாரத்தினின்று மோக்ஷத்தை அடைந்தான். அவ்வர்ஷங்கள் சிவம், யசஸ்யம், ஸுபத்ரம், சாந்தம், க்ஷேமம், அபயம், அம்ருதமென்னும் பேருடையவை. அவ்வர்ஷங்களில் ஏழு பர்வதங்களும் ஏழு நதிகளும் பேர்பெற்றவை. எல்லையைத் தெரிவிக்கிற அப்பர்வதங்களேழும் மணிகூடம், வஜ்ரகூடம், இந்த்ரஸேனம், ஜ்யோதிஷ்மான், தூம்ரவர்ணம், ஹிரண்யக்ரீவம், மேகமாலமென்னும் பேருடையவை. அங்குள்ள மஹாநதிகள் அருணை, ஸ்ருமணை, ஆங்கிரஸி, ஸாவித்ரி, ஸுப்ரபாதை, ருதம்பரை, ஸத்யம்பரை என்னும் பேருடையவை. அந்நதிகளின் ஜலத்தில் ஸ்நானபானாதிகளைச் செய்கையால் ரஜஸ் தமஸ்ஸுக்கள் கழியப்பெற்றவர்களும் ஆயிரமாண்டு வாழ்நாளுடையவர்களும் தேவதைகளோடொத்த காட்சியமைந்த ஸந்தானமுடையவர்களும் ஹம்ஸர் பதகர் ஊர்த்வாயனர் ஸத்யாங்கர் என்னும் பேர்களுடையவர்களுமான நான்கு வர்ணத்தவர்கள் வேதோக்தமான கர்மயோகாதிகளாலும் அவ்வேதத்தை ஓட்டினஸ்மருதி முதலியவற்றில் சொன்ன வழிகளாலும் ஷாட்குண்ய பூர்ணனும் வேதப்ரதிபாத்யனும் ஸுர்யனைச்

சரீரமாக வுடையவனுமாகிய பரமாத்மாவை ஆராதிக் கிறார்கள். 'அக்நியும் நிர்விகாரனும் புண்ய கர்மங் களின் பலன்களைக் கொடுப்பவனும் தன்னைப் பற்றி னர்க்கு மோக்ஷத்தைக் கொடுப்பவனும் பற்றாதவர்க்கு ஸம்ஸாரத்தை விளைப்பவனும் பரப்ரஹ்ம மென்று கூறப் படுகின்றவனுமாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்குச் சரீர பூத னான ஸூர்யனென்னும் ஜீவனைச் சரணம் அடை கிறேம்' என்னும் இம்மந்த்ரத்தை அவர்கள் ஜபிக்கின் றார்கள். ப்லக்ஷம் முதலிய ஐந்து த்வீபங்களில் ஸாமான் யமாய் ஸமஸ்த புருஷார்களும் ஆயுள் மநோபல இந்த் ரியபலம் தேஹபலம் புத்தி பராக்ரமம் ஆகிய இவற்றின் பெருமை ஸ்வபாவஸித்தமா யிருக்கப்பெற்றவர்கள். ப்ல க்ஷத்வீபம் இக்ஷுஸமுத்ரத்தினால் சூழப்பட்டிருப்ப தும் போல, அதைக்காட்டிலும் இருமடங்குதிகமான விஸ் தாரமுடைய சால்மலித்வீபமும் தன்னைடொத்த விஸ் தாரமுடையதும் வட்டமாயிருப்பதுமாகிய ஸுரா ஸமுத்ரத்தினால் சூழப்பட்டிருக்கின்றது. அந்த த்வீ பத்தில் சால்மலி வ்ருக்ஷம் ப்லக்ஷ வ்ருக்ஷத்தை டொத்த பரிமாண முடையதாயிருக்கின்றது. வேதங் களால் துதி செய்யப்பட்ட பக்ஷிராஜனுகிய கருத்மா னுடைய வாஸஸ்தானம் அந்த வ்ருக்ஷத்தில் ஏற்பட் டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அந்த வ்ருக்ஷத் தைப்பற்றியே அந்த த்வீபம் சால்மலித்வீபமென்று கூறப்படுகின்றது. ப்ரியவ்ரதனுடைய பிள்ளையாகிய யஜ்ஞுபாஹுவென்பவன் அந்த த்வீபத்திற்கு அதிபதி. அவனுக்கு ஏழு பிள்ளைகள். அவன் அந்த த்வீபத்தை ஏழுவர்ஷங்களாகப் பிரித்துத் தன் பிள்ளைகளின் பேர் களை இட்டு அவர்களுக்குக் கொடுத்தான். அவை ஸுரோசனம் ஸௌமனஸ்யம் ரமணகம் தேவபர்ஹம்

பாரிபர்ஹம் ஆப்யாயனம் அபிஜ்ஞாதமென்னும் பேரு டையவை. அவற்றில் ஏழு பர்வதங்களும் ஏழு நதிக ளும் ப்ரஸித்தமானவை. பர்வதங்கள் ஸ்வரஸம் சதஸ் ருங்கம் வாமதேவம் குமுதம் முகுந்தம் புஷ்பவர்ஷம் ஸஹஸ்ருதி என்னும் பேருடையவை. நதிகள் அனுமதி ஸினீவாலி ஸரஸ்வதி குஹூ ராகை நந்தா ராகை என் னும் பேருடையவை. ப்ருதுதார் வித்யாதார் வஸுதத் தார் ஈஷந்தார் என்னும் பேருடைய அவ்வர்ஷங்களி லுள்ள புருஷர்கள் வேதங்களால் ஓதப்படுகின்ற ப க வத் ஸ்வரூபனை ஸோமனென்னும் தேவனை ஆராதிக் கிறார்கள். 'தன் கிரணங்களால் சுக்லபக்ஷத்தில் தேவ தைகளுக்கும் க்ருஷ்ணபக்ஷத்தில் பித்ருக்களுக்கும் அன்னத்தைப் பங்கிட்டுக்கொடுக்கிற சந்த்ரன் தன் ப்ர ஜைகளாகிய எங்கள் அனைவர்க்கும் அம்ருதம்போல் ஸுகத்தை விளைப்பானாக' என்ற இம்மந்த்ரத்தை அவர்கள் ஜபிக்கிறார்கள். அந்தச்சால்மலித்வீபம் போல, ஸுராஸமுத்ரத்திற்கு வெளியில் அதைக் காட் டிலும் இருமடங்கதிகமான விஸ்தாரமுடைய குசத் வீபமும் தன்னைடொத்த பரிமாணமுடைய [1] க்ருத ஸமுத்ரத்தினால் சூழப்பட்டிருக்கிறது. அந்த த்வீபத் தில் பெரிய தாளுடைய ஒரு [2] குசம் ப்ரஹ்மதேவனால் நிர்மிக்கப்பட்டுள்ளது. அது மற்றொரு அக்னிபோல் பேரொளியுடன் ப்ரகாசிக்கின்றது. அதைப்பற்றி அந்த த்வீபத்திற்குக் குசத்வீபமென்று பெயர். அந்தக்குசம் தன் அவயவங்களான புற்களின் ஒளியினால் பத்துத் திசைகளையும் விளங்கச்செய்கின்றது. அந்தக் குசத்வீ பத்திற்கு ப்ரபு ப்ரியவ்ரதனுடைய பிள்ளையாகிய ஹிரண் யரேதனென்பவன். அவன் தனது த்வீபத்தை ஏழுவர்

1. நெய் ஸமுத்ரத்தினால். 2. தர்ப்ப விசேஷம்.

ஷங்களாகப்பிரித்துத் தன் பிள்ளைகளுக்குக் கொடுத்
துத் தவஞ்செய்யச் சென்றான். அவனுடைய பிள்ளை
கள் வஸுதானன் த்ருடருசி நாபிகுப்தன் ஸ்துத்யவ்ர
தன் விப்ரன் வாமதேவன் என்னும் பேருடையவர்கள்.
அந்த வர்ஷங்களும் அதே பெயர் உடையன. அவற்றில்
ஏழு எல்லைப்பர்வதங்களும் ஏழு நதிகளும் ப்ரஸித்தி
பெற்றவை. பர்வதங்கள் பப்ரு சதுஸ்ருங்கம் கபிலம்
சித்ரகூடம் தேவானீகம் ஊர்த்வரோமம் த்ரவிணம்
என்னும் பேருடையவை. மஹாநதிகள் ரஸகுல்லை
மதுகுல்லை ஸ்ருதவிந்தை தேவகர்ப்பை க்ருதச்யுதை
மந்த்ரமாலையென்னும் பேருடையவை. குசலர் கோவி
தர் அபியுக்தர் குலகர் என்னும் பேருடைய அந்த த்வீ
பத்திலுள்ளவர்கள் அந்நதிகளின் ஜலத்தை உபயோ
கப்படுத்துவதினால் மனமலங்கள் கழியப்பெற்று அக்னி
யைச் சரீரமாகவுடைய பகவானை யஜ்ஞாதிகர்மங்களில்
தமக்குள்ள நிறமையினால் ஆராதிக்கிறார்கள். "ஓ அக்
னியே! நீ பரப்ரஹ்மத்தோடு ஸாக்ஷாத் ஸம்பந்தமுடை
யவன். நீ யாகங்களில் பகவத் ஸ்வரூபர்களான இந்த்
ராதிகளுக்குக் கொடுக்கும் ஹவிஸ்ஸைக் கொண்டு
போய்ச் சேர்ப்பிக்கும் அதிகாரமுடையவன். பரமபுருஷ
னுக்குச் சரீரபூதர்களான இந்த்ராதி தேவதைகளைக்
குறித்துச்செய்யும் யஜ்ஞத்தினால் அவர்களுக்கு அந்த
ராத்மாவான பரமாத்மாவை ஆராதிப்பாயாக" என்
னும் இம்மந்த்ரத்தை அவர்கள் ஜபிக்கிறார்கள். குசத்
வீபத்திற்கு வெளியிலிருக்கிற க்ரௌஞ்சத்வீபமும்
அதைக்காட்டிலும் இருமடங்கதிமான விஸ்தாரமுடை
யது. அது தன்னைடொத்த விஸ்தாரமுடைய ததி
ஸமுத்ரத்தினால் சூழப்பட்டிருக்கின்றது. அந்த த்வீபத்
திற்கு அந்தப்பேர் விளைந்ததற்குக் காரணமாக

க்ரௌஞ்ச மென்னும் மஹாபர்வதம் அதில் இருக்கின்
றது. அந்தப் பர்வதம் முன்பு ஸுப்ரஹ்மண்யனுடைய
ஆயுதத்தினல் தன் தாழ்வரைகளும் குகைகளும் பிள
வுண்டு தக்ஷிணமுத்ரத்தில் மறைத்து வருணனல் கரக்
கப்பெற்று நிர்ப்பயமாயிற்று. அந்தத்வீபத்திற்கு ப்ரிய
வ்ரதனுடைய பிள்ளையாகிய க்ருத ப்ருஷ்டனென்ப
வன் அதிபதி. அவன் தன் த்வீபத்தை ஏழுவர்ஷங்க
ளாய்ப் பிரித்து அவற்றிற்குத் தன் பிள்ளைகளின் பேர்
களை வைத்து அவர்களை அவற்றிற்கு ப்ரபுக்களாக ஏற்
படுத்தி மிக்கமங்களமான புகழுடையவனும் ஸர்வாத்ம
ராத்மாவும் தன்னைப் பற்றினருடைய பாபங்களைப்
போக்குந் தன்மையனுமாகிய பகவானுடைய பாதார
விந்தங்களைப் பெற்றான். க்ருதப்ருஷ்டனுடைய பிள்ளை
கள் ஆமோதன் மதுவஹன் மேகப்ருஷ்டன் ஸுதா
மன் ருஷிஜ்யன் லோஹிதார்ணன் வனஸ்பதி யென்னும்
பேருடையவர்கள். அவ்வர்ஷங்களில் சுக்லம் வர்த்த
மானம் போஜனம் உபபர்ஹணம் ஆநந்தம் நந்தனம்
ஸர்வதோபத்ரம் என்னும் ஏழுபர்வதங்களும், அபய
அம்ருதளகை ஆர்யகை தீர்த்தவதி த்ருப்திரூபை
பவித்ரவதி சுக்லை என்னும் ஏழுநதிகளும் ப்ரஸித்தமா
னவை. அவ்வர்ஷத்திலுள்ள புருஷர்கள் நிர்மலமும்
பரிசுத்தமுமான அந்நதிகளின் ஜலத்தை உபயோகப்
படுத்துகிறார்கள். குருக்கள் ருஷபர் த்ராவிணகர் தேவ
கர் என்னும் பேருடைய அவர்கள் ஜலத்தைச் சரீர
மாகவுடைய பகவதீன ஜலம் நிறைந்த அஞ்சலியினல்
ஆராதிக்கிறார்கள். "ஜலங்களே! நீங்கள் பரமபுருஷனு
டைய சக்திரூபமாயிருப்பவர்கள். பூலோகம் புவர்
லோகம் ஸ்வர்லோகமென்ற மூன்று லோகங்களையும்
பரிசுத்தஞ் செய்பவர்கள். ஆகையால் பாபங்களைப்

போக்குக் திறமையுடையவர்களும் பரமாத்மாவினிடத்திலிருந்து உண்டானவர்களுமாகிய நீங்கள் உங்களை ஸ்பர்சிக்கின்ற எங்கள் ஜன்மத்தைதப்பவித்ரம் செய்வீர்களாக" என்னும் இம்மந்த்ரத்தை அவர்கள் ஜபித்துக் கொண்டிருக்கிறார்கள். தத்ஸுத்ரத்திற்கு அப்புறத்தில் ஏற்பட்டிருக்கின்ற சாகத்வீபம் முப்பத்திரண்டு லக்ஷ யோஜனை விஸ்தார முடையது. அது தன்னைட்டத்த விஸ்தார முடைய க்ஷீரஸுத்ரத்தினால் சூழப்பட்டிருக்கிறது. அத்தத்வீபத்தில் சாகமென்னும் வ்ருக்ஷம் இருக்கின்றது. அதைப்பற்றியே அந்த த்வீபத்திற்குச் சாகத்வீபமென்று பேர் விளைந்தது. அதன் வாஸனை உயர்ந்தது. அது அந்த த்வீபத்தையெல்லாம் பரிமளிக்கச் செய்கின்றது. அதற்கும் ப்ரியவ்ரதனுடைய புதல்வனே அதிபதி; அவன் மேதாதி யென்னும் பேருடையவன். அவனும் அந்த த்வீபத்தை ஏழுவர்ஷங்களாகப் பிரித்துத் தன் புதல்வர்களுடைய நாமங்களை வைத்து புரோஜவன் மனோஜவன் பவமானன் தூம்ராணிகன் சித்ரதன் பஹுரூபன் விச்வதாரன் என்னும் பேருடைய தன் புதல்வர்களை அவ்வர்ஷங்களுக்கு அதிபதிகளாக ஏற்படுத்தி, தான் அபரிச்சின்னமந்த ஸ்வரூபனாகிய பகவானிடத்தில் மனம் செல்லப் பெற்றுத் தபோவனத்திற்குச் சென்றான். அவற்றில் ஈசானம் உருஸ்ருங்கம் பலபத்ரம் சதகேஸரம் ஸஹஸ்ரஸ்ரோதம் தேவபாலம் மஹானஸம் என்னும் ஏழு எல்லைப் பர்வதங்களும், அனகை ஆயுர்த்தை உபயஸ்ருஷ்டி அபராஜிதை பஞ்சபரி ஸஹஸ்ரஸ்ருதி நிஜத்ருதி என்னும் ஏழு மஹாநதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ருதவ்ரதர் ஸத்யவ்ரதர் தானவ்ரதர் ஸுவ்ரதர் என்னும் பேருடைய அவ்வர்ஷத்திலுள்ள புருஷர்கள் ப்ரா

ணயாமத்தினல் ராஜஸதமஸ்ஸுக்களை உதறி வாயுவைச் சரீரமாகவுடைய பகவானை த்யானயோகத்தினல் ஆராதித்திருர்கள். "முக்யப்ராணருபனகி உள்ளே புகுந்து தனது அடையாளங்களான ப்ராணம அபானம முதலிய பஞ்சவ்ருத்திகளால் (ஐந்து வ்யாபாரங்களால்) ஸமஸ்த ப்ராணிகளையும் தரிக்கின்றவனும் ஜகத்தெல்லாம் தன் வசத்திலிருக்கப்பெற்றவனும் ஸர்வாந்தர்யாமியுமாகிய ஸாக்ஷாத்ஸர்வேச்வரன் எங்களைப்பாதுகாப்பானுக" என்னும் இம்மந்த்ரத்தை அவர்கள் ஜபிக்கின்ருர்கள். க்ஷீரஸமுத்ரத்திற்கு அப்புறத்தில் அதைக்காட்டிலும் இரண்டுமடங்கதிகமான விஸ்தாரமுடைய புஷ்கரத்வீபம் எற்பட்டிருக்கின்றது. அது தன்னேடொத்த விஸ்தாரமுடைய சுத்தஸமுத்ரத்தினல் சூழப்பட்டிருக்கின்றது. அந்த த்வீபத்தில் அக்னிஜ்வாலைகள்போல நிர்மலமான பதினயிரம் பொன்னிதழ்களையுடைய ஒரு தாமரைமலர் இருக்கின்றது. அங்குள்ளவர்கள் அதைப் பகவானுடைய அம்சமாகிய ப்ரஹ்மதேவனுக்கு ஆஸனமாக த்யானிக்கிருர்கள். அந்த த்வீபத்தினிடையில் ஒரே பர்வதம் இருக்கின்றது. அது மானஸோத்தரமென்னும் பேருடையது. அது தனக்கு உள்ளும்புறமும் முள்ளவர்ஷங்களுக்கு எல்லைப் பர்வதமாயிருக்கின்றது; பதினயிரம் யோஜனை உயரமும் அவ்வளவு விஸ்தாரமும் முடையது. அந்தப் பர்வதத்தின் மேல் நான்கு திக்குக்களிலும் இந்த்ரன் முதலிய நான்கு லோகபாலர்களின் பட்டணங்கள் எற்பட்டிருக்கின்றன. மேருவைச் சுற்றுகின்ற ஸூர்யரதத்தின் ஸம்வத்ஸரரூபமான சக்ரம் அப்பர்வதத்தின்மேல் தேவதைகளின் பகலும் இரவுமாகிய உத்தராயண தக்ஷிணயனங்களால் லோகத்திலுள்ள சக்ரம் போல் சுழல்கின்றது. அந்த

த்வீபத்திற்கு அதிபதி ப்ரியவ்ரதனுடைய புள்ளாயாகிய வீதிஹோத்ரனென்பவன். அவன் அந்த த்வீபத்தை இரண்டு வர்ஷங்களாகப் பிரித்துத் தன்புள்ளகளின் பேர்களை இட்டு, ரமணனென்றும் கதாகதனென்றும் பேருடைய அவர்களை அவ்வர்ஷங்களுக்கு ப்ரபுக்களாக ஏற்படுத்தித் தான் தமையனுகிய மேதாதிதியைப் போலப் பகவதாராதன ரூபமான கர்மங்களைச் செய்து கொண்டிருந்தான். அவ்வர்ஷங்களி லுள்ள புருஷர்கள் கர்மபந்தத்தைப் போக்குவதற்காகக் கர்மயோகத் தோடு கூடின த்யானயோகத்தினல் ப்ரஹ்மதேவனைச் சரீரமாகவுடைய பகவானை ஆராதிக்கிறார்கள். "வர்ணாச்ரமாதி பேதங்களையுடைய ஜனங்கள் ப்ரஹ்மத்திற் குச் சரீரமாயிருப்பவனும் வேதங்களால் அறியத் தகுந் தவனும் ஜகத் ஸ்ருஷ்டியாகிற கார்யத்தையே தடத்துந் தன்மையனுமாகிய எவனை, ஜகத்தெல்லாம் இவனே யென்னும் அபேத புத்தியுடன் மாறுமல் ஆராதிக்கின் றார்களோ அப்படிப்பட்ட மஹானுபாவனுகிய ப்ரஹ்ம தேவனுக்கு நமஸ்காரம்" என்னும் இம்மந்த்ரத்தை ஜபிக்கிறார்கள். அந்தச் சுத்த ஸமுத்ரத்திற்கு அப்புறத் தில்ஜனஸஞ்சாரமுள்ள உள்பாகத்திற்கும் ஜனஸஞ்சார மில்லாத வெளிபாகத்திற்கும் இடையில் சுற்றிலும் லோகாலோகமென்னும் பர்வதம் ஏற்பட்டிருக்கின்றது. மானஸோத்தர பர்வதத்திற்கும் மேருபர்வதத்திற்கும் இடையில் எவ்வளவு பூமி இருக்கின்றதோ அவ்வளவு பூமி சுத்தஸமுத்ரத்திற்கு அப்புறத்தில் இருக்கின்றது. அதற்கப்புறமுள்ள பூமி ஸ்வர்ணமயமாய்க் கண்ணாடிப் புறம் போன்றிருக்கும். அப்பூமியில் வைத்த பொருள் எதுவும் மீளவும் புலப்படுகிறதில்லை. ஆகையால் அந்தப் பூமி ஒரு ப்ராணிபுமின்றிச் சூன்யமாயிருக்கிறது.

அதை அலோகமென்கிறார்கள். தன்வரையிலுமுள்ள பூமிலோகமென்றும் தனக்கு வெளியிலுள்ள பூமி அலோகமென்றும் கூறப்படுகின்றன வாகையால் இடையிலுள்ள பர்வதம் லோகாலோகமென்று பேர்பெற்றது. அப்பர்வதம் மூன்று லோகங்களுக்கும் வெளியில் சுற்றிலும் ஈஸ்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. ஸூர்யன் முதல் த்ருவன் வரையிலுள்ள ஜ்யோதிஸ்ஸமூஹங்களின் ஒளிகள் கீழிருக்கின்ற பூலோகம் முதலிய மூன்று லோகங்களையும் விளங்கச் செய்கின்றன. லோகாலோக பர்வதம் தடுக்கின்றமையால் அதற்கு (வெளியில் சென்று விளக்கம் செய்யமாட்டா. அப்பர்வதம் த்ருவனையும் மறைக்கும்படியான அவ்வளவு உயரமும் விஸ்தாரமும் உடையது. இப்பூமண்டலத்தின் நிலைமை இவ்வளவே அளவோடும் அடையாளத்தோடும் ஆகாரத்தோடும் பண்டிதர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இந்த லோகாலோகபர்வதம் ஐம்பதுகோடி யோஜனை விஸ்தாரமுடைய பூமியின் நான்கில் ஒருபாகமாகிய பன்னிரண்டரைகோடி யோஜனை உயரமும் அவ்வளவு விஸ்தாரமுமுடையது. அப்பர்வதத்தின்மேல் நான்கு திக்குக்களிலும் ஸ்மஸ்த லோகங்களுக்கும் குருவாகிய ப்ரஹ்மதேவனால் லோக க்ஷேமத்தின் பொருட்டு ருஷபம் புஷ்கரசூடம் விமானம் அபராஜிதம் என்னும் பேருடைய மேலான யானைகள் நான்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த யானைகளுக்கும் தனது அம்சபூதர்களான இந்த்ராதிலோகபாலர்களுக்கும் பலவகையான ஸாமர்த்யங்கள் வளர்கைக்காகவும் ஸமஸ்த லோகங்களின் க்ஷேமத்திற்காகவும் தன் மாயையால் ஏற்பட்ட பலவகை லோகயாத்ரைகளைப் பாதுகாப்பதற்காகவும் பெரிய மேன்மைக்

கிடமான கல்யாண குணங்கள் நிறைந்தவனும் நித்ய விபூதி லீலாவிபூதி ஆகிய இரண்டு விபூதிகளுக்கும் ப்ரபுவும் ஸர்வாந்தராத்மாவுமாகிய ஸ்ர்வேஸ்வரன் சுத்த ஸத்வ மயமாயிருப்பதும் கர்மயோகம் ஜ்ஞானயோகம் வைராக்யம் இவைகளால் உதவி செய்யப்பெற்ற அணிமாதி அஷ்டைஸ்வர்யஸித்தி பர்யந்தமான உபாஸனத்தினால் காணத்தகுந்ததுமாகிய திவ்ய மங்களவிக்ரஹத்துடன் கூடி விஷ்வக்ஸேனர் முதலிய தன் பரிஜனங்களால் சூழப்பட்டுச் சங்கு சக்ரம் முதலிய தன் ஆயுதங்களால் திகழ்கின்ற பாஹு தண்டங்கள் விளங்கப்பெற்றுக் கல்பாவஸானம் வரையில் அந்த லோகாலோக பர்வதத்தில் கற்புறத்திலும் வீற்றிருக்கிறான். மன்னவனே! லோகாலோகத்திற்கு வெளியிலுள்ள அலோகமென்னும் பூமி லோகத்தோடொத்த விஸ்தாரமுடையது. அதற்கு அப்புறத்தில் பரிசுத்தமான யோகப்ரபாவமுடைய யோகீஸ்வரர்களின் ஸஞ்சாரமேயன்றி மற்ற ஜனங்களின் கடையாட்டம் கிடையாது. அண்டத்தினுடைய அடிபாகத்திற்கும் மேல் பாகத்திற்கும் இடையில் ஸூர்யன் இருக்கிறான். ஸூர்யனுக்கும் அண்டப் பித்திக்கும் இடையில் இருபத்தைந்து கோடி யோஜனைகள் இருக்கின்றன. இந்த ஸூர்யன் நிலையற்றதாகிய இவ்வண்டத்தின் இடையில் இருக்கிறானையால் [1] மார்த்தண்டனென்று கூறப்படுகிறான். வெயர்ணம்போல் ரமணீயமான இவ்வண்டத்திற்குள் கர்ப்பம் போன்றிருக்கிறானையால் ப்ரஹ்மதேவன் ஹிரண்யகர்ப்பனென்று பேர்பெற்றான். திக்கு முதலிய திசை

---

1. மரு-தை - அண்டே ஹவ:—மார்த்தண்ட:—மரு-தமென்றால் நிலையற்றதென்று பொருள். அத்தகைய அண்டத்தில் உண்டானவன் மார்த்தண்டன்.

களும் ஆகாயம் த்யுலோகம் பூமி என்னும் பேதங்க ளும் ஸ்வர்க்கமும் மோக்ஷஸ்தானமும் நரகங்களும் அதலம் முதலிய பாதாள லோகங்களும் ஆகிய இவை யெல்லாம் ஸூர்யனால் தான் பிரிக்கப்படுகின்றன. பக வத்ஸ்வரூபனாகிய இந்த ஸூர்யன் தேவர்கள் திர்யக் குகள் மனுஷ்யர்கள் ஸர்ப்பங்கள் பறவைகள் கொடி கள் செடிகள் ஆகிய ஸமஸ்தமான ஜீவ ஸமூஹங்களு டைய சக்ஷுரிந்த்ரியங்களையும் விளங்கச் செய்கிறான். இருபதாவது அத்யாயம் முற்றிற்று.

ஸூர்யசதியை நிரூபித்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—பூமண்டலத்தின் நிலைமை இவ்வளவுதான். த்யுலோகத்தின் பரிமாணமும் இவ்வ ளவே யென்று அதை அறிந்த பெரியோர்கள் சொல்லு கிறார்கள். கோதுமை முதலியவற்றை அரைக்கும் பொருட்டுச் செய்த கல் யந்த்ரத்தின் அடிபாகத்தின் அளவைச் சொன்னால் அதனோடொத்த அதன்மேல் பாகத்தின் அளவையும் அறியலாமல்லவா? இன்னமும் இரண்டு பாகமாயிருக்கின்ற உளுந்து பயறு முதலிய வற்றின் அடிப்பாகம் இவ்வளவென்று தெரிந்தால் அதன் மேல்பாகமும் அவ்வளவென்று தெரிந்துகொள்ள லாமல்லவா? அங்ஙனமே ப்ரஹ்மாண்டத்தின் அடி பாகமாகிய பூமண்டலத்தின் அளவைச்சொன்னமாத் ரத்தினால் அதன்மேல் பாகமாகிய த்யுலோகத்தின் அள வையும் சொன்னாற் போலவேயாகின்றது. அந்தப் பூமண்டலத்திற்கும் த்யுமண்டலத்திற்கும் இடையில் அந்தரிக்ஷலோகம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவ் வந்தரிக்ஷலோகம் அவ்விரண்டு லோகங்களிலும் கீழும்

மேலும் ஸம்பந்தித்திருக்கின்றது. எரியுந்தன்மையுள்ள அக்னிமுதலிய வஸ்துக்களில் சிறந்த மஹாநுபாவனுகிய ஸூர்யன் அவ்வந்தரிக்ஷ லோகத்தினிடையில் இருந்துகொண்டு வெயிலால் மூன்று லோகங்களையும் எரிக்கிறான்; தன்னொளியால் விளங்கவும் செய்கிறான். அத்தன்மையுள்ள அந்த ஸூர்யன் உதகயனம் தக்ஷிணாயனம் வைஷுவதமென்னும் பேருடைய மந்தகதி சீக்ரகதி ஸமகதியென்னும் மூன்று கதிகளால் ஆதாஹரணம் அவதாரஹரணம் ஸமவஸ்தானமென்று சொல்லப்படுகிற மகரம் முதலிய ராசிகளில் ஈப்பவரால் ஏற்படுத்தப்பட்ட காலத்தின்படி ஏறுவதும் இறங்குவதுமாய்ச் சென்று அஹோராத்ரங்களை வளர்த்தவைகளாகவும் குறுகினவைகளாகவும் ஸமங்களாகவும் செய்கிறான். ஸூர்யன் மேஷம் துலை இந்த ராசிகளில் இருக்கும்பொழுது அஹோராத்ரங்கள் ஸமங்களாயிருக்கின்றன. வ்ருஷபம் முதலிய ஐந்து ராசிகளில் ஸஞ்சரிக்கும் பொழுது பகல் மாத்ரமே வளர்கின்றது. ராத்ரிகளில் மாஸந்தோறும் ஓவ்வொரு நாழிகை குறைகின்றது. வ்ருச்சிகம் முதலிய ஐந்து ராசிகளில் இருக்கும் பொழுது ராத்ரிகள் வளர்கின்றன. பகல்களில் மாஸந்தோறும் ஓவ்வொரு நாழிகை குறைகின்றது. தக்ஷிணாயனம் வரையில் பகல் வளர்ந்துகொண்டே வரும். உத்தராயணம் வரையில் ராத்ரி வளர்ந்துகொண்டே வரும். மானஸோத்தர பர்வதத்தில் இருந்துகொண்டு மேருவைச் சுற்றி வருகின்ற ஸூர்யன் தினமும் ஒன்பது கோடியே ஐம்பத்தோருலக்ஷம் யோஜனைகள் சுற்றுகிறானென்று பெரியோர்கள் சொல்கிறார்கள். அம்மானஸோத்தரபர்வதத்தில் மேருவுக்குக் கிழக்கில் தேவதானி யென்கிற இந்த்ரபட்டணம்

உள்ளதென்றும், அதற்கு வடக்கில் ஸம்யமனியென்கிற யமபட்டணம் உள்ளதென்றும், அதற்கு மேற்கில் நிம்லோசனி யென்கிற வருணபட்டணம் உள்ளதென்றும், அதற்கு வடக்கில் விபாவரி யென்கிற ஸோமபட்டணம் உள்ளதென்றும் சொல்லுகிறார்கள். மேருவுக்கு நாற்புறங்களிலுமுள்ள அந்தத் தேவதானி முதலிய நான்கு பட்டணங்களில் கால விசேஷத்திலுல் பூமண்டலத்திலுள்ள ப்ராணிகளின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குக் காரணங்களான ஸூர்யோதயம் மத்யாஹ்னம் ஸூர்யாஸ்தமயம் நிசீதம் முதலியன உண்டாகின்றன. (மேருவுக்குத் தென்புறத்திலிருப்பவர்க்கு இந்த்ர பட்டணமான தேவதானியில் ஸூர்யோதயமும் யமபட்டணமான ஸம்யமனியில் மத்யாஹ்னமும், வருணபட்டணமான நிம்லோசனியில் அஸ்தமயமும், ஸோமபட்டணமாகிய விபாவரியில் நிசீதமும் உண்டாகின்றன. உதயம் மத்யாஹ்னம் அஸ்தமயம் இவை ப்ராணிகளின் [1] ப்ரவ்ருத்தி காலங்கள். அப்பொழுது ப்ராணிகள் தொழில் செய்கின்றன. நிசீதமும் அதற்கு முன் பின் பாகங்களும் [2] நிவ்ருத்தி காலங்கள். அப்பொழுது ப்ராணிகள் உறங்குகின்றன. மேருவுக்கு மேற்கிலிருப்பவர்களுக்கு ஸம்யமனியைத் தொடங்கிக் கிழக்கு முதலிய திக்குக்கள் ஏற்படுகின்றன. ஸூர்யோதயாதிகளும் அந்த க்ரமத்திலேயே உண்டாகின்றன. மேருவுக்கு வடக்கிலிருப்பவர்களுக்கு நிம்லோசனியைத் தொடங்கிக் கிழக்கு முதலிய திக்குகளும் உதயாதிகளும் ஏற்படுகின்றன. மேருவுக்குக் கிழக்கிலிருப்பவர்களுக்கு விபாவரியைத் தொடங்கிக் கிழக்கு முதலிய திக்குகளும்

---

1. நடையாட்ட முள்ள காலங்கள்.
2. நடையாட்ட மில்லாத காலங்கள்.

உதயாதிகளும் ஏற்படுகின்றன.) மேருவிலிருப்பவர்க ளுக்கு உதயாதிகள்கிடையா. ஸூர்யன் அவர்களுக்கு எப்பொழுதும் மத்யாஹ்னத்திலேயே இருந்து ப்ரவ்ருத் தியை விளைத்துக்கொண்டு வருகிறான். ஸூர்யன் ஆகா யத்தில் திரியும்பொழுது தன்னை எதிர் முகமாகப் பார்க் கும் ஜனங்களுக்கு மேரு இடப்பக்கத்திலும் தனக்கு வலப்பக்கத்திலும் இருக்கும்படி செய்வான். ஸூர்யனை காம் எவ்விடத்தில் உதிக்கக் காண்கிறோமோ அதுவே நமக்குக் கிழக்கு. அப்பொழுது நமக்கு மேருபர்வதம் இடப்பக்கத்திலிருக்கின்றது; ஸூர்யனுக்கு வலப்பக் கத்திலிருக்கின்றது. ஸூர்யன் எவ்விடத்தில் உதிக்கி றானே அவ்விடத்திற்கு நூல் பிடித்தாற்போல நேரான இடத்தில் வந்துசேரும்பொழுது கண்ணுக்குத் தெரியா மல் மறைகிறான். அதுவே அஸ்தமயம். ஸூர்யன் எவ் விடத்தில் இருந்துகொண்டு வேர்வை உண்டாகும்படி மத்யாஹ்னவேளையை விளைத்து எரிக்கிறானே அவ் விடத்திற்கு நூல் பிடித்தாற்போல் நேரான இடத்தில் போய்ச் சேரும்பொழுது அர்த்தராத்ரியாய் ப்ராணி கள் உறங்கும்படி செய்கிறான். ஸூர்யனுடைய உதயத் தையும் அஸ்தமயத்தையும் பார்க்கிறவர்கள் தமக்கு அர்த்தராத்ரியை விளைக்கும் ஸூர்யனைப் பார்க்கமாட் டார்கள். (யமதிக்கில் இருக்கிறவர்களுக்கு ஸூர்யோ தயமாகும்பொழுது இந்த்ரதிக்கிலிருக்கிறவர்களுக்கு மத்யாஹ்னமாயிருக்கும். வருணதிக்கில் அர்த்தராத்ரி யாயிருக்கும். யமதிக்கில் மத்யாஹ்னமாகும்பொழுது இந்த்ர திக்கில் அஸ்தமயம். வருணதிக்கில் உதயம். ஸோமதிக்கில் அர்த்தராத்ரம். யமதிக்கில் அஸ்தமய மாகும்பொழுது இந்த்ரதிக்கில் அர்த்தராத்ரம். வருண திக்கில் மத்யாஹ்னம். ஸோமதிக்கில் ஸூர்யோதயம்.

யம திக்கில் அர்த்தராத்ரமாகும்பொழுது இந்த்ர திக்கில் உதயம். வருண திக்கில் அஸ்தமயம். ஸோம திக்கில் மத்யாஹ்னம். ஸூர்யன் இந்த்ரபட்டணத்தினின்று புறப்பட்டுப் பதினைந்து காழிகைக்குள் இரண்டு கோடியே முப்பத்தேழுலக்ஷத்து எழுபத்தையாயிரம் யோஜனைகள் கடந்து யமபட்டணம் சேருவான். யம பட்டணத்தினின்று புறப்பட்டு அதே காழிகைக்குள் அவ்வளவு யோஜனைகள் கடந்து வருணபட்டணம் சேருவான். அங்ஙனமே ஸோம பட்டணத்திற்கும் இந்த்ர பட்டணத்திற்கும் போவான். அங்கிருந்து மீளவும் முன்போலவே சுற்றிக்கொண்டு வருவான். மற்ற சந்த்ரன் முதலிய க்ரஹங்களும் அச்வினி முதலிய நக்ஷத்ரங்களும் மற்ற ஸாதாரண நக்ஷத்ரக் கூட்டங்களும் அங்ஙனமே உதிப்பதும் அஸ்தமிப்பதுமாயிருக்கின்றன. வேதஸ்வரூபமாக உபாஸிக்கத் தகுந்த ஸூர்யரதம் ஒரு முஹூர்த்த காலத்தில் முப்பத்து நான்கு லக்ஷத்து எண்ணூறு யோஜனை தூரம் தேவதானி முதலிய நான்கு பட்டணங்களிலும் சுற்றுகின்றது. அந்த ரதத்தின் ஒரு சக்ரம் பன்னிரண்டு இலைகளும் ஆறுகட்டுகளும் மூன்று நாபிகளும் உடையது. அதை ஸம்வத்ஸரஸ்வரூபமாகவும், பன்னிரண்டு இலைகளைப் பன்னிரண்டு மாதங்களாகவும், ஆறுகட்டுகளை ஆறு ருதுக்களாகவும், மூன்று நாபிகளைச் சாதுர்மாஸ்யங்களாகவும் உபாஸிக்கிறார்கள். அந்த ரதத்தின் இருசிலிருக்கும் ஏர்க்கால் மேருவின் நுனியில் கட்டுண்டிருக்கின்றது. அந்த ரதத்தின் மற்றொரு பாகம் மானஸோத்தர பர்வதத்தில் ஐம்பதினாயிரம் யோஜனைகளுக்கு மேல் கட்டுண்டிருக்கின்றது. ஸூர்ய ரதத்தின் சக்ரம் அந்த மற்றொரு பாகத்தில் கோக்கப்பெற்றுத்

தைலயந்த்ரம்போல் மானஸோத்தர பர்வத்தின்மேல் சுற்றுகின்றது. இரண்டாவது இருசிலிருக்கும் ஏர்க்கால் அந்தச் சக்ரத்தின் ஓரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். முதலேர்க்கால் மேருவினின்று மானஸோத்தரம் வரையில் நீண்டிருக்கும்; அது ஒரு கோடியே ஐம்பத்தேழு லக்ஷத்து ஐம்பதினாயிரம் யோஜனை அளவுடையது. இரண்டாவது ஏர்க்கால் அதில் கான்கில் ஒரு பாகமுடையது (முப்பத்தொன்பது லக்ஷத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு யோஜனை அளவுடையது.) அதன்மேல்பாகம் த்ருவனிடத்தில் தைலயந்த்ரத்தின் ஏர்க்கால்போலக் கட்டுண்டிருக்கின்றது. அந்த ரதத்தில் ரதிகன் உட்காருமிடம் முப்பத்தாறு லக்ஷ யோஜனை நீண்டிருக்கும். அதில் கான்கில் ஒரு பாகமாகிய ஒன்பது லக்ஷயோஜனை விஸ்தாரமுடையது. அந்த ஸூர்ய ரதத்தின் நகத்தடியும் ஒன்பது லக்ஷ யோஜனை நீளமுடையது. அதில் ஏழு குதிரைகள் அருணனால் கட்டப்பட்டிருக்கின்றன. அவை காயத்ரி முதலிய சந்தங்களின் நாமங்களுடையவை. ஸூர்யனை அவன் போகவேண்டிய இடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. அருணன் ஸூர்யனுக்கு முன்னே மேற்கு முகமாய்க் குதிரைகளை கடத்தும் வ்யாபாரத்தில் இருக்கிறான். அங்ஙனமே கட்டை விரல் கணுவின் உயரமுடைய வாலகில்யரென்று ப்ரஸித்தர்களான அறுபதினாயிரம் ரிஷிகள் நல்லுரை கனைச் சொல்லும்படி நியமிக்கப்பட்டு ஸூர்யனுக்கு முன்னே அந்த ரதத்தில் இருந்து கொண்டு அவனை ஸ்தோத்ரம் செய்கிறார்கள். அங்ஙனமே மற்ற ரிஷிகள் கந்தர்வர்கள் அப்ஸர ஸ்த்ரீகள் நாகர்கள் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் தேவர்கள் என்கிற இவ்வேழு கூட்டத்

தவர்களும் ஒவ்வொரு கூட்டத்திலும் இரண்டிரண்டு பேர்களாய்ச் சேர்ந்து பதினைந்து பேர்கள் வெவ்வேறு காமங்கள் பூண்டு பரமாத்மஸ்வரூபனும் வெவ்வேறு காமங்களுடையவனும் மஹாநுபாவனுமாகிய ஸூர்யனை மாஸந்தோறும் தனித்தனி வ்யாபாரங்களால் உபாஸிக்கின்றார்கள். இப்பூமண்டலம் ஒன்பது கோடியே ஐம்பத்தோரு லக்ஷம்யோஜனை சுற்றளவுடையது. அதில் ஸூர்யன் ஒரு க்ஷணத்தில் இரண்டாயிரம் யோஜனைகளும் இரண்டு கூப்பிடு தூரமும் போகிறான். இருபத்தோராவது அத்யாம் முற்றிற்று.

சந்த்ரசுக்ராதிகளின் ஸ்தானத்தைக் கூறுதல்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—'பகவத் ஸ்வரூபனாகிய ஸூர்யன் மேருவையும் த்ருவனையும் ப்ரதக்ஷிணமாய்ச் சுற்றுகிறானென்றும், நக்ஷத்ரங்களுக்கு எதிர்முகமாய் ராசிகளில் ஸஞ்சரிக்கிறானென்றும் சொன்னீர். இவ்விரண்டும் ஒன்றோடொன்று பொருந்தவில்லை. இது பொருந்தும் விதத்தை அறியவிரும்புகிறேன்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார் :— குயவனுடைய சக்ரம் சுற்றும்பொழுது அதிலிருக்கிற எறும்பு முதலியவைகளும் அதனுடன் சுழலுகின்றன. அதுவன்றித் தாமும் போகின்றன. ஓரிடத்தில் இருக்கின்றவை சிறிது நேரத்துக்குள் மற்றோரிடத்தில் புலப்படுகின்றன வாகையால் சக்ரத்துடன் சுற்றுவது தவிர அவற்றிற்கு வேறு கடையாட்டமும் உண்டென்பதில் ஸந்தேகமில்லை. இங்ஙனமே நக்ஷத்ராதிகளோடுகூட த்ருவனையும் மேருவையும் ப்ரதக்ஷிணமாய்ச் சுற்றுகிற கால சக்ரத்துடன்

அதிலுள்ள ஸூர்யன் முதலிய க்ரஹங்கள் சுற்றிக் கொண்டிருப்பினும் ஒரு நக்ஷத்ரத்திலும் ஒரு ராசியிலுமிருக்கிற அவை மற்றொரு நக்ஷத்ரத்திலும் மற்றொரு ராசியிலும் புலப்படுகின்றன வாகையால் அவற்றிற்கு வேறு கதியும் உண்டென்பதில் ஸந்தேஹமில்லை. ஷாட்குண்ய பூர்ணனும் ஆதிபுருஷனுமாகிய ஸாக்ஷாத் நாராயணனே இந்த ஸூர்ய ஸ்வரூபனைய் வேதங்கள் தன் ஸ்வரூபகுணங்களை விவரித்துச் சொல்லவும் பண்டிதர்கள் தன்னை உபாஸிக்கவும் பெற்றுக் கர்மங்களின் சுத்திக்காகத் தன்னைப் பன்னிரண்டு விதமாகப்பிரித்து இவ்வுலகங்களின் க்ஷேமத்திற்காக வஸந்தம் முதலிய ஆறு ருதுக்களில் குளிர் வெய்யில் காற்று மழை முதலிய ருதுகுணங்களை விளக்கின்றன். உலகத்திலுள்ளவர்கள் வேத சாஸ்த்ரத்தில் சொன்ன வர்ணப்ரமாசாரங்களை அனுஸரித்து யஜ்ஞாதி கர்மங்களாலும் அத்தகைய உபாஸன விசேஷங்களாலும் இந்த ஆதித்ய ஸ்வரூபனாகிய பகவானை ஆராதித்து அனாயாஸமாகச் சீக்ரத்தில் ஸ்வர்க்க மோக்ஷாதி ரூபமான நன்மையைப் பெறுகிறார்கள். ஓ மன்னவனே! லோகங்களுக்கு அந்தராத்மாவாகிய பகவான் இந்த ஆதித்யஸ்வரூபமாயிருந்து த்யுலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இடையில் அந்தரிக்ஷலோகத்தின் மத்யத்திலுள்ள சிம்சுமார சக்ரமென்கிற காலசக்ரத்தில் அடங்கின மேஷம் முதலிய ராசிகளில் நக்ஷத்ரங்களுக்கெதிர் முகமாய் ஸஞ்சரிக்கையில் ஒவ்வொரு ராசியில் ஸஞ்சரிக்குங் காலம் ஒரு மாதம் விதமாக ஸம்வத்ஸரத்தின் அவயவங்களான பன்னிரண்டு மாதங்கள் ஏற்படுகின்றன. அவையே ராசிகளென்னும் பேருடையவை. இரண்டு பக்ஷங்கள் ஒருமாஸமென்றும் இரண்டேகால் நக்ஷத்

ரம் ஒரு அஹோராத்ர மென்றும் சொல்லுகிறார்கள். ஸூர்யன் பன்னிரண்டு ராசிகளின் ஆறிலொருபாக மாகிய இரண்டு ராசிகளில் எவ்வளவு காலத்தில் ஸஞ்சரிக்கிறானே அக்காலம் ருதுவென்று கூறப்படும். அது ஸம்வத்ஸரத்தின் ஆறிலொரு பாகம். அவன் எவ்வளவு காலத்தில் ஆறு ராசிகளில் ஸஞ்சரிக்கிறானே, அக்காலம் அயனமென்கிறார்கள்; அது ஸம்வத்ஸரத்தின் இரண்டில் ஒரு பாகம்; ஆகாசமண்டலத்திற்கும் பூமண்டலத்திற்கும் இடையிலுள்ளதும் பன்னிரண்டு ராசிகள் அடங்கினதுமாகிய அந்தரிக்ஷலோகம் முழுவதும் மந்தகதி சீக்ரகதி ஸமகதி ஆகிய இம்மூன்று கதிகளால் எவ்வளவு காலத்தில் ஸஞ்சரிக்கிறானே அக்காலம் ஸம்வத்ஸர மென்றும் பரிவத்ஸரமென்றும் இளாவத்ஸரமென்றும் அநுவத்ஸரமென்றும் இத்வத்ஸரமென்றும் வழங்கி வருகிறதென்று சொல்லுகிறார்கள். ஸூர்யமண்டலத்தினின்று லக்ஷயோஜனதூரத்துமேல் சந்த்ரன் புலப்படுகிறான். அவன் வெகு வேகமாக ஸஞ்சரிப்பவன். ஆகையால் உக்ரசாரியென்று கூறப்படுவான். ஸூர்யன் ஒரு ஸம்வத்ஸரத்தில் ஸஞ்சரிக்கிற அந்தரிக்ஷமண்டலத்தைச் சந்த்ரன் இரண்டு பக்ஷங்களடங்கின ஒரு மாதத்திற்குள் ஸஞ்சரிக்கிறான். ஸூர்யன் ஒருமாதத்தில் ஸஞ்சரிக்கும் மார்க்கத்தைச் சந்த்ரன் அவன் இரண்டேகால் நக்ஷத்ரங்களில் ஸஞ்சரிக்குங் காலத்திற்குள் ஸஞ்சரிக்கிறான். அவன் ஒரு பக்ஷத்தில் ஸஞ்சரிக்கும் மார்க்கத்தை இவன் ஒரு தினத்தில் ஸஞ்சரிக்கிறான். மற்றும், ஓ மன்னவனே! சந்த்ரன் வளர்வதும் தேய்வதுமான கலைகளால் சுக்ல பக்ஷ க்ருஷ்ணபக்ஷங்களை விளைத்துப் பிதிருக்களுக்குப் பகலும் இரவுமாகிய தினத்தை ஏற்படுத்திக்கொண்டு

ஸமஸ்த ப்ராணிகளுடைய ப்ராணன்களுக்கும் த்ருப்
திய விளைத்து ஜீவனோபாதுவாய் முப்பது முஹூர்த்
தங்களுக்குள் ஒரு நக்ஷத்ரத்தில் ஸஞ்சரிக்கின்றன். பதி
னாறு கலைகளையுடைய இந்தச் சந்த்ரரூபியான பகவான்
மனத்திற்கு அதிஷ்டான தேவதையாகையால் மநோ
மயனென்றும் ஓஷதிகளுக்கு ப்ரபுவாகையால் அன்ன
மயனென்றும் ஸமஸ்த ப்ராணிகளுடைய ஜீவனத்திற்
கும் காரணனாகையால் அம்ருதமயனென்றும் தேவதை
கள் பித்ருக்கள் மநுஷ்யர்கள் பூதர்கள் பசுக்கள் பக்ஷி
கள் ஆகிய அனைவரின் ப்ராணன்களுக்கும் த்ருப்தியை
விளைக்கின்றமையால் ஸர்வமயனென்றும் சொல்லு
கிறார்கள். அந்தச் சந்த்ரமண்டலத்தினின்று மூன்று
லக்ஷயோஜனைகளுக்கு மேல் அபிஜித்துடன் சேர்ந்து
இருபத்தெட்டு நக்ஷத்ரங்கள் கால சக்ரத்தில் அந்த
ராத்மாவான ஈச்வரனால் தாண்டப்பட்டு மேருவுக்
குத் தென்புறத்திலேயே சுற்றிக்கொண்டிருக்கின்றன.
ஸூர்யாதிகளைப்போல் அவற்றிற்குக் கால சக்ரத்
துடன் சுற்றுவதொழிய வேறுகதி கிடையாது. அந்த
நக்ஷத்ர மண்டலத்தினின்று இரண்டு யோஜனைகளுக்கு
அப்புறத்தில் சுக்ரன் புலப்படுகிறான். அவன் ஸூர்ய
னுக்கு முன்னும் பின்னும் கூடவும் ஸஞ்சரிக்கிறான்.
ஸூர்யனோடு கூட ஸஞ்சரிக்கும்பொழுது அவனைப்
போலவே மந்தம் சீக்ரம் ஸமம் என்கிற மூன்று கதி
களால் ஸஞ்சரிக்கிறான். அவன் எப்பொழுதும் உலகங்
களுக்கு அநுகூலனாகவே இருப்பான். க்ரமமாயிருக்
கிற நக்ஷத்ரம் முதலியவற்றைக் கடந்து போகையாகிற
கதிவிசேஷத்தினால் பெரும்பாலும் மழை ஊஹிக்கப்
படுகின்றது. அவன் மழையை நிறுத்தும் க்ரஹத்தையும்
தடுத்து மழை பெய்விக்கும் தன்மையுடையவன். அந்தச்

சுக்ரனுடைய கதியை நிரூபித்துச் சொன்னதால் புதனுடைய கதியும் கூறப்பட்டதாம். சுக்ரமண்டலத்திற்கு மேல் இரண்டு லக்ஷயோஜனையில் சந்த்ரனது புதல்வனாகிய புதன் புலப்படுகின்றான். அவன் பெரும்பாலும் உலகங்களுக்கு அசுபத்தையே விளைத்துக் கொண்டிருப்பான். அவன் ஸஞ்சரிக்கும் பொழுது பெருங்காற்று அதிக மழை மழையில்லாமை முதலிய பயத்தை அறிவிப்பான். அந்தப் புதமண்டலத்திற்குமேல் இரண்டு லக்ஷ யோஜனையில் அங்காரகன் புலப்படுகின்றான். அவன் வக்ரமாக ஸஞ்சரிப்பானையின் ஒவ்வொரு ராசியையும் மூம்மூன்று பக்ஷங்களில் ஸஞ்சரிப்பான். இல்லாதபக்ஷத்தில் பன்னிரண்டு ராசிகளையும் க்ரமமாகவே ஸஞ்சரிப்பான். அவன் பெரும்பாலும் அசுபக்ரஹம். துக்கத்தையே தெரிவிப்பான். அவ்வங்காரக மண்டலத்திற்குமேல் இரண்டுலக்ஷ யோஜனையில் மஹானுபாவராகிய ப்ருஹஸ்பதி இருக்கிறார். அவர் ஒவ்வொரு ராசியிலும் ஒரு ஸம்வத்ஸரம் ஸஞ்சரிக்கிறார். அவர் வக்ரசாரமில்லாதிருப்பதால், ப்ராஹ்மண குலத்திற்குப் பெரும்பாலும் அனுகூலராகவே யிருப்பார். அந்த ப்ருஹஸ்பதி மண்டலத்திற்குமேல் இரண்டு லக்ஷ யோஜன தூரத்தில் சனி தோற்றுகிறான். ஒவ்வொரு ராசியிலும் முப்பது மாதங்கள் மெல்ல மெல்ல ஸஞ்சரித்துக் கொண்டு எல்லா ராசிகளையும் க்ரமமாகவே சுற்றிவருகின்றான். ஜன்மராசிக்கு முன்னும் பின்னும் ஜன்மராசியிலும் ஸஞ்சரிக்குங் காலத்தினால் ஏற்படுகின்ற ஏழரை வர்ஷங்களில் அவன் அனைவர்க்கும் அசுபத்தையே விளைப்பான். அந்தச் சனிமண்டலத்திற்குமேல் பதினெருயோஜன தூரத்தில் ஸப்தரிஷிகள் புலப்படுகின்றார்கள். அவர்கள் உலகங்களுக்கு

க்ஷேமத்தை விளைத்துக்கொண்டு ஷாட்குண்ய பூர்ணரான ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சிறந்த ஸ்தானமாகிய த்ருவமண்டலத்தை பாதக்ஷிணமாய்ச் சுற்றுகின்றார்கள். இருபத்திரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

த்ருவமண்டலத்தின் ஸ்வரூபத்தைக் கூறுதலும், சிம்சுமார சக்ரஸ்வரூபமாகிய பரமபுருஷனுடைய நிலைமையை விவரித்தலும்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார் :—ரிஷி மண்டலத்திற்கு மேல் பதின்மூன்று லக்ஷம் யோஜனை தூரத்தில் ப்ரஸித்தி பெற்றதும் சிறப்புடையதுமாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ஸ்தானமென்று சொல்லுகிறார்கள். உத்தான பாதனுடைய பிள்ளையும் மஹாபாகவதனுமாகிய த்ருவன் அவ்விஷ்ணுவின் ஸ்தானத்தில் இருக்கிறான். அக்னி இந்த்ரன் கச்யபப்ராஜாபதி யமன் ஆகிய இவர்கள் ஓரே காலத்தில் சேர்ந்து அவனை இப்பொழுதும் வெகுமதியுடன் ப்ரதக்ஷிணம் செய்கிறார்கள். அவன் கல்பாந்த ஜீவிகளான புருஷர்களுக்கு ஆஸ்ரயமாயிருப்பவன். அவனுடைய ப்ரபாவத்தை முன்னமே மொழிந்திருக்கிறோம். அவன் கண்கொட்டாமல் விழித்துக் கொண்டிருப்பதும் அறியக்கூடாத வேகமுடையதும் பகவத் ஸ்வரூபமுமாகிய கால சக்ரத்தினால் சுற்றப்படுகிற ஸமஸ்தமான ஸாதாரண க்ஷேத்ரக் கூட்டங்களுக்கும் ஸூர்யன் முதலிய க்ரஹங்களுக்கும் அஸ்வினி முதலிய விசேஷ க்ஷேத்ரங்களுக்கும் மற்றுமுள்ள வற்றிற்கும் மொட்டை மரம்போல் அசையாத ஆதாரமாய் ஈஸ்வரனால் ஏற்படுத்தப்பட்டு ஸர்வகாலமும் விளங்குகிறான். புணையடிக்குமிடத்தில் எருதுமாடுகள்

புஷ்ணக்கம்பத்தில் கட்டுண்டு தத்தம் இடத்தைவிட்டு மாறுமலே அந்தப் புஷ்ணக்கம்பத்தைச் சுற்றி வலம் வருவதுபோல, நக்ஷத்ரக் கூட்டங்களும் ஸூர்யாதிக்ரஹங்களும் கால சக்ரத்தில் உள்ளும் புறமும் கட்டுண்டு வாயுவாகிற பாசத்தினல் தரிக்கப்பட்டுக் கல்பாவஸானம் வரையில் த்ருவஸ்தானமாய்க் கொண்டு அவனைச் சுற்றி வருகின்றன. மேகங்களும் பருந்து முதலிய பறவைகளும் காற்றுகிற பாசத்திற்குட்பட்டு கர்மத்தை ப்ரதானமாகக் கொண்டு கீழே விழாமல் ஆகாயத்திலேயே சுழலமிடுவதுபோல, நக்ஷத்ரக் கூட்டங்களும் கர்மமூலமாய் ப்ரக்ருதிக்கும் தமக்கும் உண்டான ஸம்பந்தத்தினல் அனுக்ரஹம் செய்யப்பெற்று நக்ஷத்ரசரீரங்களுடையவையாகி ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும்படியான தமது கர்மத்தினல் ஆகாசகதியைப் பெற்றுக் கீழே விழாதிருக்கின்றன. இந்த க்ரஹ நக்ஷத்ரக்கூட்டங்களுக்காதாரமான சிம்சுமாரமென்னும் காலசக்ரத்தை ஸமஸ்தசேதனசேதனரூபமான ஜகத்திற்கெல்லாம் தாரகனும் ஷாட்குண்ய பூர்ணனுமாகிய வாஸுதேவஸ்வரூபமாக த்யானிக்கவேண்டுமென்று சில வேதபாகங்களும் வைதிகரான சில பெரியோர்களும் சொல்லுகிறார்கள். சிம்சுமாரசக்ரத்தைச் சரீரமாகவுடைய வஸுதேவபகவானைப் பற்றின யோகதாரணையில் இந்த நக்ஷத்ரகணத்தைச் சிலயோகிகள் ஸாக்ஷாத்கரிக்கிறார்கள். ஸர்ப்பம்போல் சுற்றிக்கொண்டிருக்கிற சரீரமுடையதும் கீழ்முகமாயிருப்பதுமாகிய இந்தச் சிம்சுமாரசக்ரத்தின் வால்நுனியில் த்ருவன் இருக்கிறான். அதன் கீழ்ப்பாகத்தில் ப்ரஜாபதி அக்னி இந்த்ரன் தர்மன் என்னும் இக்கால்வர் இருக்கிறார்கள். அதன் அடியில் தாதா விதாதா என்னும் இருவர்

களும், இடையில் ஸப்தரிஷிகளும் இருக்கிறார்கள். அந்தச் சிம்சுமாரசக்ரத்தின் அவயவங்களில் எவ்வெவ் விடங்களில் எவரெவர் இருக்கின்றார்களோ, அவரவர்களோடு அந்தந்த அவயவத்தைச் சிலேஷிகள் த்யானித்தார்கள். அங்ஙனமே இப்பொழுதும் த்யானிக்கவேண்டும் ஸர்ப்பம்போல் சரீரத்தை ப்ரதக்ஷிணமாய்ச் சுற்றிக்கொண்டிருக்கிற அந்தச் சிம்சுமாரசக்ரத்தின் வலப்பக்கத்தில் உத்தராயண நக்ஷத்ரங்களான அபிஜித்து முதல் புனர்வஸுவரையிலுள்ள பதிணன்கு நக்ஷத்ரங்களும், இடப்பக்கத்தில் தக்ஷிணாயன நக்ஷத்ரங்களான புஷ்யம் முதல் உத்திராடம் வரையிலுள்ள பதிணன்கு நக்ஷத்ரங்களும் இருக்கின்றன. சுற்றிக்கொண்டிருக்கிற ஸர்ப்பம் போன்ற சிம்சுமாரசக்ரத்தின் இரண்டு பக்கங்களிலுள்ள அவயவங்களும் ஸமமான அளவுடையவை. அதன்பின் பாகத்தில் அஜவீதி. அஜவீதியாவது ஸூர்யன் சீக்ரமாய்ச்செல்லும் மார்க்க விசேஷம். அதுவே தக்ஷிணாயனமென்றும் கூறப்படும். அதன் மத்யத்தில் ஆகாசகங்கை இருக்கிறது. உத்தராயண நக்ஷத்ரங்களில் கடைசியாகிய புனர்வஸுநக்ஷத்ரம் வலது நிதம்பத்திலும், தக்ஷிணாயன நக்ஷத்ரங்களில் முதன்மையாகிய புஷ்ய நக்ஷத்ரம் இடது நிதம்பத்திலும் திருவாதிரை வலக்காலிலும், ஆஸ்லேஷை இடக்காலிலும், அபிஜித்து வலமூக்கிலும், உத்திராடம் இடமூக்கிலும், திருவோணம் வலக்கண்ணிலும், பூராடம் இடக்கண்ணிலும், அவிட்டம் வலக்காதிலும், மூலம் இடக்காதிலும், மகம் முதல் தக்ஷிணாயன நக்ஷத்ரங்கள் எட்டு இடப்பக்கத்து முகங்களிலும் த்யானிக்கத் தகுவை. அங்ஙனமே ம்ருகசீர்ஷம் முதலிய உத்தராயண நக்ஷத்ரங்கள் வலப்பக்கத்தில் ப்ரதிலோமமாக த்யா

னிக்கத் தக்கவை. சதயம் வலத்தோளிலும், கேட்டை இடத்தோளிலும் த்யானிக்கத் தக்கவை. அகஸ்த்ய நக்ஷத்ரம் மேல்கன்னத்திலும், யமநக்ஷத்ரம் அடிக்கன்னத்திலும், முகத்தில் அங்காரகனும், சனி உபஸ்தத்திலும், ப்ருஹஸ்பதி பிடரியிலும், மார்பில் ஸூர்யனும், ஹ்ருதயத்தில் நாராயணனும், கெஞ்சில் சந்த்ரனும், நாபியில் சுக்ரனும், ஸ்தனங்களில் அச்வினி தேவதைகளும், ப்ராண அபானங்களில் புதனும், கழுத்தில் ராஹுவும், கேது நக்ஷத்ரங்கள் ஸமஸ்த அங்கங்களிலும், மயிர்க்கால்களில் மற்ற எல்லா நக்ஷத்ரக்கூட்டங்களும் த்யானிக்கத் தக்கவை. ஸர்வதேவதாமயமான அத்தக்கால சக்ரம் எங்கும் நிறைந்திருக்குந் தன்மையனை பகவானுடைய உருவம். அதைத் தினந்தோறும் ஸந்த்யாகாலத்தில் பரிசுத்தனும் மௌனத்துடன் பார்த்துக்கொண்டு 'காலத்திற்கு ஆதாரமாயிருப்பதும் ப்ரஹ்மாதி தேவதைகளுக்கு ப்ரபுவும் மஹா புருஷனுடைய சரீரமுமாகிய காலசக்ரமென்கிற ஜ்யோதிர்லோகத்திற்கு நமஸ்காரம்' என்னும் மந்த்ரத்தைச் சொல்லி ஸ்தோத்ரம் செய்பவேண்டும். ஸூர்யாதி க்ரஹங்களும் அச்வினி முதலிய நக்ஷத்ரங்களும் மற்ற ஸாதாரண நக்ஷத்ரங்களும் அடங்கப்பெற்றுத் தேவதைகளுக்கு மேற்பட்டிருப்பதும் பகவானுடைய உருவமுமாகிய சிம்சுமாரமென்னும் காலசக்ரத்தை மூன்று காலங்களிலும் நமஸ்கரித்தாலும் நினைத்தாலும் மந்த்ரத்தை ஜபித்தாலும் பாபங்கள் சீக்ரத்தில் பறந்து போகும். இருபத்து மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

ஸூர்யனுக்குக் கீழுள்ள ராஹுவுமுதலிய வர்களின் நிலைமையையும், பூமிக்குக் கீழுள்ள அதலாதிலோகங்களின் நிலைமையையும் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஸூர்யனுக்குக் கீழ்ப் பதிணையிர யோஜனை தூரத்தில் ராஹுவுகக்ஷத்ரம்போல் லஞ்சரிக்கிறுனென்று சிலர் சொல்லுகிறார்கள். இவன் பகவானுடைய அனுக்ரஹத்தினல் தேவத்வத்தையும் க்ரஹமாயிருக்கையையும் பெற்றுன். இவன் ஸிம்ஹிகையின் புதல்வன். பாப புத்தியுள்ள அஸுரர்களிலும் அதமனையிருப்பவன். இவன் அத்தன்மை பெறுதற்கு உரியவனல்லன். ஆயினும் பகவானுடைய க்ருபையினல் பெற்றுன். இவனுடைய பிறவியையும் செயலையும் பற்றி மேல் சொல்லப்போகிறோம். நமக்கு ப்ரத்யக்ஷமாய் எரிகின்ற ஸூர்யனுடைய மண்டலம் பதிணையிரம்யோஜனை விஸ்தாரமுடையதென்றும், சந்த்ர மண்டலம் பன்னீராயிரம் யோஜனை விஸ்தாரமுடையதென்றும், ராஹு மண்டலம் பதின்மூவாயிரம் யோஜனை விஸ்தாரமுடையதென்றும் சொல்லுகிறார்கள். இந்த ராஹு அம்ருதபானஸமயத்தில் ஸூர்யனுக்கும் சந்த்ரனுக்கும் இடையில் நுழைந்து மறைத்தான். ஆகையால் அவர்கள் அவனைக் காட்டிக் கொடுத்தார்கள். அதனல் அவன் அவர்களிடத்தில் மாறுத வைரமுடையவனுயிருக்கிறுன். ஒருகால் பர்வத்தில் ஸூர்யனேடும் சந்த்ரனேடும் கலஹத்திற்காக அவர்களை எதிர்த்தோடுகிறுன். பகவான் அதைக்கண்டு அவ்விருவரையும் பாதுகாக்கும் பொருட்டு ஸுதர்சன மென்னும் பேருடையதும் தனக்கு ப்ரியமாயிருப்பதும் தேஜஸ்ஸினல் பொறுக்க முடியாததுமாகிய தன் சக்ராயுதத்தை ப்ரயோகிக்கி

ரூன். தேஜஸ்ஸினால் ஜ்வலித்துக் கொண்டு அடிக்கடி சுழலமிடுகின்ற அவ்வஸ்தாத்தைதக் கண்டு ராஹு முஹூர்த்தகாலம் எதிரே கின்று பயந்து மன நிலைமையில்லாமல் தூரத்திலேயே திரும்பி விடுகிரூன். அவன் ஓடும் பொழுது அவனுடைய மண்டலத்தினால் ஸூர்ய சந்த்ரர்களின் மண்டலம் மறைகின்றது. கோரகப்போவரணயின் முழுவதும் மறைகின்றது. வக்ரமாகப் போவரணயின் பாதியாகவும் ஏற்றக் குறைவாகவும் மறைகின்றது. ஜனங்கள் அதையே க்ரஹணமென்று சொல்லுகிரூர்கள். அந்த ராஹுமண்டலத்திற்குக் கீழ் பதினாயிரயோஜனையில் ஸித்தர் சாரணர் வித்யாதரர் இவர்களின் ஸ்தானங்கள் இருக்கின்றன. அதற்குக்கீழ் யக்ஷர் பிசாசர் ப்ரேதர் பூதர் ஆகிய இவர்கள் விளையாடுமிடமாகிய அந்தரிக்ஷலோகம் இருக்கின்றது. அது, காற்று எதுவரையில் மிகவும் வேகமாய் வீசுகின்றதோ மேகங்கள் எதுவரையில் புலப்படுகின்றனவோ அதுவரையில் வ்யாபித்திருக்கின்றது. அதற்குக்கீழ் நூறுயோஜன தூரத்தில் இப்பூமண்டலம் இருக்கின்றது. ஹம்ஸம் பாஸம் பருந்து கருத்மான் முதலிய சிறந்த பறவைகள் எதுவரையில் பலத்துடன் பறக்கின்றனவோ அதுவரையில் பூலோகமென்று கூறப்படும். இப்பூமியின் நிலைமையை உள்ளபடி மொழிந்தேன். பூலோகத்திற்குக் கீழ் பூமியிலேயே எழு விவரங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் பதினாயிரயோஜன விஸ்தாரமும் அவ்வளவு உயரமும் உடையது. ஒவ்வொன்றும் போகத்தில் தாரதம்யம் உடையதாயிருக்கும். அவை அதலம் விதலம் ஸுதலம் ரஸாதலம் தலாதலம் மஹாதலம் பாதாலம் என்னும் பேருடையவை. அவற்றைப் பிலஸ்வர்க்கமென்றும் கூறுகிரூர்கள். அவற்றில் ஸ்வர்க்கத்தைக் காட்டி

லும் மேற்பட்ட கமாபோகம் ஐஸ்வர்யாகந்தம் ஸம்பத்து பரிஜன பரிவாரங்கள் இவை நிறைந்த வீடுகளும் உத்யானங்களும் விளையாடுமிடங்களும் ஸ்த்ரீ ஸம்போகத்திற்குரிய இடங்களும் விளக்கமுற்றிருக்கும். அத்தகைய உலகங்களில் தைத்யர்களும் தானவர்களும் காதர்வேயர்களும் நித்ய ஸந்தோஷமுற்று மிக்க அனுராகமுடைய மனைவிகளும் பிள்ளை பெண்டிர்களும் பந்துக்களும் நண்பர்களும் வேலைக்காரர்களை முடையவர்களாகி இல்லற வாழ்க்கையில் மகிழ்ந்து ஈச்வரனிடத்திலும் தமது மனவிருப்பம் தடைபடப் பெறுமல் மாயையால் விநோதமுற்று வாஸம் செய்கிறார்கள். ஓ மஹாராஜனே! பிலஸ்வர்க்கங்களென்கிற இவ்வதலாதி லோகங்களில் மாயாவியான மயனென்னும் அஸுரனால் நிர்மிக்கப்பட்ட ஆச்சர்யமான பட்டணங்கள் பல இருக்கின்றன. அப்பட்டணங்கள் சிறப்புடைய பலவகை ரத்னங்களால் இயற்றப்பட்ட ஆச்சர்யமானவீடுகளும் ப்ராகாரங்களும் (கோட்டைகளும்) கோபுரங்களும் ஸபைகளும் தேவாலயங்களும் முற்றங்களும் மற்றும் பலவகை இடங்களும் நிறைந்து இணையிணையான புறுக்களும் கிளிகளும் பலவாறு ஒலிக்கப் பெற்றுத் தொழில் முற்றுப்பெற்ற மாட கூடங்கள் அமைத்த விவரேச்வரர்களின் சிறப்புடைய மாளிகைகளும் அமைத்து அலங்காரமுற்று விளங்குகின்றன. பூங்கொத்துகளும் காய்க்கொத்துகளும் தளிர்களும் நிறைந்து அவற்றின் பாரத்தினால் வணங்கின அழகானகொடிகளையுடைய வ்ருக்ஷங்கள் அடர்ந்த உத்யானங்கள், மனத்தையும் மற்ற இந்த்ரியங்களையும் களிக்கச் செய்கின்ற [1] விவரேச்வர ஸ்த்ரீகளின் ஸஞ்

---

1. பூமியின் கீழ்ப்பாழிகள் போன்றிருக்கையால் அதலாதி லோகங்களை விவரமென்று சொல்லுகிறார். விவரம்-பாழி அவற்றின் ப்ரபுக்கள் விவரேச்வரர்கள்.

சாரத்திரளும், பலவகையான பறவைக் கூட்டங்கள் கோலாஹலம் செய்யப்பெற்று நிர்மலமான தண்ணீர் நிறைந்த ஜலாதாரங்களில் மீன்களின் துள்ளல்களால் அசைகின்ற தாமரை ஆம்பல் நெய்தல் செங்கழுநீர் கருநெய்தல் செந்தாமரை முதலிய பூங்காடுகளில் பல வாறு விளையாடுகின்ற வண்டினங்களின் பலவகை மதுர ஸ்வராதிகளாலும் ஸ்வர்க்கலோகத்தின் சோபை யைக் கடக்கின்றன. அவ்வுலகங்களி லுள்ளவர்கள் நீண்ட வாழ்நாளுடையவர்களாகையால் அவர்களுக் குக் காலத்தின் பிரிவுகளான அஹோராத்ராதி கள் கடப்பதனால் சிறிதும் பயம் புலப்படுகிறதில்லை. அங்குப் பெருமையுடைய ஸ்பஸ்ரேஷ்டங்களின் சிரங் களி லுள்ள ரத்னங்கள் இருள்களைப் பறக்கடிக்கின் றன. அவ்வுலகங்களில் வாஸம் செய்பவர்கள் திவ்ய மான ஔஷதங்களையும் திவ்யமான ரஸாயனங்களையும் திவ்யமான ஆஹாரங்களையும் உபயோகிக்கிறார்கள்; திவ்யமான ஜலங்களில் ஸ்நானம் செய்கிறார்கள். மற் றும் பலவும் அவர்களுக்குத் திவ்யமாயிருக்கின்றன. ஆகையால் அவர்களுக்கு மனோவ்யாதிகள் சரீரவ்யா தி கள் சனைச் சுருக்கம் மயிர் கரைத்தல் கிழத்தனம் பல் விழுதல் முதலியவைகளும் நிறம்மாறுதல் துர்க்கந்தம் வேர்வை இளைப்பு உத்ஸாஹமில்லாமை முதலிய வயதி னல் விளையும் பலவகை அவஸ்தைகளும் உண்டாகிற தில்லை. பூமியின் பிலங்களான அவ்வுலகங்களில் துக்க மின்றி சூக்ஷுமமாய் வாஸம் செய்கின்றவர்களுக்கு ஸுதர்சனமென்னும் சக்ராயுதமாகிய பகவானுடைய தேஜஸ்ஸைத் தவிர மற்ற எதினின்றும் ம்ருத்யு உண் டாகமாட்டாது. இப்பூமி விவரங்களில் ஸுதர்சனஸ்தம் ப்ரவேசிக்குமாயின், அஸுர ஸ்த்ரீகளின் கர்ப்பங்

கள் அந்தப் பயத்தினல் ஸ்ரவிக்கின்றன; நிறைந்திருக் குமாயின் விழுகின்றன. ஓ மன்னவனே! அதலமென்னும் விவரத்தில் மயபுத்ரனகிய பலனென்னும் அஸுரன் வஸிக்கிறான். அவன் தொண்ணூற்றாறு மாயைகளைப் படைத்தான். அவற்றில் சில மாயைகளை இப்பொழு தும் சில மாயாவிகள் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவன் கொட்டாவி விடும்பொழுது அவனுடைய முகத் தினின்று மூன்று பெண்கள் கூட்டங்கள் உண்டாயின. அவர்களுக்கு ஸ்வைரிணிகளென்றும் காமினிகளென் றும் பும்ஸ்சலிகளென்றும் பெயர். அவர்கள் பிலமார்க் கத்தில் நுழைந்த புருஷனை ஹாடகமென்னும் ரஸாய னத்தினல் தம் வசப்படுத்திக்கொண்டு அவனைப் போக ஸமர்த்தனாகச் செய்து தமது விலாஸங்களோடு கூடின கண்டோஷ்டகத்தினலும், ஸ்நேஹமும் வழியப்பெற்ற புன் னகையினலும், ரஹஸ்யமான பேச்சுக்களாலும் ஆலிங் கனம் முதலிய மற்றும் பலவகையான போகரம்பங்க ளாலும் யதேஷ்டமாக மனங்களிக்கச் செய்வார்கள். அவர்கள் கொடுக்கும் ரஸாயனத்தை உட்கொண்ட புரு ஷன் தன்னைப் பதினாயிரம் யானைப் பலமுடையவனாக நினைத்து மதாந்தன் போன்று நான் ஈச்வரனென் றும் நான் ஸித்தனென்றும் தன்னை ப்ரகடித்துக்கொள் வான். அதற்குக் கீழுள்ள விதலமென்னும் விவரத்தில் மஹாநுபாவனகிய ருத்ரன் ஹாடகேச்வரனென்று பேர்பூண்டு ப்ரஹ்மதேவனல் ஸ்ருஷ்டியை வளர்க்கும் படி நியமிக்கப்பட்டுப் பார்வதியுடன் சேர்ந்திருக்கிறான். அந்தப் பார்வதீ பரமேச்வரர்களின் வீர்யத்தினல் ஹாடகினியென்னும் ஒரு நதி அவ்விடத்தில் உண்டா யிருக்கிறது. ஹாடகமென்று சொல்லப்படுகிற ஸுவர் ணத்தை உண்டாக்கினலினலால் அவன் ஹாடகேச்

வரனென்று பெயர்பெற்றான். அந்த ஹாடகினியென் னும் நதியில் அக்னி காற்றினால் வளர்க்கப்பட்டுத் தன் பலத்தினால் ஹாடகினியைப் பருகினன். அவ்வக்னியால் சுக்கப்பட்டதெல்லாம் ஹாடகமென்னும் ஸுவர்ணமா யிற்று. அந்த ஸுவர்ணத்தை விவரவாஸிகளான அஸுர ஸ்ரேஷ்டர்களின் அந்தப்புரத்திலுள்ள ஸ்த்ரீ களும் புருஷர்களும் ஆபரணங்களாகச் செய்து தரிக் கின்றார்கள். அதற்குக் கீழுள்ள ஸுதல மென்னும் விவரத்தில் பெரும் புகழுடையவனும் புண்யஸ்லோக னும் பாகவதர்களில் சிறந்தவனும் விரோசனுடைய புதல்வனுமாகிய பலி யென்பவன் இப்பொழுதும் இருக் கிறான். முன்பு ஒருகாலத்தில் அவன் இந்த்ரனைத் தோற்பித்து மூன்று லோகங்களையும் பறித்துக் கொண்டு போகையில், பகவான் அவ்விந்த்ரனுக்கு ப்ரி யம் செய்ய விரும்பி அதிதியிடத்தில் அவதரித்து வா மனனைய்ச் சென்று மூன்று லோகங்களையும் உபாயத் தினால் மீட்டு இந்த்ரனுக்குக் கொடுத்தான். முதலில் அங்ஙனம் ஐஸ்வர்யம் பறிக்கப்பெற்ற அப்பலி மீளவும் பகவானுடைய அனுக்ரஹத்தினாலேயே இந்த்ரா தி களுக்கும் கிடைக்க அரியதும் மிகவும் ஸம்ருத்தியுடை யதுமான ஸம்பத்தைப் பெற்று நிர்ப்பயனாகி அந்தப் பகவானைத் தனக்குரிய தர்மத்தினால் ஆராதித்துக் கொண்டிருக்கிறான். பிலஸ்தானத்தில் அவன் அத் தகைய ஐஸ்வர்யத்தைப் பெற்றமை பரமபுருஷனுக்குச் செய்த பூதானத்தின் பலனென்று சங்கிக்கலாகாது. ஏனெனில், ஷாட்குண்ய பூர்ணனும், ஸமஸ்த பூத ஸமூ ஹங்களினுமுள்ள ஜீவாத்மாக்களுக்கும் அந்தராத்மா வாயிருப்பவனும், மிகவும் பரிசுத்தனும், தானத்திற் குரிய ஸத்பாத்ரனுமாகிய வாஸுதேவன் ஸமீபித்து

வருகையில் அவனிடத்தில் மிகுந்த ஸ்நாத்தையுடன் நிலை நின்ற மனமுடைய பலிசக்ரவர்த்தி அம்மஹானுபாவனுக்குச் செய்த பூமிதானத்திற்கு ஸாக்ஷாத் மோக்ஷமன்றே பலனாகவேண்டும். இருமல் தும்மல் விழுதல் தடுக்குதல் முதலிய தசைகளில் அந்தப்பகவானுடைய நாமத்தை ஒருகால் மெய்ம்மறந்து சொல்லுவாலுமும், அப்புருஷன் அனாயாஸமாகக் கர்மபந்தத்தைத் துறப்பான். மோக்ஷத்தில் விருப்பமுடைய பெரியோர்கள் கர்மயோக ஜ்ஞானயோகாதிகளால் அக்கர்ம பந்தத்தை விடுவிக்கும் உபாயத்தை ஆராய்ந்தறிகின்றார்கள். அவனுடைய நாமவைபவம் | அப்படியிருக்க, ஸர்வாத்மாவும், பாகவதர்களுக்குத் தன்னைக் கொடுப்பவனும், ப்ரியனுமாகிய பகவானிடத்தில் செய்த பூதானத்திற்கு விவரிஸ்வர்யம் பலனென்று சொல்லலாகாது. ஈஸ்வரன் அவனுக்குத் தன் நிலனை மறைப்பதும் தன் மாயையிலால் ஏற்பட்டதுமாகிய போகரூபமான ஐஸ்வர்யத்தைத் கொடுத்தானன்றி, அப்பொழுதே அநுக்ரஹிக்கவில்லை. இதுநிச்சயம் மோக்ஷம் கொடுக்கையன்றே அவன்செய்யும் அநுக்ரஹமாம். பலி பகவானிடத்தில் மிகுந்த பக்தியுடையவனாயிருந்தான். அவன் இந்த்ரனை ஜயித்து த்ரிலோகராஜ்யத்தைப் பறித்தமைக்காகப் பக்தனாகிய அவனைத் தண்டிக்க முடியாமையாலும் வேறு உபாயம் ஏற்படாமையாலும், பகவான் அவனிடம் சென்று யாசித்து மூன்று லோகங்களையும் பிடுங்கிக்கொண்டு அவன் சரீரத்தை மாத்ரமே மிகுத்திவிட்டுத் தான் வேண்டினபடி மூன்றடி நிலங்கள் கொடுக்கிறேனென்று ஒப்புக்கொண்டும் மூன்றுவதடிக்கு நிலமில்லாமையால் செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றுமைக்காக அவனை வருணபாசங்களால்

கட்டிப் பர்வத குஹையில் எறிந்தான். அங்ஙனம் எறியப் பட்ட பலி பகவானைப்பார்த்து ஆ! என்ன வருத்தம்? மஹானுபாவனாகிய இவ்விந்த்ரன் தெரிந்தவனாயினும் புருஷார்த்தங்களின் தாரதம்யத்தை அறிந்தவனல்லன். இது நிச்சயம். இவனுல் ஏகாந்த மந்த்ராலோசனைகளில் ஸஹாயமாக வரிக்கப்பட்ட ப்ருஹஸ்பதியும் புருஷார்த் தங்களின் தாரதம்யத்தை நன்றாக அறிந்தவனல்லன். இதுவும் நிச்சயம். பரம புருஷார்த்த ஸ்வரூபனாகிய பக வானை உபேக்ஷித்துத் தனக்குத் தம்பியாய் அவதரித்த வாமனரூபனை பகவானைக் கொண்டு இந்த்ரன் என்னி டத்தில் மூன்று லோகங்களை யாசித்தான். அந்தப் பக வானுடைய தாஸ்யத்தை வேண்டிப் பெறவில்லை. காலம் மிகவும் கம்பீரமான வேகமுடையது. அது போய்க் கொண்டே யிருக்குமாயினும் போவது தெரியாது. மூன்று லோகங்களும் காலத்திற்கு உட்பட்டவை. அவை மன்வந்தரம் வரையிலுமே இருப்பவை. அதற்கு மேல் அழியப்போகின்றன. அத்தகைய லோகங்களுக்குப்ரபு வாயிருக்கையாகிற ஐச்வர்யம் எவ்வளவு? அது ஒரு பொருளாகமாட்டாது. அற்பமான ஐச்வர்யத்தை எவன் யாசிப்பான்? அதை அபேக்ஷித்த இந்த்ரன் புருஷார்த் தங்களை நன்குணர்ந்தவனல்லன். எங்கள் பாட்டனாகிய ப்ரஹ்லாதன் பகவானுடைய தாஸானுதாஸத்வத் தையே வேண்டினன். நரஸிம்ஹ ஸ்வரூபியாகிய பக வான் தன் தந்தையாகிய ஹிரண்யகசிபுவைக் கொன்று அவனுடைய ராஜ்யத்தைத் தனக்குக் கொடுக்கினும், அது அற்பமென்று நினைத்து அதை அபேக்ஷிக்க வில்லை. எவ்விதத்திலும் பயத்திற்கிடமில்லாத மோக்ஷத் தையே அபேக்ஷித்தான். கர்மபந்தம் தீராதவனும் பகவானுடைய அனுக்ரஹம் க்ஷீணிக்கப் பெற்றவனு

மாகிய என்னைப்போன்ற புருஷன் மஹாநுபாவனாகிய அந்த ப்ரஹ்லாதனுடைய வழியை எங்ஙனம் தொடர விரும்புவான்?" என்று மொழிந்தான். அவனுடைய சரித்ரத்தை மேல் விஸ்தாரமாகச் சொல்லப்போகிறோம். ஸமஸ்த லோகங்களுக்கும் குருவும் ஸர்வேசுவரியுமாகிய நாராயணன் தன் பக்தர்களிடத்தில் மிக்க மனதிரக்கமுடையவனாகையால் அந்தப் பலிசக்ரவர்த்தியின் வீட்டு வாசலில் கதாபாணியாயிருக்கிறான். முன்பு ஒரு காலத்தில் ராவணன் திக்விஜயம் செய்துகொண்டு பலியின் வாசலில் நுழைய அப்பலியின் வாசற்காப்பவனாகிய பகவான் கால்கட்டை விரலால் அவனை லக்ஷயோஜனை தூரத்திற்கு அப்புறத்தில் விழத்தள்ளினான். அதற்குக் கீழுள்ள தலாதலமென்னும் விவரத்தில் மயனென்னும் தானவஸ்ரேஷ்டன் வாஸம் செய்கிறான். அவன் முன்பு மூன்று பட்டணங்களுக்கு ப்ரபுவாயிருந்தான். அப்பட்டணங்களுடன் ஆகாயத்தில் பறந்து லோகங்களுக்குப் பயத்தை விளைத்துக்கொண்டிருந்தான். ருத்ரன் உலகங்களின் க்ஷேமத்திற்காக அம்மூன்று பட்டணங்களையும் கொளுத்தித் தலாதலமென்னும் விவரத்தை அவனுக்கு வாஸஸ்தானமாக அனுக்ரஹித்துக் கொடுத்தான். அவன் மாயைகளின் நுட்பங்களை அறிந்து பிறர்க்கும் உபதேசிக்குந் திறமையுடையவனாகையால் மாயாவிகளுக்கெல்லாம் ஆசார்யனாயிருப்பவன். ஸுதர்சனனிடத்தில் பக்தியுடைய மஹாதேவனால் பாதுகாக்கப்பெற்று ஸுதர்சனபயமின்றித் தலாதலத்திலுள்ள புருஷர்களால் வெகுமதிக்கப் பெற்றிருக்கிறான். அதற்குக்கீழ் மஹாதலமென்னும் விவரத்தில் பலசிரங்களையுடையவைகளும் கத்ருவின் பிள்ளைகளுமான ஸர்ப்பங்களின் கூட்டங்கள் க்ரோதவசமென்று பேர்

பெற்று வாஸம் செய்கின்றன. குஹகன் தக்ஷகன் காளியன் ஸுஷேணன் முதலிய ஸர்ப்பங்கள் அந்தக் கூட்டத்தில் முக்கியமானவை. பெரிய உடலுடையவை. மஹாபுருஷனுடைய வாஹனமும் பக்ஷிராஜஸ்ரேஷ்டனுமாகிய கருத்மானிடத்தில் எப்பொழுதும் பயப்படுந்தன்மையுடையவை. அவை பெண்டிர் பிள்ளை கண்பர் முதலிய குடும்பத்தில் மனம் செல்லப்பெற்று மதிமயங்கி அவ்விடத்தில் விளையாடிக்கொண்டிருக்கின்றன. அதற்குக் கீழ் ரஸாதலமென்னும் விவரத்தில் தைதேயர்களும் தானவர்களும் பணிகளென்று ப்ரஸித்தர்களான தேவசத்ருக்களும் வாஸம் செய்கிறார்கள். அவர்களில் பணிகள் நிவாதகவசரென்றும் காலகேயரென்றும் ஹிரண்யபுரவாஸிகளென்றும் மூன்று வகைப்பட்டவர்கள். அவர்கள் பிறக்கும்பொழுதே மஹாபலசாலிகள். ஸாஹஸமான கார்யங்களைச்செய்வதில் எடைதிரில்லாதவர்கள். அவர்களுடைய ப்ராபவம் ஸமஸ்த லோகங்களிலும் தடைபடாமல் செல்லும். அவர்கள் தேஜோமயமான பகவானுடைய ஸுதர்சனஸ்த்ரத்தினாலும் தடைபடாத பல கர்வமுடையவர்கள். ஸர்ப்பங்கள் போல அந்த விவரத்தில் வஸிக்கிறார்கள். அவர்கள் இந்த்ரனுடைய தூதியாகிய பெண் காய் மொழிந்த மந்த்ரவர்ண ரூபமான வாக்யங்களைக் கேட்டு இந்த்ரனிடத்தில் பயப்படுகின்றார்கள். அதற்குக் கீழ்ப் பாதாளமென்னும் விவரத்தில் ஸர்ப்பலோகங்களுக்கு ப்ரபுக்களும் வாஸுகியைத் தலைவனாகவுடையவைகளுமான சங்கன் குளிகன் மஹாசங்கன் ச்வேதன் தனஞ்சயன் த்ருதராஷ்ட்ரன் சங்கசூடன் கம்பளன் அச்வதரன் தேவதத்தன் முதலிய மஹா ஸர்ப்பங்கள் வஸிக்கின்றன. அவை பெருங்கோபமுடையவை. அவற்றில் சில ஐந்துதலை

யுடையவை; சில ஆறு தலையுடையவை; சில ஏழுதலை யுடையவை; சில பத்துத் தலையுடையவை; சில நூறு தலையுடையவை; சில ஆயிரத்தலையுடையவை. அவற்றின் படங்களி லுள்ள பேரொளியுடைய மஹாரத்னங்கள் பாதாள விவரத்தி லுள்ள அந்தகாரத்தை யெல்லாம் தமது தேஜஸ்ஸி னல் த்வம்ஸம் செய்கின்றன. இரு பத்திரான்காவது அத்யாயம் முற்றிற்று.

பாதாளத்தினடியில் பூமியைத் தரித்துக் கொண்டிருக்கிற ஆதிசேஷனு டைய நிலைமையைக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:— அந்தப் பாதாளவிவரத் தின் அடிப்பாகத்தில் முப்பதினாயிர யோஜனைகளுக்கு அப்புறத்தில் தாமஸாஹங்காரத்தை அதிஷ்டானம் செய்யும் பகவானுடைய அம்சமாகிய அனந்தன் இருக் கிறான். இந்த்ரியங்களுக்குப் புலப்படாத வஸ்துக்களைப் பற்றின அறிவையும் ஜீவாத்மாக்களுக்கு விளைப்பதா லும், ஆத்மாவினிடத்தில் நானென்னும் சித்த வ்ருத் தியை உண்டாக்குவதா லும் அவனை ஸங்கர்ஷண னென்று ஸாத்வதமென்கிற பஞ்சராத்ரசாஸ்த்ரத்தை அறிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அவன் அள விடமுடியாத பெரிய சரீரமுடையவன். ஷாட்குண்ய பூர்ணன். ஆயிரத்தலைகளுடையவன். பூமண்டலமெல் லாம் அவனுடைய ஒரு சிரஸ்ஸில் தரிக்கப்பட்டுக் கடுகு போல் பலப்பதிகின்றன. ஆகையால் அவனுக்கு அனந்த னென்னும் பேர் யதார்த்தமானது. அந்த ஸங்கர்ஷண பகவான் இரண்டு பரார்த்தங்களும் முடிந்து ப்ரளய காலம் வருகையில் உலகங்களை யெல்லாம் ஸம்ஹரிக்க விரும்பிக் கோபத்தினால் புருவங்களைக் கோணலாக

நெரித்தான். அதினிடையினின்று முக்கண்ணர்களும் த்ரிசூலத்தை மேல் தூக்கிக்கொண்டிருப்பவர்களுமாகிய ஏகாதச ருத்ரர்களின் கூட்டம் உண்டாயின. அதுஸங்கர்ஷணமென்னும் பற்றுடையது. தலைமையுள்ளஸர்ப்பங்கள் ஸாத்வதஸ்ரேஷ்டர்களுடன் கலந்து அந்தஸங்கர்ஷண பகவானுடைய தாமரை மலர்போன்றஇரண்டு பாதங்களிலுள்ள சிவந்த நகங்களாகிற ரத்னஸமூஹங்களின் மண்டலங்களில் மாறுத பக்தியுடன்வணங்கி ஜ்வலிக்கின்ற அழகிய குண்டலங்களால் அலங்காரஞ் செய்யப்பெற்ற தமது கபோலஸ்தலங்கள் அவற்றில் ப்ரதிபலிக்கையில் மனக்களிப்புடன் பார்த்துக்கொண்டிருக்கின்றன. நாகராஜ கன்னிகைகள் புருஷார்த்தங்களை விரும்பித் தோள்வளைகளால் திகழ்பவைகளும் நிர்மலங்களும் நீண்டு மென்மைக்கிடமாயிருப்பவைகளும், ஸுந்தரங்களுமான ஸங்கர்ஷண பகவானுடைய புஜங்களாகிற வெள்ளிக்கம்பங்களில் குங்குமங் கலந்த சந்தனக் குழம்பைப் பூசி அந்தப்புஜங்களைத் தொட்டமாத்ரத்தினல் மனம் கலங்கி மன்மதவிகாரமுற்று அதனல் அழகிய புன்னகையுடையவர்களாகி, தன் பக்தர்களிடத்தில் அனுராகத்தினலும் தன்னைத் தான் அனுபவிக்கையாலுண்டான ஸந்தோஷத்தினலும் மலர்ந்து மதத்தினல் சுழல்கின்றவைகளும், சிறிது சிவந்தவைகளும், கருணைகடாக்ஷம் நிறைந்தவைகளுமான கண்கள் அமைந்த செந்தாமரை மலர்போன்ற அவருடைய முகத்தை வெட்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஸங்கர்ஷணனென்று பேர் பெற்றவனும் அளவிறந்த கல்யாணகுணங்களுடையவனும் ஆதிதேவனுமாகிய அவ்வனந்தன் பொறுக்கமுடியாத கோபவேகத்தை அடக்கிக்

கொண்டு லோகங்களின் க்ஷேமத்திற்காக வீற்றிருக்கி
ருன். தேவர் அஸுரர் உரகர் ஸித்தர் கந்தர்வர் வித்
யாதரர் முனிவர் ஆகிய இவர்கள் கூட்டங்கூட்டமா
யிருந்து அம்மஹானுபாவனை தயானிக்கின்ருர்கள்.
அவன் ஸர்வகாலமும் தன்னைத்தான் அனுபவிக்கையா
லுண்டான ஸந்தோஷத்தினல் தழதழத்துச் சுழலிடு
கின்றவைபோன்ற கண்களுடையவன். மிகவும் அழகிய
தும் உட்கருத்தை வெளியிடுவதுமாகிய புன்னகையி
லும் அம்ருதம்போன்ற வசனத்திலும் தன் பரிவா
ரங்களையும் தேவர் கூட்டத்தலைவர்களையும் களிப்பித்துக்
கொண்டு மாறுத செவ்வியையுடைய புதிய துழாய்
வாஸனையாலும் அதிலுள்ள மதுவாகிற மத்யத்திலை
லும் மதித்து மேல்விழுகின்ற வண்டினங்களின் இனிய
பாடல்களால் அழகான வைஜயந்தி யென்னும் பெரு
டைய தன் வனமாலையைத் தரித்தவனும் கறுத்த
வஸ்த்ரங்களை உடுத்திருப்பவனும் ஓற்றைக்குண்டலம்
அணிந்தவனும் மேன்மையும் அழகுமான தன் புஜத்
தைக் கலப்பையின் பின் புறத்தில் வைத்துக்கொண்
டிருப்பவனும் கம்பீரமான விலாஸங்களுடையவனுமா
கிய அந்த ஸங்கர்ஷணபகவான் தேவேந்த்ரனுடைய
யானையாகிய ஐராவதம் ஸ்வர்ணமயமான ஜீனத்
தைத் தரிப்பதுபோல, ஸ்வர்ணமயமான யோகபட்டை
யைத் தரிக்கிருன். மோக்ஷத்தில் விருப்பமுடையவர்
கள் ஸங்கர்ஷண பகவானுடைய ஸ்வரூபத்தைக் குரு
முகமாகக் கேட்டு த்யானிப்பார்களானல், அப்பகவான்
அவருடைய ஹ்ருதயத்தில் ஸந்நிதானம் செய்து
அநாதிகாலமாக ஸத்வ ரஜஸ்தமோ குணங்களின் ஸம்
பந்தத்தினல் உண்டான கர்மவாஸனைகளால் அறுக்க
முடியாமல் வேரூன்றியிருக்கிற தேஹாத்மப்ரமம் முத

வில அஞ்ஞானமாகிற மூடிச்சை விரைவில் அறுத்து விடுகிறான். அந்த ஸங்கர்ஷணபகவானுடைய மஹிமை யை ப்ரஹ்ம புத்ராராகிய காரதமுனிவர் தும்புருவும் தானுமாய் ப்ரஹ்மாவின் ஸபையில் வர்ணிக்கிறார். ஜகத் தின் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணங்க ளான ஸத்வ ரஜஸ்தமோகுணங்கள் அவனுடைய ஸங் கல்பத்தினால் அந்த ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களை நிறைவேற்ற வல்லவையாயின. தேவமனுஷ்யாதி ரூபங்களின்றித் தன்னிடத்தில் மறைந்திருப்பதும் நித்யமுமாகிய ப்ரக்ருதி புருஷர்களாகிற தன் சரீரத் தைத் தன் ஸங்கல்பத்தினால் தேவமனுஷ்யாதி ரூபங்களால் பலவாறு பிரிவுற்றதாகச் செய்கிறான். இப் படிப்பட்ட மஹானுபாவனுடைய லோகவிலக்ஷணமான ஸ்வரூபத்தை என்னைப்போன்றவன் எங்ஙனம் அறி வான்? சேதன சேதனரூபமான ஜகத்தெல்லாம் அவனி டத்தில் விளங்குகின்றது. அந்தப் பகவான் கம்மிடத் தில் க்ருபையால் ரஜஸ் தமஸ்ஸுக்களால் தீண்டப் படாத சுத்த ஸத்வமயமான திவ்ய மங்கள விக்ரஹத் தைத்தரித்தான். ஸிம்ஹம்போலக் கம்பீரமான வீர்ய முடையவனும், உலகத்தில் மேன்மையையுடைய ப்ரஹ் மாதி தேவதைகளுக்குப்ரபுவும், ஜகத்ஸ்ருஷ்டி முதலிய மஹாஸாமர்த்யங்களுடையவனுமாகிய அந்த ஸர்வேஸ் வரன் தன் பக்தர்களான நமது மனத்தைத் தன் வச மாக்கும் பொருட்டு, நாகராஜகன்னிகை முதலியவர் களுக்கும் எளிதில் ஆராதிக்கத் தகுந்தவனு யிருக்கை, ஸாத்வத ஸாஸ்த்ரத்தை இயற்றுகை, பூமண்டலத் தைத் தரிக்கை முதலிய திருவிளையாடல்களை ஏற்றுக் கொண்டான். அவை அவனுக்குக் கர்மத்தினால் விளைந் தவையன்று. அவனுடைய ஸங்கல்பத்தினாலேயே ஏற்

பட்டவைகள். ஆகையால், அவன் கம்மை அனுக்ரஹிப் பதற்காகவே அவ்வுருவத்தைத் தரித்தானென்பதில் ஸந்தேஹமுண்டோ? ரோகாதிகளால் பீடிக்கப்பட்ட வனும் மஹாபாதகனாயிருப்பவனும் கூட அவ்வாகத் னுடைய நாமத்தைச் சொல்லுவானாயின், தெய்வாதீன மாயாவது பரிஹாஸத்தினாலாவது அவனுடைய நாமத் தைக் கேட்பானாயின், அவன் ரோகங்களாலும் பாத கங்களாலும் விடுபட்டுத் தன்னைச்சேர்ந்த மற்றவர்க ளுடைய பாபத்தையும் போக்குவான். ஆகையால், மோக்ஷத்தில் விருப்பமுடையவன் அந்த ஆதிசேஷ னைத்தவிர மற்ற எவனையும் ஆஸ்ரயிக்கமாட்டான்? பர் வதங்களும் நதிகளும் ஸமுத்ரங்களும் பலவகை ஜந்துக் களும் நிறைந்த பூமண்டலம் முழுவதும் ஆயிரந்தலை களையுடைய அவ்வனந்தனுடைய தலையில் அணுபோல் இருக்கின்றன. அவன் அளவிட முடியாத ஸ்வரூபங்க ளுடையவன். ஆகையால் அவனுடைய ப்ரபாவத்தை ஒருவராலும் அறிய முடியாது. அவ்வனந்தனுடைய வீர்யங்களை ஆயிரநாக்குடையவனாலும் எவன்தான் இவ்வளவென்று கணக்கிட வல்லவனாவான்? மஹாப்ர பாவங்களுடையவனும், அனந்தனென்ற பதார்த்தமான பெயர்பூண்டவனும், எல்லையில்லாத வீர்யம் அத்தகைய பலம் பலவகைக் குணங்கள் அவற்றின் ப்ரபாவங்கள் இவையுடையவனுமாகிய அந்த ஸங்கர்ஷண பகவான் ஸ்வதந்த்ரன்; தானொருவனே ஜகத்தின் ரக்ஷணத்திற் காகப் பூமண்டலத்தை அவலீலையாகத் தரிக்கிறான்.

ஸ்ரீ சுகர் சொல்லுகிறார்:—காமங்களை விரும்புகிற புருஷர்களால் அடையத்தகுந்தவைகளும் பல போகத் திற்காக ஏற்பட்டவைகளுமான உலகங்கள் இவ்வளவே.

அவரவர் கர்மங்களை அநுஸரித்து இந்தப்ரஹ்மாண்டத்தில் ஈஸ்வரனால் ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நான் பெரியோர்களிடத்தில் கேட்டபடி உனக்கு மொழிந்தேன். மன்னவனே! ஸகம்ஸாரிகபுருஷனுக்குக் காமங்களினாலுண்டான ப்ரவ்ருத்தி ரூபமானதும் நிவ்ருத்திரூபமான பலனைக் கொடுக்கும் கதிகள் :பலவாறாயிருக்கும். லோகதுக்கங்களின் தாரதம்யத்தினால் தன்மையிடையன்று விலக்ஷணமாயிருக்கும். அவையெல்லாம் இவ்வளவே. நீ கேட்டபடி அவற்றை உனக்குக் கூறினேன். இன்னம் என்ன கொல்லவேண்டுமோ அதைக் கேட்பாயாக. இருபத்தைந்தாவது அத்யாயம் முற்றிற்று.

அதற்குக் கீழுள்ள நரகத்தின் நிலைமையைக் கூறுதல்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான் :—மஹர்ஷீ! இவ்வுலகங்கள், லோக துக்கங்களின் தாரதம்யத்தினால் ஒன்றுக் கொன்று விலக்ஷணமாயிருக்கு மென்று மொழிந்தீர். அது எப்படிப் பொருந்தும்? ஜீவாத்மாக்கள் ஒருவாறுகச்செய்யும் புண்ய கர்மங்களால் பூலோகம் முதலிய லோகங்களை அடைகையில், சிலர்க்கு ஸுகமே யென்றும், சிலர்க்கு துக்கமே யென்றும், சிலர்க்கு இரண்டும் கலந்திருக்கு மென்றும் சொன்னதற்குக் காரணமென்ன? தெரியவில்லை. அதை மொழிவீராக.

ஸூதர் சொல்லுகிறார் :—அனைவரும் பூராதி லோகங்களைப் பெறுதற்காகச் செய்யுந்தர்மங்கள் ஒரே வகைபாயிருந்தாலும், அவற்றைச் செய்யும் ஜீவாத்மாக்கள் ஸத்வம் ரஜஸ்ஸு தமஸ்ஸென்கிற மூன்று வகைக்

குணங்களுடையவர்க ளாகையால், அவர்களுடைய ப்ரக்ருதிகளும் அக்குணங்களால் மூன்று வகைப்பட்டிருக்கும். ஆகையால் கர்மங்களின் பலன்களாகிய எல்லா லோகங்களும் எல்லோர்க்கும் தாரதம்ய முடையவைகளாகவே உண்டாகின்றன. அப்படியே சாஸ்த்ரங்களில் இதைக் குறித்துச் செய்யவேண்டிய விதிநிஷேதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்கையாலும் அதர்மத்தை அகற்றச் செய்யவேண்டிய ப்ராயச்சித்தமும் பலவாறிருக்குமாகையால் அப்படிதர்மத்தின் பலனை அடைவதும் தாரதம்யத்தையுடைய தாகவேயிருக்கும். அதனியான அஜ்ஞானத்தினால் பலன்களை விரும்பிச் செய்யும் பாப கர்மங்கள் பலவாகையால் அவற்றின் பலன்களான கதிகளும் எல்லையற்றிருக்கும். அவற்றில் முக்யமானவற்றைச் சொல்லுகிறேன், கேட்பாயாக.

மன்னவன் சொல்லுகிறான்:—மஹாத்மாவே! நரகமென்பவை பூமியிலடங்கின சில தேசவிசேஷங்களா? அல்லது மூன்று லோகங்களுக்கும் வெளிப்பட்டவைகளா? அல்லது மத்யத்தில் இருக்கின்றனவைகளா?

ஸுகர் சொல்லுகிறார்:—நரகமென்னும் தேசங்கள் மூன்று லோகங்களடங்கின இந்த ப்ரஹ்மாண்டத்திற்குள் தென்திக்கில் பூமியின் கீழ்ப்பாகத்தில் அண்ட ஜலத்திற்குமேல் இருக்கின்றன. தென்திசையில் அக்னிஷ்வாத்தர் முதலிய பித்ருகணங்கள் தமது கோத்ரங்களுக்கு உள்ளமையான ஆசீர்வாதங்களைச் செய்துகொண்டு சிறந்த ஸமாதி யோகத்துடன் இருக்கிறார்கள். அந்தத் தென்திக்கில் பித்ருக்களுக்கு அதிபதியாகிய யமன் உலகத்தில் மரணம் அடைந்தவர்களைத் தூதர்கள் தன் தேசத்திற்குக் கொண்டு வருகையில்,

பகவானால் ஆஜ்ஞை செய்யப்பட்டு அதை உல்லங்கனம் செய்யமுடியாமல் தன் தூதர்களுடன்கூடி அவர்கள் செய்த பாபகர்மங்களுக்குத் தகுந்தபடி தண்டனைவிதித்துக் கொண்டிருக்கிறான். மன்னவனே! சிலர் நரகங்கள் இருபத்தொன்றென்று சொல்லுகிறார்கள். அவற்றின் பேர்களையும் ஸ்வரூபத்தையும் அடையாளங்களையும் க்ரமமாகச் சொல்லுகிறேம். தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், ரௌரவம், மஹா ரௌரவம், கும்பீபாகம், காலஸூத்ரம், அஸிபத்ரவனம், ஸூகரமுகம், அந்தகூபம், க்ரிமிபோஜனம், ஸந்தம்சம், தப்தோர்மி, வஜ்ரகண்டகசால்மலி, வைதரணி, பூயோதம், ப்ராணரோதம், விசஸனம், லாலாபக்ஷம், ஸாரமேயாதனம், அவீசி, அய:ப்பானம் என்பனவகளாம். மற்றும், க்ஷாராகர்த்தமம், ரக்ஷோகணபோஜனம், சூலப்ரோதம், தந்தசூகம், அவடநிரோதனம், பர்யாவர்த்தனம், ஸூசீமுகம் என்னும் இவ்வேழும் சேர்ந்து இருபத்தேழு நரகங்கள். இவை பலவகையான துக்கங்களை அனுபவிக்கும் பூமிகள். எவன் இவ்வுலகத்தில் பிறனுடைய பணம் பிள்ளை பெண்டிர் இவைகளில் ஏதேனு மொன்றைப் பறிக்கிறானோ, அவன் மிகவும் பயங்கரர்களான யமதூதர்களால் யமபாசத்தினால் கட்டுண்டு பலாத்காரமாகத் தாமிஸ்ரமென்னும் நரகத்தில் தள்ளப்படுகிறான். அதில் தள்ளுண்டபுருஷன் பசியெடுத்து ஆஹாரம் கேராமை, தண்ணீர் தாஹம் எடுத்துத் தண்ணீர் கேராமை, தடியடி, விடாதல் முதலிய பலயாதனைகளால் பீடிக்கப்பட்டு மிகவும் துக்கித்து அப்பொழுதே இருள் மூடிய அவ்விடத்தில் மூர்ச்சை அடைவான். பிறனை வஞ்சித்து அவனுடைய தாரம் முதலியவற்றை அனுபவிப்பவன் அந்ததாமிஸ்ர நரகத்தில் யமபடர்களால் தள்ளுண்

பான். அதில் தள்ளப்பட்ட புருஷன் க்ரூரமான யாதனை களால் பீடிக்கப்பட்டு அவ்வேதனையைப் பொறுக்க முடியாமல் கீழே தப்பிக் கண்டெதிரியாமல் வேறுக்கவ்ருக்ஷம்போல விழுவான். ஆகையால் அந்தரகத்தை அந்தகாமிஸ்ரமென்று சொல்லுகிறார்கள். உலகத்தில் சரீரத்தை அறம்புத்திக்கு விஷயமான ஆத்மாவென்றும், பிள்ளை பெண்டிர் முதலியவர்களை என்னுடையதென்றும் கீழ்த்துப்ராணிகளுக்கு த்ரோஹம் செய்தேதன் குடும்பத்தை மாத்ரம் தினந்தோறும் போஷிக்கிறவன் தன் குடும்பத்தை இங்கேயே துறந்து தானொருவன் மாத்ரமே அந்தப் பாபகர்மத்தினால் ரௌரவமென்னும் நரகத்தில் விழுகிறான். அவன் இவ்வுலகத்தில் எந்தெந்த ஜந்துக்களை எங்ஙனம் ஹிம்ஸித்தானோ, அவையெல்லாம் நாய்க்களென்னும் ஜந்துக்களாய் வந்து யமயாதனைகளை அனுபவிக்கின்ற அவனை அங்ஙனமே ஹிம்ஸிக்கின்றன. நாய்க்களாவன:—ஸர்ப்பங்களைக் கடிடிலும் மிகவும் க்ரூரமான ஜந்துக்கள். ஆகையால் அந்தரகத்தை ரௌரவமென்கிறார்கள். மஹா ரௌரவத்திலும் இப்படியே. அதில் விழுந்த புருஷனுடைய மாம்ஸத்தை அந்த நாய்க்கள் தாமும் பிடுங்கித்தின்று அவனையும் தன் மாம்ஸத்தைத் தானே தின்னும்படி செய்கின்றன. இவ்வுலகத்தில் தன் தேஹத்தை மாத்ரம் போஷிக்கிறவனும் மனஇரக்கமின்றிக் கொடுந்தன்மையுள்ளப் பசுக்கள் பக்ஷிகள் முதலிய ப்ராணிகளைப் பக்வம் செய்து புசிக்கிறவனும் புருஷர்களைப் பிடுங்கிப் பக்ஷிக்கும் தன்மையுள்ள ராக்ஷஸர்களால் கிக்கிக்கப்பட்டுப் பரலோகத்தில் கும்பீபாக நரகத்தில் காய்ச்சின எண்ணெயில் யமபடர்களால் தள்ளுண்டு பசனம் செய்யப்படுவான். கொதித்துக் கொண்டிருக்கிற எண்ணெய்க் கொப்

பறையில் பாகம் செய்கின்றார்களாகையால் அந்நரகம் கும்பீபாக மென்றும்பா ம்பறறது. இவ்வுலகத்தில் எவன் மாதாவையாவது பிதாவையாவது ப்ராஹ்மணனையா வது வதிக்கிறானோ, அவன் காலஸூத்ரமென்னும் நரகத்தில் பதினாயிரம் யோஜனை சுற்றளவுடையதும் தாம் ரத்தினால் செய்யப்பட்டதும் களம்போல் மேடுபள்ளமில்லாமல் ஸமமாயிருப்பதும் மேலே ஸூர்யனாலும் கீழே அக்னியாலும் தபிக்கப்படுவதுமாகிய ஓரிடத்தில் தள்ளுண்டு பசி தாஹங்களால் சரீரம் உள்ளும் புறமும் தஹிக்கப்பட்டு உட்காருவதும் படுத்துக் கொள்வதும் நிற்பதும் ஓடுவதும் ஐயோ என்னை விடுவீர்களாக வென்று வேண்டுவதுமாகிப் பசுவின் சரீரத்தில் எத்தனை ரோமங்கள் உண்டோ அத்தனையாயிரம் வர்ஷங்கள் வரையில் அந்நரகத்தில் இருப்பான். துக்காநுபவ காலம் பலவாயிருக்கையால் அந்த நரகத்திற்குக் காலஸூத்ரமென்னும் பேர் விளைந்தது. இவ்வுலகத்தில் எவன் ஆபத்தில்லாத காலத்தில் வைதிகமான வர்ணாஸ்ரம ஆசாரத்தினின்று நழுவிப் போகிறானோ, அல்லது வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்படாததும் கேவலம் தன் புத்தியிலுள் கற்பிக்கப்பட்டதும் குத்ஸிதமார்க்கமும் ஆபாஸ தர்மமுமாகிய பாஷண்ட தர்மத்தைக் கைப்பற்றுகிறானோ, அவனை யமபடர்கள் அஸிபத்ரவனமென்னும் நரகத்தில் தள்ளி அதில் நடந்து வரும்படி அடிப்பார்கள். அவன் அவ்வேதனையைப் பொறுக்க மாடியாமல் ஓடுவான். இருபுறத்திலும் கூருடைய கத்திகள்போன்ற அப்பனங்காட்டிலுள்ள பனையோலைகளால் அங்கங்களெல்லாம் அறுப்புண்டு 'ஐயோ ஐயோ பாழானேன்' என்று மொழிந்துகொண்டு பெரு வேதனையால் அடிக்கடி மூர்ச்சித்து விழுவான். இங்ங

ணமே தனது வர்ணஸ்ரம தர்மத்தைத் துறந்தவன், பாஷண்ட தர்மத்தில் நிலைத்தவன் அனுபவிக்குந் துக்கத்தையே அனுபவிப்பான். இக்ரகத்தில் கத்தி போன்ற இலைகளையுடைய பனங்காடுகள் இருக்கின்றமையால் இதற்கு அஸிபத்ரவனமென்னும்பேர் பதார்த்தமாயிருக்கும். இவ்வுலகத்தில் ராஜனுவது ராஜ புருஷனுவது தண்டிக்கத்தகாதவனைத் தண்டிப்பானுயின் அல்லது ப்ராஹ்மணனுக்குச் சரீரதண்டனை விதிப்பானுயின், பாபிஷ்டனுகிய அவன் பரலோகத்தில் ஸூகரமுகமென்னும் நரகத்தில் விழுவான். பன்றியின் முகம்போன்ற முகமுடையவைகளும் பலிஷ்டங்களுமான ஜந்துக்கள் கரும்புத்தண்டையானை முறிப்பது போல், அவனுடைய அவயவங்களையெல்லாம் பீடிக்கும். அவன் பெருங்குரல் பாய்ச்சிப் புலம்பி, மூர்ச்சை இவ்வுலகத்தில் தோஷமில்லாதவர்கள் அவனால் பீடிக்கப்பட்டு வருந்தி எங்ஙனம் மூர்ச்சித்தார்களோ அங்ஙனமே மோஹத்தை அடைவான். இவ்வுலகத்தில் பரமபுருஷனல் வர்ணஸ்ரமதர்மங்களுக்குரியபடி கற்பிக்கப்பட்ட ஜீவனை முடையவனும் பிறனுடைய துக்கத்தை நன்குணர்ந்தவனுமாகிய புருஷன் மனுஷ்யனுடைய ரக்தத்தைப் பானம் பண்ணுகை முதலியவற்றையே ஜீவனமாகப் பெற்றவைகளும் பிறனுடைய துக்கத்தை அறியாதவைகளுமான மூட்டுப் பூச்சி கொசு முதலிய ப்ராணிகளை விரும்பிப்பாதுகாப்பானுயின், அவன் அங்ஙனம் ப்ராணிகளைக் கொன்று த்ரோஹம்செய்த பாபத்தினல் அந்தகூபமென்னும் நரகத்தில் விழுவான். ஐயோ! இவன் தான் மூர்ச்சை விம்மித்த பசு பக்ஷி மநுஷ்யம் கொசு பேன் மூட்டுப் பூச்சி முதலிய ஜந்துக்களால் கற்புறத்திலும் விம்மிக்கப்பட்டு நித்ரையிலுண்டாகும் ஸௌகம்

சிறிதுமின்றி ஓரிடத்திலும் நிற்கப்பெறாமல், வ்யாதி முதலியவற்றால் பீடிக்கப்பட்டு ஸஞ்சரிக்கமுடியாத சரீரத்தில் அடைப்புண்ட ஜீவன் நித்ராஸுகமின்றி வருந்துவதுபோலப் பெரிய அந்தகாரத்தில் சுற்றிக்கொண்டிருப்பான். இவ்வுலகத்தில் தனக்குக்கிடைத்த அன்னதிகளை அதிதிகளுக்குக் கொடாமல் தானே புசிக்கின்றவனும் பஞ்சமஹாயஜ்ஞங்களை நடத்தாதவனும் வாயஸம் போன்றவனென்று நிந்திக்கப்பட்டுப் பரலோகத்தில் க்ரிமிபோஜனமென்னும் பாபிஷ்டமான காகத்தில் விழுவான். அதில் நூறுயிரம் யோஜனை யளவுடைய க்ரிமிகுண்டத்தில் தானும் ஒரு புழுவாய் அங்குள்ள புழுக்களால் பக்ஷிக்கப்பட்டுத் தானும் அந்தப் புழுக்களைப் பக்ஷித்துக்கொண்டு அந்த க்ரிமிகுண்டம் எத்தனை யோஜனை யுள்ளதோ அத்தனை வர்ஷங்கள் வரையில் 'நான் அதிதிகளுக்குக் கொடாமையாலும் பஞ்சமஹாயஜ்ஞாதிகளை அனுஷ்டிக்காமையாலும் இப்படி அனுபவிக்கிறேன்' என்கிற பரிதாபமுமின்றி துக்கத்தை அனுபவிப்பான். இவ்வுலகத்தில் எவன் தனக்கு ஆபத்தில்லாத ஸமயத்தில் திருட்டுத்தனத்தினாலாவது பலாத்காரமாயாவது ப்ராஹ்மணனுடைய ஸ்வர்ணாதிகளையாவது மற்றவனுடைய ஸ்வர்ணாதிகளையாவது அபஹரிக்கிறானே அவனைப் பரலோகத்தில் யமபடர்கள் ஸந்தம்சமென்னும் நரகத்தில் தள்ளி கொருப்புப்போலப் பழுக்கக் காய்ச்சின இருப்புச் சூலங்களால் குத்துவார்கள். இவ்வுலகத்தில் எந்தப் புருஷனாவது ஸ்த்ரீயாவது புனராத்தகாத ஸ்த்ரீயை அல்லது புருஷனைப் புணர்கின்றார்களோ, அவர்களைப் பரலோகத்தில் தப்தஸூர்மியென்னும் நரகத்தில் தள்ளிச் சாட்டையால் அடித்து இரும்பிலால் ஆண்போலும்

பெண்போலும் இயற்றி கெருப்பில் காய்ச்சப்பட்டு ஜ்வலிக்கின்ற ஸ்தம்பத்தை அணையும்படி செய்வார்கள். இவ்வுலகத்தில் எவன் பணியத்தகுந்தவரென்றும் தகாதவரென்றும் பாராமல் எல்லோரையும் பணிகின்றானோ அவனைப் பரலோகத்தில் வஜ்ரகண்டகசால்மலி யென்னும் நரகத்தில் தள்ளி வஜ்ரம்போன்ற முட்களையுடைய சால்மலி வ்ருக்ஷத்தில் ஏற்றி உடம்பெல்லாம் பிறச்செய்வார்கள். எந்த க்ஷத்ரியர்களாவது அவர்களுடைய புருஷர்களாவது தாங்கள் தர்ம மர்யாதைகளைக் கடந்து பிறரையும் ஆசரிக்க வொட்டாமல் அவற்றைப் பாழ் செய்கின்றார்களோ, அவர்கள் பரலோகம் சென்று வைதரணியென்னும் நரகத்தில் விழுகின்றார்கள். நரகத்திற்கு அகழிபோன்ற வைதரணி யென்னும் அந்நதியில் மகர மீன் முதலை முதலிய கொடிய ஜலஜந்துக்களால் பக்ஷிக்கப்பட்டும் தமது பாபத்தினால் தேஹம் நீங்கப் பெறாமல் பாணன்களோடு கூடி 'இது நாம் செய்த பாபகர்மத்தின் பலன்' என்று நினைத்து விஷ்டை மூத்ரம் சீ ரக்தம் மயிர் நகம் எலும்பு மேதஸ்ஸு மாம்ஸம் மஜ்ஜை இவற்றின் வெள்ளம் நிறைந்த அந்நதியில் வருந்துவார்கள். இவ்வுலகத்தில் மேன்மையுள்ள ப்ராஹ்மணரது வர்ணங்களில் பிறந்து சூத்ர வர்ணத்துப் பெண்ணை மணம் புரிந்து ஸ்நானரது கர்மங்களையும் ஸந்த்யாவந்தனரது ஆசாரத்தையும் பக்ஷியாபக்ஷியாதி நியமங்களையும் துறந்து வெட்கமின்றிப் பசுக்களைப் போல மனம்போனபடி நடக்கின்றவர்கள், பரலோகத்தில் சீ விஷ்டை மூத்ரம் கோழை சொள்ளு முதலியனவை நிறைந்து ஸமுத்ரம் போல் விஸ்தாரமாயிருப்பதாகிய பூயோதமென்னும் மதுவில் விழுந்து மிகவும் அஸஹ்யமான அந்த விஷ்டை முதலியவற்றைப் புசித்

துக் கொண்டிருப்பார்கள். இவ்வுலகத்தில் ப்ராஹ்மணஜாதி வர்ணத்தில் பிறந்தும் காய் கழுதை முதலியவற்றை வளர்த்துக்கொண்டு தீர்த்தங்களில்லாத இடத்தில் ம்ருகங்களை வதிப்பார்களானால், அவர்கள் மரணம் அடைந்து யமபடர்களால் ப்ராண நிரோதமென்னும் நரகத்தில் தள்ளுண்பார்கள். யமபடர்கள் அவர்களை ப்ராணன் ஒடுங்கும்படி பாணங்களால் அடிப்பார்கள். இவ்வுலகத்தில் ஜயமிக்க விருத்தியை முயன்று காம்யமும் யஜ்ஞமும் செய்தோமென்கிற ப்ரஸித்திக்காகயாகங்களைச் செய்யத் தொடங்கிப் பசுக்களை ஹிம்ஸிக்கிறவர்கள் பரலோகத்தில் வைசஸனமென்னும் நரகத்தில் விழுவார்கள், அவர்களை யமபுருஷர்கள் துக்கப்படுத்தி ஹிம்ஸிப்பார்கள். இவ்வுலகத்தில் தன் வர்ணத்தில் பிறந்த பார்யையைக் காமத்தினால் மதியழிந்து தன் ரேதஸ்ஸைப் பானம் செய்விக்கிறவன் பரலோகத்தில் லாலாபக்ஷணமென்னும் நரகத்தில் விழுவான். அவனை யமபடர்கள் ரேதஸ்ஸை சிறந்த கால்வாயில் தள்ளி ரேதஸ்ஸைப் பானம் செய்விப்பார்கள். இவ்வுலகத்தில் எவர்கள் வீடுகளில் பெரும்பசுவை வைத்துக்கொண்டு கறந்துகறந்து கொல்லுகிறார்களோ, எவர்கள் தெரியாமல் விஷம் கொடுத்துக் கொல்லுகிறார்களோ, எவர்கள் தாங்கள் ராஜபடைகளாயிருந்து வரிகளாலும் தண்டங்களாலும் ராஜ்யத்தை யின்றிப் பட்டணம் கணிக்ராமம் முதலிய இடங்களில் விருக்கும் ப்ராணிகளையும் மற்ற ஜீவஜாலங்களையும் ஹிம்ஸிக்கிறார்களோ, அவர்கள் மரணம் அடைந்து ரௌரவமென்னும் நரகத்தில் விழுவார்கள். அவர்களை வஜ்ரம்போன்ற கொடும் பற்களையுடையவைகளாகிய எழுநூற்றிருபது நாய்கள் பரபரப்புடன் மேல் விழுந்து பக்ஷிக்கின்றன. இவ்வுலகத்தில் ஸாக்ஷ்யம்

சொல்லும் பொழுதாவது க்ரய விக்ரயாதி ரூபமான வர்த்தக வ்யாபாரத்திலாவது எவன் பொய்சொல்லு கிறானே அவன் மரணம் அடைந்து பெருவருத்தத் துடன் அவீசியென்னும் நரகத்தில் விழுவான். அவனை யமபடர்கள் நூறுயோஜனை தூரத்திற்கு மேல் எவ் விதத்திலும் பிடிப்பில்லாத இடத்தினின்று பர்வதத் தின் சிகரத்தில் விழும்படி தலை கீழாய்த்தள்ளுவார்கள். இந்நரகத்தில் தரையெல்லாம் கல்லாயிருக்கும். அது அலை யெறிகிற ஜலம்போல் தோற்றும். இந்நரகத்தை அவீசியென்று சொல்லுவார்கள். அங்ஙனம் உயரத்தி னின்று தள்ளுண்ட பாபி எள்ளு ப்ரமாணமான துண் டங்களாய்ச் சரீரம் முழுவதும் சிதரப்பெற்றும் மர ணம் அடையமாட்டான். மீளவும் அங்ஙனமே தூக் கித் தள்ளுவார்கள். இவ்வுலகத்தில் எந்த ப்ராஹ்மண னவது ப்ராஹ்மண பத்னியாவது வ்ரதத்திலிருக்கிற மற்றவர்ணத்தவனவது ஸுராபானம் செய்கிறார்களோ, எந்த க்ஷத்ரியனவது வைச்யனவது மதிமயங்கி ஸோம பானம் செய்கிறானே, அவர்கள் அனைவரும் அயப்பான மென்னும் நரகத்தில் விழுவார்கள். யமபடர்கள் அவர் களைக் கீழ்விழுத் தள்ளி மார்பில் காலால் மிதித்துக் கொண்டு உருக்கின இரும்பை அவர்கள் வாயில் கொட் டிக் குடிக்கச் செய்வார்கள். இவ்வுலகத்தில் ஜன்மம் வித்யை ஆசாரம் வர்ணம் ஆச்ரமம் இவைகளால் தாழ்ந்தவனையிருந்தும் அவற்றால் மேன்மையுற்ற பெரி யோர்களை வெகுமதிக்காதிருப்பானையின், அவன் ஜீவித் திருக்குங் காலத்தில் செத்தாற்போலவே யிருந்து மர ணம் அடைந்து கூரகர்த்தம மென்னும் நரகத்தில் தலைகீழாய் விழுந்து அபாரமான யாதனைகளை அனு பவிப்பான். இவ்வுலகத்தில் புருஷர்களை வதித்துப் பலி

கொடுத்துப் பத்ரகாளி முதலிய தேவதைகளைப் பூஜிக்கிற புருஷர்களும், நரபசுக்களை வதிக்கிற மடையர்களும் ரக்ஷோகணபோஜனமென்னும் நரகத்தில் விழுவார்கள். அத்தப் புருஷர்களாலும் ஸ்த்ரீகளாலும் முன்பு இவ்வுலகத்தில் நரபசுக்களாகக் கொண்டு வதிக்கப்பட்ட புருஷர்கள் அனைவரும் யமலோகத்தில் ராக்ஷஸர்கூட்டங்களாய் வந்து கொலைக்காரர்போல அவர்களைப் பலவாறு ஹிம்ஸித்துக் கத்தியினல் வெட்டி ரக்தத்தைப் பானம் செய்து, முன்பு அவர்கள் நரபலி கொடுத்த லக்ஷோபசாரத்தினல் நர்த்தனம் செய்தாற் போலவும் பாட்டுக்கள் பாடினற் போலவும் நர்த்தனம் செய்து பாட்டுக்கள் பாடுவார்கள். இவ்வுலகத்தில் க்ராமத்திலாவது அரண்யத்திலாவது நிரபராதிகளாய் ஜீவிக்கும் ஜந்துக்களை எவர்கள் விச்வாஸத்தை விளைக்கும் உபாயங்களால் கம்பச் செய்து சூலம் ஸ்ருக்ராம் முதலியவற்றில் மாட்டி விளையாட்டிற்காகப் பீடிக்கின்றார்களோ, அவர்கள் மரணம் அடைந்து சூலப்ரோத மென்னும் நரகத்தில் விழுந்து யமயாதனைகளை அனுபவித்துச் சூலம் ஸ்ருக்ராம் முதலியவற்றில் கோக்கப்பட்ட சரீரமுடையவர்களாகிப் பசி தாஹங்களால் பீடிக்கப்பட்டு ஊசிபோலக் கூரான முகமுடைய காக்கை கங்கம் கொக்கு முதலிய ஜந்துக்களால் குத்தப்பட்டுத் தமது பாபத்தை நினைப்பார்கள். இவ்வுலகத்தில் க்ரூரஸ்வபாவமுடைய ஸர்ப்பங்கள்போன்ற ப்ராணிகளைப் பயப்படுத்தி தன்மையுடையவர்கள் மரணம் அடைந்து பரலோகத்தில் தப்தகூபமென்னும் நரகத்தில் விழுவார்கள். மன்னவனே! இந்நரகத்தில் விழுந்தவரை ஜந்துதலைப் பாம்புகளும் ஏழுதலைப்பாம்புகளும் வந்து எலிகளைப்போல மேல் விழுந்து பிடுங்கும். இவ்வுலகத்தில்

னவர்கள் பாலர்களையும் குருடர்களையும் காய்க் கண்ணர் களையும் பலஹீனமான மற்ற ப்ராணிகளையும் பள்ளம் கூடு புதர் முதலிய இடங்களில் தள்ளி வெளியில் போக வொட்டாமல் தடுக்கின்றார்களோ, அவர்களைப் பாலோகத்தில் யமபடர்கள் அந்தப் பள்ளம் முதலிய இடங்களில் தள்ளி விழுந்தோடு கூடினை அக்னியாலும் புகையினாலும் வெளிவர வொட்டாமல் தடுப்பார்கள். ஆகையால் இவ்வுலகம் அவடநிரோதமென்று பேர்பெற்றது. இவ்வுலகத்தில் எவன் தானுவே வீடேறி வந்த [1] அதிதிகளையும் அப்யாகதர்களையும் அடிக்கடி பெருங்கோபத்துடன் தஹிக்க விரும்பினாற் போலப் பாபிஷ்டமான கண்ணால் குறுக்கே பார்க்கிறானே, அவன் மரணம் அடைந்து பரலோகம் போய் அக்ஷிபர்யாவர்த்தமென்னும் நரகத்தில் விழுவான். அங்குக் கூரான முகமுடைய காக்கை கொக்கு முதலிய பலிஷ்ட ஜந்துக்கள் பலாத்காரமாக மேல் விழுந்து அவன் கண்களைப்பிடுங்கும். இவ்வுலகத்தில் எவன் பணக்காரனென்று கர்விதனாய் தன்னைச் சிறந்தவனாகப்பாவித்துக் குறுக்குப்பார்வையுடையவனாகிக் குரு முதலியவர்களிடத்திலும் தன் பணத்தைத் திருடுவார்களோ * என்னவோ என்று ஸந்தேஹித்துப் பணச்செலவையும் பணம் காணுமல் அழிந்துபோவதையும் பற்றிப்பெருஞ்சிந்தையில் ஆழ்ந்து ஹ்ருதயமும் முகமும் வாடி வதங்கப்பெற்றுச் சிறிதும் ஸுகம் நேரப்பெறுமல் பிசாசம்போலப் பணத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறானே, அவன் அந்தப் பணத்தை ஸம்பாதிப்பதற்காகவும், அதை ஸ்ருத்தி செய்வதற்காகவும், அதைப் பாதுகாப்பதற்காகவும்

---

1. அதிதிகள்—முகம் பழகின விருந்தாளிகள்—அப்யாகதர்—முகந்தெரியாத விருந்தாளிகள்.

தான் செய்த பாபங்களையெல்லாம் மூட்டை கட்டியெடுத் துக்கொண்டு பரலோகத்தில் ஸ்ரீமுகமென்னும் நர கத்தில் விழுவான். பணத்தைப் பிசாசம்போல் பாதுகாத் துக் கொண்டிருந்தவனும் பாபமே ஒரு புருஷனை வடி வங்கொண்டு வந்தாற்போலிருப்பவனுமாகிய அவனை யமபடர்கள் ஊசியில் கோத்த நூலினால் துணிதைப்ப வர்கள் போல உடம்பெல்லாம் ஊசியில் கோத்த நூல்க ளால் தைப்பார்கள். இப்படிப்பட்ட நரகங்கள் யமபுரி யில் ஆயிரமாயிரமா யிருக்கின்றன. அந்த நரகங்களில் இங்குச் சொன்ன அதர்மிஷ்டர்களும் மற்றும் பலவகை அதர்மங்களைச் செய்தவர்களும் எல்லோரும் க்ரமமாகப் புகுவார்கள். அங்ஙனமே தர்மம் செய்தவர்கள் ஸ்வர்க் காதி லோகங்களில் சென்று ஸௌகங்களை அனுபவிப்பார் கள். இருவகைப் பட்டவர்களும் அங்கனுபவித்த புண்ய பாப சேஷத்தை அனுபவிக்கும் பொருட்டு மீளவும் இந்த மனுஷ்ய லோகத்தில் வந்து பிறப்பார்கள். இங்ஙு ணம் ப்ரவ்ருத்தி தர்மத்திலிருப்பவர்களின் மார்க்கத்தை மொழிந்தேன். நிவ்ருத்தி தர்ம நிஷ்டர்களுடைய மார்க் கம் முதலிலேயே கூறப்பட்டது. ப்ரஹ்மாண்ட கோசம் முழுவதும் இவ்வளவே உள்ளது. மூன்று லோகங்கள் அடங்கின இவ்வண்ட கோசத்தையே புராணங்களில் பதிணன்கு லோகங்கள் அடங்கினதாகச் சொல்லுகிறார் கள். அதலாதி லோகங்களைப் பூலோகத்திலும் மஹர் லோகாதியான ஊர்த்வ லோகங்களை த்யுலோகத்திலும் சேர்த்து அந்தரிக்ஷ லோகத்துடன் அண்டகோசம் மூன்று லோகங்கள் அடங்கினதென்று இங்கு மொழி யப்பட்டது. அவாந்தர லோகங்களின் பிரிவைப்பற்றிப் புராணாந்தரங்களில் அண்டகோசம் பதிணங்கு லோகங்கள் அடங்கின தென்று கூறப்பட்டது. மஹாபுருஷனை

திய ஸ்ரீமந்நாராயணனுக்கு ப்ரக்ருதியின் குணங்களான
[illegible] ஸ்தூலரூபம் ஒன்று உண்
டென்றும், அதுவே இந்த ப்ரஹ்மாண்டமென்றும் முன்
னமே சொல்லியிருக்கிறேன். அந்தவகையே ப்ரஹ்மாண்டத்தை
யும் நான் விரிவாகக்கூறினேன். பகவானுடைய
ஸ்தூலரூபமாகிய இந்த ப்ரஹ்மாண்டத்தை விரித்
துரைப்பதற்கும் இதைப் படிப்பதற்கும் ப்ரீதியுடன் படிக்கிறவன்
[illegible] ஆகிய ஸகலரும் உபநிஷத்
துக்களையும் [illegible] அனுபவத்துக்குரிய தும் எல்லா விடங்களிலும்
[illegible] நிவ்யமங்கள விரஹத்தோடு கூடி
[illegible] ஸ்வரூபத்தை ஸ்பஷ்டமாகவும்
பக்தியுடனும் பரிசுத்தமான மநஸுடையவர்களாகி கண்
ணால் அநுபவிப்பார்கள். பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம
ரூபங்களிரண்டையும் உள்ளபடி முழுமையாகக் கேட்டு
முதலில் ஸ்தூலரூபத்தில் நிலைநிற்கும்படி மனத்தை
வசப்படுத்திக்கொண்டு அப்பால் மெல்லமெல்ல நிவ்
யாத்ம ஸ்வரூபத்தை விசேஷித்தறிந்த புத்தியால் அம்
மனத்தை ஸூக்ஷ்மரூபத்தில் செலுத்தவேண்டும். பூமி
அதிலுள்ள த்வீபங்கள் அவற்றிலுள்ள வர்ஷங்கள்
அவற்றிலுள்ள பலவகை நதிகள் நதங்கள் பர்வதங்கள்
அந்தரிக்ஷலோகம் ஸமுத்ரங்கள் பாதாளம் வரையி
லுள்ள பூமியின் விவரங்கள் திக்குகள் நாகங்கள்
நக்ஷத்ர கணங்கள் அடங்கின த்யுலோகம் ஆகிய இவற்
றின் நிலைமைகளை யெல்லாம் உனக்குக் கூறினேன்.
மன்னவனே! பூலோகம் முதல் த்யுலோகம் வரையி
லுள்ள இந்த ஜகத்தே ஸகல ஜீவ ஸமூஹங்களுக்கும்
ஆதாரமான பகவானுடைய ஆச்சர்யமான ஸ்தூல
சரீரமாம். இருபத்தாறுவது அத்யாயம் முற்றிற்று.

பஞ்சம ஸ்கந்தமும் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ க்ருஷ்ணாய நம:

ஸ்ரீமத்பாகவதம்.

ஷஷ்ட ஸ்கந்தம்.

அஜாமிளோபாக்யானம்.
விஷ்ணு தூதர்களுக்கும் யமதூதர்களுக்கும் ஸம்வாதம்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—மஹாத்மாவே! வர்ணாச்ரமங்களுக்குரிய கர்மங்களை அநுஷ்டிக்கையாலும், ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி அறிகையாகிற ஆத்மஜ்ஞான யோகத்தினாலும் உதவி செய்யப்பெற்ற பக்தி யோகத்தினால் பரம புருஷனுடைய அநுக்ரஹத்தைப் பெற்று ஸம்ஸாரத்தினின்று விடுபடுகையாகிற மோக்ஷத்தின் ஸ்வரூபத்தை முன்னமே விவரித்துச் சொன்னீர். ப்ரக்ருதி ஸம்பந்தம் தீரப்பெறுமல் ஸுகதுக்கங்களை அநுபவிப்பதற்காக ஸத்வ ரஜஸ் தமோ குணமயமான தேஹங்களை அடிக்கடி பெறுகையாகிற ப்ரவ்ருத்தி மார்க்கத்தையும் மொழிந்தீர். அதற்கு மங்களைச் செய்கையால் விளையக்கூடிய பலவகை கதிகளையும், முதன்மையான ஸ்வாயம்புவ மன்வந்தரத்தையும், அந்த ஸ்வாயம்புவ மநுவின் புதல்வர்களான ப்ரியவ்ரதன் உத்தானபாதன் ஆகிய இவர்களின் வம்சத்தையும், அவரது சரித்ரங்களையும், த்வீபங்கள் அவற்றிலுள்ள வர்ஷங்கள் ஸமுத்ரங்கள் பர்வதங்கள் நதிகள்

உத்யானவனங்கள் ஜம்பு முதலிய வ்ருக்ஷங்கள் பூமண்டலம் ஆகிய இவற்றின் நிலைமையையும், அவற்றின் பிரிவுகளையும், அடையாளங்களையும், அளவுகளையும், கக்ஷாத்ரமண்டலம் முதலியவை அடங்கின த்யுலோகத்தின் ஸ்வரூபத்தையும், அதலம் முதல் பாதாளம் வரையிலுமுள்ள பூமியின் விவரங்களையும் ப்ரஹ்மதேவன் படைத்தபடியே விவரித்து மொழிந்தீர். பேரறிஞரே! கொடிய பல யாதனைகளுக்கிடமான ரோகங்களை இப்பொழுதே மனுஷ்யன் எந்தக் காரணத்தினால் அடையாமல் தப்பித்துக்கொள்ள முடியுமோ அதை எனக்கு மொழிவீராக.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார் :—மனத்தினாலும் வாயாலும் காயத்தினாலும் செய்த பாபத்தை இவ்வுலகத்திலேயே ப்ராயச்சித்தாதிகளால் போக்கிக்கொள்ளாதவன், அவன் மரணம் அடைந்த பின்பு என்னால் மொழியப்பட்டவைகளும் பொறுக்கமுடியாத பல யாதனைகளுக்கிடங்களுமாகிய ரோகங்களை அவச்யம் அனுபவித்தே தீருவான். இது நிச்சயம். ஆகையால் மரணம் அடைவதற்கு முன்னமே மனோவாக்காயங்களென்கிற மூன்று காரணங்களும் வலிவுடன் இருக்கும் பொழுதே இவ்வுலகத்திலேயே தான் செய்த பாபத்திற்கு ப்ராயச்சித்தத்தைப்பற்றி யத்னம் செய்யவேண்டும். ரோகங்களின் நிதானத்தை அறிந்த வைத்யன் அந்த ரோகங்களின் பலாபலத்தை அனுஸரித்து அவற்றிற்குச் சிக்ஷை செய்வதுபோல், பாபங்களின் குருலகவங்களை ஆலோசித்து அவற்றிற்கு ஏற்பட்ட ப்ராயச்சித்தங்களில் முயற்சிகொள்ள வேண்டும்.

மன்னவன் சொல்லுகிறான் :—பெரியோர்கள் நிந்திப்பது முதலிய ப்ரத்யக்ஷத்தினாலும், சாஸ்த்ரங்க

னில் இதைச் செய்யலாகாதென்று கேட்டமையாலும், தனக்கு அநிஷ்டத்தை விளைக்குமென்று அறிந்தவன் சப்தாதி விஷயங்களில் மனம் சென்று மெய்ம்மறந்து பாபத்தைச் செய்வானையின், அவன் செய்த ப்ராயச்சித்தம் பாபத்தை எங்ஙனம் போக்க வல்லதாகும்? ஒரு கால் நாம் பாபத்தைச் செய்யலாகாதென்று தோன்றி அதினின்றும் மீள்கிறான். மற்றொருகால் விஷயங்களில் மனம் சென்று மெய்ம்மறந்து அந்தப் பாபத்தையே மீளவும் செய்கிறான். அவன் செய்த ப்ராயச்சித்தமும் கஜஸ்நானம்போல வீணையென்று நான் நினைக்கிறேன். ஆகையால் அதற்குத் தகுந்த மற்றொரு உபாயத்தை மொழியவேண்டும்,

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ப்ராயச்சித்த ரூபமான கர்மத்தினால் பாபத்திற்கு அடியோடு பரிஹாரம் உண்டாகமாட்டாது. பரமாத்மோபாஸனத்தில் இழியாமல் அஹங்கார மமகாரங்களாலும் ராக த்வேஷாதிகளாலும் மனக்கலக்கமுற்ற புருஷனுக்கு ப்ராயச்சித்தம் விதித்ததேயன்றிப் பரமாத்மோபாஸகனை ஆத்மஜ்ஞானிக்கு ஜ்ஞானமே பூர்வபாபங்களையும் மேல்வரும் பாபங்களையும் போக்குகின்றது. ஆனால் ஆத்மஜ்ஞானமில்லாதவன் மேன்மேலும் பாபம் செய்வானையின், ஒருதரம் செய்த ப்ராயச்சித்தத்தினால் மேல் செய்யப்போகிற பாபங்களும் கீழ்செய்த பாபங்களும் தீரமாட்டாவாயின், ப்ராயச்சித்தம் வீணையென்று நினைக்கவேண்டாம். அப்பொழுதுள்ள ரோகத்தை ஔஷதத்தினால் போக்கிக்கொள்வதுபோல அந்தப் பாபங்களுக்கு அந்த ப்ராயச்சித்தங்களால் பரிஹாரம் தேரும். ஆகையால் ப்ராயச்சித்தங்களை விதித்தமை வீணாகமாட்டாது. ஓ மன்னவனே! பத்யமான அன்னத்தைப்

புசிக்கும் புருஷர்களை வ்யாதிகள் பீடிக்கமாட்டாவல்
லவா? அங்ஙனமே மேற்சொல்லப்போகிற நியமங்களை
அனுஷ்டிக்கும் புருஷன் மெல்லமெல்ல மஹாராஜ்ஞ
மான மோக்ஷத்தைப் பெறுகையாகிற க்ஷேமத்தைப்
பெறுவான். உபவாஸம் முதலிய தவம், ருதுகாலம்தவிர
மற்றகாலங்களில் ஸ்த்ரீ ஸம்போகமில்லாமை முதலிய
ப்ரஹ்மசர்யம், உள்ளிந்த்ரியமான மனத்தை அடக்
குகை, வெளியிந்த்ரியங்களான செவி வாய் கண் மூக்கு
பாணி பாதம் பாயு உபஸ்தம் முதலியவற்றை அடக்
குகை, ஸத்பாத்ரங்களில் தானம் செய்கை, ப்ராணிக
ளுக்கு ஹிதம் செய்கை, பொய்பேசாமை, கல்லொழுக்
கம், காமத்தில் விருப்பின்மை, பஞ்சமஹாயஜ்ஞாதி வர்
ணாச்ரம தர்மங்களை அனுஷ்டிக்கை ஆகிய இவற்றால்
சீதம் உஷ்ணம் ஸுகம் துக்கம் முதலிய த்வந்த்வங்
களைப்பொறுக்கும் தன்மையுள்ளவர்களும் மோக்ஷஸா
தனமான உபாஸனரூப தர்மத்தை அறிவிக்கிற சாஸ்
த்ரங்களைக் கற்றுணர்ந்தவர்களுமாகிய பெரியோர்கள்
ஸ்ரத்தையுடன் கூடி, அக்னி மூண்கிற் புதரை அழிப்
பதுபோல, மனோவாக்காயங்களால் செய்த மஹத்
தான பாபத்தையும் போக்கிக் கொள்கிறார்கள். சில்
வாஸுதேவனையே ப்ராப்யனாகவும் ப்ராபகனாகவும் பற்
றிக் கேவல பக்தியால், ஸூர்யன் பனியைப்போக்குவது
போலப் பாபத்தையெல்லாம் போக்கிக்கொள்கிறார்கள்.
மன்னவனே! பாபம் செய்தவன், ஸ்ரீக்ருஷ்ணனுடைய
பாதாரவிந்தங்களில் ஆத்ம ஸமர்ப்பணம் செய்து அவ
னுடைய பக்தர்களான பெரியோர்களைப் பணிகையால்
தன் பாபங்களை யெல்லாம் போக்கிக்கொள்வதுபோலத்
தவம்முதலியவற்றால் அப்பாபங்களைப்போக்கிக்கொள்ள
வல்லவனாகமாட்டான். இவ்வுலகத்தில் தன்மையைப்

பெறுதற்கு ஸாதனமாக விசாரிக்கப்படும் உபாயங்களில் இந்தப் பகவத் பக்திரூபமான உபாயமே மிகவும் அழகியது. எனென்றால், இதனல் எவ்விதத்திலும் பயத்திற்கிடமில்லாததும் மஹாசுகரூபமுமாகிய மோக்ஷம் அநாயாஸமாக உண்டாகின்றது. ஆனது பற்றியே கன்னடத்தையுடைய பெரியோர்கள் ஸ்ரீமந்நாராயணனை முக்யமாகப் பற்றி அவனிடத்தில் பக்தி செய்கையாகிற இம்மார்க்கத்தில் நிலைன்றிருக்கிறார்கள். இத்தகைய பகவத் பக்தியோகமே பலவகையான கொடிய நரகங்களை விலக்கும் பாபங்களினின்று தன்னை மீட்டுக் கொள்வதற்குரிய உபாயமாகுமன்றி மற்றொன்றுமன்று. ராஜஸ்ரேஷ்டனே! ஒருகாலும் ஸ்ரீமந்நாராயணனை நெஞ்சிலும் நினையாத பாபிஷ்டர்கள் எத்தனை ப்ராயச்சித்தங்களை அனுஷ்டிக்கினும், மத்யம் நிறைந்த குடத்தைக் கங்கை முதலிய நதிகள் பவித்ரம் செய்யமாட்டாதுபோல அவை அவர்களைப் பவித்ரம் செய்யமாட்டா. இவ்வுலகத்தில் எத்தகைய பாபிஷ்டர்களாயினும் ஸ்ரீக்ருஷ்ணனுடைய குணங்களில் ப்ரீதியுடைய மனத்தை அவனுடைய பாதாரவிந்தங்களில் ஒருகால் நமஸ்கரிப்பார்களாயின், அவர்கள் அதுவே தாம் செய்த பாபங்களுக்கெல்லாம் ப்ராயச்சித்தமாகப் பெற்று யமனையாவது பாசாயுதங்களைத் தரித்த யமபடர்களையாவது ஸ்வப்னத்திலும் காணமாட்டார்கள். பகவானுடைய காமத்தை அந்த அபிப்ராயமின்றிச் சொல்லினும் கூட அவன் யமனுக்காவது யமபடர்களுக்காவது உட்படமாட்டான். இவ்விஷயத்தில் விஷ்ணுகிங்கரர்களுக்கும் யமகிங்கரர்களுக்கும் நடந்த ஸம்வாதமாகிற ஒரு பழைய வ்ருத்தாந்தத்தைக் கூறுகிறார்கள். அதைச் சொல்லுகிறேன், கேட்பாயாக. கன்யாகுப்ஜ மென்னும் தேசத்தில் அஜா

மிளனென்னும் ஒரு ப்ராஹ்மணன் இருந்தான். அவன் சூத்ர ஸ்த்ரீயைப் புணருந் தன்மையுடையவன்; வர்ணஸ்ரம தர்மானுஷ்டான ரூபமான ஸதாசாரமற்று அத்தாஸியின் ஸம்பந்தத்தினல் பதிதனுயிருந்தான். அவன் பந்தயம் வைத்தாடுகிற சூதாட்டங்களாலும் கபடங்களாலும் திருட்டுத்தனத்தினலும் குடும்பத்தைதப் போஷித்துக்கொண்டு பெரியோர்களால் நிந்திக்கப்பட்டவ்ருத்தியைக் கைப்பற்றியிருந்தான். அவற்ரூலும் குடும்பத்தைப் போஷிக்க முடியாதபொழுது பசு பக்ஷி ம்ருகம் முதலிய ப்ராணிகளையும் ஹிம்ஸித்துக்கொண்டு எப்பொழுதும் அபரிசுத்தனுகவே யிருப்பான். இங்ஙனம் ஜீவிக்குந் தன்மையுள்ள அந்த ப்ராஹ்மணன் அத்தாஸியிடத்தில் தனக்குப் பிறந்த பிள்ளைகளைச் சோரட்டிக் கொண்டிருக்கையில், மஹாராஜனே! அவனுடைய வாழ்காளில் எண்பத்தெட்டு வர்ஷங்கள் கடந்தன. அங்ஙனம் வயது முதிர்ந்த அவ்வந்தணனுக்குப் பத்துப் பிள்ளைகள் பிறந்திருந்தார்கள். அவர்களில் கடைசிப்பிள்ளை நாராயணனென்று பேரிடப்பட்டவன். அவன் அப்பொழுது இளஞனையிருந்தான். அவன் தாய் தந்தைகளிருவர்க்கும் மிகவும் அன்பிற் கிடமானவன். கிழவனுகிய அந்த ப்ராஹ்மணன் அவ்யக்த மதுரமாய்ப் பேசுகின்ற இளம்பிள்ளையாகிய அந்நாராயணனிடத்தில் மனம் செல்லப்பெற்று அவனுடைய விளையாடல்களைப்பார்த்து மிகவும் ஆநந்தித்திருந்தான். அவன் தான் சாப்பிடும்பொழுது அக்குழந்தையையும் ப்ரீதியால் சாப்பிடுவிப்பதும், தான் தண்ணீர் முதலியன பருகும்பொழுது அவனையும் பருகச்செய்வதுமாகி ஒன்றும் தெரியாமல் ம்ருத்யு ஸமீபித்து வந்திருப்பதையும் அறியாதிருந்தான். இப்படி ஒன்றுமறியாத மூடனுய்ச்

1361. அஜாமிளனை யமதூதர்கள் பாசங்களால்
கட்டியிருக்கையில் விஷ்ணு தூதர்கள்
அவனை விடுவித்தல்.

காலத்தைதக் கழிக்கின்ற அவ்வந்தணன் மரணகாலம் மிகவும் ஆஸன்னமாயிருக்கையில், நாராயணனென்னும் பேருடைய அவ்விளம் பிள்ளையிடத்தில் மதியைச் செலுத்தியிருந்தான். அவ்வஜாமிளன், பாசஹஸ்தர்களும் மிகப் பயங்கரர்களும் கோணலான முகமுடையவர்களும் உடம்பெல்லாம் மேல் நோக்கின ரோமங்கள் அடர்ந்தவர்களும் தன்னை யமலோகத்திற்குக் கொண்டு போக வந்தவர்களுமாகிய மூன்று புருஷர்களைக் கண்டு மனவ்யாகுலமுற்றுத் தூரத்தில் விளையாடிக் கொண்டிருக்கிற நாராயணனென்னும் புதல்வனை மிகவும் நீண்ட குரலுடன் உரக்க அழைத்தான். மஹாராஜனே! மரணம் அடைய முயன்றிருக்கிற அவ்வந்தணன் பகவானை அறிவிக்கவல்ல நாமத்தை வாயால் மொழியக் கேட்டுப் பகவானுடைய தூதர்கள் விரைந்தோடி வந்தார்கள். அந்த விஷ்ணுதூதர்கள் தாஸிக்குப் பதியான அஜாமிளனை ஹ்ருதயத்தினின்று பலாத்காரமாகப் பிடித்திழுக்கிற யமதூதர்களைத் தடுத்தார்கள். அங்ஙனம் தடுக்கப்பட்ட யமதூதர்கள் அந்த விஷ்ணுதூதர்களைப் பார்த்து மேல்வருமாறு மொழிந்தார்கள். 'தர்மராஜனை யமனுடைய ஆஜ்ஞையைத் தடுக்கின்ற நீங்கள் யார்? யாரால் அனுப்பப்பட்டவர்கள்? எங்கிருந்து வந்தீர்கள்? இவனிடத்தில் நீங்கள் எந்தக் காரணத்தைக் கண்டு யமனுடைய ஆஜ்ஞையைத் தடுக்கின்றீர்கள்? நீங்கள் தேவதைகளா? அல்லது கந்தர்வர்களா? அல்லது ஸித்தஸ்ரேஷ்டர்களா? நீங்களெல்லோரும் தாமரையிதழ்போன்ற கண்கள் அமைந்து பொன்னிறமான பட்டு வஸ்த்ரம் உடுத்துக் கிரீடம் குண்டலம் முதலிய ஆபரணங்களை அணிந்து தாமரை மாலையைத் தரித்துத் திகழ்கின்றீர்கள். நீங்களெல்லோரும் புதிய

வயதுடையவர்களும் அழகான நான்கு தோள்கள் அமைந்தவர்களும் தனுஸ்ஸு அம்பரந்தூணி கத்தி கதை சங்கு சக்ரம் பத்மம் இவற்றைத்தரித்தவர்களு மாகி அழகுடன் விளங்குகிறீர்கள். உங்கள் தேஹ காந்தியால் திசைகள் எல்லாம் இருளற்று ஒளியுடன் விளங்குகின்றன. இப்படிப்பட்ட நீங்கள் யமனுடைய கிங்கரர்களான எங்களை ஏன்தடுக்கிறீர்கள்?' என்றூர் கள். இங்ஙனம் யமதூதர்களால் மொழியப்பெற்ற விஷ்ணு தூதர்கள் சிரித்து அவர்களை நோக்கி மேக கர்ஜனம்போன்ற கம்பீரமான மொழியுடன் இவ்வாறு கூறினர்கள். 'நீங்கள் தர்மராஜனுகிய யமனுடைய தூதர்களாயிருப்பீர்களாயின், நீங்களும், தர்ம அதர்மங் களின் ஸ்வரூபத்தை உணர்ந்தவர்களாயிருக்கவேண் டும். ஆகையால் தர்மத்தின் உண்மையையும் அதர்ம தின் உண்மையையும் எமக்குச் சொல்வீர்களாக. தண் டனை எங்ஙனம் விதிக்கப்படுகின்றது? இந்தத் தண்ட னைக்கு இடம் யாவன்? கர்மம் செய்தவர்கள் அனைவ ரும் தண்டிக்கத் தகுந்தவர்களா? அல்லது அவர்க ளில் சிலர்தானு?' என்று கேட்டார்கள். யமதூதர்கள் விஷ்ணு தூதர்களை நோக்கி 'வேதத்தினுல் விதிக்கப் படுவது தர்மம். அதனுல் நிஷேதிக்கப்படுவது அதர் மம். தர்ம அதர்மங்களுக்கு வேதமே முக்ய ப்ரமாணம். வேதம் ஸ்ரீமந்நாராயணனிடத்தினின்று நேரே உண் டானது. அவ்வேதம் தான் முன் கல்பத்தில் எப்படி இருந்ததோ, அப்படியே இந்தக் கல்பத்திலும் திகழ் கின்றது. ஆகையால் இதனிடத்தில் புருஷபுத்தியால மான தோஷங்கள் எவற்றையும் சங்கிக்க இடமில்லை யென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். இவ்வேதத்தின் தோற்றத்திற்கிடமான அந்நாராயணன் யாவனென்றூல்

எவன் அனைத்திலும் உட்புகுந்து தரிக்குந்திறமையுடைய தன் ஸ்வரூபத்தில் வேதம் தேவதைகள் முதலிய ராஜஸ்தமோ குணங்கள் நிறைந்த பதார்த்தங்களெல்லாம் குணம் காமம் க்ரியை உருவம் இவற்றுடன் தனித்தனியே பிரிந்திருக்குமாறு அவற்றின் கர்மத்தை அனுஸரித்து வெளியிடுகிறானே அவனோ அந்த காராயணன். ஸம்ஸாரத்திலுள்ள ஜீவாத்மாக்கள் அனுஷ்டிக்கிற தர்மங்களும் அதர்மங்களும் அபாரமானவை. அவற்றை எப்படி அறிய முடியுமென்றால், ஸூர்யன் அக்னி ஆகாயம் காற்று ஸரஸ்வதி சந்த்ரன் ஸந்த்யைகள் பகல் ராத்ரி திக்குகள் ஜலம் பூமி காலம் தர்மம் ஆகிய இவற்றின் அபிமானி தேவதைகள், ஜீவாத்மாக்கள் செய்யும் புண்யபாப கர்மங்களுக்கு ஸாக்ஷிகளாயிருக்கிறார்கள். இவர்களால் பாபம் செய்தவனென்று அறிவிக்கப்பட்ட புருஷன் தண்டனைக்கிடமாவான். ஸம்ஸாரத்தில் உள்ளவர் அனைவரும் பாபகர்மம் செய்கிறவர்களே. ஆகையால் எல்லோரும் அவரவர் செய்த பாபத்திற்குத் தகுந்தபடி தண்டிக்கத்தகுந்தவர்கள். தர்மம் செய்கிறவர்களும் சப்தாதி விஷயங்களில் மனம் செல்லப்பெற்றவர்களாகையால் அவர்களுக்கும் பாபகர்மம் கோதிருக்கமாட்டது. அதர்மத்தின் பலனை அனுபவிக்கவேண்டிய வேளையில் அவர்களும் தண்டிக்கத் தகுந்தவர்கள்தான். நித்தோஷர்களே! உங்களுக்குப்பாபத்தின் ஸங்கதியே தெரியாதுபோலத் தோன்றுகிறது. புண்யங்களும் பாபங்களும் ப்ராணிகளுக்கு ஸம்பவிக்கின்றன. ஏதேனுமொன்றைச் செய்துகொண்டேயிருக்கும் ப்ராணிகளுக்குச் சப்தாதி விஷயங்களில் விருப்பம் மாறுமலேயிருக்கின்றது. அவ்விருப்பத்தினால் அவற்றைப் பெறுதற்குரிய காரியங்களைச்செய்வார்கள். அப்பொழுது அவர்

கள் பாபங்களைச் செய்தே தீரவேண்டியதாயிருக்கும். தேஹமுடையவன் எவனும் ஒன்றும் செய்யாமல் வெறுமனே யிருக்கவல்லனாகமாட்டான். ஸத்வ ராஜஸ் தமோ குண ஸம்பந்தமுடைய ஜீவன் அவற்றில் ஏதேனு மொன்று தலையெடுக்கப்பெற்றுத் தர்மத்தையாவது அதர்மத்தையாவது செய்து அவற்றிற்குத் தகுதியான ஸ்வர்க்க நரகாதி பலன்களைப் பரலோகத்தில் அனுபவிக்கிறான். தர்மம் செய்கிறவன் நரகத்தை அனுபவிக்கமாட்டான். அதர்மம் செய்கிறவனும் ஸ்வர்க்கத்தை அனுபவிக்கமாட்டான். மற்றும், அற்பமான பாபத்தினால் மஹத்தான துக்கத்தையும், அற்ப தர்மத்தினால் மஹத்தான ஸுகத்தையும் அனுபவிக்கமாட்டான். ஓ தேவஸ்ரேஷ்டர்களே! இவ்வுலகத்திலுள்ள ப்ராணிகள் ஜன்மாந்தரத்தில் ஸத்வாதிகுணங்களில் ஏதேனு மொன்று தலையெடுக்கப் பெற்றுச்செய்த ஸாத்விகம் ராஜஸம் தாமஸமென்று மூன்றுவகையான கர்மங்களின் பேதத்தினால் ஸுகிகள் துகிகள் மூடர்களென்று மூன்று விதமாகப்பிரிந்திருப்பது புலப்படுகின்றதல்லவா? அங்ஙனமே பரலோகத்திலும் ஸத்வாதி குணங்கள் தலையெடுத்துச்செய்யும் ஸாத்விகாதி கர்ம பேதத்தினால் ஸுகிகள் துகிகள் மூடர்களென்கிற மூன்று விதமான பேதம் உண்டென்று ஊஹிக்கலாம். நிகழ் காலத்திலுள்ள ஸுக துக்க மோஹங்கள் தமக்குக் காரணமான தர்மாதர்மங்கள் ஸத்வாதி குணங்களின் உன்மேஷத்தினுலுண்டானவை யென்று தெரியப்படுத்துவதுபோலக் கீழ்மேலுள்ள ஜன்மங்களில் நேரும் ஸுக துக்க மோஹங்களும், தமக்குக் காரணமான தர்மாதர்மங்கள் ஸத்வாதி குணங்களின் உன்மேஷத்தினுலுண்டானவையென்பதைத் தெரியப்படுத்துகின்றன. சரீரத்

தில் தன்தேஜஸ்ஸினல் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற பரமாத்மாவான ஸர்வேஸ்வரன் என்றும் மாறாது மலர்கின்ற தன் ஜ்ஞானத்தினல் பூர்வ ஜன்மத்தில் ஜீவன் செய்த புண்ய பாப கர்மங்களை ஆராய்ந்தறிகிறான். பகவான் தன் ஜ்ஞானத்தினல் பூர்வகர்மத்தை அனுஸரித்து அவற்றிற்குப்பலன் கொடுக்கவேண்டியதை நிரூபிக்கிறான். ஜீவன் செய்த கர்மங்கள் அடுத்த க்ஷணத்தில் மறைந்து போகின்றனவாயினும், அவற்றை நிரூபித்து நிக்ரஹானுக்ரஹங்களை ஸங்கல்பித்திருக்கும் பகவான் அதை அனுஸரித்து ஸுகதுக்காதி பலன்களைக்கொடுக்கிறான். இருட்டில் கண்தெரியாத புருஷன் முன்னும் பின்னும் இருக்கும் வஸ்துக்கள் எவையும் தெரியப்பெறுமல் தன் சரீரத்தை மாத்ரமே சிந்தித்துக் கொண்டிருப்பான். ஸ்வப்னம் காண்கிறவன் அந்த ஸ்வப்னத்தில் ஏற்பட்ட தேஹாதிகளைமாத்ரமே அனுஸந்திப்பானன்றி விழித்துக்கொண்டிருக்கும் பொழுதுள்ள தேஹாதிகளை அனுஸந்திக்க மாட்டான். அங்ஙனமே ஜீவன் தேஹாத்மாபிமானம் முதலிய அஜ்ஞானங்களுடையவனுகிக் கர்மத்தினல் ஜ்ஞானஸங்கோசம் உண்டாகப்பெற்று அப்பொழுது ஸ்பஷ்டமாய்த் தெரிகிற தேஹத்தை மாத்ரம் நினைப்பானேயன்றிக் கீழ்ப்போன தேஹத்தையாவது மேல் வரப்போகிற தேஹத்தையாவது நினைக்கமாட்டான். ஜீவனுக்குக் கீழ்மேலுள்ள ஜன்மங்களைப்பற்றின நினைவு அழிந்து போகின்றது. ஆகையால், அப்பொழுதுள்ள தேஹத்தின் போஷணைத்திற்குரிய கர்மங்களைச் செய்வானேயன்றிப் பரமபுருஷனுடைய அனுக்ரஹத்தை விளக்கும்படியான கர்மத்தைச் செய்யமாட்டான். ஜீவன் ஐந்து கர்மேந்த்ரியங்களால் போதல் வருதல் எடுத்தல்

முதலிய கார்யங்களைச்செய்கிறான். ஐந்து ஜ்ஞானேந்திரியங்களால் ஐந்து விஷயங்களை அறிகிறான். பஞ்ச பூதங்களும் பத்து இந்த்ரியங்களுமாகிய பதினைந்தைக்காட்டிலும் வேறுபட்டுப் பதினாறுவதாகிய மனம் செய்கைக்கும் அறிகைக்கும் உதவியாயிருக்கின்றது. கீழ்ச்சொன்ன பதினாறு தத்வங்களைக்காட்டிலும் வேறுபட்டுப் பதினேழாவதாகிய ஜீவன் தானொருவனுகவே பதினாறுவதாகிய மனத்துடன் கூடிய ஜ்ஞானேந்திரியங்களால் சப்தாதி விஷயங்களை அறிவதும் அம்மனத்தோடு கூடிய கர்மேந்த்ரியங்களால் செயல்களைச் செய்வதுமாகிலுமாக துக்க மோஹங்கள் மூன்றையும் அனுபவிக்கிறான். பஞ்சபூதங்களும் பத்து இந்த்ரியங்களும் மனமும் ஆகப்பதினாறு அவயவங்களுடையதும் அவித்யை கர்மம் வாஸனையென்கிற மூன்று சக்திகளுடையதும் கார்ய தசையில் ஸ்தூலாகாரமாயிருப்பதுமாகிய ஸூக்ஷ்ம சரீரம், ஹர்ஷம் சோகம் பயம் இவற்றை விளைப்பதும் கர்ப்பஜராமரணாதிகள் மாறி மாறி வரப்பெறுவதுமாகிய ஸம்ஸாரத்தை ஜீவனுக்கு விளக்கின்றது. தேஹஸம்பந்தமுடைய ஜீவன் தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமித்து ஆறு இந்த்ரியங்களையும் வெல்ல மூடியாமல் அவற்றின்வழியே சென்று தான் இஷ்டப்படாமற்போயினும் பலாத்காரமாகப் புண்யகர்மங்களையும் பாபகர்மங்களையும் இரண்டுங் கலந்த மிச்ர கர்மங்களையும் செய்விக்கப்படுகிறான். இங்ஙனம் தான் செய்த கர்மத்தினால் கோசகாரம் என்ற புழுபோலத் தன் ஸ்வரூபத்தைத்தானே மறைத்துக்கொண்டு தேஹத்தையே ஆத்மாவென்று ப்ரமிக்கிறான். ஒரு ப்ராணியும் கர்மத்தைச் செய்யாமல் இருக்கமாட்டாது. ஒன்றுமில்லாமற் போயினும் கடைசியில் துரும்பையாவது கிள்ளிக்

கொண்டிருக்கும். அநுதியாக ஏற்பட்டிருக்கின்ற ஸத்வாதிகுணங்களால் ஜீவன் பலாத்காரமாக ஏதேனுமொரு கார்யத்தைச் செய்யும்படி தூண்டப்படுகிறான். மூலப்ரக்ருதியென்கிற ப்ரதானம் ஜன்ம மரணங்களுக்குக் காரணமான கர்மத்தைதப்பற்றி ஓருகால் பதினாறு தத்வஸ்வரூபமாய் அவ்யக்தமாகவும், ஓருகால் தேவமனுஷ்யாதி தேஹரூபமாய் வ்யக்தமாகவும் இருக்கின்றது. எறும்பு முதலிய ஸூக்ஷ்ம சரீரங்களும் யானை முதலிய ஸ்தூலசரீரங்களும் கர்ம தாரதம்யத்தைப் பற்றியே உண்டாகின்றன. அத்தேஹங்களெல்லாம் தாய்தந்தைதகளின் சாயையை அனுஸரித்தே யிருக்கும். ஸாத்விகம் ராஜஸம் தாமஸமென்று மூன்று வகையான கர்மவாஸனையாகிற ஸ்வபாவத்தைக் கடக்க முடியாமல் ஜீவாத்மாக்கள் ஸாத்விகாதி கர்மங்களைச் செய்து பலவகைச் சரீரங்களைப்பெறுகிறார்கள். ஜீவனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தத்தினல் விளையும் ஸம்ஸாரம் இத்தகையது. அவனுக்கு இயற்கையில் ஏற்படாமல் வந்தேறியாய்க்கிடைத்த அந்த ஸம்ஸாரம் பரமபுருஷனிடத்தில் செய்யும் பக்தியால் அடியோடு மாறிப்போகின்றது. இந்த அஜாமிளன் வேத சாஸ்த்ராதிகளை நன்குணர்ந்தவன்; கல்வியற்கையும் நன்னடத்தையும் சமதமாதிகுணங்களும் அமைந்தவன்; ஸ்த்ரீஸம்போகமில்லாமையாகிற ப்ரஹ்மசர்ய வ்ரதமுடையவன்; ம்ருதுவான ஹ்ருதயமுடையவன்; வெளியிந்த்ரியங்களை வென்றவன்; ப்ராணிகளின் ஹிதத்தையே பேசுவான்; பொய் பேசாதவன்; ஸாவித்ரி முதலிய மந்த்ரங்களை உணர்ந்தவன்; எப்பொழுதும் பரிசுத்தனயிருப்பவன்; குரு அக்னி அதிதிகள் பெரியோர்கள் இவர்களுக்குச் சுஸ்ரூஷை செய்யுந் தன்மையன்; குணங்களால் விளையும்

அஹங்காரம் தீண்டப்பெறுதவன்; ஸமஸ்த பூதங்களுக்கும் ப்ரியத்தையே செய்யுந்தன்மையன்; பிறருடைய கார்யங்களை நிறைவேற்றிக்கொடுப்பவன்; மிதமாய்ப் பேசுபவன்; குணங்களில் தோஷங்களை யேறிடுத்தன்மையாகிற அஸூயையற்றவன்; இத்தன்மையுள்ள இவ்வந்தணன் ஒருகால் தந்தையின் கட்டளையைத் தலைக்கட்டமுயன்று வனத்திற்குச்சென்று பழம் புஷ்பம் ஸமித்து தர்ப்பம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு அங்கிருந்து திரும்பி வந்தான். அப்பொழுது அவ்வனத்தில் தாஸியுடன் காமக்கலவியிலாழ்ந்திருக்கின்ற ஒரு சூத்ரனைக்கண்டான். அந்தத்தாஸி மத்யபானம் செய்து மதத்தினால் கண்கள் சுழலப்பெற்று யௌவன மதம் அமைந்து அரையாடையின் முடிச்சு அவிழ்ந்திருந்தாள். அச்சூத்ரனும் கல்வழியினின்று நீங்கி வெட்கமற்று அத்தாஸியுட்கலந்து விளையாடுவதும் பாடுவதும் சிரிப்பதுமாயிருந்தான். காமவிகாரத்தினால் கொழுத்திருக்கின்ற அச்சூத்ரன் தன் புஜத்தினால் அணைத்துக்கொண்டிருக்கிற அந்தத் தாஸியைக்கண்டு அவ்வந்தணன் திடீரென்று மதிமயங்கிக் காமனுக்குட்பட்டான். அவ்வந்தணன் தான் குருவினிடத்தில் மனத்தை அடக்குவதற்குக் கேட்ட வழிகளை யெல்லாம் அனுஸரித்துப் பலமுள்ளவளவு விவேகத்தினால் மனத்தை அடக்கப்பார்த்தாலும் மன்மத விகாரத்தினால் கடுக்க முற்றபடியால் அதை அடக்க வல்லமை யற்றிருந்தான். அந்தத்தாஸியை நிமித்தமாகக்கொண்டு வளர்ந்தெழுகின்ற மன்மதனுகிற கபடபிசாசத்தினால் பிடியுண்டு மூன்று நிலைவெல்லாம் மாறப்பெற்று அந்தத் தாஸியை மனத்தினால் சிந்தித்துக்கொண்டு ஸந்த்யாவந்தனம் முதலிய தன் வர்ணாச்ரமதர்மத்தினின்று கழுவினான்.

ஐயோ! அப்படியிருந்தவனுக்கு இப்படிப்பட்ட தசை கேரிட்டது. ஒன்றும் அறியாத மூடர்களால் விரும்பத் தக்கவைகளும் மனத்திற்கினியவைகளுமான ஆடை ஆபரணம் முதலிய வஸ்துக்களால் அவளுக்குத் தன் னிடத்தில் ப்ரீதி உண்டாகும்படி தன் தந்தை ஸம்பா தித்து வைத்த பணத்தையெல்லாம் கொண்டு அவ ளையஸ்தோஷப்படுத்திக் கொண்டிருந்தான். பாபிஷ் டனுகிய அந்தணன் கள்ள புருஷனைத்தேடுங் கருத்து டைய அத்தாஸியின் கடைக்கண்ணேக்கத்தினல் அடி யுண்டு விவேகமெல்லாம் தொலையப் பெற்று ப்ரௌடை யாகாதவளும் அழகியவளும் பெரிய வம்சத்தில் பிடைத் தவளுமாகிய தன் பார்யையைச் சீக்ரத்தில் துறந்தான். ந்யாயமாகவும் அந்யாயமாகவும் இங்குமங்கும் திரிந்து பணத்தை ஸம்பாதித்துக்கொண்டு வந்து பல பிள்ளை களைப் பெற்ற அத்தாஸியின் குடும்பத்தைப் போஷித் துக்கொண்டு வந்தான். இங்ஙனம் இவன் சாஸ்த்ர மார்க்கத்தைக் கடந்து மனம்போனபடி திரியுந்தன்மை கொண்டு பெரியோர்களால் நிந்திக்கப்படும் வழியில் இழிந்து பாபகர்மத்தினல் தன் வாழ்நாள்களை யெல் லாம் கடத்திக்கொண்டு தாஸியைப் புணர்ந்த பாபத் தி னல் அசுத்தனுகவே வெகுகாலமிருந்தான். ஆகையால் இவன் பாபம் செய்தவன். அதற்கு ப்ராயச்சித்தத்தை யும் இவன் செய்யவில்லை. இத்தகையனை இவனை நாங்கள் யமனுடைய ஸந்நிதானத்திற்குக் கொண்டு போகிறோம். அங்கு நாகங்களை அணுபவிக்கையாகிற தண்டனையால் இவன் சுத்தனுவான்' என் ரூர்கள். முதல் அத்யாயம் முற்றிற்று.

விஷ்ணுதூதர்கள் விஷ்ணுநாமத்தின் மஹிமையைக்கூறி அவனை விடுவித்தலும், அவன் தான் செய்த பாபத்தைப்பற்றி வருந்தி வைராக்யம் பெறுதலும்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—விஷ்ணுதூதர்கள் அந்த வார்த்தைகளைக் கேட்டு ந்யாய நிபுணர்களாகையால் அவர்களை நோக்கி 'ஆ! என்ன கஷ்டம் நேர்ந்தது? தர்மதர்சிகளின் ஸபையை அதர்மம் தீண்டுகின்றதே! பாபமற்றவரும் தண்டிக்கத் தகாதவருமான புருஷர் மேல் தர்மதர்சியின் ஸபையிலுள்ள உங்களைப் போன்றவர் வீணாகவே தண்டனை விதிக்கிறார்களே. இதைக் காட்டிலும் வேறு அதர்மம் என்ன வேண்டும்? ப்ரஜைகளைத் தண்டிக்கும் அதிகாரத்திலிருப்பவர்களும் பக்ஷி பாதமின்றி ஸமமாயிருப்பவர்களும் பிறருடையதோஷத்தைப் போக்குவதில் ஸமர்த்தர்களும் ப்ரஜைகளுக்குத் தந்தையைப்போல் ஹிதம் செய்பவர்களுமாகிய உங்களைப்போன்றவர்கள் வைஷம்யம்செய்தால், ப்ரஜைகள் மற்ற யாரைச் சரணம் அடைவார்கள்? எல்லாம் அறிந்த பெரியோர்கள் எந்தெந்தக் கார்யங்களைச் செய்வார்களோ, அந்தக் கார்யங்களையே தெரியாத ஜனங்களும் செய்யப் பார்ப்பார்கள். ஆகையால் தமது அநுஷ்டானத்தினால் உலகத்தில் தர்மத்தை நடத்துகின்றவர்களும் வேதத்தை அநுஸரித்து நடப்பவர்களுமான பெரியோர்கள் தண்டிக்கத் தகாதவர்களைத் தண்டிப்பது யுக்தமன்று. ஒருவன் மடியில் ஜனங்கள் நம்பிக்கையுடன் தலையைவைத்துப் படுத்து ஸுகமாய் உறங்குவார்களாயின், அங்ஙனம் விஸ்வாஸபாத்ரமாயிருப்பவனும் மன இரக்கமுடையவனுமாகிய அவன் அந்த ஜனங்களுக்கு எங்ஙனம் த்ரோஹத்தை நினைக்க

லாம்? யமன் அபராதமுள்ள ஜனங்களைத் தண்டிப்பா னேயன்றி நிரபராதிகளைத் தண்டிக்கமாட்டானென்று ஜனங்கள் அவனிடத்தில் விஸ்வாஸ முற்றிருக்கிறார் கள். அவனும் ப்ராக்ருதனைப்போல வைஷம்யத்தினால் நிரபராதிகளைத் தண்டிப்பானாயின், அவனுக்கு விஸ் வாஸகாதக தோஷம் வரும். 'இவ்வஜாமிளன் பாபிஷ்ட னன்றோ? இவனைப்பற்றி என்ன விசாரம்?' என்கிறீர் களோ? கேளுங்கள். இவன் கோடி ஜன்மங்களில் செய்த பாபங்களுக்கும் ப்ரயாச்சித்தம் பண்ணினன். இவன் ஸ்வாதீனமற்றிருப்பினும் மங்களத்திற் கிடமான ஸ்ரீ விஷ்ணுவின் நாமத்தை மோழிந்தானல்லவா? அதுவே இவன்செய்த ப்ரயாச்சித்தமாம். நான்கு அக்ஷ ரங்கள் அடங்கின நாராயணவென்னும் நாமத்தை இவன் மொழிந்தாணைகையால் அதனாலேயே பாபிஷ்ட னாகிய இவனுடைய பாபங்களுக்கெல்லாம் ப்ரயாச்சித் தம் கடத்தினதாம். ஸ்வர்ணம் திருடினவன் ஸுராபா னம் செய்தவன் மித்ரத்ரோஹி ப்ரஹ்மஹத்தை செய்த வன் குருபத்னியைப் புணர்ந்தவன் ஸ்த்ரீயைக் கொன்ற வன் ராஜனைக்கொன்றவன் தாய்தந்தைகளைக் கொன்ற வன் இவர்களும் மற்றும் பலவகைப் பாபங்கள் செய்த வர்களும் இந்த ஸ்ரீமஹாவிஷ்ணுவின் நாமத்தை ஒரு கால் உச்சரிப்பார்களாயின், அவர்கள் அனேகருடைய பாபத்திற்கும் அதுவே பொருந்தின ப்ராயச்சித்தமாம். விஷ்ணுவிஷ்ணுடைய நாமத்தை எவ்விதத்திலாயினும் உரைப்பார்களாகில் அவனை நினைக்கும் மதி உண்டா கும். அதனால் அவர்கள் பாபமெல்லாம் தீர்த்து மோ க்ஷத்தை அடைவார்கள். பகவானுடைய நாமங்களைச் சொல்வதனால் பாபங்களெல்லாம் தீர்த்து பரிசுத்தர்க ளாவதுபோலப் பாபம் செய்தவன் வேதங்களை உணர்ந்த

பெரியோர்களான மனுமுதலியவர்கள்மொழிந்த சாந்
ராயணம் முதலிய வ்ரதாதி ரூபமான ப்ராயச்சித்தங்
களால் பாபம் தீர்த்து சுத்தனுகமாட்டான். பகவா
னுடைய நாமங்களில் ஏதேனுமொன்றைப் பேசினால்,
அது அவனையும் அவன் குணங்களையும் நினைவு மூட்
டிப் பாபங்களையெல்லாம் போக்கி மோக்ஷத்தைக்
கொடுக்கும். அந்த ப்ரஹ்மவாதிகள் சொன்ன ப்ராயச்
சித்தங்கள் பாபங்களை அடியோடு போக்க வல்லவை
யன்று. அந்த ப்ராயச்சித்தங்கள் செய்த பின்பும் மனம்
அடிக்கடி பாபமார்க்கத்தில் போகவேபோகும். ஆகை
யால் பாபங்களை வேரோடு போக்கவேண்டுமென்னும்
விருப்பமுடையவர்களுக்குப் பகவானுடைய குணங்களை
வெளியிடுந் தன்மையுள்ள அவனது நாமங்களைப் பேசு
கையேபொருந்தின ப்ராயச்சித்தமாம். அதுதல்லறிவை
விளக்கும்படியான ஸத்வகுணத்தை வளர்க்கும். ஆகை
யால், ஓ யமதூதர்களே! ஸமஸ்த பாபங்களுக்கும் ப்ரா
யச்சித்தம் அனுஷ்டித்த இவ்வஜாமிளனை நீங்கள் யம
லோகத்திற்குக் கொண்டுபோவது யுக்தமன்று. இவன்
மரணம் அடையும்ஸமயத்தில் பகவானுடைய நாமத்தை
மொழிந்தானல்லவா? 'இவன் நாராயணனென்று பிள்
ளையை அழைத்தானேயன்றிப் பகவானை அழைக்க
வில்லையே. அது இவனுடைய பாபங்களுக்கு எங்
ஙனம் ப்ராயச்சித்தமாம்?' என்று நினைக்கவேண்டாம்.
நெருப்பை அதை அறியாதவன் தொட்டாலும் அது
அவனைத் தஹிக்குமேயன்றி வெறுமனே யிருக்குமா?
அங்ஙனமே ஸங்கேதமாயாவது பரிஹாஸமாயாவது
[1] ஸ்தோபமாயாவது அவமதியாகவாவது வைகுந்த

---

1. ஸ்தோபம்-நாக்குத் தழதழத்து ஸ்வாதீனமில்லாமல் சொல்
லும் வார்த்தை.

னுடைய காமத்தைதச் சொல்வார்களாயின், அது அவர் களுடைய ஸமஸ்த பாபங்களையும் போக்குமென்று பெரியோர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். உப்பரிகை முதலிய உயர்ந்த இடங்களினின்று விழுந்தவன் வழி யில் தடுக்கப்பெற்றவன் தன் வர்ணாச்ரம தர்மத்தி னின்று தழுவினவன் கைகால் முதலியன முரிந்தவன் ஸர்ப்பாதிகளால் கடியுண்டவன் ஜ்வரம் முதலியவற்றால் எரிக்கப்பெற்றவன் தடி முதலியவற்றால் அடியுண்டவன் ஆகிய இவர்களில் எவனையினும் ஸ்வாதீனமற்றிருப்பி னும் ஹரியென்று சொல்வானாயின், அவன் எவ்வளவு பாபிஷ்டனையினும் யமயாதனைகளுக் குரியவனல்லன். போறிஞரான மஹர்ஷிகள் பாபங்களின் குருலாகவங் களை ஆலோசித்து அவற்றிற்குத் தகுந்தபடி ப்ராயச் சித்தங்களை விதித்திருக்கிறார்கள். ஆயினும் அந்தத் தவம் முதலிய ப்ராயச்சித்தங்கள் தந்தமக்கு ஏற்பட்ட பாபங்களையே போக்குமன்றி அதர்மத்தில் செல்கின்ற மனத்தைப் பரிசுத்தம் செய்யமாட்டா. பகவானுடைய காமத்தை நினைக்கை முதலிய அவனுடையஸேவையில் ஸமஸ்த பாபங்களும் அவற்றிற்கிடமான மனமும் பரி சுத்தமாம். பாபத்தைப் போக்குமென்னும் ஜ்ஞானத்து டனுவது அந்த ஜ்ஞானமில்லாமலாவது எப்படிப்பட்ட பாபிஷ்டனையினும் உத்தமஸ்லோகனாகிய பகவானு டைய காமத்தைச் சொல்லுவானாயின், அது அவனு டைய ஸமஸ்த பாபங்களையும் பஸ்மம் செய்துவிடும். ஒரு வண்மிகுந்த வீர்யமுடைய ஔஷதத்தைத்தெரிந்தாவது தெரியாமலாவது உபயோகப்படுத்துவானால் ஆரோக் யத்தை அடைவதுபோலப் பகவானுடைய காமமாகிற மந்த்ரமும் அதன் திறமையை அறியாத புருஷனால் கூறப்படுமாயினும் பாபத்தையெல்லாம் பஸ்மம்செய்து

விடும். ஓ தூதர்களே! இங்ஙனம் நாங்கள் மொழிந்த தர்மத்தில் உங்களுக்கு ஸம்சயம் உளதாயின், உங்கள் ப்ரபுவாகிய யமனைக் கேட்பீர்களாக. பேரறிஞரான அந்த யமதர்மராஜன் மேன்மைக் கிடமான தர்மரஹஸ்யத்தை நன்றாக அறிந்தவன் என்றார்கள். ஓ மன்னவனே! இவ்வாறு விஷ்ணுதூதர்கள் மொழிந்த பகவந் நாமோச்சாரண ரூபமான தர்மத்தின் மஹிமையை நிச்சயித்து அந்த ப்ராஹ்மணனை யமபாசத்தினின்று விடுவித்து மரணத்தினின்று நீக்கினார்கள். இவ்வண்ணம் விஷ்ணு தூதர்களால் திரஸ்கரிக்கப்பட்ட யம தூதர்கள் யமனுடைய ஸந்நிதானத்திற் சென்று யம தர்மராஜனுக்கு நடந்த விஷயத்தை யெல்லாம் உள்ள படி தெரிவித்தார்கள். அந்தப்ராஹ்மணன் யமபாசத்தினின்று விடுபட்டு நிர்ப்பயனாகி முன் நிலைமையைப் பெற்று ஜீவித்தான். அவன் விஷ்ணுகிங்கரர்களைக்கண்டு மிகவும் ஸந்தோஷம் அடைந்து தலைவணங்கி நமஸ்காரம்செய்தான். பாபமற்றவனே! அவ்வந்தணன் ஏதோ ஒன்று சொல்ல விரும்பியிருப்பதை அறிந்த விஷ்ணு கிங்கரர்கள் அவன் பார்த்துக்கொண்டே யிருக்கையில் திடீரென்று அதே இடத்தில் மறைந்தார்கள். பிறகு யமதூதர்கள் மொழிந்ததும் வேதங்களின் பூர்வபாகத்தில் விதிக்கப்பட்டதும் ஸத்வராஜஸ்தமோ குணங்களுக்குட்பட்ட ஜனங்கள் அனுஷ்டிப்பதுமான கர்மயோகத்தையும் சுத்தஸத்வம் தலையெடுத்த பெரியோர்கள் அனுஷ்டிப்பதும் வேதாந்தங்களில் விதிக்கப்பட்டதுமான பாகவத தர்மத்தையும் கேட்டு மனத்தில் நிச்சயித்துக்கொண்டு பகவானுடைய மஹிமையைக் கேட்டமையால் அவனிடத்தில் மிகுந்த பக்தியோகம் உண்டாகப்பெற்றுத் தன்னுடைய பாபத்தை நீனைத்து மிகவும்

பரிதபித்தான். 'நான் மனத்தை வெல்லமுடியாமல் பெருங்கஷ்டத்தை அடைந்தேன். ஐயோ! நான் சூத்ர ஸ்த்ரீயிடத்தில் பிள்ளைகளைப் பெற்று என்னுடைய ப்ராஹ்மண்யத்தை அடியோடு பாழாக்கிக்கொண்டேன். பெரியோர்களால் மிகவும் நிந்திக்கத் தகுந்த என்னை நான் எவ்வளவு நிந்தித்தாலும் போராது. என்னைச் சுடினும் என்பாவம் தீராது. நான் மஹா பாபிஷ்டன்; குலத்தைக் கெடுக்கவந்த பாபி. மற்றும், பரிசுத்தமான வம்சத்தில் பிறந்தவளும் பரிசுத்தையும் ப்ரளடையாகாத இளம் பருவத்தவளுமான என் பார்யையைத் துறந்து ஸுராபானம் செய்யுந் தன்மையளும் அசுத்தையுமான சூத்ர ஸ்த்ரீயைப் புணர்ந்தேன். வயது சென்றவர்களும் நாதனற்றவர்களும் பிள்ளை முதலியவேறுபந்துக்களற்றவர்களும் பெருந்தவ முடையவர்களுமான தாய்தந்தைகளை நான் அவர்கள் செய்த உபகாரத்தை அறியாமல் நீசன்போலத் துறந்தேன். எவ்விடத்தில் தர்மஜ்ஞர்களான யமன் முதலியவர்கள் இருக்கின்றார்களோ, எவ்விடத்தில் என்னைப்போன்ற காமிகள் யமயாதனைகளை அனுபவிக்கின்றார்களோ, அப்படிப்பட்ட பயங்கரமான நரகத்தில் நான் விழுவேனென்பதில் ஸந்தேஹமில்லை. இது நிச்சயம். இப்பொழுது யம்தூதர்களும் விஷ்ணுதூதர்களும் வந்து ஸம்பாஷணம் செய்யக்கண்டேனே; இது ஸ்வப்னமா? அல்லது நான் நன்றாக விழித்துக்கொண்டிருக்கும்பொழுது கண்டதுதானே? பெரிய ஆச்சர்யமாயிருக்கிறது. இப்பொழுது அந்தத் தூதர்கள் எங்குப்போனார்களோ தெரியவில்லையே. கையில் பாசாயுதத்தைக்கொண்டு என்னைப்பிடித்திழுத்தார்களே. மற்றும், அழகர்களும் அழகிய காட்சியுடையவர்களுமான நான்கு ஸித்தர்கள் புலப்பட்டார்களே. என்னை யம

தூதர்கள் பாசங்களால் கட்டி நரகத்திற்கு இழுத்துக் கொண்டு போகையில் அவர்கள் விடுவித்தார்களே. இப்பொழுது அவர்கள் எங்குப் போனார்களோ தெரியவில்லையே. நான் மந்தபாக்யன். ஆயினும் தேவஸ்ரேஷ்டர்கள் எனக்குப் புலப்பட்டதற்குக் காரணமான மங்களம் ஏதோவொன்று என்னிடத்தில் இருக்கவேண்டும். அதனால்தான் என் மனம் தெளிவுற்றிருக்கின்றது. பரம புருஷனும் என்னிடத்தில் அனுக்ரஹம் செய்திருக்கிறான். இல்லாத பக்ஷத்தில் சூத்ரஸ்த்ரீயைப் புணர்கின்றவனும் அசுத்தனும் மரணம் அடையமுயன்றவனுமாகிய என்னுடைய நாக்கு வைகுந்தனுடைய நாமத்தை உச்சரிக்கமாட்டாது. நான் மூர்க்கன்; துஷ்டன்; பாபிஷ்டன்; சூத்ரஸ்த்ரீ ஸம்பந்தத்தினால் ப்ராஹ்மண்யத்தை அடியோடு அழித்துக் கொண்டவன்; இவ்வளவு நிலைமையிலிருந்தும் வெட்கமற்றவன். இப்படிப்பட்ட நான் எங்கே? மங்களங்களுக்கெல்லாம் இடமான நாராயணனென்னும் பகவானுடைய நாமம் எங்கே? இப்படிப்பட்ட எனக்கு மரணகாலத்தில் அவனுடைய நாமோச்சாரணம் புண்யமில்லாமல் எங்ஙனம் உண்டாகும்? ஸித்தர்களைக் கண்டமையாலும் பகவானுடைய நாமத்தை உச்சரித்தமையாலும் புண்யமுடையவனென்று ஊஹிக்கத்தகுந்த நான் மனத்தையும் மற்ற இந்த்ரியங்களையும் ப்ராண வாயுவையும் அடக்கிக் கொண்டு, என்னை நான் மீளவும் பாபிஷ்டமான நரகத்தில் அழுத்தாதிருக்குமாறு யத்னம் செய்யவேண்டும். தேஹாத்மாபிமானம் முதலியவற்றிற் கிடமான அஞ்ஞானம் சப்தாதி விஷயங்களை விரும்புகையாகிற காமம் கர்மம் ஆகிய இவற்றால் உண்டானதும் கர்ப்ப ஜன்ம ஜரா மரணாதி ரூபமுமான ஸம்ஸாரத்தைத் துறந்து

ஸமஸ்த பூதங்களிடத்திலும் தட்பும் கருணையும் மனச் சிறப்புமுடையவனுகி மடந்தையென்னும் பேருடைய பகவானுடைய மாயையால் பிடியுண்ட என்னை அதினின்று விடுவித்துக் கொள்ளவேண்டும். பகவானுடைய மாயையே ஓர் வடிவங் கொண்டாற் போன்ற இம்மடந்தையாலல்லவோ நான் ஞான சூன்யனுகி விளையாட்டு மருகம்போலப் பல ஆட்டங்களைப் பெற்றேன். தேஹத்திலுள்ள அஹங்காரமும் அதைத்தொடர்ந்த மற்றவைகளிடத்திலுண்டான மமகாரமும் ஆகிய அயதார்த்தமான புத்தியைத் துறந்து மனத்தைப் பகவானுடைய குணகீர்த்தனைகளால் பரிசுத்தமாக்கி அந்தப் பகவானிடத்தில் அதை நிலைநிறுத்தப்போகிறேன்' என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டான். இங்ஙனம் பெரிய நிர்வேதம் உண்டாகப்பெற்ற அவ்வஜாமிளன் க்ஷண காலம் மாத்ரமே ஸாதுக்களோடு ஸஹவாஸம் உண்டானமையால் பிள்ளை பெண்டிர் முதலிய ஸமஸ்த பந்தங்களையும் துறந்து கங்காத்வாரத்திற்குச்சென்றுன். அவ்வஜாமிளன் தேவர்க்கும் தேவனுகிய பரமபுருஷனுடைய ஸந்நிதானம் மாறுதிக்கப்பெற்ற அந்தக் கங்காத்வாரத்தில் உட்கார்ந்து பக்தியோகம் செய்ய ஆரம்பித்து இந்த்ரியங்களையெல்லாம் சப்தாதிவிஷயங்களில் போகவொட்டாமல் இழுத்தடக்கி முதலில் ப்ரத்யகாத்மாவினிடத்தில் மனத்தைச் செலுத்தினன். அப்பால் ஸத்வ ரஜஸ் தமோகுணங்களின் பரிணமமாகிய தேஹாதிகளைக்காட்டிலும் ஆத்மா வேறுபட்டு விலக்ஷணனென்பதை அறிந்து அவ்வாத்மாவுக்கு அந்தர்யாமியான பரமாத்மாவை த்யானித்து ஸ்வரூபத்திலும் குணங்களாலும் அபரிச்சின்னனும் நித்ய ஜ்ஞான ஸ்வரூபனும் பரந்தாமனுமாகிய பகவானிடத்தில் அம்மனத்தை நிலை

நிற்கச் செய்தான். இங்ஙனம் பகவானிடத்தில் நிலை
நின்ற மனமுடைய அவ்வஜாமிளன் சப்தாதி விஷயங்
களினின்று மதி நீங்கப்பெற்று, முன்பார்த்த விஷ்ணு
தூதர்கள் எதிரே வந்து நிற்கக் கண்டான். அவன்
'நாம் இவர்களை முன்பு கண்டோமே' என்று தெரிந்து
கொண்டு தலைவணங்கி அவர்களை நமஸ்கரித்தான்.
அவர்களைக் கண்டபிறகு கங்கையின் தீர்த்தத்தில்
தேஹத்தைத் துறந்து அந்த க்ஷணமே அவ்விஷ்ணு
தூதர்களின் தேஹம் போன்ற திவ்யதேஹத்தைப்
பெற்றான். அவ்வந்தணன் பரம புருஷனுடைய கிங்கரர்
களுடன் ஸ்வர்ணமயமான விமானத்தில் ஏறிக்கொண்டு
ஆகாசமார்க்கத்தினால் ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரன்
வீற்றிருக்கிற வைகுண்ட லோகம் போய்ச்சேர்ந்தான்.
இங்ஙனம் அவ்வந்தணன் தனது வர்ணாச்ரம தர்மங்
களையெல்லாம் அழித்துத் தாஸியைப் புணர்ந்து பதித
னாகி நிந்தைக்கிடமான கார்யங்களையே செய்துகொண்டு
வ்ரதங்களெல்லாம் பாழாகப்பெற்று மரணகாலம்
ஸமீபிக்கையில் விழும்படியமபடர்களால் இழுக்கப்
படும் ஸமயத்தில் பகவானுடைய நாமத்தை உச்சரித்து
உடனே அவ்வாபத்தினின்று விடுபட்டான். ஸம்ஸாரபந்
தத்தினின்று விடுபடவேண்டுமென்று விரும்புகின்ற
வர்களுக்கு அந்த ஸம்ஸாரத்திற்கடியான கர்மபந்
தத்தை வேரோடறுப்பது பகவானுடைய நாமோச்
சாரணத்தைக் காட்டிலும் வேறொன்றும் இல்லை.
ரஜஸ் தமோகுணங்களால் அழுக்கடைந்த மனம்
பகவானுடைய நாமோச்சாரணத்தினால் பரிசுத்தமாகி
ஸம்ஸார ஹேதுவான கர்மங்களில் பற்றறுது. மனத்
திற்கு இந்நிலைமை வேறு எவ்வழியாலும் உண்டாகாது.
இந்த உபாக்யானம் பரம ரஹஸ்யம். பாபங்களைப்போக்

கும். இதை ஸ்ரத்தையுடன் படிக்கிறவனும் பக்தியுடன் சொல்லுகிறவனும் எப்படிப்பட்ட பாபிஷ்டனையினும் கரகத்தை அடையமாட்டான். யமகிங்கரர்கள் அவனைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். அவன் விஷ்ணு லோகம் சென்று அங்குள்ளவர்களால் வெகுமதிக்கப் பெறுவான். அஜாமிளன் மரணகாலத்தில் நாராயணவென்று பிள்ளையை அழைத்தானன்றி அப்பொழுது அவனுக்குப் பகவானைப் பற்றின நினைவே கிடையாது. ஆயினும் அது பகவானுடைய நாமமாகையால் அதைச் சொன்ன மாத்ரத்தில் அவன் விஷ்ணு லோகத்தை அடைந்தான். பகவானுடைய குணங்களை வெளியிடுகின்ற நாராயணாதி நாமங்களை ஒருவன் ஸ்ரத்தையுடன் உச்சரிப்பானையின், அவன் விஷ்ணுலோகத்தை அடைவானென்பதில் சொல்லவேண்டுமோ? இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

{ யமதூதர்கள் யமனைக்கேட்க அவன் அவர்களுக்கு ஸமாதானம் கூறுதல். }

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—ஸம்ஸாரத்திலுள்ள ஜனங்களெல்லாம் தன்வசமாயிருக்கப் பெற்ற யமதர்மராஜன் விஷ்ணுதூதர்களால் தன் தூதர்கள் நிராகரிக்கப்பட்ட வ்ருத்தாந்தத்தை அவர்கள் சொல்லக்கேட்டு என்ன மொழிந்தான்? மஹர்ஷீ! யமனுடைய ஆஜ்ஞை ஓரிடத்தில் பங்கப்பட்டதாக இதுவரையில் எப்பொழுதும் கேட்டதில்லை. இவ்விஷயத்தில் எல்லோர்க்கும் ஸம்சயம் உண்டாகக்கூடியது. முனிவரே! இந்த ஸந்தேஹத்தைத் தீர்ப்பவர் உம்மைவிட மற்றொருவரும் இல்லையென்று நிச்சயித்திருக்கிறேன்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—விஷ்ணுதூதர்களால் தம் முயற்சி தடைபடப்பெற்ற யமதூதர்கள் தம் ப்ரபுவாகிய யமனிடம் சென்று விண்ணப்பம் செய்தார்கள். 'ப்ரபூ! இவ்வுலகத்தில் புண்யகர்மம் பாபகர்மம் மிச்ரகர்மம் என்று மூன்றுவகையான கர்மங்களைச்செய்கிற ஜீவலோகத்திற்குக் கர்மபலன்களைக்கொடுக்கும் ப்ரபுக்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்கள்? தண்டனை விதிக்கும் ப்ரபுக்கள் பலர் உளராயின், ஸுகதுக்கங்கள் எவனுக்கு உண்டாகும்? எவனுக்கும் உண்டாகாது. அந்த ப்ரபுக்கள் ஒருவர்க்கொருவர் ஒத்துமையின்றி ஒருவன் கட்டளையை மற்றொருவன் தடுப்பாளையின், ஜீவலோகத்தில் ஒருவனுக்கும் ஸுகமாவது துக்கமாவது உண்டாகமாட்டாது. தண்டனை விதிக்கும் ப்ரபுக்கள் பலராயினும், அவர்கள் ஒத்திருப்பார்களாயின், ஜீவலோகத்திற்கு ஸுகதுக்கங்கள் உண்டாகக்கூடும். ஆயினும் அவர்களுடைய ப்ரபுத்வம் சில தேசங்களுக்கு ப்ரபுக்களாகிய ராஜாக்களின் ப்ரபுத்வம் போன்று முக்யமாயிராது. உலகத்தில் சிலர் பல ப்ராணிகளைத் தம்வசங்கொண்டு ப்ரபுக்களாயிருக்கின்றார்கள். நீ அந்த ப்ராணிகளுக்கும் அவர்க்குப்ரபுக்களான மற்றவர்க்கும்மேலான ப்ரபு. நீ நன்மை தீமைகளை ஆராய்ந்தறிந்தவன்; அவற்றை ப்ரஜைகளுக்கும் அறிவிப்பவன்; பாபஞ் செய்தவர்களுக்குத்தண்டனை விதிப்பவன். உன் கட்டளை பூலோகத்தில் இதுவரையில் தடைபட்டதில்லை. இப்பொழுது அற்புதமான உருவமுடைய நான்கு ஸித்த புருஷர்கள் வந்து உன் கட்டளையைத் தடுத்து விட்டார்கள். நாங்கள் ஒரு பாதகனை நரகத்திற்கு இழுத்துக்கொண்டுவருகையில், அந்த ஸித்தர்கள் வந்து பாசங்களை அறுத்துப் பலாத்காரமாக அவனை விடுவித்தார்கள். நாராயண

வென்று சொன்ன மாத்ரத்தில் பயப்படாதேயென்று விரைந்தோடி வந்தார்கள். அவர்கள் யாரென்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். அவர்களை எங்களுக்குச் சொல்லவேண்டும்' என்றார்கள். ப்ரஜைகளைத் தண்டிக்கும் அதிகாரியாகிய யமதேவன் தன் படர்கள் இங்ஙனம் வினவக்கேட்டு ஸந்தோஷம் அடைந்து பகவானுடைய பாதாரவிந்தங்களை நினைத்துக்கொண்டு தன் தூதர்களைப் பார்த்து 'என்னைக்காட்டிலும் மேற்பட்டவன் மற்றொருவன் உளன். அவன் ஜங்கமஸ்தாவரூடமான ஸமஸ்த ஜகத்திற்கும் ப்ரபு; வஸ்த்ரத்தில் நூல் போல அவனிடத்தில் இந்த ஜகத்தெல்லாம் கோக்கப்பட்டிருக்கிறது. ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றும் அவனுடைய ஸங்கல்பத்தினால் தான் நடக்கின்றன. மூக்கில் கயிறு கோக்கப்பெற்ற ஏருதுகள் மனிதரிடம் உட்பட்டிருப்பதுபோல, இவ்வுலகம் முழுவதும் அவன் வசத்தில் இருக்கின்றது. தாமணியில் கயிறுகளால் பசுக்களைக் கட்டுவதுபோல, அவன் வேதஸ்வரூபமான தன் வாக்கில் வர்ணாச்ரம தர்மங்களால் ஜனங்களைக் கட்டுகிறான். ஜனங்கள் காமங்களும் கர்மங்களும் நியதமாயிருக்கப்பெற்று அவனிடத்தில் பயந்து அவனுக்குப் பூஜை செய்கிறார்கள். யமனென்று பேர் பெற்ற நான் மஹேந்த்ரன் நிருதி வருணன் ஸோமன் அக்னி ருத்ரன் வாயு ஸூர்யன் ப்ரஹ்மதேவன் தேவதைகள் விஸ்வாவஸு முதலிய உபதேவதைகள் ஸாத்யர் மருத்கணங்கள் ருத்ரகணங்கள் ஸித்தர் ராஜஸ்தமோகுணங்கள் தீண்டப்பெறுத ப்ருகு முதலிய ப்ரஜாபதிகள் ஆகிய நாங்கள் அனைவரும் ஸத்வகுணம் தலையெடுத்திருப்பவராயினும் அந்தப் பகவானுடைய மாயையினால் தீண்டப்பெற்று அவ

னுடைய கருத்தை அறியவல்லரல்லோம். அவன் ஸமஸ்த ஜீவாத்மாக்களுக்கும் அந்தராத்மாவாயிருப்பவன்; அவர்களுடைய ஹ்ருதயத்தில் வாஸம் செய்கிறான். அவனை ப்ராணிகள் இந்த்ரியங்கள் மனம் ப்ராணயாமம் ஹ்ருதயம் வாக்கின் திறமை இவற்றில் எதனாலும் காணமுடியாது. உருவங்களைக் கண் பார்க்குமன்றிக் கண்ணை உருவங்கள் பார்க்கவல்லவையோ? அங்ஙனமே அந்தப் பகவான் அவரவர் ஹ்ருதயத்தில் நித்யவாஸம் செய்யினும் அவனைப்பார்க்கமுடியாது. அவன் ஸ்வதந்த்ரன், ப்ரக்ருதியை அடக்கியாள்பவன், ஸர்வேச்வரன்; பரமபுருஷன்; மஹானுபாவன்; தன்னைப் பற்றினருடைய பாபங்களைப் போக்குந் தன்மையன். அத்தகையனை அந்தப் பகவானுடைய தூதர்கள் இவ்வுலகத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மனத்திற் கினியராயிருப்பார்கள். அவர்களுடைய உருவமும் குணங்களும் ஸ்வபாவமும் பகவானையொத்திருக்கும். அவ்விஷ்ணுதூதர்கள் தேவதைகளாலும் பூஜிக்கப்படும் பெருமையுடையவர்கள். அவர்களுடைய உருவம் பளபளவென்று ஜ்வலித்துக் கொண்டிருக்கும். அவர்களுடைய காட்சி மிக்க அற்புதமாயிருக்கும். ஸாதாரணமாய் ஒருவர்க்கும் புலப்பட மாட்டார்கள். அவர்கள் பகவானிடத்தில் பக்தியுடைய ஜனங்களை ம்ருத்யுவாகியவனிடத்தினின்றும் மற்ற ஸமஸ்த பூதங்களிடத்தினின்றும் பாதுகாக்கிறார்கள். பகவான் மொழிந்த தர்மஸூக்ஷ்மத்தை ரிஷிகளாவது தேவதைகளாவது ஸித்த ச்ரேஷ்டர்களாவது அஸுரர்களாவது மனுஷ்யர்களாவது அறியமாட்டார்கள். வித்யாதரர் சாரணர் முதலிய மற்றவர் இதை எங்ஙனம் அறியப்போகிறார்கள்? ஓ படர்களே! ஆனால் இதை அறிந்தவர் யாவரெனில்,

சொல்லுகிறேன்; கேளுங்கள். நான் ப்ரஹ்மதேவன் நாரதர் ருத்ரன் ஸனத்குமாரர் கபிலர் ஸ்வாயம்புவமனு ப்ரஹ்லாதன் ஜனகர் பீஷ்மர் பலி ஸ்ரீசுகர் ஆகிய நான்கள் பன்னிருவரும் பரம ரஹஸ்யமான இந்தப்பாகவத தர்மத்தை அறிவோமன்றி மற்றவர்க்குத் தெரியாது. மற்றவர்க்கு இதை அறியவும் முடியாது; பரிசுத்தமானது. இதை அறிந்தவன் மோக்ஷத்தை அடைவான். பகவானுடைய நாமத்தை உச்சரிக்கை முதலிய வற்றால் அவனிடத்தில் வினையும் பக்தியோகமே இவ்வுலகத்திலுள்ள புருஷர்கள் ஸாதிக்கவேண்டிய மேலான தர்மமாம். பிள்ளைகளே! பகவானுடைய நாமோச்சாரணத்தின் மஹிமையைப் பாருங்கள். அஜாமிளனுங்கூடம்ருத்யு பாசத்தினின்று விடுபட்டான். புருஷர்கள் தமது பாபங்கள் தீரவேண்டுமென்று விரும்புவார்களாயின், பகவானுடைய குணங்களையும் செயல்களையும் வெளியிடுகிற நாமங்களில் ஏதேனுமொன்றைச் சொல்லின் இவ்வளவே போதும். மஹாபாபிஷ்டனாகிய அஜாமிளனும் நாராயணனென்று மரணகாலத்தில் பிள்ளையை அழைத்த மாத்ரத்தில் மோக்ஷத்தை அடைந்தான். இவ்வுலகத்திலுள்ளவர் சாஸ்த்ரங்களைப் பரக்கக் கற்றுணரினும் பகவானுடைய மாயையால் மிகவும் மதிமயங்கி ஸ்வர்க்கம் முதலிய அற்ப புருஷார்த்தங்களை வெளியிட்டு வஞ்சிக்கிற வேதத்தில் அபிநிவேசம் கொண்டு மஹத்தான யாகாதி கர்மங்களை அனுஷ்டிக்க முயன்று பகவந் நாமோச்சாரணத்தின் மஹிமையை அறிகிறதில்லை. எவர்கள் நல்லமதி உண்டாகப்பெற்று பகவானுடைய நாமோச்சாரணத்தின் மஹிமையை ஆராய்ந்து அபரிச்சின்னனான பகவானிடத்தில் பக்தியோகம் செய்கின்றார்களோ, அவர்கள் என் தண்ட

னைக்குட்பட்டவர்களல்லர். அவர்களுக்கு ஏதேனும் சிறிது பாபம் உளதாயினும், அதை அவர்கள் செய்யும் பகவந்நாமோச்சாரணம் போக்கிவிடும். பகவானைச் சரணம் அடைந்து ஸாது குணங்கள் அமைந்து எல்லாம் பகவத்ஸ்வரூபமே யென்றுணர்ந்து ஜகத்தையெல்லாம் ஸமமாகப் பார்க்குந்தன்மையுடையவர் பெரியோர்கள். அவர்களுடைய புகழ் பரிசுத்தமானது. அதைத் தேவர்களும் ஸித்தர்களும் பாடுகிறார்கள். அவர்களைப் பகவான் தன் கதையால் பாதுகாக்கிறான். நீங்கள் அவர்களருகாமையில் செல்லவேண்டாம். அவர்களுக்கு ஸம்ஸாரபயமே கிடையாது. மற்றும், அவர்களைத் தண்டிக்க நாம் ஸமர்த்தரல்லோம். ஸாம்ஸாரிக ஸுகங்களில் மனம் செல்லப் பெறாதவரும் ருசியறிந்தவருமான பரமஹம்ஸர்கள் ஸர்வகாலமும் ஆதரிக்கிற முகுந்தனுடைய பாதாரவிந்தங்களின் தேன் போன்ற அனுபவரஸத்தில் எப்பொழுதும் மனம் செல்லாமல் பாபிஷ்டர்களாகி நரகத்திற்கு வழிகாட்டுகிற இல்லற வாழ்க்கையில் விருப்புற்றிருக்கின்ற பாபிஷ்டர்களை மாத்ரமே இவ்விடம் கொண்டு வருவீர்களாக. நாக்கால் பகவானுடைய குணங்களை வெளியிடுகிற அவன் நாமங்களைப் பேசாமல், மனத்தினால் அவன் பாதாரவிந்தங்களை நினைக்காமல், தலையினல் ஒரு காலும் அவனுக்கு வணங்காமல் பகவானுடைய ஆராதனத்தை இம்மியும் அனுஷ்டிக்காத பாபிஷ்டர்களை மாத்ரமே இங்குக் கொண்டு வருவீர்களாக. ஸ்ரீமந்நாராயணன் புராண புருஷன்; ஷாட்குண்ய பூர்ணன். என் தூதர்களாகிய நீங்கள் செய்த அபராதத்தை அவன் பொருத்தருள்வானாக. நாம் அவனுடைய தாஸர்கள்; ஒன்றுமறியாதவர்கள். நாம் அஞ்சலி செய்து வேண்டுவோமாயின்,

அவன் நம்மிடத்தில் பேரருள் செய்வான். அவன் அந்தர்யாமி. அவனுக்கு நமஸ்காரம்' என்றான். குருவம்சஸ்ரேஷ்டனே! ஆகையால் விஷ்ணுவின் நாமத்தை உச்சரிக்கை ஜகத்திற்கு மங்களங்களை யெல்லாம் விளைக்கும். மஹத்தான பாபங்களுக்கும் இதுவே முக்யமான ப்ராயச்சித்தமென்றுணர்வாயாக. ஸ்ரீவிஷ்ணுவின் புகழ்கள் எல்லையில்லாதவை. ஸர்வகாலமும் அவற்றைக் கேட்கிறவர்களும் சொல்லுகிறவர்களும் அவனிடத்தில் பக்தி கன்றுக விளையப்பெறுவார்கள். அவரது மனம் இத்தப்பக்தியினால் சுத்தமாவதுபோல் மற்ற வ்ரதாதி நியமங்களால் சுத்தமாகாது. ஸ்ரீக்ருஷ்ணனுடைய பாதாரவிந்தங்களின் ரஸமறிந்தவன் பாபத்திற்கிடமான சப்தாதி விஷயங்களில் மனப்பற்று செய்யமாட்டான். அதை அறியாதவன் சப்தாதி விஷயங்களால் அடிபட்டுத் தன் பாபத்தைப் போக்க விரும்பி ப்ராயச்சித்த ரூபமான கர்மங்களைச் செய்வான். அவன் அதனால் மீளவும் பாபத்தையே ஏற்றுக்கொள்வானன்றிப்பாபத்தினின்று நீங்கமாட்டான். பரீக்ஷித்து மன்னவனே! இங்ஙனம் யமதூதர்கள் தம் ப்ரபுவான யம தர்மராஜன் மொழிந்த பகவானுடைய மஹிமையெல்லாம் விஷ்ணுதூதர்கள் சொன்னதோடத்திருப்பதைக் கண்டு வியப்புற்றுப் பகவானுடைய பக்தர்களின் அருகாமையில் சென்றால் நம்மைப்ரபு தண்டிப்பானென்று அந்த யமனிட்ட கட்டளைக்கஞ்சி அதுமுதல் அவர்களைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் பயப்படுகின்றார்கள். மலய பர்வதத்தில் பகவானை ஆராதித்துக் கொண்டிருக்கிற அகஸ்த்ய மஹர்ஷி பரமரஹஸ்யமான இந்த இதிஹாஸத்தை எனக்கு மொழிந்தார். மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

தக்ஷர் ப்ராஜைகளைப் படைக்க விரும்பிப் பகவானை ஆராதித்தல்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—மஹர்ஷி! ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் நடந்த தேவர்கள் அஸுரர்கள் மநுஷ்யர்கள் நாகர்கள் ம்ருகங்கள் பக்ஷிகள் இவர்களின் ஸ்ருஷ்டி க்ரமத்தைச் சுருக்கமாகச் சொன்னீர். பரம புருஷனாகிய பகவான் ப்ராணிகளை எந்தச் சக்தியினால் எப்படி ஸ்ருஷ்டித்தானோ, அதை விரிவாக அறிய விரும்புகிறேன்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ப்ராசேதஸர்களென்கிற ப்ராசீனபர்ஹியின் பிள்ளைகள் பதின்மர் ஸமுத்ரமத்யத்தினின்று கரையேறிப் பூமியெல்லாம் வ்ருக்ஷங்கள் நிறைந்திருக்கக் கண்டார்கள். அவர்கள் வ்ருக்ஷங்களின் மேல் கோபித்துக்கொண்டு தபத்தினால் கோபம் ஜ்வலிக்கப்பெற்று அந்த வ்ருக்ஷங்களையெல்லாம் தஹிக்க விரும்பி முகத்தினின்று வாயுவையும் அக்னியையும் ஸ்ருஷ்டித்தார்கள். கௌரவஸ்ரேஷ்டனே! அந்த வாயுவும் அக்னியும் சேர்ந்து வ்ருக்ஷங்களையெல்லாம் தஹிக்கையில், மஹாநுபாவனாகிய சந்த்ரன் அதைக் கண்டு அவரது கோபத்தை அணைக்க முயன்று 'ஓ மாஹாபாக்ய சாலிகளே! வ்ருக்ஷங்கள் மன இரக்கத்திற்கிடமானவை. இவற்றிற்கு நீங்கள் த்ரோஹம் செய்வது யுக்தமன்று. நீங்கள் உலகங்களை வ்ருத்தி செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்களல்லவா? ப்ரஜைகளைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்டவர்கள் ஸ்வேஸ்வரன் ப்ரஹ்மதேவன் முதலிய ப்ரஜாபதிகள் அனைவர்க்கும் ப்ரபு. அவன் நீங்கள் கொளுத்துகிற வ்ருக்ஷங்களிலும் அந்தராத்மாவாய் நிறைந்திருப்பவன். ஆயினும் அவற்றின் விகாரம் தீண்டப்பெறுதவன். அப்படிப்பட்ட பகவான்

பித்ருக்களையும் தேவதைகளையும் உத்தேசித்துக்கொடுக்கும் அன்னத்தை விளைப்பவைகளான வ்ருக்ஷங்களையும் ஔஷதிகளையும் முதலில் ஸ்ருஷ்டித்தான். பாதங்களால் ஸஞ்சரிக்கின்ற ஜங்கம பூதங்களுக்குக் காலில்லாத ஸ்தாவர பூதங்கள் ஆஹாரமாக ஏற்பட்டிருக்கின்றன. கையுள்ள இரண்டுகால் ப்ராணிகளுக்குக் கையில்லாத நாற்கால் ஜந்துக்கள் ஆஹாரமாகின்றன. ஸ்தாவரங்களில் ஒன்று மற்றொன்றுக்கு ஆஹாரமாகிறதில்லை. அவை ஜனங்களுக்கே ஆஹாரமாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. அவை எவ்வகை அபராதமுமில்லாதவை. ஆகையால் அவற்றிற்கு த்ரோஹம் செய்வது யுக்தமன்று. நீங்கள் இத்தனை காலமாய்த் தவம்செய்து பாபமற்றிருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் தந்தையான ப்ராசீனபர்ஹியாலும் தவத்தினால் ஸந்தோஷம் அடைந்த பகவானாலும் ப்ரஜைகளைப் படைக்கும்படி நியமிக்கப்பட்டீர்கள். அந்த ப்ரஜைகளுக்கு ஆஹாரமான வ்ருக்ஷங்களை எப்படி தஹிக்கலாம்? ஆகையால் பெரியோர்கள் நடக்கும்படியான வழியைக் கைப்பற்றுவீர்களாக. உங்கள் தந்தையும் பாட்டனும் முப்பாட்டன் முதலிய மற்ற உங்கள் பெரியோர்களும் இந்த ஸன்மார்க்கத்திலேயே நடந்தார்கள். கொழுந்து விட்டெரிகின்ற கோபத்தை அடக்கிக் கொள்வீர்களாக. மற்றும் குழந்தைகளுக்குத் தாய் தந்தைகள் போலவும், கண்ணுக்கு இமைபோலவும், மடந்தையர்க்குக் கணவன் போலவும், பரமாத்ம ரஹஸ்யத்தை அறிய விரும்புகிற ஸந்யாஸிகளுக்குப் பண்டிதன்போலவும், ஜங்கம ஸ்தாவர ரூபமான பூதங்களுக்கு மன்னவனே பந்துவும் ரக்ஷகனும் கண்பனுமாவான். ஆகையால் நீங்கள் உங்களை அடுத்த இந்த வ்ருக்ஷங்களுக்கு த்ரோஹம் செய்யலாகாது. மற்றும்,

பகவான் ஸமஸ்த பூதங்களுடைய ஹ்ருதயங்களிலும் உள்புகுந்து நியமித்துக் கொண்டிருக்கிறான். ஆகையால் ஜகத்தெல்லாம் அவனுக்குச் சரீரமென்று பாவிப்பீர்களாக. இப்படிச் செய்வீர்களாயின் அந்தப் பகவான் உங்கள் விஷயத்தில் ஸந்தோஷம் அடைவான். இங்ஙன்ம் பகவானுடைய சரீரங்களாகிய இந்த வ்ருக்ஷங்களுக்கு நீங்கள் த்ரோஹம் செய்வது யுக்தமன்று. மனத்தில் திடமென்று இளம்பின பெருங்கோபத்தை ஆத்ம விசாரத்தினால் அடக்குவாரையின், அவன் ஸத்வாதி குணங்களைக் கடந்து க்ரமத்தில் ஸம்ஸாரபந்தத்தினின்று விடுபடுவான். ஆகையால் நிரபராதிகளான வ்ருக்ஷங்களைக் கொளுத்தினது போதும். மிகுந்த வ்ருக்ஷங்களுக்கு உங்களிடத்தினின்று க்ஷேமம் உண்டாகுக. இந்த வ்ருக்ஷங்கள் இப்பெண்மணியைப் பாதுகாத்து வந்தன. இவள் அழகிய லக்ஷணங்கள் அமைந்தவள். மாரிஷை யென்னும் பேருடையவள். இவளை நீங்கள் பார்யையாக அங்கீகரிப்பீர்களாக" என்றான். ஸோமராஜன் இங்ஙனம் அவர்களுக்கு நல்வார்த்தை சொல்லி அப்ஸரஸ்த்ரீகளின் புதல்வியும் மடந்தையர் மணியுமாகிய அக்கன்னிகையை அவர்களுக்குக் கொடுத்துப் போய்ச்சேர்ந்தான். அப்பால் அந்த ப்ராசேதஸர்கள் அனைவரும் தர்மத்தின்படி அப்பெண்ணை மணம் புரிந்தார்கள். அவர்களுக்கு அந்த மாரிஷையிடத்தில் தக்ஷர் ப்ராசேதஸனென்று பேர்பூண்டு பிறந்தார். இவர் ஸ்ருஷ்டித்த ப்ரஜைகளால் மூன்று லோகங்களும் பெரும்பாலும் நிறைந்தன. அவர்க்குப் புதல்விகளிடத்தில் ப்ரீதி மிகுந்திருக்கும். அவர் வீர்யத்தினாலும் ஸங்கல்பத்தினாலும் ப்ராணிகளைப் படைத்தவிதம் சொல்லுகிறேன். அதை என்னிடத்தில் ஊக்கத்துடன் கேட்பா

யாக. ப்ராசேதஸரென்கிற அந்த ப்ரஜாபதி தேவர் அஸுரர் மனுஷ்யர் முதலிய ப்ரஜைகளை யெல்லாம் முதலில் ஸங்கல்பத்தினாலேயே படைத்தார். அவற்றில் சில ஆகாயத்திலுள்ளவை. சில பூமியிலுள்ளவை. சில ஜலத்திலுள்ளவை. ஸங்கல்பத்தினால் கடத்தின அந்த ப்ரஜாஸ்ருஷ்டி அவ்வளவாக மேன்மேலும் வளராதிருப்பதைக் கண்டு அந்த ப்ராசேதஸர் விந்த்ய பர்வதத்தின் தாழ்வரைகளிற் சென்று பிறரால் அனுஷ்டிக்க முடியாத கடுந்தவத்தை கடத்தினர். அந்த விந்த்யமலையின் தாழ்வரையில் அகமர்ஷணமென்னும் புண்ய தீர்த்தமொன்று இருக்கின்றது. அது பாபங்களை யெல்லாம் போக்கும்; புண்ய தீர்த்தங்களெல்லாவற்றிலும் சிறந்தது. அதில் அந்த ப்ராசேதஸர் மூன்று காலங்களிலும் ஸ்நானம்செய்து தவத்தினால் பகவானை ஆராதித்தார். அவர் ஹம்ஸ குஹ்யமென்னும் ஸ்தோத்ரத்தினால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத பகவானை ஸ்தோத்ரம் செய்தார். அந்த ஸ்தோத்ரத்தை உனக்குச் சொல்லுகிறேன், கேட்பாயாக. அந்த ப்ராசேதஸர்க்குப் பகவான் அந்த ஸ்தோத்ரத்தினால் ப்ரஸன்னனானான்.

'பரம புருஷனுக்கு நமஸ்காரம். அவன் சேதனாசேதனங்களைக் காட்டிலும் விலக்ஷணமானவன்; அவன் ஸத்ய ஸங்கல்பன்; ப்ரக்ருதியைச் சரீரமாகவுடையவன். ஜீவாத்மாக்கள் 'தேவன் மனுஷ்யன்' என்னும் புத்திகளுக்கு விஷயமாவது போல, அவன் அப்புத்திகளுக்கு விஷயமாக மாட்டான்; தேசகாலவஸ்துபரிச்சேதமற்றவன்; தனக்குத் தானே காரணன், அவன் எல்லாச் சரீரங்களிலும் ஜீவாத்மாக்களுக்கு அந்தர்யாமியாய் வஸிக்கின்றான்; ஹிதத்தையே செய்ப

வன். ஜீவாத்மாக்கள் அனைவரும் அத்தகைய பரமாத்மாவுக்கு, ரத்னத்திற்குக் காந்தி போல் சேஷப்பட்டிருப்பவர்கள். அவர்களை அவன் அந்தராத்மாவாய்த் தரித்துக்கொண்டிருக்கிறான். அவர்கள் அவனுக்கு மேன்மையை விளைப்பதே ஸ்வரூபமாகப் பெற்றவராகையால் அவனுக்கு நண்பர்கள். ஆயினும் அவர்கள் தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமித்து ஜ்ஞானஸங்கோசத்தை அடைந்து தமக்குள்ள அத்தன்மையை அறியாமலேயிருக்கின்றார்கள். அத்தகைய ஸகாவான பரம புருஷனுக்கு நமஸ்காரம் செய்கிறேன். தேஹம் ப்ராணன் மனம் ஜ்ஞானேந்த்ரியங்கள் பூமி முதலிய பஞ்ச பூதங்கள் கந்தம் முதலிய தன்மாத்ரங்கள் கர்மேந்த்ரியங்கள் ஆகிய இவை தம்மைக்காட்டிலும் வேறுபட்ட ஜீவாத்மாவை அறியமாட்டா. ஜீவனே வென்றால், தேஹம் முதலிய அவற்றையெல்லாம் அறிகின்றான். ஆயினும் தேஹாதிகளையும் தன்னையும் அறிகிற ஸர்வஜ்ஞனான பகவானையும் அவன் குணங்களையும் அறிகிறதில்லை. அவன் அபரிச்சின்ன ஸ்வரூபன். அவனை நான் ஸ்தோத்ரம் செய்கிறேன். ஜீவன் உறங்கும்பொழுது பரமாத்மாவினால் அணைக்கப்படுகின்றான். அப்பொழுது ஜீவன் தேஹத்தையே அறியாதிருக்கத் தன்னை அணைக்கின்ற பரமாத்மாவை அறிய ப்ரஸக்தியே இல்லை. அந்தப் பரமபுருஷன் ராகாதி தோஷங்களால் வருந் கலக்கமற்ற உபாஸனரூப ஜ்ஞானத்தினால் அறியக்கூடியவனேயன்றி மற்றப்படி அவனை அறிய முடியாது. அவன் பரிசுத்தஸ்வரூபன்; பரிசுத்தமான ஹ்ருதயத்தில் வாஸம் செய்பவன். இத்தகையனான பகவானுக்கு நமஸ்காரம். அவன் மும்மூன்றாகிய ஒன்பது சக்திகளுடன் ஸங்கல்பத்தினால் ஜீவாத்மாக்களுடைய ஹ்ருதயங்களில் வீற்

றிருக்கிறான். அவனைக் கண் காது முதலிய வெளி இந்திரியங்களால் அறியமுடியாது. அரணிக்கட்டையை மத்தாகக்கொண்டு கடைந்து அதினின்று அக்னியை எடுப்பதுபோலப் பண்டிதர்கள் தர்ஸபூர்ணமாஸாதிகளால் ஆராதிக்கத் தகுந்தவனுகிய அந்தப் பரமபுருஷனை யோகபரிசுத்தமான புத்தியினல் ப்ரக்ருதி புருஷர்களைக் காட்டிலும் விலக்ஷணனென்று அறிகின்றார்கள். அவன் விகாரங்களுக்கெல்லாம் இடமான ப்ரக்ருதி ஸம்பந்தம் நீங்கப்பெறுகையாகிற மஹாநந்த ரூபமான மோக்ஷத்தில் அனுபவிக்கத் தகுந்தவன். அவனே எல்லாச் சொற்களுக்கும் பொருளாயிருப்பவன். அவனுக்கு ஜகத்தெல்லாம் சரீரம். ஆயினும் அதன் தோஷங்களெவையும் தன்மேல் தீண்டப்பெறுதவன். அவன் ஆச்சர்யமான பல சக்திகளுடையவன். இத்தகையனை அப்பரமபுருஷன் எனக்கு அருள்புரிவாளுக. காம சங்கத்தினல் சொல்லுகிறதும், புத்தியால் நிச்சயிக்கிறதும், இந்த்ரியங்களால் அறிகிறதும், மனத்தினல் ஸங்கல்பிக்கிறதுமாகிய அவையெல்லாம் பரமபுருஷனுக்குச் சரீரமேயன்றி ஸ்வரூபமன்று. அவை ஸத்வாதி குணங்களின் பரிணமங்கள். ஆயினும் அவற்றின் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களே அவனுக்கு அஸாதாரணமான லக்ஷணமாம். உலகத்தில் அதிகரணம் அபாதானம் காரணம் ஸம்ப்ரதானம் கர்மம் கர்த்தா என்னும் இச்சக்திகளுக்கிடமான வஸ்துக்களும் ஸாதாரணமான பலவகை ஸம்பத்துடைய வஸ்துக்களும் ப்ரயோஜக சக்தி ப்ரயோஜ்யசக்தி இவையுடைய வஸ்துக்களும் காலமும் பரமபுருஷனே. பரமபுருஷன் இந்தஜகத்தெல்லாம் உண்டாவதற்கு முன்பு கேவலம் காரணவஸ்துவாய் அழியாமலே யிருந்தான். அவனே இந்த ப்ரபஞ்சமாக விரிந்

தான். ஆகையால் இந்த ப்ரபஞ்சமெல்லாம் அவனே யன்றி அவனைக்காட்டிலும் வேறுபட்டதன்று. அவனொருவனே இத்தன்மையன்றி மற்றொரு ருவனும் இல்லை. அவன் தனக்குத்தானே காரணன்றி அவனுக்கு மேற்பட்டவனும் இல்லை. ஸ்ருஷ்டிக்கு முன்பு காமருபங்களுக் கிடமில்லாத ஸூக்ஷ்ம சேதனசேதனங்களைச் சரீரமாகக் கொண்டிருந்த பரமபுருஷன் காமருபங்களுக்கிடமான ஸ்தூல சேதனசேதனங்களைச் சரீரமாகக்கொண்ட புருஷனாய் விரிகின்றான். ஸ்வபாவ ஸ்வரூப பரிணமங்களெல்லாம் சரீரங்களாகிய சேதனசேதனங்களைச் சேர்ந்தவைகளே யன்றி அவனைத் தீண்டமாட்டா. உலகத்தில் பல பண்டிதர்கள் பகவானுடைய சக்திகளான ப்ருதிவி முதலிய தத்வங்களைப் பற்றிப் பலவாறு ஸித்தாந்தங்களை ஏற்படுத்திக்கொண்டு ஒருவர்க்கொருவர் விவாதப்படுவதும் ஓத்துப் பேசுவதுமாயிருக்கிறார்கள். அவனுடைய சக்திகள் பண்டிதர்களுக்கும் தமது உண்மை தெரியாதபடி அடிக்கடி மதியை மயக்குகின்றன. அவன் கணக்கில்லாத கல்யாண குணங்களுடையவன்; அபரிச்சின்ன ஸ்வரூபன், அத்தகைய பரமபுருஷனுக்கு நமஸ்காரம். வேதாந்த வாக்யங்களில் சில பரமபுருஷனுக்குக் குணங்கள் உண்டென்றும், சில இல்லையென்றும் சொல்லுகின்றன. உண்மையும் இன்மையும் ஒன்றோடொன்று பொருந்தாதவை. இவ்விருத்த தர்மங்கள் எங்ஙனம் பொருந்துமென்பதை அவ்வேதாந்த வாக்யங்களைக்கொண்டே ஆராய்ந்தறிய வேண்டும். வேதாந்த வாக்யங்கள் ஸத்யஜ்ஞானாநந்த ரூபனென்றும் அபரிச்சின்ன ஸ்வரூபனென்றும் கெட்டகுணங்கள் தீண்டப்பெறாதவனென்றும் சொல்லுகின்றன. ஆகையால் குணங்கள் உண்டென்

ணும் சொல் கல்யாணகுணங்களைப் பற்றின தென்றும் இல்லையென்னும் சொல் கெட்ட குணங்களைப்பற்றினதென்றும் பிரித்தறியவேண்டும். யோகமதத்திலும் சாங்க்யமதத்திலும் ஈச்வரன் உண்டென்றும் இல்லையென்றும் விவாதத்தில் வேதாந்தவாக்யங்களைக் கொண்டு ஈச்வரன் உண்டென்று ஸித்தாந்தம் செய்வதுபோல், அவ்வாக்யங்களே அவனுக்குக் குணங்களையும் சொல்லுகையால் குணங்கள் உண்டென்பது ஸித்தாந்தமாம். ஆகையால் ஈச்வரனில்லையென்பதும் அவனுக்குக் குணங்கள் இல்லையென்பதும் ப்ரமமே. பரமபுருஷன் தர்மத்தினால் விளையும் காமரூபங்களற்றவனையினும் தன் பாதமூலத்தைப்பணிகிறவர்களை அனுக்ரஹிக்கும்பொருட்டு அவதார சேஷ்டிதங்களுடன் ராமகிருஷ்ணாதி காமங்களையும் அத்தத்த உருவங்களையும் அங்கீகரித்தான். அவன் இஃதெதிரில்லாதவன்; அனந்தன்: அவன் எனக்கு அருள்புரிவானாக. ப்ரக்ருதியின்பரிணாமமான வஸ்துக்களை அறியுந் தன்மையுடைய இந்த்ரியங்களால் ஜனங்கள் மேனவ்ருத்தியின்படி அத்தத்த வஸ்துக்களைக் காணும்பொழுது தனக்குச் சரீரமாகிய சேதனாசேதனங்களில் அந்தர்யாமியாயிருக்கின்ற பரமபுருஷனும் அவர்கட்குத் தோற்றுகிறான். ராஜாவின் சரீரத்தைக் கண்டால் ராஜனையும் கண்டாற் போலவேயல்லவா? அங்ஙனமே ஜகத்திலுள்ள வஸ்துக்களைக் காணும்பொழுது அவற்றிற்கு அந்தர்யாமியாயிருக்கின்ற ஈச்வரனையும் கண்டாற்போலவே. ஆனால் இக்காட்சி எல்லாம் பரமாத்மாவுக்குச் சரீரமென்னும் பாவனையுடையவர்க்கேயன்றி மற்றவர்க்குக் கிடையாது. காற்று பூமியைக்காட்டிலும் விலக்ஷணவஸ்துவாயினும் பூமியின் பரிணாமமான புஷ்பத்தின் தூள்களை அடித்துக்

கொண்டு அவ்வாஸனையுடன் வீசுகையில் கந்தவஹ மென்று பேர்பெறுகின்றது. இங்ஙனமே பரமபுருஷன் ஜகத்தைதக்காட்டிலும் விலக்ஷணையிலும் அதைச் சரீரமாகவுடையவனுகையால் அதன் காமரூபங்களைப் பெற்றுத் தோற்றுகிறுன். அப்படிப்பட்ட ஸர்வேச்வரன் என் மனோரதத்தை நிறைவேற்றுவானுக."

ஓ குருச்ரேஷ்டனே! இங்ஙனம் அந்த அகமர்ஷண தீர்த்தத்தில் தக்ஷர் ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டிருக்கையில் பகவான் பக்த வத்ஸலனுகையால் அவருக்கு ப்ரத்யக்ஷமானன். அவன் கருத்மானுடைய தோளின் மேல் பாதங்களைத் தொங்கவிட்டுக்கொண்டு முழந்தாள் வரையில் தொங்குகின்ற எட்டுப்புஜங்கள் விளங்கப்பெற்றுச் சங்கு சக்ரம் கத்தி கேடயம் பாணம் தனுஸ்பாசம் கதை இவைகளைத்தரித்துப் பீதாம்பரம் உடுத்து மேகம்போல் கறுத்துத்தெளிந்தழகிய முகமும் கண்களும் திகழ்வனமாலை அணிந்து ஸ்ரீவத்ஸம் கௌஸ்துபம் பெரிய கிரீடம் கைவளை மகரகுண்டலம் அரைஞாண் மாலை மோதிரம் கால்வளை சிலம்புதண்டை தோள்வளை முதலிய ஆபரணங்கள் பூண்டு மூன்று லோகங்களையும் மயக்கும்படியான உருவத்துடன் தோற்றினன். காரதர்கந்தர் முதலிய பரிவாரங்கள் த்ரிலோகேச்வரனை அவ்வாதி புருஷனைச் சூழ்ந்து வந்தனர். தேவர்கள் கூட்டங்கூட்டமாய் அவனைத் துதித்தார்கள். ஸித்தர் கந்தர்வர் சாரணர் முதலிய உபதேவதைகள் அனைவரும் பாடினர்கள். மிகவும் ஆச்சர்யமான பகவானுடைய அவ்வுருவத்தைக்கண்டு தக்ஷப்ரஜாபதி பயம் தெளிந்து மனக்களிப்புற்றுப் பூமியில் தண்டம்போல் விழுந்து நமஸ்கரித்தார். கதிகள் ப்ரவாஹங்களால் நிறைந்திருப்

பதுபோல, இந்த்ரியங்களெல்லாம் மஹத்தான ஸந்தோ ஷத்தினல் நிரம்பப்பெற்ற அந்த ப்ராசேதஸர் ஒன்றும் சொல்லமுடியாதிருந்தார். அவர் ப்ரஜைகளை விரும்பி அவனை ஆராதித்தார். அவ்விருப்பத்தை ஆநந்தத்தின் மிகுதியால் சொல்லமுடியாமல் தலைவணங்கி நிற்கிற தன் பக்தரைப் பார்த்து ஸமஸ்த ப்ராணிகளின் அபிப்ராயத் தையும் அறிந்த ஜனார்த்தனன் இங்ஙனம் மொழிந்தான். "ப்ராசேதஸ! மிகுந்த மதியுடையவனே! நீ தவத்தினல் கன்கு ஸித்திபெற்றனை. மிகுந்த ச்ரத்தையுடன் என்னை ஆராதித்து என்னிடத்தில் மேலான பக்தியோகம் உண் டாகப்பெற்றனை. ப்ரஜாபதி! உன்னிடத்தில் நான் மிகவும் ஸந்தோஷம் அடைந்தேன். இந்த ஜகத்தின் அபிவ்ருத் திக்காகவன்றோ நீ தவம் செய்தனை. ப்ராணிகள் வளர்ந் திருக்க வேண்டுமென்பதுவே என் விருப்பம். ப்ரஹ்ம தேவன் ருத்ரன் ப்ரஜாபதிகளாகிய நீங்கள் ஸ்வாயம் புவர் முதலிய மனுக்கள் இந்த்ரன் முதலிய தேவதை கள் இவ்வனைவரும் என்னுடைய அம்சங்களே; ப்ராணி களின் ஸம்ருத்திக்காகவே ஏற்பட்டவர்கள். ப்ராஹ்ம ணஸ்ரேஷ்டனே! தவம் என்னுடைய ஹ்ருதயம். வித்யை சரீரம், க்ரியைகள் ஆகாரம். ஸோமமுள்ள யாகங்களும் ஸோமமில்லாத யாகங்களும் எனது அங் கங்கள். தாணுதி தர்மங்கள் என்மனம். தேவதைகள் என் ப்ராணன். ஸ்ருஷ்டிக்கு முன்பு நானொருவனே இருந்தேன். இச்சேதனாசேதனங்களெல்லாம் அப்பொ ழுது எவையுமே இல்லை. ஜீவாத்மாக்கள் நாம ரூபங்க ளின்றி என்னிடத்தில் மறைந்திருந்தார்கள். ப்ரக்ருதி யும் ஸூக்ஷ்மதசையை அடைந்து உறங்கிற்போல் என்னிடத்தில் முழுவதும் மறைந்திருந்தது. நான் அனந்தகல்யாணகுணகரன். அபரிச்சின்ன ஸ்வரூபன்.

ஸத்வாதிகுணமயமான ப்ரக்ருதியினின்று ப்ரஹ்மாண்டரூபமான என்தேஹம் உண்டாயிற்று. அதுவும் ஸத்வாதி குணங்களின் பரிணமமே. அப்பொழுது அவ்வண்டத்தினின்று ஸமஷ்டிபுருஷனெகிய ப்ரஹ்மதேவன் உண்டானன். தேவர்களில் மேன்மையுடைய அங்கான் முகன் என்னுடைய ஸங்கல்பத்தினல் ஸ்ருஷ்டிக்க முயன்றும் தன்னை அஸமர்த்தனெக நினைத்தான். அனந்தரம் அவன் என்னல் தவம் செய்யும்படி சொல்லப்பெற்றுத் தாருணமான தவம் செலுத்தினன். தவம் செய்த அந்த ப்ரஹ்மதேவன் ஸ்ருஸ்டிக்க வல்லவனெகித் தவபலத்தினல் ப்ராஜாபதிகளான உங்களை ஸ்ருஷ்டித்தான். ஆகையால் தவமே ஜகத்தின் அபிவ்ருத்திக்குரிய உபாயம். ஓ தக்ஷனே! பஞ்சஜனென்னும் ப்ராஜாபதிக்கு அஸிக்னியென்று ஓர் புதல்வி இருக்கிறாள். அவளை நீ பார்யையாக அங்கீகரிப்பாயாக. ஆணும் பெண்ணும் கலந்து ஸம்போகிக்கையாகிற தர்மத்தை ஏற்றுக் கொண்டு அதற்குரியவளாகிய அவ்வஸிக்னியிடத்தில் ப்ராஜாஸ்ருஷ்டியை மேன்மேலும் வளர்த்திக்கொண்டு வருவாயாக. உனக்குப் பின்னிட்ட ப்ரஜைகளெல்லாம் என் ஸங்கல்பத்தினல் ஆணும் பெண்ணுமாய்க் கலந்து ஸந்ததியை வ்ருத்திசெய்யப் போகிறார்கள். மற்றும், யஜ்ஞாதி கர்மங்களால் என்னை ஆராதிக்கப் போகிறார்கள்" என்று மொழிந்து ஜகத் ஸ்ருஷ்டி கர்த்தாவான அந்த ஸர்வேஸ்வரன், ப்ராசேதஸர் பார்த்துக் கொண்டேயிருக்கையில், ஸ்வப்னத்தில் கண்ட பொருள் போல் அவ்விடத்திலேயே மறைந்தான். நான்காவது அத்யாயம் முற்றிற்று.

தக்ஷர் தன் பிள்ளைகளை நாரதர் கெடுத்தா
ரென்று அவரைச் சபித்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—தக்ஷப்ரஜாபதி பகவானுடைய ஸங்கல்பத்தினல் தாண்டப்பட்டுப் பஞ்சஜனருடையபுதல்வியை மணம்புரிந்து அவளிடத்தில் ஹர்யஸ்வரென்னும் பேருடைய பதினாயிரம் பிள்ளைகளைப்பெற்றார். மன்னவனே! அந்தத் தக்ஷருடைய பிள்ளைகள் அனைவரும் கலந்து ஒரேதர்மத்தை ஆசரிக்குந் தன்மையுடையவர்கள். அவர்கள் தந்தையால் ப்ரஜைகளைப் படைக்கும்படி நியமிக்கப்பெற்று மேற்குதிக்குக்குப் போனர்கள். ஸிந்துநதம் ஸமுத்ரத்தில் போய்க்கலக்குமிடத்தில் நாராயண ஸரஸ்ஸென்று ஓர் புண்யதீர்த்தம் இருக்கின்றது. அது மிகுந்த பெருமையுடையது. முனிவர்களும் ஸித்தர்களும் அதை ப்ரீதியுடன் பணிகின்றார்கள். ஹர்யஸ்வர்கள் அந்தப்புண்யதீர்த்தத்தைத் தொட்டமாத்ரத்தில் மனமலங்களெல்லாம் கழிந்து பரமஹம்ஸர்கள் ஆசரிக்குந்தர்மத்தில் மதி செல்லப்பெற்றார்கள். ஆயினும் அவர்கள் தந்தையாகிய ப்ராசேதஸருடைய கட்டளைக்குட்பட்டுக் கடுமையான தவத்தை நடத்தினர்கள். இங்ஙனம் ப்ரஜைகளின் அபிவ்ருத்திக்காகயத்னஞ் செய்கிற அந்தஹர்யஸ்வர்களைத் தேவரிஷியாகிய நாரதர் கண்டார். அவர் அவர்களை நோக்கி 'ஓ ஹர்யஸ்வர்களே! நீங்கள் பாலர்களாயிருக்கின்றீர்கள். உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே. பூமியின் முடிவை அறியாமல் ஏன் ப்ரஜைகளைப் படைக்கத் தொடங்கினீர்கள். அதை அறிவீர்களாயின் நீங்கள் இச்செயலில் முயற்சி கொள்ளமாட்டீர்கள். ஜகத்திற்கெல்லாம் ஈச்வரனொருவனே நியாமகனென்பதையும், ஹ்ருதய பிலத்தினின்று வெளிப்பட்டு வர உபாயம் ஏற்படாமையையும், புத்தியா

கிற பெண்மணியின் பலவாறான தோற்றங்களையும், சபல மான அப்புத்தியுடன் கலந்த ஜீவனுடைய நிலைமையையும், ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களாகிற இரண்டு கரைகளும் நிறைந்து பாய்கின்ற மாயையாகிற நதியையும், அற்புத மான இருபத்தைந்து தத்வங்களடங்கினதும் ஜீவனேடு கூடியதுமாகிய சரீரமாகிற க்ருஹத்தையும், ஸம்ஸார பந்தம் மோக்ஷம் இவைகளாகிற இரண்டு இறகுகளையுடைய ஸர்வேச்வரனாகிற ஹம்ஸத்தையும், சிறிய கத்திகளாலும் வஜ்ரங்களாலும் நிர்மிக்கப்பட்டுத் திடமும் கூரியதும் சுற்றிக்கொண்டே யிருப்பதுமாகிய காலசக்ரத்தையும், எல்லாம் உணர்ந்து ஜன்மங்கள்தோறும் தந்தையைப்போல் ஹிதத்தையே உபதேசிக்கின்ற சாஸ்த்ரத்தின் அனுகூலமான கட்டளையையும் அறியாமல் நீங்கள் ஸ்ருஷ்டிக்கு யத்னம் செய்கிறீர்கள். இப்படியும் செய்வார்களோ? ஆ!" என்று மொழிந்தார். அந்த ஹர்யச்வர்கள் இயற்கையாகவே எல்லாவற்றையும் ஆராய்ந்தறியவல்ல மதியுடையவர்கள். அவர்கள் நாரதருடைய வார்த்தையைக் கேட்டுத் தம் புத்தியால் அந்நாரதருடைய [1]கூடமான வார்த்தையின் கருத்தை ஆலோசித்து நிச்சயித்துக் கொண்டார்கள். "ஜீவனுல் அறியக் கூடியதும் ப்ருதிவி முதலிய பஞ்சபூதங்களின் பரிணமமான தேஹத்தைப் பூமியென்று மொழிந்தார். அது அனந்தியான புண்ய பாபகர்மங்களைப்பற்றி ஏற்படுகின்றது. அத்தேஹம் அழியுந்தன்மையுடையதென்பதை அறியாமல் அனந்தியான கர்மபந்தத்தைப் போக்குந் திறமையற்று மேன்மேலும் ஸம்ஸாரத்தையே வளர்க்கின்ற கர்மங்களைச் செய்வதனால் என்ன உபயோகம்?

---

1. மறைந்த கருத்தினையுடைய.

பகவான், விழித்துக்கொண் டிருக்கை ஸ்வப்னம் காண்கை உறக்கம் என்கிற இம்மூன்று அவஸ்தைகளைக் கடந்தவன்; தனக்குத்தானே ஆதாரமாயிருப்பவன். ப்ரக்ருதி புருஷர்களைக்காட்டிலும் விலக்ஷணன்; ஷாட்குண்ய பூர்ணன்; தோஷங்களெவையும் தீண்டப்பெறுதவன். அவனொருவனே எல்லாவற்றிலும் உட்புகுந்து தரித்து நியமிப்பவன்; கர்மத்தினால் விளையும் உற்பத்தியற்றவன். இத்தகைய ஸர்வேஸ்வரனை உபாஸிக்காமல் மற்ற கர்மங்களைச் செய்வதனால் என்ன ப்ரயோஜனம்? ஜீவன் குகைபோன்ற ஹ்ருதயத்தில் சென்று, பாதாளத்தில் சென்றவன் போகங்களில் ஆழ்ந்து தன்னையும் மறந்து தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமித்து அதினின்று வெளிப்படாமல் அவ்விடத்திலேயே இருப்பதுபோல், ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷணமான தன் ஸ்வரூபத்தை அறியாமல் காமபோகங்களில் ஆழ்ந்து அதினின்று வெளிப்பட்டு வரத்தெரியாமல் அங்கேயே இருக்கிறான். ஸ்வயம்ப்ரகாசமான அத்தகைய ஆத்ம ஸ்வரூபத்தை அறியாமல், மேன்மேலும் சரீரபந்தத்தையே விளைக்கும்படியான கர்மங்களைச் செய்வதனால் என்ன நன்மை உண்டாகும்? கள்ள புருஷனை விரும்பும் பெண்கள் காமமோஹத்தினால் தோன்றபடி திரிவதுபோல், ஜீவனுடைய புத்தி ராகாதிகுணங்கள் மறைந்து, வெளியில் திரிகின்றது. அதன் நிலைமையாகிய விவேகம் உண்டாகப் பெறுதவன் அதற்கிடமில்லாத வீண் கர்மங்களைச் செய்வதனால் இவ்வுலகத்தில் என்ன க்ஷேமத்தை அடைவான்? நன்மதியில்லாத பார்வையையுடையவன் அவள் வேண்டுகிற ஆடையாபரணம் முதலியவற்றைச் சம்பாதிக்கும் ஆயாஸத்தினால் வருந்துவதுபோல், அங்ஙனம் திரிகின்ற புத்திக்கு உட்பட்டுக் கர்மத்திற்கு உட்

படாமையாகிற தன் ஐஸ்வர்யத்தை இழந்து ஜன்மஜராமரணதிரூபமான ஸம்ஸாரத்தை அனுபவிக்கின்ற ஜீவனுடைய ஸ்வரூபத்தையும், அப்புத்தியின் மூலமாய் விளையும் ஸ்வர்க்க நரகாதிகளையும் அறியாமல் அற்பமும் அஸ்திரமுமான ஸ்வர்க்காதி போகங்களையும் துக்கரூபமான நரகங்களையும் விளக்கவல்ல வீண் கர்மங்களைச் செய்வதனால் என்ன உபயோகம்? மாயை யென்னும் ப்ரக்ருதியே நதி. அதற்கு ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களே இருபுறத்து ப்ரவாஹங்கள். அந்நதி இஹலோக பரலோகங்களாகிற இக்கரை அக்கரையோரங்களில் பெரு வேகமுடையது. அந்த ப்ரக்ருதியால், மதிமயங்கித்தன் ஸ்வரூபத்தை ஆராய்ந்தறியாமல், இஹபரலோகங்களை விளக்கும்படியான அஸத் கர்மங்களைச் செய்வதனால் என்ன உபயோகம்? ஜீவன் வரையிலுள்ள இருபத்தைந்து தத்வங்களின் ஸமூதாய ரூபமான இச்சரீரம் ஆச்சர்யத்திற்கிடமானது. ஈஸ்வரன் ஜீவன் மூலமாய் இதில் புகுந்திருக்கிறானையால் இது அவனுடைய சரீரமே. இது அவனால் தரிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய சரீரத்தின் நிலைமையை அறியாமல் தேஹாத்மப்ரமம் ஸ்வதந்த்ராத்ம ப்ரமம் முதலியவற்றை விளக்கும்படியான அஸத் கர்மங்களைச் செய்வதனால் என்ன உபயோகம்? ஈஸ்வரன் தோஷங்கள் தீண்டப்பெறாத பரிசுத்தன்; சாஸ்த்ரத்தினால் மாத்ரமே அறியத்தகுந்தவன்; ஸம்ஸார பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமான ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி கர்மங்களைக் காட்டுகிறவன்; ஏகாந்தமான ஹ்ருதய குஹையில் வாஸம் செய்பவன். இத்தகையனான ஸர்வேச்வரனை ஆராய்ந்தறியாமல் அவனிடத்தில் மனப்பற்றை விளக்கமாட்டாத அஸத்கர்மங்களைச் செய்வதனால் என்ன உபயோகம்?

காலசக்ரம் ப்ரஹ்மதேவன் முதல் பூச்சிப் புழு வரையி லுள்ள ஸமஸ்த ஜகத்தையும் அறுக்குந்தன்மைய தும். ஜன்மஜராமரணதிகளுக்குநிமித்தமாகையால்பொறுக்க முடியாதது; ஸர்வகாலமும் சுற்றிக்கொண்டேயிருக் கும்; ஒருவர்க்கும் உட்படாதது. இதை அறியாமல், அஸத் கர்மங்களைச் செய்வதனல் என்ன உபயோகம்? சாஸ்த்ரம் ஹிதத்தை உபதேசிக்கின்றதாகையால், அதுவே ஜகத்திற்கெல்லாம் தந்தை. ப்ரவ்ருத்தி தர் மங்களெல்லாம் ஸம்ஸாரத்தை வளர்க்குமாகையால் அதினின்று வெளிப்படவேண்டுமென்பதுவே அதன் கருத்து. இத்தகைய சாஸ்த்ரத்தின் கட்டளையை உள்ள படி அறியாமல், ஸத்வாதி குணங்களின் பரிணாமமான சப்தாதி விஷயங்களில் விஸ்வாஸமுற்று ஸ்ருஷ்டி முத லிய கார்யங்களைத் தொடங்குவதால் என்ன உபயோ கம்? சாஸ்த்ரத்தின் கருத்தை அறிந்து அதற்கு அனு கூலமாக நடக்கவேண்டுமாயின், அச்செயல்களினின்று மீளவேண்டும்" என்று நாரதருடைய வாக்யங்களை ஆராய்ந்தறிந்தார்கள். மன்னவனே! இங்ஙனம் நிச்ச யித்துக்கொண்ட ஹர்யஸ்வர்கள் அனைவரும் ஒத்தமதி யுடையவர்களாகி அந்த நாரதரை ப்ரதக்ஷிணம் செய்து மீளவும் இந்த ஸம்ஸாரத்திற்குத் திரும்பாமல் பரம புருஷனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும்படியான மார்க் கத்தைக் கைப்பற்றினர்கள். நாரதமுனிவர் பரப்ரஹ்மத் தின் ஸாந்நித்யத்தை விளக்கின்ற வீணையின் ஸ்வரத் தில் தோற்றுகிற ஹ்ருஷீகேசனுடைய பாதார விந்தங் களில் மனத்தை மாறுதபடி நிறுத்தி உலகங்களில் திரிந் தார். அப்பால் தக்ஷப்ராஜாபதி கல்லொழுக்கமுடைய தன் புதல்வர்கள் நாரதர்மூலமாய் நாசம் அடைந்தார்க ளென்று (தான் நியமித்த ஸ்ருஷ்டியின் முயற்சியைத்

துறந்து முக்தியை அடைந்தார்களென்று) கேள்விப் பட்டுச் சோகித்தார். கற்பிள்ளையைப் பெறுதல் சோகத் திற்கிடமென்னும் பழமொழி யதார்த்தமாயிற்று. அத் தகஷர் ப்ரஹ்மதேவரால் கல்வார்த்தைகளால் ஸமாதா னம் சொல்லப் பெற்று மீளவும் பாஞ்சஜன்யை யிடத் தில் சபலாஸ்வரென்னும் பேருடைய ஆயிரம் பிள்ளை களைப் பெற்றார். அந்தச் சபலாஸ்வர்களும் தந்தையிரல் ப்ரஜைகளைப் படைக்கும்படி நியமிக்கப்பட்டுத் தந்தை யின் சொல்லைத் தலைக்கட்டுகையாகிற வ்ரதத்தைக்கைப் பற்றித் தமது முன் தோன்றல்களாகிய ஹர்யஸ்வர்கள் ஸித்தியடைந்த நாராயணஸரஸ்ஸென்னும் புண்யதீர்த் தத்திற்குப் போனார்கள். அவர்கள் அப்புண்ய தீர்த்தத் தின் ஜலத்தை ஸ்பர்சித்த மாத்ரத்தில் மனமலங்களெல் லாம் தீரப்பெற்றுச் சிறப்புடைய ப்ரணவத்தைஜபித்துக் கொண்டு அவ்விடத்தில் பெருந்தவம் செய்தார்கள். "ஓம் நாராயணனுக்கு நமஸ்காரம். அவன் ப்ராணிகளுடைய ஹ்ருதயகமலத்தில் வாஸம் செய்பவன்; உட்புகுந்து ஜீவாத்மாக்களை நியமிக்கும் பரமாத்மன். அவனுக்குச் சுத்த ஸத்வமயமான பரமபதம் வாஸஸ்தானம். அவன் கல்யாண குணங்களெல்லாம் நிறைந்தவன்; ஸமஸ்த தோஷங்களும் தீண்டப்பெறுதவன். இத்தகையனான அவனை நாம் த்யானிப்போமாக" என்னும் இம்மந்த்ர தை ஜபித்துக்கொண்டு சில மாதங்கள் ஜலத்தையே ஆஹாரமாகக்கொண்டு மந்த்ரங்களால் கூறப்படுந் தேவ தையாகிய பரமபுருஷனை ஆராதித்தார்கள். பிறகு சில மாதங்கள் வாயுவையே பக்ஷித்துக்கொண்டு அவனை ஆராதித்தார்கள். ராஜஸ்ரேஷ்டனே! நாரதமுனிவர், அவர்களும் படைக்கவேண்டுமென்ற எண்ணங் கொண் டிருப்பதைக்கண்டு அவ்விடம் வந்து முன்போலவே கூட



1403. நாரதர் சபலாஸ்வர்களுக்கு சிவ்ருத்தி மார்க்கத்தை உபதேசித்தலும், தக்ஷர் நாரதர் மேல் கோபித்தலும்.

மான வாக்யங்களைச் சொன்னர். 'தக்ஷகுமாரர்களே! என்னுடைய உபதேசத்தைக் கேட்பீர்களாக. நீங்கள் ப்ராதாக்களிடத்தில் அன்புடையவர்களல்லவா? ஆகையால் உங்கள் தமையன்மார்களாகிய ஹர்யஸ்வர்கள் சென்ற வழியைத் தொடர்ந்து செல்வீர்களாக. ப்ராதாவாயிருப்பவன் தர்மத்தை அறிந்து தன் ப்ராதாக்கள் சென்ற நல்வழியைத் தொடர்ந்து செல்வானுயின், அவன் தான் செய்த புண்யகர்மமே பந்துவாகப் பெற்றுத் தேவதைகளுடன் கலந்து களிப்புறுவான்' என்னூர். காரதருடைய காட்சி ஒருகாலும் வீணுகாது. அவர் உண்மையான பொருளைக்கண்டறிந்தவர். அம்முனிவர் இவ்வளவு மாத்ரமே மொழிந்து புறப்பட்டுப்போனர். தக்ஷரது புதல்வர்களான சபலாஸ்வர்களும் தமது மூன்றேதான்றல்களான ஹர்யஸ்வர்களுடைய மார்க்கத்தையே அனுஸரித்தார்கள். அப்பால் அவர்கள் பரப்ரஹ்ம ஸ்வரூபனான ஆத்மாவின் ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்து ஆதிவாஹிகர்களுடன் செல்கின்ற ஸ்வயம்ப்ரகாசனான ஜீவன் கடந்து போவதும் பரமபுருஷனுக்கு அனுகூலமுமாகிய அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்து கடந்த ராத்ரிகள்போல இன்னமும் திரும்பாமலே யிருக்கின்றூர்கள். இச்சமயத்தில் தக்ஷப்ரஜாபதி பலவகையான உத்பாதங்களைக் கண்டு முன்போலவே தன்பிள்ளைகள் காரதர் மூலமாய்க் காசம் அடைந்தார்களென்று கேள்விப்பட்டார். புத்ரசோகத்தினல் மதிமயங்கின அத்தக்ஷப்ரஜாபதிதெய்வாதீனமாய் கேரிட்ட தேவரிஷியாகிய காரதரைக் கண்டு உதடு துடிக்கப்பெற்று எழுந்து அவர்மேல் கோபித்துக் கொண்டார். "நீர் ஸாதுவைப்போல் வேஷம் பூண்டிருக்கிறீரன்றி, இயற்கையில் ஸாதுவன்று. நீர் என்குழந்தைகள்விஷயத்தில் தப்புக்கார்யம் செய்தீர். அவர்கள்தமக்

குரிய தர்மத்தில் முயன்றிருக்கையில், அவர்களுக்கு ஸந்யாஸிகளின் வழியைக் காட்டியனுப்பினீர். அவர்கள் கர்மத்தை விவரிக்கிற வேதத்தின் பொருளை ஆராய்ந்தறியவில்லை. ஆகையால் அவர்களுக்கு ரிஷிகளின் கடன் தீரவில்லை. அதற்குமேல் புத்ரோத்பத்தியால் தீரவேண்டிய பித்ருக்களின் கடனும் யஜ்ஞங்களால் தீரவேண்டிய தேவதைகளின்கடனும் தீருவதற்கு ப்ரஸக்தியேயில்லை. ஆகையால் மூன்று கடன்களினின்றும் விடுபடவில்லை. பாபிஷ்டனே! அவர்களுக்கு இஹலோகத்து நன்மை பரலோகத்து நன்மை இரண்டும் விளையாதபடி பாழ்செய்தனையே. இங்ஙனம் நெஞ்சில் இரக்கமில்லாமல் அறியாதபிள்ளைகளின் புத்தியைக் கலைத்த நீ பகவானுடைய புகழைப் பாழ்செய்துகொண்டு அவனுடைய பரிவாரங்களின் இடையில் வெட்கமின்றி எங்ஙனம் திரிகின்றனை? ஓ காரதா! நீ ஒருவர்க்கொருவர் வைரமின்றி ஸ்நேஹத்துடன் கலந்திருப்பவர்க்கு வைரத்தைவினைத்து ஸ்நேஹபங்கம் செய்யுந்தன்மையனல்லவா? உன்னைத்தவிர மற்ற பாகவதர்கள் அனைவரும் எப்பொழுதும் ப்ராணிகளிடத்தில் அனுக்ரஹம் செய்வதே தன்மையாயிருக்கின்றார்கள். ப்ராணிகளுக்குக் கெடுதியையே தேடுகின்ற நீ அவர்களிடையில் எங்ஙனம் வெட்கமில்லாமல் திரிகின்றனை? சப்தாதி விஷயங்களின் அனுபவம் துச்சமென்றும் கர்வாமென்றும் ப்ராணிகளுக்கு உபதேசித்து அவர்களுக்கு அவ்விஷயங்களில் உண்டாயிருக்கிற மனப்பற்றுகிற பாசத்தை அறுத்து வைராக்யத்தை விளைப்பதாக நீ நினைக்கின்றனை. ஆயினும், ஜ்ஞானமில்லாமல் ஸாதுக்களின் வேஷத்தை பொய்யாகவே ஏற்றுக்கொண்டிருக்கின்ற நீ இங்ஙனம் புத்தியைக்கலைப்பதனால் வைராக்யம் முதலே உண்டாகாது. சப்தாதி விஷயங்

களை அனுபவிக்காமல் ஒருவன் அவற்றின் கொடுமையை அறியமாட்டான். விஷயங்களை அனுபவித்த பின்பு அவற்றில் வெறுப்பு உண்டாவதுபோல், பிறர் புத்தியைக் கலைப்பதனால் உண்டாகாது. நாங்கள் கர்மத்தில் மனம் சென்று இல்லற வாழ்க்கையில் இழிந்து ஸாதுக்களா யிருக்கிறோம். நீ எங்களுக்குப் பொறுக்கமுடியாத அநிஷ்டத்தைச் செய்தனை. அதை நாங்கள் பொறுக்க மாட்டோம். எங்கள் ஸந்ததியைப் பாழ் செய்தவனே! நீ எங்களுக்கு மஹத்தான அப்ரியத்தைச் செய்தனை. மூடனே! நீ ஓரிடத்திலும் நெடுநேரம் நிற்காமல் மூன்று லோகங்களிலும் திரிந்துகொண்டே யிருப்பாயாக. எவ் விடத்திலும் உனக்கு ஓரு நிலை ஏற்படாதிருக்குமாக" என்று சபித்தார். ஸாதுக்களால் புகழ்பெற்ற நாரதர் அப்படியே ஆகட்டுமென்று அந்தச் சாபத்தை அங்கீ கரித்தார். தான் பதில் செய்ய ஸமர்த்தராயிலும் பிறர் செய்த அபகாரத்தைப் பொறுத்திருக்கையே ஸாதுக்க ளின் தன்மையாம். ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.

தக்ஷருடைய பெண்களின் வம்சத்தைக் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—தக்ஷப்ரஜாபதி மீளவும் ப்ரஹ்மதேவனால் ஸமாதானம் செய்யப்பெற்றுத் தன் பார்யையிடத்தில் அறுபது பெண்களைப் பெற்றார். அவர்களெல்லோரும் தந்தையிடத்தில் மிகுந்த அன் புடையவர்கள். அவர்களில் தர்மர்க்குப் பத்துப் பெண் களையும், கச்யபப்ரஜாபதிக்குப் பதின்மூன்று பெண் களையும் சந்த்ரனுக்கு இருபத்தேழு பெண்களையும், ருத் ரன் அங்கிரஸ்ஸு, க்ருசாஸ்வர் இவர்களுக்கு இரண்

டாண்டு பெண்களையும், தார்க்ஷ்யனுக்கு மற்ற பெண் களையும் கொடுத்தார். இந்தத் தக்ஷிரது பெண்களின் நாமங்களையும் அவர்களுடைய குழந்தைகளின் நாமங் களையும் சொல்லுகிறேன், கேள். இவர்களுடைய பிள்ளை பேரன் முதலிய ஸந்ததியால் மூன்று லோகங்களும் நிறைந்திருக்கின்றன. தர்மருடைய பத்னிகள் பானு, லம்பை, ககுபு, ஜாமி, வி�ச்வை, ஸாத்யை, மருத்வதி, வஸு, முஹூர்த்தை, ஸங்கல்பை என்னும் பேருடையவர்கள். அவர்களுடைய பிள்ளைகளைச் சொல்லுகிறேன், கேள். பானுவுக்கு வேதனென்றும் ருஷபனென்றும் இரண்டு பிள்ளைகள். ருஷபனுடைய பிள்ளை இந்திர சேனன். ஓ மன்னவனே! லம்பையின் பிள்ளை வித்யோதன். அவனுடைய பிள்ளை ஸ்தனயித்னு. ககுபின் பிள்ளை கீகடன். அவன் பிள்ளை ஸங்கடன். ஜாமியின் பிள்ளைகள் பூமியிலுள்ள துர்க்கங்களுக்கு அபிமானி தேவதைகள். அவர்களுக்கு ஸ்வர்க்கனென்றும் நந்தி யென்றும் இரண்டு பிள்ளைகள். விஸ்வையின் பிள்ளைகள் விஸ்வதேவர்கள். அவர்களுக்கு ஸந்ததி இல்லையென்று சொல்லுகிறார்கள். ஸாத்யையின் பிள்ளைகள் ஸாத்ய ரென்னும் தேவகணங்கள். அவர்களுடைய பிள்ளை அர்த்தஸித்தன். மருத்வதிக்கு மருத்வானென்றும் ஜயந்தனென்றும் இரண்டு பிள்ளைகள். ஜயந்தன் பகவா னுடைய அம்சம். இவனை உபேந்த்ரனென்று சொல்லு கிறார்கள். முஹூர்த்தைதக்கு மௌஹூர்த்திகரென் னும் தேவகணங்கள் பிறந்தன. அவர்கள் முஹூர்த் தாபிமானி தேவதைகள்; தத்தம் முஹூர்த்தத்திற்கு ஏற்பட்ட ஸுகதுக்கதி பலன்களை ப்ராணிகளுக்கு விளக்கின்றார்கள். ஸங்கல்பையின் பிள்ளை ஸங்கல்பன். அவனுடைய பிள்ளை காமன். வஸுவின் பிள்ளைகள்

அஷ்டவஸுக்கள். அவர்களின் நாமங்களைக் கேள். த்ரோணன், ப்ராணன், த்ருவன், அர்க்கன், அக்னிதோஷன், வஸு, விபாவஸு என்பவர். த்ரோணனுடைய பத்னி அபிமதியென்பவள். ஹர்ஷன் சோகன் பயன் முதலியவர்கள் அவனுடையபிள்ளைகள். ப்ராணனுடைய பார்யை ஊர்ஜஸ்வதி. ஸஹன், ஆயு, புரோஜவன் இவர்கள் அவனுடைய பிள்ளைகள். த்ருவனுடைய பார்யை தரணியென்பவள். அவள் பலவகையான பட்டணங்களின் அபிமானிதேவதைகளைப் பெற்றாள். அர்க்கனுடைய பார்யை அசனை யென்பவள். தர்ஷன் முதலியவர்கள் அவனுடைய பிள்ளைகள். அக்நியின் பார்யை வஸுதாரை. அவனுடைய பிள்ளைகள் த்ரவிணகன் முதலியவர். ஸ்கந்தன் அக்னிக்கு க்ருத்திகையிடத்தில் பிறந்தவன். விசாகன் முதலியவர் அந்த ஸ்கந்தனுடைய பிள்ளைகள். தோஷனுடைய பார்யை சர்வரி யென்பவள். அவனுடைய பிள்ளை சிம்சுமாரன். அவன் பகவானுடைய அம்சம். வஸுவின் பார்யை ஆங்கிரஸி. அவனுடைய பிள்ளை விஸ்வகர்மா வென்பவன். அவன் தேவதைகளுக்குத் தச்சுவேலை செய்பவன். அந்த விஸ்வகர்மாவின் பிள்ளை சாக்ஷுஷமனு. விஸ்வர்களும் ஸாத்யர்களும் அம்மனுவின் பிள்ளைகள். விபாவஸுவின் பார்யை உஷையென்பவள். அவள் வ்யுஷ்டன் ரோசிஷன் ஆதபனென்று மூன்று பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களில் ஆதபனுடைய பிள்ளை பஞ்சயாமன். அவன் பகலுக்கு அபிமானிதேவதை. அவனுல் ப்ரஜைகள் கத்தம் செயல்களில் விழித்துக்கொண்டிருக்கிறார்கள். ருத்ரனுடைய பார்யைகளிருவரில் ஒருத்தி ஸுரூபையென்பவள். அவள் ருத்ரர்களென்னும் கோடி பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களில் ரைவதன், அஜன், பவன்,

பீமன், வாமன், உக்ரன், வ்ருஷாகபி, அஜைகபாதன், அஹிர்ப்புத்ன்யன், பஹுரூபன், மஹான் என்னும் பதி னொருவர்கள் முக்யமாயிருப்பவர்கள். ப்ரேதர், விநய கர், முதலிய மற்றவர்கள், அந்த ருத்ரனுக்கு மற்றொரு பார்யையிடத்தில் பிறந்தவர்கள்; பயங்கரமான உரு முடையவர்கள். அவர்கள் ருத்ரனுடைய பரிவாரங்கள். அங்கிரஸ்ஸென்னும் ப்ரஜாபதியின் பார்யைகள்ஸ்வதை யென்றும் ஸதியென்றும் இருவர். அவர்களில் ஸ்வதை பித்ருதேவதைகளைப் பெற்றாள். ஸதி அதர்வாங்கிரஸ மென்னும்வேதத்தின் அபிமானி தேவதையைப் பிள்ளை யாகப் பெற்றாள். க்ருசாஸ்வருக்கு அர்ச்சிஸ்ஸென்றும் தூஷணை யென்றும் இரண்டு பார்யைகள். அவர்களில் அர்ச்சிஸ்ஸு தூம்ரகேசனென்னும் பிள்ளையையும் தூஷணை வேதசிரன், தேவலன், வயுனன், மநு என்னும் நான்கு பிள்ளைகளையும் பெற்றார்கள். தார்க்ஷ்யனுக்கு வினதை,கத்ரு, பதங்கி, யாமினியென்று நான்கு பார் யைகள். அவர்களில் பதங்கி பக்ஷிகளையும், யாமினி விட் டில்களையும், ஸுபர்ணையென்னும் வினதை ஸாக்ஷாத் பரமபுருஷனுடைய வாஹனமான கருடனையும் ஸூர்ய னுடைய ஸாரதியான அருணனையும் கத்ரு பல நாகங் களையும் பெற்றார்கள். பரதவம்சாலங்காரனே! க்ருத் திகை முதலிய இருபத்தேழு நக்ஷத்ரங்களும் சந்த்ர னுடைய பார்யைகள். அவன் மற்றவர்களை உபேக்ஷித்து ரோஹிணியிடத்தில் மாத்ரம் விசேஷ ப்ரேமத்துடன் இருந்தானாகையால் தக்ஷர் கோபித்துச் சபித்தார். அதனால் அவன் க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டு அவர்களிடத்தில் ஸந்ததியை உண்டாக்கவில்லை. அந்தத் தக்ஷரை அருள்புரிவித்து அப்புறம் கலைகளைப் பெற் றான். அவை சுக்லபக்ஷத்தில் வளர்வதும் க்ருஷ்ண

பக்ஷத்தில் தேய்வதுமா யிருக்கின்றன. கஸ்யபருடைய பத்னிகள் ஜகத்திற்கெல்லாம் தாய்மார்கள். ஜகத் தெல்லாம் அவர்களுடைய ஸந்ததியே. அவர்களுடைய நாமங்களைச் சொல்லுகிறேன், கேள். அவை உலகங்களுக்கெல்லாம் க்ஷேமத்தை விளைக்கும். அதிதி, திதி, தனு, காஷ்டை, அரிஷ்டை, ஸுரஸை, இளை, முனி, க்ரோதவஸை, தாம்ரை, ஸுரபி, ஸரமை, திமி என் பவைகள் அவர்களுடைய நாமங்கள். ஜலஜந்துக்களெல் லாம் திமியிடத்தினின்றும், காய், புலி, பூனை முதலி யவை ஸரமையிடத்தினின்றும், கிடாக்கள், பசுக்கள், இருகுளம்புடைய மற்ற நாற்கால் ஜந்துக்கள் இவை யெல்லாம் ஸுரபியிடத்தினின்றும், பருந்துகள், கழுகு கள் இவை தாம்ரையிடத்தினின்றும், அப்ஸரஸ்த்ரீக ளின் கூட்டங்கள் முனியிடத்தினின்றும், தந்தசூகம் முத லிய பல வகையான ஸர்ப்பங்கள் க்ரோதவஸையிடத்தி னின்றும், வ்ருக்ஷங்களெல்லாம் இளையிடத்தினின்றும், யாது தானர்கள் ஸுரஸையிடத்தினின்றும், கந்தர் வர்கள் அரிஷ்டையிடத்தினின்றும், ஓற்றைக் குளம் புடைய நாற்கால் ஜந்துக்கள் காஷ்டையிடத்தினின் றும் உண்டாயினர். தனுவுக்கு அறுபத்தோரு பிள்ளை கள். அவர்களில் ப்ரதானர்கள் பதினெட்டுபேர்கள். அவர்களைச் சொல்லுகிறேன், கேள். த்விமூர்த்தன், சம் பரன், அரிஷ்டன், ஹயக்ரீவன், விபாவஸு, அயோமு கன், சங்குசிறன், ஸ்வர்ப்பானு, கபிலன், அருணன், புலோமன், வ்ருஷபர்வன், ஏகசக்ரன், ஸுதாபனன், தாம்ரகேசன், விரூபாக்ஷன், விப்ரசித்தி, துர்ஜயன் என்னுமிவர்களே. ஸ்வர்ப்பானுவின் புதல்வியாகிய ஸுப்ரபையென்பவளை கழுசி மணம்புரிந்தான். வ்ருஷ பர்வனுடைய பெண் சர்மிஷ்டை. அவளை யயாதிமன்ன

வன் மணம்புரிந்தான். அவன் கஹு-வுடைய பிள்ளை; மஹா பலிஷ்டன். வைஸ்வாகரனுடைய பெண்கள் உபதானவி, ஹயசிரை, புலோமை, காலகை என்று நான்கு பேர்கள். கால்வரும் மிக்க ஸௌந்தர்யமுடையவர். அவர்களில் உபதானவியை ஹிரண்யாக்ஷனும், ஹயசிரையை க்ரது ப்ரஜாபதியும் மணம்புரிந்தார்கள். கஸ்யப ப்ரஜாபதி ப்ரஹ்மதேவனால் தூண்டப்பட்டுப் புலோமை, காலகை என்னும் மற்ற வைஸ்வாகரன் பெண்களிருவரையும் மணம்புரிந்தார். அவர்களில் புலோமையின் பிள்ளைகள் பௌலோமரென்பவர். இவர்களை நிவாத கவசரென்றும் வழங்குவதுண்டு. காலகையின் பிள்ளைகள் காலகேய ரென்பவர். அவர்களிருவகையரும் யுத்தத்தில் திறமையுள்ள தானவர்களாகுர்கள். அவர்கள் அறுபதினாயிரம் பேர்கள்; யஜ்ஞங்களுக்கு விக்னம் செய்வதொழிலா யிருந்தார்கள். உன் பாட்டனாகிய அர்ஜுனன் ஒருகால் ஸ்வர்க்கலோகம் போகையில் இந்த்ரனுடைய ஆஜ்ஞையினால் தானவருவனே அவர்களெல்லோரையும் வதித்துவிட்டான். விப்ரசித்தி ஸிம்ஹிகையென்னும் தன் பார்யையிடத்தில் நூற்றொரு பிள்ளைகளைப் பெற்றான். அவர்களில் மூதல்வன் ராஹு. மற்ற நூறுபேர்களும் கேதுக்கள். இந்த ராஹு, தானவர்களில் அதமனையினும் பகவானுடைய அனுக்ரஹத்தினால் க்ரஹமாயிருக்கையைப் பெற்றான். திமி முதலியவர்களின் வம்சத்தைச் சொன்னேன். இனி அதிதியின் வம்சத்தைச் சொல்லுகிறேன், கேள். தேவர்களுக்குத் தேவனும் ப்ரபுவுமாகிய காராயணன் இவ்வதிதியின் வம்சத்தில் தனது அம்சத்தினால் அவதரித்தான். விவஸ்வான், அர்யமன், பூஷன், த்வஷ்டா, ஸவிதா, பகன், தாதா, விதாதா, வருணன், மித்ரன், சக்ரன்,

உருக்ரமன் இப்பன்னிருவரும் அதிதியின் பிள்ளைகள். அவர்களில் விவஸ்வானுடைய பத்னி ஸம்ஜ்ஞை யென்பவள். இவள் ப்ராத்ததேவனென்றும் மனுவென்றும் இரண்டு பிள்ளைகளையும் யமன் யமி என்று ஒரு புத்திரனையும் புத்திரியையும் பெற்றாள். அந்த ஸம்ஜ்ஞாதேவியே பூமியில் பெண் குதிரையாகப்பிறந்து அச்வி தேவதைகளைப் பெற்றாள். அவளே சாயையாகப் பிறந்து சனியையும் ஸாவர்ணியென்னும் மனுவையும் தபதி யென்னும் பெண்ணையும் பெற்றாள். அப்பெண்மணி ஸம்வரணனென்பவனை மணம்புரிந்தாள். அர்யமனுடைய பார்யை மாத்ருகை யென்பவள். அவர்களிடத்தினின்று வேலை செய்யுந் தன்மையுள்ள ஜனங்கள் உண்டாயின. ப்ரஹ்மதேவன் அவர்களை மனுஷ்யஜாதியாக ஏற்படுத்தினன். பூஷனுக்கு ஸந்ததியே இல்லை. அவன் தக்ஷர் மேல் கோபித்த ருத்ரனைப் பார்த்துப் பற்களைக் காட்டிக்கொண்டு சிரித்தானையால் அவனுடைய பரிவாரங்கள் பூஷனது பற்களை உடைத்தன. ஆனையால் அவன் பிஷ்டத்தையே சாப்பிடுந் தன்மையனானன். ஸதத்யர்களின் தங்கை ரசனையென்பவள்; த்வஷ்டாவின் பார்யை. அவர்களுக்கு வீர்யமுடைய விச்வரூபன் பிறந்தான். முன்பு ப்ருஹல்பதி தேவதைகளால் அவமதிக்கப்பட்டு அவர்களைத் துறந்தார். அப்பொழுது தேவதைகள் இவன் நமது சத்ருக்களாகிய ஸதத்யர்களின் மருமகனென்பதையும் பாராமல் இவ்விச்வரூபனைத் தமக்கும் புரோஹிதனாக வரித்தார்கள். ஆறுவது அத்யாயம் முற்றிற்று.

ப்ருஹஸ்பதி தேவதைகளைத் துறந்ததின் காரணத்தையும், தேவதைகள் விஸ்வரூபனைப் புரோஹிதனாக ஏற்படுத்திக்கொண்டதையும் கூறுதல்.

மன்னவன் சொல்லுகிறான்:—ப்ருஹஸ்பதி தேவதைகளுக்கு ஆசார்யனல்லவா? அவர் என்ன காரணத்தினால் தேவதைகளைத் துறந்தார்? சிஷ்யர்களான தேவதைகள் தமது ஆசார்யனாகிய ப்ருஹஸ்பதி விஷயத்தில் என்ன அக்ரமம் செய்தார்கள்? மஹானுபாவரே! அதைச் சொல்வீராக.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மூன்று லோகங்களுக்கும் ப்ரபுவாகிய தேவேந்த்ரன் ஒருகாலத்தில் கொலுமண்டபத்திற்கு வந்தான். மன்னவனே! தேவதைகளும் அஷ்டவஸுக்களும் ஏகாதச ருத்ரர்களும் த்வாதச ஆதித்யர்களும் ரிஷிகளும் விஸ்வதேவர்களும் ஸாத்யர்களும் அஸ்விதேவதைகளும் அவனைச் சுற்றிச் சூழ்ந்திருந்தார்கள். ஸித்தர்களும் சாரணர்களும் கந்தர்வர்களும் அவனைப் பணிந்தார்கள். வேதத்தை ஓதுகின்ற முனிவர்கள் அவனைத் துதித்தார்கள். வித்யாதரர்களும் அப்ஸரஸ்த்ரீகளும் கின்னரர்களும் பதகர்களும் உரகர்களும் அவனை அழகாகப் பாடினர்கள். சந்த்ர மண்டலம்போல் அழகிய வெண் கொற்றக்குடை அவனுக்குப் பிடித்தார்கள். சாமரம் விசிறி முதலிய மற்றும் பல மஹாராஜசிஹ்னங்களும் நிறைந்திருந்தன. அவன் தன் பக்கத்தில் பாதியாஸனத்தில் உட்கார்ந்திருக்கின்ற சசீதேவியுடன் மிகவும் திகழ்வுற்றிருந்தான். அப்பொழுது ப்ருஹஸ்பதி அக்கொலுமண்டபத்திற்கு வந்தார். அவர் தேவதைகளுக்கும் தேவேந்த்ரனுக்கும் கௌரவிக்கத்தகுந்தவர்; மேலான ஆசார்யன்; தேவதைகளும் அஸு-

ரர்களும் விழுந்து வணங்கும்படியான பெருமையை யுடையவர்; முனிவர்களில் தலைவர். அத்தகைய ப்ருஹஸ்பதி ஸபைக்கு வரும்பொழுது அத்தேவேந்த்ரன் எழுந்திருப்பது வணங்குவது ஆஸனமளிப்பது முதலிய உபசாரங்கள் எவையும் செய்யாமல் ஸபையில் அவர் வந்திருப்பதைப் பார்த்தும் ஐச்வர்ய மதத்தினால் பெரியோர்களின் மார்க்கத்தைக் கடந்து ஸிம்ஹாஸனத்தினின்று சிறிதும் அசையாமலே யிருந்தான். அப்பொழுது வித்வானும் ஸமர்த்தருமாகிய ப்ருஹஸ்பதி, இவன் ஐச்வர்ய மதத்தினால் கலக்கமுற்றிருக்கிறானென்பதை அறிந்து உடனே பேசாமல் புறப்பட்டுத் தன் க்ருஹத்திற்குப் போனார். அப்பொழுதே அவ்விந்த்ரன் ஆசார்யனை அவமதித்தோ மென்பதை அறிந்து ஸபையில் தன்னைத் தானே வெறுத்துக்கொண்டான். 'ஆ எனக்கு என்ன கஷ்டம் சேர்ந்தது? நான் தப்புக் கார்யம் செய்தேனல்லவா? நான் ஐச்வர்யத்தினால் மதித்து அற்ப புத்தியாகி ஸபையில் ஆசார்யனை அவமதித்தேன். விவேகமுடையவனை யிருப்பானாயின், ஸத்யலோகாதிபதியான ப்ரஹ்மதேவனுடைய ஐச்வர்யத்தையும் எவன்தான் ஆசைப்படுவான்? நான் தேவதைகளுக்கு ப்ரபுவாயிருந்தும் ஐச்வர்ய மதத்தினாலல்லவா அஸுரர்களுக்கு இயற்கையில் ஏற்பட்ட மோஹத்தில் தள்ளுண்டேன். ராஜஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்திருக்கும் ப்ரபு ஒருவர்க்கும் எழுந்து மர்யாதை செய்யவேண்டியதில்லையென்று சிலர் சொல்லுவார்கள். அவர்கள் தர்ம ஸூக்ஷ்மம் அறிந்தவரல்லர். அவர்கள் தப்பு வழியை உபதேசிப்பவர்களே. ஆகையால் அவர்கள் நரகத்தில் விழுவார்களென்பது நிச்சயம். அவர்களுடைய வாக்யத்தை நம்புகிறவர்கள் கல்லோடங்கள்போல் அமிழ்ந்து

போவார்கள். ப்ருஹஸ்பதி ஆழ்ந்த மதியுடையவர்; தேவதைகளுக்கு ஆசார்யன். ஆகையால் அவர் தான் செய்த அபராதத்தை நெஞ்சில் வைத்துக்கொள்ளமாட்டார். தான் கபடமில்லாமல் அவருடைய பாதங்களைத் தலையால் ஸ்பர்சித்து வேண்டிக் கொள்ளுகிறேன்' என்று தனக்குள் சிந்தித்தான். இங்ஙனம் அவ்விந்தரன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் மஹானுபாவராகிய ப்ருஹஸ்பதி அதை அறிந்து யோக ப்ரபாவத்தினால் க்ருஹத்தினின்று கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தார். பிறகு தேவேந்த்ரன் ப்ருஹஸ்பதியைக் காணும் உபாயத்தைப் பலவாறு ஆராய்ந்தும் அது ஏற்படாமல் எப்படி அவரைக் காணலாமென்று அதையே புத்தியில் சிந்தித்துக்கொண்டு சோகத்தினால் வருத்திச் சிறிதும் ஸுகம் அடையாதிருந்தான். அஸுரர்களெல்லாரும் அந்த ஸங்கதியைக் கேட்டுத் தமது புரோஹிதனான சுக்ரனுடைய ஆலோசனையைக்கொண்டு தடுக்க முடியாத மதமுடையவர்களாகி அத்தேவர்களை வதிக்க விரும்பி அவர்களோடு யுத்தம்செய்யத் தொடங்கினர்கள். தேவதைகள் இந்த்ரனுடன் அவ்வஸுரர்கள் தொடுத்த கூரான பாணங்களால் தலைகளும் துடைகளும் புஜங்களும் பிளவுண்டு தல வணக்கத்துடன் ப்ரஹ்மதேவனைச் சரணம் அடைந்தார்கள். மஹானுபாவனான ப்ரஹ்மதேவனும் தேவதைகள் வருத்தமுற்றிருப்பது கண்டு மிகவும் மன இரக்கமுற்று அவர்களை நல்லவார்த்தைகளால் ஸமாதானப்படுத்தி 'ஓ தேவ ஸ்ரேஷ்டர்களே! ஆ! உங்களுக்கு மஹத்தான கஷ்டம் சேர்ந்ததே! நீங்கள் பெரிய தப்புக்கார்யம் செய்தீர்கள். ப்ருஹஸ்பதி ப்ரஹ்மஞ்ஞானிகளில் சிறந்தவர்; ப்ராஹ்மண ஸ்ரேஷ்டர்; ஜிதேந்த்ரியர். அவரை நீங்கள் ஜுப்ப

வர்ய மதத்திலுல் கௌரவிக்காதிருந்தீர்கள். ஓ தேவர்களே! நீங்கள் ஸம்ருத்தர்களாயிருந்தும் ஸம்ருத்தியின்றி ஓய்ந்திருக்கிற உங்கள் சத்ருக்களிடத்தினின்று இப்பொழுது பரிபவம் கேரப் பெற்றீர்களல்லவா? இது அந்த அபராதத்தின் பலனே. தேவேந்த்ரனே! உன் சத்ருக்கள் முதலில் குருவைத் திரஸ்காரம் செய்தமையால் க்ஷீணித்ததையும், இப்பொழுது சுக்ராசார்யனைப் பக்தியுடன் ஆராதித்து ஸம்ருத்தர்களாயிருப்பதையும் காண்பாயாக. அவர்கள் சுக்ராசார்யனையே தெய்வமாகக்கொண்டு அவனை ஆராதித்துக்கொண்டு வருகின்றார்கள்; கொழுப்புடையவர்கள்; மஹாபலசாலிகள். அவர்கள் இருக்கிற நிலைமையைக் கண்டால், இன்றைக்கோ காளைக்கோ அதன் மறுநாளைக்கோ என்ஸ்தானத்தையுங் கூடக் கைப்பற்றுவார்களென்று தோன்றுகின்றது. இனி உங்களை வருத்துகிறார்களென்பதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அவர்கள் பிறர்க்குத்தெரியாதபடி ஆலோசனை செய்கின்றார்கள்; ப்ருகுகுலத்தில் பிறந்தவர்களுக்குச் சிஷ்யர்களாகி அவர்களிடத்தினின்று நீதி நுட்பங்களை யெல்லாம் ஆராய்ந்தறிகின்றார்கள். அவர்கள் ஸ்வர்க்கத்தை ஒரு பொருளாக நினைப்பார்களோ? ப்ராஹ்மணர்களையும் பகவானையும் பசுக்களையும் ஆராதிக்கிறவர்களுக்கு எவ்விதத்திலும் கெடுதி உண்டாகாது. மற்றவர் எத்தகைய ப்ரபுக்களாயிருப்பினும், அவர்க்குக் கெடுதி நேரவே நேரும். ஆகையால் நீங்கள் சீக்ரத்தில் விச்வரூபனென்னும் ப்ராஹ்மணனை அனுஸரித்து அவனைப் புரோஹிதனாக ஏற்படுத்திக் கொள்வீர்களாக. அவன் த்வஷ்டாவின் புதல்வன், ஜிதேந்த்ரியன், தபோமூர்த்தியாயிருப்பவன். அவன் உங்கள் ப்ரயோஜனத்தைக் கைகூட்டுவிப்பான். அவனுக்கு

அஸுரர்களிடத்தில் பக்ஷபாதம் முதலியன இருக்கக் கூடும். அதனல் அவன் உங்களுக்கு ஏதேனும் சிறிது அனிஷ்டம் செய்யினும் அதை நீங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும்' என்றார். இங்ஙனம் ப்ரஹ்மதேவன் மொழிந்த வசனத்தைக் கேட்ட அத்தேவதைகள் மனக்கவலை தீர்ந்து த்வஷ்டாவின் புதல்வனும் ரிஷியுமாகிய விஸ்வரூபனிடம் சென்று அவனை அணைத்துக் கொண்டு இங்ஙனம் மொழிந்தார்கள். 'ஓ விஸ்வரூபனே! நாங்கள் அதிதிகளாக உனது ஆஸ்ரமத்திற்கு வந்திருக்கிறோம். உனக்கு க்ஷேமம் உண்டாகுக. நாங்கள் உனக்குத் தந்தைகளாகவேண்டும். இக்காலத்திற்கு உரியபடி நாங்கள் ஒரு விஷயத்தை ஆசைப்படுகின்றோம். அது உன்னல் நிறைவேற வேண்டும். ஓ அந்தணர் தலைவனே! பிள்ளைகள் பிள்ளை பெற்றவராயினும் தந்தைக்குச் சுச்ரூஷை செய்யவேண்டியது அவச்யம். அதுவே அவர்களுக்கு மேலான தர்மமாம். இனி ப்ரஹ்மசாரிகளாயிருப்பவர்களுக்குப் பிதாசுச்ரூஷை மேலான தர்மமென்பதைப் பற்றிச் சொல்லவேண்டுமோ? நீ எங்களுக்குப் பிள்ளையாகவேண்டும். ப்ரஹ்மசாரியுமாயிருக்கின்றனை. நீ எங்களுக்குச் சுச்ரூஷைசெய்வது உரிய தர்மமே. மற்றும், ஆசார்யனை ஈச்வரனைப்போலவும், தந்தையை ப்ரஹ்ம தேவனைப்போலவும், உடன் பிறந்தவனை இந்த்ரனைப்போலவும், மாதாவை ஒன்றான பூமி தேவியைப்போலவும், ஆராதிக்கவேண்டும். உடன் பிறந்தவர்களைத் தயையின் மூர்த்தியாகவும், அதிதியைத் தர்மத்தின் மூர்த்தியாகவும், அப்யாகதனை அக்னியின் மூர்த்தியாகவும், ஸமஸ்த பூதங்களையும் தாணுகவும் பாவிக்கவேண்டும். அப்பனே! ஆகையால் உன் தந்தைகளாகிய நாங்கள் வருந்தி உன்னிடம் வந்திருக்கிறோம்.

எங்களுக்குச் சத்ருக்களிடத்தினின்று நேர்ந்திருக்கிற பரிபவத்தையும் அதனாலுண்டான எங்கள் மனவருத்தத்தையும் உன்தவமஹிமையால் போக்க முயன்று எங்கள் சொற்படி செய்வாயாக. நீ ப்ரஹ்மணன், ப்ரஹ்மஜ்ஞானி, ஸமஸ்தவர்ணங்களுக்கும் குரு. உன்னை நாங்கள் புரோஹிதனாயிருக்கும்படி வேண்டுகிறோம். நாங்கள் உன்தேஜஸ்ஸினால் அநாயாஸமாகச் சத்ருக்களை வெல்லுவோம். நீ எங்களிடம் அருள்புரியவேண்டும். நாங்கள் எங்கள் ப்ரயோஜனத்திற்காக நீ சிறியவனாயினும் உன் பாதங்களில் வணங்குகின்றோம். ப்ராஹ்மணஸ்ரேஷ்டனே! பெரியவன் சிறியவனை வணங்குவது நிந்தைக்கிடமென்று நினைக்கவேண்டாம். வேதாத்யயனம் முதலியவை தவிர மற்ற விஷயங்களில் தான் வயதைப்பற்றின பெருமையைப் பாராட்டுவார்களன்றி வித்யா விஷயத்தில் வயதின் பெருமையைப் பாராட்ட மாட்டார்கள். நீ எங்களுக்கு வித்யோபதேசம் செய்யும் புரோஹிதனாகையால் உன்னிடத்தில் வயதைப்பற்றின சிறுமையை ஆராயலாகாது. நீ வேதங்களை ஓதியுணர்ந்தவனாகையால் நீயே பெரியவன்' என்று மொழிந்தார்கள். மஹாதபஸ்வியாகிய அவ்விச்வரூபன் இங்ஙனம் தேவகணங்களால் வேண்டப்பெற்றுச் சிரித்துக்கொண்டே இனிய உரையுடன் அந்தத் தேவதைகளை நோக்கித் 'தர்மசீலர்கள் புரோஹிதம் செய்வதைப் பழிப்பார்கள். மற்றும், அத்தொழில் ப்ரஹ்மதேஜஸ்ஸை அழிக்கும். உலகங்களுக்கெல்லாம் ப்ரபுக்களாகிய நீங்கள் வேண்டுகிறீர்கள். மற்றும், நீங்கள் எனக்குத் தந்தை முறையில் சேர்ந்தவர்கள். தந்தையைப் பணியுந்தன்மையுள்ள என்னைப் போன்றவன் மாட்டேனென்று அதை எங்ஙனம் தடுக்க முடியும்? நான் உங்களுக்குச் சிஷ்யன். சிஷ்யனுக்குத்

குருக்களால் தூண்டப்படுகையே பெரிய புருஷார்த்த மென்று பெரியோர்கள் கூறுகிறார்கள். சப்தாதி விஷய போகங்களில் விருப்பமில்லாதவர்கள் தேஹ தாரணத் திற்கு வேண்டியதை மாத்ரமே விரும்புவார்கள். அவர் கள் கதிர்களையாவது உதிர்ந்த நெல்லுகளையாவது பொறுக்கி ஜீவிக்கும் தன்மையுடையவர்கள். அவர்க ளுக்கு அதுவே தனம். அவ்விரண்டில் ஒன்றால் அவர் கள் பஞ்ச மஹாயஜ்ஞாதி கர்மங்களைக் குறைவற அனுஷ்டித்துக்கொண்டு வருகிறார்கள். ப்ரபுக்களே! அங்ஙனம் நிக்ருதிக்கிடமான புரோஹிதத் தொழிலை நான் எங்ஙனம் பெற்றுக்கொள்வேன்? அத்தொழிலி னால் மதிகெட்டமூர்க்கன் ஸர்வாதிபதியான அடைவானன் றிக் காமபோகங்களில் விருப்பமில்லாதவன் அதை ஆதரிக்கமாட்டான். அவனுக்கு உஞ்சவ்ருத்தியே உரி யது. ஆயினும் தந்தைகளாகிய நீங்கள் வேண்டுகிறபடி யால் நான் அதைத் தடுக்கமுடியாமல் ஏற்றுக்கொள்ளு கிறேன். உங்களுக்கு நான் இது செய்வது ஒரு பெரிதல்ல. ஆகையால் நீங்கள் வேண்டினவற்றைத் தவம் முதலிய வற்றாலும் என் ப்ராணன்களாலும் நான் ஸாதித்துக் கொடுக்கிறேன்' என்றான். மஹா தபஸ்வியாகிய விச்வ ரூபன் அவர்களுக்கு இங்ஙனம் ஆகட்டுமென்று ப்ரதிஜ் ஞைசெய்து அவர்கள் வேண்டின புரோஹிதத்தொழில் ஏற்றுக்கொண்டு மிக்க மனவுக்கத்துடன் கார்யங்களை நடத்திக்கொண்டு வந்தான். ஸமர்த்தனான அவ்விச்வ ரூபன் சுக்ராசார்யனுடைய வித்யையால் பாதுகாக்கப் பட்டு அஸுரர்களிடத்தில் நிலைபெற்றிருக்கிற ஐச்வர் யத்தை நாராயண கவச மென்னும் தன்மந்த்ர வித்தை யால் ஆகர்ஷித்துத் தேவேந்த்ரனுக்குக் கொடுத்தான். ஆழ்ந்த மதியுடைய விச்வரூபன் மஹேந்த்ரனுக்கு

நாராயண கவசமென்னும் வித்யையை உபதேசித்தேன். அவ்விந்த்ரன் அதனல் பாதுகாக்கப்பட்டு அஸுர ஸைன்யங்களை யெல்லாம் அழித்து ஐச்வர்யத்தைப் பெற்றான். ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

விச்வரூபன் மஹேந்த்ரனுக்கு நாராயண கவசத்தை உபதேசித்தல்.

மன்னவன் சொல்லுகிறான்:—ஆயிரங்கண்ணனாகிய தேவேந்த்ரன் எந்த வித்யையினல் பாதுகாக்கப்பட்டுச் சத்ரு ஸைன்யங்களை யெல்லாம் விளையாடுவதுபோல் வென்று மூன்று லோகங்களுக்கும் ப்ரபுவாயிருக்கையாகிற ஐச்வர்யத்தை அனுபவித்தானே, அப்படிப்பட்ட நாராயண கவசமென்னும் மந்த்ர வித்யையை எனக்கு உபதேசிப்பீராக. இதை ஜயித்தல்லவோ தேவேந்த்ரன் யுத்தத்தில் சத்ருக்களை வென்றான்?

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—புரோஹிதனால் விரிக்கப்பட்ட விச்வரூபன் சத்ருக்களை ஜயிக்க உபாயமென்னென்று வினவுகிற தேவேந்த்ரனுக்கு நாராயண வர்மமென்னும் மந்த்ரத்தை உபதேசித்தான். அதை உனக்கு உபதேசிக்கிறேன். மனஒக்கத்துடன் கேட்பாயாக.

விச்வரூபன் சொல்லுகிறான்:—ஸ்நானாதி கர்மங்களை முடித்துக்கொண்டு பரிசுத்தனாய்க் கைகால்களை அலம்பிக்கொண்டு கையில் தர்ப்பவித்ரம் அணிந்து வடக்கு முகமாய் உட்கார்ந்து ஆசமனம்செய்து மௌனவ்ரதத்துடன் திருவஷ்டாக்ஷரம் திருத்வாதசாக்ஷரி விஷ்ணுஷடக்ஷரி இம்மந்த்ரங்களால் அங்கந்யாஸமும் கரந்யாஸமும் செய்து ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகமென்று மூன்று வகையான பயங்களில்

ஏதேனுமொன்று சேருமாயின், ஸ்ரீமந்நாராயணனை இடைவிடாமல் த்யானித்து அவனை விளங்க வெளியிடுகிற இந்நாராயண வர்மத்தை ஜபிக்கவேண்டும். பாதங்கள் முழந்தாள்கள் துடைகள் வயிறு ஹ்ருதயம் மார்பு முகம் தலை ஆகிய இவ்வெட்டு இடங்களிலும் பாதம் முதல் தலைவரையில் க்ரமமாகவாவது தலைமுதல் கால் வரையில் மாற்றியாவது திருவஷ்டாக்ஷரத்தின் எட்டு அக்ஷரங்களையும் முதலில் ப்ரணவத்தையும் கடைசியில் நமஸ்ஸையும் கூட்டிக்கொண்டு ந்யாஸம் செய்யவேண்டும். பிறகு திருத்வாதசாக்ஷரியால் கரந்யாஸம் செய்யவேண்டும். ப்ரணவம் முதல் யகாரம் வரையிலுள்ள பன்னிரண்டு அக்ஷரங்களையும் இரண்டு கைகளிலுமுள்ள ஆள்காட்டிவிரல் முதல் கான்கு விரல்களும் கட்டைவிரல்களின் இரண்டு கணுக்களும் ஆகிய பன்னிரண்டு ஸ்தானங்களிலும் ந்யாஸம் செய்யவேண்டும். பிறகு விஷ்ணு ஷடக்ஷரியால் ந்யாஸம் செய்யவேண்டும். ஹ்ருதயத்தில் ஓங்காரத்தையும், தலையில் விகாரத்தையும், சிகையில் ணகாரத்தையும், கண்களில் வேகாரத்தையும், ஸந்திகளெல்லாவற்றிலும் நகாரத்தையும், விஸர்க்கத்தோடு கூடின மகாரத்தைக் கிழக்கு முதலிய எல்லாத் திக்குக்களிலும் ந்யாஸம் செய்யவேண்டும். இம்மூன்று மந்த்ரங்களால் அங்கந்யாஸ கரந்யாஸங்களைச்செய்த புருஷன் மந்த்ரமூர்த்தியாகி மந்த்ரஜபத்திற்கு உரியவனாவான். பிறகு ஷாட்குண்ய பூர்ணனை பரமபுருஷனை த்யானிக்கவேண்டும். எத்தகைய உருவத்துடன் த்யானித்தால் தன் மனம் தெளிவுபெறுமோ, அத்தகைய உருவத்துடன் த்யானிக்கவேண்டும். அனந்தரம் ஜ்ஞானம் ப்ரபாவம் கற்செயல் இவற்றிற் கிருப்பிடமான இம்மந்த்

ரத்தைப் படிக்கவேண்டும். ஓம். தன்னைப் பற்றினருடைய வருத்தங்களைப் போக்குந் தன்மையுள்ள பரமபுருஷன் என்னை எல்லா இடங்களிலும் காப்பாறுக. கருத்மானுடைய முதுகின்மேல் பாதாரவிந்தங்களை வைத்துக்கொண்டு சங்கு சக்ரம் கேடயம் கத்தி கதை பாணம் தனுஸ்ஸு பாசம் இவ்வெட்டு ஆயுதங்களையும் எட்டுப் புஜங்களால் தரித்து யானையைக் காக்க வந்தவனும் எட்டுக் குணங்களுடையவனுமாகிய பரமபுருஷன் என்னைக் காக்க வேண்டும். மத்ஸ்ய மூர்த்தியான ஸர்வேச்வரன் ஜலத்தில் ஜலஜந்துக்களாகிற வருணபாசத்தினின்று என்னைப் பாதுகாப்பாறுக. கபடத்தினால் மாணிக்குறளுருவங்கொண்ட ஸர்வேச்வரன் என்னைப் பூமியில் எல்லா இடங்களிலும் பாதுகாப்பாறுக. உலகமெல்லாம் நிறைந்த உருவமுடைய த்ரிவிக்ரமன் என்னை ஆகாயத்தில் காக்கவேண்டும். அரண்யம் யுத்தம் முதலிய ஸங்கடங்களில் நரஸிம்ஹ மூர்த்தி என்னைக் காப்பாறுக. அவன் ஸமர்த்தன், அஸுரர் கூட்டத்தலைவர்களை அழிக்குந் தன்மையன். அவன் அட்டஹாஸம் செய்யும்பொழுது திசைகளெல்லாம் ப்ரதித்வனி செய்தன. கர்ப்பங்களெல்லாம் விழுந்தன. வராஹ உருவங்கொண்ட அந்த ஸர்வேச்வரன் என்னை மார்க்கங்களில் பாதுகாப்பாறுக. அவன் யஜ்ஞஸ்வரூபி, வழியில் தன்னை எதிர்த்து வந்த ஹிரண்யாக்ஷனை வதித்தான். அவன் தன் கோரைப்பல்லால் பூமியைப் பாதாளத்தினின்று மேலுக்கெடுத்தான. பரசுராமன் பர்வதசிகரங்களில் என்னைப் பாதுகாப்பாறுக. பரதனுக்குத் தமையனும் லக்ஷ்மணனுக்கு கூடினவனுமாகிய தாசரதிராமன் ரிதசாந்தரங்களுக்குப் போகுங்காலங்களில் என்னைப் பாதுகாப்பாறுக. நாராயணன்

அபிசாரம் முதலிய உக்ரதர்மங்களினின்றும் ஸமஸ்த மான ப்ரமாதத்தினின்றும் என்னைக் காப்பாயாக. நர வதாரம் செய்த அந்த ஸர்வேச்வரன் கர்வத்தினின் றும், தத்தாத்ரேய ரூபியான ஸர்வேச்வரன் யோகத் திற்கு விரோதம் செய்பவற்றினின்றும் என்னைக் காப் பாற்களாக. பகவான் கபிலராக அவதரித்து யோகரஹஸ் யத்தை வெளியிட்டான். அக்கபிலர் ஸித்தகணங்களுக் குத் தலைவர். அவர் ப்ராணிகளுக்கு ஜ்ஞான ப்ரதானம் செய்து கர்மபந்தத்தைப் போக்கினர். அந்த யோகேச் வரர் என்னைக் கர்மபந்தத்தினின்று காப்பாராக. ஸனத் குமார பகவான் என்னை மன்மதனிடத்தின்று காப்பா யாக. ஹயக்ரீவாவதாரம்செய்து மதுகைடபாதிகளைக் கொன்ற பகவான் தேவதைகளிடத்தில் நான் படும் அப சாரத்தைப் பொறுத்து என்னை வழியில் காப்பாயாக. பகவானை இடைவிடாமல் ஆராதிக்கின்ற நாரதமஹர்ஷி பகவதாராதனத்திற்கு நேரும் விக்னத்தினின்று என் னைக் காப்பாராக. கூர்மஸ்வரூபியான பகவான் என்னை எல்லா நரகத்தினின்றும் பாதுகாப்பாயாக. தன்வந்த்ரி ஸ்வரூபியான பகவான் அபத்யத்தினின்று என்னைக் காப்பாயாக. ருஷபஸ்வரூபியான பகவான் குளிர் காற்று முதலிய வருத்தங்களினின்று என்னைக் காப்பாயாக. அவன் வெளியிந்த்ரியங்களையும் உள்ளிந்த்ரியங்களையும் வென்ற மஹாநுபாவன். யஜ்ஞ ஸ்வரூபியான பகவான் லோகாபவாதத்தினின்று என்னைக் காப்பாயாக. பல ராமன் துர்ஜனங்களால் நேரும் உபத்ரவங்களினின்றும் ம்ருத்யுவினின்றும் என்னைக் காப்பாயாக. ஆதிரூஷ ஸ்வரூபியான பகவான் நாரபத்தையே இயற்கையாக வுடைய ஸர்ப்பங்களின் கூட்டத்தினின்று என்னைக் காப்பாயாக. வ்யாஸரூபியான பகவான் என்னை அஜ்

ஞானத்தினின்று காப்பாஞக. புத்த ஸ்வரூபியான பக வான் மதிமயக்கத்திற்கிடமான பாஷண்டகணத்தி னின்று என்னைக் காப்பாஞக. தர்மத்தைக் காக்கும் பொருட்டு அவதரித்த கல்கிரூபியான பகவான் காலத் தின் மலமான கலிகாலத்தினின்று என்னைக் காப்பா ஞக. கதையை ஏந்தின கேசவன் ப்ராதக்காலத்திலும், வேணுவைத் தரித்த கோவிந்தன் [1]ஸங்கவத்திலும், கம் பீரமான சக்தியாயுதத்தைத் தரித்த காராயணன் பூர் வாஹ்ணத்திலும், சக்ராயுதத்தைக் கையில் தரித்த விஷ்ணு மத்யாஹ்னத்திலும், கொடிய தண்ஸ்லைத் தரித்துத் தேஜஸ்ஸினால் ஜ்வலிக்கின்ற மதுஸூதனன் அபராஹ்ணத்திலும், மூன்று இடங்களில் வீற்றிருக் கின்ற மாதவன் ஸாயங்காலத்திலும், இருடீகேசன் ப்ர தோஷகாலத்திலும், அஸஹாய சூரனெனிய பத்மநாபன் ப்ரதோஷம் முதல் அர்த்தராத்ரி வரையிலுள்ள கால த்திலும் அர்த்தராத்ரி காலத்திலும், பூர்வத்ஸமென்னும் அடையாளத்தையுடைய பூர்தரன் அபரராத்ரியிலும், கட்கத்தை ஏந்தின ஜனார்த்தனன் பின்மாலை வேளை யிலும், தாமோதரன் ஸந்த்யாகாலங்களிலும், காலமூர்த் தியும் ஜகத்திற்கெல்லாம் நியாமகனுமாகிய பகவான் விடியற்காலத்திலும் என்னைக் காப்பாற்களாக. பகவா னுடைய சக்ராயுதம் ப்ரளயகாலத்து வஜ்ராயுதம்போல் கூரிய முனையுடையது. நாற்புறங்களிலும் சுற்றிக்கொண் டேயிருக்கும். அச்சக்ரம் பகவான் ப்ரயோகித்த மாத் ரத்தில் அக்னி உலர்ந்த புதரைக் கொளுத்துவதுபோல்,

---

1. ஸூர்யோதயமாய் ஆறு நாழிகை வரையில் ஸங்கவம். அதற்கு மேல் ஆறுநாழிகை பூர்வாஹ்ணம். அதற்குமேல் மத்யாஹ்னம். அதற்குமேல் அபராஹ்ணம். அதற்குமேல் ஆறுநாழிகை ஸாயங் காலம்.

சத்ரு ஸைன்யங்களையெல்லாம் அடியோடு பஸ்மம் செய்கின்றது. அதுவே அதற்கு இயற்கையாகையால் அதை காம் ப்ரார்த்திக்கவேண்டியதில்லை. கதையே! நீ வஜ்ராயுதத்தோடொத்த ஊறலையுடைய கெருப்புத் துணுக்கைகள் கிளம்பப்பெற்று ஜ்வலிக்கின்றனை. நீ பகவானுக்கு மிகவும் அன்பிற்கிடமாயிருப்பவன். கான் அந்தப் பகவானுடைய தாஸன். ஆகையால் கூஷ்மாண்டம் வைனாயகம் யக்ஷர் ராக்ஷஸர் பூதர் முதலிய க்ரஹங்களையும் மற்றுமுள்ள பலவகைச் சத்ருக்களையும் வேருடன் அழிப்பாயாக. சங்கங்களில் சிறந்த பாஞ்சஜன்யமே! நீ க்ருஷ்ணனால் ஊதப்பெற்றுப் பயங்கரமான ஓலியுடன் சத்ருக்களின் ஹ்ருதயங்களை நடுங்கச்செய்து கொண்டு யாதுதானர் ப்ரமதர் ப்ரேதர் மாத்ருகணங்கள் பிசாசர் ப்ரஹ்மராக்ஷஸர் முதலிய க்ரஹங்களையும் பயங்கரமான காட்சியுடைய மற்றும் பல க்ரஹங்களையும் பறக்கோடச் செய்வாயாக. கட்கங்களில் சிறந்த கத்தகமே! நீ கூறிய நுனியுடையவன். நீ பகவானால் ப்ரயோகிக்கப்பட்டு என்னுடையசத்ரு ஸைன்யங்களையெல்லாம் அழிப்பாயாக. சந்த்ரன்போன்ற பல கண்களையுடைய கேடயமே! பாபிஷ்டர்களான சத்ருக்களின் கண்களை மறைப்பாயாக. பாபிஷ்டமான கொடிய காட்சியுடையவர்களின் கண்களைப் பறிப்பாயாக. க்ரஹங்கள் தூமகேது முதலிய உத்பாதங்கள் மனுஷ்யர்கள் ஸர்ப்பங்கள் கோரைப்பல்லுடைய ஜந்துக்கள் பாபிஷ்டமான பூதங்கள் ஆகிய இவற்றினின்று எங்களுக்கு கேரும் பயங்களெல்லாம் பகவானுடைய காமங்கள் உருவங்கள் ஆயுதங்கள் இவற்றின் கீர்த்தனத்தினால் உடனே பறந்து போமாக. எங்கள் கன்மைக்கு விக்னம் செய்பவை எவ்வெவை உண்டோ அவை யெல்லாம் பகவானுடைய

காமோச்சாரணம் முதலியவற்றால் அழிந்துபோமாக. கருத்மான் ரதந்தரம் முதலியபல பிரிவுகளையுடைய ஸாம வேதத்தினால் துதிக்கப்படுகின்றான்; ஜ்ஞானாதி குணங்கள் நிறைந்தவன்; வேத ஸ்வரூபன்; ஸமர்த்தன்; விஷ்வக்ஸேன ஸ்வரூபன். அவன் தன்னுடைய நாமங்களைச் சொல்லுகிற எங்களை எல்லா ஆபத்துக்களினின்றும் பாதுகாப்பானாக. பகவானுடைய நாமங்களும் உருவங்களும் வாஹனங்களும் ஆயுதங்களும் அனந்தன் கருடன் முதலிய பரிவாரங்களும் ஆபரணங்களும், எங்களுடைய புத்தி இந்த்ரியம் மனம் ப்ராணன் இவற்றை எல்லா ஆபத்துக்களினின்றும் பாதுகாக்குமாக. சேதனசேதனரூபமான ஜகத்தெல்லாம் வாஸ்தவத்தில் பகவத் ஸ்வரூபமே. இவ்விஷயத்தில் எனக்கு ஸந்தேஹம் இல்லை. இது உண்மையாயின், எங்களுடைய உபத்ரவங்களெல்லாம் நசித்துப்போமாக. பரமபுருஷன் சேதனசேதன ரூபமான ஜகத்திற்கெல்லாம் காரணருவனே அந்தராத்மாவாயிருக்கும் ப்ரபாவத்தினால் ப்ராக்ருதமான தேவ மனுஷ்யாதி நாமங்களும் உருவங்களும் அவற்றின் மூலமாய் வரும் பேதமுமின்றித் தன் ஸங்கல்பரூப ஜ்ஞானத்தினால் தானுகவே ஆபரணங்களையும் ஆயுதங்களையும் ராமக்ருஷ்ணாதி உருவங்களையும் ராமக்ருஷ்ணாதி நாமங்களையும் தரிக்கின்றான். இது உண்மையாயின், அவன் என் ப்ரார்த்தனையையும் உண்மையாக்கி ஸர்வதேசங்களிலும் ஸர்வகாலங்களிலும் ஸர்வாவஸ்தைகளிலும் ஆயுதங்கள் முதலிய ஸர்வ ஸ்வரூபத்தினாலும் எங்களைப் பாதுகாப்பானாக. நரஸிம்ஹரூபியான பகவான் திக்குக்களிலும் விதிக்குக்களிலும் மேலும் கீழும் உள்ளும் புறமும் கற்புறத்திலும் பாதுகாப்பானாக. அவன் மஹத்தான தனது அட்டஹாஸ

கோஷத்தினால் தன் பக்தர்களின் பயத்தைப் போக்குந் தன்மையன்; மற்றும், தன் தேஜஸ்ஸினால் ஸௌர்யன் முதலிய மற்றதேஜஸ்ஸுக்களையெல்லாம் விழுங்குந் திறமையுடையவன்' என்று நாராயணவர்மத்தை மொழிந்தருளவும் அவ்விஸ்வரூபன் தேவேந்த்ரனைப் பார்த்து 'ஓ தேவேந்த்ரனே! நாராயண வர்மத்தை இங்ஙனம் உனக்கு மொழிந்தேன். இக்கவசத்தை அணிந்து ஸுகமாகவே அஸுரக்கூட்டத் தலைவர்களையெல்லாம் வெல்லுவாய். இதை அநுஸந்திக்கும் புருஷன் எவனைக்கண்ணால் பார்க்கிறானே காலால் தொடுகிறானே அவன் உடனே எத்தகைய பாபத்தினின்றும் விடுபடுவான். இம்மந்த்ர வித்யையைத் தரிக்கும் புருஷனுக்கு ராஜாக்கள் திருடர்கள் க்ரஹங்கள் முதலியவற்றினின்றுவது எவ்விடத்திலும் எவற்றினின்றும் பயம் உண்டாகாது. முன்பு ஒரு காலத்தில் கௌசிககோத்ரத்தில் பிறந்த ஒரு ப்ராஹ்மணன் இவ்வித்யையை உபதேசமூலமாய்ப் பெற்று மறவாமல் அநுஸந்தித்துக்கொண்டு வந்தான். அவன் யோகதாரணையால் தன் சரீரத்தை ஒரு மருபூமியில் துறந்தான். ஒருகால் சித்ரரதனென்னும் கந்தர்வராஜன் ஸ்த்ரீகளுடன் விமானத்தின்மேல் ஏறிக்கொண்டு அந்த ப்ராஹ்மணன் விட்ட சரீரத்திற்கு நேராக ஆகாயத்தில் சென்றான். அக்கந்தர்வராஜன் உடனே அந்த ப்ராஹ்மணன் சரீரத்தை விட்ட இடத்தில் விமானத்துடன் தலைகீழாக விழுந்தான். அவன் எழுந்து வாலகில்ய ரிஷியின் வசனத்தினால் கௌசிக ப்ராஹ்மணனுடைய எலும்புகளை எடுத்துக்கொண்டு போய் ப்ராசீஸரஸ்வதியென்னும் நதியில் போட்டு ஸ்நானம் செய்து இவ்வித்யையின் மஹிமைக்கு வியப்புற்றுத் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தான். பயம் நேருங்

காலத்தில் இக்காராயண வர்மத்தைக் கேட்கிறவனும் இதை ப்ரீதியுடன்கேட்டு அனுஸந்திக்கிறவனும் எல்லாப் பயங்களினின்றும் விடுபடுவார்கள். கூஷ்மாண்டம் முதலிய பூதங்கள் எவையும் அவர்களைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டா' என்று மொழிந்தான்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—தேவேந்த்ரன் விஸ்வரூபனிடத்தினின்று இவ்வித்யையைப் பெற்று இதன் ப்ரபாவத்தினால் யுத்தத்தில் அஸுரர்களையெல்லாம்வென்று த்ரிலோகாராஜ்ய லக்ஷ்மியைப் பெற்று அனுபவித்தான். எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

இந்த்ரன்விஸ்வரூபனை வதித்தலும், த்வஷ்டா வ்ருத்ராஸுரனைப் பிறப்பிக்க அவனிடத்தில் தேவதைகள் பயந்து ஸ்ரீமஹாவிஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்தலும்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—பரத வம்சாலங்காரனே! அவ்விஸ்வரூபனுக்கு ஸோமபீதமென்றும் ஸுராபீதமென்றும் அன்னதமென்றும் மூன்று தலைகள் இருந்தனவென்று வேதத்தில் கேட்டிருக்கிறோம். அவனுக்குத் தேவதைகள் தக்ஷகுலத்தில் சேர்ந்தவர்கள். அவ்விஸ்வரூபன் தேவதைகளுக்கு ஹவிர்ப்பாகம் கொடுக்கும்பொழுது இந்த்ரனுக்கிதுவென்றும் அக்னிக்கிதுவென்றும் வணக்கத்துடன் ப்ரத்யக்ஷமாக உரக்க மொழிந்தான். அவனே மாதாவிடத்திலுள்ள ஸ்னேஹத்தினால் மாமன்மார்களான அஸுரர்களுக்கும் தேவதைகளுக்குத் தெரியாதபடி. ரகஸ்யமாகவே ஹவிர்ப்பாகம் கொடுத்து அதை அவர்களுக்குச் சேர்ப்பித்தான். அவன் கபடமாகத் தேவதைகளை வஞ்சித்துச் செய்தகார்யத்தை இந்த்ரன் கண்டு இவன் இன்

ணம் என் செய்வாயேனென்று பயந்து சீக்ரமாக அவன் தலைகளை அறுத்தான். அவனுடைய லோமபீதமென் னும் தலை அறுப்புண்டு கபிஞ்சலமென்னும் பக்ஷியா யிற்று. ஸுராபீதமென்னும் தலை கலவிங்கமென்னும் பக்ஷியாயிற்று. அன்னதமென்னும் தலை திந்திரியென் னும் பக்ஷியாயிற்று. விஸ்வரூபன் ப்ராஹ்மணனைக யால் அவனைக் கொன்றமையால் ப்ரஹ்மஹத்யாரூப மான பாபம் உருவத்துடன் வந்து நிற்க, தேவேந்த்ரன் அதைப்போக்கிக் கொள்ள வல்லனாயினும் அஞ்சலி யினால் அதை ஏற்றுக்கொண்டான். அவ்விந்த்ரன் ஸம் வத்ஸரம் வரையில் அப்படியேயிருந்து அதன் பிறகு ஜனபதம் தீரும்பொருட்டுத் தன் பாபத்தை நான்கு பாகங்களாகப் பிரித்துப் பூமி ஜலம் வ்ருக்ஷம் ஸ்த்ரீ கள் ஆகிய நான்கு இடங்களில் ஒவ்வொன்றில் ஒவ் வொரு பாகமாக வைத்தான். அவற்றில் பூமி பள்ளங் கள் தாமே மறையவேண்டுமென்று வரம்பெற்று ப்ரஹ்மஹத்தையின் நான்கிலொரு பாகத்தை ஏற்றுக் கொண்டது. அந்த ப்ரஹ்மஹத்தையே பூமியில் களர் நிலமாய்ப் புலப்படுகின்றது. வ்ருக்ஷங்கள் எத்தனை தரம் வெட்டினாலும் தளிர்க்கவேண்டுமென்னும் வரம்பெற்று அந்த ப்ரஹ்மஹத்தையில் ஒரு பாகத்தை ஏற்றுக் கொண்டன. அதுவே அந்த வ்ருக்ஷங்களில் பிசிட்ரூப மாய்ப் புலப்படுகின்றது. ஸ்த்ரீகள் ப்ரஸவம் வரையிலும் ஸம்போகிக்கையாகிற வரத்தைப்பெற்று ப்ரஹ்மஹத் தையின் பாகத்தை ஏற்றுக்கொண்டார்கள். அந்தப் பாபமே அவர்களிடத்தில் மாதக்தோறும் ரஜோரூப மாய்ப் புலப்படுகின்றது. ஜலம் தான் எங்கும் நிறைந் திருக்கையாகிற வரத்தைப் பெற்று ப்ரஹ்மஹத்தையின் பாகத்தை ஏற்றுக்கொண்டது. அந்தப்பாபமே ஜலத்

தில் நீர்க்குமிழியாகவும் நுரையாகவும் புலப்படுகின்றது. பின்பு த்வஷ்டா தன் புதல்வனுகிய விஸ்வரூபன் தேவேந்த்ரனல் மாண்டமையால் அவன் மேல் வைரங் கொண்டு இந்த்ரனுக்குச் சத்ருவாய் வளர்ந்து வருவா யாக. சீக்ரத்தில் சத்ருவாகிய 'இந்த்ரன வதிப்பாயாக' என்று இந்த்ரன ஓழிக்க விரும்பி ஹோமம் செய்தான். உடனே தக்ஷிணாக்னியினின்று பயங்கரமான காட்சி யுடைய ஓரு அஸுரன் கிளம்பினன். அவன் உலகங்க ளெல்லாம் அழியும்படியான ப்ரளயகாலத்தி லுள்ள ம்ருத்யுவைப் போன்றிருந்தான். அவன் தினந்தோறும் நாற்புறங்களி லும் ஓரு பாணத்தளவு வளர்ந்துவந்தான். அவன் எறிகின்ற பர்வதம்போ லும் ஸந்த்யா காலத்து மேகம்போ லும் பேரொளியுடன் திகழ்ந்தான். அவ னுடைய தாடிமீசைகளின் நுனிகள் பழுக்கக்காய்ச்சின செம்பின் நிறமுடையவைகளாயிருந்தன. அவன் கண் கள் மத்யாஹ்ன காலத்து ஸூர்யன்போல் பயங்கர மாக ஜ்வலித்துக்கொண்டிருந்தன. அவன் மூன்று நுனிகளுடன் ஜ்வலிக்கின்ற சூலத்தில் ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையி லுள்ள வஸ்துக்களெயெல்லாம் கோத் துக்கொண்டு கூத்தாடுவதும் உரக்க அட்டஹாஸம் செய்வதும் பாதத்தி னால் பூமியை நடுங்கச்செய்வதுமா யிருந்தான். மற்றும், அவனது முகம் மலைச்சிறிவு போல் அகன்று ஆழ்ந்து ஆகாயத்தைப் பருகுவது போலும் காக்கினல் கக்ஷத்ரங்களை கக்குவதுபோலும் மூன்று லோகங்களையும் விழுங்குவதுபோ லும் தோன் றிக் கோரைப்பற்கள் அமைந்து மிகவும் பயங்கரமா யிருந்தது. அத்தகைய முகத்துடன் அடிக்கடி கோட் டாவி விடுகின்ற அவ்வஸுரனைப் பார்த்து உலகத்தி லுள்ளவர் அனைவரும் பயந்து பத்துத்திசைகளி லும்

ஓடிப்போயினர். த்வஷ்டாவின் தவமே அங்ஙனம் அஸுரனென்னும் உருவங்கொண்டு இவ்வுலகங்களெல்லாம் பரந்து நின்றது. ஆகையால் அவன் வ்ருத்ரனென்று பேர்பெற்றான். அவன் பாபிஷ்டன்; இந்த்ரன் முதலிய லோகபாலர்களுக்கெல்லாம் விரோதியாகி ஒருவர்க்கும் பொறுக்கமுடியாமல் மிகவும் கொடியனாயிருந்தான். இந்த்ரன் முதலிய தேவஸ்ரேஷ்டர்கள் அனைவரும் ஸைன்யங்களுடன் கூடித் தத்தமது திவ்யாயுதங்களாலும் திவ்யாஸ்த்ரங்களாலும் அவனை அடித்தார்கள். அவர்கள் அவனிடத்தில் உபயோகப்படுத்தாத ஆயுதமாவது அஸ்த்ரமாவது எதுவுமே இல்லை. அவ்வஸுரன் அவற்றையெல்லாம் அப்படியே விழுங்கினான். அப்பால் அத்தேவர்கள் அனைவரும், ஆ! இதென்ன பலமென்று வியப்புற்று அவ்வஸுரனால் தமது தேஜஸ்ஸெல்லாம் பறியுண்டு வருந்தி, ஆத்மாக்களுக்கு அந்தராத்மாவாகிய ஆதிபுருஷனை மனவுக்கத்துடன் துதித்தார்கள். 'காற்று ஆகாயம் அக்னி ஜலம் பூமி இவைகளும் மூன்று லோகங்களிலுமுள்ள ப்ரஹ்மதேவன் முதலிய காங்களனைவரும் எவனுடைய கட்டளைக்குட்பட்டுப் பயந்து எவனையே ஆராதிக்கின்றனரோ, ப்ரஸித்திபெற்ற ம்ருத்யுவும் எவனிடத்தினின்று பயப்படுகின்றானே, அத்தகைய பரம புருஷனைக் காட்டிலும் மற்ற எவன்தான் நமக்கு ரக்ஷகனுவான்? அவன் இயற்கையில் ஏற்பட்ட மஹிமையுடையவனாகையால் வியப்பற்றவன்; அவாப்த ஸமஸ்தகாமன்; மஹாநந்தஸ்வரூபனாகிய தன்னைத் தான் அனுபவிக்குந் தன்மையன்; ராகம் முதலிய தோஷங்களற்றவன்; பரிதாபம் முதலிய ஊர்மிகள் தீண்டப்பெறாதவன்; ஸர்வேச்வரன்; தன்னைப் பற்றினவர்களைப் பாதுகாக்க வல்லவன். அத்

தகையனான பரமபுருஷனைத் தவிர மற்றொருவனைச் சரணம் அடைவானாயின், அவன் ஒன்று மறியாத மூடனே; அவன் நாயின் வாலைப்பிடித்துக்கொண்டு ஸமுத்ரம் தாண்ட விரும்புகிறவனேடொப்பான். மத்ஸ்யத்தின் உருவங்கொண்ட அந்தப் பரமபுருஷனுடைய கொம்பில் பூமியாகிற ஓடத்தைத்தக்கட்டி ஸத்யவ்ரதனென்னும் மநு ஸங்கடத்தைக் கடந்தான். அத்தகைய மத்ஸ்ய ரூபியான பகவான் தன்னைச் சரணம் அடைந்தகம்மையும் மஹத்தான வ்ருத்ராஸுர பயத்தினின்று ரக்ஷிப்பான். இது நிச்சயம். முன்பு ஜகத்ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் ப்ரஹ்மதேவனும் பயங்கரமாய் வீசுகின்ற காற்றின் வேகத்தினால் கிளம்பும் அலைகளின் கோஷத்தினால் மிகவும் பயங்கரமான ப்ரளய ஜலத்தில் தாபிகமலத்தினின்று விழும்படியான தசையில் அகப்பட்டு ஒருவரும் ஸஹாயமின்றித் தனியனாகிப் பயப்படுகையில், பகவானால் அப்பயத்தைக் கடந்தான். அவனே கம்மையும் இப்பயத்தினின்று பாதுகாப்பானாக. பகவான் தனக்கு இணையும் எதிருமில்லாதவன். தனிப்பெருங் கடவுளாகிய அப்பரமபுருஷன் தன் ஸங்கல்பஜ்ஞானத்தினால் கம்மைப் படைத்தான். மற்றும், நாம் இப்பகவானால் அருள்புரியப்பெற்று ஜகத்தை யெல்லாம் படைத்தோம். அவன் நமது ஹ்ருதய குஹையில் இருந்துகொண்டு கம்மை நியமித்துக் கொண்டிருப்பினும் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை நாம் காணமுடியாமலே யிருக்கிறோம். நாம் கம்மை அவனுக்குட்படாத ஸ்வதந்த்ர ப்ரபுக்களென்று அபிமானித்துக் கொண்டிருக்கிறோம். கம்மைக் காக்கும்பொருட்டு அவன் கம்மை எப்பொழுதும் தன்னுடையவர்களென்று அபிமானித்து கம்மைப் பாதுகாக்கும்பொருட்டு யுகங்கள்

தோறும் தன் ஸங்கல்பத்திலல் தேவர் திர்யக்கு மனுஷ்
யர் முதலிய ஜாதிகளில் தன் ஸங்கல்பத்திலல் திரு
வுருவங்களைக் கொண்டு அவதரித்துச் சத்ருக்களால்
மிகவும் பீடிக்கப் பட்டிருக்கின்ற நம்மைப் பாது
காத்தான். அவன் தன் பக்தர்களிடத்தில் மிகுந்த வாத்
ஸல்ய முடையவன்; நமக்குத் தெய்வம்; காரண தசையை
அடைந்த ஸூக்ஷ்ம சேதன சேதனங்களையும் கார்ய
தசையை அடைந்த ஸ்தூல சேதன சேதனங்களையும்
சரீரமாகவுடையவன்; சேதன சேதனங்களைக் காட்டி
லும் விலக்ஷணமானவன்; அவன் பரன்; தன்னைப் பற்றி
னர்களைப் பாதுகாக்க வல்லவன். தேவதைகளாகிய
நாமெல்லோரும் அவனையே சரணம் அடைவோமாக.
நாம் செய்யவேண்டியது இவ்வளவே. நம்மைத் தன்
னுடையவர்களென்று அங்கீகரித்திருக்கிற அவன்
நமது சத்ருக்களைப் போக்கி நமக்கு ஸுகத்தை விளைப்
பான்; மஹானுபாவன்; தன் பக்தர்களைப் பாதுகாப்ப
தில் தீக்ஷிதத்துக் கொண்டிருப்பவன்' என்று துதித்
தார்கள். மஹாராஜனே! இங்ஙனம் அத்தேவர்கள்
துதித்துக் கொண்டிருக்கையில் மேற்குத்திக்கில் சங்
கம் சக்கரம் கதை இவற்றைத் தரித்த பகவான் தோன்
றினன். அவன் அப்போதலர்ந்த செந்தாமரை மலர்
போன்ற திருக்கண்க ளுடையவன். ஸுநந்தர் முதலிய
பதினாறு புருஷர்கள் அவனைப் பணிந்து வந்தார்கள்.
அவர்கள் ஸ்ரீவத்ஸம் கௌஸ்துபம் தவிர மற்ற எல்லா
விதத்திலும் பகவானேயொத்திருந்தார்கள். அத்
தகைய பரமபுருஷனைக் கண்டு அவ்வாகந்தத்திலல்
தழுதழுத்து எல்லோரும் பூமியில் தண்டம்போல்
விழுந்து நமஸ்கரித்து மெல்ல எழுந்து இங்ஙனம்
ஸ்தோத்ரம் செய்தார்கள்.

தேவதைகள் சொல்லுகிறார்கள்:—யஜ்ஞாதி ஸத் கர்மங்களெல்லாம் உன்னுடைய ஆராதன ரூபமாய்க் கொண்டு பரம புருஷார்த்தமான மோக்ஷத்தையும் விளக்கின்றன. யஜ்ஞமே உன்னுடைய ஸ்ருஷ்டி ஸாமர்த் யம். நீயே யஜ்ஞாதி கர்மங்களை அனுஷ்டிப்பதற்குரிய ஆயுளைக் கொடுப்பவன். யஜ்ஞாதிபலன்களைக் கொடுத்து அனிஷ்டங்களைப் போக்கிப் பாதுகாப்பவன் நீயே. பக்தர்களைப் பாதுகாப்பதில் விளம்பத்தைப் பொறுக்க முடியாமல் ஸர்வகாலமும் ஸுதர்சன சக்ரத்தை ஏந் திக்கொண்டிருக்கின்றனை. உன் காமம் நினைத்த மாத் ரத்தில் மஹத்தான பயத்தையும் போக்குந் திறமை யுடையது. இத்தகைய உனக்கு நமஸ்காரம். நீ ஸ்வர்க் கம் மோக்ஷம் நரகமென்கிற மூன்று கதிகளுக்கும் நிர்வாஹகன். நீ ப்ரக்ருதி புருஷர்களைக் காட்டிலும் விலக்ஷணன். ஜகத்காரணன்! அத்தகைய உன் ஸ்வ ரூபத்தை உன் ஸ்ருஷ்டிக்கு உட்பட்டவனும் உன்னால் கொடுக்கப்பட்ட ஜ்ஞானசக்திகளை யுடையவனுமாகிய என்னைப் போன்ற புருஷன் அறியவல்லனாகமாட்டான். ஓம். ஷாட்குண்ய பூர்ண! நாராயண! வாஸுதேவ! ஆதிபுருஷ! மஹாபுருஷ! மஹானுபாவ! பரமமங் கள! பரமகல்யாண! பரமகாருணிக! கேவல ஜகத தார! லோகைகநாத! ஸர்வேச்வர! லக்ஷ்மீநாத! பரமஹம்ஸ பரிவ்ராஜகர்கள் மேலான ஆத்மஸமாதி யோகத்தினால் உன்னை ஆராய்கின்றார்கள். தெளிந்த பக்தி யோகத்தினால் அஜ்ஞானமாகிற கதவைத் திறந்து மனத்தைச் சுத்திசெய்து ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்த வர்களுக்கு அவ்வாத்மாவுக்கு அந்தர்யாமியும் மஹா நந்தஸ்வரூபனுமாய் நீ தோற்றுகின்றனை. இத்தகைய நீ உலகங்களைப் படைப்பதும் பாதுகாப்பதும் அழிப்

பதுமா யிருக்கின்றனை. இது உனக்கு வினையாட்டே யன்றி வேறன்று. இந்த உன் வ்யாபாரம் உலகத்தி லுள்ளவர் வ்யாபாரங்களைக் காட்டிலும் விலக்ஷணமா யிருக்கையால் அறியமுடியா திருக்கின்றது. நீ வெறுரு ஆதாரத்தையும் எங்களைப்போன்ற ஸஹா யத்தையும் எதிர் பாராமல் ஸத்வாதி குணங்கள் தீண்டப் பெறுமல் எவ்வகை விகாரங்களுக்கும் இட மாகாமல், பிரித்தறிய முடியாதபடி மறைத்திருக்கிற சேதனு சேதனங்களோடு கூடின உன்னை யொழிய வேறுரு சாணியில்லாத இவ்வுலகமாகப் படைப்பதும் பாதுகாப்பதும் அழிப்பதும் செய்கின்றனை; இங்ஙனம் செய்கின்ற நீ கர்மத்திற்குட்பட்ட ஸம்ஸாரி ஜீவனைப் போல் ஸத்வாதி குணங்களின் கார்யமான ப்ரபஞ்சத் தில் விழுந்து ஸாத்விகம் ராஜஸம் முதலிய கர்மங்களை யும் அவற்றின் பலன்களையும் ஏற்றுக்கொள்கின்றனையா? அல்லது ஆத்மஸ்வரூபத்தின் உண்மையை உணர்ந்து அவ்வாத்மானுபவத்தில் நிலைநின்று அந்தந்த வஸ்துக் களின் நிலைமையை உள்ளபடி அறிந்த ஞானிபோல் உதாஸீனமா யிருக்கின்றனையா? என்று உன் நிலைமையை நாங்கள் எவ்விதத்திலும் அறியமுடியா திருக்கிறோம். நீ ஸம்ஸாரி ஜீவனைப்போல் ஸ்ருஷ்டி முதலிய கார்யங் களைக் கர்மத்திற்குட்பட்டுச் செய்பவனல்லை. ஞானியைப் போல் கேவலம் உதாஸீனமா யிருப்பவனுமல்லை. உன் னிடத்தில் கர்த்ருத்வமும் உதாஸீனத்வமுமாகிய இரண்டும் இருக்கின்றன. ஆகையால் உன் நிலைமை விலக்ஷணமா யிருக்கின்றது. இவ்விரண்டு தன்மை களும் ஒன்றோடொன்று சேராதவைகளே யாயினும், விரோதமில்லை. உன்னிடத்தில் இரண்டும் ஸம்பவிக்க இடமுண்டு. நீ ஷாட்குண்ய பூர்ணன்; கணக்கில்லாத

கல்யாண குணகணங்களுடையவன்; ஸமஸ்த சேதனர் களுக்கும் அந்தர்யாமியாயிருந்து அவர்களை நியமிக் கின்றனை. நீ அச்சேதனர்களோ டொக்க நினைக்க முடி யாத மஹிமையுடையவன். உன்னருளுக்கு இலக்கா காத பல வாதிகள் உன்னை அறியப்புகுந்து ஸந்தே ஹித்து இப்படியோ அப்படியோ என்று தர்க்கித்து ஓருவாறு நிச்சயித்துச் சில ப்ரமாணபாலங்களைக் கொண்டு அவரவர்க்கு அவ்வப்பொழுது தோன்றின படி எழுதுவித்த கள்ளப் பொய்ந்நூல்களின் பழுக்கத் திலில் மனம் கலங்கித் தாம் நிச்சயித்ததே பொரு ளென்று துராக்ரஹங்கொண்டு விவாதப்படுகிறார்கள். நீ ப்ராக்ருதமான தோஷங்கள் எவையும் தீண்டப்பெறு தவன். ப்ரளயதசையில் இந்த ப்ரபஞ்சத்தை உன் னிடத்தில் அடக்கிக்கொண்டு நீயொருவனே யிருக் திருக்கின்றனை. நீ உன் மாயைக்கு உட்படாமல் மறைந் திருக்கின்றனை. இத்தகைய உன்னிடத்தில் எந்தப் பொருள்தான் சேராது? உன்னிடத்தில் பொருந்தாத இரண்டு தன்மைகள் எவையுமே இல்லை. கயிற்றைப் பார்த்து ஸர்ப்பமென்று நினைப்பவர்களின் நினைவை அக் கயிறு தடுக்காதிருப்பதுபோல், உன்னைப்பற்றி விவா தப்படுகிறவர்களின் அபிப்ராயத்தைத் தடுக்காமல் நீ வெறுமனே யிருக்கின்றனை. ஆகையால் உன்னுடைய பெருமையை அறியாமல் சிலர் உன்னிடத்தில் சிலவற் றைச் சேராதவையாக நினைக்கிறார்களேயன்றி மற் றில்லை. நீ தேவர் முதலிய ஸமஸ்த வஸ்துக்களிலும் நிறைந்திருக்கின்றனை. ஆயினும் அவற்றின் தோஷங் கள் தீண்டப்பெறாமல் நிர்விகார ஸ்வரூபனு யிருக்கின் றனை. அசேதனத்தோடு கூடின ஸமஸ்த ஜீவாத்மாக் களும் உனக்குச் சரீரமா யிருக்கின்றனர். ஆகையால்

ஸிகாரங்களெல்லாம் அந்தச் சேதனு சேதனங்களைச் சேர்ந்தவைகளேயன்றி உனக்குக் கிடையாது. நீ ஸர்வேஸ்வரன்; ஸர்வஜகத்காரணபூதன். நீயே சேதனரூபமான இந்த ப்ரபஞ்சமாகத் தோற்றுகின்றனை. இத்தகையன் நீ யொருவனே யன்றி உனக்கு ஸடாவது எதிராவது எதுவுமே இல்லை. ஓ பகவானே! மதுஸூதனு! ஒரு ப்ரயோஜனத்தையும் எதிர் பாராமல் உன்னிடத்தில் பக்தி செய்யுந்தன்மையுடைய பெரியோர்கள் இத்தகையனை உன் பாதாரவிந்தஸேவையை எங்ஙனம் துறப்பார்கள்? அவர்கள் புருஷார்த்தமின்னதென்று நிச்சயித்து அறியும் பண்டிதர்கள்; உன்னையே ப்ரீதிக்கிடமுள்ள கண்பனைக் கொண்டவர்கள்; ராகத்வேஷாதி தோஷங்களின்றிப் பிறருடைய கார்யங்களை நிறைவேற்றுந் தன்மை யுடையவர்கள். அவர்கள் உன் மஹிமையாகிற ஸமுத்ரத்தில் சிறு துளியை ஒருகால் அனுபவித்து அவ்வளவில் தம்மனத்தில் மஹாநந்தம் பெருகப்பெற்று ஐஹிக ஸுகாபாஸங்களையும் ஆமுஷ்மிக ஸுகாபாஸங்களையும் உதறியிருப்பவர்கள்; ஸமஸ்த பூதங்களுக்கும் ப்ரியனும் கண்பனும் ஸர்வாந்தராத்மாவும் ஷாட்குண்ய பூர்ணனுமாகிய உன்னிடத்தில் நிலைநின்று களிக்கின்ற மனமுடையவர்கள். இத்தகைய பெரியோர்கள் மீளவும் இந்த ஸம்ஸாரத்தில் திரும்ப வொட்டாமல் மோக்ஷத்தைக் கொடுக்கவல்ல உன் பாதாரவிந்த ஸேவையை எங்ஙனம் துறப்பார்கள்? நீ மூன்று லோகங்களையும் உட்புகுந்து நியமிக்கின்றனை. அவற்றிற்கு ஆதாரமாயிருக்கின்றனை. நீ இவ்வுலகங்களை யெல்லாம் மூன்று அடிகளால் அளந்தனை. சந்த்ரன் ஸூர்யன் அக்னி இம்மூவருமும் உன்னுடைய கண்கள். உன் வைபவம் மூன்று லோகங்களின்

மனத்தையும் பறிக்குமாறு மிகவும் அழகாயிருக்கின்றது. தைத்யர் தானவர் மனுஷ்யர் முதலியவர் அனைவரும் உன் விபூதிகளே. ஆகையால் அவர்களை நீ வதிக்க நினைப்பது யுக்தமன்று. ஆயினும் அவர்களுக்கு இது அபிவ்ருத்தி காலமன்றென்று நினைத்து, முன்பு உன் ஸங்கல்பத்தினால் தேவர் மனுஷ்யர் ஜலஜந்துக்கள் முதலிய ஜாதிகளில் அவதரித்துச் சத்ருக்களை அவரவர்களுடைய அபராதத்திற்குத் தகுந்தபடி தண்டித்தனை. பகவானே! தப்பு வழியில் செல்பவர்களைத் தண்டிக்குந் தன்மையனே! உனக்குத் திருவுள்ளமாயின், இந்த த்வாஷ்ட்ரனையும் வதிப்பாயாக. அப்பனே! நாங்கள் உன்னுடையவர்கள். நீ உன் திவ்யமங்கள விக்ரஹத்தைக் காட்டி எங்களை அங்கீகரித்தனையல்லவா? உன்னிணையடிகளை த்யானிக்கையால் எங்கள் மனம் ஸ்வாதீனமாகி நாங்கள் வேறு விஷயங்களில் போக வேண்டுமென்றாலும் போகவொட்டாமல் விலங்குபோல் தடுக்கின்றது. அருள் நிறைந்து தெளிந்து அழகிய புன்னகையோடு கூடின கண்ணேணக்கத்தினாலும் கருணையால் பெருகி வருகின்ற இனிய உரையாகிற அம்ருத தாரையாலும் எங்கள் தாபத்தைத் போக்குவாயாக. பகவானே! நாங்கள் உனக்கு அறிவிக்கவேண்டிய ப்ரயோஜனம் என்ன விருக்கின்றது? அக்னிக்கு அதன் துணைக்கையால் ஆகவேண்டிய ப்ரயோஜனம் உண்டோ? உன் மாயை ஆச்சர்யமானது. இவ்வுலகங்களின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குரியபடி பரிணமங்களை அடைகின்ற அம்மாயை உன் விநோதத்திற்கிடமாயிருக்கின்றது. நீ ஸமஸ்த ஜீவ ஸமூஹங்களுக்குள் ஹ்ருதயங்களில் ப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தினாலும் வெளியில் ப்ரக்ருதி ஸ்வ

ரூபத்திலும் தேசம் காலம் தேஹம் அவஸ்தை இவற்றிற்குத் தகுந்தபடி ஸுகம் துக்கம் முதலிய ஸமஸ்த ஜ்ஞானங்களையும் விளத்துக்கொண்டு நிறைந் திருக்கின்றனை. ஜீவாத்மாக்களுடைய மனோபாவங் களுக்கெல்லாம் நீ ஸாக்ஷியாயிருக்கின்றனை. நீ தூய காசத்தைச் சரீரமாகவுடையவன், ஸ்வயம்ப்ரகாசமும் எல்லாவற்றையும் விளக்குவதும் அபரிச்சின்னமுமான ஜ்ஞானமே வடிவமாகப் பெற்றவன். பரப்ரஹ்ம மென் னும் பேர் உனக்கே முக்யமானது. நீ மூன்று லோகங் களையும் உள்புகுந்து தரிக்கின்றனை. நாங்கள் உன் னுடைய ஸங்கல்பத்திலேற்பட்ட நிலைமையுடையவர்கள். எங்களால் உனக்கு ஆகவேண்டிய ப்ரயோஜனம் ஒன்று மில்லை. ஆகையால் நாங்கள் எதற்காக வந்தோமோ அதை நீயே நிறைவேற்றுவாயாக. ஸதத்ய தானவாதி களுக்கும் அந்தராத்மாவாயிருந்து அவர்களுடைய நிலைமையை நீயே கடத்துகின்றனை. உனக்கு நாங்கள் எல்லோரும் ஸமானர்களே. ஆயினும் நாங்கள் பர மகுருவாகிய உனது பாதாரவிந்தங்களின் நீழலைப்பற்றி யிருக்கிறோம். அந்நீழல் பலவகைப் பாபங்களால் விளை யும் ஸம்ஸார பரிஸ்ரமங்களையெல்லாம் போக்குந் தன் மையுடையது. ஆகையால் நீ எங்கள் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். ஓ ஜகதீசா! இந்த த்வஷ்டா வின் புதல்வனாகிய வ்ருத்ராஸுரன் மூன்று லோகங் களையும் விழுங்குகின்றான். க்ருஷ்ணா! இவன் எங்கள் தேஜஸ்ஸுக்களையும் அஸ்த்ரங்களையும் ஆயுதங்களை யும் விழுங்கினன். ஆகையால் இவனை வதிப்பாயாக. நீ ஸமஸ்த தோஷங்களும் தீண்டப்பெறாத பரிசுத்தன். ஹ்ருதய புண்டரீகத்தில் வாஸம் செய்கின்றனை; ஜீவாத் மாக்களுடைய சித்த வ்ருத்திகளுக்கு ஸாக்ஷியா யிருக்

கின்றனை. ஆகையால் எங்கள் வருத்தம் உனக்கு நன் ரூகத் தெரியும். நீ பூமியின் பாரத்தைப்போக்கி ஸுகத் தைக் கொடுப்பவன். உன் புகழ் பரிசுத்தமானது. நாங் கள் வேறு முயற்சிகளை யெல்லாம் துறந்து உன்னையே சரணம் அடைந்திருக்கிறோம். உன் கட்டளைப்படி நடப் பவர்களை நீ உன்னுடையவர்களாக அங்கீகரித்து அருள் புரியுந் தன்மையுடையவன்; ஸம்ஸார மார்க்கத்தில் திரி யும் வழிப்போக்கர்களுக்கு நிலைநின்ற ஆதாரமாயிருப் பவன்; (ஐஹிகஸுகத்தை மாத்ரமேயன்றி ஆமுஷ்மிக ஸுகத்தையும் கொடுப்பவன்). மேன்மையான புரு ஷார்த்தம் நீயே. தன்னைப் பற்றினருடைய துக்கங் களைப் போக்குகையால் நீ ஹரியென்று பெயர் பெற்றனை. இத்தகைய உனக்கு நமஸ்காரம்.

சுகர் சொல்லுகிறார்.—மன்னவனே! தேவதை களால் ப்ரீதியுடன் துதிக்கப்பெற்ற பகவான் தன் துதி யைக் கேட்டு ஸந்தோஷித்து அவர்களை நோக்கி இங்ங னம் மொழிந்தான்.

பகவான் சொல்லுகிறான்:—ஓ தேவஸ்ரேஷ்டர்க ளே! நீங்கள் பண்ணின ஸ்தோத்ரமாகிற வித்தையால் நான் மிகவும் ஸந்தோஷம் அடைந்தேன். இந்த ஸ்தோத்ர வித்தையினால் புருஷர்கள் என்னிடத்தில் பக்தி உண்டாகப் பெற்றுத் தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்ட ஆத்மாவின் ஐச்வர்யத்தையும் நினைப்பார் கள். தேவஸ்ரேஷ்டர்களே! நான் ஸந்தோஷம் அடை வேனையின், எதுதான் துர்லபம்? ஆயினும் என்னிடத் தில் நிலைநின்ற மதியுடைய [1] தத்வஜ்ஞன் என்னை யொழிய மற்றொன்றையும் விரும்பமாட்டான். சப்தாதி

---

1. உண்மையை உணர்ந்தவன்.

விஷயங்களைப் புருஷார்த்தமாக நினைத்திருக்கும் புருஷன் இந்திரியங்களுக் குட்பட்டுத் தன்னுடைய நன்மையை அறியமாட்டான். அந்தச் சப்தாதி விஷயங்களை விரும்புகிறவனுக்கு ஒருவன் சிறந்த நன்மையை விளக்க வல்லவனாயிருந்தும் அவற்றையே கொடுப்பானாயின், அவனும் அவனைப்போன்ற ஓருமந்தபுத்தியனேயாவான். மேலான புருஷார்த்த மின்னதென்பதையும் அதன் உபாயத்தையும் அறிந்தவன் அதை அறியாமல் கேவல கர்மத்திலேயே மனம் சென்று வருந்துகிறவனுக்கு அக்கர்மத்தையே செய்யும்படி சொல்லமாட்டான். சிறந்த வைத்யன், ரோகி அபத்யமான வஸ்துவை விரும்பினும், அதை அவனுக்குக் கொடுக்கமாட்டானல்லவா? ஆகையால் நீங்கள் என்னை அருள் புரிவித்துச் சத்ருக்களை ஜயிக்கவேண்டுமென்று விரும்புவது உங்கள் புத்திக்குறைவின் கார்யமே. மோக்ஷத்தைக் கொடுக்கவல்ல நானும் நீங்கள் விரும்பினபடி செய்வது யுக்தமன்று. ஆயினும் உங்கள் கார்யம் நிறைவேறும் உபாயத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள். ஓ தேவேந்த்ரன் முதலிய தேவச்ரேஷ்டர்களே! நீங்கள் தத்தாத்ரேயமஹர்ஷியிடம் போவீர்களாக. உங்கள் இஷ்டம் நிறைவேறும். நீங்கள் காலவிளம்பம் செய்யாமல் அம்மஹர்ஷியிடம் சென்று, பரமாத்மோபாஸனரூபமான வித்யையாலும் வ்ரதங்களாலும் தவங்களாலும் ஸாரமுள்ள அவரது சரீரத்தைக் கொடுக்கும்படி வேண்டுங்கள். அவர் பரிசுத்தமான ப்ரஹ்மவித்யையின் கரை அறிந்தவர். அவ்வித்யையை அவர் அச்வினீதேவதைகளுக்கு உபதேசித்தார். அவ்வித்யையே அச்வசிரஸ்ஸென்று ப்ரஸித்தி பெற்றது. அவ்வித்யோபதேசத்தினால் அச்வினீதேவதைகளுக்கு மரணமில்லாமை

யையும் விளைத்தார். அவர் தன் தந்தையாகிய அதர்வ முனிவரிடத்தினின்று என்னைத் தேவதையாகவுடைய தும் அபேத்யமுமான நாராயண கவசத்தைத் தான் பெற்று அதை த்வஷ்டாவுக்கு உபதேசித்தார். த்வஷ்டா விஸ்வரூபனுக்கு உபதேசித்தான். அவ்விஸ்வரூபனிடத் தினின்று நீ பெற்றாய். அம்முனிவர் மஹானுபாவர். அவருடைய சரீரம் மிகவும் ஸாரமுடையது. அவர் தர் மத்தை உணர்ந்தவர். நீங்கள் யாசிப்பீர்களாயின், அவர் தனது அங்கங்களை அவஸ்யம் கொடுப்பார். அவற்றைக் கொண்டுவந்து விஸ்வகர்மாவினிடம் கொடுத்தால் அவன் அவற்றால் மேலான ஒரு ஆயு தத்தை இயற்றிக் கொடுப்பான். இந்த்ரன் அவ்வாயுதத் தைக்கொண்டு என்னுடைய தேஜஸ்ஸினால் பலம் வள ரப்பெற்று வ்ருத்ராஸுரனுடைய தலையை அறுப்பான். அங்ஙனம் அந்த வ்ருத்ராஸுரன் தொலைந்த பின்பு நீங் கள் தேஜஸ்ஸையும் அஸ்த்ரங்களையும் ஆயுதங்களையும் ஸம்பத்தையும் முன்போல மீளவும் பெறுவீர்கள். உங் களுக்கு க்ஷேமம் உண்டாகும். பயப்படவேண்டாம். என்னிடத்தில் மனப்பற்றுடையவர் எதற்கும் வருந்த மாட்டார்கள். அவர்களை எவரும் பாதிக்க மாட்டார் கள். ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

இந்த்ரன் ததீசருடைய எலும்புகளால் வஜ்ராயுதத்தை இயற்றிக்கொண்டு வ்ரு த்ராஸுரனோடு யுத்தம் செய்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஜகத்ரக்ஷகனாகிய பக வான் இங்ஙனம் இந்த்ரனுக்குக் கட்டளையிட்டுத் தேவ தைகள் பார்த்துக்கொண்டே யிருக்கையில் அவ்விடத் திலேயே மறைந்தான். பிறகு தேவதைகள் பகவான்

மொழிந்தபடியே ததீச முனிவரிடம்போய் அவருடைய அங்கங்களைக் கொடுக்கும்படி வேண்டினர்கள். பாரதனே! அதர்வமுனிவருடைய புதல்வராகிய அந்தத் ததீசமுனிவர் மஹாநுபாவர். அவர் செயல்களெல்லாம் தீர்க்தம்ருத்யுவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆகையால் அவர் தேவதைகளின் வசனத்தைக் கேட்டு ஸந்தோஷம் அடைந்து புன்னகை செய்து 'ஓ தேவதைகளே! ப்ராணிகளுக்கு மரணகாலத்தில் பொறுக்க முடியாத வருத்தம் உண்டாகுமென்றும், அக்காலத்தில் அவர்க்கு ப்ரஜ்ஞையும் தவறிப்போமென்றும் நீங்கள் அறியீர்களோ? ஜீவிக்கவேண்டுமென்று விரும்பும் ப்ராணிகளுக்குத் தேஹம் மிகவும் அன்பிற்கிடமாயிருக்குமல்லவா! அங்ஙனம் இஷ்டமான தேஹத்தை ஸ்ரீமஹாவிஷ்ணு வந்து யாசித்தாலும் எவன் தான் கொடுக்க உத்ஸாஹப்படுவான்? ஆகையால் நீங்கள் தான் என் தேஹத்தை வாய்கூசாமல் எப்படிக் கேட்கலாம்? நான்தான் எப்படிக் கொடுப்பேன்?' என்றார். அதைக்கேட்ட தேவதைகள் அம்முனிவரை நோக்கி 'ஓ அந்தணர் தலைவரே! உம்மைப்போன்ற பெரியோர்கள் ப்ராணிகளிடத்தில் மனஇரக்க முடையவர்கள். அழகிய புகழுடைய அனைவராலும் உங்கள் கடத்தைகள் புகழத்தக்கவைகளாயிருக்கின்றன. உங்களுக்கு எது துறக்கமுடியாதது? தன் ப்ரயோஜனத்தை எதிர்பார்க்கிறவன் பிறனுடைய ஸங்கடத்தை உணரமாட்டான். உணர்வானுயின் யாசிக்கவேமாட்டான். பிறர் தன்னை யாசிப்பார்களாயின், கொடுக்கவல்லவன் இல்லையென்று சொல்லவேமாட்டான்' என்றார்கள். அதைக் கேட்ட மஹர்ஷியும் 'தேவதைகளே! உங்களிடத்தில் தர்மத்தைக் கேட்கவிரும்பி நான் உங்களைத் திரஸ்கரித்

தேனன்றி வேறில்லை. இத்தேஹம் தனக்குக் காரண மான ப்ராரப்தகர்மம் தீர்ந்தமையால் என்னைவிட முயன் றிருக்கிறது. உங்களுக்கு ப்ரியமான இத்தேஹத்தை தானும் அபிமானத்துடன் துறக்கிறேன். ஓ நாதர்களே! நிலையற்றதாகிய இச்சரீரத்தினால் ப்ராணிகளிடத்தில் தயை செய்து தர்மத்தையாவது புகழையாவது ஸாதிக்கமாட்டாமையின், அவனைப்பற்றி ஸ்தாவரங்களும் சோகிக்கும். ப்ராணிகளின் வருத்தங்கண்டு வருந்து வதும், ஸந்தாஷம் கண்டு ஸந்தாஷிப்பதுமா யிருக்கையாகிய இவ்வளவே அழிவற்ற தர்மமென்று புண்ய ச்லோகரான பெரியோர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். தேஹங்கள் நாய் நரி முதலியவற்றிற்கு ஆஹாரமாக வேண்டியவைகள்; பிறருக்கு உபயோகப்படவேண்டிய வைகள்; நிலையற்றவைகள். அவற்றால் ஆத்மாவுக்கு ஆகவேண்டிய உபயோகம் எதுவுமே இல்லை. மனுஷ்யர்கள் அத்தகைய தேஹங்களாலும் பிள்ளை பெயரன் முதலிய பந்துக்களாலும் பிறர்க்கு உதவி செய்யார்களாயின், அதைக்காட்டிலும் வேறு வருத் தமே இல்லை. ஆ! இப்படியும் செய்வார்களோ?' என்றார். உண்மையை உணர்ந்த அம்முனிவர் இங்ஙனம் நிச்ச யித்துக்கொண்டு இந்த்ரியங்களையும் மனத்தையும் புத் தியையும் அடக்கி ஆத்மாவைப் பரமாத்மாவினிடத்தில் ஸமர்ப்பித்துக் கர்மபந்தங்களெல்லாம் தீரப்பெற்று மேலான யோகமார்க்கத்தில் இறங்கித் தன் தேஹத் தைத் துறந்தார். பிறகு அவர் தன்னை விட்டுப்போன தேஹத்தையும் அறியவில்லை. அப்பால் தேவேந்த்ரன் அம்முனிவருடைய தேஹத்திலுள்ள எலும்புகளைக் கொண்டு விச்வகர்மாவினால் வஜ்ராயுதம் செய்வித்து அதை எடுத்துக்கொண்டு பகவானுடைய தேஜஸ்

ஸுடன் கூடி உத்ஸாஹம் வளரப்பெற்று ஸமஸ்த தேவ கணங்களோடுங்கூடி ஐராவதத்தின்மேல் ஏறி விளங் கினன். பிறகு அத்தேவேந்த்ரன் முனி கணங்களால் துதிக்கப்பெற்று மூன்று லோகங்களையும் களிக்கச்செய் பவன் போன்று அஸுரஸைன்யங்களில் தலைமையுள்ள வீரர்களால் சூழப்பட்ட சத்ருவாகிய வ்ருத்ரன்மேல் எதிர்த்தோடினன். அப்பொழுது அவ்விந்த்ரன் ப்ரளய காலத்தில் கோபித்து யமன்மேல் எதிர்த்தோடுகிற ருத் ரன்போல விளங்கினன். ஓ மன்னவனே! அப்பால் முதல் சதுர்யுகத்தில் த்ரேதாயுகத்தின் ஆரம்பத்தில் கர்மதா நதிக்கரையில் தேவதைகளுக்கு அஸுரர்களோடு மிக வும் பயங்கரமான யுத்தம் நடந்தது. அப்பொழுது ஏகா தசருத்ரர்களும் அஷ்டவஸுக்களும் த்வாதசாதித் யர்களும் அஸ்விதேவதைகளும் பித்ருக்களும் அக் னிகளும் மருத்துக்களும் ருபுக்களும் ஸாத்யர்களும் விஸ்வேதேவரும் தேவதைகளும் இந்த்ரனைச் சூழ்ந்திருந் தார்கள். அங்ஙனம் தேவதைகளோடு கூடி வஜ்ரா யுதத்தை ஏந்தித் தன்னெளியுடன் விளங்குகின்ற தம் சத்ருவாகிய தேவேந்த்ரனைக் கண்டு வ்ருத்ரன் முதலிய அஸுரர்கள் பொறுக்க முடியாதிருந்தார்கள். நமுசி சம்பரன் அனர்வன் த்விமூர்த்தன் வ்ருஷபன் அம்பரன் ஹயக்ரீவன் சங்குசிரன் விப்ரசித்தி அயோமுகன் புலோமன் வ்ருஷபர்வன் ப்ரஹ்லாதி உத்கடன் தாம்ர கேசன் விரூபாக்ஷன் கபிலன் விபாவஸு இவர்களும் ஆயிரமாயிரமான தைத்யர்களும் தானவர்களும் யக்ஷர் களும் ராக்ஷஸர்களும் இல்வலன் பல்வலன் தந்தசூகன் வ்ருஷத்வஜன் காலநாபன் மஹாநாபன் பூதஸந்தாப னன் வ்ருகன் இவர்களும் ஸுமாலி மாலி முதலியவர் களும் ஸ்வர்ணமயமான அலங்காரங்களை அணிந்து

ம்ருத்யுவுக்கும் அணுக முடியாத இந்த்ராணுடைய ஸைனயின் முன் நின்று தடுத்துப் பரபரப்பின்றிக் கொடியமதமுடையவராகிப் பெரிய ஸிம்ஹநாதத்துடன் எதிர்த்துக் கதை உழல்தடி பாணம் ஈட்டி இரும்புத் தடி தோமரம் சூலம் கோடாலி கத்தி சதக்னி முஸுண்டி முதலிய ஆயுதங்களாலும் அஸ்த்ரங்களாலும் தேவஸ்ரேஷ்டர்களை நாற்புறத்திலும் சூழ்ந்து அடித்தார்கள். தேவதைகள் அஸுரர்களால் ப்ரயோகிக்கப்பட்டுப் புங்காணுபுங்கமாய் வந்து விழுகின்ற பாணங்களால் நாற்புறத்திலும் மறைக்கப்பட்டு, ஆகாயத்தில் மேகங்களால் மறைக்கப்பட்ட நக்ஷத்ரங்கள் போல் கண்ணுக்குப் புலப்படாமலே யிருந்தார்கள். அங்ஙனம் அஸுரர்கள் மழை பெய்தாற்போல் பெய்த ஆயுதங்களும் அஸ்த்ரங்களும் தேவஸைனிகளின் மேல் படவெயில்லை. வெகுவேகமாய்ப் பாணப்ரயோகம் செய்ய வல்ல தேவதைகள் அவற்றை ஆகாயத்திலேயே ஆயிரம் கண்டங்களாக அறுத்து விட்டார்கள். அனந்தரம் அஸுரர்கள் தாம் ப்ரயோகித்த அஸ்த்ரங்களும் சஸ்த்ரங்களும் அங்ஙனம் வீணைமை கண்டு மலைச்சிகரங்களையும் மரங்களையும் கற்களையும் கொண்டு வந்து தேவதைகளின் மேல் பெய்தார்கள். தேவதைகள் அவற்றையும் முன் போலவே அறுத்தார்கள். பிறகு வ்ருத்ராணு காதனுகவுடைய அஸுரர்கள் தாம் ப்ரயோகித்த பலவகை அஸ்த்ரங்களாலும் சஸ்த்ரங்களாலும் சிறிதும் அடிபடாமல் தேவதைகள் சுகமமாயிருப்பதையும், மீளவும் தாம் ப்ரயோகித்த மரங்களும் கற்களும் மலைச்சிகரங்களும் அவர்மேல் படாமல் வீணவற்றையும் கண்டு எல்லோரும் பயந்தார்கள். ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அணுகூலர்களான பெரியோர்களின் மேல்

யுத்தியில்லாத மூடர்கள், பிதற்றுகிற வசைகளெல்லாம் வீணாவதுபோலத் தேவக்கூட்டங்களின் மேல் அஸுரர்கள் செய்த ப்ரயாஸங்களெல்லாம் வீணாயின. அவ்வஸுரர்கள் பகவானிடத்தில் பக்தியில்லாதவர்கள். ஆகையால் தேவதைகள் அவர்களுடைய பலத்தையெல்லாம் அனாயாஸமாகப் பறித்தார்கள். ஆதலால் அவ்வஸுரர்கள் யுத்தத்தில் தமக்குள்ள கொழுப்பெல்லாம் பாழாகப் பெற்றுத் தம்முடைய ப்ரயாஸங்களெல்லாம் வீணனமை கண்டு ப்ரஸித்தி பெற்றவர்களாயினும் யுத்தாரம்பத்தில் தம் ப்ரபுவான வ்ருத்ராஸுரனைத் துறந்து ஓடிப்போக மனங்கொண்டார்கள். மஹாவீரனும் ஆழ்ந்த மனமுடையவனும் கொடியனுமாகிய அந்த வ்ருத்ராஸுரன் தன் ப்ருத்யர்கள் ஓடுவதையும் தன் பலத்தில் சிறிது அழிந்து போனதையும், மற்றவர்கள் பயந்து ஓடிப்போவதையும் கண்டு அக்காலத்திற்குரியதும் கம்பீரமனமுடைய வீரர்களுக்கு இனியதுமான வார்த்தையை மொழிந்தான். 'ஓ விப்ரசித்தீ! நமுசி! புலோமா! மயனே! அனர்வா! சம்பரா! நீங்கள் என் வார்த்தையைக் கேளுங்கள். பிறந்தவர் அனைவரும் மரணம் அடைவார்களென்பது நிச்சயம். அந்த ம்ருத்யுவுக்கு எவ்விதத்திலும் ப்ரதீகாரமே ஏற்படவில்லை. ஆகையால் அதைத் தடுக்கமுடியாது. ஓ ராக்ஷஸர்களே! அந்த மரணத்தினால் ஸ்வர்க்கலோகமும் யசஸ்ஸும் விளையுமாயின், அதை எவன்தான் விரும்பமாட்டான்? இவ்வுலகத்தில் இரண்டுவகையான மரணங்கள் கிடைக்க அரியவை யென்று பெரியோர்களால் புகழப்படுகின்றன. உள்ளிந்த்ரியத்தையும் வெளியிந்த்ரியங்களையும் வென்று யோகத்தில் இழிந்து ப்ரஹ்மத்யானத்தினால் சரீரத்தைத் துறக்கை ஒன்று. வீரர்களின் படுக்

கையாகிய யுத்தபூமியில் பின்வாங்காமல் சத்ருக்களால் அடியுண்டு சரீரத்தைத் துறக்கை மற்றொன்று. விவேக முடையவர்கள் இவ்விரண்டு மரணங்களையும் உபேக்ஷிக்க மாட்டார்கள்.' பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

வ்ருத்ராஸுரன் இந்த்ரலோக ஸம்பாஷித்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:— ஓ மன்னவனே! இங்ஙனம் ஸைன்யத்தில் தலைவனாகிய வ்ருத்ரன் தர்மத்தினின்றும் நழுவாத வார்த்தையைச் சொல்லிக்கொண்டிருப்பினும், பயந்து மனநிலைமையற்று ஓடிப்போக முயன்றிருக்கிற அஸுரர்கள் அவனுடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பால் அஸுரச்ரேஷ்டனாகிய அந்த வ்ருத்ராஸுரன் அஸுர ஸைன்யமெல்லாம் காலம் அனுகூலமாயிருக்கப் பெற்ற தேவதைகளால் பீடிக்கப்பட்டு காதனற்றதுபோலப் பயந்தோடுவதைக் கண்டு இந்த்ரசத்ருவாகிய வ்ருத்ரன் அந்த வ்யஸனத்தைப் பொறுக்கமுடியாமல் மிகவும் கோபித்துத் தன் பலத்தினால் ஸைன்யத்தைத் தைரியப்படுத்தி தேவதைகளை நோக்கி இங்ஙனம் மொழிந்தான். 'யுத்தத்தில் முன்நிற்கமாட்டாமல் பயந்தோடிப் பின்புறத்தில் அடிபடுகின்ற இவ்வஸுரர்கள் மாதாவின் விஷ்டைபோல் ஒன்றுக்கும் உபயோகப்படாதவர்கள். இவர்களை வதிப்பதனால் உங்களுக்கு என்ன ப்ரயோஜனம்? பயந்தவனை வதிப்பது சூரர்களால் புகழத் தகுந்ததன்று; ஸ்வர்க்கத்தையும் விளைக்காது. ஓ அற்பர்களே! ஆகையால், உங்கள் மனத்தில் சண்டை செய்யவேண்டுமென்

னும் விருப்பமாவது தேஹபலமாவது உள்ளதாயின், சப்தாதி விஷயங்களை அனுபவிக்க வேண்டுமென்னும் விருப்பமும் இல்லாதிருக்குமாயின், ஒரு க்ஷணகாலம் மாத்ரம் என்னெதிரில் நிற்பீர்களாக' என்றான். மஹாபலமுடைய வ்ருத்ராஸுரன் கோபமுற்றுத் தேவக்கூட்டங்களைத் தன் தேஹத்தினால் பயப்படுத்திக்கொண்டு பலமுள்ளவளவும் ஸிம்ஹநாதம் செய்தான். அதனால் ஜனங்களெல்லோரும் பயந்து மூர்ச்சித்தார்கள். அந்த வ்ருத்ராஸுரனுடைய கர்ஜனையைக் கேட்டுத் தேவக் கூட்டங்களெல்லாம் வஜ்ராயுதத்தினால் அடிபட்டாற்போல் மூர்ச்சித்துப் பூமியில் விழுந்தன. யுத்தரங்கத்தில் தடுக்க முடியாத கொடிய மதமுடைய அந்த வ்ருத்ராஸுரன் சூலத்தைக் கையில் ஏந்திப் பூமியை நடுங்கச் செய்துகொண்டு நடந்து, மதங்கொண்ட மஹாகஜம் பனங்காட்டை மர்த்திப்பதுபோல், அங்ஙனம் மூர்ச்சித்துக் கண் மூடிக்கொண்டிருக்கிற தேவஸைன்யத்தைப் பலமுள்ளவளவும் தன் பாதங்களால் மர்த்தித்தான். தேவேந்த்ரன் அது கண்டு கோபித்து அவன் மேல் பெரிய கதையை ப்ரயோகிக்க, அவ்வஸுரன் வருந்தியும் பொறுக்க முடியாத அக்கதை தன் மேல் வருவதைக் கண்டு அதை அவலீலையாகவே இடக்கையினால் பிடித்துக் கொண்டான். அவ்விந்த்ரசத்ரு பெருங்கோபத்துடன் விரைவாக அடியிட்டுச் சென்று உரக்க ஸிம்ஹநாதம் செய்து அக்கதையினால் இந்த்ரனுடைய வாஹனமாகிய ஐராவதத்தின் கும்பஸ்தலத்தை அடித்தான். யுத்தத்தைப் பார்க்க வந்தவர்கள் அனைவரும் அவன் செய்த கார்யத்தை வெகுமதித்தார்கள். அவ்வைராவதம் வ்ருத்ராஸுரன் ப்ரயோகித்த கதையால் அடியுண்டு வஜ்ராயுதத்தினால் பிளக்கப்பட்ட

பர்வதம்போல் சுழன்று முகம் சிதரப்பெற்று மிகவும் வருந்தி ரத்தம் கக்கிக்கொண்டு இந்த்ரனுடன் ஏழு வில்லளவு தூரம் பின்னே ஸகர்ந்தது. அவ்வஸுரன் யுத்ததர்மத்தை உணர்ந்த மஹானுபாவன். ஆகையால் வாஹனம் வருந்தித் தானும் மனவருத்த முற்றிருக்கிற அவ்விந்த்ரன் மேல் மீளவும் கணையை ப்ரயோகிக்காமல் வெறுமனே இருந்தான். இந்த்ரன் அம்ருதப் பெருக்குடைய தன் கையினல் ஜாவதத்தைத் தடவிக் கொடுத்து அதன் வருத்தமெல்லாம் தீரச்செய்து மீளவும் அவ்வஸுரன் மேல் எதிர்த்து நின்றான். மன்னவர் தலைவனே! அவன் யுத்தம் செய்ய வேண்டுமென்னும் விருப்பத்துடன் முன்னே வந்து வஜ்ராயுதத்தை ஏந்திக் கொண்டு நிற்கின்றவனும் தன் ப்ராதாவான விச்வரூபனை வதித்தவனும் தன் சத்ருவுமாகிய இந்த்ரனைக் கண்டு அவன் செய்த பாபிஷ்டமான கொடுந் தொழிலையும் ஸோகத்தினல் நினைத்துப் பினபு மோஹத்தினல் சிரித்து இங்ஙனம் மொழிந்தான். 'என் சத்ருவாகிய நீ தெய்வாதீனமாய் என் முன்னே வந்து நின்றனை. நீ ப்ராஹ்மணனைக் கொன்றவனல்லவா? அதிலும் உனக்குக் குருவாகிய என் ப்ராதாவை வதித்தாய். அஸத்துக்களில் சிறந்தவனே! இரக்கமின்றிப் பாறைபோன்ற உன் ஹ்ருதயத்தை என் சூலத்தினல் பிளந்து இப்பொழுதே என் ப்ராதாவின் கடனைத் தீர்த்துக் கொள்கிறேன். தெய்வாதீனமாய் நீ எனக்கு கோர்பட்டனை. என் ப்ராதாவான விச்வரூபன் ப்ராஹ்மணன்; ப்ரஹ்மவித்து; உனக்கு ஆசார்யன்; யாகதீக்ஷைக்கு உட்பட்டிருந்தவன். நீ அவனை நம்பவைத்து, ஸ்வர்க்கத்தை விரும்பி யாகம் செய்பவன் யாக பசுவின் தலையை அறுப்பதுபோல், அறுத்தனை. இங்ஙனம் தகாத பாபிஷ்ட

கார்யம் செய்தமையால், வெட்கம் செல்வம் பயம் புகழ் இவைகளெல்லாம் உன்னைத் துறந்தன. நீ செய்த பாப கர்மத்தினால் புருஷர்களைப் பிடுங்கித் தின்னும் தன்மை யுள்ள பிசாசங்களாலும் நிந்திக்கத் தகுந்தவனாயிருக் கின்றனை. இப்பொழுது நான் உன் தேஹத்தை என் சூலத்தினால் பிளக்கையில் அக்னி ஸம்ஸ்காரம் செய்யப் பெறாத அத்தேஹத்தை கழுகுகள் தின்னப்போகின் றன. தேவதைகள் மதிகெட்டுக் கொடுந்தொழிலனை உன்னைத் தொடர்ந்து இந்த யுத்தத்தில் ஆயுதங்களை வந்தி என்னை அடிப்பார்களாயின், கூரான என் சூலத் தினால் அவர்களது கண்டங்களைச் சேதித்து அந்த ரக் தங்களால் பூதநாதர்களையும் அவர்களுடைய பரிவாரங் களையும் ஆராதிக்கிறேன். அல்லது, ஓ தேவேந்த்ரனே! வீர! இந்த யுத்தத்தில் நீயே என் தலையை வஜ்ராயுதத் தினால் அறுப்பாயாயின், என் தேஹத்தினால் பூதங் களுக்குப் பலி கொடுத்துக் கர்மபந்தங்களை யெல்லாம் துறந்து ஆழ்ந்த மனமுடைய ஞானிகளின் பாத தூளி யால் பரிசுத்தமான கதியைப் பெறுகிறேன். ஓ தேவேந் த்ரனே! உன் சத்ருவாகிய நான் உன்னெதிரில் நின்று கொண்டிருக்கையில், தடைபடாத உன் வஜ்ராயுதத்தை ஏன் ப்ரயோகிக்கா திருக்கின்றனை? 'முன் ப்ரயோகித்த கதை, லோபியிடத்தில் செய்த யாசனைபோல் வீணாய் விட்டதே. அங்ஙனம் இதுவும் வீணாய்விடுமோ' என்று ஸந்தேஹிக்க வேண்டாம். இந்த வஜ்ராயுதம் அதைப் போல் வீணாகாது. ஓ இந்த்ர! உன் வஜ்ராயுதம் பகவா னுடைய தேஜஸ்ஸினாலும் ததீசமஹர்ஷியின் தவத்தி னாலும் தீக்ஷ்ணமாயிருக்கின்றது. ஸ்ரீவிஷ்ணுவும் உனக் குக் கட்டளையிட்டிருக்கிறான். ஆகையால் அந்த வஜ்ரா யுதத்தினால் உன் சத்ருவாகிய என்னை வதிப்பாயாக.

பகவான் எந்தப் பக்ஷித்தில் இருக்கிறானே அதே பக்ஷித்தான் ராஜ்ய ஸம்பத்து ஜயம் ப்ரபுத்வம் முதலிய குணங்கள் உண்டாகும். நான் அஸுரனிடமும் நரகத்திற்குப் போகமாட்டேன். ஸங்கர்ஷண பகவான் சொன்னபடி அவனுடைய பாதாரவிந்தங்களில் மனத்தை நிலை நிறுத்தி, நீ வேகத்துடன் ப்ரயோகித்த உன் வஜ்ராயுதத்தினால் க்ராம்யங்களான சப்தாதி விஷயங்களில் விருப்பமாகிற பாசமும் அறுப்புண்டு ஸ்வர்க்காதி லோகங்களை யெல்லாம் கடந்து முனிவர்களின் கதியான மோக்ஷத்தையே பெறப் போகிறேன். எங்கள் ப்ரபுவாகிய ஸங்கர்ஷண பகவான் வேறு ப்ரயோஜனங்களை விரும்பாமல் தன்னிடத்தில் பக்தி செய்யும் புருஷர்களுக்கு ஸ்வர்க்காதி லோகங்களிலும் அதலாதி லோகங்களிலும் உள்ள ஐச்வர்யங்களைக் கொடுக்கமாட்டான். ஏனென்றால், அவ்வைச்வர்யங்கள் த்வேஷம் பயம் மரணவ்யாதி மதம் கலஹம் வ்யஸனம் முதலிய ப்ரயாஸங்களைத் தவறாமல் உண்டாக்குகின்றனவல்லவா? எங்கள் ப்ரபுவாகிய ஸங்கர்ஷண பகவான் தன் பக்தர்களுக்குத் தர்ம அர்த்த காமங்களைப்பற்றின ஆயாஸங்களைத் தடுத்து மோக்ஷத்தையே கொடுப்பான். எவனுக்கு அற்பங்களும் அஸ்திரங்களுமான தர்மார்த்த காமங்களைப்பற்றின ப்ரயாஸங்கள் நீங்குகின்றனவோ, அவனிடத்தில் பகவானுடைய அனுக்ரஹம் உண்டென்பதை ஊஹிக்கலாம். அவன் தன்னையொழிய வேறு ப்ரயோஜனங்களை விரும்பாத ஏழையர்க்கே அருள்புரிவான். சப்தாதி விஷயத்தை விரும்பி அவற்றிற்காகப் பணிகிற உன்னைப் போன்றவர்களுக்கு அவனருள் கிடைப்பது அரிது. ஓ

பகவானே! நான் உன்பாத மூலத்தையே அவலம்ப மாகப்பற்றின உன் தாஸர்களுக்குத் தாஸனாகவே மீள வும் பிறப்பேனாக. என் மனம் என் ப்ராணநாதனுடைய உனது குணங்களையே நினைக்குமாக. என் வாக்கும் அவற்றையே கீர்த்தனம் செய்யுமாக. என்சரீரம் உனது ஆராதன ரூபமான கர்மத்தைச் செய்யுமாக. ஸமஸ்த ஸௌபாக்யங்களுக்கும் நிதிபோன்றவனே! நான் உனக் குத் தாஸனாயிருப்பதைத் தவிர ஸமஸ்த பூமண்டலத் திற்கும் ப்ரபுவாயிருக்கும் ஐச்வர்யத்தையாவது பாதா ளம் முதலிய லோகங்களின் ஆதிபத்யத்தையாவது அணிமாதி யோக ஸித்திகளையாவது ப்ரஹ்மாவின் ஐச் வர்யத்தையாவது கைவல்யமென்கிற ஆத்மானுபவத் தையாவது வைகுண்ட லோகத்தையாவது விரும்ப மாட்டேன். தாமரைக் கண்ணனே! இறகு முளைக் கப்பெறாத பறவைக்குட்டிகள் தாயைப்போலவும், பசி யினல் வருந்தின சிறு குழந்தைகள் ஸ்தன்யத்தைப் போலவும், தேசாந்தரம் சென்ற காதலனை வருத்த முற்ற காதலிபோலவும், என் மனம் உன்னையே பார்க்க வேண்டுமென்று விரும்புகின்றது. நான் உன் மாயை யினல் சரீரம் பிள்ளை பெண்டிர் வீடு முதலியவற்றில் மனம் சென்று என் கர்மங்களால் ஸம்ஸார சக்ரத்தில் சுழன்றுகொண்டிருப்பினும் எனக்கு உத்தம ச்லோக னை உன் பக்தர்களிடத்தில் ஸ்நேஹம் உண்டாகுமாக. அந்தச் சரீரம் முதலியவற்றில் எனக்கு மனப்பற்று தோன்றாதிருக்குமாக. இங்ஙனம் நீ அருள் புரியவேண் டும்.' பதினென்றாவது அத்யாயம் முற்றிற்று.

இந்த்ரனுக்கும் வ்ருத்ராஸுரனுக்கும் ஸம்பாஷணையும், இந்த்ரன் வ்ருத்ராஸுரனை வதித்தலும்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—பரீக்ஷித்து மன்னவனே! தன் சரீரத்தைத் துறக்கவிரும்பி யுத்தத்தில் ஜயத்தைக்காட்டிலும் மரணத்தையே மேலாக நினைத்திருக்கின்ற அந்த வ்ருத்ராஸுரன் இங்ஙனம் பகவானைத் துதித்துச் சூலத்தை எடுத்துக்கொண்டு, ப்ரளய ஜலத்தில் கைடபனென்னும் அஸுரன் பரமபுருஷனை எதிர்த்தாற்போல், இந்த்ரன்மேல் எதிர்த்து வந்தான். வீரனாகிய அவ்வஸுரேந்த்ரன் ப்ரளய காலாக்னிபோலப் பொறுக்கமுடியாமல் ஜ்வலிக்கின்ற நுனிகளையுடைய சூலத்தைச் சுழற்றிக் கோபத்துடன் இந்த்ரன்மேல் எறிந்து ஸிம்ஹநாதம் செய்து 'பாபிஷ்டனே! மாண்டு போவாய்' என்றான். பிறகு வஜ்ராயுதத்தை எடுத்துக்கொண்டிருக்கும் தேவேந்த்ரன் ஆகாயத்தில் சுழன்றுகொண்டு ஸூர்யன் போலவும் நெருப்புத் தணல்கள் போலவும் கண்ணெடுத்துப் பார்க்கமுடியாமல் எதிர்த்துவருகின்ற சூலத்தைக் கண்டு சிறிதும் தழதழப்பின்றி நூறுகணுக்களையுடைய தன் வஜ்ராயுதத்தினால் அச்சூலத்தையும் வாஸுகியின் உடல்போன்ற அவனது புஜத்தையும் எல்லோரும் ஆச்சரியப்படும்படி அறுத்தான். பிறகு வ்ருத்ராஸுரன் ஒரு புஜம் அறுப்புண்டு மிகவும் கோபமுற்று வஜ்ராயுதத்தை எடுத்தின இந்த்ரனைக் கிட்டிப் பரிகத்தினால் அவ்விந்த்ரனைக் கன்னத்தில் அடித்துத் தெய்வக்கரியான ஐராவதத்தையும் அடித்தான். அங்ஙனம் அடியுண்ட இந்த்ரனுடைய ஹஸ்தத்தினின்று வஜ்ராயுதமும் கீழ் விழுந்தது. கூட்

டங் கூட்டமாயிருக்கிற தேவதைகள் அஸுரர்கள் சாரணர்கள் ஸித்தர்கள் அனைவரும் அவ்வஸுரன் செய்த அற்புதமான செயலைக்கண்டு வெகுமதித்தார்கள். மற்றும், அவர்கள் இந்த்ரனுக்கு நேர்ந்த ஸங்கடத்தைக் கண்டு 'ஆ! ஆ!' என்று மிகவும் இரைச்சவிட்டார்கள். அப்பொழுது தேவேந்த்ரன் சத்ருவின் எதிரில் தன் கையினின்று வஜ்ராயுதம் நழுவினதற்கு லஜ்ஜித்து மீளவும் அதை எடுக்காதிருந்தான். அங்ஙனம் வஜ்ராயுதத்தை எடுக்காதிருக்கின்ற இந்த்ரனைப் பார்த்து வ்ருத்ராஸுரன் மொழிந்தான். "ஓ தேவேந்த்ரனே! நீ மீளவும் வஜ்ராயுதத்தை எடுத்துக்கொண்டு உன் சத்ருவாகிய என்னை வதிப்பாயாக. இது சோகிப்பதற்கு ஸமயமன்று. சத்ருக்களை வதிக்க விரும்பி யுத்தம் செய்பவர்களுக்கு எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் ஜயமே உண்டாகுமென்கிற நியதி இல்லை. உலகத்திலுள்ள ப்ராணிகள் அனைவரும் பரமபுருஷனுக்கு உட்பட்டவர்கள். அவன் உட்புகுந்து கர்மங்களுக்குத் தகுந்தபடி அனைத்தையும் நியமித்துக்கொண்டிருக்கிறான். தேசகால கர்மங்களுக்குத் தகுந்தபடி ஸுகதுக்காதி பலன்களை அனுபவிக்கும்பொருட்டு ஜயம் அபஜயம் முதலியவற்றை ஈச்வரன் நடத்துகிறான். ஆகையால் தெய்வாதீனமாய் நேருகிற அபஜயாதிகளைப் பற்றி லஜ்ஜையையாவது சோகத்தையாவது ஏற்றுக்கொள்ளலாகாது. பரமபுருஷனொருவனுக்கு மாத்ரமே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஜயமே உண்டாகுமென்றி மற்றவர்களுக்கு அந்த நியதி கிடையாது. அவன் ஜகத்திலுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்தும்ப்ரபு; எல்லாமறிந்தவன்; ஆதி புருஷன்; என்றும் அழியாதவன்.

ப்ரஹ்மதேவன் முதலிய லோகபாலர்களோடுகூடின இவ்வுலகங்களெல்லாம் கயிற்றால் கட்டுண்ட பறவைகள்போல் ஸ்வாதீனமின்றி அந்தப் பரமபுருஷனுடைய ஸங்கல்பத்தின்படி ஜீவிக்கின்றன. அவனே காலஸ்வரூபனாகி இவ்வுலகத்தில் ஜயம் அபஜயம் முதலியவற்றிற்குக் காரணமாயிருக்கிறான். செயல்களில்முயற்சி கொள்ளுந் திறமை வேகம் பலம் ஜீவனம் மோகூடும் ஸம்ஸாரம் ஆகிய இவற்றிற்கெல்லாம் அந்தப் பரமபுருஷனே காரணன். இவ்வுலகத்திலுள்ள ஜனங்கள் இதை அறியாமல் அவற்றிற்குத் தம்மையே காரணமாக நினைக்கின்றார்கள். ஆகையால் அவர்கள் ஒன்றுமறியாத மூடர்கள். மரத்தினால் செய்யப்பட்ட பொம்மையும் வலையில் அகப்பட்ட ம்ருகமும் புருஷனுக்கு உட்பட்டிருப்பதுபோல், ஸமஸ்த ப்ராணிகளும் பரமபுருஷனுக்கு உட்பட்டவைகள். ப்ரக்ருதி மஹத்தத்வம் அஹங்காரம் ஆகாசம் முதலிய பஞ்சபூதங்கள் இந்த்ரியங்கள் அந்தக்கரணம் இவையெல்லாம் இந்தப் பரமபுருஷனுடைய அனுக்ரஹமில்லாமல் ஸ்ருஷ்டிக்க வல்லவையாகமாட்டா. அங்ஙனமே ஸநன்முகன் முதலிய ஜீவாத்மாக்களும் அவனுடைய அனுக்ரஹமில்லாமல் ஸ்ருஷ்டிக்க வல்லவர்களாக மாட்டார்கள். ஜனங்கள் தாங்கள் பரமபுருஷனுக்கு உட்பட்டவர்கள் என்பதையும் அவனுடைய அனுக்ரஹத்தையொழியத் தங்களுக்குத்தனியே திறமையில்லை யென்பதையும் அறியாமல் தங்களை ஈஸ்வரர்களாக நினைக்கிறார்கள். ஈஸ்வரன் ப்ருதிவி முதலிய பூதங்களில் உட்புகுந்து தேவமனுஷ்யாதி பூதங்களைப் படைக்கிறான்; அவற்றைக்கொண்டே அவற்றை அழிக்கிறான். ஆயுள் செல்வம் புகழ் ஐஸ்வர்யம் மற்றும் பல விருப்பங்கள் இவையெல்

லாம் கர்மாநுகுணமாக அவ்வவற்றிற்குரிய காலங்களில் தாமே உண்டாகின்றன. மரணம் ஏழ்மை முதலியவற்றை நாம் விரும்பாதிருப்பினும் அவை தாமே உண்டாகின்றனவல்லவா? அதற்குக் காரணம் நம்முடைய கர்மமேயல்லவா? அங்ஙனமே மற்றவையும் உண்டாகுமென்பதில் ஸந்தேஹமில்லை. ஆகையால் கீர்த்தி அபகீர்த்தி ஜயம் அபஜயம் மரணம் ஜீவனம் இவற்றில் எது நேரினும் அதற்காக ஸுகத்தையாவது துக்கத்தையாவது ஏற்றுக்கொள்ளலாகாது. எல்லாவற்றிலும் ஸமனுகவேயிருக்கவேண்டும். ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் ப்ரக்ருதியின் குணங்களேயன்றி ஆத்மாவின் குணங்களன்று. அந்த ஸத்வாதிகுணங்களின் பரிணாமமான தேஹத்தில் இருக்கிற ஜீவன் கேவலம் ஸாக்ஷியேயன்றிச் செயல்களைச் செய்பவனன்றென்றும், அத்தன்மை ப்ரக்ருதியைச்சேர்ந்ததென்றும் நினைப்பவன் மீளவும் ஸம்ஸார பந்தத்தை அடையமாட்டான். இந்த விஷயத்தில் நீ என்னையே த்ருஷ்டாந்தமாகக் காணலாம். நீ என் சூலாயுதத்தையும் என் புஜத்தையும் அறுத்தாய். நான் உன்னிடத்தில் தோற்றேன். ஆயினும் உன் ப்ராணன்களைப் பறிக்கவிரும்பி மீளவும் சக்தியுள்ளவளவு ப்ரயத்னம் செய்கிறேன். யுத்தமென்பது சூதாட்டம்போன்றது. ப்ராணன்களே இதற்குப் பந்தயம். யானை குதிரை தேர் முதலியவை ஆட்டக்காய்கள். பாணங்களே பாய்ச்சிகைகள். இதில் 'எவனுக்கு ஜயம்? எவனுக்குப் பராஜயம்?' என்பது தெரியாது. நான் உலகத்திலுள்ள நிலைமையைச் சொன்னேன். ஆயினும் உனக்குப் பகவான் ஸஹாயமாயிருக்கின்றனையால் உனக்கே ஜயமென்பது நிச்சயம்' என்றான். இந்த்ரன் நிஷ்கபடமாக வ்ருத்ராஸுரன் மொழிந்த வசனத்தைக் கேட்டு அவனை

வெகுமதித்து வஜ்ராயுதத்தை எடுத்துக்கொண்டு ஞானிகளுக்கு இந்நிலைமை உண்டாவது ஆச்சர்யமன்றென்று வியப்பின்றிச் சிறித்துக்கொண்டே அவனைக் குறித்து மேல்வருவாறு கூறினன். "ஓ அஸுரனே! நீ ஸித்தனையிருக்கின்றனை. உனக்கு இத்தகைய மதி உண்டாயிருக்கிறதல்லவா? நீ ஜகதீச்வரனும் ஸர்வாந்தராத்மாவும் நண்பனுமாகிய பகவானையே எல்லாவிதத்தாலும் பணிந்திருக்கின்றனை. நீ அஸுரர்களின் தன்மையைத் துறந்து ஸத்வம் தலையெடுத்த பெரியோர்களின் ப்ரக்ருதியைப் பெற்றனையாகையால், ஜனங்களையெல்லாம் மதிமயக்கும்படியான ஸ்ரீமஹாவிஷ்ணுவின் மாயையைக் கடந்தனை. ராஜாகுணத்தையே இயற்கையாகவுடைய உனக்கு ஸர்வாந்தராத்மாவும் ஷாட்குண்யபூர்ணனுமாகிய வாஸுதேவனிடத்தில் மாறாத பக்தி உண்டாயிற்று. இது பெரிய ஆச்சர்யமல்லவா? பகவான் தன்னைப் பற்றினவர்களுக்கு ஸம்ஸாரபந்தத்தைப் போக்கிச் சிறந்த கண்மையான மோக்ஷத்தைக் கொடுப்பவன்; அம்ருத ஸாகரம்போன்று நித்யாநந்தமயனையிருப்பவன். அத்தகைய பகவானிடத்தில் பக்தி உண்டாகப்பெற்று அவனிடத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் புருஷனுக்குக் குட்டைகள்போன்ற ஐச்வர்யம் கைவல்யம் முதலிய மற்ற அற்பஸுகங்களால் என்ன ஸுகவேண்டும்?" என்றான். யுத்தம் செய்பவர்களில் சிறந்த இந்த்ரன் வ்ருத்ரன் இவ்விருவரும் பகவத் தர்ம விசாரத்தை முன்னிட்டு ஒருவரோடொருவர் பேசிக்கொண்டே சண்டை செய்தார்கள். ராஜனே! சத்ருக்களை அழிக்கவல்ல வ்ருத்ராஸுரன் சிறந்த எஃகினால் செய்யப்பட்டதும் பயங்கரமுமாகிய இரும்புத் தடியை இடக்கையால் சுழற்றி இந்த்ரன்மேல் எறிந்தான். அவ்

விக்த்ரன் யாஜனயின் துதிக்கைபோன்ற அவ்விரும்புத் தடியையும் அவனது இடக்கையையும் வஜ்ராயுதத்தி னல் ஒரே தடவையில் சேதித்தான். இரண்டு கைகளும் அடியோடு அறுக்கப்பெற்ற அவ்வஸுரன், இந்த்ரனல் இரண்டு சிறகளும் சேதிக்கப்பெற்று ஆகாயத்தி னின்று பூமியில் விழுந்து அடியுண்ட பர்வதம்போல் ப்ரகாசித்தான். அவன் மிகவும் உயர்ந்த பெரிய சரீர முடையவன்; மஹாபலிஷ்டன்; மஹா ப்ரபாவமுடைய வன். அவன் கடக்கும்பொழுது பூமியெல்லாம் சூர்ண மாய் விடும். அவன் கீழுதட்டைப் பூமியிலும் மேலு தட்டை ஆகாயத்திலும் வைத்து ஆகாயம்போலாழ்ந்த வாயைத் திறந்து ஸர்ப்பம்போல் பயங்கரமான நாக்கை நீட்டி யமன்போன்ற கோரைப்பற்களால் மூன்று லோகங்களையும் விழுங்குகிறவன்போன்று பலத்தினல் பர்வதங்களையெல்லாம் நடுங்கச்செய்துகொண்டு பாதங் களால்நடந்துவரும் பர்வதம்போல நடந்து வந்து இந்த்ரனையும் அவனது வாஹனத்தையும் விழுங்கினன். ப்ரஹ்மதேவன் முதலிய தேவதைகளும் மஹர்ஷிகளும் இந்த்ரனை வ்ருத்ராஸுரன் விழுங்கினது கண்டு சிந்தை யுற்று 'ஆ! ஆ!' என்று இரைச்சலிட்டனர். இந்த்ரன் அவ்வஸுர ச்ரேஷ்டனல் விழுங்கப்பெற்றும் மரணம் அடையவில்லை. அவனது வயிற்றில் சென்றும் பரம புருஷனை அணைத்திருக்கிற நாராயண கவசம்தரித்த வனுகையால் அந்நாராயணனுடைய மாயாபலத்தினல் வளர்ந்துவருகின்ற தன்னுடைய யோகமாயாபலத்தி னல் பாதுகாக்கப்பட்டு ஜீவித்திருந்தான். பாலா ஸுரனென்ற அத்தேவேந்த்ரன் ஸமர்த்தனுகையால் வஜ்ராயுதத்தினல் வ்ருத்ராஸுரனுடைய வயிற்றைப் பிளந்து அதினின்று வெளிவந்து சத்ருவாகிய அந்த

1459. இந்தன் வ்ருத்ராஸுரனை வதித்தல்.

வ்ருத்ராஸுரனுடைய பர்வதத்தின் சிகரத்தைப் போன்ற தலையை அறுத்தான். கூரான நுனியுடைய வஜ்ராயுதம் நாற்புறத்திலும் சுழன்று அவ்வஸுரனுடைய கழுத்தை அறுக்கும்பொழுது ஓரு ஸம்வத்ஸரமாயிற்று. ஸம்வத்ஸரம் முன்னூற்றறுபது காட்களும் வஜ்ராயுதத்திற்கு அதுவே கார்யமாயிருந்தது. அங்ஙனம் அவ்வஸுரன் தலையை அறுத்தபின்பு ஆகாயத்தில் துந்துபி வாத்யங்கள் முழங்கின. அப்பொழுது மஹர்ஷிகளும் கந்தர்வர்களும் ஸித்தர்களும் கூட்டங்கூட்டமாய் நின்று வ்ருத்ராஸுரனைக் கொன்ற வீர்யத்தை அறிவிக்கிற மந்த்ரங்களால் துதி செய்துகொண்டே இந்த்ரன்மேல் ஸந்தோஷத்துடன் புஷ்பவர்ஷங்களைப் பெய்தார்கள். சத்ருக்களை அழிப்பவனே! வ்ருத்ராஸுரனுடைய தேஹத்தினின்று வெளிக்கிளம்பின ஸ்வயம்ப்ரகாசனான ஜீவாத்மா ஸமஸ்தலோகங்களும் பார்த்துக்கொண்டிருக்கையில் ப்ராக்ருதலோகங்களைக்காட்டிலும் விலக்ஷணமான வைகுண்டலோகத்தை அடைந்தது. பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

வ்ருத்ராஸுரனைக் கொன்ற ப்ரஹ்மஹத்தியால் வருந்தின தேவேந்த்ரன் ஸ்ரீமஹாவிஷ்ணுவால் பாதுகாக்கப்பெறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மஹராஜபாவனே! இங்ஙனம் வ்ருத்ராஸுரன் மடிகையில் இந்த்ரனை யொழிய மூன்று லோகங்களும் லோகபாலர்களும் அந்தகக்ஷணமே மனக்கவலை தீர்ந்து இந்த்ரியங்களெல்லாம் களிக்கப்பெற்றார்கள். பிறகு தேவதைகளும் ரிஷிகளும் பித்

ருக்களும் பூதங்களும் தைத்யர்களும் தானவர்களும் தேவதைகளின் பரிவாரங்களும் ப்ரஹ்மதேவன் ருத்ரன் இந்த்ரன் இவர்களும் மற்றவர்களும் தத்தம் இருப்பிடம் சென்றார்கள்.

மன்னவன் சொல்லுகிறான்:—மாமுனிவரே! இந்த்ரனை யொழிய மற்ற அனைவரும் ஸந்தோஷம் அடைந்தார்களென்று மொழிந்தீர். இந்த்ரன் ஸந்தோஷம் அடையாமைக்குக் காரணம் என்னவோ அதைக்கேட்க விரும்புகிறேன். வ்ருத்ராஸுரனைக் கொன்றதே காரணமாயின், அதனல் தேவதைகளும் ஸந்தோஷம் அடையாதிருக்கவேண்டும். வ்ருத்ராஸுர வதத்தினல் தேவதைகள் அனைவரும் ஸந்தோஷித்திருக்க, அதே காரணத்தினல் இந்த்ரனுக்கு மாத்திரம் ஏன் துக்கம் உண்டாயிற்று?

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஸமஸ்தமான தேவதைகளும் ரிஷிகளும் வ்ருத்ராஸுரனுடைய பராக்ரமத்திற்குப் பயந்து அவனை வதிக்கும்பொருட்டு இந்த்ரனை வேண்டினார்கள். இந்த்ரன் வேண்டப்பெற்றும் ப்ரஹ்மஹத்யை என்று பயந்து அதற்கு இசையாமல் அவர்களை நோக்கி "நான் முன்பு விச்வரூபனைக் கொன்றேன். அதனல் எனக்கு மஹத்தான பாபம் சேரிட்டது. அதை ஸ்த்ரீகள் பூமி ஜலம் வ்ருக்ஷங்கள் ஆகிய இந்நால்வரும் என்னை அனுக்ரஹித்துப் பங்கிட்டு ஏற்றுக்கொண்டார்கள். இப்பொழுது வ்ருத்ராஸுரனை வதிப்பேனையின், அந்தப் பாபத்தை எவ்விடத்தில் போக்கிக்கொள்வேன்? அதற்கு வழியே இல்லை. ஆகையால் அவனை நான் வதிக்கமாட்டேன்" என்றான். ரிஷிகள் அவ்விந்த்ரன் மொழிந்த வசனத்தைக் கேட்டு மஹேந்த்ரனை நோக்கி

இங்ஙனம் மொழிந்தார்கள். "நாங்கள் உன்னைக்கொண்டு அஸ்வமேதயாகம் செய்விக்கிறோம். நீ பயப்படவேண்டாம். உனக்கு க்ஷேமமே உண்டாகும். நீ உலகங்களையெல்லாம் வதித்தாலும் அஸ்வமேத யாகத்தினால் பாம புருஷனை ஆராதிப்பாயாயின், அப்பாபத்தினின்று விடுபடுவாய். அவன் பரமாத்மா; ஸர்வேஸ்வரன்; அனைத்திலும் உட்புகுந்து நியமிக்குந்தன்மையன்; தன் தேஜஸ்ஸினால் ப்ரகாசித்துக் கொண்டிருப்பவன்; நாராயணன். "அவனுடைய நாமத்திற்கு எவ்வளவு சக்தி உண்டோ அதற்குப் போதுமான பாபத்தைச்செய்ய ஜனங்கள் வல்லவராக மாட்டார்கள்" என்று சொல்லுகிறார்கள். இத்தகைய மஹாமஹிமைகள் அமைந்த பற்பல நாமங்களையுடைய பகவானை நேரே ஆராதிப்பதனால் பாபங்கள் தீருமென்பதில் ஸந்தேஹமென்ன? ஆகையால் தர்ம ப்ரதிபக்ஷனாகிய வ்ருத்ராஸுரனைக் கொன்ற பாபம் அஸ்வமேத யாகத்தினால் தீருமோவென்று நீ சங்கிக்க வேண்டாம். பகவானுடைய நாமத்தைச் சொன்ன மாத்ரத்தினால், ப்ராஹ்மணன் தாய் தந்தை பசு ஆசார்யன் இவர்களைக் கொன்ற பாபிஷ்டர்களும் மற்றும் பல பாபம் செய்தவர்களும் சண்டாளனும் அவனுக்கும் கீழ்ப்பட்ட பாபிஷ்டஜாதியனும் தம்முடைய பாபங்களினின்று விடுபடுவார்கள். அஸ்வமேத மென்னும் மஹாயாகத்தை எங்களைக்கொண்டு ஸ்ரத்தையுடன் அனுஷ்டித்துப் பரமபுருஷனை ஆராதிப்பாயாயின், அவனுக்குச் சரீரமாகிய ஜங்கம ஸ்தாவரரூபமான ஜகத்தை யெல்லாம் வதித்தாலும் அந்தப் பாபம் உன்னைத் தீண்டாது. இனித் துஷ்டஸ்வபாவனான வ்ருத்ராஸுரனைக் கொன்ற பாபம் உன்னைத் தீண்டாதென்பதைப்பற்றிச் சொல்லவேண்டுமோ?" என்றார்கள். இந்த

ரன் இங்ஙனம் ப்ராஹ்மணர்களால் தூண்டப்பட்டுச் சத்
ருவாகிய வ்ருத்ரனைக் கொன்றான். பிறகு அவன் ப்ராஹ்ம
மணனுகையால் இந்த்ரன ப்ரஹ்மஹத்தியை தொடர்ந்
தது. அவன் அதனல் பெருந்தாபம் உண்டாகப்பெற்று
அதைப் பொறுத்துக் கொண்டிருந்தான். ஆதலால்
அவனுக்குச் சிறிதும் ஸுகமின்றித் துக்கமாகவே
யிருந்தது. அவன் வெட்கமுடையவன். ப்ராஹ்மணனை
வ்ருத்ரனைக் கொன்றமையால் அவன் பழிக்கிடமானன்.
அதனல் வருத்தமுற்றிருக்கிற இந்த்ரனுக்குத் தைர்
யம் முதலிய பல குணங்கள் இருப்பினும், அவனுக்கு
ஸுகத்தை விளைக்கவில்லை. அந்த ப்ரஹ்மஹத்தியை
கிழத்தனத்தினல் அங்கங்களெல்லாம் நடுங்கப்பெற்ற
தும் க்ஷயரோகத்தினல் பீடிக்கப்பட்டிருப்பதுமாகிய
ஒரு பெண்ணுருவங்கொண்டு சண்டாளியைப் போன்று
தன்னைப்பின்பற்றி ஓடிவர இந்த்ரன் கண்டான். கரைத்
திருக்கின்ற தலைமயிர்கள் விரிந்தலையப்பெற்ற அந்த
ப்ரஹ்மஹத்தியை மீன்காற்றமுடைய மூச்சுக் காற்றின்
துர்காற்றத்தினல் வழியை யெல்லாம் தூஷித்துக்
கொண்டு வந்து 'நில் நில்' என்றது. பிறகு தேவேந்த்ரன்
ஆகாயம் முழுவதும் திசைகள் முழுவதும் திரிந்தும்
எங்கும் தொடர்ந்து வருகையால் இளைப்பாற முடியா
மல் வடகிழக்கு மூலையில் சென்று அங்கு மானஸமென்
னும் தடாகத்திற்குள் நுழைந்தான். அவன் ஸூக்ஷ்ம
உருவத்துடன் அங்குத் தாமரைத் தண்டின் நூல்க
ளுக்குள் மறைந்து ப்ரஹ்மஹத்தியினின்று தன்னை
விடுவித்துக்கொள்ளும் உபாயத்தை ஆலோசித்துக்
கொண்டு ஆயிரமாண்டுகள் ப்ரஹ்மஹத்தியைக்குத்தெரி
யாமல் ஜலத்திற்குள் இருந்தான். யாகத்தில் தனக்கு
ஏற்பட்ட ஹவிர்ப்பாகங்களைக் கொண்டுவந்து கொடுப்ப

வன் அக்னியே யாகையால் அவன் ஜலத்திற்குள் நுழையமாட்டானுகையால் யஜ்ஞபாகங்கள் தேரப் பெறுமலே யிருந்தான். அப்பொழுது விச்வை தவம் யோகம் இவற்றால் மிகுந்த ப்ரபாவமுடைய நஹுஷனென்னும் மன்னவன் இந்த்ரபதம் பெற்று ஸ்வர்க்கத்தை ஆண்டு வந்தான். அவன் ஸம்பத்தின் மிகுதியாலும் இந்த்ரபதம் பெற்றோமென்ற செருக்கினாலும் மதித்து விவேகமற்றுச் சசீதேவியால் ஸர்ப்ப ஜன்மம் பெற்றான். மானஸதடத்தில் மறைந்திருக்கும் தேவேந்த்ரன் ப்ராஹ்மணர்களால் அழைக்கப்பெற்று வெளிவருங்கையில் தெடுகால் பரமபுருஷனை த்யானித்துக் கொண்டிருந்தாலுகையாலும் அப்பரமபுருஷனது பத்னியும் அக்குளத்தில் வஸிக்கும் தேவதையுமாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மி அவனைப் பாதுகாத்துக் கொண்டிருந்தாளாகையாலும் ப்ரஹ்மஹத்யாரூபமான பாபம் தன் பலம் ஒடுங்கப்பெற்று அவனை மூன்போல் பாதிக்க முடியாதிருந்தது. பாரதனே! அவ்விந்த்ரனிடம் ரிஷிகள் வந்து பரமபுருஷாராதன ரூபமான அஸ்வமேதயாகத்தைச் செய்யவிதியின்படி தீக்ஷை செய்வித்தார்கள். பிறகு தேவேந்த்ரன் ப்ரஹ்மவாதிகளான ரிஷிகளை ருத்விக்குக்களாக ஏற்படுத்திக்கொண்டு அஸ்வமேதயாகத்திலை ஸமஸ்த தேவதைகளுக்கும் அந்தராத்மாவான பரமபுருஷனை ஆராதித்தான். அதனால், வ்ருத்ராஸுரனைக் கொன்ற பாபம் மஹத்தாயினும் ஸூர்யனைக் கண்ட பனிபோல் சிறிதுமில்லாமல் சூன்யமாயிற்று. அவ்விந்த்ரன் மரீசி முதலிய மஹர்ஷிகளைக் கொண்டு சாஸ்த்ரங்களில் சொல்லியபடி அஸ்வமேத யாகத்தை அனுஷ்டித்து யஜ்ஞங்களால் ஆராதிக்கப்படும் பரமபுருஷனை ஆராதித்து வ்ருத்ராஸுரனைக் கொன்ற

பாபத்தையெல்லாம் உதறிச் சத்ருக்களெல்லாம் தொலை
ந்து ராஜ்ய ஸம்பத்தையும் பெற்று மிகுந்த மஹிமை
யுடையவனானான். மஹேந்த்ரன் ப்ரஹ்மஹத்யாரூபமான
பாபத்தினின்று விடுபட்டதையும் அவனுடைய ஜயத்
தையும் கூறுகின்ற இந்தப் பெரிய உபாக்யானம் பாபங்
களையெல்லாம் போக்கும்; புண்ய தீர்த்தமான கங்
கைக்கு உத்பத்தி ஸ்தானமான பாதங்களையுடைய பர
புருஷனுடைய கீர்த்திகள் உள்ளடங்கப்பெற்றது; ப
வானிடத்தில் பக்தியைவளர்க்கும். இது பக்தஜனங்க
ளின் வ்ருத்தாந்தத்தைக்கூறுகின்றது. இதில் ஜீவாத்மா
வின் உண்மையான ஸ்வரூபம் கூறப்பட்டிருக்கின்றது.
இது பணத்தையும் புகழையும் விளைக்கும்; ஸமஸ்த
பாபங்களையும் தீர்க்கும்; சத்ருஜயத்தையும் மங்களத்
தையும்கொடுக்கும்; ஆயுளை வளர்க்கும். ஆகையால்
இந்த உபாக்யானத்தைப் பண்டிதர்கள் அனைவரும்
எப்பொழுதும் படிக்கவேண்டும். பர்வங்கள் தோறும்
இதைக்கேட்கவேண்டும். பதின்மூன்றுவது அத்யாயம்
முற்றிற்று.

வ்ருத்ராஸுரனுக்குத் தத்வஜ்ஞானம் உண்டானதின் காரணத்தைப் பரீக்ஷித்து வினவுதலும், ஸ்ரீசுகர் அவனுடைய பூர்வஜன்மத்தைக் கூறுதலும்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—ப்ரஹ்ம
ரிஷே! வ்ருத்ராஸுரன் ராஜோகுணத்தையும் தமோ
குணத்தையுமே இயற்கையாகவுடைய அஸுர குலத்
தில் பிறந்தவன்; பாபங்களையே செய்யுந் தன்மையன்.
அவனுக்கு மிகட்குண்ய பூர்ணனாகிய ஸ்ரீமந்நாராயண
னிடத்தில் திடமான பக்தி எங்ஙனம் உண்டாயிற்று?

ஸத்வகுணமே தலையெடுக்கப் பெற்றவரும் பரிசுத்த மான மனமுடையவருமான தேவதைகளுக்கும் மஹர்ஷி களுக்குங்கூட முகுந்தனுடைய பாதாரவிந்தங்களில் பெரும்பாலும் பக்தி உண்டாகிறதில்லை. அப்படிப்பட்ட பக்தி இவ்வஸுரனுக்கு எப்படி உண்டாயிற்று? பூமி யின் துகள் போல இப்பூமியி லுள்ள ஜந்துக்களும் கணக்கிட முடியாதவை. அவற்றில் மனுஷ்யர் முதலிய சிலரே சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட தர்மத்திற்கு அதிகாரிகள். ப்ராஹ்மண ச்ரேஷ்டரே! அவர்களில் சிலரே மோக்ஷத்தில் விருப்பங்கொள்பவர். அங்ஙனம் முயற்சி கொள்கிற பலவாயிரம் பேர்களுக்குள் ஒருவனே ராகாதி தோஷங்களால் விடுபட்டு யோகஸித்தியைப் பெறுகிறான். மாமுனியே! ராகம் முதலிய தோஷங்கள் நீங்கி ஸித்திபெற்ற கோடி பேர்களி லும் ஸ்ரீமந்நாராய ணனையே முக்யமாகப் பற்றிப் பரிசுத்தமான மனமுடை யவன் ஒருவனுங் கிடைப்பதரிது. அந்த வ்ருத்ராஸுரன் பாபிஷ்டன்; ஸமஸ்த லோகங்களுக்கும் துக்கத்தை விளைக்குந் தன்மையன். அவனுக்கு ஸ்ரீக்ருஷ்ணனிடத் தில் நிலைநின்ற மதி எங்ஙனம் உண்டாயிற்று? க்ராம்ய மான சப்தாதி விஷயங்களில் ப்ரீதி எப்படி உண்டாகா திருந்தது? அவை எப்படிப்பட்டவனையும் இழுக்குந் தன்மையுடையவை யல்லவா? ஆகையால் இவ்விஷயத் தில் எனக்குப் பெரிய ஸந்தேஹம் உண்டாயிருக்கின் றது. அவன் இந்த்ரனிடத்தில் பயந்து ஸ்ரீக்ருஷ்ண னைச் சரணம் அடைந்தானென்று சொல்லவும் இடம் இல்லை. அந்த வ்ருத்ராஸுரன் தன் பௌருஷத்தினால் தேவேந்த்ரனை ஸந்தோஷப்படுத்தினனென்று மொழிந் தீர். ஆகையால் அதன் காரணத்தைக் கேட்கவேண்டு மென்று எனக்குப் பெரிய குதூஹலமா யிருக்கின்றது.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மன்னவனே! நான் ஒரு உபாக்யானம் சொல்லுகிறேன், கேட்பாயாக. இதை நான் வ்யாஸரிடத்திலும் நாரதரிடத்திலும் தேவலரிடத்திலும் கேட்டேன். இந்த வ்ருத்ராஸுரன் முன் ஜன்மத்தில் சூரஸேனதேசங்களில் பூமண்டலத்திற் கெல்லாம் ப்ரபுவாகிய சித்ரகேதுவென்னும் மன்னவனாயிருந்தான். அவனுக்குப் பூமி விரும்பினவற்றை யெல்லாம் கறந்தது. அவனுக்குக் கோடி பார்யைகள் இருந்தார்கள். அவன் ஸந்ததியைப் பெறச் சக்தியுடையவனாயினும் அவர்களிடத்தில் ஸந்ததியைப் பெறவில்லை. ரூபம் ஔதார்யம் வயது ந்ற்குலப் பிறப்பு வித்யை ஐச்வர்யம் செல்வம் இவை முதலிய குணங்களெல்லாம் அமைந்த அம்மன்னவனுடைய பார்யைகள் அனைவரும் மலடிகளாகவே யிருந்தார்கள். அவனுக்குப் பிள்ளையில்லையே யென்று பெரிய சிந்தை உண்டாயிற்று. ஸமஸ்தமான ஸம்பத்துக்கள் அழகான கண்ணுடைய பட்ட மஹிஷிகள் ஸமஸ்தமான இப்பூமண்டலம் இவையெல்லாம் அவனுக்கு ஸந்தோஷத்தை விளைக்க வல்லவையாகவில்லை. அம்மன்னவன் இங்ஙனம் பிள்ளையைப்பற்றிச் சிந்தையுற்று மனக்களிப் பற்றிருக்கையில் தவத்தில் ஸித்திபெற்ற மஹானுபாவரான அங்கீரஸமஹர்ஷி ஒருகால் தெய்வாதீனமாய் அவனுடைய வீட்டிற்கு வந்தார். அம்மன்னவன் விதிப்படி எழுந்தெதிர்கொண்டு அர்க்யம் பாத்யம் முதலியவற்றால் பூஜித்து அவருக்கு விருந்தளித்து அவர் ஸுகமாக உட்கார்ந்திருக்கையில், மனவுக்கத்துடன் அவருடைய அருகாமையில் வந்துட்கார்ந்தான். வணக்கத்துடன் அருகிலிருக்கின்ற அம்மன்னவனை அம்மஹர்ஷி வெகுமதித்து "மன்னவனே உனக்கு ஆரோக்யமா? உன் ப்ரக்ருதிகள்

அனைவரும் சேஷமமா யிருக்கின்றார்களா? ஜீவன், மஹத்து அஹங்காரம் பஞ்சதன்மாத்ரங்கள் ஆகிய இவ்வேழு தத்வங்களால் பாதுகாக்கப்பட்டு லோகத்தை அனுபவிப்பதுபோல், மன்னவனும் ப்ரக்ருதிகளிடத்தில் தன்னை ஒப்புவித்து அவர்களால் பாதுகாக்கப்பெற்று லோகத்தை அனுபவிப்பான். ப்ரக்ருதிகளும் மன்னவனால் பாதுகாக்கப்பெற்றுத் தமது இஷ்டங்களைப் பெறுவார்கள்; அனிஷ்டங்களையும் போக்கிக்கொள்வார்கள். உன் பார்யைகளும் ப்ரஜைகளும் கார்யஸஹாயமான மந்த்ரிகளும் கண்பர்களும் தாம்பூலங்கொடுப்பவர் முதலிய பரிசாரகர்களும் மந்த்ராலோசனைக்கு ஸஹாயமான மந்த்ரிகளும் பட்டணத்து ஜனங்களும் தேசாந்தரத்து ராஜாக்களும் பிள்ளைகளும் உன்வசப்பட்டு நடக்கின்றார்களா? மனத்தைச் சப்தாதி விஷயங்களில் போகவொட்டாமல் அடக்கியாளுந் திறமையுடையவனுக்குப் பார்யை முதலிய இவர்கள் அனைவரும் வசப்பட்டிருப்பார்கள். அவனுக்கு லோகபாலர்களும் ஸமஸ்தமான லோகங்களும் கப்பங்கொடுத்துப் பணிவார்கள். உன் மனம் ஸந்தோஷமற்றிருக்கின்றதே. இது ஸ்வயமாகவேயா? அல்லது வேறு காரணத்தைப்பற்றியா? நீ மனவிருப்பம் ஈடேறப்பெறுதவன் போல் தோற்றுகின்றனை. உன் முகம் சிந்தையினால் ஒளியற்றிருக்கின்றது. இதற்குக் காரணம் என்ன?" என்றார். மன்னவனே! அம்முனிவர் அரசனுடைய கருத்தை அறிந்தவராயினும் இங்ஙனம் வினவினர். ஸந்ததியை விரும்புகின்ற அவ்வரசன் வணக்கத்துடன் அம்முனிவரை நோக்கி "மஹாநுபாவரான மஹர்ஷியே! தவம் ஜ்ஞானம் ஸமாதி இவற்றால் பாபகர்மங்களெல்லாம் தொலை

யப்பெற்ற உம்மைப்போன்ற யோகிகளுக்கு ப்ராணி களின் மனத்திலும் வெளியிலுமுள்ள எவை தான் தெரியாது? எல்லாம் தெரியும். ப்ரஹ்மர்ஷீ! ஆயினும் நீர் என்னை வினவுகின்றபடியினல் என் மனக்கருத்தைச் சொல்லுகிறேன். பூமண்டலத்திற்கெல்லாம் ப்ரபுவா யிருக்கையாகிற ஐச்வர்யம் அதனல் விளையும் ஸம்பத்து இவையெல்லாம் இந்த்ரன் முதலிய லோகபாலர்களா லும் ஆசைப்படத் தகுந்தவை. ஆயினும், பசிதாஹங் களால் வருந்தினவனுக்கு மற்ற போகங்களெல்லாம் மனக்களிப்பை விளக்கமாட்டாதவைபோல் ஸ்தூலமற் றிருக்கிற எனக்கு அவையெல்லாம் சிறிதும் களிப்பை விளக்கவில்லை. மஹாநுபாவரே! ஆகையால் நான் என் தந்தை முதலிய பெரியோர்களுடன் கடக்க முடியாத சரகத்தில் விழுஸித்தமாயிருக்கிறேன். எனக்கு ஸ் தூலத்தினைக் கொடுத்து சாங்கள் அந்தரகத்தைத் கடக் கும்படி அருள்புரிவீராக" என்றன். அங்கிரஸ்முனிவர் ப்ரஹ்மாவின் புதல்வர்; ஸமர்த்தர்; மனஇரக்கமுடைய வர். அவர் அம்மன்னவனல் வேண்டப்பெற்று த்வஷ்டா வைத் தேவதையாகவுடைய சருவைப் பக்வம் செய் வித்து மன்னவனைக் கொண்டு அதனல் அந்த த்வஷ் டாவை ஆராதித்தார். பாரதனே! பிறகு யாகத்தில் மிகுந்த சருவை அம்மன்னவனுடைய பார்யைகளில் முதன்மையானவளும் சிறப்புடையவளுமாகிய க்ருதத் யுதியென்பவளுக்குக்கொடுத்தார். அம்முனிவர் மீளவும் மன்னவனை நோக்கி "ராஜனே! சித்ரகேது! உனக்கு ஒரு பிள்ளை பிறப்பான். அவன் தனது பிறவியால் உனக்கு ஸந்தோஷத்தையும் மரணத்தினல் சோகத் தையும் கொடுப்பான்" என்று மொழிந்து அவர் புறப் பட்டுப்போனர். பிறகு க்ருத்திகை அக்னியிடத்தி

னின்று கர்ப்பந்தரித்தாற்போல, அந்த க்ருதத்யுதி அந்த ஹவிஸ்ஸைப் புசித்த மாத்ரத்திலல் சித்ர கேதுவினிடத்தினின்று கர்ப்பம் தரித்தாள். அவளிடத் தில் சித்ரகேதுவின் வீர்யத்திலல் ஏற்பட்ட கர்ப்பம் சுக்லபக்ஷத்து சந்த்ரன்போலத் தினந்தோறும் மெல்ல மெல்ல வளர்ந்தது. பிறகு சிறிது காலம் சென்ற பின்பு சித்ரகேதுவுக்குப் பிள்ளை பிறந்தான். அதைக் கேட்டுச் சூரஸேன தேசத்திலுள்ளவர் அனைவரும் மிகுந்த ஸந் தோஷம் அடைந்தார்கள். அப்பால் சித்ரகேது மன் னவன் ஸந்தோஷமுற்று உடனே ஸ்நானம் செய்து பரி சுத்தனாகி அலங்கரித்துக்கொண்டு புதல்வனுக்கு ப்ராஹ்மணர்களால் ஆசீர்வாதம் செய்வித்து ஜாதகர் மம் கடத்திலன். அனந்தரம் அந்த ப்ராஹ்மணர்களுக் குப் பொன் வெள்ளிகளையும் ஆடையாபரணங்களையும் க்ராமபூமிகளையும் யானை குதிரைகளையும் ஆறு அர்ப் புதம் பசுக்களையும் கொடுத்தான். தனத்தையும் புகழை யும் பிள்ளைக்கு ஆயுளையும் வளர்க்குமாறு மற்ற ப்ராணி களுக்கும் மேகம் மழை பெய்வதுபோல் விருப்பங்களை யெல்லாம் கறந்தான். பணமில்லாதவனுக்கு மிகவும் வருந்திச் சம்பாதித்த பணத்தில்ப்ரீதி வளர்வதுபோல், மிகவும் ப்ரயாஸப்பட்டுக் கிடைத்த அப்புதல்வனிடத் தில் ராஜர்ஷியாகிய சித்ரகேதுவுக்கு ஸ்நேஹம் வளர்ந்துவந்தது. அங்ஙனமே மாதாவான க்ருதத்யுதிக் கும் அப்புதல்வனிடத்தில் மோஹத்திலல் பெரிய ஸ்நே ஹம் வளர்ந்து வந்தது. அவளுடைய சக்களத்திகள் அனைவரும் நமக்குப் பிள்ளையில்லையேயென்று மனக் கவலையுற்றிருந்தார்கள். தினந்தோறும் அப்புதல்வனைச் சீராட்டிக் கொண்டிருக்கிற சித்ரகேதுவுக்குப் பிள்ளை யைப்பெற்ற பார்யையாகிய க்ருதத்யுதியிடத்தில்போல்

மற்றவர்களிடத்தில் ப்ரீதி உண்டாகவில்லை. பிறகு க்ருதத்யுதியின் சக்களத்திகள் எல்லாரும் மன்னவன் தங்களை ஆசரிக்காமையாலும் தங்களுக்குப் பிள்ளை இல்லாமையாலும் துக்கித்து அவனிடத்தில் அஸூயையை கொண்டு 'பிள்ளையில்லாமல் பாபிஷ்டர்களான எங்கள் போன்ற பெண்களைச் சுடவேண்டும். பிள்ளையில்லாதவளைக் கணவன் வீட்டில் இருக்கவுங்கூட ஸம்மதிக்கிறதில்லை. நற்பிள்ளையைப் பெற்ற சக்களத்திகள் அவளைத் தாஸியைப்போல் அமதிக்கிறார்கள். இப்படிப்பட்ட பாபிஷ்டர்கள் ஜீவித்திருந்து என்ன உபயோகம்? மற்றும், ராஜனுடைய தாஸிகளும் தம் ப்ரபுவுக்குப் பணிவிடைசெய்து அவனிடத்தினின்று அடிக்கடி விருப்பங்களைப் பெறுகிறார்கள். நாங்கள் தாஸிக்கும் தாஸியைப் போல் மிகவும் பாக்யமற்றவர்கள்' என்று வெறுத்துப் பரிதபித்தார்கள். இங்ஙனம் சக்களத்திக்குப் பிள்ளை பிறந்த பெருமையைப் பொறுமல் பரிதபிக்கின்றவர்களும் ராஜனுக்கு இஷ்டமற்றவர்களுமாகிய அம்மன்னவனது பார்யைகள் அனைவரும் பெரிய த்வேஷங் கொண்டார்கள். அவர்கள் த்வேஷத்தினால் மதிகெட்டு இயற்கையாகவே கொடிய மனமுடையவர்களாகையால் மன்னவனைப் பொருள்செய்யாமல் அப்புதல்வனுக்கு விஷங்கொடுத்தார்கள். க்ருதத்யுதி சக்களத்திகள் செய்த மஹத்தான அந்தப் பாபகார்யத்தை அறியாமையால் குழந்தை தூங்குகிறானென்றே நினைத்து வீட்டில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தாள். பிறகு தாய் 'குழந்தை வெகு கோரமாய் உறங்கிக் கொண்டிருக்கிறானே. இன்னம் எழுந்திருக்கவில்லையே' என்று நினைத்துப் பிள்ளையைச் சீராட்டுவதில் விருப்பமுடைய வளாகையால் பால்கொடுக்கும் வேலைக்காரிணை

அழைத்து 'அடி பத்ரே! என் குழந்தையை எடுத்துக் கொண்டு வர' என்றாள். அவள் குழந்தை படுத்துக் கொண்டிருக்குமிடம் சென்று கண்களில் கருவிழிகள் மேலிட்டிருப்பதையும் ப்ராணன் இந்த்ரியம் ஜீவன் இவையெல்லாமின்றிக் கட்டையாயிருப்பதையும் கண்டு 'ஐயோ! முடிந்தேனே' என்று கதறிப்பூமியில் விழுந்தாள். ராஜ மஹிஷியான க்ருதத்யுதி, கைகளால் மார்பில் அடித்துக்கொண்டு உரக்கக் கதறுகிற அத்தாஸியின் துக்கத்வனியைக்கேட்டு விரைவுடன் பிள்ளையினருகே சென்று அவன் உண்மையாகவே மரணம் அடைந்திருக்கக் கண்டாள். உடனே பூமியில் விழுந்தாள்; சோகவேகத்தினல் தலைமயிர்களும் ஆடையும் அவிழ்ந்தலையப் பெற்று மூர்ச்சித்தாள். பிறகு ராஜனது அந்தப்புரத்திலுள்ள ஆண் பெண்கள் அனைவரும் அவ்வழுகுரலைக் கேட்டு அவ்விடம் வந்து மன்னவனை ஒருமிக்க மனவருத்த முற்றார்கள். விஷங்கொடுத்து அபராதப்பட்ட சக்களத்திகளும் ஓடிவந்து மெய்போலவே கண்ணீர் பெருக்கினர்கள். மன்னவன் தன் புதல்வனுடைய மரணத்தைக் கேட்டு அதற்குக் காரணம் ஏற்படாமல் அப்புதல்வனிடத்தில் மிகுந்த ஸ்நேஹமுடைய வணைகையால் மஹத்தான சோகத்தினல் பீடிக்கப்பட்டுக் கண்திரியாமல் கீழ்விழுவதும் கால் தடுக்கப் பெறுவதும் மூர்ச்சிப்பதுமாகி மந்த்ரி முதலியவர்களோடும் ப்ராஹ்மணர்களோடும் அவ்விடம் வந்து தலை மயிர்களும் அரையாடையும் அவிழ்ந்தலையப் பெற்றுப் பெருமூச்செறிந்துகொண்டு கண்ணீர்களால் கண்டம் தடுக்கப்பெற்று ஒன்றும் பேசமுடியாமல் அப்புதல்வனுடைய பாதங்களில் வந்து விழுந்தான். அப்பொழுது பதிவ்ரதையான க்ருதத்யுதி தன் கணவன் பெருஞ்சோகத்தி

லாழ்ந்திருப்பதையும், ஓரேஸந்ததியாகிய தன் சிறுவன் மரணம் அடைந்திருப்பதையும்.கண்டு அங்குள்ள ஜனங்களுக்கும் மன்னவனுக்கும் மந்த்ரிமுதலானவர்களுக்கும் மனவருத்தத்தை விளைத்துக்கொண்டு பலவாறு புலம்பினள். அவள் குங்குமம் கலந்த சந்தனம் அணிந்த கொங்கைகளிரண்டையும் மையோடுகூடின கண்ணீர்த் துளிகளால் நனைத்துப் புஷ்பங்கள் உதிரப்பெற்ற தலைமயிர்களை விரித்து இனிய குரலுடன் அழுகுரல் பக்ஷி போல் புதல்வனைக் குறித்து மேல்வருமாறு சோகித்தாள். "ஆ தெய்வமே! நீ மூர்க்கன். உனக்கு மன இரக்கமில்லை. நீ உன்னுடைய ஸ்ருஷ்டிக்ரமத்திற்கு விபரீதமாக நடத்துகின்றனை. முன் பிறந்த தந்தை முதலியவர் ஜீவித்துக்கொண்டிருக்கையில் பின்பிறந்த பிள்ளை முதலியவர்க்கு மரணத்தை விளைக்கின்றனை. இது தகுமா? இதை மாற்றி நடத்துவாயாயின் நீ மேன்மையுடையவனுவாய். நிச்சயம். பெரும்பாலும் நீ அங்ஙனம் செய்கிறதில்லையாகையால் மூர்க்கனென்றே உன்னை நிச்சயிக்கிறேன். இந்த ப்ரக்ருதி மண்டலத்தில் ப்ராணிகளின் உத்பத்தி மரணங்களுக்கு க்ரமம் இல்லையாயின், பிறத்தல் சாதல் முதலியவை அனைத்தும் அவரவர் கர்மத்தின்படி நடக்கட்டும். ஈப்வரனென்று பேரிட்டுக்கொண்டிருக்கிற உன்னால் ஆகவேண்டிய கார்யம் என்ன விருக்கிறது? 'நான் அவரவர் கர்மத்தின்படி பல்ன்களைக் கொடுக்கிறேன்' என்றால், உன்னுடைய ஸ்ருஷ்டியின் அபிவ்ருத்திக்காக நீ பிள்ளை முதலியவர்களிடத்தில் ஏற்படுத்தியிருக்கிற ஸ்நேஹமாகிற பாசத்தை நீயே அறுப்பாயாக. அப்பா! குழந்தாய்! நீ தனற்று வருந்திக்கொண்டிருக்கிறனென்னை நீ துறக்கல்லாகாது. உன் தந்தை உன்னைப்பற்றின சோகத்தினால்

பரிதபிப்பதைக் காண்பாயாக. பிள்ளையில்லாத வருத்தம் ஒருவாறு பொறுக்கக்கூடியது. இந்த வருத்தமோ எவ்விதத்திலும் கடக்கமுடியாதது. ஆகையால் அதைக்காட்டிலும் இது மேற்பட்டது. நீ கண்திறந்து பார்ப்பாயாயின், அந்தகாரம்போன்ற இச்சோகத்தை காங்கள் கடப்போம். நீ பார்க்கமாட்டாயாயின், மன இரக்கமின்றி உன்னைக்கொண்டுபோன யமனுடன் சொல்லி என்னையும் வெகுதூரமான அவ்விடம்கொண்டு போய்ச் சேர்ப்பாயாக, அப்பனே! ராஜகுமாரா! உன்னேடொத்த வயதுடைய இச்சிறுவர்கள் உன்னுடன் விளையாட உன்னை அழைக்கின்றார்கள். மற்றும் நீ உறங்கப்படுத்து வெகுநேரமாயிற்று. உனக்குப் பசிக்குமல்லவா? ஆகையால் ஸ்தன்யம் பருக எழுந்திருப்பாயாக. உன்னைச் சேர்ந்த எங்கள் சோகங்களையெல்லாம் போக்குவாயாக. குழந்தாய்! அழகிய புன்னகையும் அசைகின்ற இமைமயிர்களோடுகூடின கண்களும் அமைந்த உன் முககமலத்தை நான் பார்க்கவில்லை. பாக்யமற்ற நான் இனியவைகளான உன் பேச்சுக்களை இன்னம் கேட்கவில்லை. இதற்குள்ளாகவே திரும்பி வராதபடி உன்னை மனஇரக்கமற்ற தெய்வம் லோகாந்தரத்திற்குக் கொண்டுபோயிற்று. நீ இப்படி என்னைத் துறந்து போகக்கூடாது?" என்று புலம்பினாள். இங்ஙனம் மரணம் அடைந்த புதல்வனைப் பற்றிப் பலவாறு புலம்புகின்ற க்ருதத்யுதியின் புலம்பல்களைக்கேட்ட சித்ரகேதுமன்னவன் சோகத்தினால் பரிதபித்துக் குரல் பாய்ச்சிப் புலம்பினான். அந்த ராஜனும் ராஜபத்னியுமாகிய இருவரும் புலம்பிக்கொண்டிருப்பது கண்டு அவர்களைத் தொடர்ந்த ஆண் பெண்கள் அனைவரும் கண்ணீர் பெருக்கி அழுதார்கள். மற்ற ஜனங்களால்

லோரும் சித்ரத்தில் எழுதின ப்ரதிமைகள்போல மதி யற்றிருந்தார்கள். இவ்வாறு அம்மன்னவனும் அவனைச் சேர்ந்தவர்களனைவரும் ஆகிய அனைவரும் பெருந்துக்கத்தில் ஆழ்ந்து ப்ரஜ்ஞையற்று உண்மையை உரைத்துத் தேற்றுவோர் எவருமின்றியிருப்பதை அறிந்து அங்கிராஸமுனிவர் நாரதருடன் அவ்விடம் வந்தார். பதினான்காவது அத்யாயம் முற்றிற்று.

நாரதரும் அங்கிராஸமுனிவரும் சித்ரகேதுவுக்குத் தத்வோபதேசம் செய்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—அங்கிராஸமுனிவர் நாரதமுனிவர் ஆகிய அவர்களிருவரும் மரணம் அடைந்த பிள்ளையின் அருகில் விழுந்து சோகத்தினால் மதிமயங்கி மரணம் அடைந்தாற்போலிருக்கிற சித்ரகேது மன்னவனை நோக்கி ப்ரக்ருதி புருஷன் ஈச்வரன் இவர்களின் உண்மையை அறிவிக்கிற இனிய உரைகளால் அவனுக்கு விவேகத்தை விளைத்துக்கொண்டு மொழிந்தார்கள். 'மன்னவனே! நீ எவனைப்பற்றிச் சோகிக்கின்றனையோ அத்தகைய இவன் ப்ரவாஹரூபமான ஸ்ருஷ்டியில் கடந்த காலத்திலாவது நிகழ்காலத்திலாவது வருங்காலத்திலாவது உனக்கு என்னவேண்டும்? நீயும் இவனுக்கு என்னவேண்டும்? நீ ஜீவாத்மாவைக் குறித்துச் சோகிப்பாயாயின் சோகிக்கப்படுகிற இந்த ஜீவனுக்கும் உனக்கும் என்ன ஸம்பந்தம்? மூன்று காலங்களிலும் இவனோடு உனக்கு ஒரு விதமான ஸம்பந்தமும் கிடையாது. தேஹத்தைப்பற்றின பிதாபுத்ர ஸம்பந்தத்தைப்பற்றிச் சோகிப்பாயாயின், அதுவும் அழகன்று. மண்கள் ப்ரவாஹவேகத்தினால் ஓரிடத்

தில் குன்றுய்ச் சேருகின்றன. ஓரிடத்தில் குன்றுயிருந்த மண்ல்கள் பிரிந்துபோகின்றன. அங்ஙனமே ப்ராணிகள் மற்றவர்களோடு காலத்திலை சேருவதும் பிரிவதுமாயிருக்கிறார்கள். விதைகள் முளைத்துக் காய்காய்த்துத் தம்மைப்போன்ற வேறு விதைகளை விளைக்கின்றன. காலக்ரமத்தில் அழிந்துபோகின்றன. அங்ஙனமே ப்ராணிகளிடத்தினின்று ஈச்வரனுடைய மாயையால் தூண்டப்பெற்று வேறு ப்ராணிகள் உண்டாகிறார்கள். கால க்ரமத்தில மரணம் அடைகிறார்கள். ஆகையால் ஈச்வரனுடைய மாயையின் மஹிமையை ஆராய்ந்து இவ்விஷயத்தில் சோகிக்கலாகாது. ராங்களும் நீயும் இதோ புலப்படுகின்றவர்களும் இக்காலத்திலுள்ள மற்ற ஜங்கமஸ்தாவரங்களும் ஆகிய எல்லாம் பிறந்ததற்கு முன்பு இல்லவேயில்லை; மரணம் அடைந்ததற்குப் பின்பும் இருக்கப்போகிறதில்லை. மன்னவனே! அங்ஙனமே இத்தேஹமும் இப்பொழுது களைந்து போக ஆரம்பித்தது. இனி இருக்கப்போகிறதில்லை. ஆகையால் இத்தேஹத்தைப் பற்றியும் சோகிக்கலாகாது. ப்ராணிகளுக்குள் புகுந்து நியமிக்கிற ஸர்வேச்வரன் தன்னுல் படைக்கப்பட்டனவகளும் தனக்குட்பட்டு ஸ்வாதீனமற்றனவகளுமான ப்ராணிகளைக் கொண்டு ப்ராணிகளைப் படைப்பதும் காப்பதும் அழிப்பதும் செய்கிறான். அவன் கர்மத்தினல் விளையும் பிறவியற்றவன்; அவாப்தஸமஸ்தகாமன். உலகத்தில் ஒருவன் ஒரு கார்யம் செய்யும்பொழுது தன் ப்ரயோஜனத்தையாவது பிறர் ப்ரயோஜனத்தையாவது கருதிச் செய்கிறான். ஈச்வரன் ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களைச் செய்வது தன் ப்ரயோஜனத்திற்காகவென்று சொல்லலாகாது. அவன் விருப்பங்களெல்லாம் கைகூடப்பெற்ற

வணைகயால் அவனுக்கு இவற்றால் ஆகவேண்டிய ப்ர யோஜனம் ஒன்றும் இல்லை. பிறர் ப்ரயோஜனத்திற் காகச் செய்கிறானென்று சொல்லவேண்டும். அதற்குப் பிறரிடத்திலுள்ள அருளே காரணமாக வேண்டும் கர்ப்பம் ஜன்மம் ஜரை மரணம் நரகம் முதலிய பலவகை யான துக்கங்களுக்கிடமான ஜகத்தை மன இரக்க முடையவன் எவனும் படைக்கமாட்டான். எவனும் ப்ர யோஜனத்தை எதிர்பாராமல் ஒருகார்யத்தைச் செய்ய மாட்டான் என்றால், ஈச்வரன் அவாப்த ஸமஸ்தகாம னென்பது வாஸ்தவம். அவன் தன் ப்ரயோஜனத்திற் காக ஸ்ருஷ்டிக்கிறானென்பதில்லை. ஸம்ஸாரம் பல துக் கங்களுக்கிடமாகையால் பிறர் ப்ரயோஜனத்திற்காக ஸ்ருஷ்டிக்கிறானென்பதும் இல்லை. ஆயினும் பாலர்கள் விளையாடுவதுபோல் ஈச்வரன் வேறு ப்ரயோஜனத்தை எதிர்பாராமலே ஸ்ருஷ்டிக்கிறான். ஈச்வரனுடைய ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களுக்கு விளையாட்டே ப்ர யோஜனம். ஆயினும் ப்ராணிகளை மேன்மையும் தாழ் மையுமாகப் படைக்கிறானையால் அவனுக்குப் பக்ஷி பாதமும், பலவகைத் துக்கங்களை விளக்கிறானையால் மன இரக்கமில்லாமையும் நேருமேயென்று சங்கிக்க வேண்டாம். அவன் ஜீவாத்மாக்களுடைய கர்மங்களை அனுஸரித்து மேன்மை தாழ்மைகளையும் ஸுக துக்கங் களையும் விளக்கிறானையால் அவனுக்குப் பக்ஷபாத மாவது மன இரக்கமில்லாமையாவது உண்டாகாது. மன்னவனே! பூமியில் நட்ட விதையினின்று வேறு விதைகள் உண்டாவதுபோல, ஜீவனுடைய தேஹம் தந்தையின் தேஹத்தினால் மாதாவின் தேஹத்தில் உண்டாகின்றது. அக்னிக்கு உஷ்ணம் போலவும், ஜலத் திற்குக் குளிர்ச்சிபோலவும், தேஹத்திற்கு மரணம்

அடைவது ஸ்வபாவம். ஆகையால் அதைப்பற்றிச் சிந்திக்கலாகாது. ஜீவன் என்றும் ஒருவாறுயிருப்பவன்; நித்யாநந்த ஸ்வரூபன்; ஆகையால் புருஷர்களால் ஆசைப்படத் தகுந்தவன். அத்தகையனான ஜீவனுக்குத் தேஹஸம்பந்தம் அநாதியான அவிவேகத்தினால் ஏற்பட்டதேயன்றி ஸ்வாபாவிகமன்று. முத்துச் சிப்பியைப் பார்த்து இது வெள்ளியென்று ப்ரமிப்பது போல், தேஹத்தை ஆத்மாவென்றும் தன்னை ஸ்வதந்த்ரனென்றும் ப்ரமிக்கின்றான். முத்துச்சிப்பியில் வெள்ளியென்னும் ஜாதி உருவம் இவற்றின் பிரிவுகள் ப்ரமத்தினால் கற்பிக்கப்படுவதுபோல் 'இத்தேஹம் இந்த ஜீவனுடையது; இந்த ஜீவன் இத்தேஹமுடையவன்' என்னும் பிரிவு அவிவேகத்தினால் கற்பிக்கப்படுகின்றது. ஆகையால் ஜீவனுக்குத் தேஹஸம்பந்தம் வந்தேறியேயன்றி நித்யமன்று" என்று மன்னவனுக்கு ஹிதம் உபதேசித்தார்கள். இங்ஙனம் அந்த ப்ராஹ்மணர்களின் உரைகளால் ஸமாதானம் செய்யப்பெற்ற சித்ரகேது மன்னவன் புத்ரசோகத்தினால் வாடின முகத்தைக் கையால் துடைத்துக்கொண்டு அவர்களை நோக்கி "நீங்கள் மஹாஜ்ஞானிகளாயிருக்கிறீர்கள்; மேன்மையுடைய பெரியோர்களுக்கும் பெரியோர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் அற்பதிவஷத்துடன் இங்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் யார்? பகவானுக்கு அன்பர்களான ப்ராஹ்மணர்கள் பித்தம் பிடித்தவர்போல் வேஷம் பூண்டு என்னைப்போன்ற மூடர்களுக்கு ஜ்ஞானோபதேசம் செய்யும்பொருட்டு இப்பூமியில் திரிகிறார்கள். அவர்களில் நீங்கள் யாவரோ தெரியவில்லை. ஸனத்குமாரர், நாரதர், ரிபு, அங்கிரஸ்ஸு, தேவலர், அஸிதர், அபாந்தரதமஸ்ஸு, வ்யாஸர், மார்க்கண்டேயர்,

கௌதமர், வஸிஷ்டர், பாசுராமர், கபிலர், ஸ்ரீசுகர், துர்வாஸர், யாஜ்ஞவல்க்யர், ஜாதுகர்ணி, ஆருணி, ரோமஸர், சியவனர், தத்தாத்ரேயர், ஆஸுரி, பதஞ்சலி, பராசரர், மைத்ரேயர், பாரத்வாஜர், வாருணி, வேதசிரர், ஆங்கிரஸர், பஞ்சசிகர், ஹிரண்யநாபர், கௌஸல்யர், ப்ருததேவர், ருதத்வஜர் இம்முனிவர்களும் மற்றும் பல முனிவர்களும் மூடர்களுக்கு ஜ்ஞானோபதேசத்தின் பொருட்டு இப்பூமண்டலத்தில் ஸஞ்சரிக்கிறார்கள். அவர்கள் தபஸ்ஸித்தி பெற்றவர்களில் சிறந்தவர்கள். ஜ்ஞானத்தையே செல்வமாக வுடையவர்கள். அவர்களில் நீங்கள் யாவரோ தெரியவில்லை. நீங்கள் யாராயிருந்தாலும், இருப்பீர்களாக. என்னைப் போன்ற மூடனுக்கு ஜ்ஞானோபதேசம் செய்யவல்லராயிருக்கிறீர்கள். நான் அஜ்ஞானமாகிற அந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கிறேன்; மூடபுத்தியுடையவன். மனுஷ்யனைப்போல் தோற்றுகிறேனேயன்றிப் பசுவின் தன்மையே எனக்குள்ளது. ஆஹாரம் நித்ரை பயம் மைதுனம் இவையொழிய மற்றொன்றும் அறியேன். பசுக்களைக்காட்டிலும் மனுஷ்யர்களுக்கு ஜ்ஞானமன்றோ விசேஷம்? அது எனக்கு முதலே கிடையாது. ஆகையால் இத்தகைய எனக்கு நீங்கள் ஜ்ஞானச்சுடர் விளக்கை ஏற்றிக் கொடுப்பீர்களாக" என்றான். அதைக் கேட்டு அங்கிரஸமஹர்ஷி மன்னவனைநோக்கி "ஓ ராஜனே! நீ பிள்ளை வேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கையில் உனக்குப் பிள்ளையைக் கொடுத்த அங்கிரஸமுனிவன் நான். இவர் ஒன்றான ப்ரஹ்மதேவனது புதல்வராகிய நாரதமஹர்ஷி; மஹானுபாவர். நீ இங்ஙனம் புத்ரசோகத்திலில் கடக்கமுடியாத அஜ்ஞானத்தில் ஆழ்ந்திருப்பதையும், நீ அதற்குத் தகாதவனென்

பூதையும், பெரியோர்களால் அனுக்ரஹிக்கத் தகுந்தவ
னென்பதையும் ஆராய்ந்து உன்னை அனுக்ரஹிக்கும்
பொருட்டு நாங்கள் இவ்விடம் வந்தோம். ப்ரபூ! ப்ராஹ்ம
ண குலத்திற்கு க்ஷேமம் செய்பவனும் பகவானிடத்
தில் பக்தியுடையவனுமாகிய உன்னைப்போன்றவன்
துக்கிப்பதற்கு உரியவனல்லன். முன்பு வந்தாற்போல்
உன் க்ருஹத்திற்கு வந்திருக்கிற நான் உனக்கு ஜ்ஞா
னத்தை உபதேசிக்கிறேன். நீ முன்பு பிள்ளைவேண்டு
மென்று வேறு விஷயத்தில் போகவுற்றிருந்தா
யாகையால் அதை அறிந்து நான் அப்பொழுது உனக்கு
பிள்ளையைக் கொடுத்தேன். மன்னவனே! பிள்ளை பெற்
றவர்களுக்கு நேரும் பரிதாபத்தை நீயே நேரில் அனுப
விக்கின்றனை. இங்ஙனமே உனவி மனை பணம் பலவகை
யான ஐஸ்வர்யப் பெருக்குகள் சப்தாதி விஷயங்கள்
ராஜ்யபோகங்கள் இவையெல்லாம் நிலையற்றவைகள்.
ராஜனே! பூமண்டலத்திற்கெல்லாம் ப்ரபுவாயிருக்கை,
யானை குதிரை முதலிய சதுரங்கபலம் கருவூலம் ப்ருத்
யர்கள் மந்த்ரிகள் நண்பர்கள் இவையெல்லாம் கந்தர்வ
நகரம்போலவும் ஸ்வப்னத்தில் காண்கிற ஆச்சர்யமான
மனோரதங்கள் போலவும் நிலையற்றவைகள். அவை
சோகம் மோஹம் பயம் இவற்றைக் கறக்கும். அவை
புலப்படுங் காலத்திலும் பரமபுருஷார்த்தமான ஆத்ம
தத்திற்கிடமல்லாமலே புலப்படும்; அழிந்த பின்பு மீள
வும் எக்காலத்திலும் புலப்படமாட்டா. ஸ்வப்னத்தில்
காண்கிற வஸ்துக்கள் போல நாம் விழித்துக்கொண்
டிருக்கும்பொழுது அனுபவிக்கும் வஸ்துக்களும் மனத்
தினின்றே உண்டாகின்றன. அதெப்படியென்றால், நாம்
அனுபவிக்கும் வஸ்துக்களெல்லாம் ஜன்மாந்தரத்தில்
செய்த கர்மங்களின் பலனாகவே ஏற்பட்டவை. அதனி

கர்மவாஸனையால் ஜீவன் கர்மங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறான். அம்மனத்தினால் தூண்டப்பட்டு மீளவும் கர்மங்களைச் செய்கிறான். ஆகையால் அக்கர்மங்களின் பலனாக ஏற்படும் வஸ்துக்கள் மனத்தினின்றும் உண்டானவைகளே. ப்ருதிவி முதலிய பஞ்சபூதங்கள் ஜ்ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள் இவற்றின் ஸமுதாயரூபமான தேஹம் ஜீவனுக்கு ஜன்மாந்தரத்தில் செய்த கர்மங்களின் பலனான பலவகை வருத்தங்களை அனுபவிப்பதற்காகவே ஏற்படுகின்றதென்று சொல்லுகிறார்கள். (முதலில் அனுதிவாஸனையோடு கூடினமனத்தினால் சப்தாதி விஷயங்களைச் சிந்திக்கிறான். அச்சிந்தையால் அவற்றைப் பெறுதற்குரிய புண்ய பாபகர்மங்களைச் செய்கிறான். அக்கர்மங்களால் ஸுகதுக்கங்களை அனுபவிப்பதற்கிடமான தேஹத்தைப் பெறுகிறான். அத்தேஹத்தினால் முன் ஜன்மத்தில் செய்த கர்மபலன்களை அனுபவித்துக்கொண்டே மீளவும் சப்தாதி விஷயங்களைச் சிந்திக்கிறான். அச்சிந்தையால் மீளவும் கர்மங்களைச் செய்கிறான். ஆகையால் ஜீவன் அனுபவிக்கும் வஸ்துக்களெல்லாம் மனத்தினுண்டானவைகளே.) இங்ஙனம் பிள்ளை பெண்டிர் முதலியவை அனைத்தும் ஸ்வப்னத்தில் கண்ட வஸ்துக்களைப்போல நிலையற்றவையாகையால் மனக்கலக்கமின்றித் தேஹாதிகளைக் காட்டிலும் விலக்ஷணனும் ஜ்ஞானஸ்வரூபனுமாகிய ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறிந்து தேஹத்தில் ஆத்மாபிமானத்தைத் துறந்து வைராக்யத்தை ஏற்றுக்கொள்வாயாக' என்றார். இங்ஙனம் அங்கிரஸ முனிவரால் விவேகம் உண்டாகும்படி உரைக்கப்பெற்ற சித்ரகேது மன்னவனைப் பார்த்து நாரத முனிவர் மொழிந்தார்: "மன்னவனே! நான் ரஹஸ்யமான மந்த்

ரத்தை உபதேசிக்கிறேன். இதை நீ மனவுக்கத்துடன் பெற்றுக்கொள்வாயாக. இதை மறவாமல் தியானிப் பாயாயின், ஏழுகாலைக்குமேல் ப்ரபுவான ஸங்கர்ஷண பகவானைக் காண்பாய். மன்னவனே! அவருடைய பாத மூலத்தைத் பணிந்து ருத்ரன் முதலிய பெரியோர்கள் இரண்டு வகையான ப்ரமத்தையும் துறந்து அப் பொழுதே இணையெதிரில்லாத அவருடைய மஹிமை யைப் பெற்றார்கள். நீயும் சீக்ரத்தில் மேலான அம் மஹிமையைப் பெறுவாய்" என்றார். பதினைந்தாவது அத்யாயம் முற்றிற்று.

நாரதமுனிவர் மரணம் அடைந்த பிள்ளை யின் வார்த்தைகளால் அம்மன்னனை தெளிவித்து அவனுக்கு வித்யோப தேசம் செய்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மன்னவனே! தேவர்ஷி யாகிய அங்காரதர், மரணம் அடைந்த ராஜகுமாரனை, அவனைப் பற்றிச்சோகிக்கிற அவனது பந்துக்களுக்குக் காட்டி இங்ஙனம் மொழிந்தார்.

நாரதர் சொல்லுகிறார்:— "ஓ ஜீவாத்மனே! உனக்கு க்ஷேமம் உண்டாகுக. சரீரத்தில் புகுந்திருக் கிற உனக்கு இச்சரீரத்தைப் பற்றி ஏற்பட்ட தாய் தந்தை நண்பர் பந்துக்கள் அனைவரும் உன்னைப்பற்றி வருந்துகிறார்கள்; காண்பாயாக. மிகுந்த வாழ்நாளும் இச்சரீரத்தில் புகுந்து நண்பர்களால் சூழப்பட்டு ராஜஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்து உன் தந்தை கொடுத்த போகங்களை அனுபவிப்பாயாக.

ஜீவன் சொல்லுகிறான்:—நான் என் கர்மங்களுக் குரியபடி தேவர் திர்யக்கு மனுஷ்யர் முதலிய பல

யோனிகளில் மாறிமாறிப் பிறந்து சுழன்றுகொண் டிருக்கிறேன். அவற்றுள் எந்த ஜன்மத்தில் இவர்கள் எனக்குத் தந்தையும் தாயுமாகவேண்டும்? ஜீவாத்மாக் கள் அனைவரும் பற்பல ஜன்மங்களைப் பெறுகின்றார்க ளாகையால் அவற்றில் ஒருவர்க்கொருவர் பந்துக்களும் ஜ்ஞாதிகளும் சத்ருக்களும் மத்யஸ்தரும் நண்பர்களும் உதாஸீனர்களும் த்வேஷிகளுமாகின்றார்கள். பொன் வெள்ளி முதலியவற்றால் செய்யப்பட்ட வளை மோதிரம் முதலிய வஸ்துக்கள் மனுஷ்யர்களிடத்தில் மாறிமாறி வருவதுபோல, ஜீவாத்மாக்கள் தேவமனுஷ்யாதி சரீ ரங்களில் மாறிமாறித் திரிகின்றார்கள். பசு முதலிய வஸ் துக்களை ஒருவன் விலைக்கு வாங்கினாலன், அதை அவனிடத்திலிருக்கும் வரையில் இன்னானுடைய தென்று சொல்லுகிறோம். அவனிடத்தினின்று அதை மற்றொருவன் விலைக்கு வாங்கிவிட்டால் அதற்கு அவ னுடைய ஸம்பந்தம் மாறி மற்றொருவனுடைய ஸம்பந் தம் உண்டாகின்றது. எந்த வஸ்துவோடு எவனுக்கு எது வரையில் க்ரயாதி ஸம்பந்தம் உள்ளதோ அது வரையிலுமே அதை அவனுடையதென்று உலகத்தில் வழங்கி வருகிறார்கள். அதுவும் ஜீவித்துக்கொண்டிருக் கும் பொழுதே. அப்பசு முதலியவை மரணம் அடையு மாயின் அவற்றிற்கு எவரோடும் ஸம்பந்தமில்லை. ஜீவன் இயற்கையில் தேஹாத்மாபிமான மற்றவன்; நித்யன்; அவன் கர்மத்தினால் தேவமனுஷ்யாதி தேஹங்களில் ப்ரவேசித்து அவற்றை எதுவரையில் விடாதிருக் கிறானோ அது வரையிலுமே அவனுக்கு அத்தேஹங் களோடு ஸம்பந்தமும் அத்தேஹங்களைத் தொடர்ந்த தந்தை முதலியவர்களோடு ஸம்பந்தமும் உள்ளது. அத் தேஹங்களை விடுவானாயின், அவற்றோடு ஸம்பந்தமே

இல்லாதிருக்க அவற்றைத் தொடர்ந்த மற்றவரோடு ஸம்பந்தம் எங்ஙனம் உண்டாகப்போகிறது? இந்த ஜீவன் ஆதியந்த மற்றவன்; அழிவில்லாதவன்; மிகவும் ஸூக்ஷ்மன்; ஜ்ஞானத்தையே முக்யமான ஆதாரமாகவுடையவன்; புத்தி இந்த்ரியம் மனம் ப்ராணன் முதலிய அனைத்திற்கும் ஆதாரமாயிருப்பவன்; ஸ்வயம் ப்ரகாசன். இத்தகைய ஜீவாத்மாக்களைப் பரம புருஷன் தன் மாயையின் குணங்களான ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களால் தேவமனுஷ்யாதியான இந்த ப்ரபஞ்சரூபமாகப் படைக்கிறான். இப்பரமபுருஷனுக்கு மிகவும் அன்பிற்கிடமானவன் எவனும் கிடையாது; ப்ரீதிக்கிடமாகாதவனும் கிடையாது; இவனுக்குத் தன்னுடையவனென்றும் பிறனென்றும் பேதம் கிடையாது. எல்லோரையும் இவன் ஸமமாகப் பார்க்குந்தன்மையன். புண்ய பாபங்களைச் செய்கின்ற ஜீவாத்மாக்களுடைய மேலுவ்ருத்திகளையெல்லாம் தானொருவனே ஸாக்ஷாத்கரிக்கின்றான். ஆகையால் அவர்களுடைய புண்யபாபங்களுக்குத் தகுந்தபடி மேன்மையும் தாழ்மையுமான பலவகைச் சரீரங்களையும் ஸுகதுக்கங்களையும் அவரவர்க்குக் கொடுக்கின்றனன்றிப் பக்ஷபாதத்தினலன்று. பரமபுருஷன் புண்யபாபங்களைத் தன்மேல் ஏற்றுக்கொள்கிறதில்லை. அவற்றின் பலன்களான ஸுகதுக்கங்களையும் ஏற்றுக்கொள்கிறதில்லை. ஜீவாத்மாக்களுக்கு அந்தர்யாமியாயினும் அவன் உதாஸீனன் போலிருக்கிறான். "ஜீவனுக்கும் புண்யபாபங்களைச் செய்யுந்தன்மை இயற்கையில் கிடையாது. அவன் செயலற்றவன். தேஹத்திற்கே அத்தன்மை உள்ளது. அத்தேஹத்தை நியமிக்கையே ஜீவனுக்கு உள்ளது. அந்த ஜீவனை ஈச்வரன் நியமித்துக் கொண்

டிருக்கிறான். ஆகையால் ஜீவாத்ம பரமாத்மாக்களிரு வர்க்கும் புண்யபாபங்களில் தேஹ முயற்சி கிடையாது. அப்படியிருக்க ஜீவன் மாத்ரம் அப்புண்ய பாபங்களின் பலனை அனுபவிப்பதும் ஈச்வரன் அதை அனுபவி யாததும் எங்ஙனம் பொருந்தும்?" என்றால், ஈச்வரன் ஜீவனையும் தேஹாதிகளையும் நியமித்துக்கொண்டு ப்ரக் ருதி புருஷர்களைக் காட்டிலும் விலக்ஷணமான தன் ஸ்வரூபத்தையும் தனக்கு உட்பட்ட ஜீவனுடைய ஸ்வ ரூபத்தையும் ப்ரக்ருதி ஸ்வரூபத்தையும் உள்ளபடி அறிகிறான். ஜீவனென்றால் கர்மத்தினால் தன் ஸ்வ பாவம் மறையப்பெற்றுத் தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமித்து அதன் தன்மையைத் தன்னிடத்தில் ஏற்றுக் கொள்கிறான். ஆகையால் அவன் புண்ய பாபங்களின் பலனை அனுபவிக்கிறான். ஈச்வரனுக்கு அத்தன்மை இல்லாமையால் அவன் அதனால் தீண்டப்படுகிற தில்லை.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—அந்த ஜீவன் இங்ஙனம் மொழிந்து அச்சரீரத்தினின்று புறப்பட்டுப்போனான். அப்பால் அங்குள்ள அவனுடைய பந்துக்கள் அனை வரும் வியப்புற்றுத் தமக்கு அவனிடத்திலுள்ள ஸ்நேஹ மாகிற சங்கிலியை அறுத்துக்கொண்டு சோகத்தைத் துறந்தார்கள். பிறகு பந்துக்கள் அப்புதல்வனுடைய தேஹத்தைக் கொண்டுபோய்ச் சிதையில் இட்டு அக்னி ஸம்ஸ்காரம் செய்து மற்றும் செய்யவேண்டிய கடன்களெல்லாம் முடித்துத் துறக்க முடியாததும் சோகம் மோஹம் பயம் பிடை இவற்றைக் கொடுப்பது மாகிய ஸ்நேஹத்தைத் துறந்தார்கள். மஹாராஜனே! விஷங்கொடுத்து அப்பாலனைக் கொன்றவர்கள் அனை வ

ரும் பாலனைக் கொன்ற பாபத்தினால் ஒளி மழுங்கப் பெற்று அங்கிரஸமுனிவர் சொன்ன வார்த்தையை நினைத்து வெட்கித்து அப்பாபத்தைப் போக்கும் பொருட்டு ப்ராஹ்மணர்களால் நிரூபிக்கப்பட்ட வ்ரதத்தை யமுனைக்கரையில் அனுஷ்டித்தார்கள். அப்பால் அச்சித்ரகேது மன்னவன் அங்கிரஸமுனிவருடைய சொற்களாலும் ஜீவனைக்கொண்டு சொல்வித்த நாரத ருடைய சொற்களாலும் விவேகம் உண்டாகப்பெற்றுக் குளத்தின் சேற்றினின்று யானை கரையேறுவதுபோல, இல்லறவாழ்க்கையாகிற பாழ்ங்கிணற்றினின்று கரை யேறினன். அவன் யமுனையில் ஸ்னானம் செய்து அக்நி யின் பரிசுத்தமானஜலத்தில் தர்ப்பணாதிகளைச்செய்து பரமாத்ம ஸ்வரூபத்தை ஆராய்ந்தறிவதற்காக இந்ரி யங்களை யெல்லாம் அடக்கி மௌன வ்ரதத்தையும் ஏற் றுக்கொண்டு ப்ரஹ்மாவின் புதல்வராகிய ஸ்ரீநாரத முனி வரைத் தெண்டனிட்டான். குருவைப் பணியவேண்டும் விதிப்படி பணிந்து குருபக்தியும் சொன்னதைக் கேட் டுத் தரிக்கும்படியான மனத்தூய்மையும் அமைந்திருக் கிற அம்மன்னவனைக் கண்டு நாரதமுனிவர் ஸந்தோஷம் அடைந்து அவனுக்கு ரஹஸ்யமான இம்மந்த்ர வித் தையை உபதேசித்தார்.

ஸ்ரீநாரதர் சொல்லுகிறார்:—பகவானே! வாஸு தேவன் ப்ரத்யும்னன் அநிருத்தன் ஸங்கர்ஷணன் என்று நான்கு வ்யூஹஸ்வரூபியான உனக்கு நமஸ்காரம். இப் படிப்பட்ட உன்னை த்யானிப்போமாக. நீ ஜ்ஞானகந்த ஸ்வரூபன்; அப்படிப்பட்ட ஸ்வரூபத்தை அனுபவிக்கை யால் என்றும் ஸந்தோஷமுற்றிருப்பவன்; நாகம் முத லிய தோஷங்களற்றவன். தேவன் மனுஷ்யன் முதலிய

ஜாதியும் சிறுமை பெருமை முதலிய பேதங்களும் தீண்டப்பெறாதவன். ஆநந்தஸ்வரூபனை தன்னைத் தான் அனுபவிக்கையால் பசி தாஹம் முதலிய ஊர்மிகள் தொலையப் பெற்றவன். இத்தகைய உனக்கு நமஸ்காரம். இந்த்ரியங்களுக்கும் அவற்றில் அபிமானிதேவதைகளுக்கும் நீ நியாமகன். ஸ்வரூபத்திலும் குணங்களிலும் அளவற்றவன். உன் சக்திகள் ஆச்சர்யமானவை. மற்றும் எல்லையில்லாதவை. உனக்கு நமஸ்காரம். மனமும் வாக்கும் உன் குணத்தை அளவிடப்புகுந்து முடியாமல் திரும்பிவிட்டன. நீ ஜ்ஞானத்தையே வடிவாகவுடையவன். இணை எதிரில்லாதவன். கர்மத்திலும் வரும் காமரூபங்களற்றவன்; சேதன அசேதனங்களைக் காட்டிலும் விலக்ஷணமானவன்; இத்தகைய பரமபுருஷன் நம்மைப் பாதுகாப்பானாக. இந்த ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணமான பரப்ரஹ்மம் நீயே. மண்ணால் இயற்றப்பட்ட குடம் முதலியவற்றில் மண் ஜாதி விட்டுப் பிரியாதிருப்பதுபோல் இந்த ப்ரபஞ்சமெல்லாம் உன்னிடத்தில் பிரியாதிருக்கின்றது. உனக்கு நமஸ்காரம். நீ இந்த ப்ரபஞ்சத்தில் உள்ளும் புறமும் வ்யாபித்திருப்பவன். அத்தகைய அந்த ப்ரபஞ்சத்தைச் சரீரமாகவுடையவன். உன்னைக் கர்மேந்த்ரியங்களும் ப்ராணன்களும் தொட வல்லவையல்ல. மனமும் புத்தியும் ஜ்ஞானேந்த்ரியங்களும் உன்னை அறிய வல்லவையல்ல. அத்தகைய உன்னை வணங்கினேன். நெருப்பில் காய்ச்சின இரும்பு மற்றொன்றைத் தஹிப்பது போல் தேஹம் இந்த்ரியங்கள் ப்ராணன்கள் மனம் புத்தி இவையெல்லாம் உன்னுடைய ஜ்ஞானம் க்ரியை முதலிய சக்திலேசத்தினால் தொடரப்பெற்றுத் தத்தமது செயல்களில் முயல்கின்றன. இல்லாத பக்ஷத்தில்

அவற்றிற்கு அச்சக்தியே உண்டாகாது. ஜீவனுக்கும் உன்னுடைய ஸங்கல்பத்தினால்தான் ஜ்ஞானவிகாஸம் உண்டாகின்றது. நீ ஷாட்குண்ய பூர்ணன். புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்ட மஹாபுருஷன் நீயே. நீ மஹாஜ்ஞாபாவன். கிர்யவிபூதி யென்றும் லீலாவிபூதியென்றும் மஹத்தான இரண்டு விபூதிகளுடையவன். மேன்மையுடைய பாகவதர்கள் அனைவரும் தாமரை மலர் போன்ற தமது கரங்களால் உன் பாதாரவிந்தங்களைப் பிடிக்கின்றார்கள். பரமனே! உனக்கு நமஸ்காரம்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மன்னவனே! நாரதமுனிவர் பக்தியுடன் தன்னைச் சரணம் அடைந்த சித்ரகேதுவுக்கு இங்ஙனம் இம்மந்த்ரவித்யையை உபதேசித்து அங்கிரஸமுனிவருடன் ஸத்யலோகம் போய்ச்சேர்ந்தார். சித்ரகேதுமன்னவன், நாரதர் உபதேசித்த வித்யையை விதிப்படி மனவுக்கத்துடன் ஜலத்தையே ஆஹாரமாகக்கொண்டு ஏழுநாள்வரையில் ஜபித்தான். அம்மன்னவன் ஏழுநாள் கழிந்தபின்பு அம்மந்த்ர வித்யையின் மஹிமையால் வித்யாதரர்களுக்கு ப்ரபுக்களாயிருக்கும் தன்மையைப் பெற்றான். பிறகு சிலநாட்களில் அவ்வித்யையின் ப்ரபாவத்தினல் நினைத்தபடி செல்லுந்திறமை வளரப்பெற்றுப் பாதாளத்தின் அடியிலிருக்கிற தேவதேவனாகிய ஸங்கர்ஷண பகவானுடைய பாதாரவிந்தங்களின் அருகுக்குச் சென்றான். அங்குத் தாமரைத் தண்டின் நூல்போல் வெளுத்துக் கறுத்த வஸ்த்ரம் தரித்துக் கிரீடம் தோள்வளை அரைநாண் கைவளை இவை அணிந்து தெளிந்த முகமும் சிவந்த கண்களும் அமைந்து ஸித்தேச்வரர்களின் கூட்டங்களால் சூழப்பட்டிருக்கும் ப்ரபுவாகிய ஸங்கர்ஷண

தேவனை அம்மன்னவன் கண்டான். அவன் அவரைக் கண்டமாத்ரத்தில் பாபங்களெல்லாம் தொலைந்து தூய மனத்தனாகி மிகுந்த பக்தியும் வளர்ந்து கண்களில் ஆநந்த பாஷ்பமும் பெருகி உடம்பில் மயிர்க்கூச்சலும் உண்டாகப்பெற்றுப் புராண புருஷனாகிய அவரை அடிக்கடி ப்ரதக்ஷிணம்செய்து நமஸ்கரித்தான். அப்பால் அச்சித்ரகேது புண்யஸ்லோகனை அந்த ஸங்கர்ஷண பகவானுடைய பாதபீடத்தை ஆநந்த நீர்த்துளிகளால் அடிக்கடி நனைத்து ஸந்தோஷத்தின் மிகுதியால் எழுந்து நிக்கவே உச்சரிக்க முடியாமல் தடுக்கப்பெற்று அந்தப் பகவானை ஸ்தோத்ரம் பண்ணவேண்டுமென்று விரும்பியும் நெடுநேரம் வரையில் முடியாமலேயிருந்தான். பிறகு அம்மன்னவன் அம்ருதம் போன்ற வார்த்தைகள் சேரப்பெற்று இந்த்ரியங்களை யெல்லாம் வேறு விஷயங்களில் போகவொட்டாமல் தடுத்துப் பஞ்சராத்ர சாஸ்த்ரங்களால் நிரூபிக்கப்பட்ட திவ்யமங்கள விக்ரஹத்தையுடைய ஜகத்குருவான அப்பகவானை இங்ஙனம் துதித்தான்.

சித்ரகேது சொல்லுகிறான்:—பகவானே! நீ பிறரால் வெல்ல முடியாதவனாயினும், மனத்தை வென்று ஜகத்தெல்லாம் பரப்ரஹ்மஸ்வரூபமேயென்று பாவிக்குந் தன்மையுடைய ஸாதுக்களால் வெல்லப்பட்டிருப்பவன். வேறு ப்ரயோஜனங்களை எதிர்பாராமல் உன்னைப் பணியும் பெரியோர்களுக்கு நீ உன்னையும் கொடுக்குந் தன்மையன். அந்த ஸாதுக்களும் உன்னுடைய வாத்ஸல்ய குணத்திற்குத் தோற்று உனக்கு வசப்பட்டிருக்கின்றனர். ஷாட்குண்ய பூர்ணனே! ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதிகள் உன்னுடைய ஐஸ்வர்

யம். உனக்கு மேற்பட்டவன் எவனுமே இல்லை. ப்ரஹ்மதேவன் முதலியவர் உன்னுடைய அம்சங்களே. ஆயினும் அவர்கள் அஜ்ஞானத்தினல் தாம் ஸ்வதந்த்ர ப்ரபுக்களென்று வீணுகவே கர்வப்படுகிறார்களன்றி அஃது உண்மையன்று. மிகவும் ஸூக்ஷ்மமான வஸ்துவுக்கும் மிகவும் பெரிய வஸ்துவுக்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் ஆகிய மூன்று தசைகளிலும் நீ அந்தர்யாமியாயிருக்கின்றனை. உனக்கு ஆதி கடு அந்தம் என்னும் இவை மூன்றும் கிடையாது. கார்யவஸ்துக்களின் ஆதியிலும் அந்தத்திலும் எது நிலைன்றிருக்கின்றதோ அதைச் சேர்ந்ததுதான் அவ்வஸ்துக்களின் கடு நிலைமையும் நீ இந்த ப்ரபஞ்சத்தின் ஆதியிலும் அந்தத்திலும் நிலைன்றிருப்பவனுகையால் அதன் கடு நிலைமையும் உன்னைச் சேர்ந்ததேயன்றி அந்த ப்ரபஞ்சத்தின் இடையிலுண்டான ப்ரஹ்மதேவன் முதலியவர்களைச் சேர்ந்ததன்று. இதோ புலப்படுகின்ற அண்டகோசம் ஒன்றைவிட ஒன்று பத்துமடங்கதிகமான ஏழு ஆவரணங்களால் சூழப்பட்டிருக்கின்றது. இதைப்போன்ற அண்டகோசங்கள் கோடிகோடியாக இதனுடன் இருக்கின்றன. இவை யெல்லாம் உன்னிடத்தில் அணுபோல் சுழல்கின்றன. ஆகையால் நீ அனந்தனென்று பேர்பெற்றனை. ஈசனே! சப்தாதி விஷயங்களில் விருப்பமுற்றுப் பசுக்களைப்போன்ற சில மூடர்கள் உனது விபூதிகளான இந்த்ரன் முதலிய தேவதைகளை உபாஸிக்கிறார்கள்; அவர்களுக்கும் மேலானை உன்னை உபாஸிக்கிறதில்லை. அவர்கள் அவ்விந்த்ராதி தேவதைகளிடத்தின்று பெறுகிற ஸ்வர்க்கம் முதலிய புருஷார்த்தங்களெல்லாம் அவ்விந்த்ராதி தேவதைகளோடுகூடவே அழிந்துபோகின்றன. ராஜகுலத்தில்

ஊழியம் செய்பவர்களின் பெருமையெல்லாம் அந்த ராஜகுலம் அழியும்போது அழிந்துபோமல்லவா? பரமனே! உன்னையே ப்ரயோஜனமாகக் கொண்டு உன்னிடத்தில் செய்யும் உபாஸனங்களெல்லாம் ஜன்ம ஜராமரணாதி துக்கங்களுக்கிடமான ஸம்ஸாரத்தை விலக்கமாட்டா. வறுத்த விதைகள் மீளவும் முளைக்கமாட்டாவல்லவா? ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களென்கிற ப்ரக்ருதியின் குணங்களால் விளையும் விகாரங்கள் உன்னைத் தீண்டவல்லவையன்று. நீ அபரிச்சின்ன ஜ்ஞானஸ்வரூபன். மற்ற தேவதைகள் அத்தன்மையரல்லர். ஆகையால் அவர்களைப் பற்றின உபாஸனங்கள் அழிந்துபோகின்றன. ப்ரஹ்மதேவன் முதல் பூச்சி புழு வரையிலுள்ள ஸமஸ்த ஜீவாத்மாக்களும் ப்ரக்ருதியின் குணங்களால் உண்டாகும் ஸுகதுக்கங்களை அனுபவிப்பவர்களே. ஆகையால் மனிதர்கள் புத்தியின்றித் தம்மைப்போல் கர்ம வச்யர்களான தேவதைகளைப் பணிவார்களாயின் எங்ஙனம் அனிஷ்டங்கள் கழியப் பெற்று இஷ்டங்களைப்பெறுவார்கள்? பரமனே! நீ எல்லாவற்றையும் உனக்கு உட்படுத்திக்கொண்டு அவற்றைக்காட்டிலும் மேற்பட்டிருக்கின்றனை யாகையால் அஜிதனென்று பேர்பெற்றனை. பஞ்சராத்ரம் கீதை முதலியவற்றில் நீ மொழிந்த உனது ஆராதன ரூபமான தர்மமும் உன்னைப்போலவே மேன்மையுடையது. எவ்வித தோஷத்திற்கும் இடமில்லாதது. வேறு ப்ரயோஜனங்களை விரும்பாமல் பரமாத்மாவான உன் குணங்களை அனுபவிக்குந் தன்மையுடைய பெரியோர்கள் நீ மொழிந்த தர்மத்தை மோக்ஷத்தின் பொருட்டு அனுஷ்டிக்கிறார்கள். ப்ராணிகளுக்கு வேறு விஷயங்களில் நீ தான் என்னுடையது உன்னுடையதென்று

வினைகிற விஷமபுத்தி நீ மொழிந்த தர்மத்தில் உண்டாகிறதில்லை. அஹங்காரமமகாரரூபமான விஷமபுத்தியுடன் தேவதாந்தரங்களைக் குறித்த ஆராதன ரூபமான மற்றதர்மங்கள் ராகத்வேஷாதிகளை உட்கொண்டிருக்குமாகையால் அபரிசுத்தமானவை; சத்ருமரணாதி ரூபமான பலன்களை உட்கொண்டிருக்குமாகையால் அதர்மங்கள் தலையெடுத்திருக்கும். தேவதாந்தரங்களை ஆராதிக்கையாகிற தர்மம் மிகவும் தேஹாப்ரமத்தை விளைக்கின்றமையாலும் சுடைசிலில் ஸம்ஸாரமாகிற பெரிய அனர்த்தத்தையே வளர்க்கின்றமையாலும் தன்னை அனுஷ்டிக்கிறவனுக்கு த்ரோஹம் செய்கிறதென்பதில் ஸந்தேஹமில்லை. சத்ருஹிம்ஸை முதலியவற்றை விரும்பிச் செய்கிறுணைகயால் பிறனுக்கும் த்ரோஹம் செய்கின்றது. அத்தகைய தர்மத்தினால் தனக்காவது பிறனுக்காவது என்ன கேஷமம் உண்டாகும்? சத்ருஹிம்ஸையை உத்தேசித்துச் செய்யுந்தர்மத்தினால் பிறனுக்கு மரணமே நேருமாகையால் அவனுக்கு கேஷமம் இல்லையென்பது நிச்சயம். அங்ஙனமே அதை அனுஷ்டிக்கிறவனுக்கும் கேஷமம் உண்டாகாது. ஒருகால் தற்காலத்தில் தனக்கு ஒருவிதமான கேஷமம் உண்டாயினும், அது எவ்வளவு புருஷார்த்தம்? அத்யல்பமல்லவா? மற்றும் இவன் தனக்குத்தானே த்ரோஹம் செய்கிறுணைகயால் பிறனுக்கு த்ரோஹம் செய்ய அஞ்சமாட்டானென்று நீயும் அவன்மேல் கோபித்துக்கொள்கின்றனை. ஒருகால் உனக்குக் கோபம் உண்டாகாமற் போயினும் பிறனைப் பீடிக்கிறுணைகயால் அதர்மம் உண்டாகாமற்போகாது. நாதனே! ஸமஸ்த கர்மங்களையும் என்னிடத்தில் அர்ப்பணம் செய்து மனஸுக்கத்துடன் என்னை உபாஸிக்கிறவர்களை

நான் சீக்ரத்தில் ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தினின்று கரையேற்றுகிறேனென்ற உன் ஸங்கல்பம் ஒருகாலும் பொய்யாகாது. நீ அந்த ஸங்கல்பத்தினால் உன்னுடைய ஆராதனரூபமான தர்மத்தைப் பஞ்சராத்ரம் முதலிய சாஸ்த்ரங்களின் மூலமாய் மொழிந்தனை. பெரியோர்கள் உன் ஸங்கல்பத்தை அறிந்து ஜங்கம ஸ்தாவர ரூபமான ஸமஸ்த ப்ராணி ஸமூஹங்களையும் உன்னுடைய உருவங்களாகவும் உன்னை அவற்றிற்கு அந்தராத்மாவாகவும் அவற்றையெல்லாம் நீயாகவும்பாவித்து நீ மொழிந்த தர்மத்தை அனுஷ்டித்துக்கொண்டு மோக்ஷத்திற்காக உன்னை உபாஸிக்கிறார்கள். பகவானே! ப்ராணிகளுக்கு உன்னுடைய தர்சனம் கேருமாயின், அவர்கள் ஸமஸ்த பாபங்களும் க்ஷீணிக்கப் பெறுவார்கள். இது சோதனன்று. யுக்தமே. ஏனென்றால், சண்டாள சண்டாளனுயினும் உன்னுடைய காமத்தை ஒருகால் கேட்பானுயின் ஸம்ஸார பந்தத்தினின்று விடுபடுகிறான். இனி நேரே உன்னுடைய காட்சியின் மஹிமையைப் பற்றிச்சொல்லவேண்டுமோ? பகவானே! இப்பொழுது நான் உன்னுடைய தர்சனத்தினால் மனமலங்களெல்லாம் கழுவப்பெற்றேன். உனது அன்பரும் தேவர்ஷியுமாகிய நாரதர் எனக்கு உபதேசித்த மந்த்ரத்தின் மஹிமையால் நான் உன்னைக் காணப்பெற்றேன். ஆசார்யானுக்ரஹம் இல்லையாயின் எனக்கு இது எப்படி கேரும்? ஓ அனந்தனே! இவ்வுலகத்தில் ஜனங்கள் செய்வதெல்லாம் அவர்களுக்கு அந்தராத்மாவாகிய உனக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் என்னைப் போன்றவர் உனக்குச் சொல்லவேண்டியது என்னிருக்கின்றது? ஒளிப்பெருக்கனைய ஸூர்யனுக்கு மின்மினிப் பூச்சிகளால் ஆகவேண்டியது

உண்டோ? நீ தேசகால வஸ்து பரிச்சேத மற்றவன். இவ்வுலகத்திலுள்ள ஜனங்கள் அனைவரும் உன்னால் கொடுக்கப்பட்ட ஜ்ஞானசக்திகளையுடையவர்கள். அத்தகைய நான் உன்குணங்களை எவ்வளவு துதிக்க வல்லேனு, அது உனக்கே தெரியும். சொல்லவேண்டியதில்லை. நீ ஷாட்குண்ய பூர்ணன்; தோஷங்கள் எனவையும் தீண்டப்பெறுதவன்; ஸமஸ்தமான ஜகத்திலுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களையும் நடத்துகின்றனை. குத்ஸிதமாகிகள் உனக்குட்படாத ஸ்வதந்த்ர வஸ்துக்கள் உண்டென்னும் பேதபுத்தியுடையவர்களாகையால் உன் ஸ்வரூப ஸ்வபாவங்களை அறியமாட்டார்கள். நீ மிகவும் பரிசுத்த ஸ்வரூபன். இத்தகைய உனக்கு நமஸ்காரம். நீ 'நான் பலவாய் விரியவேண்டும்' என்று ஸங்கல்பித்துக்கொண்டு விரிகையில், ப்ரஹ்மதேவன் முதலிய மற்ற ஸ்ருஷ்டிகர்த்தாக்கள் அனைவரும் உன்னைத் தொடர்ந்து ஸத்தைப்பெற்று ஸ்ருஷ்டிக்கிறார்கள். எல்லாவற்றையும் ஸாக்ஷாத்கரிக்கின்ற உன்னைத் தொடர்ந்து சித்தவ்ருத்திகளெல்லாம் விஷயங்களைத் தொடுகின்றன. இப்பூமண்டலமெல்லாம் உன் தலையில் கடுகுபோல் இருக்கின்றது. ஆயிரந் தலைகளுடையவனும் ஷாட்குண்ய பூர்ணனுமாகிய அத்தகைய உனக்கு நமஸ்காரம்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—குருவம்சாலங்காரனே! இங்ஙனம் துதி செய்யப் பெற்ற ஸங்கர்ஷண பகவான் மனக்களிப்புற்று வித்யாதரர்களுக்கு ப்ரபுவாகிய அச்சித்ரகேதுவைக் குறித்து இங்ஙனம் மொழிந்தான்: 'நாரதமுனிவரும் அங்கிரஸமுனிவரும் உனக்குப்ரக்ருதி புருஷ ஈச்வரர்களின் ஸ்வரூபத்தை விவரித்து மொழிந்

தார்களே, அது என்னுடைய கட்டளையே. அந்தராத்மாவாகிய என்னால் தூண்டப்பட்டே அவர்கள் உனக்கு அங்ஙனம் உபதேசித்தார்கள். மன்னவனே! அந்தகாரத் உபதேசித்த வித்யையாலும் என்னுடைய தர்சனத்தினாலும் நீ ஸித்திபெற்றனை உலகத்திலுள்ள ஸமஸ்த பூதங்களுக்கும் நான் அந்தராத்மாவாயிருந்து நியமித்துக்கொண்டு அவற்றைச் சரீரமாகக் கொண்டிருக்கிறேனையால் அவையெல்லாம் நானே. தேவமனுஷ்யாதி பூதங்களையெல்லாம் நானே என்னிடத்தினின்று படைக்கிறேன். உலகத்திலுள்ள சப்தங்களும் அவற்றால் அறியப்படும் பொருள்களுமாகிய இரண்டும் என்னுடைய ஸாச்வதமான சரீரங்கள். தேவ மனுஷ்யாதி சரீரங்களாய் விரிந்திருக்கிற ப்ரக்ருதியின் பரிணாமமான இந்த ப்ரபஞ்சத்தில் அந்தந்த சரீரங்களில் புகுந்து அவற்றைத் தரித்துக்கொண்டிருக்கிற ஜீவாத்மாக்கள் ஜீவாத்மாக்களால் தரிக்கப்பட்டிருக்கிற ப்ரபஞ்சம் ஆகிய இரண்டிலும் நான் உட்புகுந்து தரித்துக்கொண்டிருக்கிறேன். அவ்விரண்டும் என்னிடத்தில் லீலைகின்றிருக்கின்றன. ஸ்வப்னம் காண்கிறவன் அந்த ஸ்வப்னாவஸ்தையில் தன்னொருவனிடத்தில் பல சரீரங்களைக் காண்கிறான். உறங்கியெழுந்த பின்பு தன்னை ஓரிடத்தில் படுத்திருக்கிற சரீரத்தில் இருப்பதாகவே நினைக்கிறான். அந்த ஸ்வப்னாவஸ்தை ஜீவனுடைய ஸ்வரூபத்தினால் ஏற்பட்டதன்று. அவனுடைய புண்ய பாபகர்மங்களுக்குத் தகுந்தபடி ஈச்வரன் அந்தந்த வஸ்துக்களைப் படைத்துக் காட்டுகிறான். அந்த ஸ்வப்னாவஸ்தையைப்போல ஜாக்ரதவஸ்தை முதலிய மற்ற அவஸ்தைகளும் ஜீவனுடைய கர்மத்தின்படி ஈச்வரனால் தூண்டப்பட்ட ப்ரக்ருதியின் பரிணாமங்களே. அசேதனமான

ப்ரக்ருதிக்கு அந்த ஸ்வப்ந அவஸ்தைகளைக் காணுங் தன்மை இல்லாமையால் ப்ரக்ருதியின் பரிணமமான சரீரங்களில் ஜீவன் உட்புகுந்து அவற்றைத் தரித்துக் கொண்டு அந்த அவஸ்தைகளை அனுபவிக்கிறானென் றும், ஒரு சரீரத்திலுள்ள ஆத்மாவின் அனுபவம் மற் றொரு சரீரத்திலுள்ள ஆத்மாவுக்கு இல்லையாகையால் சரீரங்கள்தோறும் தனித்தனியே ஜீவாத்மாக்கள் இருக்கிறார்களென்றும், 'விழித்துக்கொண்டவன் நான் இங்ஙனம் ஸ்வப்னங்கண்டேன் என்று நினைக்கிறானை யால் ஸ்வப்னங்கண்டவனும் விழித்துக்கொண்டிருக்கிற வனும் ஒருவனே யென்றும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஸ்வப்னாவஸ்தையைப் போல ஜாக்ரதாதி அவஸ்தை களும் பரமாத்மாவினுடைய மாயையால் ஏற்பட்டனவ களேயன்றி ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தைப் பற்றினவ ளன்றென்று விவேகித்து அந்த அவஸ்தைகளுக்கு ஸாக்ஷியும் ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷணனு மாகிய ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை இங்ஙனம் ஸூக்ஷ்ம புத்தியால் ஆராய்ந்தறியவேண்டும். ஜீவன் எவனிடத்தில் சேர்ந்து ஸுஷுப்தியையும் ஸுகத்தை யும் அனுபவிக்கிறானே, அவன் கானேயென்று என்னை உணர்வாயாக. நான் கெட்ட குணங்கள் தீண்டப்பெறு தவன். என்னையே பரப்ரஹ்மமென்று ச்ருதிகள் சொல் லுகின்றன. உறக்கத்தையும் விழித்தலையும் அனுபவிக் கின்ற ஜீவனுடைய ஜ்ஞானமயமான ஸ்வரூபம் ஒரு அவஸ்தையோடு ஸம்பந்தித்திருக்கும்போழுது மற் றொரு அவஸ்தையால் விடுபட்டிருக்கும் ஜீவாத்மாவின் ஸ்வரூபமன்றேயெல்லா அவஸ்தைகளிலும் தொடர்ந்து வருகின்றது. அத்தகைய ஜீவாத்மாவைக் காட்டிலும் நான் விலக்ஷணமாயிருப்பவன். நான் எல்லா அவஸ்தை

களிலும் அந்த ஜீவாத்மாக்களுக்கு அந்தராத்மாவாகி அவர்களை நியமித்துக்கொண்டு தொடர்ந்திருப்பவன். ஆயினும் அந்தந்த அவஸ்தைகளைப் பற்றின ஸுகதுக்கங்கள் என்னைத் தீண்டமாட்டா. ஜீவாத்ம ஸ்வரூபத்திற்கு எல்லா அவஸ்தைகளிலும் தொடர்ந்திருக்கையும் ஜ்ஞானஸந்தாதி ரூபமாயிருக்கையும் தானன்றி தோற்றுகையும் இயற்கையாயிருப்பதுபோலப் பரப்ரஹ்மமாகிய எனக்குச் சரீரமாயிருக்கையும் அதற்கு இயற்கையென்று உணரவேண்டும். ஜீவன், எனக்குச் சரீரமாயிருக்கையாகிற தன் ஸ்வரூபத்தை மறந்து தன்னை ஸ்வதந்த்ரனாக நினைப்பானையின், ஒரு தேஹத்தை விட்டபின்பு மற்றொரு தேஹம் பெறுகையும் மரணம் அடைகையுமாகிற ஸம்ஸாரம் இவனுக்கு மாறுமலே யிருக்கும். இவ்வுலகத்தில் இந்த ஜீவன் சாஸ்த்ராப்யாஸத்தினால் விளையும் ஜ்ஞானத்திற்கும் விவேகம் வைராக்யம் முதலியவற்றால் உதவிசெய்யப் பெற்ற உபாஸன ரூப ஜ்ஞானத்திற்கும் விளை நிலமாகிய மனுஷ்ய ஜன்மத்தைப் பெற்றும் அத்தகைய ஆத்ம ஸ்வரூபத்தை அறியானையின், அவன் மற்ற எந்த ஜன்மத்திலும் க்ஷேமம் பெறமாட்டான். ஆத்மபரமாத்மாக்களின் உண்மையை அறிந்த பண்டிதன் சப்தாதி விஷயங்களை விரும்பி அவற்றைப் பெறுதற்காகச் செய்யும் செயலாகிற ப்ரவ்ருத்தி தர்மத்தில் சரீராயாஸம் முதலிய வருத்தம் உண்டாவதையும் வருந்திச் செய்தாலும் தாம் விரும்பினதற்கு விபரீதமான துக்கமே விளைவதையும், சப்தாதி விஷயங்களை விரும்பாமல் [1] அனன்ய ப்ரயோஜனமாகப் பகவானை ஆராதிக்கையாகிற ப்ரவ்ருத்தி தர்மத்தில் எவ்விதத்திலும் பயத்திற்கிடமாகாத

1. வேறு ப்ரயோஜனங்களை விரும்பாமல்.

மோக்ஷம் நேருவதையும் ஆலோசித்து அந்த ப்ரவ்ருத்தி தர்மத்தினின்று மீளவேண்டும். இல்லற வாழ்க்கையிலிருக்கின்ற ஆண் பெண்களிருவரும் ஸுகம் பெறுதற்காகவும் துக்கம் நீங்குவதற்காகவும் அவற்றிற்குரிய செயல்களைச் செய்கின்றார்கள். ஆயினும் அச்செயல்களால் அவர்களுக்குத் துக்கமும் நீங்குகிறதில்லை. ஸுகமும் உண்டாகிறதில்லை. நினைத்ததற்கு நேர்விபரீதமாகத் தேஹஸ்ரமம் பணச்சிலவு முதலியவற்றால் வருத்தமே உண்டாகின்றது. நாம் ப்ரவ்ருத்தி தர்மத்தை அனுஷ்டிப்பதில்வல்லவர் என்று அபிமானித்திருக்கும் ப்ராணிகளுக்கு இங்ஙனம் அச்செயல்களால் விபரீத பலமே உண்டாவதை ஆராய்ந்து ஜாகரம் ஸ்வப்னம்ஸுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளைக்கடந்திருப்பதும் கேவல சப்தாதி விஷயங்களில் விருப்பமுடைய மூடர்களால் அறியமுடியாததுமான ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை அறிந்து, இந்த லோகத்திலும் பரலோகத்திலும் உள்ள பலவகையான விஷய ஸுகங்களிலும் விவேகபலத்தினால் விருப்பத்தை அறுத்துக்கொண்டு சாஸ்த்ர ஜ்ஞானத்தினால் உதவிசெய்யப்பெற்ற பகவதுபாஸன ரூபஜ்ஞானத்தினால் ஸந்தோஷமுற்று எனக்கு மிகவும் அன்புறுவான். பரமாத்மோபாஸனத்தில் தேர்ந்தமதியுடைய மனிதர்கள், பரமாத்வாவுக்கும் தமக்கும் உள்ள ஐக்ய ஸம்பந்தத்தை உள்ளபடி ஆராய்ந்தறிவார்களாயின், அவர்கள் ஸர்வப்ராணத்தாலும் அறியவேண்டிய பொருள் இவ்வளவேயன்றி இதற்குமேல் மற்றொன்றும் இல்லை. ஓ மன்னவனே! நீ மனவுக்கமுற்று ஸ்ரத்தையுடன் ஜ்ஞானவிஜ்ஞானங்களின் பெருமையை விளக்கவல்ல என் வசனத்தை நெஞ்சில் நிறுத்திக்கொண்டு ஆத்ம பரமாத்

மாக்களுக்குள்ள நித்யஸம்பந்தத்தை அனுஸந்தித்து எல்லாம் பரப்ரஹ்ம ஸ்வரூபமே யென்று பாவித்துக் கொண்டிருப்பாயாயின், சீக்ரத்தில் மோக்ஷஸித்தியைப் பெறுவாய்' என்று மொழிந்தான். ஜகத்குருவும் ப்ராபஞ் சத்திற்கெல்லாம் அந்தராத்மாவுமாகிய ஸங்கர்ஷண பகவான் சித்ரகேது மன்னவனை இங்ஙனம் ஆஸ்வாஸப் படுத்தி, அவன் பார்த்துக்கொண்டிருக்கையில் அவ் விடத்திலேயே அந்தர்த்தானம் அடைந்தான். பதி னேழாவது அத்யாயம் முற்றிற்று.

சித்ரகேது மன்னவன் ருத்ரனைப் பரிஹ
ஸித்துப் பார்வதியின் சாபத்தினால்
விருத்ராஸுரனைப் பிறத்தல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—வித்யாதரர் தன்மை யைப் பெற்ற சித்ரகேது மன்னவன், அந்த ஸங்கர்ஷண பகவான் எந்தத்திக்கில் மறைந்தாரோ அந்தத்திக்குக்கு நமஸ்காரம் செய்து வித்யாதரர்களுடன் ஆகாயத்தில் திரிந்துகொண்டிருந்தான். அச்சித்ரகேது மன்னவன் பலமும் இந்த்ரியங்களும் இம்மியும் தடைபடாதிருக் கப்பெற்று லக்ஷம் லக்ஷவர்ஷங்கள் வரையில் முனிவர் களாலும் ஸித்தர்களாலும் துதி செய்யப்பெற்று நினைத்தபடி விளைகின்ற பலவகையான போக்ய போகோபகரணஸித்திகளையுடைய மேருமுதலிய குல பர்வதங்களின் சாரல்களில் வித்யாதரஸ்த்ரீகளைக் கொண்டு ஸ்ரீபகவானுடைய புகழைப் பாடுவித்துக் கொண்டு மனக்களிப்புற்றிருந்தான். அச்சித்ரகேது மன்னவன் தான் நினைத்தபடி பகவானால் கொடுக்கப் பட்டதும் ஜ்வலித்துக் கொண்டிருப்பதுமாகிய விமா னத்தில் ஏறிக்கொண்டு ஒருகால் ஆங்காங்கு ஸஞ்சரித்

கொண்டிருக்கையில் ஸித்தர்களாலும் யோகிகளாலும் சூழப்பட்டிருக்கிற ருத்ரனைக் கண்டான். அவன் மடியில் பார்வதியை உட்காரவைத்துப் புஜத்தினால் அணைத்துக்கொண்டு முனிவர்களின் ஸபையில் இருந்தான். அம்மன்னவன் அந்த ருத்ரனைக் கண்டு பார்வதி கேட்டுக் கொண்டிருக்கையில், அருகாமையில் உரக்கச் சிரித்து இங்ஙனம் மொழிந்தான். 'இந்த ருத்ரன் உலகங்களுக்கெல்லாம் நேரே ஹிதோபதேசம் செய்பவன். ப்ராணிகளுக்கு தர்மத்தை உரைப்பவன்; அவர்களில் ப்ரதானன். இத்தகைய இவன் ஸபையில் பார்வையுடன் இணைந்திருக்கிறான். மற்றும், இவன் ஜடைகளைத் தரித்திருக்கிறான். கொடுந்தவமுடையவன்; ப்ரஹ்மஜ்ஞானோபதேசம் செய்பவன். ஸபைக்கு ப்ரபு. இத்தகையனையினும் ஒன்றுமறியாத மூடன்போல், வெட்கமின்றி மடியில் மடந்தையை உட்காரவைத்துக் கொண்டிருக்கிறான். மற்றும், உலகத்திலுள்ள ஒன்றுமறியாத மூடர்களும் ஏகாந்தத்திலேயே மடந்தையர்களை மடியில் உட்காரவைத்துக் கொள்கிறார்கள். இவன் பெரிய வ்ரதங்களை அனுஷ்டிப்பவனையினும், ஸபையில் மடந்தையை மடியில் உட்கார வைத்துக்கொண்டிருக்கிறான். இது பெரிய விபரீதமாயிருக்கின்றதே' என்றான். பிறகு பகவானுகிய ருத்ரன் சித்ரகேதுவின் வசனத்தைக் கேட்டும் ஆழ்ந்த மதியுடையவனுகையால் சிரித்து ஒன்றும் பேசாமல் வெறுமனேயிருந்தான். அவனைத்தொடர்ந்த ஸபிகர்களும் பேசாமலேயிருந்தார்கள். சித்ரகேது மன்னவன் அந்த ருத்ரனுடைய மஹிமையை அறியாமல் ப்ரஹ்மஸ்வரூபனுகிய அச்சிவபெருமானைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கையில், [1]அம்பிகாதேவி,

---

1. பார்வதி.

ஜிதேந்திரியனென்று தன்னை அபிமானித்துக்கொண் டிருப்பவனும் துஷ்டஸ்வபாவனுமாகிய அச்சித்ரகேது வின்மேல் கோபமுற்று இங்ஙனம் மொழிந்தாள். 'இவன் இப்பொழுது உலகத்தில் விவேகமற்று வெட் கங்கெட்ட எங்களைப்போன்ற துஷ்டர்களுக்கு நன்மை தீமைகளை அறிவிக்க ஏற்பட்டிருக்கிறான் என்ன? கட் டளையைக் கடந்தால் தண்டிப்பான் போலும், தண்டிக்க வல்லவனாயிருக்கிறான். ப்ரஹ்மதேவனுக்கும் அவனது புதல்வர்களான ப்ருகு காரதர் முதலியவர்களுக்கும் ஸனத்குமார் கபிலமுனி இவர்களுக்கும் தர்மம் தெரி யாது போலும். தெரியுமாயின், தர்ம மர்யாதையைக் கடக்கின்ற இந்த ருத்ரனைத் தடுக்கமாட்டார்களா? இச்சிவபெருமான் அந்த ப்ரஹ்மாதிகளுக்கும் த்யானிக் கத் தகுந்த பாதாரவிந்தங்களை யுடையவன். உலகங்க ளுக்கு ஹிதோபதேசம் செய்பவன்; மங்களங்களுக்கும் மங்களன்; இத்தகைய சிவபெருமானையும் ஞானிகளான ரிஷிகளையும் அவமதித்து அவர்களைச் சிக்ஷிக்கத் தொடங்குகிறான். ஆகையால் துர்ப்புத்தியாகிய இந்த க்ஷத்ரியாதமன் தண்டிக்கத்தகுந்தவனே. ஸாதுக் களால் பணியப்பெற்ற பகவானுடைய பாதமூலத்தை அணுகுவதற்கு இவன் உரியனல்லன். இவன் தன்னைத் தானே மேன்மைக்கிடமாக அபிமானித்துக் கொண் டிருப்பவன். செருக்குற்றவன்' என்று மொழிந்து அவ னைக் குறித்து 'துஷ்ட புத்தியுடையவனே! நீ பகவா னைப் பணிதற்கு உரியவனல்லை. பிள்ளாய்! மீளவும் இவ் வாறு பெரியோர்களிடத்தில் அபராதப்படாதிருக்கும் படி பாபிஷ்டமான அஸுர ஜன்மத்தைப் பெறுவா யாக' என்று சபித்தாள். பாரதனே! இங்ஙனம் சபிக் கப்பெற்ற அச்சித்ரகேது மன்னவன் விமானத்தினின்று

இறங்கித் தலை வணங்கிப் பார்வதியை அருள்புரியும்படி வேண்டினன். 'அம்பிகே! நீ கொடுத்த சாபத்தை நான் கைகுவித்துப் பெற்றுக்கொள்கிறேன். நீ கொடுத்த சாபம் எனக்கு அனுக்ரஹமேயன்றி நிக்ரஹமன்று. தேவதைகள் சொல்லுவதெல்லாம் ப்ரீதியையே முன்னிட்டுக்கொண்டிருக்கும். அது அவனுடைய ஜன்மாந்தர கர்மத்தினல் ஏற்பட்டதேயன்றி வேறன்று. மோக்ஷத்தைத் தடுக்கின்ற ஜன்மாந்தர கர்மங்களால் இந்த ஸம்ஸாரத்தில் உழன்றுகொண்டிருக்கிற நான் உன் சாபத்தை அனுபவிக்கையால் அக்கர்மங்களெல்லாம் தீரப்பெற்றுச் சீக்ரத்தில் பகவானைப் பெறுவேனல்லவா? சக்ரம்போல் சுழல்கின்ற ஜன்மஜரா மரணாதி ரூபமான இந்த ஸம்ஸாரத்தில் ஜீவன் அனுதியான புண்ய பாபரூப கர்மத்தினல் மதிமயங்கித் தேஹாத்மையே ஆத்மாவாக அபிமானித்துத் திரிந்துகொண்டு ஜன்மாந்தர வாஸனையால் தூண்டப்பெற்று மேன்மேல் ஸுகதுக்கங்களை விளக்கும்படியான கர்மங்களைச் செய்துகொண்டே பூர்வகர்மங்களின் பலனை ஸுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறான். ஸம்ஸாரத்தினின்று நீங்காதிருக்கும் வரையில் இந்த விஷயம், நான் நீ மற்றவர் ஆகிய அனைவர்க்கும் துல்யமே. ஸுகதுக்கங்களை விளக்கிறவன் தானுமல்லன்; பிறனுமல்லன். அவற்றிற்கு அவரவர்களுடைய கர்மமே காரணம். புண்யபாபங்களின் உண்மையை அறிந்தவன் பரமாத்மாவையே அவற்றிற்குக் காரணமாக நினைக்கின்றான். புண்யபாபங்களாவன பரமாத்மாவின் நிக்ரஹானுக்ரஹங்களே. ச்ருதி ஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களில் சொன்னபடி அனுஷ்டிக்கிறவனிடத்தில் பரமபுருஷனுக்கு அனுக்ரஹம் உண்டாகின்றது. அதுவே புண்

யம். அதைக் கடந்து கடக்கிறவனிடத்தில் அவனுடைய நிக்ரஹம் உண்டாகின்றது. அதுவே பாபம். இப்புண்ய பாபங்களே கர்மமென்று கூறப்படுகின்றன. ஸுகதுக்கங்கள் இவற்றின் பலனே. ஆகையால் ஜீவனுடைய ஸுகதுக்கங்களுக்குக் கர்மமேகாரணமென்பதில்விரோதமில்லை. நிக்ரஹாநுக்ரஹங்களைச் செய்கிறவன் பரம புருஷனேயாகையால் அவனே ஸுகதுக்கங்களுக்குக் காரணமென்று அறிஞர் நினைக்கிறார்கள். இதுவரையில் ஸம்ஸாரஸுகங்களைப் புருஷார்த்தமாகவும் ஸம்ஸாரதுக்கங்களை அபுருஷார்த்தங்களாகவும் ஒப்புக்கொண்டு மொழிந்தேன். உண்மையை ஆராய்ந்தால் அது பொருளல்ல. ஸத்வ ரஜஸ் தமோ குணங்களின் பரிணமரூபமான இந்த ப்ரக்ருதி மண்டலத்தில் சாபமாவதென்ன? அனுக்ரஹமாவதென்ன? அவற்றின் ஸ்வரூபத்தைத் தனித்தனியே விவரித்துச் சொல்லமுடியாது. இரண்டும் துல்யமே. 'அனுக்ரஹம் ஸ்வர்க்கத்திற்குக் காரணம். நிக்ரஹம் நரகத்திற்குக் காரணம்' என்று அவற்றின் ஸ்வரூபத்தை விவரித்துச் சொல்லலாமே யென்னில், ஸ்வர்க்கமாவதென்? நரகமாவதென்? அவற்றையும் விவரித்துச் சொல்ல முடியாது. 'ஸ்வர்க்கமாவது ஸுகம், நரகமாவது துக்கம்' என்று விவரிக்கலாமே யென்னில், ஸுகமாவதென்? துக்கமாவதென்? அவற்றை நிரூபிக்க முடியாது. ஸம்ஸாரத்தில் விளையும் ஸுகதுக்கங்களிரண்டும் துல்யமாகவே யிருக்கும். ஸ்வர்க்கம் ஸுகரூபமாயிருக்குமாயின், அது துக்கத்தை உட்கொண்டிருக்கலாகாது. நரகம் துக்க ரூபமாயின், அது ஸுகத்தை உட்கொண்டிருக்கலாகாது. ஸ்வர்க்கமும் கடைசியில் துக்கத்திற்கிடமாகின்றது. நரகமும் கடைசியில் சிறிது ஸுகத்திற்கிடமாகின்றது. இங்ஙனம்

ஸுகதுக்கங்களிரண்டும் துக்க ஸுகங்களை உட்கொண் டிருக்கின்றனவாகையால் அவற்றின் ஸ்வரூபத்தை நிர்ணயிக்க முடியாது. சாபகரக துக்கங்கள் எங்ஙனம் புருஷார்த்தமாகமாட்டாவோ அங்ஙனமே அனுக்ரஹம் ஸ்வர்க்கம் ஸுகம் இவைகள் புருஷார்த்தமாக மாட்டா. தோஷங்கள் தீண்டப்பெறுதவனும் ஷாட் குண்ய பூர்ணனுமாகிய பரமபுருஷன் தானொருவனே தன்மாயையால் ப்ரஹ்மதேவன் முதல் பூச்சி புழு வரையிலுமுள்ள ஸமஸ்த பூதங்களையும் படைக்கின் றான். அவன் கர்மத்தினால் லீலையும் சரீரமற்றவன். அவனே அப்பூதங்களின் கர்மங்களுக்குத் தகுந்தபடி பந்தம் மோக்ஷம் ஸுகம் துக்கம் இவைகளைப் படைக் கின்றான். அவன் பக்ஷபாதத்தினால் ஒருவனுக்கு ஸுகத்தையும் ஒருவனுக்குத் துக்கத்தையும் விளைக் கிறதில்லை. வாஸ்தவத்தில் ஜீவாத்மாக்களில் ஒரு வனுக்கு மற்றொருவன் இஷ்டனுமல்லன்; த்வேஷியுமல் லன்; ஜ்ஞாதியுமல்லன்; பந்துவுமல்லன்; பிறனுமல்லன்; தன்னுடையவனுமல்லன். அவ்வாத்மாக்கள் தேவ மனுஷ்யாதி சரீரங்களெல்லாவற்றிலும் ஜ்ஞானஸந்த ஸ்வரூபர்களாகி ஒருவராகவே இருக்கின்றனர். ஒருவரோடொருவர்க்குத் தாரதம்யம் உண்டாகி லன்றோ இஷ்டன் அனிஷ்டனென்னும் பிரிவு நேரிடும். அந்தப் பிரிவு அவர்களுக்கு ஸ்வரூபத்தைப் பற்றின தன்று. தேஹங்களால் பலவாறாகத் தோற்றினும் அப் பேதங்களெல்லாம் கேவல தேஹங்களைப் பற்றினவை களேயன்றி ஆத்மாக்களைச் சேர்ந்தவையன்று. ஜ்ஞானஸந்த ஸ்வரூபர்களாகையால் அவர்களுக்குச் சப்தாதி விஷயங்களால் விளையும் ஸுகத்தில் விருப்பம் கிடையாது. ஆகையால் அந்த ஸுகத்தைப் பெறுதற்

குத் தடை செய்பவரிடத்தில் கோபம் உண்டாவதற்கு ப்ரஸக்தியே இல்லை. ஆயினும் அந்த ஜீவாத்மாக்களுக்கு அனுதிவாஸனையால் மேன்மேல் வினையும் கர்மமே ஸுகம் துக்கம் நன்மை தீமை சரீரஸம்பந்த ரூபமான ஜனனம் மரணம் இவை அடங்கின ஸம்ஸாரத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாகின்றது. ப்ரளய காலத்தில் ஜீவாத்மாக்கள் ஈச்வரனிடத்தில் மறையும் பொழுதும் அவர்களுக்குக் கர்மவாஸனை மாத்ரம் மாறுகிறதில்லை. மீளவும் கல்பாதியில் மன இரக்கமுடைய ஸர்வேச்வரன் 'இவர்கள் நம்மை ஆராதித்துக் கரையேறட்டும்' என்று அவ்வாத்மாக்களுக்குக் காரணகோடி பரங்களையும் நன்மை தீமைகளை அறிவிக்கும்படியான சாஸ்த்ரத்தையும் கொடுக்கிறான். அவர்கள் பூர்வவாஸனையால் சப்தாதி விஷயங்களையே விரும்பி அவற்றைப் பெறுதற்குரிய கர்மங்களைச் செய்து அவற்றின் பலன்களை அநுபவித்துக்கொண்டு மேன்மேலும் ஸம்ஸாரத்தையே வளர்த்திக்கொள்கிறார்கள். இப்படியிருக்கையில் திடீரென்று யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் முதலிய புண்யகர்மத்தினால் மோக்ஷ மார்க்கத்தில் இறங்குவார்கள். மடந்தையர்மணீ! உண்மை இதுவாகையால் சாபத்தை மாற்றிக்கொள்ளும் பொருட்டு நான் உன்னை வேண்டவில்லை. நான் சொன்னது தப்பென்று நினைக்கின்றாயே, அதைப் பொறுக்க வேண்டுமென்று உன்னை நான் வேண்டிக் கொள்கிறேன்' என்றான். ஓ பரீக்ஷித்து மன்னவனே! இங்ஙனம் அச்சித்ரகேது பார்வதியை அருள்புரிவித்துக்கொண்டு பார்வதி பரமேச்வரன் இருவரும் வியப்புடன் பார்த்துக்கொண்டிருக்கையில் விமானத்தின்மேல் ஏறிநடந்தான். பிறகு மஹாநுபாவனாகிய ருத்ரன் தேவர்ஷிகளும்

ரைதத்யர்களும் ஸித்தர்களும் தன் பரிவாரங்களும் கேட்டுக்கொண்டிருக்கையில் பார்வதியைப் பார்த்து இங்ஙனம்மொழிந்தான். 'அழகிய நிதம்பங்களுடைய வளே! பார்வதி! பரம புருஷன் ஸ்ரீஹரி ஆச்சர்யமான செயலுடையவன். அவனுடைய பக்தர்கள் சப்தாதி விஷய ஸுகங்களை விரும்பமாட்டார்கள்; தமக்கு அபகாரஞ் செய்பவர்களுக்கும் உபகாரத்தையே தேடுந் தன்மையர்; ஸுகம் துக்கம் இவையிரண்டையும் துல்யமாகவே நினைப்பார்கள். அத்தகைய ஹரிபக்தர்களின் மஹிமையை நீ நேரில் கண்டனுபவித்தாயல்லவா? ஸ்ரீமந் நாராயணனையே பரதத்வமாக நம்பியிருக்கும் நல்லோர்கள் அனைவரும் இங்ஙனமே எதற்கும் பயப்படமாட்டார்கள். அவர்கள் ஸ்வர்க்கம் நரகம் மோக்ஷம் இவையெல்லாவற்றையும் துல்யமாகவே நினைப்பார்கள். ஜீவாத்மாக்களுக்கு ஈஸ்வரனுடைய லீலா ரூபமான ஜகத் ஸ்ருஷ்டியாலேற்பட்ட தேஹ ஸம்பந்தமே ஸுக துக்கங்களுக்கும் ஜன்ம மரணங்களுக்கும் சாப அனுக்ரஹங்களுக்கும் காரணம். ஆத்மாக்கள் அனைவரும் ஜ்ஞானத்தை வடிவாக வுடையவர்கள். அவர்களுக்குத் தேவமனுஷ்யாதி பேதம் கிடையாது. அஜ்ஞானத்தினால் அவர்களிடத்தில் அந்தப் பேதத்தை ஏறிடுகிறார்களேயன்றி, அது உண்மையன்று. அங்ஙனமே 'ஸுகம் ஜன்மம் அனுக்ரஹம் இவை குணங்கள். துக்கம் மரணம் சாபம் இவை தோஷங்கள்' என்னும் பிரிவும் ஸ்வப்னத்திலுள்ள பேதம்போல் அஜ்ஞானத்தினால் கற்பிக்கப்பட்டதே. சாஸ்த்ராப்யாஸத்தினால் ப்ரக்ருதி புருஷ ஈஸ்வரர்களின் உண்மையை அறிந்து சப்தாதி விஷயங்களில் விருப்பமின்றி மஹாநுபாவனான பகவானிடத்தில் பக்திசெய்யுந் தன்மையுடைய மனிதர்

களுக்கு எவ்விதத்திலும் பேதபுத்தி உண்டாகாது. இனி அவர்களுக்கு அவற்றைப்பற்றின பயம் எப்படி உண்டாகும்? ருத்ரனென்று ப்ரஸித்திபெற்ற நான் ப்ரஹ்மதேவன் ஸனத்குமாரர் நாரதர் ப்ரஹ்மாவின் புத்ரர்களான மரீசி முதலிய முனிவர்கள் இந்த்ரன் முதலிய தேவஸ்ரேஷ்டர்கள் ஆகிய நாங்கள் அனைவரும் அந்த ஸ்ரீமந்நாராயணனுடைய செயலையாவது ஸ்வரூபத்தையாவது அறிய வல்லமல்லோம். நாங்களெல்லோரும் அவனால் கொடுக்கப்பட்ட ஜ்ஞானசக்திகளையுடையவர்கள். அந்த ஜ்ஞானசக்திகளும் ஸூர்யனுக்கெதிரில் மின்மினிப் பூச்சி போலவே. அவ்வளவைக் கொண்டே நாங்கள் ஸ்வதந்த்ர ப்ரபுக்களென்று அபிமானித்துக்கொண்டிருக்கிறோம். ஆகையால் நீ என்னை ஈச்வரனாக ப்ரமிக்கவேண்டாம். அந்த ஸர்வேச்வரனுக்கு மிகுந்த அன்பனவது த்வேஷியாவது எவனுமே கிடையாது. அவன் ஸமஸ்தப்ராணிகளுக்கும் அந்தராத்மாவாகையால் அனைவர்க்கும் அன்பனே. அவன் தன்னைப் பற்றினவர்களுடைய வருத்தங்களைப் போக்கி இஷ்டங்களைக் கொடுக்குந்தன்மையன். எவர்கள் தமக்கும் பரமாத்மாவாகிய அந்தப் பகவானுக்குமுள்ள சரீராத்மபாவ ஸம்பந்தத்தை அறிந்து அவனைத் தொடர்கின்றார்களோ, அவர்களிடத்தில் அவனுக்கு அனுக்ரஹம் உண்டு. மற்றவர்களிடத்தில் அது கிடையாது. இவ்வளவு மாத்ரத்தினால் அவனுக்குப் பக்ஷபாதம் உண்டென்று சொல்லலாகாது. இந்தச் சித்ரகேது மன்னவன் கல்லவிவேகி; எல்லாவற்றையும் ஸமமாகப் பார்க்குந் தன்மையன்; ராகாதி தோஷங்களற்றவன்; அந்த ஸ்ரீமந்நாராயணனுடைய பக்தன்; அவனுக்கு மிகுந்த அன்பன். இவனைப்போலவே நானும்

அவனிடத்தில் பக்தியுடையவன்; அவனுக்கு நண்பன். இவ்வளவேயன்றி நான் ப்ரபுவல்லேன். ஆகையால் ப்ரக்ருதி புருஷ ஈச்வரர்களின் உண்மையை அறிந்தவர்களும் ஸமதர்சிகளும் சாந்தர்களுமான அந்த மஹாபுருஷனுடைய பக்தர்களிடத்தில் நம்முடைய மேன்மையைக் காண்பிக்கலாகாது. நாம் அவர்கள் விஷயத்தில் கர்வப்படுவதும் யுக்தமன்று' என்றான். பார்வதியும் இங்ஙனம் மொழிந்த சிவபெருமானுடைய வார்த்தையைக் கேட்டுக் கர்வமின்றி மதிதெளியப்பெற்றாள். பகவத் பக்தனுகிய சித்ரகேது பார்வதிக்கு ப்ரதி சாபங் கொடுக்க வல்லவனேயினும் அவளுடைய சாபத்தைச் சிரத்தினால் அங்கீகரித்தான். அபகாரம்செய்பவர்களுக்கும் உபகாரம் செய்கையாகிற இவ்வளவே ஸாதுக்களின் லக்ஷணம். இச்சித்ரகேது மன்னவனேத்வஷ்டாவின் ஸங்கல்பத்தினால் தக்ஷிணாக்னியில் பிறந்தான். அவனே அஸுரர்களின் இயற்கையைப்பெற்று வ்ருத்ரனென்று பேர்பூண்டுப்ரஸித்தனேயிருந்தான். அவன் முன் ஜன்மத்தில் பகவத்பக்தனேயிருந்தானேகையால் இந்த ஜன்மத்தில் அவன் ஜ்ஞானமும் விஞ்ஞானமும் அமைந்திருந்தான். அஸுரஜாதியான வ்ருத்ராஸுரனுக்குப் பகவத்பக்தி உண்டானதின் காரணத்தைப்பற்றி வினவினேயல்லவா? அதன் காரணத்தை யெல்லாம் இங்ஙனம் உனக்கு விரிவாகக் கூறினேன். மஹானுபாவனுகிய சித்ரகேதுவைப் பற்றின இவ்விதிஹாஸம் புண்யமானது. இதில் விஷ்ணுபக்தர்களின் மஹிமை அமைந்திருக்கின்றது. இதைக்கேட்பவன் ஸம்ஸாரபந்தத்தினின்று விடுபடுவான். விடியற்காலத்தில் எழுந்து ஒருவரோடும் பேசாமல் ச்ரத்தையுடன் பகவானை நினைத்துக்கொண்டு இந்த இதிஹாஸத்தைப் படிப்பா

ஞயின், மேலானகதியைப் பெறுவர்ன். பதினேழாவது அத்யாயம் முற்றிற்று.

திதியிடத்தினின்று மருத்துக்கள் உண்டான விதம் கூறுதல்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—ஸவிதாவின்பத்னியாகிய ப்ருஸ்ணியென்பவள், ஸாவித்ரி முன்று வ்யாஹ்ருதிகள் அக்னிஹோத்ரம் பசுயாகம் சோமயாகம் சாதுர்மாஸ்யம் பஞ்சமஹாயஜ்ஞங்கள் ஆகிய இவற்றின் அபிமானி தேவதைகளைப் பெற்றாள். பகவானுடைய பார்யையாகிய ஸித்தியென்பவள், அங்கன் மஹிமன் விபு ப்ரபு என்னும் நான்கு பிள்ளையும், ஸாச்சிஸ்வரென்னும் அழகிய ஓர் புதல்வியையும் பெற்றாள். தாதாவின் பத்னிகள் நால்வரில் குஹூவென்பவள் ஸாயஜ்ஞயும், ஸினீவாலியென்பவள் தர்சஜ்ஞயும், ராகையென்பவள் ப்ராதஜ்ஞயும், அனுமதி யென்பவள் பூர்ணமாஸஜ்ஞயும் பெற்றார்கள். விதாதாவென்பவன் க்ரியை யென்னும் தன் பத்னியிடத்தில் புரீஷ்யர்களென்னும் அக்னிகளைப் பெற்றான். வருணனுடைய பத்னி சர்ஷணி யென்பவள். முதலில் ப்ரஹ்மாவுக்குப் பிள்ளையாகப் பிறந்த ப்ருகு இவளிடத்தில் மீளவும் பிறந்தார். மஹாயோகியான வால்மீகியும் வருணனுக்கு வல்மீகத்தில் பிறந்தவர். மித்ரன் ரேவதி யென்னும் தன் பார்யையிடத்தில் உத்ஸர்க்கன் அரிஷ்டன் பிப்பலன் என்று மூன்று பிள்ளைகளைப் பெற்றான். ஒருகால் இந்த மித்ரன் வருணன் இவர்களிருவரும் பூர்வையென்னும் அப்ஸரஸ்த்ரீயின் அருகாமையில் திடீரென்று நழுவின ரேதஸ்ஸை ஒருகுடத்தில் விட்டார்கள். அக்குடத்தில்

அகஸ்த்யர் வஸிஷ்டர் இவ்விருவரும் பிறந்தார்கள். ஆகையால் இந்த அகஸ்த்ய வஸிஷ்டர்களிருவரும் மித்ராவருணர்களின் புதல்வர்கள். அப்பனே! ஸமர்த்தனுகிய தேவேந்த்ரன் புலோமரது புத்ரியாகிய சசீதேவியிடத்தில் ஜயந்தன் ருஷபன் மீட்வான் என்று மூன்று பிள்ளைகளைப் பெற்றனென்று எங்களுக்குக் கேள்வி. தன் ஸங்கல்பத்தினுல் வாமனரூபியாய் அவதரித்து மூன்றடிகளால் உலகங்களை யெல்லாம் அளந்த பகவானுக்குத் தன் பத்னியாகிய கீர்த்தியென்பவளிடத்தில் ப்ருஹச் ச்லோகனென்னும் பிள்ளை பிறந்தான். அவனுக்கு ஸௌபகன் முதலியவர்கள் பிறந்தார்கள். கஸ்யபருக்கு அதிதியிடத்தில் வாமன ரூபியாய்ப் பிறந்த பகவானுடைய செயல்களையும் குணங்களையும் வீர்யங்களையும் அதிதியிடத்தில் அவன் பிறந்த விதத்தையும் மேல் சொல்லப்போகிறேன். இப்பொழுது, கஸ்யபரது புதல்வர்களுக்குச் சத்ருக்களான திதியின் பிள்ளைகளை உனக்குச் சொல்லுகிறேன், கேட்பாயாக. இந்தத் திதியின் வம்சத்தில் மஹாபாகவதனும் குணங்கள் நிறைந்தவனுமாகிய ப்ரஹ்லாதனும் பலி சக்ரவர்த்தியும் பிறந்தார்கள். திதிக்கு இரண்டே புதல்வர்கள். அவர்களில் ஒருவன் ஹிரண்யகசிபுவென்பவன். மற்றொருவன் ஹிரண்யாக்ஷன். அவ்விருவரும் தைத்யர்களாலும் தானவர்களாலும் பூஜிக்கப்பட்டிருந்தார்கள். ஹிரண்யகசிபுவின் பார்யை தனுவம்சத்தில் பிறந்த ஜம்பனுடைய புதல்வி, கயாதுவென்பவள். அவள் ப்ரஹ்லாதன் அனுஹ்லாதன் ஸம்ஹ்லாதன் ஹ்லாதன் என்று நான்கு பிள்ளைகளையும் ஸிம்ஹிகையென்ற ஓர் பெண்ணையும் பெற்றுள். அந்த ஸிம்ஹிகை விப்ரசித்தியை மணம்புரிந்து அவனிடத்தினின்று ராஹு

ணவப் பிள்ளையாகப் பெற்றாள். அந்தராஹ்ரு அம்ருதத்தைப் பருகும்பொழுது பகவான் சக்ராயுதத்தினால் அவன் தலையை அறுத்தான். ஸம்ஹ்லாதனுடைய பார்யை மதியென்பவள். அவள் பஞ்சஜனனென்னும் பிள்ளையைப் பெற்றாள். ஹ்லாதனுடைய பார்யை தமனியென்பவள். அவள் வாதாபி இல்வலன் என்று இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களில் இல்வலன் அகஸ்த்யரை விருந்துண்ண அழைத்து மேஷத்தினுருவங் கொண்ட வாதாபியைச் சமைத்தான். அனுஹ்லாதனுடைய பார்யை ஸுர்ம்யை யென்பவள். அவள் பாஸ்கரன் மஹிஷன் என்று இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். ப்ரஹ்லாதனுடைய பார்யை துரி யென்பவள். அவனுக்கு அவனிடத்தில் விரோசனன் பிறந்தான். அவனுக்குப் பலி சக்ரவர்த்தி பிறந்தான். அவன் சமனென்னும் தன் பார்யையிடத்தில் பாணன் முதலிய நூறுபிள்ளைகளைப் பெற்றான். அந்த ப்ரஹ்லாதன் பலி இவர்களின் ப்ரபாவம் மிகவும் புகழத்தகுந்தது. அதை மேல் சொல்லப்போகிறேன். பாணன் ருத்ரனை ஆராதித்து அவனுடைய பரிவாரங்களில் தலைமையைப் பெற்றான். மஹானுபாவனாகிய அந்த ருத்ரன் இப்பொழுதும் அவன் பட்டணத்தைப் பாதுகாத்துக்கொண்டு அவன் பக்கத்திலேயே இருக்கின்றான். நாற்பத்தெட்டு மருத்கணங்களும் திதியின் பிள்ளைகளே. அவர்களுக்கு ஸந்ததி கிடையாது. அவர்களெல்லோரும் இந்த்ரனால் தேவத்தன்மையைப் பெற்றார்கள். ஆகையால் மருத்துக்கள் திதியின் பிள்ளையாயினும் அவர்களுக்கும் தேவதைகளுக்கும் விரோதம் கிடையாது.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:- அஜ்ஞானமாகிற இருளைப்போக்குந் திறமையமைந்தவரே! மருத்

துக்கள் இந்த்ரனல் தேவத்தன்மையைப் பெற்ரூர்க ளென்று மொழிந்தீர். அவர்கள் ஜன்மஸித்தமான அஸுரத் தன்மையைத் துறந்து எங்ஙனம் தேவத் தன்மையைப் பெற்ரூர்கள்? அவர்கள் இந்த்ரனுக்கு அப்படிப்பட்ட உபகாரம் என்ன செய்தார்கள்? இந்த விஷயத்தைதக் கேட்கவேண்டுமென்னும் விரூப்பம் எனக்கு மாத்ரமேயன்று. இந்த ரிஷிகளுங்கூட இதை அறியவேண்டுமென்னும் ஸ்ரத்தையுடன் இருக்கிரூர் கள். மஹாநுபாவரே! ஆகையால் இதை எங்களுக்கு மொழியவேண்டும்.

ஸூதர் சொல்லுகிரூர்:—ஸௌனகரே! ஸ்ரீசுகர் சொல் மிதமாகவும் பொருள் கனமாகவும் மொழிந்த விஷ்ணுராதனுடைய வசனத்தை ஆவலுடன் கேட்டு மனப்பூர்த்தியாக அம்மன்னவனைப் புகழ்ந்து சொல் லத் தொடங்கினர்.

ஸ்ரீசுகர் சொல்லுகிரூர்:—மன்னவனே! இந்த்ரனைத் தன் பக்ஷத்தில் கொண்டு பாதுகாக்கின்ற ஸ்ரீமஹா விஷ்ணுவால் ஹிரண்யாக்ஷன் ஹிரண்யகசிபு ஆகிய தன் புதல்வர்களிருவரும் மாளப்பெற்ற திதி சோகத்தி னல் கோபம் கிளர்ந்தெழப் பெற்றுப் பரிதபித்துச் சிந் தித்தாள். 'இந்த்ரன் விஷயஸுகங்களில் மனம்சென்று கொடுந்தன்மை பூண்டு மன இரக்கமற்றுத் தன் ப்ரா தாக்களான என் புதல்வர்களை விஷ்ணுவின் மூலமாய்க் கொல்வித்தான். பாபிஷ்டனாகிய அவ்விந்த்ரனைக் கொல்வித்து நான் எப்பொழுது ஸுகமாகத் தூங்கு வேன்? ஒருவன் தன்னைத் தான் ப்ரபுவாக அபிமானித் திருப்பினும் அவன் மரணம் அடைந்த பின்பு அவனது சரீரத்தைதக் கொளுத்தாத பக்ஷத்தில் புழுவென்றும்,

காய் முதலியவை பக்ஷிக்குமாயின் விஷ்டை யென்றும், கொளுத்துவார்களாயின் பஸ்மமென்றும் பெயர்கள் விளைகின்றன. அத்தகைய தேஹத்தின் ஸுகத்திற்காக ப்ராணிகளுக்கு த்ரோஹம் செய்பவன் தன் புருஷார்த்தத்தை அறிவானே? அறியமாட்டான். அறிவானையின் அப்படி ப்ராணி த்ரோஹம் செய்யமாட்டான். அந்த ப்ராணி த்ரோஹத்தினால் நரகமேயன்றே பலிக்கும்? இந்தச் சரீரத்தையே ஆத்மாவாக அபிமானித்துச் செருக்குற்றிருக்கிற இந்த்ரனது கொழுப்பை அடக்கும்படியான புதல்வன் எனக்கு எந்த உபாயத்தினால் உண்டாவனே அந்த உபாயத்தை நான் அனுஷ்டிக்க வேண்டும்' என்று சிந்தித்தாள். மன்னவனே! அந்தத் திதி இங்ஙனம் அபிப்ராயங்கொண்டு சுப்ரூஷை ஸ்னேஹம் வணக்கம் இந்த்ரிய நிக்ரஹம் இவற்றால் தன் பர்த்தாவான கஸ்யபர்க்கு ஸர்வகாலமும் ப்ரியத்தை ஆசரித்து வந்தாள். மனக்கருத்தை அறியுந்திறமை யுடைய திதி மிகுந்த பக்தியினாலும் இனிய உரைகளாலும் புன்னகையோடு கூடின கடைக்கண்ணோக்கத்தினாலும் கஸ்யபருடைய மனத்தை வசப்படுத்திக் கொண்டாள். அக்கஸ்யப ப்ரஜாபதி அறிஞராயினும் புருஷர்களை வஞ்சிக்குந் திறமையமைந்த பெண்மணியாகிய திதியால் மதிமயங்கும்படி வஞ்சிக்கப்பட்டு மெய்ம்மறந்து அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக் கொண்டார். மடந்தையர் தாமே மேல் விழுந்து விரும்பும்பொழுது புருஷன் உட்படுவது ஆச்சர்யமன்றல்லவா? அந்தக் கஸ்யப ப்ரஜாபதி முதலில் ஆண் பெண்கள் ஒருவரோடொருவர் ஒரே வஸ்துபோல் கலந்திருப்பதை ஆலோசித்துத் தானும் தன் பத்னியாகிய அத்திதியைத் தன் சரீரத்தில் பாதியாகப் பண்ணிக்கொண்

டார். ஸ்த்ரீகளால் புருஷர்களின் புத்தி பறிக்கப்படு கின்றதல்லவா? அப்படியே! கஸ்யபர் தன் பத்னியாகிய திதியால் இங்ஙனம் ஸம்போகங்கொடுத்து உபசாரம் செய்யப்பெற்று மிகுந்த ஸந்தோஷம் அடைந்து அவளுடைய புணர்ச்சியின் திறமையைக் கொண்டாடிச் சிரித்து அவளை நோக்கி 'அழகிய துடைகளுடையவளே! நிந்தைக்கிடமில்லாதவளே? உனக்கு இஷ்டமான வரத்தை வேண்டிக் கொள்வாயாக. கணவன் நன்கு ஸந்தோஷமுறுவானையின் பெண்டிர்களுக்கு எந்த விருப்பந்தான் கைகூடாதுபோம்? எல்லாம் கைகூடுமல்லவா? ஸ்த்ரீகளுக்குப் பதியன்றே மேலான தெய்வம். ஸமஸ்த ப்ராணிகளின் மனத்திற்கு ஸாக்ஷியும் ஸர்வாந்தராத்மாவும் ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு வல்லபனுமாகிய ஸர்வேச்வரன் நாமங்களாலும் உருவங்களாலும் வெவ்வேறாயிருக்கிற அக்னி இந்த்ரன் முதலிய தேவதைகளாகிற தன் சரீரங்கள் மூலமாய் ஆராதிக்கப்படுவதுபோல், அந்த ஸர்வேச்வரன் பதியின் உருவங்கொண்டு ஸ்த்ரீகளால் ஆராதிக்கப்படுகிறான். ஸ்த்ரீகளுக்கு அவரவரது கணவர்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொடுக்கும் திறமையற்றவர்களேயாயினும் அவர்களைச் சரீரமாகக் கொண்ட ஸர்வேச்வரன் அவர்கள் செய்யும் பதி சுச்ரூஷைகளைத் தானே பெற்று ஸந்தோஷம் அடைந்து அவர்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொடுக்கிறான். அழகிய இடையையுடையவளே! பதிவ்ரதைகளான பெண்கள் நன்மையை விரும்பி மாறாத கருத்துடன் ஸர்வேச்வர ஸ்வரூபியான கணவனையே ஆராதிக்கிறார்கள். மங்கள ஸ்வபாவமுடையவளே! நீ என்னை இத்தகைய கருத்தினால் பக்தியுடன் நன்கு ஆராதித்தனை. ஆகையால், உன்னு

டைய விருப்பத்தை நான் ஸித்தமாய் நிறைவேற்றிக் கொடுக்கிறேன். உன்னைப்போன்ற பதிவ்ரதைகளைத் தவிர மற்றவர்களுக்கு இங்ஙனம் விருப்பங்கள் நிறைவேறமாட்டா. உனக்கு என்ன விருப்பமோ அதைச் சொல்வாயாக' என்றார். திதியும் கச்யபரை நோக்கி 'ப்ராஹ்மண ச்ரேஷ்டரே! எனக்கு வரங்கொடுக்க விருப்பமிருந்தால் தேவதைகளால் பிள்ளைகள் அடியோடு மாளப்பெற்ற நான் இந்த்ரனை வதிக்கும்படியான பிள்ளையை வேண்டுகிறேன். இந்த்ரனன்றோ பகவானைக் கொண்டு என் புதல்வர்களைக் கொன்றான்' என்றாள். அவ்வந்தணர் அவளது வசனத்தைக் கேட்டு மிகவும் வருந்தி 'இப்போது எனக்குப் பெரிய அதர்மம் நேர்ந்தது. ஆ! என்ன வருத்தம்! ஆ! நான் இவ்வதர்மத்தினால் நரகத்தில் விழுவேன். இது நிச்சயம். நான் இந்த்ரிய ஸுகங்களில் மனம் தாழ்ந்து மடந்தையாகிற பகவானுடைய மாயையால் மனம் பறியுண்டு மனக்களிப்பற்று வருந்துகிறேன். தனக்கு ஏற்பட்ட இயற்கையை அனுஸரித்து நடக்கிற மடந்தைக்கு எதுதான் தோஷம்? எதுவும் தோஷமன்று. தன்ப்ரயோஜனத்தை அறியாத என்னையே நிந்திக்கவேண்டும். ஏனென்றால், நான் இந்த்ரியங்களைப் பாராட்டி அவற்றின் வழியே நடந்தேனல்லவா? ஆ! ஸ்த்ரீகளின் முகம் சரத்காலத்து சந்த்ரனைநிகர்த்தது. பேச்சும் செவிகளுக்கு அம்ருதம் போன்றது. மனமோ வென்றால் தீட்டின கத்திபோன்றது. ஆகையால் அவர்களுடைய நடத்தையை எவன் தான் அறியவல்லவன். ஸ்த்ரீகளுக்கு மனப்பூர்த்தியாக ஒருவனும் அன்பனல்லன். அவர்கள் தமது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதில் மாத்ரமே மனமுக்கமுடையவர்கள். தங்கள் விருப்பத்திற்காகக் கணவனை

யும் பிள்ளையையும் உடன்பிறந்தவனையும்கூடக் கொல்லுவார்கள்! அன்றிக் கொல்விப்பார்கள். கொடுக்கிறேனென்று ப்ரதிஜ்ஞை செய்தவார்த்தை பொய்யாகக் கூடாது. ப்ரதிஜ்ஞை செய்தபடி கொடுப்பேனையின், இந்த்ரனைக் கொல்ல வெண்டியதாயிருக்கிறது. இந்த்ரனையும் வதிக்கலாகாது. நான் இத்தகைய ஸங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டேன். ஆனால் இவ்விஷயத்தில் இப்படிச் செய்யவேண்டும்' என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டு மஹாநுபாவராகிய அக்கஸ்யபர் சிறிது கோபமுற்றுத் தன்னைத்தானே பழித்துக்கொண்டு அவளை நோக்கி 'கல்லியற்கையுடையவளே! உனக்கு நான் ஒரு வ்ரதம் சொல்லுகிறேன். இதை நீ ஓராண்டு நிரம்பும் வரையில் தவறுமல் கண்டு கடத்துவாயாயின், உனக்கு இந்த்ரனை வதிக்கும்படியான புதல்வன் பிறப்பான். இல்லையாயின் அவன் தேவதைகளுக்குப் பக்துவாய் விடுவான்' என்றார். அதைக் கேட்ட திதியும் 'அந்தணர் தலைவரே! அப்படியே நீர் சொல்லும் வ்ரதத்தை அனுஷ்டிக்கிறேன். அதற்காக நான் செய்யவேண்டிய கார்யங்களையும், வ்ரதத்திற்குப் ப்ரதிகூலங்களையும் அனுகூலங்களையும் எனக்குச் சொல்லவேண்டும்' என்றாள். கஸ்யபரும் ப்ராணி ஸமூஹங்களை ஹிம்ஸிக்கலாகாது. எப்படிப்பட்ட கஷ்டம் நேரினும் சபிக்கலாகாது. பொய் பேசலாகாது. நகங்களையும் மயிர்களையும் சேதிக்கலாகாது. அமங்கள வஸ்துக்களைத் தொடலாகாது. ஜலத்தில் இறங்கி ஸ்நானம் செய்யலாகாது. எவரிடத்திலும் கோபங்கூடாது. துஷ்டர்களோடு பேசலாகாது. அசுத்தமான வஸ்த்ராத்தை உடுத்தலாகாது. சூடிக்களைந்த பூமாலையை மீளவும் சூடலாகாது. எச்சிலான அன்னம், பத்ரகாளிக்கு நிவேதனம் செய்த அன்னம்,

எறும்பு முதலியவை தீண்டின அன்னம், சூத்ரன் கொண்டு வந்த அன்னம், ரஜஸ்வலை பார்த்த அன்னம் இவ்வைவந்து அன்னங்களையும் புசிக்கலாகாது. அஞ்சலியால் ஜலம் பருகலாகாது. தீட்டுப் பட்டால் ஸ்நானம் செய்யாதிருக்கலாகாது. காலை மாலைகளில் தலைமயிர்களை விரித்து அலங்காரம் செய்துகொள்ளாதிருக்கலாகாது. மௌனவ்ரதம் தவறலாகாது. போர்வையின்றி வெளியில் திரியலாகாது. கால்களை அலம்பாமலும் மனஸுக்கமில்லாமலும் படுக்கலாகாது. காலிரத்துடனும் படுக்கலாகாது. வடக்கேயாவது, மேற்கேயாவது தலை வைத்துப் படுக்கலாகாது. பிறரோடு படுக்கலாகாது. காலை மாலைகளில் படுக்கலாகாது. சுத்தமான வஸ்த்ரம் தரித்து எப்பொழுதும் பரிசுத்தையாகி மஞ்சள் சந்தனம் முதலிய மங்கள த்ரவ்யங்களை யெல்லாம் அணிந்து காலையில் ஆஹாரம் புசிப்பதற்கு முன்னமே ஸ்ரீமஹாலக்ஷ்மியையும் ஸ்ரீமஹாவிஷ்ணுவையும் பூஜிக்கவேண்டும். பிள்ளையுடையவர்களும் ஸௌமங்கலிகளுமான பெண்டிர்களைப் புஷ்பம் சந்தனம் உபஹாரம் ஆபரணம் முதலியவற்றால் பூஜிக்கவேண்டும். பர்த்தாவையும் பூஜித்து அவனுடைய அருகில் இருக்கவேண்டும். தன் கணவனே தன் வயிற்றில் இருப்பதாகத்யானிக்க வேண்டும். இத்தகைய அங்கங்களோடு கூடின இந்த வ்ரதத்திற்குப் பும்ஸவனமென்று பெயர். ஒரு வர்ஷம் வரையில் இந்த வ்ரதத்தைச் சிறிதும் தவறாமல் அனுஷ்டிப்பாயாயின், உனக்கு இந்த்ரனை வதிக்கும்படியான புதல்வன் உண்டாவான்' என்றார். மன்னவனே! இங்ஙனம் சொல்லப்பட்ட திதி அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித்து, அந்த வ்ரதத்தில் மனம் செல்லப்பெற்றுக் கஸ்யபரிடத்தினின்றும் கர்ப்பத்

ணைத்தரித்து வ்ரதத்தையும் ஊக்கத்துடன் அனுஷ்டித்து வந்தாள். பிறகு தேவேந்த்ரன் அறிஞனுகையால் தன் தாய்க்கு உடன்பிறந்தவளாகிய திதியின் அபிப்பிராயத்தை அறிந்து கச்யபருடைய ஆச்ரமத்தில் வ்ரதத்தை அனுஷ்டித்துக் கொண்டிருக்கிற திதிக்குச் சுச்ரூஷை செய்து வந்தான். அவன் தினந்தோறும் வனத்தினின்று புஷ்பங்களையும் பழங்களையும் வேர்களையும் கிழங்குகளையும் ஸமித்துக்களையும் தர்ப்பங்களையும் இலைகளையும் தளிர்களையும் அறுகம்புல் முளைகளையும் மண்ணையும் ஜலத்தையும் வேண்டிய காலங்களில் கொண்டுவந்து கொடுத்தான். இங்ஙனம் அந்தத் திதி வ்ரதத்தில் நிலைநின்றிருக்கையில், தேவேந்த்ரன் 'வ்ரதத்தில் ஏதேனும் கெடுதி சேருமா? இவள் கர்ப்பத்தை நான் ஸமயம் பார்த்து அழித்துவிடுவேனே?' என்று ஸமயம் பார்த்துக்கொண்டே, வேடன் மான்தோலை மூடிக்கொண்டு மான்களைத் தொடர்வதுபோல் கெட்ட எண்ணத்துடன் அவளுக்குச் சுச்ரூஷை செய்துவந்தான். மன்னவனே! அவ்விந்த்ரன் வ்ரதத்தின் [1]சித்தத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தும் அவனுக்கு அது புலப்படவில்லை. அதற்குமேல் அவன் 'எந்தவிதத்தில் எனக்கு க்ஷேமம் உண்டாகும்!' என்று கொடுஞ்சிந்தையுற்றிருந்தான். ஒரு ஸமயம் அந்தத் திதி வ்ரதத்திலே நிலைநின்றிருக்கையில், தேவேந்த்ரன் ஆசமனம் செய்யாமலும் கால்களை அலம்பிக்கொள்ளாமலும் அசுசியாகி ஸாயங்கால ஸந்த்யையில் தெய்வாதீனமாய் மதிமயங்கிப் படுத்து உறங்கினுள். யோகஸாமர்த்யமுடைய தேவேந்த்ரன் அந்த ஸமயம் பார்த்து உறக்கத்திலே மதிமயங்கியிருக்கிற திதியின் வயிற்றில் யோகமாயை

---

1. கெடுதியை.

யால் புகுந்தான். அவன் உள்ளே புகுந்து பொன் நிற முடைய அவள் கர்ப்பத்தை வஜ்ராயுதத்தினால் ஏழு பாகங்களாகப் பிளந்தான். அழுகின்ற அக்கர்ப்பத்தின் ஒவ்வொரு பாகத்தையும் அழவேண்டாமென்று சொல்லிக்கொண்டே ஏழுபாகங்களாகப் பிளந்தான். அங்ஙனம் அறுப்புண்ட கர்ப்பத்தின் கண்டங்கள் அவயவங்களெல்லாம் பிரிந்திருக்கப்பெற்றுக் கைகளைக் குவித்துக்கொண்டு இந்த்ரனை நோக்கி 'ஓ இந்த்ரனே! நாங்கள் உன் ப்ராதாக்கள்; மருத்துக்களென்னும் பேருடையவர்கள். எங்களை ஏன் வதிக்கப்பார்க்கிறாய்?' என்றன. அதைக்கேட்ட இந்த்ரனும் 'நீங்கள் எனக்கு ப்ராதாக்களாயின் பயப்படவேண்டாம்' என்றான். அவர்கள் இந்த்ரனுக்குப் பரிவாரங்களானார்கள். அவர்கள் அவ்விந்த்ரனையே ஸ்வாமியாக நினைத்து அக்கருத்து மாறுதிருந்தார்கள்; மருத் கணங்களென்று பேர்பெற்றார்கள். மன்னவனே! அப்வத்தாமாவின் அஸ்த்ரத்தினால் கொளுத்தப்பட்ட உன்னைப்போல், திதியின் கர்ப்பம் வஜ்ராயுதத்தினால் பலவாறு சேதிக்கப்பட்டும் பகவானுடைய அனுக்ரஹத்தினால் மரணம் அடையாதிருந்தது. ஒருவன் ஒருகால் ஆதிபுருஷனை பகவானை ஆராதிப்பானையின் அவனைடு ஸாயுஜ்யத்தை அடைகிறான். அவனை ஒருவன் அடிக்கடி ஆராதித்துக்கொண்டு வருவானையின், அவன் அவனுக்கு உதவும் விஷயத்தில் சொல்லவேண்டுமோ? திதியினால் சிறிது குறைவாக ஒரு வர்ஷம்வரையில் ஆராதிக்கப்பட்ட பகவான் அவ்விந்த்ரனைடு கூடவேயிருந்து அவளுடைய கர்ப்பத்தைப் பாதுகாத்தான். அந்தக் கர்ப்பத்தின் கண்டங்கள் நாற்பத்தொன்பதும் மருத்கணங்களாயின. அம்மருத்துக்கள் மாதாவின் ஸம்பந்தத்தினால் சேர்ந்த அஸுராத்

தன்மையாகிற தோஷத்தைத் துறந்து தேவதைகளாணர்கள். இந்தன் அவர்களை யஜ்ஞபாகத்திற் குரியவர்களாகச் செய்தான். பிறகு திதி உறக்கந்தெளிந்தெழுந்து இந்தாணியுடனே கூடி அக்னிபோல் ஜ்வலிக்கின்ற குமாரர்களைக் கண்டாள். வாஸ்தவத்தில் நல்லியற்கையுடையவளாகையால் நிந்தைக்கிடமில்லாத அந்தத் திதி அவர்களைக் கண்டு மிகவும் ஸந்தோஷமடைந்தாள். பிறகு அவள் தேவேந்தாணைப் பார்த்து 'தேவேந்தா! அதிதியின் புதல்வர்களான உங்களுக்குப்பயத்தை விளைக்கும் படியான ஒருபுதல்வனை விரும்பிதான் ஒருவராலும் அனுஷ்டிக்க முடியாத பும்ஸவனமென்கிற இந்த வ்ரதத்தை அனுஷ்டித்தேன். தான் ஓரே புதல்வன் வேண்டுமென்று ஸங்கல்பித்திருந்தேன். நாற்பத்தொன்பது பேர்கள் எப்படிப் பிறந்தார்கள்? இது உனக்குத் தெரியுமாயின், பிள்ளாய்! உண்மையைச் சொல்வாயாக. பொய் சொல்லாதே' என்றாள். இந்தாணும் அதைக்கேட்டு 'அம்மா! தான் உன் அபிப்ராயத்தை நிச்சயித்துக்கொண்டே உன்னருகில் வந்து சுச்ரூஷை செய்துவந்தேன். தான் ஸமயம் நேரப்பெற்று உன் கர்ப்பத்தைச் சேதித்தேன். தான் சப்தாதி விஷயங்களை அனுபவிப்பதில் மனம் செல்லப்பெற்றவன். தர்மத்தை அறிந்தவனல்லேன். ஆகையால் தான் உன் வயிற்றில் புகுந்து உன் கர்ப்பத்தை ஏழு துண்டங்களாகப் பிளந்தேன். அந்த ஏழு துண்டங்களும் ஏழு குமாரர்களாணர்கள். மீளவும் தான் ஒவ்வொரு துண்டத்தையும் ஏழு துண்டங்களாகப் பிளந்தேன். அவையும் மரணம் அடையவில்லை. பிறகு தான் இந்த ஆச்சர்யத்தைக் கண்டு இங்ஙனம் நிச்சயித்தேன். அது என்னவென்றால், ஒருவன் ஒரு ப்ரயோஜனத்தை உத்தேசித்

துப் பரமபுருஷனை ஆராதிப்பானுயின், அந்த ஆராதனம் பரிபூர்ணமாக நிறைவேறுததற்கு முன் அவன் விரும்பின பலன்கூடாது. அது நிறைவேறுவிடின் விபரீத பலனையே கொடுக்கும். அம்மா! ஆகையால் ஒரு பலனையும் விரும்பாமல் பகவானை ஆராதிப்பவர் பரம புருஷார்த்தமான மோக்ஷத்தையும் விரும்பமாட்டார்கள். அவர்களே மேலான புருஷார்த்தத்தை நிறைவேற்றிக்கொள்ள வல்லவர்கள். இங்ஙனமே பெரியோர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். பலனை விரும்பாமல் பகவானை ஆராதிக்கிறவனுடைய வ்ரதம் நிறைவேறுவிடினும் அவனுக்கு விபரீதம் உண்டாகாது. அவ்வளவில் அவனுக்குப் பகவான் மோக்ஷத்தையுங்கூடக் கொடுப்பான். தாயே! நான் இவ்வாறு நிச்சயித்தேன். விரும்பினவர்களுக்குப் பரம புருஷார்த்தமான தன்னையுங் கொடுக்க வல்லவனும் அந்தராத்மாவும் மிகுந்த அன்பனும் ஸர்வேச்வரனுமாகிய பகவானை ஆராதித்து, விவேகமுடையவனு யிருப்பானுயின், எந்தப் புருஷன் தான் நரகத்திலும் ஸம்பவிக்கக்கூடிய சப்தாதி விஷயங்களின் அனுபவத்தை விரும்புவான்? மேன்மையுடையவளே! மூர்க்கனுகிய நான் செய்த இந்த அபராதத்தைப் பொறுப்பாயாக. இது துர்ஜனங்கள் செய்யும் வ்யாபாரம். ஆயினும், நீ எனக்குத் தாயாகையால் உனக்குப் பொறுக்கமுடியாத அபராதம் எதுவுமேயில்லை. உன் கர்ப்பம் மரணம் அடைந்தும் தெய்வாதீனமாய்ப் பிழைத்தது' என்றுன். திதியும் இந்த்ரன் கபடமில்லாமல் உள்ளதை உள்ளபடியே மொழிந்தமைக்கு ஸந்தோஷமுற்றுள். இந்த்ரனும் அவளால் அனுமதி செய்யப்பெற்று அவளை நமஸ்கரித்து மருத்துக்களுடன் ஸ்வர்க்கம் போய்ச்சேர்ந்தான். நீ மருத்துக்களைப்

பற்றி வினவினையே, அதையெல்லாம் உனக்கு விரிவாகச் சொன்னேன். இந்த மருத்துக்களின் ஜன்ம வ்ருத்தாந்தம் மங்களமானது. உனக்கு இன்னம் ஏதேனும் கேட்க வேண்டுமாயின், அதையும் சொல்லுகிறேன். பதினெட்டாவது அத்யாயம் முற்றிற்று.

கஸ்யபர் திதிக்குச் சொன்ன வ்ரதத்தை விவரித்துக் கூறுதல்.

பரீக்ஷித்து மன்னவன் சொல்லுகிறான்:—ப்ராஹ்மண ஸ்ரேஷ்டரே! பும்ஸவனமென்னும் வ்ரதம்மொழிந்தீரே, அதை விரிவாகக் கேட்க விரும்புகிறேன். அந்த வ்ரதத்தினால் பகவான் ஸந்தோஷம் அடைவானல்லவா? ஆகையால் அதை எனக்கு விவரித்து மொழியவேண்டும்.

ஸ்ரீசுகர் சொல்லுகிறார்:—மன்னவனே! மார்கழி மாதத்தில் சுக்லபக்ஷத்தில் சுபமான திதியில் பர்த்தாவின் அனுமதியினால் மடந்தை விருப்பங்களை யெல்லாம் நிறைவேற்ற வல்ல பும்ஸவனமென்கிற இந்த வ்ரதத்தை ஆரம்பிக்கவேண்டும். முதலில் மருத்துக்களின் உத்பத்தியைக் கேட்டு ப்ராஹ்மணர்களால் அனுமதி கொடுக்கப்பெற்றுப் பற்களை வெளுக்கத் தேய்த்து ஸ்நானம் செய்து புதிய வெள்ளை வஸ்த்ரங்களை உடுத்துக் காலைப் போஜனத்திற்கு முன்பு ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் பகவானை ஆராதிக்கவேண்டும். 'பகவானே! உனக்கு எல்லாம் நிறைந்திருக்கின்றது. உனக்கு எதனாலும் ஆகவேண்டிய கார்யமில்லை. நீ அவாப்த ஸமஸ்தகாமன். ஆகையால் உனக்கு எதிலும் அபேக்ஷை இல்லை. இத்தகைய உனக்கு நமஸ்காரம். நீ நித்யவிபூதியென்கிற பரமபதத்

திற்கும் லீலாவிபூதி யென்கிற ப்ரஹ்மாண்ட ஸமூஹ ரூபமான ப்ரக்ருதி மண்டலத்திற்கும் ப்ரபு. எல்லா ஸித்திகளும் உனக்குக் கைமேல் இருக்கின்றன. உனக்கு நமஸ்காரம். ஜகதீச்வரி! நீ தனை ஐச்வர்யம் தேஜஸ்ஸு மஹிமை ஔஜஸ்ஸு ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தி தவம் முதலிய குணங்களெல்லாம் நிறைந்தவளுகையால் பகவானென்றும் ப்ரபுவென்றும் கூறப்படுகின்றனை' என்று பகவானைத் துதித்து 'ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பத்னியே! மிகவும் ஆச்சர்யமான பல சக்திகளுடையவளே! பரம புருஷனுக்கு அஸாதாரணமான அடையாளமாயிருப்பவளே! அம்மஹாபுருஷனுடைய அன்பிற்கிடமானவளே! ஸம்பத்துக்களுக்கெல்லாம் இருப்பிடமே! உலகங்களுக்கெல்லாம் தாயே! உனக்கு நமஸ்காரம்' என்று ஸ்ரீமஹாலக்ஷ்மியையும் துதிக்கவேண்டும். பிறகு 'ஓம் ஷாட்குண்ய பூர்ணனும் புருஷ ஸூக்தத்தில் ஓதப்படும் மஹாபுருஷனும் மஹாநுபாவனும் ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்குப் பதியும் பரிவாரங்களால் சூழப்பெற்றவனுமாகிய உனக்கு அர்க்யம் முதலியவற்றை ஸமர்ப்பிக்கிறேன்' என்ற மந்த்ரத்தைச் சொல்லித் தினந்தோறும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு ஆவாஹனம் ஆஸனம் அர்க்யம் பாத்யம் ஆசமனம் ஸ்நானம் வஸ்த்ரம் யஜ்ஞோபவீதம் ஆபரணம் சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் உபஹாரம் முதலிய உபசாரங்களை மனவூக்கத்துடன் ஸமர்ப்பிக்க வேண்டும். பகவானுக்கு நிவேதனம் செய்த ஹவிஸ்ஸினால் 'ஓம் மஹாபுருஷனும் மஹாவிபூதியுடையவனுமாகிய பகவானுக்கு நமஸ்காரம்' என்ற இம்மந்த்ரத்தைச் சொல்லி அக்னியில் பன்னிரண்டு ஆஹுதிகள் ஹோமம் செய்யவேண்டும். எல்லா ஸம்பத்துக்களையும் விரும்புவார்களாயின் விருப்பங்களையெல்லாம் கொடுக்க

வல்லவர்களும் ஜகத்திற்கு மாதா பிதாக்களுமாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸ்ரீமஹாவிஷ்ணு இவ்விருவர்களையும் பக்தியுடன் தினந்தோறும் பூஜிக்கவேண்டும். பக்தியினல் வணக்கமுற்ற மனத்துடன் பூமியில் தண்டம்போல் விழுந்து நமஸ்காரம் செய்யவேண்டும். அம்மந்த்ரத்தைப் பத்துத்தடவைகள் ஜபிக்கவேண்டும். பிறகு இந்த ஸ்தோத்ரத்தைப் படிக்கவேண்டும். நீங்கள் ஜகத்திற்கெல்லாம் ப்ரபுக்கள். நீங்களே ஜகத்திற்கு மேலான காரணம். பரமபுருஷனே! ப்ரக்ருதி, காரண தசையில் ஸூக்ஷ்மமாயிருக்கும். அதன் ஸ்வரூபத்தை ஒருவராலும் அறியமுடியாது. அது ஆச்சர்யமாயிருக்கும். அது உன்னுடைய சக்தியே. உன்னைச் சரணம் அடையாதவர்களால் அதைக் கடக்கமுடியாது. அத்தகைய ப்ரக்ருதி இந்த ஸ்ரீமஹாலக்ஷ்மியே. புருஷோத்தமனே! அந்த ப்ரக்ருதிக்கு நீரே ப்ரபு நீயொருவனே. யஜ்ஞங்களெல்லாம் நீ. அதன் அங்கங்களான தக்ஷிணீயேஷ்டி முதலிய இஜ்யைகளெல்லாம் இந்த ஸ்ரீமஹாலக்ஷ்மி. ஸ்ம்ருதிகளில் விதித்த செயல்களெல்லாம் இவள். அவற்றை அனுஷ்டிக்கும் புருஷர்களெல்லாரும் நீ. வஸ்துக்களிலுள்ள குணங்களின் தோற்றங்களெல்லாம் இவள். குணங்களையுடைய வஸ்துக்களெல்லாம் நீ. ஸமஸ்த ப்ராணிகளுடைய ஆத்மாக்களும் நீ. அந்த ப்ராணிகளுடைய புத்திகளெல்லாம் இவள். காமரூபங்களெல்லாம் இவள். அவற்றிற்கு ஆதாரமும் அவற்றை கிர்வஹிக்கிறவனும் நீ. நீங்கள் வரங்களைக் கொடுக்க வல்லவர்களாயிருப்பதும் பரமபதத்தில் மேன்மையுடன் வீற்றிருப்பதும் உண்மையாயிருப்பதுபோல, உத்தம ச்லோகனே! என் ப்ரார்த்தனைகளும் உண்மையாகப் பலிக்கவேண்டும்' என்ற இந்த ஸ்தோத்ரத்தினல் ஸ்ரீமஹா

லக்ஷ்மியையும் வாதனுகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவையும் துதித்து மிகுந்த பூஜாத்ரவ்யங்களெல்லாம் அப்புறத்தில் போகட்டும். பகவானுக்கு ஆசமனீயம் ஸமர்ப்பித்து மீளவும் நன்றுக ஆராதிக்கவேண்டும். பிறகு மீளவும் ஷ்டோத்ரத்தினல் பரமபுருஷனைத் துதித்துக்கொண்டே பக்தியால் வணக்கமுற்ற மனத்துடன் பகவானுக்கு நிவேதனம் செய்து மிகுந்த ஹவிஸ்ஸை மோந்து மீளவும் பகவானை ஆராதிக்கவேண்டும். பிறகு மஹாபுருஷனை பகவானேயென்னும் புத்தியுடன் மிகுந்த பக்தியுடையவளாகி ப்ரியமான பலவகை வஸ்துக்களால் பர்த்தாவை ஆராதிக்கவேண்டும். பர்த்தாவும் பார்யையிடத்தில் ப்ரேமமுடையவனுகி அவளுடைய கார்யங்களுக்கு உதவி செய்யவேண்டும். இங்ஙனம் ஒருவனோடொருவர் மன ஒற்றுமையுள்ள தம்பதிகளில் ஒருவர் ஒரு நல்ல கர்மத்தைச் செய்யினும் அது இருவர்க்கும் துல்யமாகவே பலனைக் கொடுக்கும். ஆகையால் பார்யை அசுத்தையாயிருக்கும்பொழுதும் உரிமை தப்பியிருக்கும்பொழுதும் பர்த்தாவே அந்த வ்ரதத்தை மனவுந்துடன் நடத்தவேண்டும். இந்த விஷ்ணுவ்ரதத்தைத் தொடங்கினபின்பு இடையில் எந்தக் காரணத்தைப் பற்றியும் கைவிடலாகாது. இந்த வ்ரதத்தை அனுஷ்டிக்கும் புருஷன், ப்ராஹ்மணர்களையும் ஸுமங்கலிகளையும் பூமாலை சந்தனம் உபஹாரம் ஆபரணம் முதலியவற்றுல் தினந்தோறும் இங்ஙனம் பூஜிக்கவேண்டும். பிறகு பகவானை யதாஸ்தானத்தில் ஸுகமாக எழுந்தருளப்பண்ணி அவனுக்கு நிவேதனம் செய்த ஹவிஸ்ஸை ஆத்மசுத்திக்காகவும் தன் விருப்பங்கள் நிறைவேறுவதற்காகவும் முதலில் புசிக்கவேண்டும். இங்ஙனம் சொன்ன பூஜாவிதியின்படி

பன்னிரண்டு மாதங்கள் அடங்கின ஒரு ஸம்வத்ஸரம் நடத்திக் கார்த்திகமாதத்தின் கடைசி தினத்தின்று வ்ரதத்தை அனுஷ்டிக்கும் பதிவ்ரதை வ்ரதத்தின் முடிவுக்கு அங்கமாகப் பகவானுக்கு விசேஷ உபசாரங்கள் செய்யவேண்டும். மற்றை நாள் காலையில் ஸ்நானம் செய்து முன்போலவே பகவானை ஆராதித்துப் பாலில் பக்வம் செய்த சருவுடன் நெய்யைக் கலந்து பன்னிரண்டு ஆஹுதிகள் பர்த்தாவைக்கொண்டு ஹோமம் செய்விக்கவேண்டும். ஆத்ம பரமாத்மாக்களின் உண்மையை அறிந்து கல்ல அன்னங்களால் பன்னிரண்டு ப்ராஹ்மணர்களைப் பகவானுகவே நினைத்துப் புசிப்பிக்க வேண்டும். அந்த ப்ராஹ்மணர்களுக்கு ஜலம் நிறைந்த பாத்ரங்களை வெல்லம் எள்ளு பொரி இவைகளையும் கொடுத்து, மனக்களிப்புற்ற அந்த ப்ராஹ்மணர்கள் மொழியும் ஆசீர்வாதங்களைச் சிரத்திலுல் அங்கீகரித்துப் பக்தியுடன் அவர்களை நமஸ்கரித்து அவர்களுடைய அனுமதியின்மேல் புசிக்கவேண்டும்.பிறகு அம்மடந்தையின் கணவன் பந்துக்களுடன் ஆசார்யனை முன்னே உட்காரவைத்துக்கொண்டு மௌனத்துடன், நற்புதல்வனையும் ஸௌபாக்யத்தையும் கொடுக்கவல்ல சருவின் மிகுதியைத் தன் பார்யையைப் புசிக்கச்செய்யவேண்டும். இங்ஙனம் பரமாத்மாவின் ஆராதன ரூபமான இந்த வ்ரதத்தை விதியின்படி அனுஷ்டிக்கும் புருஷன் இவ்வுலகத்தில் விருப்பங்களை யெல்லாம் பெறுவான். இதை அனுஷ்டிக்கும் மாது ஸௌபாக்யம் ஸம்பத்து ஸத்ததி நெடுநாள் ஸுமங்கலியாயிருத்தல் புகழ் வீடு முதலிய பலன்களை யெல்லாம் பெறுவாள். தனக்குரிய கணவன் நேரப்பெறுத கன்னிகை இந்த வ்ரதத்தை அனுஷ்டிப்பாளாயின் அழகிய பலலக்ஷணங்

கள் அமைந்த கணவனைப் பெறுவாள். விதவை அனுஷ்டிப்பாளாயின் பாபங்களெல்லாம் தீர்ந்து ஸத்கதியைப் பெறுவாள். பிள்ளை மரணம் அடைந்து வருந்தும் மடந்தை இதை அனுஷ்டிப்பாளாயின் நீண்ட வாழ்நாளுடைய பிள்ளையைப் பெறுவாள். ஸௌபாக்யமில்லாதவள் ஸௌபாக்யத்தையும், அழகில்லாதவள் சிறந்த அழகையும் இதனால் பெறுவார்கள். ரோகமுடையவன் இந்த வ்ரதத்தை அனுஷ்டித்துப் பல வகை ரோகங்களினின்று விடுபட்டுத் திடமான இந்த்ரியங்கள் அமைந்த மேலான தேஹத்தைப் பெறுவான். இந்த வ்ரதத்தை அனுஷ்டிக்கும் ப்ரகாரத்தை அறிவிக்கிற இவ்வத்யாயத்தை [1]அப்யுதய கர்மத்தில் படிப்பாரையின், அவனுடைய பித்ருக்களுக்கும் தேவதைகளுக்கும் பெருந்த்ருப்தி உண்டாகும். அவர்கள் அவனுக்கு எல்லா விருப்பங்களையும் கொடுப்பார்கள். பித்ரு ஹோமத்தின் முடிவிலும் தேவஹோமத்தின் முடிவிலும் பகவானும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் ஹோமம் செய்த ஹவிஸ்ஸைப் புசித்து அருள்புரிவார்கள். மன்னவனே! மருத்துக்களின் புண்யமான ஜன்மத்தையும் திதி அனுஷ்டித்த மஹத்தான வ்ரதத்தையும் உனக்கு மொழிந்தேன். பத்தொன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

ஷஷ்டஸ்கந்தம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ க்ருஷ்ணாயநம:

---

1. ஹோமத்தை விரும்பிச் செய்யுங் கார்யத்தில்.

1630/2

28.00+02 / 7361. IV